www.padippakam.com

# இன்னுமொரு காலடி



www.padippakam.com


# Rai & Co.

## SOLICITORS

158 High Road, Willesden, London NW10 2PB

# LEGAL AID

We undertake Legal Aid Work

- CIVIL & CRIMINAL COURT WORK
- IMMIGRATION
- MATRIMONIAL/DIVORCE/DOMESTIC VIOLENCE
- LANDLORD & TENANT
- PROPERTY TRANSACTIONS
- POLICE STATION ATTENDANCE
- ACCIDENT/INJURIES

For more details, please ring

*Mr. S. Rai. Sivakadacham Attorney-at-Law*

*or*

*Mrs. Gowri Sivakadacham LL B., B.A., B.L. (Madras)*

**158 High Road, Willesden**
**London NW10 2PB**

**Tel: 0181-830 4540** **Fax: 0181-830 1948**

www.padippakam.com

# இன்னுமொரு காலடி

TWAN

**Tamil Welfare Association (Newham) U.K.**
தமிழர் நலன்புரி சங்கம் (நியூஹாம்) ஐ.இ.
லண்டன், சித்திரை 1998

www.padippakam.com

# INNUMORU KAALADI

**a book of international tamil writings**

**Published:** *April 1998*

**Publishers:** *Tamil Welfare Association (Newham) UK*
*33A Station Road*
*Manor Park*
*London E12 5BP*
*United Kingdom*

**Phone:** *0181- 478 0577*
**Fax:** *0181- 478 0577*

**e-mail** *twan@btinternet.com*

© *Authors*

**Compilation:** *R Pathmanaba Iyer*

**Editorial Board:** *V Janarthanan*
*R Pathmanaba Iyer*
*M Pushparajan*
*Yamuna Rajendran*
*A Ravi*

**Layout,**
**Illustrations,**
**Cover Design:** *K Krishnarajah*

**Typesetting:** *Ramani Shanthagunam*

**Consultation:** *N Kannan (Germany)*

**Printers:** *Unie Arts (Pvt) Ltd*
*48 Bloemendhal Road,*
*Colombo 13*
*Sri Lanka*

***e-mail*** *uniearts@slt.lk.*

www.padippakam.com

# இன்னுமொரு காலடி

## உள்ளே...


| | | | | |
|---|---|---|---|---|
| 01 | ஓவியம் | கிருஷ்ணராஜா | இங்கிலாந்து | 007 |
| 02 | புகைப்படம் | எஸ். சாந்தகுணம் | இங்கிலாந்து | 009 |
| 03 | ஓவியம் | மஹுா | நோர்வே | 010 |
| 04 | தமிழ் தழுவும் உலகமும் உலகம் தழுவும் தமிழும் | நா. கண்ணன் | ஜேர்மனி | 011 |
| 05 | நில அமைவும் இலக்கியமும் | சிற்பி பாலசுப்பிரமணியம் | இந்தியா | 016 |
| 06 | கலேவலா: தமிழில் ஒரு பின்லாந்துக் காவியம் | ஆர். சிவலிங்கம் | பின்லாந்து | 021 |
| 07 | யாழ்ப்பாணத்து ஓவியர்களின் சமகால வெளிப்பாடு | அருந்ததி ரட்ணராஜ் | இங்கிலாந்து | 024 |
| 08 | **Postcolonial Paradigms: Contemporary Sri Lankan Tamil Poetry** | Chelva Kanaganayagam | Canada | 029 |
| 09 | ஈழத்துத் தமிழ்க்கவிதை: அடுத்த கட்ட வளர்ச்சி | சுரேஷ் கனகராஜா | அமெரிக்கா | 035 |
| 10 | அகதியாகும் தமிழன் | ஞானி | இந்தியா | 041 |
| 11 | அடையாளப் பிரச்சினையும் தேசியவாதமும் | சி. சிவசேகரம் | இலங்கை | 044 |
| 12 | பெண் எழுத்துகள்: ஒரு சில குறிப்புகள் | மதுபாஷிணி மதுசூதனன் | இலங்கை | 047 |
| 13 | தாய்க்குலப் பெருமை பேசி.. | ரஞ்சி | சுவிஸ் | 050 |
| 14 | தாய்மொழியும் ஐரோப்பிய முதன்மொழிகளும் | ச. சச்சிதானந்தம் | பிரான்ஸ் | 052 |
| 15 | புலம்பெயர்ந்தே விழுந்தோம் மொழிபெயர்ந்தா முளைப்போம் | ரவீந்திரன் | சுவிஸ் | 059 |
| 16 | புகலிடத்தில் தாய்மொழிப் போதனை: தவறுகள், குறைபாடுகள், முரண்பாடுகள் | அழகு. குணசீலன் | சுவிஸ் | 062 |
| 17 | புதுமண்ணில் புதிய (தமிழ்) தலைமுறை | கி. செ. துரை | டென்மார்க் | 066 |
| 18 | எங்கே போராட்டமோ அங்கே என் இதயம் சிவானந்தனுடன் உரையாடல் | யமுனா ராஜேந்திரன் | இங்கிலாந்து | 069 |
| 19 | புகைப்படம் | எஸ். எ.ஃப். ரி. குணாளன் | இங்கிலாந்து | 083 |
| 20 | அவ்விருவர் மட்டுமே | ஆர். சூடாமணி | இந்தியா | 085 |
| 21 | எய்தவர் யார்? | ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் | இங்கிலாந்து | 095 |
| 22 | நெத்திக்காசு | பாலரஞ்சனி சர்மா | இலங்கை | 100 |
| 23 | அடுத்த காலடிகள் | நளாயினி இந்திரன் | இங்கிலாந்து | 105 |
| 24 | கொல்லவரும் புலி | ரெ. கார்த்திகேசு | மலேசியா | |
| 25 | கோடுகள் | இரா. கோவர்தனன் | கனடா | 116 |
| 26 | ஓவியம் | கருணா | கனடா | 119 |
| 27 | புகைப்படம் | எஸ். சாந்தகுணம் | இங்கிலாந்து | 120 |
| 28 | ஒட்டகம் | அ. முத்துலிங்கம் | கென்யா | 121 |
| 29 | நிலவு | மு. புஷ்பராஜன் | இங்கிலாந்து | 127 |
| 30 | ஜேர்மனியில் ஒரு நகரம்: பிரகு பிறேமன் நகரத்துக் காகம் | அ. இரவி | இங்கிலாந்து | 130 |
| 31 | ஓவியம் | மஹுா | நோர்வே | 138 |
| 32 | பலமா? | பார்த்திபன் | ஜேர்மனி | 139 |
| 33 | எல்லைகள் | சாள்ஸ் குணநாயகம் | நெதர்லாந்து | 144 |
| 34 | பால்வழி | பொ.கருணாகரமூர்த்தி | ஜேர்மனி | 147 |
| 35 | ஆந்த்ரே | தமயந்தி | நோர்வே | 157 |
| 36 | போர்க்களம் | இளையவன் | இலங்கை | 160 |

www.padippakam.com


| | | | | |
|---|---|---|---|---|
| 37 | காமி காசே | ரமணிதரன் | அமெரிக்கா | 164 |
| 38 | ஓவியம் | மஹா | நோர்வே | 172 |
| 39 | புகைப்படம் | எஸ். சாந்தகுணம் | இங்கிலாந்து | 173 |
| 40 | யாரொடு நோவேன்? | சிவலிங்கம் சிபவாலன் | பிரான்ஸ் | 174 |
| 41 | சவக்காலை | ப. வி. சிறீரங்கன் | ஜேர்மனி | 179 |
| 42 | புதைமணல் மாந்தர் | நா. சுவாமிநாதன் | அமெரிக்கா | 181 |
| 43 | ஓவியம் | மஹா | நோர்வே | 186 |
| 44 | தோப்பிழந்த குயில் | அமுதமொழியன் | இலங்கை | 187 |
| 45 | நிர்ணயம் | ஓட்டமாவடி அரபாத் | இலங்கை | 188 |
| 46 | மொழிவுகள் | கி. பி. அரவிந்தன் | பிரான்ஸ் | 189 |
| 47 | கர்மம் | அஸ்வகோஸ் | இலங்கை | 190 |
| 48 | இன்னும் வலுவாய் | ஆகர்ஷியா | இலங்கை | 191 |
| 49 | கவிதை | ஆண்டி | இலங்கை | 191 |
| 50 | நிலுவை | ஆழியாள் | இலங்கை | 192 |
| 51 | இயல்பினை அவாவுதல் | இளந்திரையன் | இலங்கை | 193 |
| 52 | நிஜமும் நிழலும் அல்லது அழியா நிழலும் | இளந்திரையன் | இலங்கை | 193 |
| 53 | குருவிகள்பற்றி மூன்று கவிதைகள் | இளவாலை விஜயேந்திரன் | நோர்வே | 194 |
| 54 | மூன்றாவது குற்றம் | இளைய அப்துல்லாஹ் | இலங்கை | 195 |
| 55 | வெறி | எஸ். உமாஜிப்ரான் | இலங்கை | 196 |
| 56 | போராளியின் காதலி | எஸ். உமாஜிப்ரான் | இலங்கை | 196 |
| 57 | இறகுகள் முளைத்தெழ, சிறகுகள் கிளரும்! | எஸ். உமாஜிப்ரான் | இலங்கை | 197 |
| 58 | சுகித்தல் | எஸ்போஸ் | இலங்கை | 197 |
| 59 | அபாயம் | கருணாகரன் | இலங்கை | 198 |
| 60 | யாருடைய வீடு | கருணாகரன் | இலங்கை | 198 |
| 61 | கவிதை | கலா | இலங்கை | 199 |
| 62 | எதுவரைக்கும் | கொற்றவை | இலங்கை | 199 |
| 63 | செத்துப்போன உலகம் | சன்னதமாடி | டென்மார்க் | 200 |
| 64 | நன்றியுரை | சன்னதமாடி | டென்மார்க் | 202 |
| 65 | ஸ்கோல்! | சன்னதமாடி | டென்மார்க் | 202 |
| 66 | தழும்புகளும் பஞ்சுமிட்டாயும் | இரா. கோவர்தனன் | கனடா | 203 |
| 67 | தொட்டாற்சுருங்கிகள் | சித்திவினாயகம் | கனடா | 204 |
| 68 | மாநகரும் மானுடரும் | சி. சிவசேகரம் | இலங்கை | 205 |
| 69 | ஒரு ராணுவ வீரனுக்கு | வி. சுதாகர் | இலங்கை | 205 |
| 70 | உன் உள்ளம் என்ற துணியை | சோலைக்கிளி | இலங்கை | 206 |
| 71 | எழுதச் சொல்கிறது | நட்சத்திரன் செவ்விந்தியன் | அவுஸ்திரேலியா | 207 |
| 72 | கவிதை | நட்சத்திரன் செவ்விந்தியன் | அவுஸ்திரேலியா | 207 |
| 73 | விடு பேறு | சோ. பத்மநாதன் | இலங்கை | 208 |
| 74 | ரயில் பயணம் | தா. பாலகணேசன் | பிரான்ஸ் | 209 |
| 75 | பிரிவோலை | மு. பொன்னம்பலம் | இலங்கை | 210 |
| 76 | சி.வி.யே உன்னோடு சில வார்த்தைகள் | மல்லிகை சி. செழியன் | இலங்கை | 212 |
| 77 | நேசத்தின் வேர்கள் | முல்லை அமுதன் | இங்கிலாந்து | 213 |
| 78 | எதிரி யாரென... | நா. விச்வநாதன் | இந்தியா | 213 |
| 79 | எட்டுக் கவிதைகள் | ரமணிதரன் | அமெரிக்கா | 214 |
| 80 | அசரீரி | ரஷ்மி | இலங்கை | 220 |
| 81 | புகைப்படம் | எஸ். சாந்தகுணம் | இங்கிலாந்து | 222 |

www.padippakam.com

# இன்னுமொரு காலடி

## பதிப்புரை

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் உலகளாவிய பார்வை. நம் காலத்தில் இப்பார்வையை முன்வைத்துச் செயல்புரிந்த அறிஞர் தனிநாயகம் அடிகளாரை இந்தக் கணத்தில் நாம் நினைத்துப் பார்க்கிறோம். உலகெங்கிலுமுள்ள தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் ஆராய்ச்சியை வளப் படுத்தவும் தமிழின் பெருமையைப் பரப்பவும் அவர் மேற்கொண்ட பணிகள் உலகெங்கும் தமிழர் பரவி வாழும் இன்று, புதிய அழுத்தம் பெறுகின்றன. அடி களார் காட்டிய வழியில் பணிவோடு நாம் தொடரும் பயணம் இது.

தமிழர் நலன்புரி சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவினை ஒட்டி நாம் வெளியிட்ட சிறப்பு மலரும் (1996), பின்னர் 1997இல் வெளியிட்ட 'கிழக்கும் மேற்கும்' என்ற மலரும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் கலை-இலக்கிய வெளிப்பாடுகளைத் தொகுத்தளிக்கும் எமது முயற்சிகளாக அமைந்தன. எமது ஆற்றல்களும் வளங்களும் எல்லைக்குட்பட்டவை. படைப்பாளிகளதும் தரமான முயற்சிகளை ஊக்குவிக்கும் சீரிய வாசக நெஞ்சங்களையுமே ஆதாரமாகக்கொண்டு நாம் மேற்கொண்டுள்ள இம்மலராக்கம் நமக்கு ஆத்மார்த்தமான நிறைவைத் தந்திருக்கிறது. தமிழ்மொழி பயிலும் நாடுகள் அனைத்தினையும் பிரதிபலிக்கவேண்டும் என்ற எங்களின் பேரவா முழுமையாகிவிட்டது என்று நாம் கூறுவதற்கில்லை. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளின் பிரதிநிதித்துவம் போதாது என்று நாம் உணர்கிறோம். ஆற்றல் மிக்க படைப்பாளிகள் அனைவரையும் நாம் அரவணைத்துச் செல்ல முயன்றிருக்கிறோம். உலகளாவிய தமிழர் வாழ்வின் நேர்மையான பிரதிபலிப்பினை மலர் கொண்டிருக்க வேண்டும் என்பது மட்டுமே எமது அடிப்படை நோக்காக இருந்தது. அரசியல் எல்லைகளுக்கப்பால் தமிழ்ச் சமூகத்தின் நலன் குறித்த சிந்தனைகளும் கலை இலக்கிய வளர்ச்சி குறித்த எமது அக்கறையுமே இம்மலருக்கு வலுவூட்டுவனவாகும்.

இது எமது மூன்றாவது மலர். இந்த மூன்று மலர்த்தயாரிப்புகளில் நாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களில் சில அம்சங்களை இங்கு வலியுறுத்துவது பயனுடையது என நம்புகிறோம்.

மேலை நாடுகளில் நூல்கள் மற்றும் வெளியீடுகளைப் பொறுத்த வரையில் பதிப்புப்பணி வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. நூல் தயாரிப்பில் பதிப்பாளரின் பங்கு நூலாசிரியனின் பணிக்கு இணையானதாகும். நூலினைச் செழுமைப்படுத்துவதிலும், வாசகனுக்கு நூலின் செய்தியைக் கொண்டு செல்வதிலும் பதிப்பாளரின் பணி மேற்குலகின் நூல் வெளியீட்டுத்துறையில் தனியிடம் பெறுகிறது. ஒரு பதிப்பாசிரியரோ அல்லது பதிப்ப ாசிரியர் குழுவோ நூலாசிரியரோடு இணைந்து நூலினைச் செழுமைப்படுத்தும் பணி இங்கு நூல் வெளியீட்டுத்துறையில் முக்கிய பணியாகப் பரிணமித்துள்ளது. தமிழில் வெளியீட்டுத்துறையில் பதிப்பின் முக்கியத்துவம் அவ்வளவாக உணரப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். தமிழில் நூல் வெளியீட்டில் கூர்மையான அக்கறையுடன் 'க்ரியா' (சென்னை) செயற்பட்டு வந்திருக்கின்றது. தமிழின் ஆரம்பகாலப் பதிப்புப்பணிகளில் ஈடுபட்ட உ.வே.சாமிநாதையர், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் பதிப்பு முயற்சிகளில் காட்டிய அக்கறையும் உழைப்பும் மனங் கொள்ளத்தக்கன.

www.padippakam.com

அடுத்து, மொழி குறித்த அக்கறை இன்னும் பிரக்ஞைபூர்வமாக நமது எழுத்தாளர்களிடம் வேர்கொள்ளவில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டியதொன்றாகும். சாதாரணமான பத்திரிகை எழுத்துக்களிலும் சரி, வானொலி போன்ற ஊடகங்களிலும் சரி மொழி குறித்த அக்கறை எதுவும் இல்லாத நிலையையே நாம் சந்தித்து வருகிறோம். எழுத்தைச் செப்பனிடுவது பற்றியும் எழுத்தைப் பொறுப்போடு கையாளுவது பற்றியும் அக்கறை கொள்ளும் எழுத்தாளர்கள் மிகமிகச் சிலராக இருப்பது மிகவும் துரதிர்ஷ்டமானது. தமிழுக்குப்புதியதுறைச் சிந்தனைகளை அறிமுகம் செய்யும் தேவை விரிந்துகொண்டு செல்லும் இக்காலகட்டத்தில் இத்திசைகாட்டலில் மிகச் சிறிய அளவு முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றன. இதுபற்றி அனைத்துப் படைப்பாளிகளும் கவனத்திற் கொள்வது தமிழ்க் கலை-இலக்கிய முயற்சிக்கு உதவுவதாக அமையும்.

படைப்பாளிகளிடமிருந்து மலருக்கான ஆக்கங்களைக் கோரியபோது அது திறந்த அழைப்பாகவேயிருந்தது. எந்த இறுகலான வரையறையையும் நாம் விதிக்கவில்லை எனவே நமக்கு வந்து கிடைத்த ஆக்கங்கள் அனைத்தும் ஆக்கதாரரின் சுயமான தேர்வு, ஈடுபாடு என்பன சார்ந்தே அமைந்தனவாகும். எனினும் தமிழ்ச் சமூகத்தின் பரந்துபட்ட எல்லைகளை இம்மலரில் இடம்பெற்றிருக்கும் ஆக்கங்கள் தொட்டுக்காட்ட முயற்சிக்கின்றன.

தமிழின் உலகளாவிய பார்வையைப்பரிசீலனை செய்யும் அதேவேளையில், நில அமைவு இலக்கியத்தை வரையறுக்கும் பாங்கினைப் பிறிதொரு கட்டுரை ஆராய்கிறது. சமகால ஈழத்துக்கவிதை பற்றி இம்மலரில் இடம்பெற்றிருக்கும் இரு கட்டுரைகள் விமர்சகர்களின் ஆய்வுத்திசையில் ஈழத்துக்கவிதை பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

தமிழரின் புலம்பெயர்வாழ்வில் புதியதலைமுறையின் பிரச்சினைகள், மொழிசார்ந்த பிரச்சினைகள் என்பன பற்றியும் விவாதிக்கும் கட்டுரைகளும் இங்கு இடம்பெறுகின்றன. பிறமொழிக்காவியங்கள் தமிழில் அறிமுகமாகும் சிறப்பினை 'கலேவலா' காவியத்தின் மூலம் காண்கிறோம். நிறவாதத்திற்கு எதிரான சீரிய சிந்தனையாளரும் செயல்வாதியுமான மார்க்சிய அறிஞர் அ.சிவானந்தனின் நேர்முகமும் இம்மலரில் இடம்பெற்றுள்ளது.

நுண்கலைகளைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்து ஓவியர்களின் சமகால வெளிப்பாட்டுச் சிறப்பினை விவரிக்கும் கட்டுரையும் இம்மலருக்கு மணம் சேர்க்கிறது. உலகெங்கும் வாழும் எழுத்தாளர்களின் தரம்மிகுந்த புதிய பதினேழு சிறுகதைகள் இம்மலரில் இடம்பெற்றிருப்பது தனிச்சிறப்பாகும். புகழ்மிகுந்த முதிய எழுத்தாளர்களிலிருந்து புதிய தலைமுறை எழுத்தாளர்கள் வரை தமது தனித்துவ எழுத்தாற்றலைத் தமது சிறுகதைகளில் நிறுவியுள்ளனர் என்றே கூறவேண்டும். முற்றிலும் புதிய பிரதேசங்களில், புதிய அனுப வங்களை முற்றிலும் புதிய எழுத்தில் -புதிய உத்திகளில் வடிக்கும் சிறப்பினைப் பல சிறுகதைகள் தாங்கியுள்ளன. கவிதையுலகில் பெயர்பெற்ற கவிஞர்களிலிருந்து கவிதைக்குள் புதிதாக அடி எடுத்து வைக்கும் கவிஞர்கள்வரை பன்முகப்பட்ட ஆக்கங்களும் இம்மலருக்கு அணிசெய்கின்றன. கனிசமான ஈழத்துக்கவிதைகள் இம்மலரில் இடம் பெற்றிருக்கின்றன.

எமது வரையறுக்கப்பட்ட வளங்களை மீறி வந்து குவிந்த ஆக்கங்கள் அனைத்திற்கும் களம் தரும் நோக்கில் பக்கங்களைப் பெருமளவில் அதிகரித்தும் சில ஆக்கங்கள் பிரசுரிக்கமுடியாது போனமைக்கு வருந்துகிறோம். சில ஆக்கங்கள் எமக்கு மிகப் பிந்தி வந்துசேர்ந்தமையும் பிறிதொரு காரணமாகும். நவீன தொடர்பு சாதனங்களுக்கூடாக ஆக்கங்களை நாம் பெறக்கூடிய வசதிகள் இருந்த அதே வேளையில் வெளியுலகத் தொடர்புகள் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தும் படைப்புக்கள் வந்துசேர்ந்தமை எமது முயற்சிக்கான பாரிய அங்கீகாரமாகக் கருதி மகிழ்கிறோம். புதிய பல துறைகளில் புதிய தேடல்களுடன் புதிய சிந்தனைகளைத் தாங்கிய படைப்புகள் இம்மலரில் இடம்பெற்றிருப்பது தமிழ்க் கலை-இலக்கிய வளர்ச்சி குறித்த எமது நம்பிக்கையை உறுதிசெய்கிறது.

பிரச்சினைகளின்- முரண்பாடுகளின்- விவாதங்களின்-விமர்சனங்களின் மத்தியில் இது எமது இன்னுமொரு காலடி. எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்ளும் காலடி, நிதானமான காலடி.

அன்புடன்

**இ. பத்மநாப ஐயர்**

பதிப்பாசிரியர்

19.03.1998

www.padippakam.com



தவம்', போஸ்டர் வர்ணம், காகித அட்டை(18"X18")



'இரை', போஸ்டர் வர்ணம், காகித அட்டை(18"X18")



னவுகளுடன்...', தைல + அக்ரிலிக் வர்ணம், கன்வஸ் (5'X4')

கிருஷ்ணராஜா

www.padippakam.com



'முகாரி',
தைல வர்ணம் மரப்பலகை (36"X30")



'உயிர் காக்க', தைல + அக்ரிலிக் வர்ணம், மரப்பலகை (8'X5')


கிருஷ்ணராஜா

www.padippakam.com




இருப்பு

வெலிகடை



S சாந்தகுணம்

www.padippakam.com




மருது

www.padippakam.com

நா கண்ணன்

# தமிழ் தழுவும் உலகமும், உலகம் தழுவும் தமிழும்



அமெரிக்க அறிஞர்
ஜோசப் கேம்பல்,
பல்வேறு கலாசாரங்களின்
ஐதீகங்கள் (myths),
பழங்கதைகள்
இவைகளை ஆய்ந்து பின்
நவீன உளவியல்
ஆய்வுகளுடன் ஒப்பிட்டு
"கடவுள் ஒரு உருவகம்
(God is a metaphor)"
என்று சொல்கிறார்.

மருதக் கடவுள் இந்திரன்

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்; எந் நாட்டவர்க்கும் இறைவன்" என்று சிவனைச் சொல்வார்கள் தமிழர்கள். இச்சிவன்தான் தமிழ்ச் சங்கங்களின் தலைவன் என்றும் சொல்வார்கள். தமிழ்ச் சங்கத்தால் ஒரு நூல் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனில் பல வாதங்கள் செய்ய வேண்டியிருந்தது, அக்காலத்தில். அனல் வாதம், புனல் வாதம் இப்படி. அதாவது தரத்தில் சிறந்த, காலத்தால் அழியாத படைப்புகளுக்கே சிவன் தலைமை தாங்கும் சங்கத்தின் முத்திரை கிடைக்கும் என்பது கருத்து. தமிழர்களுக்குத் தங்கள் மொழியின் மீதிருந்த ஒரு கௌரவத்தையும், தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் மீதிருந்த நம்பிக்கையையும் காட்டுவதாக இதைக் கொள்ளலாம்.

சங்கம் தழைத்த காலத்தில் வாழ்ந்த சான்றோர்களுக்கு, ஒரு உலகு தழுவிய பார்வை இருந்திருக்கிறது. மிகவும் மேற்கோள் காட்டப்பட்ட சங்கப் பாடலை எழுதிய கணியன் பூங்குன்றனார் 'உலகமே நம் உறவு, அதனால் வேற்றூர் என்பது கிடையாது' என்கிறார். மேலும், வெள்ளப்பெருக்கில் அடித்துச்செல்லப்படும் தெப்பம் போன்றதுதான் வாழ்க்கை. எனவே "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்கிறார். இரண்டாயிரம் ஆண்டிற்குப் பின் நிகழப்போகும் தமிழனின் இடப்பெயர்ச்சியை மனதில் வைத்து எழுதிய தீர்க்கதரிசனம் இப்பாடலில் தெரிகிறது!

சங்கத் தமிழர்கள்தான் இவ்வுலகை ஐந்து திணைகளாக வகுத்து, ஒவ்வொரு திணைக்கும் உரித்தான மரம், செடி, பூ எனப் பாகுபடுத்தி ஆய்ந்துள்ளனர். இது இந்நூற்றாண்டின் சூழலியல் ஆய்வுடன் மிகவும் ஒத்துப்போதல் மீண்டும் அவர்களின் விரிந்த பார்வையைக் காட்டுகிறது. இது வெறும் சூழல் பகுப்பு மட்டுமல்ல என்பது கீழ்க்கண்ட பாடலால் தெரிகிறது.

> மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே
>
> (தொல்காப்பியம், அகத்துறை நூற்பா.5)

அதாவது ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு கடவுளைச் சுட்டுகின்றனர். இத்தெய்வங்கள் அந்நிலத்தின் குணத்துடன்

www.padippakam.com

ஒத்துப்போவது இவர்களின் உளவியல் ஆய்வுத் திறனைக் காட்டுகிறது. உதாரணமாக, காடும் காடு சார்ந்த முல்லையின் தெய்வம் கண்ணன். அங்கு வாழும் ஆயர்களுடன் மாடுமேய்த்து, வேடிக்கை செய்து வாழும் தெய்வம். அவர்களின் இடர் களையும் தெய்வமும்கூட. குறிஞ்சித் தலைவன் கந்தன் (சேயோன்); மருதக் கடவுள் இந்திரன் (வேந்தன்); நெய்தற் கடவுள் வருணன் என்று அறியக்கிடைக்கிறது. "தொல்காப்பியர் பாலைக்குத் தெய்வமும் வேண்டிற்றிலர்: பிறர் பகவதியையும், ஆதித்தனையும் தெய்வமென்று வேண்டுவர்" என்று நக்கீரர் சொல்கிறார். அதாவது பாலைத்தெய்வம் கொற்றவை, காளி! கொடுந்தெய்வம். சுடுமணலும், வெந்தணலுமுள்ள பாலையில் கருணைத் தெய்வங்களை வைக்கவில்லை பழந்தமிழர். பழிதீர்க்கும் தெய்வம், பயப்படவைக்கும் தெய்வம் காளி. மக்களைப் போலவே, அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்றவாறு தெய்வங்களையும் வைத்தனர். இது ஒரு பண்பட்ட, உலகறிவு நிறைந்த பார்வையாகப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டு அமெரிக்க அறிஞர் ஜோசப் கேம்பல், பல்வேறு கலாசாரங்களின் ஐதீகங்கள் (myths), பழங்கதைகள் இவைகளை ஆய்ந்து பின் நவீன உளவியல் ஆய்வுகளுடன் ஒப்பிட்டு "கடவுள் ஒரு உருவகம் (God is a metaphor)" என்று சொல்கிறார். ஐந்திணைக்கு மேல் இதற்கொரு அழகிய சான்று வேறு எங்குமில்லை.

சங்கம்தான் தமிழ் இலக்கியத்தின் தொடக்கமாக அறியப்படுகிறது. ஆனால் அத்தொடக்க இலக்கியமே ஒரு பண்பட்ட சமுதாயத்தின் பார்வையைக் காட்டுவதாக உள்ளது. வள்ளுவத்திற்கு நிகரான ஒரு உலக இலக்கியம் அக்காலத்துக்குப் புதுமை. இதை எப்படித் தமிழ் கூறும் நல்லுலகம் சாதித்தது? இப்பரந்த நோக்கு வரக் காரணம் என்ன? தமிழன் உலகு தழுவிப் பயணப்பட்டானா? தமிழன் பல்வேறு நாகரிகங்களுடன் கலந்து அறிவு பெற்றானா?

இக்கேள்விகள் மிகச் சுவையானவை! தமிழனின் தோற்றம் ஆராயப்படவேண்டியதுதான். பல்லவ, சோழ, தென் பாண்டிய, சேர அரசுகள்தான் தமிழனின் வரலாறா? இல்லை, அதற்கும் முன்னம் இவன் ஒரு பண்பாட்டைக் காத்து வந்தானா?

சிந்து சமவெளி ஆய்வுகள் இதற்குப் பதில் தரலாம். இந்தியாவின் வடமேற்குக் கோடியிலுள்ள சிந்து சமவெளியில் செழித்து வளர்ந்திருந்த நாகரிகம் தமிழ் நாகரிகமென இவ்வாய்வுகள் சுட்டுகின்றன. இந்நாகரிகம் இந்திய எல்லை தாண்டி ரஷ்ய நாட்டின் மத்தியிலுள்ள யூரல் மலைத்தொடர்வரை படர்ந்து இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் உபயோகித்த சுட்ட ஓட்டு முத்திரைகள் இராக் நதிக்கரையில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுகள் உண்மையெனில் தமிழனின் உலகளாவிய நோக்கிற்குக் காரணம் இருக்கிறது.

இதற்கும் முன்னர் இக்குடிகள் ஆதி எத்தியோப்பிய வாசிகள் என்றொரு ஆய்வு சொல்கிறது. ஆபிரிக்காவின் வட கோடிக்கரையிலிருந்து மெல்லப் பயணப்பட்டு துருக்கி, பாரசீகம் வழியாகச் சிந்து சமவெளிக்கு வந்திருக்க நியாயம் உண்டு. சமீபத்தைய மூலக்கூற்று உயிரியல் ஆய்வுகள் மனித இனம் இவ்வாறாகத்தான் ஆபிரிக்காவிலிருந்து மற்றக் கண்டங்களுக்குப் பரவியிருக்க வேண்டும் என்று சொல்கிறது. எத்தியோப்பியர்கள் நல்ல கப்பலோட்டும் திறம் மிக்கவர்களும்கூட. இவர்கள் அரேபியக் கடலைக் கடந்து தென் இந்தியா, இலங்கைக்கு வந்திருக்கலாம்.

தமிழ் மொழியியல் ஆய்வுகள் தமிழ்மொழிக்கும் துருக்கிய, பிராஹுய் (பலுசிஸ்தான்), பின்லாந்து மொழிகளுக்குமிடையேயான தொடர்பைக் காட்டுகின்றன. இவற்றையெல்லாம் ஆய்வுரீதியாக நிறுவமுடியுமெனில், பல்வேறு கலாசாரங்களின் கலப்பாலும், மக்களின் நீண்ட, தொடர்ந்த இடப்பெயர்வாலும், மிகத்தொன்மை வாய்ந்த, நாகரிகமடைந்த கலாசார கூறுகளின் தொகுதியாகத் தமிழ்மொழி உருவாகி இருப்பது புலனாகும். சங்க காலப் பார்வையின் பரந்த நோக்கிற்குக் காரணம் இதுவாக இருக்கலாம்.

இப்போக்கு, பின் வந்த இலக்கிய கர்த்தாக்களால் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணம், அரசனைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்த பாணர்களும், மற்றப் புலவர்களும் அரசனுக்கு ஒரு 'மாற்று' கொண்டுவருகின்றனர். 'கோ' என்ற அரசன் வாழ்கின்ற 'இல்'லமாகிய - கோயில் - நிரந்தரமான கடவுளின் இடமாகிறது. இதில் பெரிய சமூக லாபம் இருக்கிறது. அரசர்கள் அதிகாரிகள். அதிகாரம் மனித அகங்காரத்தை மூலமாகக் கொண்டது. அதிகாரமுள்ள இடத்தில் ஊழல் இருப்பது இயல்பு. இவ்வளவு நிரந்தரமில்லாத ஒன்றைக் கருவாக வைத்துத் தங்கள் இலக்கிய சக்தியை வீணாக்க விரும்பவில்லை நம் பண்டைத் தமிழர்கள். அரசன் இருந்த இடத்தில் அவனுக்கும் மேலான வல்லமையுள்ள ஒரு பிரபஞ்ச சக்தியை வைத்து, அரசனை அதன் கீழ் வைத்தனர்.

இதனால் இலக்கியம் முன்னெப்போதுமில்லாத சுதந்திரத்தைப் பெற்றது. இப்புதிய யுக்தியை வைத்து இவர்களால் சமூகக் கொடுமைகளைச் சாட முடிந்தது. "யாமார்க்கும் குடியல்லோம்" என்று திருநாவுக்கரசரும், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று திருமூலரும் துணிந்து சொல்ல முடிந்தது. இதை ஒரு சமூக இயக்கமாக ஆழ்வார்கள் வளர்த்திருப்பதற்கான அகச் சான்றுகள் கிடைக்கின்றன. உதாரணம், திருப்பாணாழ்வாரின் அகத்தூய்மையை உணராத ஜாதி இந்துக்கள் அவரைத் துன்புறுத்துகின்றனர். இது கண்டு பொறுக்காத தொண்டரடிப்பொடியாழ்வார் இப்படிப் பாடுகிறார்:

பழுதிலா ஒழுகலாற்றுப்
பலசதுப் பேதிமார்கள்
இழி குலத்தவர்களேனும்
எம்மடியார்களாகில்
தொழுமின், கொடுமின், கொள்மின்!
என்று நின்னொடு மொக்க
வழிபட அருளினாய்
போனம் மதிள் திருவரங்கத்தானே!

www.padippakam.com

அமரவோ ரங்கமாறும்
வேதமோர் நான்கு மோதி
தமர்களில் தலைவராய
சாதியந்தணர்களேலும்
நுமர்களை பழிப்பாராகில்
நொடிப்ப தோரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமாநகருளானே!
(திருமாலை - 42-43)

எப்படி விழுகிறது பாருங்கள் வார்த்தைகள். இது சாத்வீக மொழி அல்ல. தலித்துகளின் போராட்ட மொழி! சொல்பவர் யார்? தலித் அல்ல, அந்தணர். ஏன்? எம் அடியார்கள் என்ற மனித நேயம்! இவர்கள் தெய்வம் என்ற கருப்பொருளை வைத்து ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பார்த்தனர். அதே கருப்பொருளை வைத்துப் பெண் அடிமைத்தளையையும் எதிர்த்தனர்:


ஆண்டாள்

வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழி சங்குத்தமற்கென்று
உன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிட வரக்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய், மன்மதனே

என்று 'நாச்சியார் திருமொழி'யில் கோதை நாச்சியாரான ஆண்டாள் சொல்கிறாள். இதில் உவமை அழகோடு தனக்கு நிகரான ஆண்பிள்ளை இல்லை என்பதை, காட்டில் திரியும் நரி போன்றவர் ஆடவர் என்று துணிந்து சொல்ல, கடவுள் பக்தி என்ற யுத்தி பயன்படுத்தப்படுகிறது. அதே தைரியத்தில் தன் பாலியல் ஆசைகளையும் மறைக்காமல் ஓர் ஆண் ஆதிக்க சமுதாயத்தில் குடும்பப் பெண்ணான ஆண்டாளால் இப்படிச் சொல்ல முடிகிறது.

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்
புணர்வதோ ராசையினால் என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்
தாவியை ஆகுலஞ் செய்யும்
ஆங்குயிலே! உனக்கென்ன மறைத்துறைவு?

இத்தகைய பாலியல் சுதந்திரத்தைத் தற்போதைய எழுத்துகளில் அம்பை, வாஸந்தி இவர்களிடம் காணக் கிடைக்கிறது. ஆனால் அதற்குத் தமிழகம் எடுத்துக் கொண்ட ஆண்டுகள் 1200! இருபதாம் நூற்றாண்டில் பெரும் சமூக மாற்றங்களுக்குப் பிறகுதான் மேலைத் தேசத்துப் பெண்களாலும் இப்படிப்பட்ட துணிவுடன் இப்போது பேசமுடிகிறது, எழுதமுடிகிறது. ஆனால், ஆண்டாள் இதைச் சொன்ன காலமோ எட்டாம் நூற்றாண்டு!

ஆண்டாளின் அறிவின் ஆளுமை வெறும் பால் குறித்த விடுதலையுடன் நின்றுவிடவில்லை. அவளால் அன்று அறிவியலும் பேச முடிந்து இருக்கிறது. திருப்பாவையில் வரும் கீழ்க்கண்ட பாடல் நல்ல உதாரணம்:

ஆழி மழைக் கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு, முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடையப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நான்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழவுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

இப்பாடல் சூழலியல் (ecology); பாடத்திட்டத்தில் வரும் நீரின் சுழற்சி பற்றி மிகத்தெளிவாகப் பேசுகிறது. எட்டாம் நூற்றாண்டில், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற சிறு கிராமத்தில் வாழ்ந்த, கடலே பார்த்திராத ஒரு பெண்

www.padippakam.com


ணினால் மேகங்களின் தோற்றம் பற்றிப் பேசமுடிந் திருக்கிறது! மேகங்கள் கடலில் சென்று நீரை முகர்ந்து மழையாகக் கொண்டுவந்து உலகம் வாழப் பெய்கின்றது என்ற அறிவியல் அவளுக்குத் தெரிந்திருக்கிறது. அத் தோடு நின்றுவிடவில்லை! இவள் பிரபஞ்சத்தின் தோற் றத்தைப் பற்றியும் ஒரு வரி சொல்கிறாள். அதுதான் இன்னும் ஆச்சரியம்! "ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கருத்து" என்ற வரிகள்தான் அவை. ஊழிக்கு முன் வெறும் கருமைதான் இருந்தது என்பது கருங்குழி (black hole) கோட்பாட்டின் முக்கிய கருவாகும். கருங்குழி யின் கருவில் மிக மிக மெலிதான ஒளிக்கீறுகூட தாண்டி ஓட முடியாத அளவுக்கு அடர்த்தி உள்ளது என்கின்றது அறிவியல். அதாவது பிரபஞ்சத்தின் தோற் றம் கருமையில், அதன் முடிவும் கருமையில். இதை அப்படியே உரைக்கின்றது ஆண்டாளின் கூரிய அறிவு!

இத்தகைய புரிதல்கள் பண்டைய நம் ஆசான்களிடம் இருந்திருக்கின்றன. கணிதத்தில் பூஜ்ஜியம் அல்லது சைபர் என்னும் கருத்து இந்தியர்களால் கொண்டுவர ப்பட்டதுதான். அதன்முன் இதற்கொரு குறியீடு கிடை யாது. இது இந்து சமவெளி மக்களால் பபிலோனிய மக்களுக்கும் முன்னதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. பாழ் என்பதைக் குறிக் கும் இக்குறியீடு பின் சம்ஸ்கிருதத்தில் 'சூன்யம்' என்ற ழைக்கப்பட்டு, அதை அரேபியர்கள், ஸிர்.ஃப் (sifr) என்று அழைக்க, அது ஸி.ஃபிரும் (zefirum) என்று லத் தீனில் அழைக்கப்பட, ஸி.ஃபைரோ (zefiro) என்று இத் தாலியில் கொண்டுவந்து, பின் சை.ஃபர் (zero) என்று ஆங்கிலத் துக்கு வருகிறது. இதுபற்றிப் பாடலொன்று பரிபாடலில் வருகிறது.

> பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என,
> இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என
> ஆறு என, ஏழு என, எட்டு என, தொண்டு என
> நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை
> (3.77-80)

இங்கு தொண்டு என்பது ஒன்பதையும், பாகு என்பது கால் என்றும் பொருள்படுகிறது. நால்வகையான ஊழி கள் பற்றி இப்பாடல் பேசுவதால் இவர்களுக்கு பிரபஞ் சத்தின் தோற்றம் பற்றிய புரிதல்கள் இருந்தி ருப்பதும் தெரியவருகிறது. பரிபாடலின் தொடர்ச்சியாகத் திவ்யப் பிரபந்தங்கள் வருகின்றன. நம்மாழ்வாரின் பாசுரங்களில் இத்தகைய அறிவியல் கூற்றுகள் இடம் பெறுவதைக் காணலாம்.

> ஒன்றுந் தேவும் உலகும் உயிரும்
> மற்றும் யாதுமில்லா
> அன்று நான்முகன் றன்னொடு தேவர்
> உலகோடுயிர் படைத்தான்
> குன்றம் போல்மணி மாடம்நீடு
> திருக்குருகூரதனுள்
> நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத்
> தெய்வம் நாடுதிரே



முல்லையின் தெய்வம் கண்ணன்

என்ற நம்மாழ்வார் திருவாய்மொழியில் பிரபஞ்சத்தின் முதல் சில விநாடிகள் சொல்லப்படுகின்றன. இது வானவியல் ஆய்வில் மிகச் சூடான விஷயமாகக் கருதப் படுகிறது. நம்மாழ்வார் சொல்கிறார், எந்தப் பருப்பொரு ளும் (matter), பிரக்ஞை (தேவும்), உலகம், உயிர்கள் மற்றும் எந்த வஸ்துவும் இல்லாத போழ்தில் பிரக்ஞை யைப் படைத்து, பின் உலகைப் படைத்தான் இறைவன் என்று. இங்கு இறைவனைக் குறியீடாகக் கொண்டால் பிரபஞ்சம் தோன்றும் சில நொடிகள் தத்ரூபமாகச் சொல்லப்படுகின்றன. இப்பிரபஞ்ச கர்த்தாவை, நிகழ்வை ஆதிப்பிரான் என்ற பதத்தால் சொல்லாமல் வேறு எப் படிச் சொல்ல முடியும்?

இப்படி, தமிழ் தழுவிய உலகம் மிக அறிவுபூர்வமாக, உலகப் பார்வையுடன் இருந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆரியத்துடன் எப்போதும் தமிழுக்கு ஓர் அன்னி யோன்ய உறவு உண்டு. சம்ஸ்கிருதத்தின் வானவியல் ஆய்வுகளை அப்படியே தமிழும் உபயோகித்துக் கொண்டது. தமிழ் வருடங்களில் பாதிக்கு மேல் ஆரியச் சொற்கள்தான். பண்டைய கட்டிட, சிற்ப சாஸ்திரங்க ளெல்லாம் ஆகமங்கள் என்றளவில் ஆரியத்திலேயே தமிழர்களால் எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. யோக, உயர் உளவியல் ஆய்வுகளெல்லாம் ஆரியத்தில் எழு திவைக்கப்பட்டன. சமூக மாற்றங்களைக் கொண்டுவந்த புராணங்கள் (பாகவதம், சிவபுராணம் போன்றவை) எல் லாம் தமிழகத்தில்தான் எழுதப்பட்டன. பரிபாடற் தொடக் கம் ஆரம்பித்த பக்தி இயக்கம் ஆழ்வார்களாலும்,

www.padippakam.com

நாயன்மார்களாலும் போற்றி வளர்க்கப்பட்டு தமிழகத்திலிருந்து மெல்ல, மெல்ல இந்தியா முழுவதும் பரவி இன்று அமெரிக்க வீதிகளில் ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா! என்று ஒலிப்பதற்குக் காரணமாகவும் இருந்திருக்கிறது. அதேபோல், தமிழக அகமரபு காளிதாசன் முதற்கொண்டு அத்தனை ஆரிய இலக்கிய கர்த்தாக்களையும் பாதித்து இருக்கிறது. சமணர்களின், பௌத்தர்களின் தத்துவங்கள் தமிழ் செழிக்க உதவியிருக்கின்றன. தமிழக இலக்கண நூல்களெல்லாம் சமண முனிவர்களால் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுவந்தன.

எந்த கலாசாரத்திற்கும் வருவதுபோல் தமிழுக்கும் இருண்ட காலங்கள் வந்து போயின. பாரசீகரின், துருக்கியரின் தாக்குதல்கள், பின் ஆங்கிலேயரின் ஆதிக்கம் இவற்றால் தமிழினத்தின் தன்மானம் குறைந்து, நலிந்து போனது சமீபத்திய வரலாறு.

ஆனாலும் ஆங்கிலேயர் தமிழகத்தை ஆண்ட காலத்தில்தான் மகாகவி பாரதி உருவானான். ஆங்கில இலக்கியத்திலிருந்து புதினம் (நாவல்), சிறுகதை, புதுக்கவிதை இவை தமிழுக்குக் கிடைத்தன. உரை நடை என்ற புது உத்தி தமிழுக்குக் கிடைத்தது. முகம்மதியர் கொண்டுவந்த கலாசார மாற்றம், கிறிஸ்தவர் கொண்டுவந்த புதிய விஷயங்கள், சரபோஜி மன்னர்கள், நாயக்க தெலுங்கர், கன்னடியர்கள் கொண்டுவந்த புதிய நயங்கள் தமிழக இலக்கியத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. இக்கலப்பின் உன்னத பரிமாணங்கள்தான் தோப்பில் முகம்மது மீரான், கி. ராஜ நாராயணன், சுப்ரபாரதி மணியன், திலீப்குமார் போன்ற தமிழ் இலக்கிய கர்த்தாக்கள். ஆங்கில, லத்தீன் அமெரிக்க இலக்கியங்களின் தாக்கம் தற்காலத்தில் தமிழில் உள்வாங்கப்பட்டுள்ளன. பெண்ணிய எழுத்துக்கள் இதன் வெளிப்பாடே. இந்தியாவின் மராட்டிய இலக்கியத்தின் பிரதிபலிப்புத்தான் தமிழக தலித் இலக்கியம்.

இலங்கைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் ஐரோப்பிய, அமெரிக்கக் கண்டங்களுக்கு இடம்பெயர்ந்து தமிழுக்குப் புகலிட இலக்கியம் என்ற ஒரு புதுத் தொகையைத் தந்துள்ளனர். இது முந்தைய இடப்பெயர்வால் விளைந்த இலங்கை, மலேசிய, சிங்கப்பூர் இலக்கியங்களிலிருந்து பெரிதும் மாறுபட்ட ஒரு இலக்கிய வகையாகும். புகலிட இலக்கிய வகையின் ஒரு பிரிவாக விரும்பி வெளிநாடு வந்து பணியாற்றும் அமெரிக்க, ஐரோப்பிய, ஆபிரிக்கத் தமிழர்கள் எழுதும் எழுத்து அமைவதற்கான சாத்தியக்கூறுகளும் தெரிகின்றன.

இதற்கிடையில் தமிழ் இலக்கிய உலகில் பெரிய பின்னடைவும் தெரிகிறது. வணிகப் பத்திரிகைகள் தமிழ் இலக்கியத்தை முழுமையாய்க் குத்தகை எடுத்துள்ள ஒரு அபாயகரமான நிலையில் தமிழ் தற்போது நிற்கின்றது. தரமான எழுத்துக்கள் சிற்றிலக்கியப் பத்திரிகைகளில் வந்தாலும் இப்பத்திரிகைகள் தங்களுக்குள் இட்டுக்கொள்ளும் குழுச் சண்டையில் இவ்விலக்கியம் பரவலாகப் பரவாமல் நிற்கிறது. Middle magazine எனப் புதுப்பார்வையுடன் வெளிவந்த 'சுபமங்களா'வும் கோமல் சுவாமிநாதன் என்ற தனிநபர் முயற்சியாய்ப் போய் கடைசியில் பொய்த்துவிட்டது. வெளிநாட்டில் வசிக்கும் இரண்டாவது தலைமுறையினர் தமிழே தெரியாமல் நிற்க, தமிழக இளைஞர்களோ ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு கொச்சைமொழி பேசிக்கொண்டு நிற்கின்றனர். ஒருவகையில் பார்த்தால் தமிழ் முழுமையான ஒரு வட்டம் அடித்து இப்போது தன் தோற்றம் தெரியாமல், தன் பண்பாடு தெரியாமல், தன் பாரம்பரியம் தெரியாமல் ஆய்வு நோக்கற்று, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நிற்பது போல் தெரிகிறது. தமிழ்ச் சமுதாயம் பல்வேறு நாடுகளில் அகதியாய், வேர்கள் அறுந்து நிற்கிறது. இந்நிலையில் தமிழுக்குக் கதி விமோசனம் உண்டா?



தன்னார்வமும், சுயநம்பிக்கையும் இருக்கும் பட்சத்தில் தமிழ் மீண்டும் தலைதூக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆங்கில வருகையின் காரணமாக இலக்கியத்திற்குப் புதினம், கட்டுரை, புதுக்கவிதை இவைகள் கிடைத்துள்ளன. சுதந்திரக்காற்று வீசியதன் பலனாகத் தலித்தியம், பெண்ணியம் இவை மலரத் தொடங்கியுள்ளன. இருபதாம் நூற்றாண்டில்தான் முன்னெப்போதும் கண்டிராத அளவில் தகவல் புரட்சி நடந்திருக்கிறது. ஓலையில் எழுதப்பட்ட தமிழ், காகிதத்திற்கு வந்து, அச்சில் ஏறி, இன்று கணனித் திரையில் மின்னுகிறது. வள்ளுவனின் அத்தனை பாடல்களும் ஒரு கணனிச் சொடுக்கில் கண்முன் வந்து நிற்கின்றன. தமிழ் கூறும் நல்லுலகம் கணனித் தொடர்பால் மீண்டும் ஆக்கபூர்வமாக இணைய முயற்சிகள் நடந்துவருகின்றன.

'இண்டர்நெட்' என்னும் இணைய வலையின் மூலம் தமிழின் அத்தனை பாரம்பரியச் செழுமையும் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. இது குறித்துப் பல்வேறு முயற்சிகள் நடந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் திரு. பாலப்பிள்ளை (சிட்னி), முத்தெழிலன் (மலேசியா) இவர்களின் கூட்டு முயற்சியில் தமிழ் இணையம் (http: tamil.net) தோற்றுவிக்கப்பட்டு அதில் உலகின் தலைசிறந்த தமிழ் ஆய்வாளர்களும், கணனித்துறை வல்லுனர்களும், பிறதுறை ஆய்வாளர்களும் கூடிப்பேசத் தலைப்பட்டுள்ளனர். இவர்களின் முக்கிய குறிக்கோள் தமிழனுக்கென்று நிழல்வெளியில் நிரந்தரமாக ஒரு நாட்டை உருவாக்க முடியுமா என்பதுதான். நிழல் வெளிக் கிராமம் என்ற கோட்பாடு இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. கணனியின் மூலமாகத் தமிழர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் பொது இடத்திற்குப் பெயர்தான் தமிழ் இணையம். இது தமிழனின் கூட்டு முயற்சியின் குறியீடாக உள்ளது. இந்நிழல் வெளிச் சமூகத்திலிருக்கும் தமிழர்கள் சேர்ந்து பல நல்ல காரியங்கள் செய்யமுடியும். ❑

www.padippakam.com



முதன் முதலாகத் தமிழ் இலக்கியத்தை நில அமைவுக் கண்ணோட்டத்தில் ஆராய முற்பட்டவர் சேவியர் தனிநாயக அடிகள். (Landscape and Poetry, IITS, Chennai 1997) தமிழரின் நிலம் சார் மனப்பாங்கை எடுத்துக்காட்ட வந்த அடிகள் கிரேக்கக் காவியமான 'ஒடிசி' யில் ஒரு வேளாண்மையாளனின் பார்வை பொலிந்த இயற்கைக் காட்சி தருவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

# நில அமைவும் இலக்கியமும்

சிற்பி பாலசுப்பிரமணியம்

என் பேராசிரியர் மு. அண்ணாமலை விரும்பிச் சொல்லும் வாக்கியங்களில் ஒன்று - 'தண்டமிழ் தந்த பொருள் இலக்கணம் இன்று நமக்குத் தாத்தாவின் சட்டையாகிவிட்டது....' இவ்வாறு அவர் விதந்து கூறியதற்குக் காரணம் "அகனைந்திணை" என்று வரையறுக்கப்பட்ட காதல் இலக்கணங்களை மீறி வகைவகையான வாழ்வியல் சிக்கல்கள் காதல் உலகில் வலம் வரத் தொடங்கி விட்டது என்பதுதான். அதாவது, தொல்காப்பியர் சொன்ன உரிப்பொருள் எல்லைகள் உடைந்து தகர்ந்து போய்விட்டன என்பது கருத்து.

சமுதாய அமைப்பு எளிமையாக இருந்த பண்டைக்கால மரபு, நூற்றாண்டுகளின் பாய்ச்சலில் வெகுவான மாறுதல்களுக்கு இரையாகிவிட்டது. அரசியல், ஆட்சி முறை, தெய்வ வழிபாடு, குடும்ப உறவு, கல்வி, வெளிநாட்டுத் தொடர்பு, உலகியல் கண்ணோட்டம் எல்லாம் பாரதூரமான உரு, உணர்வுத் திருப்பங்களைச் சந்தித்திருக்கின்றன. எனவே, 'உரிப்பொருள்' அடையாளம் காணமுடியாத மாறுபாடுகளைச் சந்தித்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தொல்காப்பியரும் இந்த விபத்துகு மாற்றங்களை, 'கடி சொல் இல்லை காலத்துப் படினே', என்ற கண்ணோட்டத்தில் ஏற்றிருப்பார் என்றே கருதலாம்.

தமிழ் இலக்கிய உலகின் மூதாதையருக்கு மூதாதையான தொல்காப்பியர் செய்துதந்த இலக்கணம் இலக்கியப் படைப்புக்கான அடித்தளங்களை வரையறுத்துக் கூறுவதையே இலட்சியமாகக் கொண்டது. எழுத்தின் திறனறிந்து, சொல்லின் நுட்பமறிந்து, செய்யுள் வகையறிந்து, உவமை, மரபு, மெய்ப்பாடுகளின் கூறுகளறிந்து அகத்திணையும் புறத்திணையுமான படைப்புக் களங்களை அணுகவேண்டும் என்பது இப்பெருமகனின் நோக்கு. வகை, தொகை, விரி என்னும் முப்பெரும் பண்புகளுக்கும் உறைவிடமான தொல்காப்பியம் நம்காலப் படைப்பிலக்கியத்தின்

www.padippakam.com

மையங்களையும் தொடத் தவறவில்லை என்பதுதான் அதன் உயிர்ப்பு மிக்க சிறப்பாகும்.

இலக்கியம் படைப்போன், குறிப்பாகக் காதல் இலக்கியம் படைப்போன் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் என மூன்றினை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

> 'முதல், கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலும் காலை முறைசிறந் தனவே
> பாடலுள் பயின்றவை நாடுங் காலை'
>
> (தொல்.பொரு.அக:3)


என்னும் கருத்து தொல்காப்பியர் இலக்கிய உலகுக்கு அளித்த மூலதனம். தொல்காப்பியர் காலத்தின் வரையறைகளைக் கடந்து இன்னும் இம்முப்பொருள் படைப்புக்களின் மூலப்பொருளாவது கண்கூடு.

இவ்வாறு காண்பதுதான் நம் தமிழ் முன்னோர் கண்ட இலக்கியக் கோட்பாடு களைச் செழுமையுறச் செய்யும் என்ற கருத்து இன்று வலிவுற்று வருகின்றது. மலையாளக் கவிஞரும் திறனாய்வாளரும் ஆங்கிலப் பேராசிரியருமான அய்யப்பப் பணிக்கர் மிகத் தெளிவாக இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்கத்தைய மொழி, இலக்கியம், அரசியல், மதம் அனைத்தும் அன்னிய ஆட்சிக்காலத்தில் மேலுயர்த்திப் பேசப்பட்டன. அது ஒருவகையில் நம்மை அடிமைப்படுத்தும் ஆயுதமாகவும் பயன்படுத்தப் பட்டது. கூர்ந்து நோக்கினால் மேலை இலக்கியக் கோட்பாடுகளின் மூலவர் அரிஸ்டாட்டில். உண்மையில் இந்திய இலக்கியங்களையோ, அவற்றின் வேர்களையோ முற்றிலும் அறியாதவர் அரிஸ்டாட்டில். நம் காப்பியங்களை அறியாத அவர் தம் கொள்கைகளை மாறுபட்ட அடிப்படைகள் கொண்ட இந்தியக் காப்பியங்களோடு எப்படிப் பொருத் திப் பார்க்க முடியும்? எனவே இந்திய இலக்கியங்களை அறியவும் உணரவும் இந்தியக் கோட்பாடுகளை உருவாக்குவது அவசியம். - இவ்வாறு அய்யப்பப் பணிக்கரின் சிந்தனை அமைகிறது. (29.1.94இல் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை.)

ஓர் இலக்கியக் கோட்பாட்டை உருவாக்க மூன்று வழிகள் உண்டு. அவை முறையே மீட்டுருவாக்கம் (recovery), கண்டறிதல் (discovery), புத்தாக்கம் (invention) என அறிஞர் கூறுவர். இந்நெறி நின்று காணும்போது மீட்டுருவாக்கம் செய்தல் தொல்காப்பியர் கோட்பாட்டை காலத்துக்கேற்றவாறு செழுமைப்ப டுத்திக்கொள்ளும் வழியாக அமைகிறது. அதாவது நவீனப்படுத்திப் பொருள் காண முற்படுகிறோம்.

இந்தப் புதிய பார்வையில் தொல்காப்பியர் கூறும் முப்பொருள்களில் (முதல், கரு, உரி) முதற்பொருளைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கலாம்.



www.padippakam.com

'முதல் எனப்படுவது நிலம்பொழு - திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே,


என்பது தொல்காப்பியம் (அக: 4). இது தமிழ் மரபில் உருவான கருத்தா அல்லது தொல்காப்பியரின் ஆய்வில் எழுந்த சிந்தனையா என்பது நமக்குத் தெரியாது. ஏனெனில் நமக்குக் கிடைக்கும் மிகப் பழஞ்சுவடியே இதுதான். மனிதனின் வாழ்வியலுக்கு ஆதாரமான ஒரு பேருண்மை இச்சூத்திரத்தால் முன்வைக்கப்படுகின்றது.

நிலம், காலம் ஆகிய இரண்டினையும் முதற்பொருள் என்ற கலைச்சொல்லால் இப்பெரும் பேராசிரியர் குறிக்கின்றார். வியப்புக்குரிய கலைச்சொல் இது. எல்லா உயிரினங்களுக்கும் நிலைத்த தரய்மடி நிலம் அல்லவா? அனைத்துயிர்க்கும் முன்தோன்றி மூத்த பொருளும் நிலம் அல்லவா? உயிரைத் தருவது, காப்பது, தன்னுள் கரைத்துக் கொள்வது நிலம் அல்லவா? எனவே அதனை முதற்பொருள் என்று அழைத்தார். உயிர்கள் நிலத்தில் வாழ்கின்றன. அதேசமயம் காலத்திற்கு உள்ளடங்கி வாழ்கின்றன. தோற்றமும் முடிவும் கூறமுடியாதபடி கடவுளைப்போல் நிற்பது காலம். எனவே அதனையும் முதற்பொருள் என்று அழைத்தார் தொல்காப்பியர்.


இன்றைய அறிவியல் உலகம் Time and Space என்று ஆர்ப்பரிக்கும் அடிப்படை உண்மையை வாழ்வியல் ஆய்வுக்கு வடித்துக் கொடுத்தவர் தொல்காப்பியர் என்பது வியப்பின் வியப்பு அல்லவா?

நிலத்தின் அடிப்படையினை ஆராய்ந்தார் தொல்காப்பியர். அவருடைய பார்வையில் தமிழ் நிலமே காட்சி தந்தது. மலைகள் செறிந்த குறிஞ்சி, காடுகள் நெருங்கிய முல்லை, வயல்கள் உருவான மருதம்,. அலைகடற் புறமான நெய்தல் என்ற நானிலங்கள் தென்பட்டன. சகாராக்கள் இல்லாத தென்னிந்தியாவில் பாலைவனங்கள் இல்லை. ஆயினும் 'முல்லையும் குறிஞ்சியும்' மழைவளம் குன்றும்போது சோர்ந்து போன தற்காலிக நிலையையே பாலை என்று வகுத்தார்.

இந்த ஐந்து நிலங்களுக்கும் இயற்கைவளம் மணக்க மலர்களின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார். புறத்தே காட்சி தந்த நிலங்களுக்கு ஏற்பக் கற்பித நிலங்களை (Imaginary Landscape) இலக்கியப் படைப்புக்கு அளித்துக் குறிப்பிட்ட உணர்ச்சி நிலைகளுக்கு உரியவை ஆக்கினார். குன்றுகளின் மகத்தான தனிமையில் காதலர் கூடி மகிழும் இனிமையையும், அடர்ந்த காடுகளில் கொழுகொம்பைப் பற்றவும் சுற்றவும் தவிக்கும் கொடி போல், 'வருவார் தலைவர்' என்று காத்திருக்கும் தலைவியின் தவிப்பையும், நண்டுகள் கொழுத்தால் வளையில் தங்காது என்ற உண்மையை நாளும் பார்த்திருக்கும் வயல் வெளிகளில் மனையை மறந்த கணவர்களிடம் தலைவியர் கொள்



www.padippakam.com



ளும் ஊடலையும், வெட்டவெளி வெம்பரப்பான பாலையில் பிரிவின் கொடுமையையும், அலையோசை மட்டுமே கேட்கும் விரிந்த வானும் மணற்பரப்புமான கடலோரத்தில் இரங்கலையும் உணர்ச்சி மையங்களாக்கி இலக்கியம் படைக்குமாறு விதிகளை வகுத்தார் தொல்காப்பியர்.

ஒவ்வொரு உணர்ச்சியையும் சித்திரிக்க ஏற்ற காலங்களையும் பெரும்பொழுதாகவும் (பருவங்கள்), சிறுபொழுதாகவும் அமைத்து வைத்தார். இந்த உணர்ச்சிக் களங்களுக்குத் திணைகள் என்று பெயர் கொடுத்து (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை) அவற்றுக்கேற்பக் கருப்பொருள்களையும் அமைத்தார். ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தெய்வம், உணவு, பறவை, மரம், இசைக்கருவி, தொழில், மக்கள் ஆகியவர்களையே கருப்பொருள்கள் என வகுத்துரைத்தார்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து நெடும்பயணம் செய்துவிட்டது சமுதாயம். தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை இலக்கிய வளர்ச்சி நிலைக்கு ஏற்பவும் மக்களின் மாறிவரும் பண்பாட்டு நிலைக்கு ஏற்பவும் பொருத்திப்பார்க்க அவசியம் நேர்ந்திருக்கிறது.

உரிப்பொருள் அளவில் இன்று பெருந்திணை உறவுகளும், கைக்கிளை உறவுகளும் இலக்கியங்களில் முதன்மை பெற்றுள்ளன. ஆண்-பெண் உறவில் புதிய பரிமாணங்கள் ஏற்பட்டுள்ளன.

தொழில் பெருக்கம், மதமாற்றங்கள், ஆட்சி அவலங்கள், இயற்கைச் சூழலின் அழிவு காரணமாகவும், அறிவியல் வளர்ச்சியால் புதுப்பயிர்கள் கண்டுபிடிப்புக் காரணமாகவும், பெரும் போர்களின் விளைவாகக் காடுகள், விளைநிலங்கள் அழிவு காரணமாகவும் கருப்பொருள்களாகிய மரம், செடி, கொடி, பறவைகளின் இருப்பிடங்கள் மாறியுள்ளன அல்லது அழிவெய்தி உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் இருந்த தெய்வங்கள் சில இப்போது இல்லை. புதிதாக கிறித்தவ, இஸ்லாமிய சமயங்கள் பிறந்திருக்கின்றன.

ஓரளவு முதற்பொருள் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று கூறலாம். நிலம் பெரிதும் மாறுதலடையவில்லை. கடல், மலை, ஆறு, காடு சார்ந்த நில அமைப்பு பல்வேறு சிதைவுகளுக்கு இடையேயும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த அடிப்படைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தொல்காப்பியர் கோட்பாட்டை விரிவுபடுத்தலாம்.

நாவலும், சிறுகதையும் இலக்கியத்தின் பெரும் பகுதியாக இன்று வடிவெடுத்திருக்கின்றன. இந்த இலக்கிய வகைமைக்குள் தொல்காப்பியரை எடுத்துச் சென்று 'நாவல், சிறுகதை இலக்கியத்துக்கான தொல்காப்பியரின் மாதிரித் திணைக் கோட்பாடு' ஒன்றினைப் பொருத்திக் காணும் முயற்சி பயனளிப்பதாக இருக்கும்.

இந்த முயற்சியில் கேரளம் முன்னணியில் இருக்கிறது. முன்னர் குறித்தது போன்று, கே அய்யப்பப் பணிக்கர் தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை நவீன பார்வையில் அணுகுவது குறித்துக் கட்டுரைகள் எழுதி இருக்கின்றார். மற்றொரு மலையாளக் கவிஞர் டி. விநயச்சந்திரன் (கோட்டயம் மகாத்மா காந்தி பல்கலைக்கழகம்) மேற்பார்வையில் இரண்டு ஆய்வேடுகள் இந்த அடிப்படையில் வெளிவந்துள்ளன.

(1) Tinai Concept and Thomas Hardy's Woodlanders - M. Phil Thesis - E John Mathew 1993.

(2) ஆதுனிக கவிதையும் திண சங்கல்பவும் - எம்.ஃபில் ஆய்வேடு - வி.ஜெ.செபாஸ்டியன், 1993)

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் செல்வி சா.சிவமணி, 'சங்க அகத்திணைக் கோட்பாட்டு நோக்கில் தமிழ் - மலை யாள நெய்தல் நில நாவல்கள்' என்னும் முனைவர் பட்ட ஆய்வை என் மேற்பார்வையில் செய்து சமர்ப்பித்துள்ளார்.

செல்வி. சிவமணியின் ஆய்வில் கண்டறிந்த உண்மைகளைச் சுருக்கமாக இங்கு கூறலாம். கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்தின் பெரும் பகுதி இன்னும் பண்டைய கூறுகளைக் காத்து வருகின்றது. தெய்வம், உணவு போன்ற கருப்பொருள்களில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இரங்கல் என்ற உரிப்பொருளுக்கு மாறாகப் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் சமூகத்தின்

www.padippakam.com

பொதுச்சிக்கல்கள் முன்னுக்கு வந்துவிட்டன. தோப்பில் மீரானின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை', 'துறை முகம்' நாவல்களில் இஸ்லாமிய நம்பிக்கைகளும், முதலாளித்துவச் சுரண்டலும் புதிய உரிப்பொருளாகி உள்ளன. ராஜம் கிருஷ்ணனின் 'அலைவாய்க் கரையில்', வண்ணநிலவனின் 'கடல்புரத்தில்' நாவல்களில் பாரம்பரியத்துக்கும் நவீனத்துக்கும் இடையே நடைபெறும் மௌனப்போரும், சுரண்டலின் கொடுமையும் வெளிப்படுத்தப்படுகின்றன. தகழியின் 'செம்மீனி"ல் கறுத்தம்மாவின் காதல் குடும்ப எல்லையைத் தாண்டும்போது கடற்கரை மக்களின் பூர்வீக நம்பிக்கையான 'கடல் அம்மா தண்டிப்பாள்' என்ற கோட்பாடு—மையப்படுத்தப்படுகிறது. இவ்வாறு உரிப்பொருள் மாறிவிடுகின்றது.

இன்று நில அமைவு சார்ந்த இலக்கியப் படைப்புகள் குறித்துப் பெரிதும் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறோம். தோமஸ் ஹார்டியின் 'வெஸெக்ஸ்' (Wessex) நாவல்களில் ஒரு கற்பித நிலவடிவம் முன்வைக்கப்படுகிறது. சதுப்பு நிலமும், அது சார்ந்த வேளாண் வாழ்வும் எடுத்துரைக்கப்பட்டு ஒரு தவிர்க்க முடியாத விதி தம் வாழ்வைச் சிதைப்பதை ஹார்டி நாவலின் பொருண்மையாகச் சித்திரிக்கின்றார். அந்நிலத்தின் வீழ்ச்சி, மனித உறவுகளின் வீழ்ச்சியாக அமைகிறது.

இவ்வாறே தகழியை 'குட்டநாட்டின் வரலாற்று நாயகன்' என்று சிறப்பிக்கின்றனர். நில அமைவோடு இலக் கியம் கொள்ளும் நெருக்கமும் நேசமும் இதனால் புலனாகின்றன.

முதன்முதலாகத் தமிழ் இலக்கியத்தை நில அமைவுக் கண்ணோட்டத்தில் ஆராய முற்பட்டவர் சேவியர் தனிநாயக அடிகள் (Landscape and Poetry, IITS, Chennai 1997). தமிழரின் நிலம்சார் மனப்பாங்கை எடுத்துக்காட்ட வந்த அடிகள் கிரேக்கக் காவியமான 'ஒடிசி'யில் ஒரு வேளாண்மையாளனின் பார்வை பொலிந்த இயற்கைக் காட்சி தருவதைச் சுட்டிக்காட்டுகின்றார். பல்லாஸ் என்பவன் உலிசிஸிடம் சொல்கிறான்:

> "எங்கள் இதாகா கொஞ்சம் கரடுமுரடான பூமி தான். பயணத்துக்குச் சிரமமானதும்கூட... ஆனால் இங்கு நிறைய தானியமும் நல்ல மதுவும் இருக்கிறது. மழையும், மென்மைமிக்க வளமான பனியும் இருக்கிறது. ஆடு மாடுகளுக்கு ஏற்ற தீனி இருக்கிறது. நிறையக் காடுகள் இருக்கிறது. வருடம் முழுவதும் குடித்து மகிழ ஊற்று நீர் இருக்கிறது... "
>
> (ஒடிசி - XIII)

இந்தப் பயன்மிக்க இயற்கைப் பரிமாணம் சங்க இலக்கியத்திலும் இருக்கிறது என்கிறார் அடிகள்.


சிந்தனையாளர் ஞானி, பழைய நோக்கை விரிவுபடுத்தி அமைக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக கொள்கிறார். இன்றைய நகர வாழ்க்கை, ஆட்சிமுறை, தொழில், மதம், சாதி, கல்வி, மருத்துவம், வாணிகம், தமிழகத்தில் பிற குடியேறிகளின் வரவு, தாக்கம், அரசியல் கட்சிகள், பிற இலக்கியங்கள் என கருப்பொருள், உரிப்பொருள்களை வளம் செய்யலாம் எனக் கருதுகின்றார்.

பண்டைய நில அமைவுசார் இலக்கியக் கோட்பாட்டைச் செழுமை செய்ய வேண்டிய அவசியம் உருவாகி இருப்பதற்கு வேறுபல காரணங்களும் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானது புலம்பெயர்ந்து வாழ்கிற மக்களின் நிலை.

1. தொழில், பொருளாதாரக் காரணங்களுக்காக வெளிநாடுகளில் வசித்தல்.
2. சொந்த நாட்டில் வாழ முடியாத அரசியல் காரணங்களால் வெளிநாடுகளில் வசித்தல்.

என்ற இருநிலைப்பட்ட மாந்தரை இன்று நாம் காண்கிறோம். ஈழத்தமிழர், இந்தியத் தமிழர் என்னும் இரு வகைத் தமிழரும் இவ்வகைமையுள் அடங்குவர். இவர்களில் இந்தியத் தமிழர் முதல்வகையினர் என்பது மட்டுமல்லாமல் தங்கள் தாயகத்துக்கு எப்போது விரும்பினாலும் திரும்பிவரும் உரிமை பெற்றவர்களும் கூட. ஆனால் ஈழத்தமிழர்கள் நிலை மாறுபட்டது.

ஓங்கி உயர்ந்த பனைமரங்களும், கிடுகுவேலியும், வயல்வெளிகளும், கடற்கரைக் கானலும் நிரம்பிய சொந்த மண்ணிலிருந்து விலக்கப்பட்டவர்களாய் மீண்டும் எப்போது காண்போம் என்ற நம்பிக்கை தளர்ந்து போன மக்கள் இந்தப் புலம்பெயர் தமிழர்கள். நில அமைவு சார் இலக்கியத்துக்குக் கிடைத்திருக்கும் புதிய பரிமாணம் இது. இதனை ஒருவாறு யமுனா ராஜேந்திரன் தன் கட்டுரை ஒன்றில் (கிழக்கும் மேற்கும் - 1997) கோடிட்டுக் காட்டியுள்ளார். வியத்நாமியக் கவி வியென் லின் (Landscape and Exile) கவிதைகளும், ஏ.சிவானந்தனின் When Memory Dies நாவலும், சல்மான் ருஷ்டியின் கட்டுரைகளும், எண் ணற்ற புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளிகளின் கவிதைகளும் கதைகளும் மன ஓவியங்களாக, நினைவின் நிழல்களாக நிலவியல் சித்திரங்களாக (Mental Landscape) உருவாகி இருக்கின்றன.




நிலத்தையும் காலத்தையும் முதற்பொருளாகச் சொன்ன தொல்காப்பியரின் மேதைமை பேருருக்கொள்கிறது. இழந்த நிலம், இழந்த வாழ்க்கை, இழந்த நிகழ்காலம், நிச்சயமற்ற எதிர்காலம் என்கிற புதிய பரிமாணங்களின் ஊடாகவும் சஞ்சரிக்கிறது தொல்காப்பியம். ❑

www.padippakam.com

# கலேவலா:

## தமிழில் ஒரு பின்லாந்துக்காவியம்

ஆர் சிவலிங்கம்
(உதயணன்)






பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் பின்லாந்தில் வந்து இறங்கிய சமயம், தமிழில் பேசுவதற்கு ஆட்களைத் தேடி ஆலாப்பறந்து கொண்டிருந்தேன். நாலைந்து வாரத் தேடலுக்குப் பின்னர் இந்த நாடு முழுவதிலும் வாழ்ந்துகொண்டிருந்த தமிழ்க் குடி மக்களைப் பற்றிய ஒரு புள்ளிவிபரக் கணக்கைப் போட முடிந்தது. அதன்படி தலைநகரான ஹெல்சிங்கியில் ஒருவர். பக்கத்து நகரமான எஸ்ப்போவில் ஒருவர். சிறிது தூரத்தில் ஒரு நகரில் ஒருவர். வெகு தொலைவில் ஒருவர். அவ்வளவுதான். இவர்களின் இல்லத்தரசிகள் தமிழரல்லர். இந்த நால்வரில் மூவருக்குத் தமிழ் பேசவராது. இருவருக்கு இன்னமும் வராது.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இன்றைக்கு என்ன நிலை என்கிறீர்களா? வடக்கே வடதுருவ வலையத் தொடக்கத்தில் றொவாநியமி என்ற நகரத்தில் ஐம்பது அறுபது தமிழர்கள் வாழ்கிறார்கள். தலைநகரான ஹெல்சிங்கியையும் சேர்த்து மற்ற எல்லா நகரங்களிலும் முப்பது நாற்பது பேரைப் பார்க்கலாம். ஆனால் நூறைத் தாண்டிவிட்டது என்ற தகவல் இதுவரை இல்லை.

நான் ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகத்தில் பின்னிஷ்மொழி கற்ற காலத்தில், "தமிழா? அப்படியென்றால் என்ன?" என்று கேட்டு என்னை அறுத்த சக மாணவரும் ஒருவர் இருந்தார்.

அப்பொழுது ஹெல்சிங்கியின் தலையாய தினசரி ஒன்றில் தமிழ் மக்களைப்பற்றிய செய்தி ஒன்று வந்திருந்தது. அந்தச் செய்தியில் எனக்கு உடன்பாடு இல்லை. அந்தப் பத்திரிகை அலுவலகத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "நீங்கள் எப்படி இவ்விதம் எழுதலாம்?" என்று அந்த நிருபருடன் சண்டைக்குப் போனேன். அவர் எனது சண்டையைச் சட்டை செய்யவில்லை. ஹெல்சிங்கியில் ஒரு தமிழர் வாழ்வதை அறிந்த இனிய அதிர்ச்சி அவருக்கு. என்னை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்றார். ஏதோ இந்தியாவிலிருந்து ஒரு புதிய பிராணி இங்கே மிருகக்காட்சிச் சாலைக்கு வந்திருக்கிறது. அதைப் பார்க்கவேண்டுமே என்பதுபோல ஆர்வப்பட்டார்.

அந்த நிருபர், தமிழ் எழுத்தாளர் என்ற வகையில் என்னைப் பேட்டி கண்டு, வர்ணப் படங்களுடன் கலக்கலாக ஒரு கட்டுரையை வெளியிட்டார். அந்தக் கட்டுரையால் எனது வாழ்வின் கீழ்வானம் சிவந்தது. பேராசிரியர் அஸ்கோ பார்பொலாவைச் சந்திக்கும் வாய்ப்பு வந்தது.

ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகத்தின் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கல்வித் திணைக்களத்தின் தலைவராக இப்பொழுது கடமையாற்றும் திரு.பார்பொலா, அன்றைக்கும் இந்தியவியல் கல்விக்குப் பொறுப்பாக இருந்தார். இந்திய மொழிகள், மதங்கள், கலை, கலாசாரம் தொடர்பாகக் கற்பித்தல், புராதன கல்வெட்டுகள், வேதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்தல் என்று ஒரு யாகமே நடத்திக்கொண்டிருந்தார்.

அவர் 1986இல் என்னைத் தனது ஆய்வு உதவியாளராக நியமித்துக் கொண்டார். திருக்குறளுக்கும் சிலப்பதிகாரத்துக்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்றொகுதிகள் தயாராகின. ஒவ்வொரு சொல்லை


www.padippakam.com

யும் வேரிலிருந்து அலசி ஆராய்ந்து, இலக்கண வடிவங்களை விளக்கிப் பொழிப்புரையும் எழுதப்பட்டது. இவை இந்தியவியல் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. அத்துடன் திருக்குறளும் சிலப்பதிகாரமும் பின்னிஷ்மொழியிலும் வெளிவர இருக்கின்றன. தமிழ் நாட்டின் ஒரு பிரபலமான சிவன் கோவிலின் தலபுராணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்தியவியல் கற்கும் மாணவர்களுக்காகப் பல இந்திய மொழிகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் தமிழ்மொழி கற்பித்தலை 1986இல் நான் பொறுப்பேற்று இன்றுவரை தொடர்ந்து வருகிறேன். தமிழ்மொழி ஆரம்ப தரம், உயர்தரம் என இரு பிரிவுகளில் கற்பிக்கப்படுகின்றது. கம்பனிலிருந்து கண்ணதாசன்வரை எங்கள் பாடங்களில் வந்துபோவார்கள்.

சரி, பின்லாந்து மொழியிலிருந்து தமிழுக்கு ஒரு நூலைக் கொண்டுவரலாமா என்று யோசித்தோம். 'கலேவலா' என்பது பின்லாந்தின் தேசிய காவியம் 'கந்தலேதார்' என்பது ஓர் இசைநூல். இவை தவிர, பல மொழிகளுக்கு மாற்றப்பட்ட புகழ்பெற்ற நாவல்களான 'எகிப்தியன்', 'ஏழு சகோதரர்கள்', 'அறிமுகமற்ற போர் வீரன்' ஆகிய பல நூல்கள் இருக்கின்றன.

இவற்றுள் 'கலேவலா'வைத் தெரிவு செய்து தமிழில் மொழிபெயர்க்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. இதன் ஐம்பது பாடல்களிலும் உள்ள 22,795 அடிகளையும் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட வகையில் தமிழாக்கம் முப்பதாவது மொழியாகும். தெரிவுசெய்யப்பட்ட பாடல்கள் வேறு பதினைந்து மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. எல்லாமாக 45 மொழிகளில் 200க்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.



மரபுக்கவிதை நடையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 22,795அடிகளுடன் முன்னுரைகள், பின்னிணைப்புகள், படங்கள் எல்லாம் சுமார் ஆயிரம் பக்கங்கள் வந்தன. (முன்னுரைகளும் விளக்கக் குறிப்புகளும் படங்களும் மட்டும் 100 பக்கங்கள் வந்தன.) எனவே பெரிய அளவு காகிதத்தில், ஒரு பக்கத்தில் இரண்டு பத்திகள் (Columns) அமைத்துச் சிறிய எழுத்துக்களில் 480 பக்கங்களாக்கி ஹொங்கொங்கில் அச்சிட்டு வெளியிட்டோம். இந்த நாட்டுக்குப் பெருமை தேடிக்கொடுத்த புகழ்பெற்ற மூத்த கலைஞர்களில் ஒருவரான Akseli Gallen - Kallela அவர்களின் பத்து வர்ணப்படங்களும் பல பழைய புகைப்படங்களும் இந்தத் தமிழ் வெளியீட்டில் இடம்பெற்றிருக்கின்றன.

அவ்வப்போது ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன் ஒப்பு நோக்கியபோதிலும், தமிழாக்கம் பின்னிஷ் மூல நூலிலிருந்து நேரடியாகத் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது. ஆங்கிலத்திலும் பார்க்க, பின்னிஷ் மொழியிலிருந்து தமிழுக்கு நேரடியாகக் கொண்டுவருவது சுலபமானது. தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள் இருப்பதைப்போலவே பின்னிஷ் மொழியிலும் இருக்கின்றன. சில ஒற்றுமைகள், அந்நியநாட்டில் ஒரு நெருங்கிய உறவினரைச் சந்தித்த சுகத்தைத் தருகின்றன. தமிழில் 'கந்தன்' என்ற சொல்லுடன் ஆறாம் வேற்றுமையைச் (genitive) சேர்த்தால் 'கந்தனின்' என்று வருவதுபோல, பின்னிஷ் மொழியிலும் Kanthan என்ற பெயருடன் ஆறாம் வேற்றுமையைச் சேர்த்தால் Kanthannin என்று தான் வரும்.

பின்னிஷ் பெயர்களுக்கும் ஆதிகாலத்துத் தமிழ்ப் பெயர்களுக்கும் ஏதோ ஒற்றுமை இருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். சில இடங்களில் ஓர் ஒலி ஒற்றுமை இருந்தாலும் எவரும் இதை உறுதிப்படுத்தியதாகத் தெரியவில்லை. கலேவலா நாயகர்களின் பெயர்களில் சில உச்சரிக்கச் சிரமமாகத் தோன்றினாலும், பல பெயர்கள் இயல்பாகத் தெரிகின்றன. வைனாமொயினன், விபுனன், இல்மரினன் என்பன வைத்தியநாதன், விமலன், இலக்குமணன் என்பனபோலப்படுகின்றன. குயிலிக்கி, அன்னிக்கி, ஐனொ என்பன இந்தக் காவியத்தில் சில பெண் பாத்திரங்களின் பெயர் களாகும்.

பின்லாந்தின் தேசிய காவியமும் உலகளாவிய மிகச் சிறந்த காவியப்பாடல்களில் ஒன்றுமான கலேவலா இந்நாட்டு மக்களின் கலாசாரப் பொக்கிஷம். பல்லாண்டு பல்லாண்டுகாலமாக மக்களின் மனதில் பதிந்திருந்த வாய்மொழிப் பாடல்களைத் திரட்டி நூலுருவாக்கியவர் எலியாஸ் லொண்ரொத் (Elias Lonnrot) ஆவார். இவர் காடு கழனிகளிலும் மலைமடுக்களிலும் இருபதினாயிரம் கி.மீ. வரை கால்நடையாகவே அலைந்து திரிந்து, மக்களைப் பாடவைத்துச் சுமார் 60,000 அடிகளைச் சேகரித்தார். அவற்றில் தெரிவுசெய்த அடிகளு

www.padippakam.com


டன் அதே சந்தத்தில் தானும் 600 அடிகளை இயற்றி நிகழ்ச்சி களை இணைத்து நீண்ட காவியமாகப் படைத்தார்.

'கலேவலா' என்பது ஓரினம். கலேவலா இனத்தவர் வாழ்ந்த இடம் கலேவலா என அழைக்கப்பட்டது. அதுவே இந்தக் காவியத்தின் பெயரு மாயிற்று. கலேவலா இனத்தின் வழித்தோன்றல்களே இக்காவியத்தின் நாயகருமாவார்.

கலேவலாவின் தமிழாக்கத்துக்கு எழுதிய அறிமுக உரையில் கலாநிதி அஸ்கொ பார்பொலா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையே ஏற்பட்ட போரினைப்போல, அல்லது இராமாயணத்தில் இராமர் இலங்கைக்கு மேற்கொண்ட படையெழுச்சியைப்போல, ஸ்கன்டிநேவியக் கடல்வீரர்களின் தாக்குதல்களினால் ஏற்பட்ட வரலாற்றுப் பின்னணியையும் உடைய கலேவலாவின் போர் நடவடிக்கைகள் இப்பாடல்களின் முதுகெலும்பாக அமைந்தன..! பண்டைய தமிழ் மக்களின் கலாசாரத்தின் எல்லாப் பக்கங்களையும் சிலப்பதிகாரத்தில் அளித்திருப்பதுபோல, பண்டைய பின்லாந்திய மக்களின் கலாசாரத்தின் சிறந்த விரிவான வர்ணனையை இந்நூலில் காணலாம்..! பின்லாந்தின் பழைய பரம்பரைச் செல்வங்களை அழிவிலிருந்து காப்பாற்றி உலக இலக்கியத்துக்கு எலியாஸ் லொண்ரொத் செய்த சேவையை, பழைய தமிழ்ச் சங்க இலக்கியங்களுக்கு உயிரூட்டியவராகிய டாக்டர் உ.வே. சாமிநாதையரின் சேவைக்கு ஒப்பிடலாம். ஜெயன் சிபெலியூஸ் (Jean Sibelius) அவர்கள் கலேவலாவின் பல பாடல்களை உலகளாவிய இசைக்கு அறிமுகம் செய்தார். இவரால் இசையமைக்கப்பட்டு பின்னிஷ் மக்களின் இதயங்களில் இடம்பெற்ற கலேவலாப் பண்கள் தியாகராஜரின் கீர்த்தனைகளுக்கு இணையாகும்."





மரபுக்கவிதை நடையில் வெளிவந்த கலேவலாவின் தமிழாக்கம் அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் உரியது என்றும், இளைய தலைமுறையினருக்கு ஏற்றதாக உரைநடையிலும் ஒரு தமிழாக்கம் தேவை என்றும் பலர் எழுதினார்கள். ஐம்பது பாடல்களையும் சுருக்கமாக உரைநடையில் கூறும் 'உரைநடையில் கலேவலா' இப்பொழுது தயாராகிவருகிறது.

இந்நூலில் வரும் பின்வரும் நிகழ்ச்சியைப் படியுங்கள். இதை முன்னர் எங்கேயோ கேட்டதுபோன்ற உணர்வு ஏற்படலாம்.

இல்மரினன் என்பவன் வடநாட்டுத் தலைவியின் இரண்டாவது மகளைப் பலவந்தமாகச் சறுக்கு வண்டியில் ஏற்றிக்கொண்டு விரைகிறான். அப்பொழுது அவள் -

"இங்கிருந்து என்னை விடுவியாது இருப்பாயாகில், கடல் மீனாகிக் கடலுள் புகுவேன். வெண்மீனாகி வெள்ளலையில் மறைவேன்" என்றாள்.

"கடல்மீனாகிக் கடலுள் புகுந்தாயானால், கோலாச்சி மீனாகிக் கூடவே நான் வருவேன்" என்றான் இல்மரினன்.

"கோலாச்சி மீனாகிக் கூடவே வருவாயானால், கல்லின் குழிக்குள் கீரியாய் நான் நுழைவேன்" என்றாள் அவள்.

"கல்லின் குழிக்குள் கீரியாய் நுழைவாயானால், நீர்நாய் வடிவெடுத்து உனைத் தொடர்ந்து நான் வருவேன்" என்றான் அவன்.

"நீர்நாய் வடிவெடுத்து எனைத் தொடர்ந்து வருவாயானால், மேகப்புள்ளாவேன். மேகத்தில் மறைந்திருப்பேன்."

"மேகப்புள்ளாகி மேகத்தில் மறைவாயானால், கழுகின் உருவெடுப்பேன். கன்னி உனைத் தொடர்வேன்."

மனத்தின் அடியாழத்தில் இருக்கக்கூடிய ஒருமைப்பாடு மனுக்குலத்துக்குப் பொதுவானது என்பதற்கு அத்தாட்சியாகச் சில சம்பவங்கள் இக்காவியத்தில் வருகின்றன. நாடு, மொழி, கலை, கலாசாரம் போன்றவற்றால் மக்கள் வேறுபட்டு இருந்தாலும்,உலகெலாம் வாழும் மக்களிடையே மனத்தளவில், சிந்தனையில், நம்பிக்கைகளில் ஓர் ஒற்றுமை இருப்பதை கலேவலா என்னும் காவியத்தில் காணலாம். ❑

www.padippakam.com

# யாழ்ப்பாணத்து ஓவியங்களின் சமகால வெளிப்பாடு

அருந்ததி ரட்ணராஜ்



ஓவியம் மாற்கு

கலையாக்கம் காலத்தைப் பிரதிபலிப்பது. கலைஞன், தான் வாழும் சூழலில் இருந்தே தன் படைப்பை உருவாக்குகிறான். கலைப்படைப்பில் கற்பனை எந்த ளவு முக்கியத்துவப்படுகின்றதோ, அதேயளவு படைப் பாளியின் சுற்றுப்புறமும் வாழும் காலமும் அவன் படைப் பாக்கத்தைப் பாதிக்கின்றது. இந்த அடிப்படையிலேயே ஓர் கலை உதயமாகின்றது. இந்தவகையில் ஓவியக்க லையும் காலத்தை, ஓவியன் வாழும் சூழலைப் பிரதி பலிப்பதாய் உள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதனின் வாழ்க்கைகூட அக்காலத்தின் எஞ்சிய சிற்பங் கள், ஓவியங்களை அடிப்படையாகக்கொண்டு அறியப்ப டுகின்றது. எனவே எந்தவொரு படைப்பாளியும் உண் மையாகத் தன்னையும் தன் காலத்தையும் தனது படைப்பில் கொண்டுவருவானேயானால் அப்படைப்பாக்கம் வரலாற்றுப் பதிவாக மிஞ்சும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மேலைத்தேயத்துக் கலை வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற போர், தேசியவாத எழுச்சி, வர்க்க முரண்பாடுகள் போன்ற பல நிகழ்வுகள் ஓவியத்தின் முக்கிய மூலக்கூறுகளாக விடயமும் உணர்வும் வர வழிவகுத்தன. ஓவியன் தனது சூழலுக்கும் அதன் நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க முன்வருவதற்கு இந்தக் காலச்சூழ்நிலையே காரணமாயிற்று எனலாம். இவ்வாறாக மேலைத்தேய ஓவிய வரலாற்றில் அரசியல் சமூக வெளிப்பாடு 19ஆம் நூற் றாண்டிலேயே கலையாக்கங்களில் மிகக் காத்திரமாகப் பிரதிபலிக்கத் தொடங்கியிருந்தும், கீழைத்தேயத் தில் குறிப்பாக இந்திய மரபில் இப் போக்கு இந்நூற்றாண்டின் ஆரம் பத்திலேயே வெளிப்படத் தொடங்கு கின்றது. இந்திய ஓவியங்களில் சமூக, அரசியல் பிரக்ஞை ஏற்படக் காரணம், அவர்கள் எதிர் கொண்ட போராட்ட, சமூக மாற்றச் சூழ்நிலை எனலாம்.

ஓவியம் மு கனகசபை



சமூகம், அரசியல் என்பன மேலா திக்கம் அடைய முன்னர், மேலைத் தேய வரலாற்றில்கூட கடவுளரும், பைபிள் கதைகளும், பழைய வர லாற்றுக் கதைகளுமே ஓவியங் களில் முதன்மை பெற்றிருந்தன. இந்நிலையே இந்திய ஓவியர் மத்தி

www.padippakam.com



ஓவியம் அருந்ததி

யிலும் நிலவியது. இதிகாச புராணக் கதைகளும், கடவுள் உருவங்களுமே ஓவியத்தின் கருப்பொருளாய் அமைந் திருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் 19 ஆம் நூற்றாண்டின் மேலைத்தேய ஓவியனின் நிலைப்பாடுபற்றியும் சற்று நோக்குதல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். இதற்கு முற்பட்ட காலங்களில் மன்னரதும் பிரபுக்களினதும் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்கள் வேண்டும் ஓவியங்களைப் படைத்துக்கொண்டிருந்த ஓவியன், இந்நூற்றாண்டில் தமக்கு, தமது விருப்புக்கு ஏற்ப ஓவியம் படைக்கும் நிலைக்கு வருகிறான். அப்படைப்பு விலைபோக வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் தனது உணர்வை ஓவியமாக ஆக்கத் துணிகிறான். இதே காலத்திலேயே ஓவியக் கண்காட்சிகளும் ஓவியம் பற்றிய பத்திரிகை விமர்சனங்களும் தோற்றம்பெற்றதுடன், ஓவியம் பற்றிப் பேசுதல் என்பதும் புதிய நிகழ்வாக மேலைத்தேயத்தில் ஏற்பட்டது.

மேலைத்தேயத்தின் இந்தப் பின்னணி பற்றி இங்கு நான் குறிப்பிடுவதற்கான முக்கிய காரணம், 19ஆம் நூற்றாண்டில் அங்கு நிகழ்ந்த மாற்றம் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவிலும் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈழத்திலும் ஏற்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் 20ஆம் நூற்றாண்டின் இலங்கை ஓவியக்கலை வரலாறுபற்றிச் சற்று நோக்குதல் பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே இலங்கை ஓவியர்களிடையே குழுக்களாய் இணைந்து செயற்படும் போக்கு ஏற்படுகின்றது. 1880இல் கொழும்பு ஓவியக்கழகமும் (Colombo Painting Club or Portfolio Sketch Club) 1891இல் இலங்கை கலைச்சங்கமும் (Ceylon Society of Arts) தோற்றம்பெற்றன. இவற்றைத் தொடர்ந்து 1943ஆம் ஆண்டு '43 குழு' ('43 Group) தோற்றம்பெற்றது. இவ்வாறாகக் குழுக்களாக ஓவியர்கள் இயங்கத் தொடங்கியதன் ஊடாகவே இலங்கையின் ஓவியங்கள், அவர்களின் படைப்பாக்கங்கள் பற்றிய ஓர் தொடர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட குழுக்களில் முதல் இரு குழுவினரும், ஐரோப்பிய செல்வாக்குடன் விக்டோரிய மரபின் இயற்பண்பு பாணியில், தமது படைப்புக்களைக் கொண்டுவந்தனர். இவற் றிலிருந்தும் வித்தியாசப்பட்ட போக்கு '43 குழு' ஓவியர்களிடம் காணப்பட்டது. இவர்கள் இலங்கை மரபுகளுக்கு முக்கி யத்துவம் கொடுத்து நவீனத்துவத்துடன் தமது ஓவியங்களைப் படைக்கத் தொடங்கினர்.

ஓவியம் அ. இராசையா



இவ்வாறாகச் சிங்களவர் மத்தியில் ஓவியக் குழுக்கள் தோற்றம்பெற்றது போன்று, தமிழர் மத்தியிலும் 1938இல் வின்சர் ஓவியக்கழகமும் (Winzor Art Club) 1955இல் விடுமுறைக் கால ஓவியக்கழகமும் (Holiday Painters Club) தோற்றம் பெற்றன. இவை குறுகிய காலங்களே இயங்கியிருந்தாலும், தமிழ் ஓவியங்களையும் அவர்கள் படைப்புக்களையும் இக்குழுக்களை மையமாக வைத்தே தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மேலும், குழுக்களாக இயங்கும்போது ஓவியர்களின் பார்வையும் விசாலமாக்கப்படும் நிலை ஏற்படுவதுடன் அவர்கள் படைப்புக்களும் தனித்துவத்துடன் தோற்றம்பெற வாய்ப்பாகின்றது.

1955இல் தொடங்கிய விடுமுறைகால ஓவியர்கள் குழுவினர் பத்து ஆண்டுகள் சீராக இயங்கி, இடைநிறுத்தப்பட்ட பின் 80களில் மீண்டும் தோற்றம்பெற்று இயங்கியபோது,

www.padippakam.com

சமூக விழிப்புணர்வுடன் குறிப்பிடத்தக்க சில பங்களிப்புகளைச் செய்திருக்கின்றனர் எனலாம்.

ஆரம்பகால ஓவியர்கள் இலங்கை மக்களின் வாழ்வைச் சித்திரித்தல் என்பதையே தமது ஓவியங்களின் கருப்பொருளாகக் கொண்டிருக்க அண்மைக்கால ஓவியர்கள் சமூக, அரசியல் வெளிப்பாட்டைத் தமது படைப்புக்களில் கொண்டுவருவதில் அதிக அக்கறை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் போக்கு இலங்கையின் இரு சமூகத்து ஓவியர்களுக்குமே பொருந்தும்.

இந்தவகையில் ஈழத்துத் தமிழ் ஓவியர்களின் அண்மைக்காலப் படைப்பாக்கங்கள் பிரதான இடம்பெறுகின்றன. தமிழ் ஓவியர் மட்டுமல்ல, சிங்கள ஓவியர் மத்தியிலும்கூட அண்மைக்காலங்களிலேயே சமூக, அரசியல் பிரக்ஞையுடன் படைப்புக்கள் வரத்தொடங்கின எனலாம். இதற்கெல்லாம் எமது சமூக, அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களே அடிப்படையாகின்றது. சமகாலச் சூழலில் ஈழத்தில் வாழ்ந்துவரும் ஒரு தமிழ் ஓவியன் அழகான நிலத்தோற்றத்தையும் புராண, இதிகாசக் கதைகளையும் ஓவியமாக்குதல் என்பது இயலாத காரியம். தூய கலைநோக்குடன் வரையப்பட்ட ஓவியங்கள்கூட சமகாலத்தைக் கண்முன் கொண்டுவருவதுடன், எதிர்காலத்திலும் கடந்தகால வரலாறு கூறக்கூடியனவாக அமைகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக எனது பார்வைக்குக் கிடைத்த ஈழத்துத் தமிழ் ஓவியர்களின் - குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓவியர்களின் - படைப்பாக்கங்கள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

தற்போது தமிழர் மத்தியில் இரண்டு தலைமுறை ஓவியர்கள் ஓவிய ஆக்கத்தில் ஈடுபடுகின்றனர் எனலாம். இதில் முதலாவது பிரிவினர் ஓவியப்பயிற்சி பெற்று, ஓவிய ஆசிரியர்களாக இருந்து, ஓய்வுபெற்றவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றுமோர் விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஓவியக் கற்கைநெறி ஓவிய ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதுடனேயே எம்மத்தியில் அண்மைக்காலம்வரை இருந்துவந்தது. கடந்த சில வருடங்களாகவே ஓவியக்கலை சற்று விரிவுபட்டு, கண்காட்சி ஒழுங்குகள், அதுபற்றிய விமர்சனங்கள் என வளர்ச்சி அடைந்திருக்கின்றது. இருந்தாலும் ஜீவனோபாயமாக ஓவியக் கலையை ஏற்றுக்கொள்வதென்பது இன்னும் எம் மத்தியில் முற்றுப் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

தமிழ் ஓவியர்களின் படைப்புக்களை கருப்பொருள் அடிப்படையில் நோக்குமுன் இவர்களின் ஓவியப்பாணி பற்றி எடுத்துக்கொண்டால், இயற்பண்பிலான பாணியை கையாள்பவர்களாக ஒரு பிரிவினரும் நவீனத்துவத்தைத் தம் படைப்புக்களில் கொண்டுவருபவர்களாக மற்றோர் பிரிவினரும் காணப்படுகின்றனர். மேற்குறித்த இலங்கை ஓவிய வரலாற்றுப்போக்கிலும் இயற்பண்பிலிருந்து நவீனத்துவம் தோற்றம்பெறுவதை அவதானிக்கலாம். தமிழ் ஓவியர்களுக்கும் சிங்கள ஓவியக்குழுக்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த தொடர்புகள் காரணமாக தமிழ் ஓவியங்களில் சிங்கள ஓவியச் செல்வாக்கினை அவதானிக்க முடிகிறது.

பிரதிமை, நிலைப்பொருட்கூட்டம், அழகான இயற்கைத் தோற்றம் எனப் பொதுவாக வரைந்துகொண்டிருந்த இம்முதற்பிரிவு ஓவியர்கள்கூட, சமகால நிகழ்வுகளினால் உந்தப்பட்டுச் சில வரலாற்றுப் பதிவுகளை ஓவியங்களாக்கியுள்ளனர். குறிப்பாக, 1990க்குப் பின் வரையப்பட்ட ஓவியங்களில் வரலாற்றுப் பதிவுகள் மிகக் காத்திரமாக இடம்பெற்றுள்ளன. முதலில் நான் எடுத்துக் கொள்வது ஓவியர் மு. கனகசபையின் 'இடப்பெயர்வு' (1991) என்ற தலைப்பிலான ஓவியம். 1990க்குப் பின் யாழ்ப்பாண மக்களின் அன்றாட நிகழ்வுகளில் ஒன்று இந்த இடம்பெயர்தல். இராணுவ நடவடிக்கைகள் மக்களைத் தமது சொந்த இடங்களில் நிம்மதியாக நிலைத்திருக்க விடவில்லை. கையில் அகப்பட்ட பொருட்களுடன் கைக்குழந்தைகளையும் காவிக்கொண்டு, பாதுகாப்பான இடம்தேடி நகர்ந்துகொண்டிருப்பதே வாழ்க்கையாகிப்போன சமகாலத்தை இந்த அனுபவமிகுந்த முதிய ஓவியர் தனது படைப்பில் கொண்டுவரத் தவறவில்லை.

நகர்ந்துகொண்டிருக்கும் மக்களின் கால்களின் வேகம் ஓவியத்தில் வெளிப்படுகின்றது. பின்னணி, இடிபாடுகளுடன் கூடிய கட்டிடத் தொகுதி. இதில் யாழ். நூல்நிலையத்தின் அமைப்பும் காணப்படுகின்றது. ஓவியருக்கு யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டதும் அதன் இடிந்த கட்டிடமும் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தை இந்தப் படைப்பினூடாகக் கொண்டுவந்திருக்கின்றார். இவரின் பிற்பட்ட - குறிப்பாக 90க்குப் பிந்திய - ஓவியங்கள் மங்கல் வர்ணங்களாலானதாக உள்ளன. ஆரம்ப காலத்து ஓவியங்களில் காணப்பட்ட சிவப்பு, பச்சை வர்ணங்கள் விடுபட்டு மெல்லிய நீலம், மண்ணிறம், மங்கலான மஞ்சள் எனக் கலந்து படைப்பில் வர்ணங்களாலேயே சோகத்தைக் கொண்டுவருகின்றார்.

இவையே எமது வரலாற்றின் முக்கிய பதிவுகள். வெறுமனே போரும் காட்சியும் இந்த தொண்ணூறுகளின் யாழ்ப்பாணத்தைக் காட்டிவிடப் போவதில்லை. பொது மக்களின் இந்த அவலம், அவர்களின் அன்றாட வாழ்வு மிகத் தத்ரூபமாக இந்த ஓவியத்தில் கொண்டுவரப் படுகின்றது.

அடுத்து, ஓவியர் மாற்குவின் படைப்புக்கள் சிலவற்றை நோக்கலாம். இவர் எப்போதும் ஓவியங்களைப் படைத்துக் குவிப்பவர். இவரைப் பொறுத்தவரை போர்க் காலம்கூட படைப்பாக்கத்திற்குத் தடையாக இருக்கவில்லை. ஊடகக் கையாள்கையில் பெரிய பரப்பளவைக் கொண்டவர். தனது படைப்பாக்கத்திற்கு நீர் வர்ணம், எண்ணெய் வர்ணம், கித்தான் (Canvas) என வரையறைப்படுத்துபவரல்ல. அதனால் சிறிய காகிதத் துண்டுகளிலேயே தன் மனதை, தான் வாழும் சூழலின் தாக்கங்களைப் பதிவாக்கிக்கொள்பவர். இந்தவகையில்

www.padippakam.com

90க்குப் பிற்பட்ட நிகழ்வுகள் இவரின் படைப்புக்களில் அனேகமாகச் சிறைப்பட்டுள்ளன. வரலாற்றின் முக்கிய பதிவுகளாக இவை இடம்பெறுகின்றன.

1990இல் பெரும்பாலும் இவரின் ஓவியங்கள் கறுப்பு, வெள்ளைக் கோட்டோவியங்களாகவே உள்ளன. அவலத்தையும், சிதைவையும் தன் ஓவியப் பாணியூடாகவே வெளிக்கொணர்கிறார். விகாரமாக்கப்பட்ட உருவங்கள், அருவருப்பூட்டும் வடிவமைப்பு என்பன பீதியைக் கிளப்பும் உணர்வை இயல்பாகவே ஏற்படுத்திவிடுகின்றது. இவற்றை மிஞ்சி, நிகழ்வு ஓர் பதிவாக நிற்கின்றது. இவ்வாறான படைப்புக்களில் குறிப்பிட்ட ஒரு சம்பவம் மாத்திரமன்றி இந்தக்காலத்தின் பொதுவான ஒரு தோற்றம் மனித முகங்களினூடாகக் கொண்டுவரப்படு கின்றது. இதற்கு உதாரணமாக இந்த ஓவியம் விளங்கு கின்றது.

மேலும், மலிந்துபோன இறப்புக்களும் கதறல்களும் இவர் படைப்புகளில் தாராளமாக இடம்பெறுகின்றன. இவற்றிலிருந்து சற்று வித்தியாசப்பட்டதான மாற்குவின் மற்றோர் ஓவியம் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். இது 1990க்குச் சற்று முந்தியது. 1987இல் இந்த ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. பைத்தியம் பிடித்த பெண்-ஓவியத்தை ஆழ்ந்து நோக்குகையில் ஓர் கலக்க உணர்வு ஏற்படுகின்றது. சித்தம் கலங்கிய பெண் ஓவியத்தில் அப்படியே கொண்டுவரப்படுகிறாள். போரின் விளைவுகளில் மனநிலைப் பாதிப்பும் ஒன்று. உடல் சிதைந்த மனித உருவங்கள் மட்டுமன்றி மனம் சிதைந்த பெண்ணும் இவரின் படைப்பில் இடம்பெற்று விடுகின்றாள். போர்நிகழ்வுகள் எந்தளவிற்கு மனிதனைப் பாதிக்கின்றது என்பதை எழுத்துக்களில் கொண்டுவரு வதை விடவும், இவ்வாறான ஓவியங்கள் தத்ரூபமாக சித்திரிக்கின்றன.

அடுத்து, ஓவியர் ஆ. இராசையாவின் படைப்புக்களிலும் இவ்வாறான காலத்தின் கோலங்களைக் காண முடிகின்றது. மிகவும் நேர்த்தியான இயற்பண்புவாதத்தில் ஓவியங்கள் படைப்பதில் வல்லவர். இவரின் மூன்று ஓவியங்களை இங்கு உதாரணங்களாகக் காட்டலாம். இரண்டும் 1993இல் வரையப்பட்டவை. ஒன்று "அகதிகள்" என்ற தலைப்பிலான ஓவியம். இது முன்னர் மு. கனகசபையின் படைப்பில் காணப்பட்ட அதேவிதமான காட்சியமைப்புக் கொண்டது. இங்கு நகர்ந்து செல்லும் மக்கள் இல்லாமல், ஒரு குடும்பம் நாடியிலும் தலையிலும் கையூன்றி கலங்கிப்போயிருக்கும் காட்சி. எதை விடுத்தாலும் இந்த விடயத்தை எமது ஓவியர்கள் எவராலும் தவிர்க்கமுடியாமல் இருந்திருக்கின்றது என்பதற்கு இந்த ஓவியங்களே நல்ல எடுத்துக்காட்டாக உள்ளன. மூட்டை முடிச்சுடன் ஓடித்திரியும் வாழ்க்கையின் அவலம் இவர்களின் படைப்புக்களில் தவிர்க்க முடியாமல் உருவாக்கப்பட்டு விடுகின்றது.

துவிச்சக்கரவண்டியில் விறகு கட்டிச் செல்லும் இந்த மனிதனின் ஓவியம் என்னை மிகவும் கவர்ந்தது. இதற்கு இவரின் தத்ரூபமான ஓவியப்பாணியும் ஓர் காரணமாக இருக்கலாம். கண்முன்னே காட்சியைக் கொண்டுவரும் இவர் திறன் இந்த ஓவியத்தில் அப்படியே வெளிப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற்கு 1990இன் பின் பயணமாதல் என்பது ஒரு பெரும் கதை. வழியில் காணும் காட்சிகள் யாவும் தனித்தனிச் சட்டங்களுக்குள் ஓவியமாகக் கூடியவை. துவிச்சக்கர வண்டியில் விறகு ஏற்றிச் செல்லும் இந்த மனிதன் காலத்தின் துயரங்களைக் கண்முன் கொண்டுவருகிறான். இந்தக் காட்சிகள் எமது இளைய தலைமுறையினர் கதையாகக் கேட்ட காலம் போய் சமகாலத்தின் தரிசனங்களாய், அவர்களின் அனுபவங்களாய் விளங்குகின்றன. இவரின் மற்றுமோர் ஓவியமும் அப்படியே யாழ். மக்களின் வாழ்வைச் சித்திரிக்கின்றது. ஓர் மாணவி படிக்கின்றாள். அருகில் யாழ்ப்பாணத்தின் புதிய கண்டுபிடிப்பான போத்தல் விளக்கு எரிகிறது. எரியாத மின்குமிழ் தொங்குகின்றது. இந்த நிகழ்வுகள் வருங்காலத்திற்கு நினைவுகளிலிருந்து கதைகளாய்க் கூறப்படுவதைவிட ஓவியப் பதிவுகளாய் இருப்பது மிக அவசியமாகும்.

இனி இளைய தலைமுறை ஓவியர்களின் படைப்புக்கள் பற்றி நோக்கினால், இவர்களின் அனேகமான படைப்புக்கள் சமகால நிகழ்வுகளையே விடயமாகக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பிரச்சார ஓவியங்களைத் தனிப் பிரிவாக நோக்க வேண்டும். மேலும் சமகால நிகழ்வுகளை ஓவியமாக்குவதில் இவர்கள் கையாண்ட பாணி நவீனத்துவம் மிக்கதாகவும், குறியீட்டுப் போக்கில் விடயத்தை வெளிப்படுத்துவதாகவும் விளங்குகின்றது. இதற்குச் சிறப்பான உதாரணமாக சனாதனனின் ஓர் ஓவியத்தை எடுத்துக் காட்டலாம். வர்ணங்கள் சேர்க்கப்படாத கறுப்பு வெள்ளைக் கோட்டோவியம் தரும் ஆழம் வியக்கத்தக்கது. எத்தனையோ அர்த்தங்களை ஒன்று சேரக் கொண்டுவருகின்றது. இந்த ஒரே விடயத்தை சிறிய மாற்றங்களுடன்தொடர் ஓவியங்களாக்கியுள்ளார். அதாவது முகம் மூடிய பெண் உருவம், மடியில் சிலுவை சுமந்திருப்பதான ஓவியம் ஒன்று. மற்றைய இரண்டில் அதே நிலையிலான பெண், மடியில் சட்டம்போட்ட புகைப்படத்தை வைத்திருப்பதான ஓவியங்கள். இவற்றின் பின்னணியிலும் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இங்கு நான் குறிப்பாக எடுத்துக் காட்டும் ஓவியம் இலங்கைத் தமிழருக்குத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் மற்றுமோர் அவலத்தை எடுத்துக்காட்டுகின்றது. காணாமல் போவோர் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. இதைத்தான் இந்த ஓவியம் குறிப்பாக எடுத்துக் காட்டுகின்றது. இந்தத் தொடர் ஓவியங்கள் மைக்கேல் அஞ்சலோவினால் 1499இல் படைக்கப்பட்ட சிற்பத்தைத் தழுவியனவாக இருக்கின்றன. மரித்த யேசுவை மடியில் சுமந்த தாய் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் சிற்பம், இந்த இளம் ஓவியருக்கு, இன்று எம் மத்தியில் மக்களை இழந்து சோகத்தில் ஆழ்ந்துபோயிருக்கும் எத்தனையோ தாய்மாரை ஞாப

www.padippakam.com


கப்படுத்தியிருக்க வேண்டும். அவரின் சிந்தனை ஓவியமாகியிருக்கிறது. இந்த ஓவியம் இன்று மட்டுமல்ல, என்றும் இன்றைய காலத்தின் சோகக் கதையை நினைவூட்டிக்கொண்டிருக்கும்.

அடுத்து அருந்ததியின் 'கிளாலி' என்ற தலைப்பிலான ஓவியத்தை எடுத்துக் காட்டலாம். 1990இன் பின் யாழ்ப்பாணத்திற்கான வழி பலமுறை மாற்றப்பட்டாலும் கிளாலிப் பாதை மறக்க முடியாதது. தத்தளிக்கும் கடலில் சிறு வள்ளங்களில் வெள்ளமாய் அள்ளுப்படும் மக்கள் உயிரைக் கையில்பிடித்துக் கொண்டு அல்லலுறும் ஒவ்வொரு கண நகர்வும் விபரிக்க முடியாதது. இந்தப் பயணங்களில் நிகழ்ந்த இறப்புக்கள்தான் எத்தனை. அந்தக் காட்சிச் சித்திரிப்பு இந்த ஓவியத்தில் இவ்வாறு வெளிப்படுகின்றது. கலப்பு ஊடக ஓவியம் இது. கடல், வள்ளம், அதில் அடிபட்டு வரும் மக்களின் உடைமைகள். மனித உருவங்களே இல்லாமல் அவர்களின் உடைமைகளைச் சுட்டும் பொருட்கள் மட்டும் ஒட்டப்பட்ட இவ்வோவியம் முப்பரிமாணத் தோற்றத்துடன் விளங்குகின்றது. இரவில் நிகழும் இந்தத் துயரச் சம்பவங்களை காணப் பொறுக்காத சந்திரன் முகம் பொத்தி அலறுகிறான். இந்த வரலாற்று நிகழ்வுகள் ஓவியங்களுக்குள் சிறைப்பட்டு நாம் பட்ட துயரங்களை நாளை எடுத்துச்சொல்லும் என்பதில் சந்தேகமில்லை.

மக்கள் வீடு வாசல் இழந்து 'நகர்தல்' என்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினது மனத்தையும் எந்தளவிற்குப் பாதித்துள்ளது என்பதை வாசுகியின் ஓவியமும் எடுத்துக்காட்டுகின்றது. ஓவியர்கள் கனகசபை, இராசையா போன்றோரின் படைப்பாக்கங்களிலிருந்து வித்தியாசப்பட்டு, இவர் நவீனத்துவத்தில் இந்த விடயத்தைக் கொண்டுவருகிறார்.



ஓவியம் மாற்கு



ஓவியம் சனாதனன்

இவரின் ஓவியப்பாணி தனித்துவமானதாக இருப்பதுடன், துவிச்சக்கர வண்டியில் பொருட்களை ஏற்றிச்செல்லும் இம்மக்களது நகர்வின் வேகம் ஓவியத்தில் புலப்படுவதற்கு இவரது ஓவியப்பாணியே காரணமாகும்.

இவ்வாறாக சமகால நிகழ்வுகள் தவிர்க்கமுடியாதபடி ஓவியர்களின் படைப்புக்களில் இடம்பெற்றிருக்கின்றன என்பதற்கு மேலே நான் குறிப்பிட்ட ஓவியங்கள் உதாரணங்களாக விளங்குகின்றன.

மேலே எடுத்துக்காட்டிய ஓவியங்களிலிருந்து சற்று வித்தியாசப்பட்டு முழுக்க முழுக்க போர்ச் சூழலை, நிகழ்வுகளைச் சித்திரிக்கும் ஓவியங்களும் இந்தக் காலப்பகுதியில் பெருமளவில் தமிழர் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளதெனலாம். பெருமளவில் சுவர் ஓவியங்களாகவும் சுவரொட்டிகளாகவும் இவ்வகை ஓவியங்களைக் காணமுடிகின்றது. இவை வெறும் ஓவியங்களாக இல்லாமல், கருத்துப் பரிமாற்ற ஊடகமாகவும் செயல்படுகின்றன. இந்தவகை ஓவியங்களும் தரத்தில் உயர்ந்த மிக அற்புதமான படைப்புக்களாகவே விளங்குகின்றன.

இவ்வாறெல்லாம் தமிழர் மத்தியில் தோற்றம் பெற்ற சமகால ஓவியங்கள் எதிர்காலத்தில் வரலாற்றுப் பதிவுகளாக மிஞ்சும் எனக் கருத இடமுண்டு. தொடர்ந்துகொண்டிருக்கும் ஈழத்துப் போர் இந்த ஓவியங்களையும் அழித்துவிடுமோ என்ற அச்சத்தையும் தோற்றுவிக்காமலும் இல்லை. இந்த ஓவியங்கள் அனேகமாக அந்தந்த ஓவியர்களின் பராமரிப்பில் இருப்பவை. அவை அடுத்த சந்ததியினருக்கும் பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்து தமிழர் வரலாறு கூறவேண்டும். ❑

www.padippakam.com

# Postcolonial Paradigms and Contemporary Sri Lankan Tamil Poetry

A recent book on the origins and escalation of ethnic violence in Sri Lanka, published by the anthropologist Valentine Daniel, bears the striking title Charred Lullabies. The title is a particularly appropriate one for a book that chronicles the author's stated ethnographic project of visiting Sri Lanka in the 1980s to seek out an alternative history to the national master narratives of the nation in the folk songs, lullabies, and nuptial songs of the Estate Tamils of Sri Lanka. In other words, his attempt was to see beyond the various legitimising myths that underpinned the identities of the dominant ethnic communities and uncover the stories of a marginalised group. Much to his surprise, his quest was subverted by the explosion of political violence in the country, and he found yet another history that swept aside the narratives he set out to record and established its own centrality and its own claim to significance.

Daniel's title would be equally apposite for my own inquiry which has to do with contemporary Tamil poetry in Sri Lanka, specifically, though not exclusively, those that appeared after the communal riots of 1983, an event that marked, in many ways, a watershed in the history of the nation and the Tamil people. Displacement, exile, death, disfigurement, resistance and alienation become the overarching subject of recent poems, recalling at once a familiar paradigm of centre and margin, of self and Other that are familiar to those involved in postcolonial studies. Only in this case, the binary is formulated not in relation to colonizer and colonized but in ethnic terms involving two communities, the Sinhalese and the Tamils. That this poetry is stunning in its resonance, its awareness of massive social and political upheaval is hardly in doubt. One cannot fail to recognize the momentum, urgency and conviction that underpin this body of poetry. What is less clear is the precise nature of this achievement, of the different forces that converged on poetry to shape it in certain directions. If what happened during this time is nothing less than an attempt to create a new space for Tamil writing, then what exactly is the quintessential aspect of this space? Literary criticism has been relatively cautious and conservative in dealing with this body of poetry, and beyond the general assertion that this is for the most part oppositional in its stance, not much has been done towards contextualising these poems. And the relation between this proliferation of poetry and the work that preceded it is has been spoken of in terms that assert a linear and causal movement. In short, critics have tended to see an evolutionary pattern leading to the contemporary scene - a practice that is not without its merits, but it falls short of providing a comprehensive context for what is clearly a literary renaissance in Sri Lankan writing.

My own essay is less at detailed explication than at a more general attempt to understand the ideological positions and motivations that underlie these poems. I am less concerned with the specific achievements of individual poets than with general trends and preoccupations that have transformed the literary scene. The essay is speculative and in some ways personal in that it is about understanding my own contradictory responses to contemporary Tamil poetry, about my own complicity in social and cultural norms that have been rendered

Chelva Kanaganayakam
Department of English
University of Toronto

www.padippakam.com

*suspect by the political events of recent years.*

*In 1985, two years after the ethnic riots that marked a new phase in the political scene, a collection of poems entitled "Maranathul Vaalvom" was published. In the 80 or so poems that make up this collection some thirty poets, several established ones and others relatively new, have stressed one theme, and that is the sense of betrayal and loss experienced by the Tamil community. The anthology is as close as one gets to a call for resistance in literature, a nationalism on the basis of a strongly felt Tamil ethnic identity. As Nuhman so insistently puts it in one of his poems entitled "Thuppaki Arakkarum Manithanin Vithiyum":*

*If to battle must be one's fate*
*battle*
*and death must be one's fame*

*Not all of these poems are particularly impressive and those that foreground the message at the expense of poetic sensibility have sometimes a shrill quality that render the poetry ineffective. In fact, S. Sivasekeram, in one of his many reviews collected under the title Vimarsanangal in 1995, is unsparing in his criticism of the tendentious utterances that masquerade as poetry. He sees several of the poems in this collection as being wordy, repetitious and generally flawed. Granted that some of the poems lack poetic intensity, the anthology obviously espouses a political agenda and within those terms the collection emphasises that for the first time in Sri Lankan Tamil poetry, politics is uppermost in the consciousness in the poets. And the consciousness and its expression are of a kind that really did not exist in Tamil poetry. This anthology, and the dozens of other volumes by individual authors, make up what one might call contemporary Tamil poetry, and this is largely the subject of my paper. Those that appeared in the form of audio cassettes, and those that were transmitted in the form of oral narratives of various kinds often invoke a different poetics, but in general they too become part of the total body of this poetry.*

*To read these poems is to recognize a new emphasis in both subject matter and form. In the older poets that shift is sometimes less striking than in some of the younger poets, whose choice of metaphor, syntactical patterns, exploitation of free verse, sense of urgency have all changed the face of Tamil poetry. The apocalyptic imagery that pervades some of the poems reflects the deep psychic wounds and the nightmarish sense of reality caused by the violence. And sometimes very self-consciously the poets invoke past writing to stress the distance between them and those who preceded them. There are times when the poetry intertextually recalls the work of earlier poets. In some, younger poets rewrite old poems without any "anxiety of influence," any sense of deliberately subverting or questioning an older version. The intention is to present a new world view, a new consciousness brought about by the deep rifts within the nation, and by the monolithic identities that sufficed in the past. In a significant article entitled "Samakala Ealathu Thamil Kavithai Patriya Illakiya Kannottam," Suresh Canagarajah establishes an interesting taxonomy on the basis orality, literacy and orature to signify the radical rupture that took place in recent times. Although his analysis adopts the methods of discourse analysis to trace changes in forms of utterance, the fundamental assertion that recent poetry has sought new ground remains a valid and insightful one.*

*In 1951, three years after Sri Lanka gained its independence, Mahakavi, a poet who probably has the claim to be the elder statesman of post-independence Tamil poetry, published his first volume of poems, an event that signalled both a departure from an established literary tradition and the beginning of a new tradition. What exactly this break meant is hardly easy to define, mainly because this poet too was conservative in his choice of subject matter and traditional metrical forms; but significantly enough, the break did not mean, as one might well expect, an attempt at decolonisation, at negating western hegemonic forms. If anything, it marked a desire to break free of South Indian literary dominance which until then had been the mainstay of literary production. Mahakavi was a traditionalist in that he had little use for free verse or for forms that had no discernible metrical pattern. He was, at his best, a figure not unlike Bharati, the great poet of Tamil Nadu at the turn of the century, who moulded traditional ballad forms to give expression to current realities. Against the backdrop of the Tamil poets of the 30s and 40s Mahakavi was the poet of modernity, in whose work worn out poetic formulations were replaced with a modern consciousness and idiom, although his vision remained distinctly conservative.*

*If Mahakavi and those who belonged to his generation, including Nilavanan and Murugaiyan, have been thought of as espousing a decadent aestheticism, those who followed them were decidedly Marxist in their thinking and they often addressed what seemed to be the problematic aspects of Tamil society, namely, its class structure and more particularly its caste structure. To them one owes the widespread use of free verse, of a poetic form*

www.padippakam.com

*that imitated the rhythms of ordinary speech. They spoke of the underdog from a liberal humanist and Marxist perspective. In fact, M.A. Nuhman and A. Jesurasa, in their introduction to the anthology entitled Eleven Eelam Poets which appeared in 1984, map out the various distinctive features that characterise the various generations from the 50s until the early 80s. The editors speak of at least five generations in order to establish the literary history of modern poetry. Notwithstanding the substantial contribution made by these poets, and despite the heterogeneity of their writing, it is still possible to claim that the elitism of Tamil poetry remained, for the most part, intact. This is not to say that the poetry was divorced from the quotidian realities of life or that they lacked significance, but the perspectives were broadly humanist rather than specific and multi-faceted. The indeterminacy that marks more recent poetry was noticeably absent in the earlier poetry which seemed more assured and confident about the cultural space it occupied.*

*The political issues that related specifically to the Tamil community were not, for the most part, the subject of poetry until the mid-eighties. One needs to recognize that events in the 1950s, particularly the Official Language Act, the perceived or real measures adopted by various governments that led to the agitations of the Federal Party and later the Tamil United Liberation Front did lead to a few poets becoming the spokespersons of the political climate of the day. They did tap into a larger base of oral narrative and if at times their writing did seem tendentious and populist, they did signal a new direction through a call for Tamil solidarity. But the main thrust among the traditional and Marxist poets was humanistic and the identity they sought to establish was largely a Sri Lankan one, a national rather than an ethnic one. The relation between the political agenda of the time and the poetry that seemed to resolutely turn its head away is a complex one that merits careful study. However, for the purposes of the present paper, before one moves to the present, I would like to speculate briefly on what made the earlier poetry so compelling for those of my generation.*

*The poetry of Mahakavi, or the best of Murugaiyan, Neelavanan or Nuhman, or the early poetry of Jeyapalan demonstrated a lyrical power rarely equalled by later poets. To read them now is still to respond to the sheer force of the poetry while acknowledging sometimes grudgingly that one can hardly agree with the value systems upheld by the poems. From my own perspective, I believe that my positive response had to do with an essentialised sense of Tamil identity that was a consequence of enjoying certain privileges within the larger social structure. That some of the lyrics of this period portrayed a landscape alien to the arid expanses of the North of Sri Lanka, or were decidedly patriarchal in their treatment of human relations, or they drew strength from an Indian rather than Sri Lankan sense of heritage did not seem then to be of much significance. Some of these poems still appeal to us, surprisingly because we are now increasingly conscious of the total archive within which a literary product is evaluated. It may well be that for the diasporic community the need to articulate in unambiguous terms a monolithic identity is sometimes as strong as the will to assert the constructedness and contingency of identities.*

*The events of 1983 brought in new poets, and a new consciousness in old poets. At its broadest, at its most profound, this poetry involved a fundamental contradiction, which, I think, goes against the grain of what we, as students and critics of postcolonial literature, have come to expect in post-independence writing. Tamil poetry is at present about Tamil identity, or more precisely a Sri Lankan Tamil identity. And at its best it arises out of a profound uncertainty about the constitutive aspects of Tamil identity. When this consciousness of ambivalence is absent, one is made aware of a narrowness in the vision. In the more complex poems, even the assertions are accompanied by a desire to erase and question ideological underpinnings. And here again our familiar tropes of indeterminacy and contingency are not necessarily helpful. Tamil poetry is held together by a conviction and a certainty about the causes it espouses. The need to assert a Tamil identity energises the best of these poems, but the same conviction coexists with an awareness that to subsume such identities under essentialised labels is to negate the urgency and value of the writing itself.*

*Among the dozen or so poets who flourished in the last two decades one could take Jeyapalan's poetry as an example of the subtle but significant changes brought about the political and cultural climate created by the resistance of the eighties. Jeyapalan's early poetry - the ones he wrote in the 70s - reflects a lyricism that is of exceptional power. Now his attitudes have changed, his sensibility has changed, and his perception of identity has altered. In the wonderful lyrics he wrote in the seventies, what is uppermost is a sense of stasis, of stillness in the midst of movement. The tropes of movement in his poems hint at the various*

www.padippakam.com

*palimpsests that make up the Tamil identity, but that is also offset by a pervasive sense of stillness, silence and harmony. His poetic sensibility went beyond platitudes, but there is a sense of containment and completeness even in the socially conscious poetry he wrote in the seventies. Now in his poems the stillness gives way to images of motion and unceasing quest. In the chasm between stasis and movement one perceives a larger dichotomy and a fundamental change of direction.*

*And in this fundamental dichotomy lies an uneasiness about identity, and about memory that validates identity, and even about the reality of the arid Northern regions of the country. Where the earlier poets, and even Jeyapalan himself, spoke about flowers and rives and groves, now there is the stark imagery of barren trees, threatening waves, and scorching heat. When, thirty or so years ago, Mahakavi wrote his well known poem about the myth of Ahalikai; the landscapes he painted had little to do with the reality of the north of Sri Lanka. It had to do with what is now often called an imagined reality. Or, as Nuhman and Jesurasa point out in their introduction, the preoccupation was with repressed desires, psychic states and psychosomatic manifestations of guilt. What he offered in that memorable lyric was a poetic truth, not a real one. Now in the face of dismembered bodies and inhuman violence, it is no longer possible to pretend that such a world is the legitimate concern of poetry.*

*Valentine Daniel rightly points out that the sense of heritage among the Tamils of Sri Lanka was more diffuse, more oral than that of the Sinhalese. While the Sinhalese drew attention to specific texts and to the so-called objectivity of historical events to substantiate an etiology of themselves, the Tamils drew vague allusions to an eclectic group of Kings to historicise their heritage. Ethnic identity was thus an amorphous affair which depended on a series of assertions and exclusions. The poets, like the people themselves, were comfortable with an essentialised, romanticised view of themselves.*

*The Tamils in the North lived as if the Tamils in other parts of Sri Lanka belonged to a different sphere. As historians have repeatedly pointed out, political negotiations spearheaded by the leaders of the North paid inadequate attention to Tamils who lived outside the Jaffna peninsula. Those who lived in the North West or the East received less attention than those in the North. To live in the hill country was even worse, and these people were consistently marginalized and ignored. And history was invoked to justify these various claims of purity and hybridity. Tamil identity was, in its own way, a discursive construction that was narrowly defined in religious, caste and class terms. In short, the identity of a Sri Lankan Tamil was determined by a variety of factors, and while unity was constantly invoked, it was hardly practised. Now, in the face of violence that causes mass migration of people, of resistance that transcends such arbitrary geographical boundaries, the sense of what it means to be a Sri Lankan Tamil has altered dramatically.*

*Consequently, a whole structure of values has altered. No longer does one resist the hegemony of caste in quite the same way. As early as in Mahakavi, there was a consciousness of the inherent evil of caste based system, but the point of view of such poets was that of the liberal humanist who is made uncomfortable by the inhumane apartheid to which the lower castes were subjected. Now, confronted with the reality of having to share spaces with the lower castes in refugee camps, of having to fight alongside members of different castes, of acknowledging the sacrifices and leadership of those who may well be of lower caste, such differences are more difficult to sustain, in life as in poetry. Suddenly there is a sense of shared humanity and stereotypes and essentialised figures disappear to give way to a more complex, inclusive and multi-faceted sense of ethnic identity.*

*The myths that sustained the Tamil community, including that of a Hindu Indian past, are less clear cut in their appeal. Thus for instance, when Mahakavi writes his wonderful poem, "Ahalikai" he shares a whole weltanschauung about Rama, about gender, about a whole system of mythology that sustains a patriarchal, Hindu world. Now when Sivasekaram writes a poem with that title, there is no attempt to imitate the lyricism and metrical competence of the older poet. Instead, the halting rhythms express an anger held in check, the metaphors reflect a conviction that old myths must disappear in order to create a more humane society. In the earlier poem, the seduced woman becomes a stone until the touch of Rama transforms the stone into the woman. In the present poem, Rama is a complicitous figure in a patriarchal order and the poet concludes that it would be better to remain a stone that be touched into life by an unworthy god.*

*The lover rescued*
*from across the seas*
*he thrust into flames*
*to still the voice of doubt.*

www.padippakam.com

*The stony foot*
*of this unworthy god*
*stirs into life*
*a stone*
*condemned to live a stone.*
*Untouched*
*this stone*
*defying time*
*would be a timeless peak.*

*(Nathikarai Mungil, 58)*

*It has been claimed, not without some justification, that the poets themselves are under various constraints. Writing against the state is to risk reprisal. Even more, to speak against the various militant movements is also to risk censure. And while a certain measure of self-censorship is often evident in the poetry, the poets have also been bold enough to write against the Tamils themselves. In wonderfully moving poems, the poets have written about the expulsion of the Muslims from the north, about the killing of civilians, both Tamils and Sinhalese, thereby asserting again that if a new identity is to be forged, it has to be done with honesty, with compassion and with an awareness of its own complicity in the perpetuation of inequalities. In these poems, a new vision is invoked, not by recalling a mythical Indian past, but by the struggles that have created the present. No longer are the Tamils of the East or of the Tea estates exoticised or othered, but seen as participants in a struggle to assert a distinct voice. In formal terms, the poetry has abandoned the constraints of restrictive metre. In subjective and epistemological terms, the poetry both expands outward and converges inward.*

*If Tamil nationalism can be said to have begun in the 1950s with the Federal Party, and with the mobilisation of the people in various movements, the poets themselves were not actively involved in the process. Poetry was still a specialised activity, and if anything it was fiction in the form of novels and short stories that demonstrated a sense of political consciousness. Now in the last fifteen years or so, Tamil poetry has becomes an integral part of defining an ethnic consciousness in a completely new way. And it is ironic, that if the early poets were seen as breaking away from South Indian influences, recent poets are less worried about such distinctions. A number of the Tamil poets are now in exile, and are writing from countries as diverse as Canada, England, Norway and France. A number of their publications appear from South India where they have both a readership and a common space. Tamil identity is no longer dependent on a South Indian or Indian past, nor is it self-conscious about its links with Tamil Nadu. From a postcolonial pedagogical perspective, the poetry is counter-hegemonic, inclusive, driven by ethnic solidarity, self-conscious about the provisionality of identities, inspired by oral narratives, influenced by written forms, eager to remember the past, willing to jettison a mythical history, allegorical and representational, committed to a cause and always conscious that commitment and fanaticism are easily confused.*

*It is hardly possible to reflect the kind of space that poets have created for themselves without a comprehensive selection of recent poems from poets as diverse and gifted as Sivalingam, Cheran, Sivasekeram, Vilvaratnam, Nuhman and Pathmanadan, to name a few. The poem given below provides at best a sampling of the sensibility that informs this writing. Self-consciously invoking the oral form of lament, Jeyapalan offers what is at once an allegory and a reminder of how history needs to remembered and recreated.*

## To Grandmother

*Hands of the palm trees*
*framing the waves*
*perennial as you*
*my grandmother*

*Demons possessing*
*you relentlessly*
*have all now fled*

*On the ashes of the Portuguese*
*rise the coconut trees*
*fruits for us to pick*
*from the coconut trees*

*On the graves of those*
*victors by chance*
*defying time,*
*my grandmother lives*

*Again on your shores*
*have they appeared*
*the vanquished Portuguese?*
*Speak not of their skin*
*the colour of their eyes*
*they are the Portuguese*

*They shall not remain*
*a consoling thought*
*we will prevail.*
*The Portuguese will die*
*the palm trees will grow*
*a consoling thought*

*Grandmother*
*In my youth*
*I danced and sang and romped*
*and pined*
*A life that tortoise like*
*Along your shores I hid*
*the moon that joined in stealth*
*to pick those fruits*
*the sun that joined to splash*
*in rain-fed pools*
*all these I leave*
*for those I love*

*Rudderless, anchorless*
*a sailor adrift*
*on rafts*
*I dream of your shores*

*A consoling thought*
*is all that I possess:*
*you will triumph.*

❑

www.padippakam.com

*With Best Compliments From*

# Raja & Co

**SOLICITORS**

**Tel: 0181-682 2585**
**Fax: 0181-682 2575**

295 Balham High Road
LONDON SW17 7BA

www.padippakam.com

# ஈழத்துத் தமிழ்க்கவிதையின் அடுத்த கட்ட வளர்ச்சி?

சுரேஷ் கனகராஜா

மஹாகவியோடு ஈழத்துத் தமிழ்க்கவிதை மரபில் ஒரு மாறுதலைக் காண்கிறோம். யாப்பு விதிகளால் இறுக்கமடைந்து, பேச்சோசை, சாதாரண மொழி வழக்கு என்பவற்றிலிருந்து விலகி, கற்றறிந்தோர் மாத்திரமே விளங்கக்கூடிய மேட்டுக்குடிக் கலைவடிவமாக விளங்கிய தமிழ்க்கவிதை ஒரு திருப்பத்தைக் காண்கிறது. மஹாகவிக்குப் பின்வந்த ஈழத்துத் தமிழ்க் கவிஞர்கள் பாட்டோசையைப் பேச்சோசையோடு பேணிக் கவிதையை அதன் வாய்மொழி ஊற்றுக்கு வளர்த்துச் செல்கின்றனர். இப்புரட்சியில் சமகால சமூக, அரசியல் நிலைமைகள் ஒரு முக்கிய பங்களிப்பு செய்தன. பிரித்தானிய காலனித்துவத்திற்கு எதிராகவும் சாதிக்கட்டுப்பாட்டுக்கு எதிராகவும் ஏற்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து, பின்னர் தமிழ்த் தேசியவாதமும் முனைப்போடு எழ, கவிதை சாதாரண மக்களின் விழிப்புணர்வைப் பிரதிபலிப்பதோடு அவர்களை மையங்கொண்டே எழுதப்படலாயிற்று. தமிழ்க்கவிதையின் இந்தப் பரந்த மக்கள்மயப்பாடு ஈழப்போராளிகளால் எழுதப்படும் கவிதைகளிலும் பாடல்களிலும் இன்று ஓர் உச்சக்கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது.

ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களின் இன்றைய வாழ்க்கை எமது சமூகத்தில் சில புதிய சமூக, பண்பாட்டு நிலைமைகளைத் தோற்றுவித்திருக்கிறது. எமது இலக்கியமும் மொழியும் இன்று பல்வேறு வித்தியாசமான கலாசாரங்களோடும் மொழிகளோடும் இலக்கியப் பாரம்பரியங்களோடும் பரஸ்பர தாக்கங்களுக்குள்ளாகின்றன. புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் புதிய உணர்வுகளையும் அனுபவங்களையும் தமிழ் இலக்கியத்தில் வரையத் தொடங்குகிறார்கள். மேற்கத்தைய சமுதாயத்தின் முன்னேற்றம், அபிவிருத்தி, வினோதம், தனிமனித சுதந்திரம், பாலியல் விடுதலை போன்றவற்றில் ஏற்படும் ஈர்ப்பு, நிறவாதம், இனப்பயங்கரவாதம், புரியாத பண்பாடு, பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்த அந்நிய நாட்டில் எம்மவருக்கு ஏற்படும் பயம், அங்கலாய்ப்பு, அந்நியமயப்பாடு, மற்றும் எமது சமுதாய அமைப்பிற்கேயுரிய சீதனக்கொடுமை, சாதி வேற்றுமை என்பனவும் எம் கவிதையில் இப்போது பாடுபொருளாக இடம்பெறுகின்றன. இந்தப் புதிய சமூகப் பண்பாட்டுப் பின்னணியையும் அனுபவங்களையும் பார்க்கும்போது எமக்கு ஏற்படும் ஒரு கேள்வி என்னவெனில், எமது கவிதையின் வடிவத்திலும் உணர்வுச் செவ்வியிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடுமா? அதாவது, இந்தப் புதிய பானத்தை நாம் பழைய பாத்திரத்திலேயே ஊற்றுவதா? அல்லது எம் எழுத்தாளர்களின் புதிய அனுபவங்களை வெளிக்கொண்டுவர ஒரு புதிய கவிதை வடிவமே வளர்ந்துவிடுமா?

இந்தக் கேள்வியை பின்காலனித்துவ இலக்கியப் போக்குகளின் பின்னணியிலேயே நான் எழுப்ப விரும்புகிறேன். இன்று பல்வேறு மொழிகளும் பண்பாடுகளும் மோதுவது சர்வதேசஅரங்கில் ஒரு நியதியாகிவிட்டது. இச்சூழ்நிலையில் இனங்களுக்கிடையில் பல்வகைக் கொடுக்கல் வாங்கல்கள் பரஸ்பரமாக நடைபெறுகின்றன. மொழிகளும் கலாசாரங்களும் கலப்படைவது தவிர்க்க முடியாதிருக்கிறது. இச்சூழ்நிலையில் பல்வேறு மக்களின் இலக்கியங்களும் மாற்றமடைகின்றன. மரபுகள், வடிவங்கள், வகைகள் கலப்படைகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கியமும் இத்தகைய சமகால சமூக, கலாசார போக்குகளால் எவ்வகையில் தாக்கம் அடையப்போகிறது என்று நாம் கேட்கவேண்டும். மஹாகவியோடு எம் கவிதையில் ஏற்பட்ட மாற்றம் ஒரு தேசியமயப்பாடு என்று நாம் கூறுவோமானால், இனி ஏற்படக்கூடிய மாற்றம் ஒரு சர்வதேசமயப்பாடு எனலாம். இப்புரட்சி ஒரு வரையறையில்லாமல் ஏனைய இலக்கியங்களிடமிருந்து நாம் கடன் வாங்குவதாக அமைய வேண்டியதில்லை. கலாசார மோதலின் மத்தியிலும் எம் சொந்த மரபுகளுக்கும் விழுமியங்களுக்கும் ஏற்ற எம் சொந்தப்பாணியிலேயே நாம் இக்கலப்பிலக்கியப் போக்குகளை உள்வாங்கிக்கொள்ள முடியும். புலம்பெயர்ந்தோர் தமிழ்க்கவிதை எந்த வகையில் இத்தகைய புதிய சமூகப் பண்பாட்டுப் போக்குகளின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றது என்பதற்கு சில ஆரம்ப உதாரணங்களை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கம். இக்கவிதை ஒரு புதிய வடிவத்தையோ மரபையோ வளர்த்தெடுத்துவிட்டது என்பதாகாது. ஆனால் சில மேலோட்டமான மாற்றங்களை நாம் அடையாளம் காணலாம்.

www.padippakam.com

உதாரணமாக, புலம்பெயர் நாடுகளின் வேறுபட்ட காலநிலை, தரைத்தோற்றம், சுற்றாடல், தாவரம், பிராணிகள் என்பன எம் கவிஞர்களின் கற்பனையைப் பெரிதும் கவருகின்றன. இவற்றோடுகூட புதிய பண்பாட்டு நடைமுறைகளால் புதிய குறியீடுகளும் படிமங்களும் தமிழ்க்கவிதையில் இடம்பெறுகின்றன. "இரவுகள் துயில் கொள்ளா" என்ற கவிதையில் (துருவச் சுவடுகள்) நோர்வேயில் நிலவும் நீண்ட இரவு கவிஞரின் இருள் நிறைந்த அகதி வாழ்க்கைக்கு உவமானமாக அமைகிறது. மேலும் மக்பை பறவை ஏனைய பறவைகள் குளிர்காலத்தில் இடம்பெயரும்போது மக்பை பறவை தன் தாய்நாட்டிலேயே நிற்பதால், ஜெயபாலனுக்கு இப் பறவை தன்னை ஒத்த அநாதரவையும் தனிமையையும் நினைவூட்டுகிறது. ஜெயபாலனின் "இலையுதிர்கால நினைவுகள் - 1989" மக்பை பறவையுடன் உரையாடுவதாக அமைகிறது. இந்த உரையாடல் எம் கவிதை மரபில் காக்கை விடு தூது, அன்னம் விடு தூது, கிளி விடு தூது போன்றவற்றை நினைவூட்டினாலும், எம் மரபுக்கு புதியதொரு பறவையை இக் கவிதை அறிமுகப்படுத்துகிறது. பழைய குறியீடுகளும் புதிய பொருளைப் பெறுகின்றன. உதாரணமாக, கோடை எம் இலக்கியத்தில் ஒரு விரும்பத்தகாத உவமானமாக அமைந்தாலும், புலம்பெயர்ந்தோர் கவிதைகளில் வெப்பமும் கோடையும் விரும்பத்தக்கவையாக அர்த்தம் பெறுகின்றன. மேற்கத்தையவர்களைப் போல், பனியும் இலையுதிர் காலமும்தான் வெறுப்புக்குரிய படிமங்களாக உபயோகிக்கப்படுகின்றன.

மேலும், தமிழ்க்கவிதையில் புதிய சொற்களும் சொற்பிரயோகமும் இடம்பெறுவது தவிர்க்க இயலாதது. புலம்பெயர்ந்தோரின் புதிய சமூகம், சூழல், பண்பாடு என்பவற்றோடு சம்பந்தப்பட்ட பல அம்சங்கள் அவ்வவ் மொழிகளாலேயே உணர்த்தப்படுகின்றன. மொழி பண்பாட்டோடு இரண்டறக் கலந்திருப்பதால் சில பதங்களை இலகுவாக மொழிபெயர்க்க முடியாது. எனவே தமிழில் பேசும்போது ஜேர்மன், சுவீடிஷ், டேனிஷ் பதங்களைக் கலந்து பிரயோகிப்பது நடைமுறைக்கு வந்துவிட்டது. இதைக் குறியீட்டு மாற்றம் (code switching) என மொழியியலாளர் அழைப்பர்.கவிதையிலும் இப்படியாக கலப்படைந்த தமிழ் அடிக்கடி இடம்பெறுகிறது. தம்பாவின் 'எங்கும் மானிடம்' (துருவச் சுவடுகள், பக்கம் 27) இரட்டை மொழியில் எழுதப்படும் கவிதைகளுக்கு ஒரு சிறிய உதாரணமாகக் கொள்ளலாம். இரவுச் செய்தியில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இயக்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றிக் கேட்டுவிட்டு, பயத்துடன் மறுநாள் காலை வேலைக்குச் செல்கிறார் கவிஞர்.

'மொப்'பும் வாளியும் என்னை வேலைக்குத்
துரிதப்படுத்த
வழமைக்கும் அதிகமாக மௌனித்துக் கிடக்கும்
வயோதிப மடம்..
கதவுகள் திறக்க
கட்டிலில் முகட்டை வெறிக்கும் பார்வையுடன்
'மாரித்'
வாழ்க்கையில் எண்பது வருடங்களை
எண்ணியவள்.
அவளது சுருக்கிழுந்த முகத்தில்
குடிகொண்டிருக்கும் ஐரோப்பிய சோகம்..
'ஹாய்' எனச் சுகம் விசாரவ
என்றும்போல் வாய்திறவா மௌனம்!
நிலம் நனைத்தேன்.
'வரும் வழியில் பிரச்சினையும் உண்டோ?'
ஆச்சரியம் விழிகளில் பரவ நிமிர்ந்தேன்.
'யுத்த வருடங்களின் பின்
இன்று உனக்காக கர்த்தரை வேண்டினேன்'
தழுதழுக்க வந்துவிழும் உண்மையான
வார்த்தைகள் அவை!

www.padippakam.com

வாளி கைநழுவியது....
குளிர் என்னைவிட்டு புறமுதுகிட்டு ஓடிற்று..
உலகில்
எங்கும் மானிடம் என மகிழ்ந்தேன்!

'ஹாய்' என்ற சினேகபூர்வமான வாழ்த்துதல் முறை, 'வணக்கம்' என்ற தமிழ்ச் சொல்லால் முற்றாகப் பிரதிபலிக்கப்பட முடியாதது. இப்படியே 'மொப்' என்ற சொல்லிற்கு மொழிபெயர்ப்பு தேடாமல் விடுவதற்கும் விசேடமான காரணங்கள் இருக்க வேண்டும். இத்தகைய உடல் உழைப்பில் நாளாந்தம் ஈடுபடுகிறவர்களுக்கு 'மொப்' சில பிரத்தியேகமான உணர்வுகளையும் அனுபவங்களையும் ஞாப கப்ப டுத்துவதாக அமையலாம். மேலும் நோர்வேஜிய பெண்ணின் கூற்றில் 'கர்த்தர்' என்ற பதம் பாவிக்கப்படுகிறது. 'கடவுள்', 'இறைவன்' போன்ற சொற்களோடு ஒப்பி டும்போது, கிறிஸ்தவ வேதாகமத்தில் பிரயோகிக்கப்படும் 'கர்த்தர்' பாதிரித் தமிழை எமக்கு ஞாபகமூட்டுகிறது. எனவே இக்கிறிஸ்தவ நோர்வேஜிய பெண்ணின் இறையியல் உணர்வுகளைப் பிரதிபலிக்க ஏற்ற சொல் 'கர்த்தர்' என்று கவிஞர் கருதியிருக்க வேண்டும். ஆனால் புலம் பெயர்ந்தோர் கவிஞர்களுக்கு எப்பொழுதும் இப்படியான சொற்கள் தமிழிலிருந்தே வசதியாகக் கிடைப்பதில்லை. பல தமிழ்க்கவிதைகளில் ஆங்கில எழுத்துக் குறிகளையே பிரயோகித்து வேற்று மொழிச்சொற்களைப் பிரயோகிக்கும் நடைமுறை காணப்படுகிறது.

புதிய உணர்வுகளும் மனோநிலைகளும் மொழி நடையில் சில மாற்றங்களை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. உதாரணமாக, மேற்குலகின் இந்த நூற் றாண்டில் அதிகமாகப் பேசப்படும் அந்நியமயப்பட்ட உணர்வு (alienation) எமது மரபுக்கு புதிதானதென்றே கூறவேண்டும். 'அபசுரம்' போன்ற தமிழ் நாடகங்களில் இந்த அபத்த உணர்வு இடம்பெற்றாலும், இது மேற்கில் பேசப்படும் அபத்தத்திலிருந்து சற்று வேறுபடுகிறது. காரணம், மேற்குலகில் அனுபவிக்கப்படும் அந்நிய மயப் பாட்டுக்கான சமூக, பொருளாதாரக் காரணிகள் எம் சமுதாயத்தில் செயற்படு வதில்லை. ஆனால் இந்த அபத்த உணர்வு தாக்கத்துடன் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் இடம்பெறுவதற்குக் காரணம் எம்மவர்களின் நாளாந்த வாழ்க்கை மேற்குலகின் சமூக, பொருளாதார நிலைமைகளால் பெருமளவு பாதிக்கப்பட்டிருத்த லாலாகும். மேலும் இவ்வெழுத்தாளர்கள் மேற்கத்தைய இலக்கியத்தில் இடம்பெறும் அபத்த சிந்தனைகளாலும் கலைவடிவங்களாலும் பாதிக்கப்பட்டு இவ்வுணர்வினைச் சித்திரிப்பதில் பரிச்சயமும் பெற்றிருக்கலாம். திசோ என்ற கவிஞர் எழுதியிருக்கும் தலைப்பில்லாத ஓர் கவிதை (சங்கமம், 14, 1991, பக்கம் 24) கனவுக்கும் நிஜத்திற்கும் இடைப்பட்ட அல்லது இரண்டும் கலந்த, ஒரு 'சர்ரியல்' (surreal) தன்மையைக் கொண்டிருக்கிறது. ஒரு இரவில் பசி, விரக்தி, ஏமாற்றம், குற்ற உணர்வு என்பவற்றால் பீடிக்கப்பட்டு நித்திரையற்ற ஒரு தமிழ் இளைஞன், மறுநாள் பகல் முழுவதும் உணவும் தொழிலும் தேடிக் களைத்து, இறுதியில் திரும்பவும் இன்னொரு தூக்கமற்ற இரவை எதிர்நோக்கி வீடு திரும்புவதே இக்கவிதையின் சுழல்போக்கான அமைப்பு. இவ் வபத்த உணர்வை தாக்கத்துடன் வெளிக்கொணர்வதற்கு உதவுவது இக்கவிதையின் மொழிநடை.

பகலில் வேலை
தேடிய கால்கள்
"பழிக்குப் பழி" என
வலித்தன...
வெறித்த சுவர்கள்
அதே முகமென
அலுப்புடன்
முறைத்தன...
எனது நம்பிக்கை
நப்பாசையில்

www.padippakam.com

"முயற்சி" என
முனகியது...
கடிதங்கள் "எனைப் பிரி"
என ஒதுங்கிக் கிடந்தன...
அதே கட்டில் "வந்து விட்டாயா?"
என ஏளனம் செய்தது...
மேலும் இல்லாத
கண்ணீர்த்துளி
"ஆழ்ந்த அனுதாபம்" என
கீழ் விழுந்தது
ஆம்...
மீண்டும் நான் உறங்கப் பார்க்கிறேன்.

இவ்வரிகள் சுயசித்தம், செயற்பாடு என்பவற்றை பூரணமாக இழந்த ஒருவரின் மனநிலையைக் காட்டுகின்றன. கட்டில், சுவர்கள், கடிதங்கள் என்பவைதான் எழுத்தாளரைப் பார்த்துப் பேசுகின்றன. எழுத்தாளர் பேசவோ செயற்படவோ முடியாத நிலையிலிருக்கிறார். தனது சுற்றாடலிலிருந்து மாத்திரமல்ல, தன்னில் இருந்தே எழுத்தாளர் அந்நியமயப்பட்டிருக்கிறார். அதாவது கால்கள், நம்பிக்கை, கண்ணீர் என்பவை எல்லாம் அவர் அறியாமலே செயற்படுகின்றன. தன்னையே ஒருங்கிணைக்கும் சக்தியை கவிஞர் இழந்துவிட்டார். இந்த முறிவுபட்ட வரிகள் பாட்டோசையையும் இழந்துவிட்டன.

அடுத்து, மேற்கத்தைய பண்பாட்டால் உந்தப்பட்ட உறவுமுறைகள் தமிழ்க்கவிதையில் சித்திரிக்கப்படும்பொழுது இவை மொழியிலும் வசன நடையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக ஆண் பெண் ஊடாட்டத்தை எடுத்துக் கொள்வோமாயின் கீழைத்தேய சமுதாயங்களில் இது கட்டுப்பாடுகள் நிறைந்தது. மேற்குநாடுகளில் இவ்வுறவுமுறை நேரடியானது, நெருக்கமானது, சுயமானது. அதே போல் இரு சமுதாயங்களிலும் சம்பாஷணை முறைகளும் வேறுபட்டன. தம் உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் என்பவை பற்றியும், பாலியல் போன்ற விடயங்கள் பற்றியும் மேற்கில் முன்னறிமுகமாகாத இருவர் மனந்திறந்து பேசுவர். ஆனால் எம் சமூகங்களில் கணவன் மனைவிகூட இவற்றைப் பற்றித் தமக்குள்ளே பேசுவது குறைவு. பொதுவாக, மேற்கில் சம்பாஷணை முறைகளும் உறவுமுறைகளும் நேர்கோட்டுப் போக்கைக் கொண்டிருக்க (linear style) கிழக்கில் இவை மறைமுகமான போக்கை (style of indirection) கொண்டிருக்கின்றன என மொழியியலாளர் கொள்ளுவர். இத்தகைய முரண்பாடான முறைமைகளால் ஏற்படும் போராட்டம் கொய்யனின் 'கீறிப் பிளக்கப்படுகிற உணர்வுகள்' என்ற கவிதையில் (சுவடுகள், 1990, பக்கம் 11) சித்திரிக்கப்படுகிறது.

நீ ஏன் அதிகம் பேசுவதில்லை?
எதைப் பேசுவது?
வேலைப்பழு தெரியாமலிருக்க
ஏதாவது பேசு!
சுறுசுறுப்பாக மீன்களைக் கீறிப் பிளக்கும்
பெண்மணி 'சிக்றி'.
உங்கள் தேசத்தின்
விசேட பறவை எது?
என்ன நினைத்தாளோ 'சிக்றி'
சிரித்தபடி..
அப்படி எதுவும் எனக்குத் தெரியாது
விசேட மரங்கள்..?
நீ விசேடமென்று
எதனைக் கருதுகிறாய்?

www.padippakam.com

அதே புன்னகையுடன் சிக்றி.
'நத்தார்' தினத்துக்கு
'கிறான்' மரம் எப்படி விசேடமோ
அப்படி
இலையுதிர் காலம்.
இளவேனிற் காலம்.
வசந்த காலங்களில்..?
இரண்டுக்கும் மேற்பட்ட மீன்களை
கீறி எறிந்துவிட்டு,
'மரங்களையும், பறவைகளையும் பற்றியே
பேசுகிறாயே
மனிதர்களைப் பற்றிப் பேசமாட்டாயா?"
அம்மணி!
மனிதத்தைப் பற்றிப் பேசியதாலும்,
எழுதியதாலுமே நான்
எனது மண்ணைவிட்டு
ஓடிவர நேர்ந்தது.
அதனால்..?
மனிதர்களைப்பற்றி பேசுவதில்லையென்றே
தீர்மானித்துவிட்டாயா?
அப்படியென்று ஏதுமில்லை..!
கன்னத்தில் தெறித்த
மீன் ஊனை துடைக்கவும் முடியாத
நிலையில் நான்..!
நான் அழகானவளா?
என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?
பெண்ணே!
நீ அழகானவள் என்பதில்
எந்தப் பொய்யுமே இல்லை.
உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.
ஆனால்,
நான்தான் உன்னை
ரசிக்கமுடியாத நிலையிலுள்ளேன்.
நீ ஒரு புதினமானவன்.
உனது பேச்சுக்கள் புதிரானவை.
மதியவுணவு இடைவேளை மணி
விடுதலையளிக்க அலறியது.
நாரிக் கடுப்பு இப்போ
முக்கியத்துவமற்றுப் போயிருந்தது.

கொய்யனது உணர்வுகள் கீறிப் பிளக்கப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. சிக்றி இப்படியான நேரடியான முறையில் தன் கவர்ச்சியைப் பற்றியும் காதலைப் பற்றியும் பேசுவது; மீன்களைக் கீறிப்பிளக்கும் அருவருப்பான வேலையின் மத்தியிலும் காதலைப்பற்றி பேசுவது; இன்னொருவரின் மனோநிலையை - ஆளுமையை கடகடவென்று பகுப்பாய்வு செய்து பேசுவது - இவையெல்லாம் எம் சமூகத்தவர்களுக்கு புதிதானது. இத்தகைய சம்பாஷணை முறைகளும் உறவுமுறைகளும் எம் இலக்கியத்தில் தொடர்ந்து இடம்பெறுமாயின் இது சில நவீன மாற்றங்களை மொழிநடையிலும் வடிவத்திலும் ஏற்படுத்தக்கூடும்.

மேலே தரப்பட்ட உதாரணங்களைப் பார்க்கும்போது தமிழ்க்கவிதை மரபில் பாரதூரமான மாற்றங்களை புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஏற்படுத்தியிருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றுதான் நாம் கூறவேண்டும். எனினும் புரட்சிகரமான

www.padippakam.com

மாற்றங்களுக்கான அறிகுறி கள் தென்படுகிறதென்று நாம் கூறலாம். கவிதை வடிவத்தில் அடிப்படை மாற்றங்கள் காணப்படாவிட் டாலும், உணர்வுச்செவ்வியில் சில வித்தியாசங்கள் இருக்கிறதென்று நாம் காண்கிறோம். இக்கவிதையில் இடம் பெறும் புதிய உணர்வுகள், உறவுகள், அனுபவங்கள், உவமானங்கள், மொழிப் பிரயோக முறை என்பன நாளடைவில் கவிதை வடிவத்திலும் மரபிலும் பாரதூரமான மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

வடிவம் அல்லது அமைப்பில் ஆழமான மாற்றங்கள் என்று நாம் சிந்திக்கும்போது சிறுகதையில் அண்மையில் நான் கண்ட ஒரு முயற்சியை இங்கே உதாரணமாகத் தரலாம். கவிஞர்களும் இத்தகைய புரட்சிகரமான மாற்றங்களை கற்பனை செய்யலாம். அமுதனின் "வேலை இழந்து...." என்ற சிறுகதையையே இங்கே குறிப்பிடுகின்றேன். (கிழக்கும் மேற்கும், லண்டன், 1997 பக்கம் 144) கதையின் முன்பாதி புவி என்பவர் வேலை தேடிச் சுவிஸ் தெருக்களில் அலையும்போது மனதில் எழும் சிந்தனைகள். ஆனால் விசித்திரமான அம்சம் என்னவென்றால் கதையின் பின் இடம்பெறும் நீண்ட "பின்இணைப்பு". முதலில் தரப்படும் ஐந்து குறிப்புகள் புவியினதும் அவருடைய வாழ்க்கையில் ஈடுபடும் ஏனைய பாத்திரங்களைப் பற்றியும் மேலதிக தகவல்கள் தருகின்றன. மேலும் குறிப்புக்குள் ஒரு குறிப்புப்போல, 2ஆம் குறிப்பிலுள்ள ஒரு விபரம் 'குறிப்பு - 2' என தலைப்பிடப்பட்டுத் தொடர்ந்தும் விபரிக்கப்படுகிறது. இவையும் போதாதென்று, இறுதியில் ஒரு 'பிற்குறிப்பு' கதை முடிந்த இடத்திலிருந்து பின்னர் நடந்த ஒரு 'பிற்குறிப்பு' கதை முடிந்த இடத்திலிருந்து பின்னர் நடந்த ஒரு தகவலைத் தருகிறது. (அதாவது, சினேகிதி உர்சுலா புவியோடு ஓர் அறை எடுத்து ஒன்றாக இருப்பதாக கூறுகிறது.) பின்இணைப்பில் தரப்படும் தகவல்கள் பாத்திரங்களின் கடந்தகால வாழ்க்கைப் பின்னணியை விபரிப்பதன் மூலம் அவர்களது வாழ்க்கையைப் பற்றியும் உறவுமுறைகளைப் பற்றியும் ஓர் ஆழமான கண்ணோட்டத்தைத் தருகின்றன. உண்மையில், கதையிலும் பார்க்க பின்இணைப்புக்கள்தான் ரசனை மிக்கதாக அமைகிறது. முதல்பகுதியில் இவர் கையாளும் 'நனவோடை உத்தி' எம் மனதில் கேள்விகளையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த, பின்னிணைப்புத்தான் விடைகளைத் தருகின்றன. மேலும், சில குறிப்புகள் 'ஆடு வெட்டிய கதை', 'பரம் எனப்படும் அவரது இனிய நண்பர் பற்றி' என்று தலைப்பிடப்படுவதும், புவி முன்னர் பேசும்போது 'ஆடு வெட்டின கதை, மனநோய்ப் பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய கதை தொடங்கி, போதைப்பொருள் விற்றகதை, Burgdorf கோட்டை சிறையிலிருந்து தப்பிய கதை முழுவதிலும் கலந்து கரைந்து.. செத்துப் போனான் பரம்' என்று கூறுவதும் இவ்அமைப்புக்கு இன்னொரு விளக்கத்தைத் தருகிறது. பிரதான பாத்திரத்தின் நினைவுகளிலும் பின் குறிப்புகளிலும் பல கதைகள் சுட்டப்படுகின்றன. இவையெல்லாவற்றையும் விரிவுபடுத்தி முழுக் கதையையும் விளக்கிக்கொள்வது வாசகரின் பொறுப்பு. இக்கதையின் அமைப்பில் இருக்கும் மேலுமொரு நவீன அம்சம் என்னவெனில் துறைசார் எழுத்துக்களில் பிரயோகிக்கப்படும் அடிக்குறிப்பு முறைகள் படைப்பு இலக்கியத்தில் பிரயோ கிக்கப்ப டுவதாகும். இந்தப் புதிய உத்தி கதைக்குப் பூரணமாகப் பொருந்துகிறது. இங்கே எழுத்துவடிவங்களில் (genre) கலப்பு நடைபெறுவதும் தெரிகிறது. இத்தகைய கலப்பு வடிவங்கள் (mixer genre) பின்காலனித்துவ எழுத்தாளர்களால் அநேகமாகக் கையாளப்படுவது நாம் அறிந்ததே.

எனவே முடிவாக, தமிழ்க்கவிதையின் வடிவத்திலும் அமைப்பிலும் பல மாற்றங்கள் இப்படியாக ஏற்படலாம். பிற கலாசாரங்களோடும் பிற மொழி இலக்கியங்களோடும், எம் புலம்பெயர்ந்த எழுத்தாளர் அனுபவப்பட இது பல்வகையான புரட்சிகரமான படைப்புகளுக்கு வித்திடும். எனினும் இம்முயற்சிகள் வெறும் பரிசோதனைகளாக அல்லது போலியாக கடன்வாங்கும் முயற்சியாக இருப்பது நல்லதல்ல. வேறு இலக்கியங்களுடாக நாம் நல்ல அம்சங்களைக் கற்று, ஒரு சர்வதேசக் கண் ணோட்டத்தை வளர்த்தாலும், இவையெல்லாவற்றையும் எம் சொந்த மரபு நிலைப்பட்டு உள்வாங்கி, எமக்கென்றே உரிய இலக்கிய மரபை வளர்த்தெடுப்பதாக அமைய வேண்டும். இத்தகைய நிதானமான முயற்சியிலேயே ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பின் காலனித்துவ எழுத்தாளர்கள் பலர் இன்று ஈடுபட்டுள்ளனர். ❑

www.padippakam.com

# அகதியாகும் தமிழன்

## கோவை ஞானி

ஈழத்தமிழர்கள் தமக்குரிய தாயகத்தை வென்றெடுப்பதற்காக ஒரு கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைத் தீவின் பூர்வீக மக்களான ஈழத்தமிழர்கள், சிறுபான்மையினர் என்றும் இரண்டாந் தரக் குடிமக்களென்றும் கருதப்படுவதோடு, அவர்களின் பொருளியல் உரிமையும் அரசியல் உரிமையும் மறுககப்பட்டு, இன்று வாழ்வுரிமைக்காக உயிரைக் கொடுத்துப் போராடுகின்றனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளையும் ஆதரவையும் தர இயலாத அவலநிலையில், இந்தியச் சூழலில் தமிழ் மக்களாகிய நாம் இருக்கின்றோம். தமிழ் இனம் என்ற ஒத்த உணர்வு காரணமாக நாம் துடிக்கின்றோம்; துயரப்படுகின்றோம். 1983இல் நகரத் தெருக்களில் இடம்கொள்ளாத அளவுக்குப் பேரெழுச்சியோடு ஊர்வலத்தில் கலந்துகொண்ட நாம், இன்று உள்ளத்தில் துயரோடு ஒதுங்கி, ஒடுங்கிக் கிடக்கிறோம். உயிர் பிழைக்க ஈழத்தமிழகம் விட்டுப் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாய் வாழும் ஈழத்தமிழர் நிலை எண்ணி மனம் வெதும்புகிறோம். இந்தச் சூழலில் தமிழகத்தில் வாழும் நம்மவர் நிலை என்ன என்பதையும் எண்ணிப்பார்த்துக் கொள்கிறோம். தமிழக மக்களும் அகதி நிலைமைக்குத் தள்ளப்படும் சூழல் அதிகரித்து வருவதைப் பற்றிச் சிந்திக்க நம்மவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.

சந்தைப் பொருளாதாரம், உலகமயமாக்கல், தாராளமயப்படுத்தல் என்ற பல்வேறு பெயர்களோடு உள்நாட்டு பெருமுதலாளிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதோடு இன்று அந்நிய நாடுகளின் ஆதிக்கத்திற்கு இந்தியாவை மையத்தில் உள்ள அரசு திறந்து விடுகிறது. இந்தப் போக்கைத் தடுத்துநிறுத்தும் சக்தி மாநில அரசுகளுக்கு இல்லை. முதலாளியத்தை தாராளமாக ஊக்குவித்தால் மட்டுமே, இந்திய மக்களுக்கு வாழ்க்கை மேம்படும் என்ற பிரச்சாரத்தோடு சோஷலிசத் திட்டங்கள் அனைத்தையும் அரசு முற்றாகக் கைவிடுகிறது. பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்குத் தாரைவார்க்கப் படுகின்றன. முதலாளிய நிறுவனங்களுக்குப் பெருமளவில் வரிக் குறைப்பு, ஏற்றுமதி இறக்குமதிக்கான வாய்ப்புகள் முதலிய சலுகைகளைத் தாராளமாக நிதி அமைச்சர் தந்து கொண்டிருக்கிறார். அந்நிய மூலதனத்தை வருந்தி வருந்தி அழைப்பதற்காக வாஷிங்டன் முதலிய தலைநகரங்களுக்குத் தலைவர்கள் யாத்திரை மேற்கொள்கின்றனர்.

இந்தியாவில் மூலதனச் சக்திகள் மேலும் மேலும் வலுப்பெற்றால் ஒழியப் பொருளாதாரப் பெருக்கம் ஏற்படாது என்று சொல்லி, இந்திய மக்கள்மீது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் உச்ச அளவில் திணித்து வருகிறார்கள். வங்கிகளை முதலாளிகள் தாராளமாகக் கொள்ளையடிக்கலாம். அரசியல்வாதிகளுக்குக் கொஞ்சம் கொள்ளையில் பகிர்ந்துதந்தால் போதும். அர்சத் மேத்தா போன்ற திமிங்கிலங்களுக்கு வங்கி அதிகாரிகள், வங்கிகளைத் தாராளமாகத் திறந்து விடு கிறார்கள். ரிசர்வ் வங்கிக்குத் தெரியாமல் இந்தக் கொள்ளைகள் நடந்திருக்க முடியாது. புற்றீசல்கள் போலப் பெருகிவரும் தனியார் நிதி நிறுவனங்கள், மக்களின் சேமிப்புகளைக் கவர்ந்து திரட்டுவதில் முனைப்போடு ஈடுபட்டுள்ளன. அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் பார்வை படாமல் இத்தகைய செயல்கள் நடைபெற இயலாது. மக்களிடமிருந்து இப்படித் திரட்டப்பட்ட பெரும் செல்வம் முதலாளிகளிடம் மூல தனமாகக் குவிய வேண்டும் என்ற நோக்கம்தான், அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் பாராமுகத்திற்குக் காரணம். (பங்கு) பத்திரச் சந்தைகளின் தீவிரமான முயற்சி களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அந்நியச் சக்திகளோடு உள்நாட்டில் பெரும் முதலா

www.padippakam.com

ளியச் சக்திகளும் தொடர்ந்து வலுப்பெறுவதன் விளைவாக, இங்கு என்னவெல்லாம் நடைபெறுகிறது என்பதை நாம் தொகுத்துப்பார்க்க வேண்டும்.

தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்புகள் தொடர்ந்து குறைகின்றன. சோஷலிசத்திற்கு எதிரான உணர்வு வளர்க்கப்படுகின்றது. நிரந்தர தொழிலாளர்களுக்குப் பதிலாக அன்றாடக் கூலிகளுக்குத்தான் வாய்ப்புத் தரப்படுகிறது.

கிராமங்களில் புதிய வகைத் தொழில் முயற்சிகள் என்ற பெயரில், நிலமும் நீர்நிலைகளும் நாசமாக்கப்படுகின்றன. ஏற்கனவே பசுமைப்புரட்சி என்ற பெயரால் இரசாயன உரங்களாலும் பூச்சிகொல்லிகளாலும் இயற்கை மட்டுமல்லாமல் கிராமத்து மக்களின் உடல் நலமும் பெருமளவு நாசமாகி வருவதை நாம் இன்று அனுபவபூர்வமாக அறிந்து வருகிறோம்.

மேற்கத்தைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தேயிலை மற்றும் கோப்பி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், மலைகள் தொடர்ந்து மொட்டையடிக்கப்படுகின்றன. தேக்குமர உற்பத்தி என்றும், பழத்தோட்டப் பெருக்கம் என்றும் இறால் பண்ணைகள் என்றும் சொல்லி சிறுநில உழவர்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படுகின்றன. நிலச்சீர்திருத்தச் சட்டம் புறக்கணிக்கப்படுகிறது. உழவர்கள் கூலிகளாகின்றனர். கூலி வேலையும் கிட்டாத நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். நாளடைவில் எல்லாமே ஏற்றுமதி என்ற பெயரில் வெளிநாடுகளுக்கு போய்விடும் நிலையில், உணவு முதலிய பொருள்களுக்கு இங்கு பஞ்சமேற்படுவது உறுதி. இடைத்தரகர்களும் முதலாளிகளும் கொளுத்துத் திரிவார்கள். இவர்களோடு அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துகொள்ளும்.

இந்தியாவைப் பாதிக்கும் இத்தகைய போக்கு தமிழகத்திலும் வெகுவாகப் பாதிக்கிறதைப் பார்க்கிறோம். ஏற்றுமதிக்காகவே தோல் பதனிடும் தொழிற்சாலைகளும், இறால் பண்ணைகளும், சாயப்பட்டறைகளும் செயல்படுகின்றன. இவை காரணமாகத் தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான நிலங்களும் நீர்நிலைகளும் நிரந்தரமான நாசத்திற்குள்ளாகின்றன. நீதிமன்றங்களின் தலையீடு எவ்வளவு காலத்திற்கு நிலைக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. முதலாளிகளும் அரசியல்வாதிகளும் நீதிமன்றங்களின் செயல்பாட்டை சகித்துக்கொள்ள மாட்டார்கள். நாளடைவில் சட்டங்கள் தளர்த்தப்படலாம். உழவர்கள், தலித் மக்கள்மீது, நகர்புறத்துத் தொழிற் சங்கங்கள் அக்கறைகொண்டு இருக்க முடியாது. முதலாளியத்தின் காரணமாக வேலை இழக்கும் தொழிலாளிகள், தன்மானத்தைக் காத்துக் கொள்ள முடியாது.

சந்தைப் பொருளாதாரத்தின் தீவிர போக்கின் விளைவாக நாளடைவில் தொழிலாளர்களும் விவசாயிகளும் தலித் மக்களும் வாழ்விற்கான ஆதாரங்களை இழந்து அடிமைப்படுவார்கள். பழங்குடிகளுக்கு வாழ்வுரிமை முற்றாக மறுக்கப்படும். பெண்கள்மீது அடிமைத்தனம் அதிகரிக்கும். ஏற்கனவே லாட்டரிச் சீட்டு, மதுபானம், ஆபாசத் திரைப்படங்கள் முதலிய நூற்றுக்கணக்கான அழிவுப் போக்குகளின் விளைவாக, தமிழ் மக்களின் வாழ்வு மலினப்பட்டுவிட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆடம் பரத்தோடுகூடிய வாழ்க்கை வசதிகள் நூற்றுக்கணக்கில் மக்கள் மத்தியில் கொட்டப்படும் இன்றைய நிலையில் இவற்றைப் பெறுவதற்காக மத்தியதர வர்க்கத்தினர் எதனையும் செய்யத் துணிவு பெறுகிறார்கள்.

அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் வாயிலாக மக்களைக் காக்கும் ஊழல் என்னும் நச்சுச் சக்தி தமிழ் மக்களின் வாழ்வில் எல்லா அற உணர்வுகளையும் அழித்துவருகிறது.

தனியாரிடம் தாரைவார்க்க ப்பட்ட கல்வி நிறுவனங்கள் மூலம் ஆங்கில மோகம் வளர்க்கப்படுகிறது. தமிழும் தமிழ் உணர்வும் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பொருளியலை இன்று நிர்ணயிப்பவர்களில் பெரும்பகுதியினர் அந்நிய மார்வாடிகள் ஒருபுறம். இவர்களோடு பன்னாட்டு நிறுவனங்கள், தமிழகத்தில் தொழில் நிறுவனங்கள் பலவும் இவர்களின் கைகளுக்குப் போய்ச் சேர்கின்றன. ஏற்கனவே தேயிலை, கோப்பித் தோட்டங்கள் பெரும் பகுதி இவர்கள் கைவசம். இத்தகைய போக்குத் தொடர்ந்து அதிகரிக்கிறது. காவிரி நமக்கில்லை. நெய்வேலி முதலிய மத்திய அரசுத் தொழில் நிறுவனங்களில் நமக்கு அதிகாரம் இல்லை. மின்சாரத்தைப் பிற மாநிலத்தினர் அபகரித்துக்கொள்கின்றனர். வீணாக மேற்குக் கடலில் போய்ச் சேரும் ஆறுகளை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியாது. பெருந்தொழிற்சாலைகள் நிலத்தடிநீரைக் காலிசெய்து வருகின்றன. இவர்களால் ஆறுகள் சாக்கடையாகின்றன. மக்களின் வாழ்வுரிமை தொடர்ந்து பறிக்கப்படுகிறது. டாப்பர், டியூபாண்ட் முதலிய அந்நிய நிறுவனங்களுக்குத் தமிழகம் திறந்துவிடப்படுகிறது. இயற்கையின்மீது முதலாளிகளுக்குத்தான் முற்றான உரிமை என்ற போக்கு உறுதிப்படுகிறது. இயற்கை மக்களுக்குச் சொந்தமில்லை, தவிர மக்களின் உழைப்புத்திறன் முதலியவையும் மூலதனத்திற்குச் சொந்தம். அதாவது மூலதனத்திற்கு அடிமைகள். தொகுத்துச் சொல்வதானால் தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் தம் வாழ்வுக்கான ஆதாரங்களை, பொருளியலை, அரசியலைத் தொடர்ந்து இழந்து வருவதன் மூலம் தமிழ் நாட்டிலேயே அகதிகளாகி வருகிறார்கள். கர்நாடகத்திலிருந்தும், மும்பையிலிருந்தும் தமிழ்மக்கள் அவ்வப்பொழுது விரட்டப்படுவதில் வியப்பில்லை. தமிழன் தனக்குத் தொன்மை வரலாறு உண்டு, தனி நாகரிகம் உண்டு என்று பேசுவதை வடக்கத்தியர், ஆரியர், இந்தியர் ஒப்புக்கொள் வதில்லை. தமிழின் தனித்தன்மை இவர்களுக்குக் கசக்கிறது. தமிழை எங்கள்மீது திணிக்காதீர்கள் என்ற குரல் தமிழகத்திலிருந்தே எழுகிறது.

www.padippakam.com

இந்திய அரசு தமிழ் மக்களின் தன்மான உணர்வை ஒடுக்கு வதில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. இந்திமொழி இன்று எதிர்ப்பில்லாமல் தொடர்ந்து பரவிவருகிறது. திராவிட/தமிழர் இயக்கம் இந்துத்துவவாதிகளுக்கு எரிச்சல் தருகிறது. கடவுள் மறுப்பு மதிக்கப்படுவ தில்லை. மார்வாடிகளுக்கும் மற்றவர்களுக்கும் தொழில் நடத்துவதற்கு உகந்த அமைதியான மாநிலம் என்பதாக தமிழகம் இன்று இருக்கின்றது. தமிழகத்து அரசியல்வா திகள் தம் நாற்காலிகளைக் காப்பாற்றிக்கொள்வ தற் காகத் தமிழ் மக்களின் உரிமைகளைமைய அரசி டம் விட்டுக்கொடுத்து விட்டார்கள். தமிழன் இன்று தன்மானம் அற்றவனாக, தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியாதவனாக இருக்கிறான். தமிழகத்தி லேயே தமிழன் இன்று அகதியாகி வருகிறான்.

கர்நாடக அரசு காவிரியை நம்மோடு பகிர்ந்துகொள் ளாத தற்கு இது காரணம். காவிரி இல்லையென்றால் தஞ்சைத் தரணியிலுள்ள தமிழ் மக்களின் வாழ்வென் னவாகும்? அரிசிக்காக ஆந்திரத்திடம் கையேந்தி நிற் கின்ற நிலையில், தமிழகத்தில் இன்னொரு தெலுங்கு தேசத்தை உருவாக்க முனைந்திருக்கும் அரசியல் சக் திகள் நமக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்கலாம். தமிழகத்து மீனவர்களை இன்று நம்மால் காப்பாற்ற இயலவில்லை. கச்சத்தீவு நமக்குச் சொந்தமில்லை. சிங்கள அரசுக்கு, இந்திய அரசு தரும் இராணுவ உதவி முதலியவற்றை நம்மால் கேள்விக்கு உட்படுத்த இயலவில்லை. தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழ் அகதி களுக்காக நம்மால் குரலெழுப்ப முடியவில்லை, போராட இயலவில்லை. இப்படி நம்மைக் கையற்ற நிலைக்கு அரசியல்வாதி கள்தான் தள்ளியுள்ளனர்.

திரும்பச் சொல்வதானால், உலகளவில் மட்டுமல் லாமல் இந்தியாவினுள்ளும் தமிழகத்தினுள்ளும் தமிழ் மக்களாகிய நாம் அகதிகளாகி வருகிறோம். இதனால் தான் ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமைக்காக, நாட்டுரிமைக் காக நம்மால் இயங்க முடியவில்லை. இப்பொழுதாவது நாம் இந்த உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும். ஈழத்தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்குப் போராடி, நம்மால் நிலைநிறுத்த முடியாது என்ற நிலை வருமானால், தமிழகத்தினுள்ளும் நம் வாழ்வுரிமையை நம்மால் தக்க வைத்துக்கொள்ள முடியாது. இப்படி ஒரு நிலை நேருமா னால், வரலாற்றிலிருந்து நாம் வெளியேற்றப்படுவோம். அதன்பிறகு தமிழை அருங்காட்சியகத்தில்தான் காண முடியும். வரலாற்றில் நமக்கு நேர்ந்துள்ள இந்தப் பேராபத்தை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.❑


உங்கள் அழகை மேலும் அழகுறச்செய்ய
கோல்டன் ஸ்ரார் தரும் தங்க நகைகள்
மலிவானவை, தரத்திற் குறையாதவை.

கோல்டன் ஸ்ரார்

❋ 22 கரட் தங்க நகைகள் ❋ வைர நகைள்
❋ கைக்கடிகாரங்கள் ❋ எவர்சில்வர், பித்தளைப் பொருட்கள்
❋ பட்டுச் சேலைகள் ❋ பட்டு வேட்டி சால்வைகள்
❋ சிங்கப்பூர் உடைகள் ❋ பலதரப்பட்ட, சிறந்தரக சேலைகள்
❋ அன்பளிப்புப் பொருட்கள்
இன்னும் பல........




GOLDEN STAR
199, Rue du Fg. Saint Denis, 75010 Paris, France
Metro: La Chapelle/ Gare du Nord
Tel: 42 09 26 50/ 46 07 26 44 Fax: 40 05 94 87

www.padippakam.com

# அடையாளப் பிரச்சினையும் தேசியவாதமும்

சி. சிவசேகரம்

தேசிய அடையாளம் என்பது வரலாற்றின்பாற் பட்டது. அதற்கு நிரந்தரப் பண்பு எதுவும் இல்லை. அது செயற்படும் கால, இடச்சூழல் கட்கு வெளியே அதற்கு எதுவிதமான முக்கியத்துவமும் கிடையாது. தரப்பட்ட ஒரு சமூகச் சூழலில் மனிதர் தம்மை ஒரு குறிப்பிட்ட முறையில் அடையாளங்காணும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றனர். இந்த அடையாளங்காணலில் ஒரு பகுதி அகத்தின்றும் அதைவிட முக்கியமான ஒரு பகுதி புறத்தினின்றும் வருவதை நாம் வரலாற்றில் திரும்பத் திரும்பக் காண்கிறோம்.

தேசிய அடையாளம் பற்றிய பல மயக்கங்கள், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தேசியத்தைக் காணத் தவறுவதன் விளைவுகளே. தேசிய அடையாளம் ஒரு அரசியற் சக்தியாகச் செயற்படும்போது, அதற்கு ஒரு யதார்த்தமான அடிப்படை உண்டு. அதன் நியாயங்களும் நியாயமின்மையும் ஒருபுறமிருக்க, தேசியவாதத்தின் அரசியற் தேவைகள் அதன் யதார்த்தத்திற்கும் அப்பாலான சில புனைவுகளை உருவாக்கித் தேசிய அடையாளத்தையும் தேசிய இனத்தையும் தேசிய வரலாற்றையும் தேசிய கலாசாரத்தையும் பிற பொதுப் பண்புகளையும் அதன் வசதிக்கேற்ப வரையறுக்கத் தூண்டுகின்றன. இந்த அடையாள இலக்கணப் பண்புகள், ஒரு கால இடச் சூழலில் உறவுபூணும் மக்களிடையே, 'நாங்கள் - அவர்கள்' என்ற வேறுபாட்டைத் தெளிவுபடுத்தப் பயன்படுகிறது. இந்த அடிப்படையில் நோக்கும்போது, நிற அடையாளம், சாதி அடையாளம், பிரதேச அடையாளம் போன்ற பல அடையாளங்களுடன் தேசிய அடையாளம் பல பொதுவான பண்புகளைக் கொண்டிருக்கக் காணலாம். இவ்வாறான அடையாளங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து தனித்துவமான அடையாளங்களாகத் தம்மை வலியுறுத்திய சூழல்களும் வரலாற்றில் உண்டு.

மேற்கூறியவற்றை வைத்துத் தேசிய அடையாளம் என்பது வெறும் கற்பனை என்றோ மாயை என்றோ ஒதுக்கமுடியாதவாறு, தேசியவாதம் சமகால அரசியலிலும் கடந்த சில நூற்றாண்டுகால உலக வர லாற்றிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளது. தேசியவாதம் என்பது பற்றிய மயக்கங்களுள் ஒன்று, நவீன தேச அரசு என்பதை வரலாற்றில் இருந்துவந்த அரசுகளுடன் ஒருபுறமும் சமூகங்களதும் சமூகப்பிரிவுகளதும் பலவேறு வகையான பொது அடையாளங்களுடனும் இணைவான செயற்பாட்டுடன் இன்னொரு புறமும் குழப்பிக்கொள்வதாகும்.

ஒவ்வொரு தேசமும் மட்டுமன்றித் தேசமென்று தன்னைக் காட்டிக்கொள்ள வேண்டப்படும் ஒவ்வொரு சமூகப் பிரிவும் தனக்கென்றொரு தனியான அடையாளத்தை மட்டுமன்றி ஒரு வரலாற்றுத் தொன்மையையும் வலியுறுத்துமாறு வற்புறுத்தப்படுகிறது. இதன் விளைவாகப் பல மாயைகள் உருவாக்கப்படுகின்றன. காலப்போக்கில் இவை வரலாற்று உண்மைகளாகவும் தேசிய சித்தாந்தத்தின் ஒரு முக்கியமான பகுதியாகவும் நிலை பெறுகின்றன. இதன் விளைவுகளை நாம் பல்வேறு வடிவங்களிலும் காணமுடியும்.

தேசிய வரலாறு என்பது, தேசம் என்ற ஒன்றன் இருப்பை வரலாற்றில் அடையாளங்காணும் நோக்கிலன்றி, அதன் நிலைப்பை நியாயப்படுத்தும் நோக்கிலேயே அதிகம் பயன்பட்டுள்ளது. மனிதர் தம்மை ஒரு தேசமாக அடையாளங்காணுமாறான நிர்ப்பந்தம் எவ்வாறு ஏற்படுகிறது என்பது பெரும்பாலும் மறக்கப்பட்டுவிடுகிறது. அதன் பின்னர், அந்த அடையாளத்தில் தமது நலன்களைக் காணும் சமுதாயப் பிரிவினர் அந்த அடையாளத்தைத் தமது வசதிக்கேற்பக் குறுக்கவும் விரிக்கவும் முனைவதை நாம் காணலாம். சிலவேளைகளில், அந்த அடையாளத்தைச் சுவீகரித்த ஒரு பகுதியினர் தமது புதிய அடையாளத்தை, பிறவும் வன்மையாக வலியுறுத்துவதையும் நாம் காணலாம். தேசிய அடையாளத்தின் தன்மையைக் காலத்துடன் மாற்றும் தேவை தேசியவாதத்தின் நெருக்கடியுடன் தொடர்புடையது. இந்த நெருக்கடி, உண்மையில், தேசிய சித்தாந்தத்தைத் தனது ஆதிக்கத்திற்காகப் பயன்படுத்தும் ஒரு சமூகப்பிரிவினது நெருக்கடியாகும்.

உலகில் எங்குமே தூய தேசிய இனங்கள் இல்லை. ஏதாவது ஒரு அடிப்படையில் உலக மக்கள் யாவரும் தேசிய இனங்களாக வகுக்கப்பட முடியும் என்று கொண்

www.padippakam.com

டாலுங்கூட, ஒரே தேசிய இனத்தைக்கொண்ட நாடுகளையோ, ஏன் பிரதேசங்களையோகூட, இன்று அனேகமாக எங்குமே நம்மால் அடையாளங்காண முடி யாதவாறு, மனிதர் தமது 'தேசிய' எல்லைகட்கு அப்பாற் பரவி, பிற தேசங்களுள் ஊடுருவியுள்ளனர். தேசிய அடையாளத்தின் அபத்தமும் நெருக்கடியும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகளை ஒட்டி அதிகமாகின்றன. தேச-அரசு என்ற அடையாளத்தால் அதன் எல்லைகட்குட்பட்ட மக்களை ஒன்றுபடுத்த முடியாது போகிறது. தேசியம் மனிதரை மனிதர் ஒடுக்குவதற்கும் மனிதரை மனிதரிடமிருந்து பிரித்துப் பலவீனப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும்போது ஏற்படும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தேசியவாதத்திடம் நல்ல தீர்வு இல்லை.

இன்று தமிழகத்தில் தேசியக் கோட்பாடு எதிர் நோக்கும் பல சிக்கல்கள் தேசியவாதம் பற்றியும் தேசியம் பற்றியும் நம்மிடையே வளர்க்கப்பட்டுள்ள சில மயக்கங்களைத் தெளியவைக்க உதவலாம். தேசியம் என்ற அடையாளத்தை அதன் வரலாற்றுக் கால எல்லைக்கு அப்பால் பின்னோக்கி விஸ்தரிக்கும் முயற்சிகள் தமிழ்த் தேசியவாதத்திற்குரியன மட்டுமல்ல. இந்திய தேசியம் என்ற பேரிலும் ஒரு விசாலமான இந்திய தேசிய அடையாளத்தை வேதகாலத்திலும் மகாபாரதம், ராமாயாணம் போன்ற இதிகாசங்களிலும் காலத்தாற் சிறிது பிற்பட்ட வரலாற்று நிகழ்வுகளிலும் தேடும் முயற்சிகள், வெளிவெளியான இந்தி இந்துத்துவப் பிரசாரத்திற்கு மட்டும் உரியனவல்ல. திரைப்படங்களிலும் தொலைக்காட்சிக்கான ராமாயணம், மகா பாரதம், சாணக்கியன் போன்ற திரைக்கதைத் தயாரிப்புகளிலும் இந்த இந்திய தேசிய வரலாற்று மாயை உள்ளது. தமிழ்த் தேசியமும் சேர, சோழ, பாண்டியர் பற்றியும் முச்சங்கம் பற்றியும் தமிழின் தொன்மை பற்றியுமான புனைவுகளை இன்னமும் கைவிடவில்லை. இந்தத் தமிழ்த் தேசிய அடையாளத்தைத் திராவிட அடையாளமாக்கித் தெலுங்கர், கன்னடியர், மலை யாளிகள் ஆகியோர்மீது சுமத்த முயன்றதன் விளைவுகளை இங்கு விவரிக்க அவசியமில்லை. எனினும் இந்தியத் தேசிய அடையாளமும் தமிழ்த் தேசிய அடையாளமும் அவற்றுட் பொதிந்துள்ள பேரினவாதப் போக்குகளால் தமது 'தேசிய' எல்லைக்களுக்குட்பட்ட மக்களது அடையாளங்களை மறுக்க முனைவதை நாம் காணலாம்.

இந்தியாவில் இந்தித் திணிப்பு முயற்சிகள் இல்லை என்பது பொய். ஆயினும், இந்தியைப் பிற இந்திய மொழிபேசுவோர் மீது திணித்து அவர்களது மொழியையும் மொழிசார்ந்த அடையாளத்தையும் அழிக்க முடியும் என்பதும் பொய்யே. இன்று சகல இந்திய மொழிகட்கும் ஒரு மிரட்டலாக வந்துள்ளது, வணிகமயப்பட்ட ஆங்கில ஊடுருவல். குறிப்பாகத் தமிழகத்தில், தமிழ்ப்பற்று என்பது, மாநில அரசைப் பொறுத்தவரை, இந்தி எதிர்ப்பு என்பதற்கு அப்பால் அடியெடுத்து வைக்கவில்லை. தமிழை வளர்ப்பது பற்றிய தெளிவு தமிழ்த் தேசியவாத அரசியற் தலைமைகளிடம் இல்லை. இன்னமுங்கூடத் தமிழின் தூய்மை பற்றிய குழப்பமான சிந்தனைகள், தமிழை நவீன உலகிற்கு உகந்த மொழியாக வளரமுடியாது தடுக்கின்றன.

தமிழகம் தவிர்ந்த இந்திய மாநிலங்களில் இந்தி எதிர்ப்பு ஒரு பெரிய அரசியற் பிரச்சினையாக இல்லை. ஆயினும் மாநிலத்தின் பெரும்பான்மை மொழி பேசுவோரது மொழிப்பற்று நடைமுறையிற் புலனாகிறது. இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்கக் கச்சை கட்டிநிற்கும் திராவிடக் கட்சிகள் யாவுமே ஆங்கிலம் தொடர்புமொழி என்ற பேரில் ஆதிக்கம் செலுத்துவதை அங்கீகரிக்கின்றன. தாய்மொழிக் கல்வி பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்று அவர்களைவிட அதிகம் பேசுகின்றன. கர்நாடகத்தில் கன்னடம் கட்டாய மொழியானது பற்றிக் கூச்சலிட்ட தமிழ்த் தேசியவாதிகள், தமது மாநிலத்தில் தாய்மொழிக் கல்வியைக் கட்டாய மானதாக்க இதுவரை எடுத்த முயற்சிகள் அற்பமானவையே. பல தமிழ்த் தேசியவாதிகள் ஆங்கிலத்தின்மேற் கொண்டுள்ள மோகமும் மயக்கமும் அவர்களது வர்க்கச் சார்பை, மேல்தட்டு வர்க்க நலன்பேணும் பண்பை, வலியுறுத்துகிறது. அதே வேளை, தமிழகத்தில் உள்ள தமிழரல்லாதார் பற்றிய நிலைப்பாடும் குழப்பமான ஒரு மனநிலையையே காட்டுகிறது. தமிழ் பேசும் மக்கள் பிற மாநிலங்கட்கும் பிற நாடுகட்கும் புலம்பெயர்ந்து போனபின்பு அவர்களது பரம்பரையினர் தமிழை மறப்பது பற்றிய மனவேதனை தமிழ்த் தேசியவாதிகட்கு உண்டு. தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுவதுகூட ஒரு அளவுக்கு நியாயமானது எனலாம். அதேவேளை அதேவிதமான ஆசை, தமிழ்நாட்டுக்குள் வந்துள்ள தமிழரல்லாதார் பற்றி அவர்களது மொழிபேசுவோருக்கு இருக்க முடியாதா என்பது அவர்களது அக்கறைக்கு அப்பாற்பட்டது. தமிழர்மீது பிறமொழித் திணிப்பு (ஆங்கிலத் திணிப்பு தமிழர் தாமாகவே மேற்கொள்ளும் ஒன்று என்பதால் மன்னிக்கப்படக்கூடும்) தவறு என்று தெரிகிற அளவுக்குத் தமிழகத்திலுள்ள தமிழரல்லாதார் மீது தமிழ்த் திணிப்பு நியாயமானதா என்பது பற்றித் தமிழ்த் தேசியவாதிகள் சிந்திக்க விரும்புவதில்லை. தமிழகத்தில் உள்ள மக்களில் 25-30 வீதமானோர் தெலுங்குமொழி பேசியவர்களது வம்சாவழியினர் என்று கூறப்படுகிறது. அவர்களிற் பெருவாரியானோர், தமிழையே தமது பிரதான மொழியாகக் கொண்டுவிட்டனர். ஆயினும் கணிசமானோர் தம்முட் தெலுங்கிற் பேசுவது உண்டு. இவர்களைவிட, வரலாற்றுக் காரணங்களால் தமிழகத்திற்கு வந்து அதைத் தமது நாடாக்கிக்கொண்ட மராத்தியர் போன்று பல இனத்தவர்களும் உள்ளனர். இவர்கள் பற்றித்தமிழ் தேசியவாதத்தின் நிலைப்பாடென்ன? இங்கேதான் தேசியவாதத்தின் ஜனநாயக விரோத மேலாதிக்கப் பண்புகளை நாம் அடையாளம் காணலாம். தாய்மொழிக் கல்வியுரிமை எல்லாருக்குமான ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசிய வாதத்துக்கும் உடன்பாடானதல்ல, இந்தி - இந்துத்துவத்துக்கு உடன்பாடானதுமல்ல.

ஆதிக்கம் செலுத்தும் தேசிய இன அடையாளத்

www.padippakam.com

தைக் குறிப்பிட்ட தேசிய எல்லைகட்குள் வாழும் பூர்வ குடிகள் உட்பட்ட மற்ற இனப்பிரிவுகள்மீது திணிக்கும் போக்கு ஒருபுறமிருக்க, இந்தப் பொது அடையாளம், அந்தத் தேசிய இனத்தினுள் இருக்கக்கூடிய அடையாள அக வேறுபாடுகளை மறுக்கவும் பயன்படுகிறது. தமிழகத்தின் தமிழ்த் தேசியவாதத்தின் மேலாதிக்க உணர்வின் நெருக்கடியைப் பார்ப்பன எதிர்ப்பும் இந்தி எதிர்ப்பும் ஓரளவுக்குத் தணித்தன. ஆயினும், இவ்வாறான குறுகிய பார்வைகள் தவிர்க்க முடியாமலே தம்மை வெளிப் படுத்தத் தலைப்பட்டன. ஈழத்தில் அநகாரிக தர்ம பாலவின் சிங்கள பௌத்தக் கோட்பாடு எவ்வாறு அதன் தேசிய விடுதலை நிலைப்பாட்டினின்று வளர்ந்து, இன வாத, மதவாதக் கோட்பாடாக மாறியது என்று அறிவோம். யாழ்ப்பாணச் சைவ - வேளாள அரசியலிலும் இவ்வாறான பண்புகள் இருந்ததை அறிவோம். தமிழகத்தின் தனித்தமிழ் இயக்கத்திலும் இவற்றையொத்த குறுகிய பார்வை இருந்தது. தனித்தமிழ் இயக்கத்தின் முற்போக்கான விடுதலைக்கூறுகளை அடையாளங் காணத் தவறாமலே நம்மால் அதன் குறுகிய பார்வையையும் அடையாளங் காணலாம். இன்று தனித்தமிழ் இயக்கத்தின் வாரிசுகளாகத் தம்மைக் காணுகிற சக்திகள், அந்த இயக்கத்தின் நிறைகளைவிடக் குறைகளையே அதிகம் தமது கொள்கைகளிற் காட்டுகிறார்களா என்று ஐயுற வேண்டி இருக்கிறது.

மலையாளிகள், மராத்தியர், தெலுங்கர் என்ற அடிப் படையில் சில தமிழ்த் தேசியவாதிகளால் வெறுத் தொதுக்கப்படுவோருட் பலர் தமிழையே தமது அன்றாட மொழியாகக் கொண்டவர்கள். ஆயினும், 'யார் தமிழன்' என்ற இக்கேள்விக்கு ஒரு இனத்தூய்மைவாதக் கருத்தை விடையாகச் சிலர் வலியுறுத்தியமை ஜேர்மன் ஆரிய இனக் கோட்பாட்டையும் தென்னாபிரிக்க வெள்ளை இனக்கோட்பாட்டையும் நினைவூட்டத் தவற வில்லை. இரண்டு தசாப்தங்கள் முன்பு, எம். ஜி. ராமச் சந்திரனை ஒரு மலையாளி என்று தி.மு.க.வினர் தாக்கியபோது, மு. கருணாநிதி ஒரு தெலுங்கர் என்று பதில் தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஏறத்தாழ அதே காலகட்டத்தில், ம.பொ.சிவஞானம் தமிழரல்ல என்றும் தி.மு.க. வினரால் தாக்கப்பட்டார். பார்ப்பனர்கள் தமிழரல்லர் என்பது இன்னமும் ஒரு சாராரது நிலைப்பாடு. இது போன்ற உதாரணங்கட்குத் தமிழகத்தில் பஞ்சமில்லை யாயினும் இவ்வாறான தேசிய அடையாளப் பிரச்சினையின் விளைவாகத் தமிழ்த் தேசியவாதம் மேலும் பலவீனமடைந்தது.

ஏற்கெனவே சாதியத்தின் பிரச்சினைகட்கு முகங் கொடுக்க இயலாது சோர்வுற்றிருந்த தமிழ்த் தேசிய வாதம் இன்று சாதி அரசியலையும் சாதிப் பூசல்களையும் தவிர்க்க முடியாது தத்தளிக்கிறது. இவ்வாறான சாதி அரசியல், தாழ்த்தப்பட்ட சாதியினரது விடுதலைக்கு உதவுவதற்கு மாறாக அவர்களைத் தனிமைப் படுத்திச் சாதி அடிப்படையில் மேலும் பிளவுபடுத்தவே உதவும் என்பது என் மதிப்பீடு. இன்று தமிழகத்தில் சாதி அடிப்படையிலான கட்சிகளது தோற்றமும் செல்வாக்கும், இன்னும் சில காலத்துக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படையான சமூகப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பவே உதவும்.

தமிழ் அடையாளம் என்பது பற்றிய தேசியவாதப் பார்வைக்கும் மனித சமத்துவப் பார்வைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு, முன்னையது தமிழரது நலனை மற்ற இனத்தவரது நலன்களைவிட உயர் வானதாகக் கொள்வதற்கும் பின்னையது தேசிய இனங் களிடையே சமத்துவத்தை வலியுறுத்துவதற்கும் இடை யிலானது. தேசிய அடையாளம் என்றும் இன அடை யாளம் என்றும் உள்ள அடையாளங்கள் பற்றிய விறைப்பான பார்வைகள் பல விபரீதமான முடிவுகட்கு நம்மை வழிநடத்தக்கூடும். எனவே இந்த அடையா ளங்களை அவற்றுக்குரிய அரசியற் சூழலுக்கு ஏற்ப விளங்கிக்கொள்வதும் மனிதரிடையே இனம், மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றில் புரிந்துணர்வையும் சமத் துவத்தையும் ஊக்குவிக்குமாறு பயன்படுத்துவதும் மனித இன மேம்பாட்டுக்கு உகந்தவை. மற்றப்படி, எந்தக் குறுகிய பார்வையும் இன்னும் மோசமான குறு கிய பார்வைகட்கே வழிகோலி எந்த இனத்தினதும் விடுதலைக்குப் பாதகமாக அமையும் என்பதை நாம் நினைவிலிருத்துவது பயனுள்ளது. ❑

Woodlands Restaurant


நீங்கள் விரும்பும்படி சுத்தமான
முறையிலும், தரமானதாகவும்
தயாரிக்கப்பட்ட உணவு
வகைகளை உடனுக்குடன்
சுவைத்து மகிழ்ந்திட
நாடவேண்டிய இடம்

(100 இருக்கை வசதி கொண்ட நவீன
முறையிலமைந்த, உணவகம்)
வாடிக்கையாளரின் நலன் கருதி மதிய உணவுக்கு
(ஒரு மாதம்) 500 FRS மட்டுமே!


207, Rue du Fg. St Denis
75010 Paris

Tel: 01 40 87 08 20
Fax: 01 40 37 28 20

www.padippakam.com



# பெண் எழுத்துகள்:
## ஒரு சில குறிப்புகள்



மதுபாஷினி மதுசூதனன்


பெண்ணிய விமரிசனம் இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ஒடுக்கப்பட்டு வரும் அனைத்தையும் மறுபரிசீலனைக்கு உள்ளாக்குகிறது. இந்த மறுபரிசீலனை உண்மைக்கான தேடல் எனலாம். இது தமிழில் அறிமுகமாகியிருப்பதும், தேடலை வேண்டி நிற்பதும் இன்றைய காலத்தின் கட்டாயம். அதோடு பெண்ணிய விமரிசனம் தத்துவார்த்தச் சிந்தனையுடன் கூடிய ஒழுகலாறுகள் குறித்த பிரச்சினைகளையும் விழிப்புணர்வையும் எக்கணமும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறது; போராடிக்கொண்டிருக்கிறது.

பெண்ணிய விமரிசனத்தைப் பொறுத்தவரையில் பெண்ணின் வரலாறு அவளது போக்கில் பார்க்கப்படும் ஒரு காலகட்டமாகும். அத்துடன் பெண்ணின் பாத்திரமானது புதிய பரிமாணங்களுடன் மிளிர்வதற்கான சாத்தியங்களைக் காட்டுகிறது. இக்காரணங்களினால் பெண்ணின் கருத்துக்களும், புனைவுகளும் எழுத்துருவில் பதிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டிய தேவை அதிகப்படியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் பெண்களைப் பொறுத்தளவில் நிலவிவந்த, நிலவுகின்ற சமூக அமைப்பின் காரணமாக வாய்மொழிப் பரிவர்த்தனையில் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் உள்ள பல அசௌகரியங்களை வரிவடிவங்களில் பதிவு செய்வதில் ஈடுசெய்யக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய காரணங்களால் வீடுசார் எழுத்துக்கள்- பெண்ணிய எழுத்துக்கள் அதிகப்படியான உந்துதலுடன் வெளிப்பட்டன.

மேலைச்சூழலில் குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பெண்ணின் படைப்புகள் சில ஆக்கப்பட்டன. பெரும்பாலும் அவை யதார்த்தவாத ஆக்கங்களாகவும், 19ஆம் நூற்றாண்டின் இறுதிகளில் படைக்கப்பட்டவை இயல்புநெறி நிலைப்பட்ட படைப்புக்களாகவும், குறிப்பிட்ட பிரதேச

www.padippakam.com



நிலைப்பட்ட படைப்புக்களாகவும் காணப்பட்டன. இவை பெரும்பாலும் நாவல்களாக, சிறுகதைகளாக, கட்டுரைகளாக, சுயசரிதைகளாக வெளிப்பட்டன.

இப் பெண்படைப்புகள் அனைத்தையும் வீடுசார் எழுத்தாக்கம் (Domestic Writings) என்ற பதத்துள் அடக்கினர். இக்காலகட்டத்திலேயே மேரி வூல்ஸ்டன் கிரா∴ப்டின; 'A Vindication of the Rights of Women' (1792) என்ற நூல் வெளிவந்தது என்பது நினைவுகூரப்பட வேண்டும்.

மேற்குறித்த காலப்பகுதிகளில் யதார்த்தவாதப் படைப்புக்களாக எடித் வாட்டனின் "மற்றைய இருவர்" (The Other Two). கொன்ஸ்டன்ஸ் ∴பென்னி மூர் வூல்சனின் "செல்வி கிறீ∴ப் (Miss Grief) ஆகியவற்றைக் கொள்ளலாம். இயற்கை நிலைப்பட்ட படைப்புகள் எனக்கூறும்போது கேட்சொப்கலின் "ஒரு சோடிப் பட்டுக் காலுறைகள்" (A Pair of Silk Stockings) சார்லெட் பேர்கின்ஸ் இல்மனின் "மஞ்சள் நிறச் சுவர்க் கடதாசி" (The Yellow Wall Paper) போன்ற ஆக்கங்களும், பிரதேச நிலைப்பட்ட படைப்புகளாக மேரி வில்கின்ஸ் பிரீமனின் 'தாயின் புரட்சி' (The Revolt of Mother), சாரா யூஎட்டின் 'நகரத்து ஏழைகள்' (The Town Poor) போன்றவற்றையும் கேட் சொப்கினின் ஆக்கங்கள் சிலவற்றையும் குறிப்பிடலாம்.

அதன் பின்னர் 1970களின் ஆரம்பத்தில் 'பெண்ணிய விமரிசனம்' ஒரு துறை சார் நெறியாகப் பரிணமித்தபோது பெண்ணின் படைப்புக்கள் பற்றிய பல கேள்விகள் எழுந்தன. அவற்றுள் பிரதானமானது இதுகாறும் படைக்கப்பட்ட பெண் எழுத்துக்கள் கனதி குறைவாகக் கருதப்படுவதையும், அதற்குரிய சமூக மதிப்பின்மையைக் குறிப்பதும் ஆகும். இவ்வகையான கேள்விகளுக்குப் பின்னரே பெண் எழுத்துக்கள் பற்றிய பிரக்ஞையும் அதன் தேவையும் உலகளாவியரீதியல் சாத்தியப்பட்டது.

1980களில் 'பெண் எழுத்துக்கள் உலக இலக்கிய வரலாற்றில் தமக்கென ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்டன. இவற்றுக்குப் பிரதான முன்னோடிகளாக மேரி வூல்ஸ்டன் கிரா∴ப்ட், சிமொன்ட் டி பூவா, பெட்டி ∴பிரிடன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

மேரி வூல்ஸ்டன் கிராப்ட் (இங்கிலாந்து) - "பெண்களின் உரிமைகள்: நிறுவுதல்"

சீமொன் டி பூவா (பிரான்ஸ்) - "இரண்டாம் பாலினர்"(The Second Sex, 1949)

பெட்டி ∴பிரிடனின் (Betty Friedan) (அமெரிக்கா) -"பெண்ணியப் புதிர்"(The Feminine Mystique, 1963)

போன்ற அவர்களது ஆக்கங்கள் பெண்ணிய வரலாற்றில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின.

இவ்வாறு பல தடைகளை மீறி இயல்பாயும், மிகுந்த விழிப்புணர்வுடனும் எழுந்த 'வீடுசார் எழுத்துக்கள்' பெண்ணின் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட தனிப்பட்ட வாழ்வியலைச் சித்திரிக்கின்றன.

இதுகாறும் பெண்ணின் வாழ்வியல் ஆணிண் நோக்கிலேயே ஆராயப்பட்டு வந்துள்ளது. ஆனால் பெண் பற்றிப் பெண்ணால் எழுதப்படும் எழுத்துக்களை அவள் பற்றின பிரச்சினைகளை, அவளது அபிலாஷைகளை வெளிப்படுத்தும் என்பதாலும் இன்றைய காலகட்டத்தின் தேவை கருதியும் வீடு சார் எழுத்துக்கள் இன்றைய இலக்கியப் பரப்பில் பிரதானமான இடம் வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக வகை மாதிரிகளை மாற்றியமைத்தல், பெண்ணுக்குப் பொருளாதாரரீதியானதும் மனோரீதியானதுமான சுதந்திர உணர்வு அளித்தல், பெண்களின் சுயமதிப்பை உணரச் செய்தல், முடிவெடுத்தலிலும் சமூக வாழ்விலும் அவளது ஆளுமையை ஊன்றச் செய்தல், தொலைத்தொடர்பு சாதனங்களில் அவளை சித்திரிக்கும் முறைமையைக் கேள்விக்குட்படுத்தல் போன்ற பெண்ணிய நோக்கங்களை மையப்படுத்தியே இவ்வெழுத்துக்கள் உரம் பெறுகின்றன.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் பெண்ணிய நோக்கு, பெண்ணிய விமரிசனம், பெண்ணிய எழுத்துக்கள் என்பவையெல்லாம் அண்மைக்காலத்திலேயே அறிமுகமாகி விவாதிக்கப்பட்டுவருகிறது. அத்தோடு இச் சிந்தனைகள், கண்ணோட்டங்கள்

www.padippakam.com

இயல்பிலேயே பலரால் மறுதலிக்கப்படும் நிலமையும் இல்லாமல் இல்லை.

ஈழத்திலே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்படைந்ததன் பின்னரே, அதன் வளர்ச்சியாக அல்லது பரிமாணமாகப் பெண்விடுதலைச் சிந்தனையையும் நாம் கூறலாம். ஆனால் இங்கு பெண்ணியம் தொடர்பான கருத்தாக்கங்கள், சொல் லாடல்களை வரன்முறையான நோக்கில் இன்னமும் நாம் அறிமுகப்படுத்த வேண்டியும் வளர்த்தெடுக்க வேண்டியும் உள்ளது. ஏனெனில் பெண்ணிய எழுத்துக்கள் என நாம் இன்று அடையாளப்படுத்தக்கூடிய வகையில் அதன் முழு பிரக்ஞையுடன் கூடிய படைப்புக்கள் இன்னமும் தமிழில் அதிகம் வரவில்லையென்றே கூறவேண்டும்.

சிலர் பெண் எழுத்துக்கள் என்ற அடையாளப்படுத்தலுடன் ஆண் நோக்குநிலை நின்று படைக்கும் எழுத்துக்களைத்தான் தருகின்றனர். நாம் இவ்வெழுத்தாளர்களின் படைப்புக்களை பெண்நிலை நின்று வாசிக்கும்போது பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது. இவ்வெழுத்தாளர்கள் பெண்களின் எந்தெந்த பரிமாணங்களை சித்திரித்துள்ளனர்? குறிப்பாக இன்றைய பெண்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளைச் சித்திரித்துள்ளனரா? பெண்களின் எத்தகைய பிரச்சினைகளை முன்னெடுத்துள்ளனர்? மாறிவரும் சமூக நிலைமையில் வாழ்வியல் மதிப்பீடுகள் மாறுகின்றன. இந்நிலையில் பெண்களின் யதார்த்தம் எந்நிலையிலுள்ளது? இவர்கள் படைப்பின் மூலம் இன்றைய பெண்களின் யதார்த்த நிலையை நாம் அறிய முடியுமா? இவை அனைத்தையும் ஒருங்கே மதிப்பீடு செய்யும்போது எமக்கு பிரக்ஞையுடன் கூடிய பெண்ணியப் படைப்புகள் பற்றி பல வெளிச்சங்கள் கிடைக்கும்.

இந்த அடிப்படையில் தமிழில் பெண் எழுத்தாளர்கள் பயன்படுத்தும் மொழியைக் கொண்டு அவர்களது உலகியல் நோக்கை - ஆண் நோக்கை உணர முடியும். இந்த வரிசையில், லக்ஷ்மி, இந்துமதி, ரமணிசந்திரன், சிவசங்கரி எனத் தொடரும் பல எழுத்தாளர்களை நாம் நோக்க முடியும். இவர்களது மொழி முழுமையாக ஆண்நிலைப்பட்டதாகவே அமைந்துள்ளது. ஆண்நிலையில் இங்கு இப்பெண் எழுத்தாளர்களின் தன்னிலையாக உருவாகி, வெளிக்கொணரப்படுகிறது.

ஆனால் இன்று பெண்ணிய எழுத்தாளர்கள் எனப்படுவோர் பெண்நோக்கு உடைய பெண்களாக உள்ளனர். இவர்கள் ஆணாதிக்கச் சொல்லாடல்களை விமரிசன பூர்வமாக அணுகி பன்முகப்பட்ட புதிய மொழியை உருவாக்க வேண்டியுள்ளனர். இவ்விடத்தில் மொழி பற்றி ஷைலா ரௌபொத்தம் (Sheila Rowbotham) என்பவர் குறிப்பிடும் கருத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

"மொழி , ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகும்.. நாம் பழக்கத்தில் இருக்கும் சொற்களை அப்படியே ஏற்க முடியாது. அச்சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்பே அவற்றை நாம் கையிலெடுக்க வேண்டும்."

உண்மையில் மொழியின் அரசியல் பற்றிய புரிதலோடு பெண் நோக்கு நிலையில் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள் தமிழில் இப்போது தான் வெளிப்படத் தொடங்குகின்றனர். தனித்துவத்துடன் பெண்ணிய எழுத்து வகைமைக்கு எடுத்துக் காட்டாக தமிழில் பல எழுத்துக்களை ஆக்கிவருகின்றார் அம்பை. அத் தோடு பாமா, சிவகாமி ஆகியோரும் இவ்வாறு குறிப்பிடக்கூடிய வகையில் படைப்பு முயற்சி களில் ஈடுபடுகின்றனர்.

ஈழத்தின் கவிதைப் பரப்பில் 'சொல்லாத சேதிகள்' எனும் பெண் கவிஞர்களின் தொகுப்பு எமது விசேட கவனத்துக்குரியது. இக்காலத்திலேயே பெண்ணியம் தொடர்பான சிந்தனைகளும் பல மட்டங்களில் பரவத் தொடங்கியது எனலாம். பெண்ணியப் படைப்புக்கள் என நோக்குமளவிற்கு, எடுத்துப் பேசப்படுமளவிற்கு, படைப்புகள் ஈழத்தில் அதிகம் வெளிவரவில்லை. இதுவரை வந்துள்ள, வருகின்ற படைப்புக்களை பெண்ணிய நோக்கு நிலையில் விமரிசனம் செய்யும் முறைமையும் 80களின் பின்னர்தான் ஆரம்பித்துள்ளது. எவ்வாறாயினும் தமிழில் பெண்ணிய நோக்கில் தமது இலக்கியப் படைப்பையும், வாசிப்பையும் அணுகுவதற்கான தளங் களை அகலித்து ஆழமாக்கிச் செல்வதே இன்றைய நமது முற்போக்கான செயற் பாடாகும். ❑

www.padippakam.com

# தாய்க்குலப் பெருமை பேசி...

ரஞ்சி



பெண்கள் என்று வந்துவிட்டால் அவர்களுடைய வாழ்வின் ஒரேயொரு குறிக்கோள் குழந்தைகளைப் பெறுவதுதான் என்று இயல்புபடுத் தப்பட்டிருக்கிறது. உண்மையில் குழந்தைகளைப் பெறுவது என்பது பெண்களுடைய உரிமையாகும். இந்த உரிமைக்கு எப்போது அர்த்தம் இருக்கிறது என்றால், குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிப்பது பெண்களாக இருக்கும்போது மட்டுமே. இதன்போதே அதற்கு பெறுமானமும் கூடுதலாக இருக்கின்றது. ஆனால் பெரும்பான்மையான பெண்களைப் பொறுத்தவரை குழந்தை பெறுவது தொடர்பான முடிவெடுக்கும் ‘அதிகாரம்’ கணவன் மாரிடமே (ஆண்களிடமே) உள்ளது. சட்டரீதியாகவோ, சமூக ரீதியாகவோ அல்லது உளவியல்ரீதியாகவோ இந்த உரிமை பெண்களிடம் இன்னமும் - சுதந்திரமாக - அளிக்கப்படவில்லை என்பதே உண்மை.

குழந்தைகளைப் பெறுவதும் சுமப்பதும் பெண்களுடைய கடமை என்றே இந்தச் சமூகத்தால் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. குழந்தை பெறாதவளை 'மலடி' என்று பெயரிட்டு அதனைக் குற்றமாகக் காண்பது சாதாரணமாகி விட்டது. குழந்தை பெறுவதைத் தவிர்த்துக்கொள்ளும் பெண்கள் தொடர்பாக சமூகம், பெண்கள் குழந்தை பெற மறுப்பது இயற்கைக்கு மாறானது என்றும், தாய்மை உயர்ந்தது என்றும், அது கடவுள் கொடுத்த வரம் என்ற வாதத்தையும் முன்வைத்து பல பெண்களின் அறியாமையைப் பயன்படுத்தி, தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர். பெண்ணானவள் இன உற்பத்திக்கான ஒரு உயிரி என்பதை நிலைநாட்டுகின்றனர்.

பெண்கள் இரக்கம், சகிப்புணர்வு, தியாகம் (பிறருக்காகத் தம்மை வருத்தும் பண்புடையவர்கள்), தன்னடக்கம் போன்ற குணாதிசயங்களைக் கொண்டவர்கள் என்று ‘தாய்க்குலப் பெருமை பேசி’ இவற்றைப் பெண்களிடம் உளவியல்ரீதியாகத் திணித்துவிடுகிறது இந்த ஆணாதிக்க சமூகம். பெண்கள் பல தலைமுறைகளாக தம்மை ஆணாதிக்கத்துள் சிறைப்படுத்திக்கொண்டுள்ளனர். ஆண்களுக்குள் முடங்கிப்போகும் வாழ்க் கையையும், குழந்தை பெறும் வெறும் இயந்திரமாக தமது வாழ்க் கையையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதே இன்றைய யதார்த்தம்.

குடும்ப அமைப்பில் குழந்தைகள் பெறுவதும், பாலியல் உறவு கொள் வதும் ஒன்றாகவே கருதப்பட்டு வந்துள்ளது. பெண் என்றால் இனப் பெருக்கத்திற்கான ஜடம் மட்டுமல்ல, பாலியல் உறவுக்கும், இன்ப நாட் டத்திற்குமான படைப்பு என்பது பலரின் கருதுகோள். இந்த சமூக கலாசா ரங்களில் ஊறிவிட்ட பெண்களினால் இந்தப் பாலியல் உறவை வேறாக பிரித்துப்பார்க்க முடியாத நிலைமையே இன்றும் காணப்படுகிறது. ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை நிலைமை அப்படியல்ல.

எமது குடும்ப அமைப்பின் விழுமியங்களுக்குள்ளோ, கலாசாரத்திலோகூட பாலியல் என்பது எப்பொழுதுமே மூடிவைக்கப்பட்ட ஒன்று. வெளிவெளியாகப் பேசப்படாத/பேசப்படக்கூடாத ஒரு பொருளாகவே இன்றும் இருந்து வரு கின்றது. இதுபற்றி வெளிப்படையாகப் பேசும் அல்லது பேச முயற்சிக்கும் பெண்ணுக்கு சமூகம் ‘ஒழுக்கம் கெட்டவள்’ என்ற பாத்திரத்தை வழங்கத் தயாராகவே இருக்கும்.

ஓர் ஆணும் பெண்ணும் பழகுவது ‘காதல்’ ஆகத்தான் இருக்க வேண்டும் என்றோ அல்லது கணவன் மனைவி உறவாக இருக்க வேண்டும் என்றோ அல்லது அது பாலியல் உறவாகவேதான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமோ இல்லை. இரு மனிதஜீவிகள் நட்புடன் இருப்பதற்கு ஆண்-பெண் இடையிலான இனக் கவர்ச்சி அடிப்படையாக இருக்க வேண்டும்

www.padippakam.com


என்ற அவசியம் இல்லை. இரத்தமும் சதையும் கொண்ட மனிதஜீவிகளுக்கிடையில் உணர்வின் பகிர்வு என்பது இந்த ஆண்-பெண் வகைப்படுத்தலுக்கு அப்பாற்பட்டது. அதாவது இந்தப் பிரிவினைத் தாண்டிச் செல்லக் கூடியது.

அன்புள்ள, புரிந்துணர்வுகொண்ட ஆண்கள்கூட, சில விடயங்களில் ஆணாதிக்கவாதிகளாகவே உள்ளனர். நிலவும் குடும்ப அமைப்பில் அதிகாரத்துவம் மிக்க தலைவன் ஆணாகவே இருக்கின்றான். பெண்களுக்கான ஒழுக்கம், புனிதங்கள் யாவும் ஆணாலேயே வகுக்கப்பட்டுள்ளன. திருமணத்திற்குப் பின்னும்கூட ஆண் ஏற்படுத்திக்கொள்ளும் பாலியல் உறவுகளுக்கான வழிமுறைகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் தடையாக இருப்பதில்லை. எந்தவித பிரக்ஞையுமின்றி இலகுவில் மீறிக்கொள்வார்கள்.

திருமணத்திற்குப் பின் தம்மைப் பாலியல்ரீதியாகத் திருப்திப்படுத்துவது மனைவிமாரின் கடமை என்றே பெரும்பாலான ஆண்கள் கருதுவதால், மனைவிமாரின் சம்மதமின்றியே தம்மை அவர்கள்மீது திணிக்கவும் செய்கிறார்கள். இவ்வகையான பலாத்காரம் ஒருபோதுமே பாலியல் பலாத்காரம் என்று கொள்ளப்பட்டதில்லை.மாறாக மனைவியின் கடமை என்று ஊட்டப் படுகிறது. ஒரு குடும்பத்தில் பெண்ணுக்கு பாலியல் உறவில் நாட்டமில்லாத சந்தர்ப்பங்களில்கூட, ஆண் தான் விரும்புகிறபோது கட்டாயப்படுத்துகிறான். அவள் தனது உடைமை என்றும் கணவன் நினைக்கிற போதெல்லாம் கணவனின் பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்வது அவளது கடமை என்றும் குடும்பப் பெண்ணுக்கான 'அழகு' போதிக்கப்பட்டுள்ளது. பாலியல் உறவில் ஈடுபடுவதற்குப் பரஸ்பரம் இருவருக்குமே இணக்கம் இருக்கவேண்டுமென்ற சாதாரண உண்மை கூட மறுக்கப்படுகிறது.

இதனால் பல பெண்கள் மௌனத்திற்கு தள்ளப்பட்டும் தங்களது உணர்வுகளை தங்களுக்குள்ளேயே கட்டுப்படுத்தியும் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு பெண்களின் உணர்வுகள், உணர்ச்சிகள் புறக்கணிக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் பெண்களின் பாலியல் சம்பந்தமான கட்டுப்பாடுகள் பெண்களின் மேலேயே திணிக்கப்பட்டும் உள்ள நிலையைக் காண்கிறோம்.

பாலியல் சம்பந்தமாகக் கதைப்பவள் நடத்தை கெட்டவள் என்றவாறான பெயர்களைப் பற்றிய பயம், வன்முறை குறித்த பயம், பெண்களைக் கண்காணித்துக் கொள்ளும் நமது குடும்ப அமைப்புமுறைகள் என்பவற்றால் தம்முள் ஆழமாக ஓடிக்கொண்டிருக்கும் புலப்படாத உணர்வுகளை உள்ளடக்கி வாழ்கிறவள் பெண். சில ஆண்கள் நான் என் மனைவியின் சக உணர்வுகளைப் புரிந்து கொள்கிறவன்; அவளுக்குச் சமமான உரிமை கொடுக்கிறேன்; அவளுடைய சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன் என்கிறார்கள். ஆனால் ஒரு பெண்ணை பாலியல்ரீதியாக திருப்திப்படுத்த முடியவில்லை என்று தெரியும்போது சந்தேகப்படுபவர்களாக மாறுகிறார்கள்.



ஆணாதிக்கக் கருத்தியல் காலங்காலமாக பெண்களின் பாலியலையும் கட்டுப்படுத்தி வந்துள்ளது/வருகிறது. ஆனால் இன்று பல தேசங்களில் பெண்கள் விழிப்புறத் தொடங்கியுள்ளனர். பெண்ணின்மீது சுமத்தப்பட்டிருக்கும் புனிதங்கள் பற்றிய மதிப்பீடுகள் அவள் முன்னே பல கேள்விகளை எழுப்பத் தொடங்கியுள்ளன. குடும்ப அமைப்புமுறை பற்றியும், அதில் வழிவழியாக நிலவும் ஆண்-பெண் இடையிலான உறவுகள் பற்றியும் கேள்வியெழுப்பத் தொடங்கியுள்ளனர். புதிய உறவுகளைப் புரிந்து கொள்ளவும், பெண்ணை ஆணினுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளவும், இரண்டாம் நிலைக்குத் தள்ளும் சம்பிரதாயங்களைத் தூக்கிவீசவுமான தலையெடுப்புகள் நிகழவே செய்கின்றன. பாலியல் சுதந்திரத்தை கையகப்படுத்துவதற்கான, உயர்ந்தபட்சமாக பெண்விடுதலைக்கான சமூக மாற்றத்தை ஏற்படுத்த பெண்கள் முயற்சித்து, அதை ஒரு பணியாக ஏற்று செயற்படவேண்டிய தேவை எம்முன் விரிந்து கிடக்கிறது. ❑

www.padippakam.com

# தாய்மொழியும் ஐரோப்பிய முதன்மொழிகளும்

ச.சச்சிதானந்தம்

மக்களுக்கு அவர்தம் உலகைப் பற்றிய கோட்பாடுகள் அவரவர் பேசுகின்ற மொழியால் கட்டுண்டு இருக்கின்றன. - *மொழியியல் சார்பியற் கொள்கை*

*முன்னொரு காலத்திலே, மக்கள் சொர்க்கத்தை அடைவதற்காக எல்லோரும் ஒன்று சேர்ந்து கோபுரம் ஒன்றைக் கட்டினர். இது பாபெல் (Babel) கோபுரம் என அழைக்கப்பட்டது. அவர்களுடைய முயற்சி வெற்றி அடைந்துவிடுமோ என அச்சப்பட்ட கடவுள் 'மக்கள் ஒரே மொழியைப் பேசுகின்றனர். ஒற்றுமையாக உழைக்கின்றனர். அதனால் அவர்கள் விரும்பியதை எல்லாம் செய்கின்றனர்.' ஒருவருக்கு ஒருவர் புரியாத மொழிகளைப் படைத்தால்தான் அவர்களைத் தடுக்க முடியும்' என நினைத்துப் பல மொழிகளைப் படைத்தார் என ஒரு கதை உண்டு.*

மொழி ஒரு கருவி. மனிதன் மொழி கொண்டுதான் வாழ்கிறான். மனித சமுதாயம் மொழியால் கருத்துப் பரிமாற்றம் செய்கிறது. இக்கருவி இல்லாமல், செய்தித் தொடர்பையும் பண்பாட்டு வெளிப்பாட்டையும் நினைத்துப்பார்க்க முடியுமா! உலகில் கிட்டத்தட்ட 4000 - 5000 மொழிகள் இருப்பதாக ஆய்வுநிலை மொழிநூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மொழியும் அந்தந்த இனத்தின் தேவைகளுக்குத் தக்கவாறு அமைந்துள்ளது. இதனால் மொழிகளிடையே உயர்வு - தாழ்வு பார்ப்பது பொருத்தம் அற்றது. இவ்வாறே அழகு - அழகின்மை காண்பதும் பொருள் அற்றது.

எமது தாய்மொழி தமிழ். புலம்பெயர் வாழ்வில் பிறந்த எமது பிள்ளைச் செல்வங்களுக்கும் தமிழ்தான் தாய்மொழி என எம்மில் அநேகம் பேர் நம்புகிறோம். இது பிழையா? தாய்மொழி எனும்போது, அது ஒருவரின் தாயின் மொழி என்றே நாம் நினைத்து விடுகிறோம். இது சரியா?

ஒருவன் சிறுவயதில் கற்றுக்கொண்டதும், சிந்திக்கவும், கருத்துக்களைப் பரிமாறவும் இயல்பாக ஒருவனுக்கு உகந்ததும் தாய்மொழி. தன்னைப் பற்றியும், உலகைப் பற்றிய கருத்துக்களை முதன்முதல் உருவாக்கவும், வெளியிடவும் உதவுவது தாய்மொழி. ஒருவரின் தாய்மொழி என்பது அவரின் பெற்றோரின் தாய்மொழியாக எப்போது அமையுமெனில் அவரின் பெற்றோரின் தாய்நாட்டில் அவர் வாழும்போதும் அல்லது அவரின் தாய்நாட்டு மொழி மற்றுமொரு நாட்டுமொழியாக இருக்கும்போதுமேயாகும்.

> *கொழும்பில் ஒரு குடும்பம்: கணவன் சிங்களம், மனைவி தமிழ். இருவரும் தங்களிடையே ஆங்கிலத்திலேயே பேசுவார்கள். பிள்ளைகளிடம் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உரையாடுவார்கள். கணவன் மனைவியிடம் சிலவேளைகளில் சிங்களத்தமிழில் செல்லம் கொஞ்சுவார். வாழும் சூழல் மொழி சிங்களமாக உள்ளதால் பிள்ளைகளுக்கு அந்த மொழி தாராளமாக, சரளமாக வந்தது. ஆனால், இப்போது சுவீடனில் அக்குடும்பம் வாழுகிறது. இங்கு வந்த புதிதில் ஆங்கிலமும் சிங்களமும் பேசியவர்கள், இன்று ஆங்கிலத்திலும், கூடிய வீதம் சுவீடியத்திலும், குறைவாக சிங்களத்திலும் பேசுகிறார்கள். கொழும்பில் சிங்களம் வகித்த இடத்தை உப்சாலாவில் சுவீடியம் எடுத்துக்கொண்டது. பிள்ளைகளுக்கு சிங்களம் பேசுவதற்கான சூழ்நிலை குறைந்துவிட்டது. அவர்களுக்குத் தாயின் மொழியான தமிழும் தெரியாது. ஆனால் வாழும் நாட்டு சூழல்மொழிதான் நன்றாக வருகிறது. அதுதான் அவர்களின் முதல்மொழியாக இருக்கிறது. நாப் பழக்கம் இருந்தால்தானே செந்தமிழும் வரும்.*

தன் கருத்துக்களை முதன்முதல் வெளியிடப் பயன்படுத்தும் மொழி அவனின் தாய் தந்தையரின் மொழியாக இருக்கவேண்டும் என்பதில்லை; முதன்முதல் அவன் பேசக்கற்றுக்கொண்ட மொழியாகவும் இருக்கவேண்டும்

www.padippakam.com

என்பதில்லை. ஏனெனில், குறிப்பிட்ட காரணங்களினால் ஒரு மனிதன் முதன்முதல் பேசப்பழகிய மொழியை முற்றாக மறந்துவிடவும்கூடும். இதன் காரணமாக பெற்றோர்களின் தாய்மொழி பிள்ளைகளுக்கு வேற்றுமொழி ஆகலாம். இந்நடைமுறையைக் கருத்தில் கொண்டுதான் யுனெஸ்கோ தாய்மொழி ( The Use of Vernacular Languages in Education , Report of the UNESCO, Paris 1953) என்றால் என்ன என்பதற்கு பின்வருமாறு விளக்கம் கூறுகிறது:

1. பெற்றோர்களுடைய தாய்மொழியும், பிள்ளைகளின் தாய்மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை.
2. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழியும் ஒருவனுக்கு தாய் மொழியாக அல்லது தாய்மொழிகளாக அமையும்.
3. ஒருவனின் வாழ்க்கையில் தாய்மொழி மாறிக்கொண்டே போகலாம்.

ஒருவன் தன் கருத்துக்களை உரையாடல் மூலம் வெளியிடவும், பிறர் கருத்துக்களை உரையாடல் மூலம் உள்வாங்கிக்கொள்ளவும் வாழ்நாளில் தொடர்ந்து உதவும் ஒன்றோ அல்லது பல மொழிகளோ ஒருவனுடைய தாய்மொழி/தாய்மொழிகள் என விளக்கம் கொடுக்கலாம். புலம்பெயர் வாழ்வில் தாய் மொழியை வரையறுப்பதில் இத்தகைய நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், இக்காலத்தில் **முதல் மொழி, இரண்டாம் மொழி, மூன்றாம் மொழி** எனும் கோட்பாடு தோன்றியது. இந்த எண்ணுமுறைப் பெயர் மொழிகள் ஒருவன் மொழியைப் பேசவோ அல்லது எழுதவோ அறிந்துகொண்ட முறையைக் குறிப்பிடுகிறது. பெரும்பாலான குழந்தைகள் 5-6 வயதுகளில் தமது மொழிகளின் ஒலி அமைப்புகளை நன்றாகக் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு மொழியை எந்த வயதில் கற்கிறோம் என்பதில்தான் அதன் இலகுவும், கடினமும் தங்கி இருக்கிறது.

பத்து வயது ஆகுமுன் எத்தனை மொழிகள் ஆனாலும் இயல்பாகப் பேசும் முறையில் படித்தால், அவற்றைச் சுலபமாகவும் ஒரே அளவிலான முயற்சியுடனும் கற்றுக்கொள்ளலாம்.

காதால் கேட்டு, திருப்பிச் சொல்லுகிற முறையே இயல்பாகப் பேசும் முறை. பத்து வயதுக்குப் பிறகு, சொந்தமொழிக்கேற்பவே நாக்கு இசை வாக்கம் அடைந்துவிடுகிறது. ஒரே இனமொழிகளைக் கற்பதில் கடினம் இருக்காது. ஆகவே நமது வழித்தோன்றல்களை குறைந்த வயதில் பிற மொழிகளைப் படிக்கவைப்பது கூடிய பலன் தரும்.

தமிழ் திராவிடமொழிக் குடும்பத்துக்கு உரியது. பழமைக்குப் பழமை யாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் சில பழைய மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. உலகத்தில் தோன்றிய பல மொழிகள் இறந்து விட்டன, சில வழக்கிழந்து போய்விட்டன. ஆங்கிலம் பிறப்பதற்கு முன்னே, பிரெஞ்சு தோன்றுவதற்கு முன்னே தோன்றி, வளரும், வாழும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. பழைய மொழிகளில் இன்றும் வாழும் மொழிகளாக கிரேக்கம், ஹீப்ரு, சீனம், அரபு, பேர்சியம் முதலானவை உள்ளன. சுமேரியம், எகிப்தியம், ஹிற்றிற் போன்றவை இறந்துபோன மொழிகள். இலத்தீன் ரோமன் கத்தோலிக்கத்திலும், சமஸ்கிருதம் வேதத்திலும் பயன்படுத் தப்பட்டாலும் வழக்கிழந்த மொழிகளாகக் கருதப்படுகின்றன. இருபத்தி மூன்று திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கும் பிரதானமானவை. இவற்றில் தமிழே உலகில் அதிகம் அறியப்பட்ட மொழியாகத் திகழ்கிறது.

திராவிடமொழிக் குடும்பம்

(திருந்திய மொழிகள்)




உலகின் எல்லாப் பாகங்களிலும் இந்தோ- ஐரோப்பிய மொழிகள்

www.padippakam.com

பரவி உள்ளன. ஐரோப்பாக் கண்டத்தில் ஏறத்தாழ அறுபது மொழிகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் முப்பது மொழிகள் மட்டுமே உத்தியோகபூர்வ/தேசிய மொழிகளாக அங்கீகாரம் பெற்றவை: அல்பேனியம், ஆர்மீனியம், ஆங்கிலம், இத்தாலியம் ஸ்பானியம், கிரேக்கம், டச்சு, பிரெஞ்சு, போர்த்துக்கேயம், ஜேர்மன், சிலாவியம் முதலான மொழிகளுடன் ரஷ்யமொழியும் முக்கியமான ஐரோப்பிய மொழிகளாக உள்ளன. ஆயினும் இம் மொழிகளுள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மூன்றுமே ஐரோப்பாவில் முதன்மொழிகள் எனும் மேனிலை கொண்டு விளங்குகின்றன.

**இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பம்**

- அல்பேனிய
- இந்திய
- செல்திய
- ஈரானிய
- இலத்தீனிய
- கிரேக்க
- ஜெர்மனிய
- பால்திக்

இம்மூன்று மொழிகளும் இந்தோ - ஐரோப்பியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. மொழிக் குடும்பங்களில் இந்தோ -ஐரோப்பிய மொழிக்குடும்பமே பெரியது. இவற்றில் பிரெஞ்சு இலத்தீனிய (ரோமானிய) இனமொழிப் பிரிவைச் சேர்ந்தது. மற்றைய இருமொழிகளும் ஜெர்மனிய இன மொழிப்பிரிவில் அடங்கும். மேற்கூறப்பட்ட நான்கு திராவிட மொழிகளும் ஒரே இன மொழிகள். இவை திராவிடம் எனும் தொல்மொழியிலிருந்து பிறந்தவை. இவ்வாறே பிரெஞ்சு, இத்தாலியம், ஸ்பானியம், போர்த்துக்கேயம், புரொவன்ஸால் ஆகியன இலத்தீன் எனும் தொல்மொழியிலிருந்து வந்தவை.

**இலத்தீனியம்**

- பிரெஞ்சு
- ஸ்பானியம்
- போர்த்துக்கேயம்
- இத்தாலியம்
- ருமேனியம்
- புரொவன்ஸால்

**ஜெர்மனியம்**

- சுவீடியம்
- டேனிஷ்
- நோர்வேஜியன்
- ஐஸ்லான்டிக்
- ஜேர்மன்
- டச்சு
- ஆங்கிலம்

ஒரு மொழியின் முதன்மையும் பரம்பலும் அம்மொழி பேசும் மக்களின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தங்கி உள்ளன என்பது வரலாறு காட்டும் உண்மை. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, வியட்நாம், சுரிநாம், குவா தலுப், மார்த்தினிக், மடகஸ்கார், மொரிசியஸ், றியூனியன், தன்சானியா, பிஜித்தீவு, பர்மா, ரினிடாட், மாலைதீவு முதலான 18 நாடுகளில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. தமிழரின் மொழி சுமார் 60 மில்லியன் பேரால் கருத்துப் பரிமாற்றத்தில் கையாளப்படுகிறது

ஸ்பானிய மொழி 20 நாடுகளில் பேசப்பட்டு வந்தாலும் ஐரோப்பிய முதன் மொழி அந்தஸ்தைப் பெறவில்லை. போர்த்துக்கேய மொழியும் ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியக் கண்டங்களில் 7 நாடுகளுக்குரிய மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் 47 நாடுகளில் வழங்கப்பட்டு சர்வதேச மொழியாக மேன்மை பெற்று இலங்குகிறது. பிரெஞ்சு 30 நாடுகளின் மொழியாக உள்ளதால், உலகின் இரண்டாவது மொழியாகச் சிறப்புறுகிறது. இரண்டு உலகப் போர்களுக்கும் ஜேர்மனி முக்கிய கர்த்தாவாக இருந்ததினால், அந்நாட்டு மொழி உலகில் ஒரு நல்ல பெயரைப் பெறமுடியாது போய்விட்டது. ஆனால் ஜேர்மனியின் இன்றைய வளமும்

www.padippakam.com

பலமும், ஐரோப்பிய ஒன்றிய உருவாக்கத்திற்கு அதன் பங்களிப்பும் ஜேர்மனிக்கு ஐரோப்பாவில் ஒரு பெரும் இடத்தை அளிக்கக் காரணம் ஆகின்றன.

எஸ்பெறான்ரோ எனப்படும் **செயற்கை மொழி** ஐரோப்பிய அகில மொழியாக - சர்வதேச மொழியாக உருவாக்கப்பட்டிருந்தது. நாடுகளுக் கிடையே புரிந்துணர்வையும் நல்லுறவையும் ஏற்படுத்தமுடியும் என்பதை நம்பி, அகிலம் பூராவும் ஒரேமொழி வழங்கப்படுவதை மக்கள் விரும்பி னார்கள். ஒரு மொழி வேண்டும் என்ற இடத்து பல செயற்கைமொழிகள் இயற்றப்பட்டன. அவற்றில் வொலாபுய்க், எஸ்பெறான்ரோ, இன்ரா லிங்குவா என்பன பிரதானமானவை. இம்மூன்றினுள்ளும் இரண்டாவது மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது, எஸ்பெறான்ரோ மொழியை 1887இல் *Ludwig Lazarus Zamenhof* என்ற போலந்துக்காரர் படைத்தார். இன்று இம்மொழிதான் செயற்கை மொழியில் முதலிடம் வகிக்கிறது. ஆனால், இது சில மொழி யியல்- அரசியல் காரணங்களுக்காக முதன்மொழியாக செல்வாக்குப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளுப்பட்டுவிட்டது.

| *English* | *français* | *Deutsch* | *Esperanto* | *தமிழ்* |
|---|---|---|---|---|
| Coffee | Le café | der Kaffee | kafo | (ே)காப்பி |
| Problem | Le problème | das Problem | problemo | பிரச்சினை |
| Minute | La minute | die Minute | minuto | நிமிடம் |
| Lamp | La lampe | die Lampe | lampo | விளக்கு |
| Modern | Moderne | Modern | Moderna | நவீன |

ஆங்கிலம் ஐரோப்பாவில் ஐக்கிய இராச்சியத்தில் வழங்கப்படுகிறது. பிரெஞ்சு பிரான்ஸ், அந்தோரா, மொனொக்கோ, பெல்ஜியம், லக்சம்போர்க், சுவிற்சலாந்து ஆகிய நாடுகளிலும், ஜேர்மன் ஜேர்மனி, ஆஸ்திரியா, சுவிற்சலாந்து, லக்சம்போர்க், லிஸ்ரென்ஸ்ரெயின் ஆகிய 5 நாடுகளிலும் பேசப்படுகிறது. ஆங்கிலம் உலகில் 600 மில்லியன் மக்களாலும், பிரெஞ்சு 130 மில்லியன் மக்களாலும், ஜேர்மன் 100 மில்லியன் மக்களாலும் பேசப்படுகின்றன.

ஆங்கிலம், **ஆங்கில்(Angle)** இனத்தவரின் மொழியாததால் ஆங்கிலம் எனப் பெயர் கொண்டது. இம்மொழி கடல்கடந்து வந்த ஜெர்மனிய இனத்தவரான ஆங்கில் எனும் வந்தேறு குடியினரால் ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஆரம்பத்தில் பிரித்தானியத் தீவுக்குக் கொண்டு வரப்பட்டது. இது பிறப்பியல் வழியில் ஜெர்மனிய மொழியாகவும், பண்பியல் முறையில் ரோமானிய மொழியாகவும் இருக்கிறது. மிகச் சிறிய நாடொன்றின் மொழியாக இருந்தும், காலனித்துவ முறையினாலும் குடியேற்றப் பரம்பலினாலும் பிரித் தானியத் தீவுகள் தொட்டு வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னா பிரிக்கா முதலான நாடுகள் வரை ஆங்கிலம் பரவியது. இவ்வாறு பரவிய ஆங்கிலம் எல்லை விஞ்சிய ஆங்கிலம் **(Extra Territorial Englishes)** என அழைக்கப்படுகிறது. பிரித்தானியாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்து விடுபட்ட நாடுகளான இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆபிரிக்கா, கரீபியன் தீவு முதலான நாடுகள்வரை வழங்கப்படும் ஆங்கிலம் புதிய ஆங்கிலங்கள் **(New Englishes)** என்றழைக்கப்படுகின்றன.

பிரெஞ்சு இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகக் கொள்ளப்பட்டாலும், வரலாற்றுரீதியாக ஆராயும்போது, அது ஒரு தனிமொழியிலிருந்து வளர்ந்தது அல்ல என்பது தெரியவரும். இலத்தீனுடன் கொலுவா, வ்றாங்க் மொழிகளும் கலந்து உருவானதே இம்மொழி. 5-12 நூற்றாண்டுக் காலப்பகுதியில் பிரான்சின் வடபகுதியில் லாங் தோய்ல், தென்பகுதியில் லாங் த்ஒக்

www.padippakam.com

எனும் பிராந்திய மொழிகள் இருந்தன, இவ்விரு பிராந்திய மொழிகளில் பல **கிளைமொழிகள்** பேசப்பட்டன: பாரிஸிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் **le francien** கிளைமொழி வழங்கப்பட்டது. இது மன்னர்களின் மொழியாகி **le françois** எனஆனது. பின்னர் **le français** ஆகப் பெயர்மாறி, மற்றைய கிளை மொழிகளை மேவி, ஆட்சிமொழியாகி பிரான்சின் மொழியாக உயர்ந்தது. உலகில் கற்றவர்கள் அறிந்த நாகரிக மொழியாக பெருமை கொள்கிறது பிரெஞ்சு மொழி.

ஜேர்மன் மொழியும் பிறப்பியல் வழியில் ஜெர்மனிய மொழியாகவும், எழுத்தியல் வழியில் ரோமானிய மொழியாகவும் (1941) உலவுகிறது. முந்திய காலத் தொடக்கப் பகுதியில் தாழ் ஜெர்மனியம், உயர் ஜெர்மனியம் என இருவகையான பிரதேச மொழிகள் இருந்தன. தற்பொழுது உயர் ஜெர்மனியமே ஆளுமையானமொழியாக ஆகியுள்ளது. வைதீக கிறிஸ்தவத்திற்கு எதிராகப் புரட்சி செய்த மார்டின் லூதர் உயர்ஜேர்மனிலேயே தமது கருத்துக்களை வெளியிட்டதால், இவ்வகை ஜேர்மனே உத்தியோக, தேசிய ஜேர்மனாக உயர்ந்துள்ளது.

ஒலியனியல், சொல்லமைப்பியல், இலக்கணம், அடிப்படையில் மொழிக் குடும்பக் கொள்கை (Family tree theory ), August Schlegel (1767 - 1845) எனும் ஜெர்மனிய மொழியியலாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுவில் அனைத்து ஐரோப்பிய மொழிகளும் இலத்தீனில் இருந்தே எழுத்து- வரி வடிவங்களை எடுத்தன. ஜேர்மன் ஆனா ஆவன்னாவில் கோதிக், இலத்தீன் என இருவகை எழுத்து வடிவங்கள் உண்டு. இம்மொழி 1941இலிருந்து இலத்தீன் எழுத்துக்களை இரவல் பெற்றது. இலத்தீன் கிரேக்கத்தில் இருந்தும், கிரேக்கம் போனிசிய நெடுங்கணக்கில் இருந்தும் எழுத்துக்களை இரவல் பெற்றது.

| தமிழ் | ஆங்கிலம் | பிரெஞ்சு | ஜேர்மன் |
|---|---|---|---|
| மாதா | Mother | Mère | Mutter |
| பிதா | Father | Père | Vater |
| நாமம் | Name | Nom | Name |
| திரி | Three | Trois | Drei |

மொழிகளுக்குள் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க அம்மொழிகளின் இலக்கண அமைப்பே அடிப்படை ஆனது. பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற இலக்கணப் பாகுபாடு மிக இயற்கை ஆனது. உலக மொழிகளை எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள் (SVO) அமைந்த மொழிகள் என்றும், எழுவாய் - செயப்படுபொருள் - பயனிலை ( SOV ) அமைந்த மொழிகள் என்றும் பாகுபடுத்துகிற ஓர் ஒப்பீட்டு முறையும் உண்டு. இப்பாகுபாடு வாக்கிய அமைப்பை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. ஐரோப்பிய மொழிகள் முதற் பிரிவிலும், திராவிட மொழிகள் இரண்டாவது பிரிவிலும் அடங்கும்.

வாக்கிய ஒழுங்கு - தொடரமைப்பு

| | | |
|---|---|---|
| தமிழ் | நான் தமிழ் பேசுகிறேன் | எழுவாய் + செயப்படுபொருள் +பயனிலை |
| ஆங்கிலம் | *I speak English* | எழுவாய் + பயனிலை + செயப்படுபொருள் |
| பிரெஞ்சு | *Je parle français* | எழுவாய் + பயனிலை+ செயப்படுபொருள் |
| ஜேர்மன் | *Ich spreche Deutsch* | எழுவாய் + பயனிலை+ செயப்படுபொருள் |
| எஸ்பெறான்ரோ | *Mi parolas esperanto* | எழுவாய் + பயனிலை+ செயப்படுபொருள் |

www.padippakam.com

ஐரோப்பாவில் கிரேக்க அறிஞர்களான Plato (கி.மு. 429-347), Aritsotle (கி.மு. 384-322) போன்றோர் கிரேக்க இலக்கணத்தை செய்திருந்தாலும், Dionysius Thrax (கி.பி. 2ம் நூற்றாண்டு) செய்த இலக்கணமே மேற்கு நாடுகளில் முறையான இலக்கணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இலத்தீனில் Donatus (கி.பி. 400), Priscian (கி.பி 500) ஆகிய அறிஞர்கள் இலக்கணம் செய்தனர். பிரெஞ்சு இலக்கணத்தை 1553 இல் Palsgrave John எனும் ஆங்கிலேயர் இங்கிலாந்தில் எழுதினார். (இக்கட்டுரையாளர் 1985இல் பிரெஞ்சு இலக்கணத்தைப்பற்றித் தமிழில் முதல்நூலினை எழுதியுள்ளார்.)

● **ஒற்றுமைக்கூறுகள்:**

இருவகை மொழிகளிலும் அண்மைச்சுட்டுக்கள் இகரமாகவும், சேய்மைச் சுட்டுக்கள் அகரமாகவும் உள்ளன.

| | தமிழ் | ஆங்கிலம் | பிரெஞ்சு | ஜேர்மன் |
|---|---|---|---|---|
| சேய்மைச்சுட்டு | அது | That | Cela (là) | Das |
| அண்மைச்சுட்டு | இது | This | Ceci (ici) | Dies(e) |

● **வேற்றுமைக்கூறுகள்:**

தமிழ்மொழியில் பொருட்களின் இயற்கையான தன்மை கண்டே பால் பகுக் கப்படுகிறது. ஐரோப்பிய மொழிகளின் பாகுபாடு செயற்கை ஆனது. இம்மொழி களில்-குறிப்பாக டொஜ்ஜிலும், பிரான்ஸேயிலும் பொருள்களின் தன்மைக்கும், அவற்றினை உணர்த்தும் சொற்களின் பாலுக்கும் தொடர்பு இல்லை.

தமிழறிஞர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டவர்கள், குறிப்பாக ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் தமிழ் இலக்கணம் எழுதி உள்ளனர். Baldaeus என்ற டச்சுக்காரர் கி.பி. 1672 இல் இந்தியா பற்றிய நூலில் தமிழின் உச்சரிப்புகள், வேற்றுமைப் பாகுபாடுகள், வினைச்சொல் திரிபு வாய்பாடு முதலியவற்றைக் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார். கி. பி. 1680இல் Costo Balthsara என்பவர் தமிழ் இலக்கணத்தை இலத்தீனில் எழுதினார். Grammatica Damulica நூலை ஜெர்மன் அறிஞரான Zieganbalg 1786இல் ஆக்கினார் வீரமாமுனிவர் எனத் தமிழர்களால் தமிழ்ப்பெயர் சூட்டப்பட்ட, தைரியநாதர் எனத் தன் பெயரை தமிழ்ப்பெயராக்கிய இத்தாலியப் பாதிரியாரான Constantius Joseph Beschi பல அகராதிகளையும், இலக்கண நூல்களையும் இயற்றி அருளினார். 1889இல் பிரெஞ்சியர் Martinet தமிழ் இலக்கணத்தைத் தமிழில் எழுதினார். இன்னொரு பிரெஞ்சுப் பாதிரியார் M.J Baulez 1892 ல் தமிழ்-பிரெஞ்சு இலக்கண நூலை வெளியிட்டார். இதுபோல் ஆங்கிலேயர்களான G.U.Pope, Caldwell போன்றோர் எழுதிய இலக்கணங்கள் தமிழ்மொழி வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டியவை.தேமதுர தமிழோசையை உலகெலாம் பரவும் வகை செய்துதல்வேண்டும் என பாரதியார் (188-1921) கவிதை புனைய முன்னரே, ஐரோப்பியர்கள் தமிழின் புகழை நன்கு பரப்பியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தமிழர்கள் நன்றிக்கடன்பட்டவர்கள்.

தமிழ்மொழி நீண்ட ஒரு வரலாற்றினையும் நெடிய ஓர் இலக்கண, இலக்கியப் பாரம்பரியத்தையும் கொண்டது. தமிழ் படிக்க வேண்டும் என்று சொன்ன உடனேயே, "தமிழா? அதில் என்ன படிக்க இருக்கிறது! நாம் அனைவரும் தமிழில் கரைகண்டுவிட்டுத்தானே இருக்கிறோம்" என நினைக்கிற பழக்கம் ஒன்று எமக்கு இருக்கிறது. தமிழ் படித்தல் என்றவுடன், சொற்களின் வகை, யாப்பு ஆகியன பற்றிப் படித்தல் அல்லது மரபு இலக்கணங்களைப் பற்றி அறிதல்தான் தமிழ் என நாம் கிணற்றுத்தவளை நினைப்பு நினைத்து தமிழுக்கு வரம்பு, வரையறை எல்லாம் போட்டு

www.padippakam.com

விடுகிறோம். ஆனால், உண்மையில் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கூட அறிவதற்கு தமிழில கடலளவு உண்டு என்பதை நாம் அறிய வேண்டும்.

நமது தலைமுறைகளுக்கு தமிழ் கற்பிக்கிறோம் என்று பறையறிவித்து, ஈழத்து, இந்தியச் சிறுவர் நூல்களைப் பயன்படுத்துகிறோம்.. இது நடைமுறையில் எவ்வளவு தூரம் பலன் அளிக்கிறது! பிள்ளைகள் பெறும் கல்விமுறைக்கு ஒத்த ஒரு முறையில் போதித்தால், அவர்களைத் தமிழிலும் முதன்மைபெறச் செய்யமுடியும். தெரிந்ததைக்கொண்டு தெரியாததை தெரியச்செய்வது கூடிய விளக்கத்தைத் தரும். புலம்பெயர் நாட்டில், ஊனாவுக்கு உரிய சொல்லுக்கு உரலை உதாரணம் கூறுவது பாலைவனத்தில் தென்றலை எதிர்பார்ப்பதைப் போன்றது. வேண்டுமாயின், கீனாவுக்கு கிறைண்டரைக் காட்டலாம்; கிணறைக் காட்டலாமா? அந்தந்த நாட்டுக் கல்விமுறைக்குப் பழக்கப்பட்ட பிள்ளையை ஆசிரியர் தாய்நாட்டுக் கல்வி முறைக்கு மாற்றுவது எதிர்பார்த்த பலனைத் தராமல் விடுவதற்கு ஏதுவாகும்.

உலகத்தில் முன்னிலையில் உள்ள இருபது மொழிகளில் தமிழும் ஒன்று. மொழிகளில், ஐரோப்பிய மொழிகளே உலகின் அரைவாசிப் பகுதியினரால் பேசப்படுகின்றன. ஐரோப்பிய முதன் மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மூன்றும் உலக மேலாதிக்க மொழிகளாக கொள்ளப்படுகின்றன. மக்களால் உண்டாக்கப்பட்டது மொழி. மக்களால் வளர்க்கப்படுவது மொழி. இதற்கு நன்றி சொல்லும் விதத்தில்தானோ என்னவோ இந்த மொழி மக்கள் வாழ்வை வளப்படுத்துகிறது. தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயம் சம்பாதித்த அறிவெல்லாம் இந்த மொழியில்தானே இருக்கிறது. மொழியியல் அறிவு ஒரு மனிதன் தன்னைத் தானே உணரத் துணைசெய்கிறது. உலகத்தைப் புரிந்து கொள்ள வழிசெய்கிறது. மொத்தத்தில் அறியாமையை அகலச் செய்து அறிவின் அளவை அகலச்செய்கிறது மொழி. ❑


இக்கட்டுரை ஆக்கத்திற்கு உசாவிய நூல்கள்:

The Cambridge Encyclopedia of Language - David Crystal.
Les langages de l'humanité - Michel Malherb.
Report of the UNESCO
Le français à l'usage des Tamouls - S.Sachchithanantham
Up to date English - S.Sachchithanantham
A Comparative Study of English and French - S.Sachchithanantham
இக்கால மொழியியல் - R.முத்துச்சண்முகன்
தமிழ் மொழி வரலாறு - சு.சக்திவேல்

www.padippakam.com



# புலம் பெயர்ந்தே விழுந்தோம் மொழிபெயர்ந்தா முளைப்போம்

ரவீந்திரன்

புலம்பெயர் சூழலின் இருப்பு புதிது புதிதாக பிரச்சினைகளை நம்முன் தோற்றுவித்துச் செல்கிறது. முன் அனுபவமும் முன் உதாரணமுமற்ற இந்த வாழ்நிலை எம்மை இப்பிரச்சினைகளுக்குத் தொடர்ச்சியாக முகம்கொடுப்பதில் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது. தனியாட்களாக இந்நாடுகளுக்குப் பெயர்ந்தோம். இன்று தவிர்க்கமுடியாத அல்லது தவிர்க்க விரும்பாத நியதியின் தர்க்கமாக குடும்பங்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம். எமது அடுத்த சந்ததியான குழந்தைகள் பரம்பரை தலைநிமிர்த்தத் தொடங்கிவிட்டது. அவை புதிய ஏக்கங்களைப் பெற்றோரிடம் வளர்த்தும் விட்டிருக்கிறது. முக்கியமாக கலாசாரம், மொழி ஆகிய தளங்களில் இது பலமாக ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இங்கு மொழி சம்பந்தப்பட்ட விடயத்தில் மட்டும் இக்கட்டுரை பேசுகிறது.

எதையுமே முடிந்த முடிவாக அல்லது அறுதியாகச் சொல்லமுடியாதிருப்பினும், அனுபவச் செறிவு எழுப்பும் கேள்விகளும் பதில்களும் எமக்குச் சில விடயங்களை உணர்த்தத்தான் செய்கின்றன. குழந்தை பிறந்ததும் பெற்றோருக்கு ஏக்கங்களும் பிறந்துவிடுகின்றன. ஆங்கில மொழி பேசாத நாடுகளில் இந்த ஏக்கம் சற்று அதிகமாகவே ஏற்படுகிறது. மொழி சம்பந்தப்பட்ட எமது கருதுகோள்கள் இங்கு முக்கிய பாத்திரம் வகிக்கிறது. தமிழுக்கு அருகில் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு மற்றைய மொழிகளைப் புறந்தள்ளிவிடுகிறோம். இது தற்செயலான ஒன்றல்ல. ஆங்கில காலனித்துவத்தின்கீழ் பரம்பரைப்பட்ட நாம் அதிலிருந்து விடுபட்டுச் சிந்திப்பதில் சிரமமிருக்கத்தான் செய்யும். தமிழ்மொழிச் சீர்திருத்தம் பற்றி அக்கறைப்படும் மொழியியலாளர்கள் எனப்படுவோரிடம் கூட இதன் தாக்கம் இருக்கும்போது ஒரு பொது (தமிழ்) மனிதனிடம் வித்தியாசமாக எதையும் எதிர்பார்க்கமுடியாமலே இருக்கிறது.

“இந்த டொச் மொழியைப் படிச்சு என்ன பிரயோசனம். நாட்டுக்குப் போற காலங்களிலை இது உதவவா போகிறது” என்ற பேச்சுக்களை நாம் சாதாரணமாகக் கேட்க முடிகின்றன. இதற்குத் தீர்வாக ஒரு போக்குச் செயற்பட்டும் வருகிறது. மீண்டும் ஒரு அகதிவாழ்வின் ஆரம்பத்துடனும் ‘சட்டவிரோதமான’ பெயர்வின் இன்னல்களினூடும், பெரும் ஏஜென்சி செலவுடனும் ஆங்கில மொழி பேசும் நாடுகளுக்கு (குறிப்பாக கனடா, லண்டன்) குடும்பமாக இடம்பெயர்கிறார்கள் சிலர். இன்னும் சிலர் குறைந்தபட்சம் மனைவியையும் பிள்ளைகளையுமாவது இந்நாடுகளுக்கு அனுப்பிவைத்துவிட்டு தாம் இங்கு தடங்கிவிடுகிறார்கள் அல்லது (உழைப்பை நோக்காகக் கொண்டு) தங்கிவிடுகிறார்கள். இதற்கும் ஒரு கால இடைவெளியை அவர்கள் தீர்மானித்துக் கொண்டாலும்

www.padippakam.com

இக்கால இடைவெளியும் இழுபட்டுப்போவதே பெரும்பாலும் நடக்கிறது. இது குடும்பங்களில் அநாவசியமான சிக்கல்களை தோற்றுவிப்பதுடன் குடும்பம் பிரிவது, உளவியல் ரீதியில் பாதிக்கப்படுவது போன்ற புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தும் விடுகிறது.

இங்கிருப்பவர்களெல்லாம் இந்த சிந்தனையிலிருந்து தப்பியவர்கள் என்பதல்ல இதன் அர்த்தம். வாய்ப்புகள் வசதிகளற்றதால் பெரும்பாலானோருக்குப் பிரச்சினையாக உள்ளது. குறைந்த வீதத்தினர் மட்டுமே இச் சிந்தனை யிலிருந்து விலகி நிற்கின்றனர்.

உலகின் அறிவியல்கள் சம்பந்தப்பட்ட மூல நூல்கள் சுமார் 40 வீதமே ஆங்கிலத்தில் இருப்பதாகவும், பெரும்பான்மையானவை (மூலநூல்கள்) கிரேக்க, யூகொஸ்லாவிய, சமஸ்கிருத மொழிகளில் இருப்பதாகவும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே பிள்ளையின் அறிவுக்கு இப்புலம்பெயர் நாட்டின் மற்றைய மொழிகள் உதவாது என்று நினைப்பதில் அர்த்தம் எதுவும் இருக்க நியாயமில்லை. அதுமட்டுமல்ல, இந்நாடுகளில் கல்வி பயிலும் குழந்தைகள் இந்நாட்டின் மொழிகளோடு ஆங்கிலத்தையும் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. உதாரணமாக சுவிஸில் டொச், பிரெஞ்சு, இத்தாலி மொழிகளையும், இவற்றோடு ஆங்கிலத்தையும் கற்கவும் பேசவும் சந்தர்ப்பம் உள்ளது. இப்படியான பல மொழி பேசும் தன்மை குழந்தையின் ஆற்றலை விரிவுபடுத்துகிறது. அதன் உலகக் கண்ணோட்டம் விசாலிக்கிறது.

ஒரு குழந்தை சாதாரணமாகவே ஐந்து மொழிகளைப் பேசக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது என, குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்தியிருக்கின்றன. எனவே ஒருவகையில் பார்த்தால் ஆங்கிலம் பேசும் நாடுகளைவிட மற்றைய புலம்பெயர் நாடுகளிலுள்ள குழந்தைகள் இந்த ஆற்றலை -இயல்பாகவோ அல்லது ஒருவித நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலோ- வளர்த்துக் கொள்ளும் சாத்தியம் இருக்கின்றது. அத்தோடு ஆங்கில காலனித்துவத்தால் ஏற்பட்ட ஆங்கிலமொழி சம்பந்தப்பட்ட மனோபாவம், மற்றைய புலம்பெயர் நாடுகளிலுள்ள பெற்றோர்களை ஒருவித அச்சத்துக்கு உள்ளாக்குவதால், குழந்தைகளுக்குத் தமிழை கற்பிப்பதில் -தமிழ்ப் பாடசாலையினூடாகவோ அல்லது தமது முயற்சியினூடாகவோ- அதிக அக்கறைகொள்ள வைத்துமிருக்கிறது. எப்படியோ இதன் விளைவு அபாரமானதுதான். பல மொழிகளில் இச்சந்ததி பெறும் தேர்ச்சி எதிர்காலத்தில் தமிழ் மொழியை வளப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கை ஆற்றும் என நம்பலாம்.

இவ்வாறான மொழித் தேர்ச்சியானது இலக்கியத் தளத்தில் ஒரு வளத்தை அறிவிக்கும் சாத்தியம் உண்டு. இந்நாடுகளின் இலக்கியங்களை (அல்லது தத்துவங்களை) ஆங்கிலம் வழியாகத் தமிழுக்கு மொழிபெயர்ப்பதை விடுத்து அதனதன் மூலங்களிலிருந்தே தமிழுக்கு மொழிபெயர்ப்பது சாத்தியமாகலாம். இந்நாடுகளின் இலக்கியங்களைப் புரிந்துகொள்ளவும், அவற்றை வாழ்வனுபவ தளத்தில் வைத்தே தமிழுக்கு மொழிபெயர்க்கவும், மற்றைய நாடுகளின் புலம்பெயர் இலக்கியங்களை உள்வாங்கிக்கொள்ளவும் இருக்கும் மொழித் தடையை எமது புதிய சந்ததி நீக்கிவிடும். இதற்கு நாம் தமிழ் உணர்வு படைத்தவர்களாக, எமது சமுதாயம் பற்றிய பிரக்ஞை உள்ளவர்களாக எமது பிள்ளைகளை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். ஒரு வேற்று மண்ணில் பிறந்து வேற்றுச் சூழலில் வாழ்ந்து வரும் எமது குழந்தைகளை இவ்வாறாக வளர்த்துவிட நாம் கடுமையான முயற்சியெடுக்க வேண்டியிருக்கும்.

தமிழ்மொழிக் கல்வி சம்பந்தமாகப் பலர் அக்கறைப்படும் அதேநேரம், அக்கல்விமுறை சம்பந்தமாக சிலர் மட்டுமே விவாதிக்கும் நிலையே காணப்படுகிறது. இந்நாடுகளின் கல்விமுறைக்கும் எமது நாட்டுக் கல்விமுறைக்கும் இடையில் குழந்தைகள் நெரிசல்படுகிறார்கள். Kindergartenக்கு துள்ளிக்குதித்துச் செல்லும் ஒரு குழந்தை, தமிழ்ப் பாடசாலைக்கு தயங்கித் தயங்கிச் செல்கிறது. இதற்கு எமது கல்விமுறையை அப்படியே பிரதிபண்ணி வழங்குவது, தண்டனை வழங்குவது போன்றன காரணங்களாக அமைந்துவிடுகின்றன. இந்த முறையை மறுதலிக்கும் சிலரும் எமது கல்விமுறையை முற்றாக நிராகரித்து, இந்நாடுகளின் கல்விமுறையை அப்படியே பிரதியீடு பண்ணி, தமிழ் கற்பிக்கும் முறையில் மாற்றத்தைக் கோரும் நிலையும் இருக்கிறது. மனப்பாடம் செய்வதையே அடிப்படையாகக் கொண்ட எமது கல்விமுறையைக் கேள்விக்குள்ளாக்கும்போது, மனப்பாடம் செய்வதை முற்றாக நிராகரிப்பதில் பிரச்சினை இருக்கிறது. மனப்பாடம் செய்வதும் ஞாபகப் படுத்தலுக்கான ஒரு பயிற்சிதான். இதுபோன்ற விடயங்களில் கவனமெடுத்து எமது கற்பிக்கும் முறையில் தனித்துவமான மாற்றத்தைக் கொண்டுவருவது அவசியமான ஒன்று.

தமிழ் மொழியைக் கற்பதில் குழந்தை ஒரு இலகுத் தன்மையை உணர வழிசமைத்தல் நல்லது. உதாரணமாக டொச் மொழியில் 26 எழுத்துக்களே உள்ளபோது, தமிழில் எத்தனை தெரியுமா? 247 எழுத்துக்கள் என விளாசுவதன் மூலம் குழந்தையைப் பயப்படுத்துவதில் பயனில்லை. உயிர் எழுத்துக்கள் 12 உம், மெய் எழுத்துக்கள் 18 உம், ஆயுத எழுத்து (ஃ) ஒன்றும் சேர்ந்து 31 எழுத்துக்களே அடிப்படையான எழுத்துக்கள். பின் உயிரெழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகுவதை அட்டவணைப்படுத்தி தர்க்கரீதியிலான மற்றைய எழுத்துக்களின் உருவாக்கத்தை (இப்போ நடைமுறையிலுள்ள எழுத்துச் சீர்திருத்த வடிவுக்குள் வைத்து) இலகுபடுத்தி புரியவைப்பது நல்லது. உண்மையில் இது தமிழ்மொழிக்குள்ள ஒரு சிறப்பு. மிகச் சுருக்கமான எழுத்துக்களுக்குள் அடக்கக்கூடிய எமது பெயர்களை இந்நாட்டு மொழிகளில் நீட்டி எழுதவேண்டியிருக்கிறது. இவற்றை புரியவைத்து தமிழில் ஒரு இலகுத்தன்மையை ஊட்டி கற்பிக்கவேண்டிய தேவையும் இருக்கிறது.

இவ்வாறான ஒரு நல்ல ஆரம்பத்தை எமது குழந்தைகளுக்கு நாம் தொடக்கி வைக்கவேண்டிய கட்டாய தேவை எம்முன் உள்ளது. எமது வேலைப்பளு, இயந்

www.padippakam.com

திர வாழ்க்கை, பொருளாதாரத் தேவை, எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை, ஆங்கில மோகம்... என்பவற்றால் குழந்தைக்கான தமிழ்மொழிப் போதனையில் நாம் அசண் டையாக இருப்போமானால் அதற்குரிய பலனை வெவ் வேறு தளங்களில் அனுபவித்தே தீருவோம். தமிழன் என்ற அடையாளப்படுத்தலை குழந்தையின் உணர்வில் நாம் வழங்கியாக வேண்டும். இந்நாட்டு மொழிகளில் மட்டும் சிந்திக்கப் பழக்கப்பட்டுவிடும் பிள்ளைகள் இந்த உணர்விலிருந்து விடுபட்டுப் போகவே வாய்ப்புண்டு. தன்னைத் தமிழன் என்று அடையாளப் படுத்துவதை தவிர்த்துக்கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆங்கில காலனியாதிக்கத்தின் 'கொடையாக' தமிழ் மேட்டுக் குடியினர் தமிழ் கதைப் பதை இழிவாகக் கருதி யதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதுபோன்றே எதிர்காலத்திலும் இப்புலம்பெயர் நாடு களின் மொழியில் பேசுவதை பெருமையாகப் பறை சாற்றிக்கொண்டு தமிழில் பேசுவதை இழிவாகக் கருதும் நிலை ஏற்படாது என்பதற்கு உத்தரவாதமில்லை. "என்ரை பிள்ளை அந்தமாதிரி டொச் கதைப்பான், அவள் அந்தமாதிரி பிரெஞ்சு கதைப்பாள்" என்று நியா யமாக பெருமைப்பட்டுக் கொள்வதற்குப் பின்னால், தமிழ் மொழியை கைகட்டி இருத்தும் மனோபாவம் இல்லை என்று விவாதிக்க முடியாமலே உள்ளது.

தமிழன் என்ற அடையாளப்படுத்தலை வைத்தி ருப்பதில் மொழி முக்கிய பங்காற்றுகிறது. பண்பாட்டு, கலாசார தளத்திலும், மொழியின் தளத்திலும் நாம் தன்னடையாளத்தை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். இதை இன்னொரு வகையில் சொன்னால் ஆதிக்கத் திலுள்ள கலாசார, மொழி, (கிறிஸ்தவ) மதம் போன்ற வற்றிற்கு நாம் பலியாகி எமது தன்னடையாளங்களை அழித்துக்கொள்ளாமல் பேணவேண்டும். வேலையைவிட (நோக்கம் எதுவாக இருக்கின்றபோதும்) கல்வியை முதன்மைப்படுத்தும் எமது மனோபாவம் சாதகமான ஒன்றுதான். இந்த வழியில் எமது எதிர்கால சந்ததி பாடசாலை, விளையாட்டு, வேலைவாய்ப்பு போன்ற புதிய தளங்களில் நிறவெறியை எதிர்கொள்ளப் போகிறவர்கள். இந்தவகையில் (புலம்பெயர்) இலக்கியத்தையும் இத் தளங்களுக்கு கொண்டுசெல்லப் போகின்றவர்கள். எமது சொந்த நாட்டை கற்பனையிலேயே வைத்துக்கொண்டு, அந்த மண்ணின் எந்த வாழ்வனுபவங்களும் இல்லாத இந்த சந்ததி தன்னைத் தமிழன் என்று அடையாளப் படுத்துவதில் மொழியின் பங்கு மேலதிக கவனத்துக்கு உட்படவேண்டியது.

சுவிஸில் சில சந்தர்ப்பங்களில் தமிழை டொச் மொழியில் உச்சரித்து எழுதி தமிழ்ப் பேச்சுப் போட்டியில் பங்குபற்றுவது ஒன்றும் மறைப்பதுக்குரிய விடயமல்ல. இதில் ஆபத்து உண்டு. எழுதப் பேசத்தெரிந்த -அந் நிய- மொழியினை சிந்தனை மொழியாகவும், பேச மட்டுமே தெரிந்த தமிழ்மொழியை தொடர்புமொழி யாகவும் உணரும் வாய்ப்பே இந்த ஆபத்து. இப்படியாக தன்னை முழுமையாக தமிழன் என்று உணரமுடியாத ஒரு பிள்ளை நிறவெறியின் அந்நியமாக்கலால் உதை படும்போது தனிமைப்பட்டுக்கூட போய்விடலாம்.

இந்த நாட்டுக்கு வந்தோம். இரண்டு வருடத்தில் எப்படியாவது திரும்பிவிட வேண்டும் என்றோம். வீட்டு பொருளாதாரப் பிரச்சினையை ஒதுக்கிவிட்டு ஒரு ஐந் தாறு வருடத்தில் திரும்பிவிடுவோம் என்றோம். நாட்கள் இழுபட... காரணங்கள் மலிந்திட... இழுத்திழுத்து வாழ்ந் தோம். குடும்பமானோம். பிள்ளை பள்ளிக்கூடத்துக்கு போக முன்னம் எப்படியும் திரும்பிப்போக வேண்டும் என மூச்சுவாரிச் சொன்னோம். பிள்ளை இப்போ பள்ளிக் கூடத்துக்கும் போயாகிவிட்டது. இப்போ என்ன சொல்லப் போகிறோம்?

நாம் திருப்பி அனுப்பப்படுவோமா, உதைத்து அனுப் பப்படுவோமா என்ற அச்சங்களெல்லாம் எமது இன்றைய கடமைகளைக் கிடப்பில் போடுவதை நியாயப்படுத் தாது. ஆனால் இந்த அச்சம் எமக்கென்றொரு நாடுண்டு. எமக்கென்றொரு மொழியுண்டு என்பதை மனதில் எத்திக்கொண்டுதானிருக்கும். ❑

SRI MAHALL
மளிகைப்பொருட்கள்-கடல் உணவு வகைகள்
எவர்சில்வர் பாத்திரங்கள்-அன்பளிப்புப்பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் கிடைக்கும்
அத்துடன்
வீடியோ கசற்றுக்கள்
வெளிநாட்டுத் தொலைபேசி தொடர்புக்கான அட்டைகள்
யாவும் கிடைக்கும்
ஸ்ரீமகால்
TEL: 01 46 07 83 12
197 RUE DU FBG. ST.DENIS, 75010 PARIS
Metro: La Chapelle
Gare du Nord

www.padippakam.com

# புகலிடத்தில் தாய்மொழிப் போதனை: தவறுகள், குறைபாடுகள், முரண்பாடுகள்

அழகு குணசீலன்

"பாடத்திட்டம், கற்பித்தல் முறை, ஆசிரியர்களின் தகுதி, சுற்றாடல் - சமூக உறவு, தகுதிகாண் முறைகள், போட்டிகள் என்பனவற்றில் உள்ள தவறுகள், குறைபாடுகள், முரண்பாடுகள் நோக்கி புகலிட சமூகவியலாளர்களின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும்."

தமிழர்கள் அகதிகளாகப் புகலிடம் கோரியுள்ள பல நாடுகளில் பல்கலைக்கழக புலமைப் பரிசில்களைப் பெற்றும், உறவினர்களின் அனுசரணையுடனும், உயர்தொழில் வாய்ப்புகளைப் பெற்றும் ஏற்கனவே குடிபெயர்ந்து வாழும் தமிழர்கள் தமிழ்மொழியையும் தமிழ்க்கலைகளையும் இழிசனர் வழக்காகவும், தமிழ்மொழி பேசுவோரையும் தமிழை நேசிப்போரையும் இழிசனர்களாகவும் கருதினர். இந்தத் தமிழ்க் கனவான்கள்(!) தங்களைத் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்பட்டனர்.

ஆனால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட திசைதிருப்பங்களும், பேரினவாதத்தின் அரச பயங்கரவாதமும் தமிழ் மக்களில் குறிப்பிட்ட தொகையினரை அகதிகளாக புலம்பெயரச் செய்தன. இவர்கள் மேற்குறிப்பிட்ட கனவான்களிலிருந்தும் பெரிதும் வேறுபட்ட சமூக நோக்குடையவர்களாக இருந்தார்கள். தாம் சார்ந்த தேசத்தையும், மக்களையும் நேசிப்பவர்களாக இருந்தார்கள்.

தமது தாய்மொழியான தமிழையும், அதனோடு இணைந்த கலைகளையும், கலாசாரங்களையும் பாதுகாப்பவர்களாக இருந்தனர். இவர்கள் தமிழைத் தவிர மற்றொரு பிறமொழியைத் தெரியாதவர்களாக இருந்ததும், இவர்கள் பெரிதும் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகள் பலவும் ஆங்கிலமொழி நாடுகளாக இல்லாதிருந்தமையும், இவர்களின் வர்க்கம் சார்ந்த குணாம்சமும் இதற்குக் காரணமாக இருக்கமுடியும்.

இவர்களின் இந்தக் குணாம்சம் காரணமாகவே இன்று தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு நாடுகளிலும் தமிழ்ச் சிறார்களுக்கான தாய்மொழி வகுப் புகள் நடாத்தப்படுகின்றன. இந்த வகுப்புகள் அரசியல் சார்ந்த/சாராத அமைப்புக்களாலும், தனிப்பட்டவர்க ளாலும் நடாத்தப்பட்டு வருகின்றன. இங்கு இருக்கின்ற 'ஆபத்து' என்னவென்றால் ஆரம்ப, தாய்மொழிப் போதனையொன்றைப் புகட்டுவதற்குரிய அடிப்படை அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்படாமையாகும்.

எந்தவொரு குழந்தைக்குமான ஆரம்பக் கல்வி அதன் தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்ற கல்வியியல் உளவியலாளர்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் ஆரம்பக் கல்வியை தாய்மொழியில் கற்கும் வாய்ப்பு எமது பிள்ளைகளுக்கு இல்லாததினால் நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியை நாம் வாழும் நாட்டு மொழியில் போதிக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

அதேவேளை, தாய்மொழியான தமிழ்மொழியையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. அந்த வாய்ப்புகள் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமானால், தமிழ்மொழி போதனை சரியான அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டுமானால், பின்வரும் விடயங்களில் கவனம் அவசியம்.

www.padippakam.com

- பாடத்திட்டம்
- கற்பித்தல் முறை
- ஆசிரியர் குழாமின் தகுதி
- சுற்றாடலும் சமூக உறவும்
- பரீட்சைகள் தகுதிகாண் முறைகள், போட்டிகள்

தாய்மொழிப் போதனைக்கான பாடத்திட்டம் ஒன்று ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வகுக்கப் படும்போது, ஒரு பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தினை விடவும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் இதுதான் எமது பிள்ளைகளின் தாய்மொழிப் போதனையின் அத்திவாரம். அவர்கள் தாம் வாழும் சூழலையும், வாழ்வியலினையும் விளங்கிக்கொள்வதன் ஆரம்பம். பிள்ளைகளின் வயது, அவர்களின் உடல், உள வளர்ச்சி என்பனவும் கவனத்தில் கொள்ளப்படல் அவசியம்.

ஆனால் புகலிடத்தில் தாய்மொழிப் போதனையில் பயன்படுத்தப்படுகின்ற பாடத்திட்டம் எமது எதிர்பார்ப் புகளுக்கு எதிர்மாறானதாக அமைந்துள்ளது. புகலிட வாழ்வியல் சூழல் புறக்கணிக்கப்படுவதுடன், பிள் ளைகள் தமது வாழ்க்கைச் சூழலோடு இணையாத கற்பனைச் சூழலொன்றை தம்முன் நிறுத்திக் கற்கவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இது எமது பிள்ளைகளுக்கு நாம் ஏற்படுத்துகின்ற ஒரு சுமையாக அமைந்துவிடு கின்றது.

உதாரணமாக 'மாட்டுவண்டி' ஒன்று பற்றிய பிர மையை பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவதை விடவும், குதிரை வண்டி பற்றிப் போதிப்பது அவர்களுக்கு இலகு வானதாக இருக்கும். பின்னர் அவர்களின் உள்வாங்கும் தன்மையைப் பொறுத்து மாட்டுவண்டி பற்றி ஒப்பீட்டு ரீதியில் விளக்கமளிக்க முடியும்.

அதுபோன்றே மரமுந்திரிகைப் பழம் பற்றிப் போதிப் பதை விடவும், புகலிட வாழ்வியல் சூழலிலுள்ள அப் பிள், திராட்சைப் பழம் என்பன பற்றிக் குறிப்பிடுவது இலகுவாக பிள்ளைகளால் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். புகலிடநாட்டுப் பாடசாலைகளில் அந்நாட்டுப் பிள்ளைகளுக்கு அவர்கள் தமது தாய் மொழியைப் புகட்ட அந்நியச் சூழல் விடயங்களைப் புகுத்துவதில்லை என்பதை எம்மில் எத்தனை பேர் விளங்கிக்கொள்கிறோம். ஜேர்மன், ஆங்கில, இத்தாலி, பிரெஞ்சு மொழிப் பாடசாலைகளில் மாட்டு வண்டி பற்றி யும், மாம்பழம் பற்றியும், பொன்னாங்காணி, வல்லாரை பற்றியும் அவர்கள் தமது பாடத்திட்டத்தில் சேர்க்க வில்லை. ஏனெனில் அவை அவர்களின் வாழ்வியலோடு இணையாத அந்நியமானவை.

வாழ்வியல் சூழல் நிராகரிக்கப்படுவதுடன் மாத் திரமன்றி ஒரு முரண்பாட்டையும் இந்த உதாரணம் காட்டும்.

"பாலா எழும்பு
பல் துலக்கு
முகம் கழுவு
உணவு உண்
பாடசாலைக்குச் செல்"

இந்த வார்த்தைகள் இலங்கைப் பாடத்திட்டத்தில், இலங்கைச் சூழலுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு பல தசாப் தங்களாகப் பழக்கப்பட்டு புளித்துப் போனவை. அது மாத்திரமல்ல ஒரு தவறான கருத்தும் எமது இளம் சந்ததியினருக்கு ஊட்டப்படுகிறது. அதாவது சாப்பிட முன்னர்தான் பல் துலக்க வேண்டும் என்ற தவறான கல்வியூட்டல் இங்கு இடம்பெறுகிறது. ஆனால் சாப்பிட்ட பின்னர்தான் பல் துலக்க வேண்டும் என்ற வைத்திய ரீதியான உண்மை மறுக்கப்படுகிறது. புகலிடத்தில் தாய்மொழி கற்பிக்கப்படுகின்ற பாடத்திட்டத்தில் இரவுப் படுக்கைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் என்ற உண்மையை எங்குமே காண முடியவில்லை.

இன்னும் இலங்கை, இந்திய நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்ட நூல்களையே நாம் இங்கு பயன்படுத் துகிறோம். சில அமைப்புக்கள் இவற்றில் சில மாற் றங்களைச் செய்துள்ளன. அதுகூட வெறுமனே சில பிறமொழிச் சொற்களைத் தவிர்ப்பதாக மட்டுமே அமைந்துள்ளன. அங்கு 'தனித் தமிழ்' மேலோங்குகின் றதேயன்றி உண்மையும், வாழ்வியல் யதார்த்தமும், சூழலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அடுத்தது கற்பித்தல் முறை. எமது தமிழ் ஆசிரி யர்கள் எவ்வாறு கற்பிக்கின்றார்கள் என்பதை ஒருசில வகுப்புகளில் அவதானித்தீர்களானால் இது புரியும். பெரும்பாலான ஆசிரியர்கள் தாம் 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்னர் எவ்வாறு ஆரம்ப வகுப்புக் களில் தமிழைக் கற்றார்களோ அதிலிருந்து எந்த மாற்றமுமின்றிக் கற்பிக்கின்றனர். புகலிடச் சூழலில் எவ்வளவோ முன்மாதிரியான முறைகள் உள்ளன. இவற்றைப் பற்றி எந்த ஆசிரியர்களும் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

அவர்களால் தாமாகவே ஒரு பொருத்தமான கற் பித்தல் முறையைத் தேர்ந்தெடுக்க முடியாமல் உள் ளது. அதற்கு அவர்களின் உளவியல்ரீதியான தகுதி பெரும் தடையாக உள்ளது. மேலும் மனப்பாடம் செய் தலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றதேயன்றி, பிள்ளைகள் குறிப்பிட்ட விடயத்தை விளங்கிக் கொள் வதற்கு முக்கியத்துவம் இல்லை. புத்தகப் பூச்சிகளை உருவாக்குகின்ற பணி புகலிடங்கள்வரை தொடர்கின் றதேயன்றி செய்முறைப் பயிற்சிகள், மாணவர்கள் தமது சுய ஆளுமையை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன. பாடத்திட்டத்தோடு ஒட்டிய கள அனுபவங்கள் கற்பித்தல் முறையில் கருத்தில் எடுக் கப்பட வேண்டும். இயற்கை பற்றி, பருவகாலங்கள் பற்றி அல்லது சந்தை, போக்குவரத்துப் போன்ற விட யங்கள் பற்றிக் கற்பிக்கும்போது மாணவர்களைக் குறிப் பிட்ட பகுதிக்கு அழைத்துச்சென்று அவர்களின் கல்வி க்கு ஊக்கம் அளிக்கப்படவேண்டும். புகலிடத்தில் எத் தனை தாய்மொழிப் பாடசாலைகளில் இது இடம்பெறு கிறது? மொத்தமாகப் பார்த்தால் தவறுகளும் குறை பாடுகளும் முரண்பாடுகளும் நிறைந்த தாய்மொழிப் போதனை எமது பிள்ளைகளுக்கு ஒரு சலிப்புத்தன் மையை ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகிறது. பிள்ளை

www.padippakam.com

களின் ஆர்வம் ஊக்குவிக்கப்படுவதற்குப் பதிலாக, இந்தத் தவறுகளினால் மழுங்கடிக்கப்படுகிறது.

புகலிடத்தில் தாய்மொழியைப் போதனை போதிக்கின்ற எமது ஆசிரியர்களின் தகுதிதான் என்ன? அவர்கள் குறிப்பிட்ட பாடசாலையை நடத்தும் அமைப்பின் தீவிர ஆதரவாளராக இருக்க வேண்டும். அந்த அமைப்பின் முடிவுகளோடு தலையசைக்க வேண்டும். தனிப்பட்ட வகையில் வகுப்பு நடத்துபவராக இருந்தால் கொஞ்சம் வியாபார தந்திரமும் விளம்பர உத்தியும் இருந்தால் போதும். உண்மையிலேயே இலங்கையில் பின்தங்கிய கிராமங்களில் காந்தியம், சர்வோதயம், றெட்பானா, நோராட் போன்ற அமைப்புகள் பாலர் பாடசாலைகளை நடாத்தியது போன்ற ஒரு நிலையே இங்கும் காணப்படுகின்றது. எந்தவொரு ஒருங்கிணைந்த பாடத்திட்டமும் இந்த அமைப்புகளிடம் இருக்கவில்லை. கிடைக்கின்ற நிதியுதவியைச் செலவாகக் காட்ட மாத்திரமே இவ்வாறான பாலர் பாடசாலைகள் உதவின. புகலிடத்தில் எமது பிள்ளைகளுக்குக் கிடைக்கின்ற தாய்மொழிப் போதனையின் அளவும் தரமும் என்ன என்பது குறித்து இந்த ஆசிரியர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எமது ஆசிரியர்களின் தரத்தைக் காட்டும் இரு உண்மைச் சம்பவங்கள் வருமாறு:

இரண்டாம் வகுப்பில் உயிர்மெய் எழுத்துப் படிப்பித்த ஆசிரியை,

உயிர் எழுத்து + மெய் எழுத்து
= உயிர்மெய் எழுத்து
என்று எழுதினார். இதற்கு
உதாரணம் எழுதினார் இப்படி: அ + க் = க

உயிரும் மெய்யும் சேர்ந்தால் உயிர்மெய் என்ற மனப்பாடத்தில் எழுத்துக்களை ஒழுங்கில் எழுதி நிறுவினார் அவர். பெற்றோர்கள் இது பிழை என்று சொன்னபோது, உங்கள் பிள்ளைகள் தவறாகப் பார்த்து எழுதிவிட்டார்கள் என்றார் ஆசிரியர். வகுப்பிற்குச் சென்ற 14 பிள்ளைகளுமா அப்படி என்று கேட்டார்கள் பெற்றோர்கள். இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியவரின் பிள்ளையின் தாய்மொழிப் போதனை அத்தோடு முடிந்தது.

இன்னொரு விடயம். 'அரண்மனை' என்பதை 'அரன்மனை' என்று எழுதினார் ஆசிரியை. அந்த மாணவியோ, இல்லை! மூன்று சுழி 'ண்'தான் வரும் என்று சொன்னார். ஆசிரியை ஏற்கவில்லை. மாணவியின் பெற்றோர் இந்திய சஞ்சிகை ஒன்றுடன் சென்று அங்கு 'அரண்மனை' என்று எழுதப்பட்டிருந்த பக்கமொன்றைப் புரட்டிக் காட்டினர். ஆசிரியை கேட்டால்தானே. விருப்பம் இல்லாவிட்டால் உங்கள் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போங்கள் என்றார் பெற்றோரிடம். 'அரன்மனை' என்பதை ஏற்றுக்கொண்ட பிள்ளைகள் தொடர்ந்து தாய்மொழி பயில்கிறார்கள். 'அரண்மனை'தான் சரியென்று சுட்டிக்காட்டிய அந்த 6ஆம் வகுப்பு மாணவி இன்னொரு ஆசிரியையிடம் வீட்டில் சென்று தமிழ் கற்கிறார்.

இந்த மிகச் சிறிய விடயங்களில்கூட தெளிவில்லாமல் புகலிடத் தமிழ் ஆசிரியர்கள் உள்ளனர் என்பது ஒருபுறம் இருக்க, தாம் செய்த தவறுகளை நியாயப்படுத்த அவர்கள் எடுக்கும் முயற்சிதான் மேலும் வேடிக்கையாக உள்ளது. பாவம் எமது தமிழ்ச் சிறார்கள். இவற்றையெல்லாம் பணம் கொடுத்துப் படிக்க வேண்டிய நிலை அவர்களுக்கு.

ஆசிரியர்களின் தகுதி தொடர்பாக இன்னொரு விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டும். தமிழ் மொழியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தாம் வாழும் புகலிட நாட்டின் மொழியில் ஓரளவுக்காவது தேர்ச்சி உடையவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ளக் கூடியதாகவும், அப்பாடசாலைகளில் மொழிப்போதனை எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதனையும் விளங்கிக்கொள்ளவும் முடியும். எனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கும் எம் ஆசிரியர்களுக்கு இது சமர்ப்பணம்.

சுற்றாடலுக்கும், சமூக உறவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் புகலடைந்துள்ள நாம் சுற்றாடலுக்கும் சமூக உறவுக்கும் எவ்வளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். எமது பிள்ளைகள் இரட்டைச் சுற்றாடலில் வாழ்கின்றனர். அந்நிய மொழி, அந்நிய கலாசாரம், அந்நிய பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் கொண்டதும், மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டதுமான பாடசாலைச் சூழல் ஒன்று. மற்றையது, தாய்மொழி, சொந்தக் கலாசாரம், சொந்தப் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் கொண்டதும், திட்டமிடப்படாதவாறு அமைக்கப்பட்டதுமான வீட்டுச் சூழல்.

இந்த இரட்டைச் சூழலும் கவனத்திற்கொள்ளப்பட்டே பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் புகலிடத்தில் எமது தமிழ்ச் சிறார்களின் தாய்மொழிப் பாடத்திட்டமானது முற்றுமுழுக்க தமிழ்க் கலாசாரத்தினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டிருப்பது மிகப் பெரிய குறைபாடாகும். இரு சுற்றாடல்களுக்கும் இடையே சமநிலையைப் பேணுகின்ற வகையில் தாய்மொழிப் போதனை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான தாய்மொழிப் போதனை மூலம் மேலும் வாழ்வியல் சூழல் உண்மைகளை எமது பிள்ளைகள் உள்வாங்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

சமூக உறவு என்கின்ற விடயம் எமது பாரம்பரியக் கல்விமுறையில் சிறிதுகூடக் கவனத்திற்கொள்ளப்படுவதில்லை. சிலவேளைகளில் மிகவும் அரிதாகக் கருத்தில்கொள்ளப்பட்டாலும் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன. புகலிடத்தில் எமது தாய்மொழி வகுப்புக்கள் ஒரு குருகுல, திண்ணைப் பள்ளிக்கூட, சமூக உறவின் ஒரு பகுதியாகவே தென்படுகிறது. ஒரு கையில் தடியும் மறுகையில் புத்தகமும் ஏந்திப் பாடம் நடாத்தும் வழமையான தமிழ் ஆசிரியர்களையே இங்கும் காணமுடிகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு அடங்கி, ஒடுங்கி, ஜனநாயம் மறுக்கப்பட்டு

www.padippakam.com

பாடங்களைக் கற்கவேண்டிய நிலை.

ஆனால் புகலிடத்திலுள்ள அந்நியமொழிப் பாடசாலைகளில் மிகவும் சுதந்திரமான வகுப்புச் சூழலும், ஆசிரியர்-மாணவர் சமூக உறவும் நிலவுகிறது. மாணவர்கள் பற்றிய மதிப்பீட்டின்போது சமூக உறவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. குறிப்பிட்ட மாணவன் அல்லது மாணவி ஆசிரியரோடு உள்ள உறவு, சக மாணவர்களோடு உள்ள உறவு போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஆனால் தாய்மொழி வகுப்பு மதிப்பீடோ மனனம் செய்யப்பட்ட 'மந்திரத்தை' மாணவர் வாய்ப்பாடமாக ஒப்புவித்தால் சரி என்ற நிலையிலேயே உள்ளது. மாணவனின் சமூக உறவு, விளங்கிக்கொள்ளும் சுயஆற்றல், மற்றைய விடயங்களில் அவர் காட்டும் ஆர்வம் என்பன பற்றி எந்தக் கட்டத்திலும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

வீட்டுச் சூழலில் பெறமுடியாதுள்ள சுற்றாடல், சமூக உறவு அம்சங்கள் தாய்மொழிப் பாடசாலைகளில் கருத்தில் கொள்ளப்படுவதன் மூலம் எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குத் தாய்மொழிப் பாடசாலைகள் உதவ முடியும். தாய்மொழிப் பாடசாலைகளில் நடத்தப்படுகின்ற பரீட்சைகள், தகுதிகாண் முறைகள், மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் என்பன பெரும் கேலிக்கூத்தாக அமைந்து விடுகின்றன. மிகவும் சிறியளவிலான ஆசிரியர்களே ஓரளவுக்குப் பரீட்சைகளையும், தகுதிகாண் முறைகளையும் புகலிட நாடுகளின் முறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ள விரும்புகின்றனர்.

இலங்கையில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கைக்கொள்ளப்படுகின்ற மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் பரீட்சைகளே இங்கும் அதிகம் நடாத்தப்படுகின்றன. அதிகமானவர்கள் இன்னும் 100க்கு புள்ளியிடுகின்ற முறையையே பின்பற்றுகின்றனர். இதில் 50 புள்ளிகளைப் பெற்றால் க.பொ.த. சாதாரண தரத்தில் 'விசேட சித்தி' பெற்ற இலங்கைப் பழக்கத்தில் அவர்கள் தமது குழந்தைகள் மீதும் திருப்தியடைகிறார்கள். இங்கு 50 புள்ளிகளைப் பெறுகின்ற பிள்ளை கற்பிக்கப்பட்டதில் அரைவாசியைத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது, மிகுதி அரைவாசி விளங்கிக் கொள்ளப்படவில்லை என்ற உண்மை பலருக்கு தெரியாமல் போய்விடுகிறது. புகலிட அந்நியமொழிப் பாடசாலைகளில் ஒவ்வொரு விடயம் கற்பித்து முடிந்த பின்னும் அந்தந்தப் பிரிவில் பரீட்சை வைக்கப்பட்டு அந்தப் பெறுபேறுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அதுமாத்திரமன்றி சுவிற்சர்லாந்தில் 'சுயமதிப்பீடு' என்று ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதில் ஒரேமாதிரியான வினாக்கொத்துக்கள் மாணவர், பெற்றோர், ஆசிரியர் ஆகியோருக்கு வழங்கப்படும். இதில் அவர்கள் சுயமாக மதிப்பீடு செய்ய வேண்டும். இந்த மூன்று பிரிவினரும் செய்த மதிப்பீட்டின் அடிப்படையில் பிள்ளையின் நிலை சராசரியாக மதிப்பிடப்படுகின்றது. இதில் பிள்ளைகளுக்குத் தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்யவும், பெற்றோருக்கு தமது பிள்ளைகளை மதிப்பீடு செய்யவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் நடாத்தப்படுகின்ற போட்டிகள் மனப்பாடத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், தேவார திருவாசகங்கள் என்று இது தொடர்கிறது. எந்த அர்த்தமும் புரியாது மூன்று வயதுக் குழந்தையும் இவற்றை மனனம் செய்து ஒப்புவிக்கிறது. இன்று புகலிடத்தில் எத்தனை திருஞானசம்பந்தர்கள் என்று கணக்கிடுவதே கஷ்டம். மேலும் போட்டிகளுக்கு வழங்கப்படும் தலைப்புகள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் குறிப்பிட்ட நிலைப்பாட்டை நியாயப்படுத்தும், பிரச்சாரப்படுத்தும் தலைப்புக்களாக அல்லது யாழ் இந்து வேளாளர் தனித்துவச் சிறப்புக்களை முதன்மைப்படுத்துவதாக அமைந்து விடுகின்றன.

சமூக, பொருளாதார, அரசியல்ரீதியில் பெரும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் வாழுகின்ற எமது குழந்தைகள் சர்வதேச விவகாரங்கள் பற்றி, தாம் வாழும் புகலிடச் சூழல் நிகழ்வுகள் பற்றி, நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகள், முன்னேற்றங்கள் பற்றி தமது அறிவை வளர்த்துக் கொள்வதற்குப் பதிலாக குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடுகின்ற பணியையே தொடர்ந்தும் செய்யுமாறு பெற்றோர்களாலும், தாய்மொழிப் போதனை நிலைய நிர்வாகத்தினர், ஆசிரியர்களாலும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஒருவகையில் சிறார்கள் தமது விருப்பத்திற்கேற்ப தெரிவை மேற்கொள்ள முடியாது, அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெற்றோரின் போலிக் கௌரவங்களைப் பாதுகாத்துக் கொள்ள, குழந்தைகள் தவறான போட்டிமுறை ஒன்றிற்குள் இழுக்கப்பட்டுள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து விலகி சிலர் தனியாக தாய்மொழி வகுப்புகளைச் சற்று வித்தியாசமாக நடாத்த முயற்சி செய்கின்றபோதும், அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. சற்று வித்தியாசமான கருத்தை முன் வைக்கும் ஒருவருக்கு அரசியல் ரீதியில் வேறு பட்டங்கள் கட்டப்பட்டுவிடுகின்றன. இந்த நிலையில் பிள்ளைகளின் கல்வி, அவர்களின் எதிர்காலம் என்பவற்றை விடவும் அரசியல் சார்புத்தன்மையே முக்கிய காரணியாக அமைந்து விடுகின்றது. புகலிடத்தில் தாய்மொழிக் கல்வியூட்டலில் தமிழ்ப் பிள்ளைகள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் அவர்களின் தாய்மொழிப் போதனையில் உள்ள தவறுகள், முரண்பாடுகள் என்பவற்றின் ஒட்டுமொத்தமான வெளிப்பாடாக உள்ளது.

அந்நிய நாடுகளில் வாழுகின்ற கல்வியியலாளர்கள், கல்விசார் உளவியலாளர்கள், சமூக முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சரியான தாய்மொழிப் போதனைத் திட்டமொன்றை உருவாக்க முன்வரவேண்டும். அத்திட்டம் மரபுரீதியாக எம் கல்வி முறையில் உள்ள போலித் தன்மைகளையும், தவறான கருத்துக்களையும் சிதைத்து புகலிட வாழ்வியல் சூழலுக்கும், புகலிட நாட்டுக் கல்விக் கொள்கைக்கும் இணைவாக அமைந்து எமது பிள்ளைகளின் இரட்டை வாழ்க்கை முறையினை நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும். ❑

www.padippakam.com



# புதுமண்ணில் புதிய (தமிழ்) தலைமுறை

கி. செ. துரை

ஈழத்தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் புலம் பெயரத் தொடங்கியது 1983 யூலைக் கலவரத்திற்குப் பின்னரே. இன்று ஐரோப்பாக் கண்டம் உட்பட ஏனைய கண்டங்களிலும் ஈழத்தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகிறார்கள். தமிழர்கள் புலம்பெயரத் தொடங்கிய வரலாற்றை மேலும் பின்னோக்கிப் பார்த்தால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறையின் தேவையைப் பூர்த்திசெய்ய, பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் ஒப்பந்த அடிப்ப டையில் தொழிலாளராகத் தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்றிருக்கிறார்கள். அந்தமான், நிக்கோபார், பிஜி, கயானா, மொறீசியஸ், அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, ஹொங்கொங், சீனா, இலங்கையில் மலையகம் என்று இப்பட்டியல் நீண்டு செல்கிறது.

மேற்படி தமிழர்கள் பொருளாதாரக் காரணத்தை முன்னிட்டும், பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றியும் அழைத்துச் செல்லப்பட்டதாக வரலாற்றாளர் கூறுவர். குடியேறிய நாடுகளில் இவர்கள் தமது வாழ்க்கையை மட்டுமல்ல, அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் பெரும் சிரமப்பட்டிருக்கிறார்கள். புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் போலவே இவர்களும் இரண்டாவது தலைமுறைப் பிரச்சினைகளைச் சந்தித்தனர். தற்போது அதையும் தாண்டி, அந்தந்த நாடுகளின் சூழலுக்குள்ளேயே கரைந்தும், எஞ்சியுள்ள ஒருசில அடையாளங்களோடு தனித்துவத்தைக் காப்பாற்றப் போராடியும் வருகின்றனர். இது போன்ற பின்னணி புலம்பெயர்ந்த ஈழத்தமிழரிடையே எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதே இன்று நம்மிடையே உள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் புலம்பெயர்ந்த இரண்டாவது தலைமுறையினரின் பிரச்சினைகள் இந்தக் கேள்விக்கு ஆரோக்கியமான விடையைத் தேடவேண்டிய அவசியத்தை முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக வலியுறுத்துவதாயுள்ளது.

இங்கே குறிப்பிடப்படும் இரண்டாவது தலைமுறை இளைஞர்கள் இருமொழிக் கலாசாரத்திற்குள்ளும் வாழ வேண்டிய கட்டாயம் உள்ளவர்கள். எப்பொழுதும் இரண்டு கலாசாரங்களைத் தழுவியபடியே ஒரு வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதென்பது மிகக் கடினமான பணியாகும். இரு கலாசாரங்களிலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையும், நீக்கப்பட வேண்டியவையும் உள்ளன. இளைஞரிடையே இது குறித்துத் தெளிவான வரையறையொன்றை இதுவரை யாரும் எடுத்துரைக்கவில்லை. இதனால் எங்கு கால்பதித்தாலும் அது சமூகப் பார்வையில் குறைபாடுடையதாகவே காணப்படுகிறது. எது சரி, எது பிழை என்ற கேள்விகளுக்குத் தெளிவான பதில்கள் இல்லாத நிலையில் எதைச் செய்வதென்பதே இளைஞரிடையில் முக்கிய கேள்வியாக நிற்கிறது. கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப நம்மை மாற்றித் தொழில்புரியவேண்டிய சூழலில் இத்தகைய விடையற்ற வாழ்வால் பல்வேறு சிக்கல்களும் விரக்தியுமே நாளுக்கு நாள் பெருகிச் செல்கின்றன. இவை இளைய தலைமுறையினரிடையே மிகக் கடுமையான போக்குகளை விதைத்துவிடுகின்றன.

புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையினர் வரையறுக்கப்பட்டதொரு வாழ்க்கைக்குள்ளால் வெளிவந்தவர்கள். இங்கும் அதையே முடிந்தளவு கடைப்பிடிக்க முயல்பவர்கள். ஆனால் இரண்டாவது தலைமுறையினர் அத்தகைய வாழ்க்கைப் படிமுறைகளை அனுபவரீதியாக அறிந்து கொண்டவர்களல்ல. இவர்கள் தினசரி வாழ்வில் பெரும்பொழுதுகளை டெனிஸ் வகுப்பறையிலும், டெனிஸ் நண்பர்களுடனும் கழிப்பவர்களாயுள்ளனர். எனவேதான் இவர்களிடையே தமிழ் வாழ்வியல்முறை வெகுவாக அந்நியப்பட்டுப் போயுள்ளது. ஐரோப்பிய வாழ்முறைக்குள் நின்று, முதலாவது தலைமுறையினரின் வாழ்வை மேம்போக்காக நுனிப்புல் மேய்ந்து செல்வதற்கே இவர்களிடம் வாய்ப்புக்கள் உள்ளன. அதில் மறைந்திருக்கும் காரண காரியங்கள் பற்றிய விளக்க

www.padippakam.com

மின்மை, அல்லது விளக்கப்படாமை அவர்களிடையே கடுமையான கேள்விகளையும் முன்வைப்பதாயுள்ளது. மேலும் அவர்களின் பல கேள்விகளுக்கு சமூகத்திடமிருந்து சரியான பதில்களும் கிடைப்பதில்லை. இதனால் முதலாவது தலைமுறையினருடன் தம்மை மனமொன்றி நிலைநிறுத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இவ்விதம் ஒருபக்கத்தில் ஏற்படும் பாதகத்தன்மையின் தாக்கத்தால் மறுபக்கமாக உள்ள டெனிஸ் சமுதாயத்திலும் இவர்கள் தம்மைச் சரிவர நிலைநிறுத்திக் கொள்வது கடினமாகிறது. எனவேதான் தமிழ் மக்களுடன் இயைபாக்கம்டையாது ஒதுங்கிப்போவோரும், டெனிஸ் சமுதாயத்துடன் இயைபாக்கமடையாது ஒதுங்கிப்போவோரும் இறுதியில் ஒரு குழுவாகி நிற்க வேண்டி நேரிடுகிறது. சந்தர்ப்பமின்மை, இரு சமூகங்களாலுமே அவர்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமை போன்ற காரணங்கள் சமூகத்தின்மீதான வெறுப்பாகத் திரள் வடையவும் காரணமாகிறது.

இதற்கு யார் எவ்விதத்தில் பொறுப்பேற்கலாமென்பதை ஒரு சிறிய உதாரணத்துடன் சேர்த்தே விளக்கிச் செல்ல முடியும். ஒரு மரத்தின் பழங்கள் புளிப்புடையவையாக இருந்தால் அதற்குரிய பௌதீக நிகழ்வுகள் வெறுமனே பழத்திற்குள் மட்டும் நிகழ்வதில்லை. காலநிலை, சூழல், மண், வேர் போன்றவற்றிலிருந்தே தொழிற்பட்டு வந்திருப்பதைப் பழங்களைச் சுவைப்போர் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்த உதாரணத்தைப் பிள்ளை வளர்ப்போடு பொருத்திப் பார்த்தல் வேண்டும். இதில் பிள்ளைகள் பழங்கள் என்றால், பெற்றோர் மரங்களாகவும், சமூகம் நிலமாகவும் அமையும். ஆகவேதான் இளைய தலை முறையினரின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தனியே பிள்ளைகளிடமே தேடுவது தவறாகும்.

"உங்கள் பிள்ளை இப்போது ஏழாவது வகுப்பா? அப்படியானால் பின்வரும் புத்தகங்களில் உள்ள விடயங்களை வாசித்து வையுங்கள்" என்று ஓர் அட்டவணையை வெளியிட்டிருந்தது டென்மார்க்கில் வெளிவரும் ஆசிரியர் சங்கத்தின் மாத இதழ். இது பிள்ளைகளின் படிப்போடு டெனிஸ் பெற்றோர் கொண்டிருக்கவேண்டிய கட்டாயமான தொடர்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் செய்தியாகும். ஆனால் தமிழ்ப் பெற்றோரில் பலர் இலங்கையில் உள்ள ஆசிரியர் மாணவர் உறவு நிலை எண்ணங்களிலிருந்தே விடுபடவில்லை. ஐரோப்பாவில் உள்ள ஆசிரியர் மாணவர் உறவு இலங்கையுடன் ஒப்பிட முடியாததும் அடிதலையாக வேறுபட்டதுமாகும். இங்கோ பெற்றோரின் ஈடுபாடு மிகமிக அதிகம் தேவைப்படுகிறது. வெறுமனே, "படி! படி!" என்று கூறும் உதவிசெய்ய முடியாத உபதேசங்களும் வற்புறுத்தல்களும் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோரின் பங்கை மிகத்தொலைவிற்கு எடுத்துச் சென்றிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். அதே வேளை சாதாரண வாழ்விலேயே காலூன்ற முடியாது தவிக்கும் பெற்றோரை ஐரோப்பியப் பெற்றோரின் நிலைக்கு உடனடியாக வர வேண்டுமென எதிர்பார்ப்பதும் முடியாத காரியம்.

எனினும் பெற்றோர் நிலையில் உள்ளோர் இதற்குச் சிறிதளவாவது தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்களா என்பது கேட்கப்படவேண்டிய கேள்வியாகும். பெற்றோர் தமது பொழுதுபோக்கிற்காக இங்கு பல ஏற்பாடுகளைச் செய்து வைத்துள்ளனர். வேலை முடிந்த பின்பும், வாரவிடுமுறைகளிலும் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் இவர்கள் பிள்ளைகளுக்காகச் செலவிடும் நேரம் மிக மிகச் சொற்பமாகவே இருக்கிறது. இதனால் தமது பிள்ளைகள் கூறும் தகவல்களைச் சரிவரச் சீர்தூக்கிப்பார்க்கப் பலரால் முடிவதில்லை. இதன்மூலம் பிள்ளைகளுக்கு கண்காணிப்பற்ற பொழுதுகளைத் தாராளமாக வழங்கிவிடுகிறார்கள். பிள்ளைகள்மீது கடுமையான பாசம் கொண்ட இப்பெற்றோர் தமது மூன்றாம் உலகம்சார் பற்றாக்குறைப் பொருளாதாரத்தால் சிதைக்கப்பட்ட இளமைக்காலத்தை மறக்கவில்லை. இதே அனுபவங்களைத் தமது பிள்ளைகளும் அனுபவித்தல்கூடாதென்ற எண்ணத்தில் விலைகூடிய பொருட்களை எல்லாம் மனம்போல வாங்கிக் கொடுத்து, தம்மளவில் திருப்தியடைபவர் பலர். பிள்ளைகளிடையே வர வேண்டிய தேடல், சிரமம்பட்டு முன்னேற வேண்டிய அவசியம் போன்ற இளமைக்காலத்தில் வரவேண்டிய முனைப்பான எண்ணங்கள் யாவும் இவ்விதம் பெற்றோர் மூலம் கிடைக்கும் முயற்சியற்ற வசதிகளால் சிதைக்கப்படுகின்றன. இதனால், பெற்றோரின் எதிர்பார்ப்பின்படி தம்மைப் பூரணமாகத் தகுதிப்படுத்திக்கொள்ளப் பல இளைஞர்களால் முடிவதில்லை. அவர்களுக்கு பெற்றோர்கள் வழங்க விரும்பும் கூடிய மதிப்பெண்ணையும், சிறந்த வேலைவாய்ப்புக்களையும் தரவேண்டுமென்ற ஆவலை உண்மையில் வெளியே உள்ள ஐரோப்பியச் சமூகத்திடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவேதான் போட்டிச் சந்தை நிலவும் வெளிவாழ்வு இவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துவிடுகிறது. இளைஞர்களுக்கு அதிகமான வசதிகளைக் கொடுத்து, மாணவப் பருவத்தின் சுயதிறனைச் சீரழித்தல் தவறென்பதற்காகவே இங்கு வழங்கப்படும் மாணவர்களுக்கான அரசின் உதவிப்பணம் மிகக்குறைவாக உள்ளதையும், இங்குள்ள டெனிஸ் மாணவர் பெரும் சிரமத்துடன் கடனெடுத்துப் படிப்பதையும் அவதானித்தல் வேண்டும். "கடின முயற்சியே நல்வாழ்வின் அடித்தளம்" என்ற விளக்கத்தை இந்தப் பற்றாக்குறையான பொருளாதார உதவிமூலம் ஏற்படுத்த முயல்கிறது இங்குள்ள அரசு.

இத்தோடு மேலும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய இன்னொரு விடயமும் உள்ளது. பெரும்பாலான இளைஞர்களால் தாய்மொழியான தமிழைப் பேசமுடிகிறது. ஆனால் அதுபோல வாசிக்கவோ, எழுதவோ முடிவதில்லை. தாய்மொழியை வாசித்து அதன் மூலம் பெறக்கூடிய அறிவைப் பெறும் வழி அடைபட்டுப் போயுள்ளது. இந்தவகையில் இவர்களிடையே தமிழ்வாழ்வு தொடர்பான கருத்தியலை வளர்க்கும் ஆசானுக்குரிய தலைமைப்பணியை அதிகமான இடங்களில் தமிழ்ச் சினிமாவே பொறுப்பேற்றிருக்கக் காண்கிறோம்.

www.padippakam.com

ஆகவேதான் தமிழ்ச்சினிமாக்களில் வரும் காட்சிகளின் அதே பிரதிபலிப்புக்கள் பல ஐரோப்பிய நாடுகளில் திடீர்திடீரென அரங்கேறுவதை நேரடியாகவே தரிசிக்கிறோம்.

புலம்பெயர் இளைஞர் பிரச்சினையில் தமிழ்ச் சினிமா முக்கியமான புள்ளியென்று கூறுவது கஷ்டமாக இருக்கலாம். தமிழ்ச்சினிமாவின் பங்கும் பணியும் பற்றி மேலும் பல செயற்பாட்டுரீதியான அணுகுமுறைகள் அவசியமாயுள்ளன. இலங்கை, இந்திய வாழ்க்கைச் சூழல் வேறு, ஐரோப்பிய வாழ்க்கைச் சூழல் வேறு. இதைக் கவனத்தில் கொண்டு புலம்பெயர் சூழலில் தமிழ்ச்சினிமா என்பதுபற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. தான் பிறந்த இனத்தின் வாழ்வும், வரலாறும் அறியாது; சமூகத்தின் நிஜமுகத்தை சந்தித்தறியாத நிலையிலுள்ள புலம்பெயர் பிள்ளையின் பழுதுபடாத உள்ளத்திலே சினிமா நடத்தும் ஈட்டிப் பாய்ச்சல் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. வன்முறைசார் தமிழ்ச்சினிமாக்களின் பெயரிலேயே இளைஞர்கள் தங்களைக் குழுமயப்படுத்திக் கொள்வது அவர்களிடையே சினிமா பெற்றுள்ள முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டப் போதுமானது. தமிழ்ச் சினிமா பெண்கள் மீது வைத்திருக்கும் பொதுவான பார்வை. மரணிப்பதற்காகவோ அல்லது சீரழிப்பதற்காகவோ படைக்கப்படும் எல்லாம் தெரிந்த கதாநாயகனின் சகோதரிப் பாத்திரம், சமூகத்தில் நடைபெறும் எந்தவொரு அநீதிக்கெதிராகவும் மக்கள் போராட்டம் தோன்றாது, கதாநாயகனின் வருகைக்காகக் காத்திருக்கும் கைகட்டிய பார்வையாளச் சமூகம், திருமணம்வரை கடும் முற்போக்குப் பேசி, திருமணத்தின் பின் சகல பிற்போக்குத்தனங்களையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளும் கதாநாயகி போன்ற பொதுவான செல்நெறியைக்கொண்ட சினிமாக்களைச் சிறுவர்களிடமும் சந்தைப்படுத்துவதானது இளைய தலைமுறையினரை ஆரோக்கியமாக வழிநடத்த உதவும் என்று வாதிட முடியவில்லை.

அடுத்து முக்கியமானது பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளைக் குழந்தை நிலையில் எப்படிப் பார்த்தார்களோ அவ்வாறே அவர்கள் இளம்பருவத்தை அடைந்த பின்னும் பார்ப்பதாகத் தெரிகிறது. வயதுகளுக்கேற்ப பிள்ளைகளின் பருவங்கள் மாறும். இதைப்புரிந்து, பெற்றோரும் தம் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே. எனினும் இந்த இடத்திற்கூட தாயக வாழ்வும், ஐரோப்பிய வாழ்வும் வேறுபடுகின்றன. ஐரோப்பிய உணவுத் திட்டமுறை பல பிள்ளைகளிடையே வயதுக்கு மீறிய வளர்ச்சியையும் ஏற்படுத்தி விடுவதுண்டு. எனவே விரைவான பருவமாற்றங்களால் உண்டாகும் தாக்கங்கள் இங்கு தீவிரத்தன்மை கொண்டனவாயுள்ளன. இதற்குத் தீர்வுகாண சமூகத்தில் தகுந்த ஏற்பாடுகள் எதுவும் இல்லை. ஐரோப்பிய மாணவர்கள் தமக்குரிய எதிர்ப்பாலாரின் நட்பை இளம்பருவத்திலேயே தயக்கமின்றித் தேடிக்கொள்கிறார்கள். இதற்குரிய ஏற்பாடுகளை ஆறாவது வகுப்பிலிருந்தே பாடசாலைகளில் கற்பித்தும்வருகிறார்கள். வருடாவருடம் பாடசாலைகளிலேயே "டிஸ்கோ" நடனம் ஏற்பாடு செய்யப்படுவதை இதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். ஆனால் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் இதற்கான வழிகள் தடைபட்டுப்போயுள்ளன. மேலும் பேச்சுத் திருமணங்களை உயர்வாக மதிக்கும் எண்ணம் தமிழரிடையே மறைந்துபோய்விடவில்லை. அதேவேளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியுமா என்றால் அதற்கும் வழியில்லை. சமூகம் வெளிப்படையாக ஒருமுகமும், ஆழ்மனதில் வேறுசில நீர்த்துப்போன விடயங்களைக் கட்டிக் காத்தும் வரும் முகமும் கொண்டிருப்பதால், பேச்சுத் திருமண முயற்சிகளைச் சமூகரீதியாக முன்னெடுத்தலும் இயலாத காரியமாக இருக்கிறது. இதுபோன்ற எண்ணற்ற குறைபாடுகளைப் புதைத்துவைத்தபடியே உறைந்துகிடக்கும் சமூகத்தில் இளைஞர்கள் பிரச்சினையென்பது அச்சமூகம் தன்னகத்தே கொண்டுள்ள குறைபாடுகளின் மறுவெளிப்பாடே என்பதை மறுத்தல் முடியாது. மேலும் இக்கட்டுரையில் உழைக்கும் இயந்திரங்களாகச் சில பெற்றோரால் பயன்படுத்தப்பட்டு, திருமணமின்றி விரக்தியடைந்துள்ள இளைஞர்கள் பற்றி நோக்கப்படவில்லை. அவை தனிப்பிரிவாக எழுதப்பட வேண்டியவை.

இக்கட்டுரையில் டென்மார்க்கில் நிலவும் சூழல் எடுகோளாகப் பயன்படுத்தப்பட்டாலும், பிரச்சினைகள் ஐரோப்பா முழுவதிற்கும் ஓரளவு பொருந்தக்கூடியதே. இளைஞர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண சில புதிய கண்ணிகளை உருவாக்க வேண்டியுள்ளது. விவசாய சமூகத்திற்குரிய வாழ்வியலைக்கொண்ட மக்கள் குழுவினர், பல நூற்றாண்டுகள் தாண்டிவிட்ட கைத்தொழில்மயமாக்கப்பட்ட வாழ்க்கைக்குள் சந்திக்க வேண்டிய சிக்கல்களை இளைஞர்களுக்குச் சரியாக அடையாளம் காட்டுதல் அவசியம். இவை வெறுமனே கட்டுரைகளால் மட்டும் சீர்தூக்கப்படுவது ஏற்புடையதல்ல. சகல நாடுகளிலும், நகரங்களிலும் இதுகுறித்த தீவிர கலந்துரையாடல்கள் காலம் தாமதிக்காது ஆரம்பித்தல் அவசியம். இதன் மூலம் சிறந்த கருத்துக்களையும் சமூக விழிப்புணர்ச்சியையும் உருவாக்குதல் வேண்டும். இது குறித்த தீவிர சிந்தனையின் பின் தமிழ் இளைஞர்கள் வலையாக்கங்கள் டென்மார்க்கில் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இதுபோல இளைஞர்களிடையே மேலும் பல சமூகப்பணிகள் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியம். இத்தனை சிரமமான பின்னணியிலும் கூட பல இளைஞர்கள் மிக ஆரோக்கியமான பாதையைத் தெரிவுசெய்து வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வெற்றியின் முன்மாதிரிகள் சமூகத்தால் மதிக்கப்படவேண்டியது அவசியம். இது மற்றைய இளைஞரிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தும். இளைஞர்களின் சக்தியை இழப்பது சமூக அழிவுக்கு வழிகோலும் என்பதை அறிந்து, தீவிரமடைந்துவரும் இளைஞர்கள் பிரச்சினையில் சமூகம் கூடிய அக்கறை செலுத்தவேண்டியது அவசியம். ❑

www.padippakam.com

# எங்கே போராட்டமோ அங்கே என் இதயம்

## இனம் மற்றும் வர்க்கம் (RACE AND CLASS) காலாண்டிதழ் ஆசிரியர் சிவானந்தனுடன் உரையாடல்



**ஆங்கிலத்தில்:**
**குவிண்டசன் ஹோரே**
**மால்கம் இம்ரே**
**பரமிந்தர் கவுர்**
**மைக்கேல் ஸ்டாக்**
**யமுனா ராஜேந்திரன்**

**தமிழில்:**
**யமுனா ராஜேந்திரன்**

### அறிமுகம்

'இனம் மற்றும் வர்க்கம்' (Race and Class) காலாண்டு இதழ் கடந்த 40 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் வெளியாகிறது. லண்டனிலிருந்து வெளியாகும் இவ்விதழின் ஆசிரியர் திரு. ஏ. சிவானந்தன் ஈழத்தமிழர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 1958 இல் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து லண்டனுக்கு வந்தவர். ஐரோப்பிய மையச் சிந்தனைக்கெதிராக மூன்றாம் உலகச் சிந்தனையின் மேதைமையையும் ஆன்மாவையும் போராட்ட உணர்வையும் நிலைநாட்டத் தொடர்ந்து செயல்பட்டு வருபவர். ஐரோப்பிய நாடுகளில் வெள்ளை நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க மக்கள் ஸ்தாபனமயமாகத் திரளவேண்டி ஒற்றுமையை வலியுறுத்துகிறவர். வர்க்கப் பிரச்சினையை நிறம் மற்றும் இன அணுகுமுறையின்படியே கையாளவேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருபவர். 1994ஆம் ஆண்டிறுதியில் பல்வேறு தொடர்ச்சியான உரையா டல்களுக்குப் பின் அவரது நேர்முகம் உறுதியானது. லண்டன் கிங்ஸ் கிரொஸில் இயங்கும் Institute of Race Relations நிறுவனத்திற்கு நான் போனபோது அவர் ஒரு கூட்டத்தில் இருந்தார். 15 நிமிடங்களில் அதை முடித்து விட்டு வந்தவர் மூன்று மணி நேரத்தை எனக்காக ஒதுக்கித் தந்தார். "வாங்க தம்பி, சுகமாக இருக்கிறீர்களா" என்பதுதான் அவர் என்னுடன் பேசிய தமிழ். தமிழில் உரையாட அவரால் இயல்வதில்லை. தமிழில் நாம் பேசுவதைப் புரிந்து கொள்கிறார். அவர் தமிழனாக மட்டுமல்ல சர்வதேசிய மனிதனாகவும் இருக்கிறார் என்பதுதான் இதன் காரணமென்று நான் கருதுகிறேன். இவர் தன் அறிவார்ந்த கருத்தமை வுகளால் எட்வேட் ஸைத், சமீர் அமீன், இக்பால் மசூத், ஸ்டுவர்ட் ஹால் போன்ற மார்க்சிய அறிஞர்களோடு சேர்த்துச் சொல்லப்படுபவர்.

பல்வேறு அறிஞர்களுடனான அவரது நான்கு நேர்முகங்கள் இரண்டு சொற்பொழிவுகளைத் தொடர்ந்து, என்னுடனான உரையாடலையும் சேர்த்து அவரின் 50 ஆண்டுகால நிறவெறிப் போராட்ட அனுபவங்கள், அவரின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் போன்றவற்றை ஒன்றிணைத்துத் தொகுக்குமுகமாக, ஒரே தொடர்ந்த உரையாடலாக இங்கு மாற்றியிருக்கிறேன்.

அவரது இளமைக்காலம், கல்வி, Race and Class பத்திரிகையின் தோற்றம் வளர்ச்சி போன்ற பகுதிகள், அவரது Communities of Resistance புத்தகத்திலான குவிண்டசன் ஹோரே, மால்கம் இம்ரே ஆகியோருடனான இவரின் நேர்முகத்திலிருந்து மொழியாக்கம் பெறுகிறது.

பிரிட்டிஷ் அரசியல் இனங்களுக்கிடையிலான உறவு, தொழிற்சங்கம், ஐரோப்பிய அரசியல் பற்றிய அவரது கருத்துக்கள் பரமிந்தர் கவுரால் 1992ஆம் ஆண்டு லேபர் கட்சியின் கருத்தரங்குக்கு முன்னதாக எடுக்கப்பட்ட நேர்முக பிரசுரத்தினின்று மொழியாக்கம் பெறுகிறது.

ஏகாதிபத்தியம், இயந்திரமயமாதல், ஐரோப்பிய அறிவுஜீவிகள் பற்றிய அவரது கருத்துக்கள் Cutting Edge : technology, information, capitalism and social revolution புத்தகத்திற்காக மைக்கேல் ஸ்டாக் எடுத்த நேர்முகத்தினின்று மொழியாக்கம் பெறுகிறது.

பின் நவீனத்துவம், பின் அமைப்பியல், பின் நவீனத்துவ உலகில் நிறவாதம், ஸல்மன் ருஷ்டி பிரச்சினை, இந்திய சமூகத்தில் ஜாதிக்கும் நிறவெறிக்கும் உள்ள உறவு பற்றிய கேள்விகள், காலனிய அறிவுஜீவிகளின் விடுதலை போன்றன என்னுடைய நேரடி நேர்முகத்தினின்று மொழியாக்கம் பெறுகிறது.

பின் நவீனத்துவம் மற்றும் கணிப்பொறியியல் காட்சிப்புல வெளி தொழில்நுட்பம் (cyber space) பற்றிய அதிக விளக்கங்கள் அவரது New Statesman and Society Institute of Contemporary Arts அரங்கச் சொற்பொழிவுகள் போன்றவற்றிலிருந்து மொழியாக்கம் பெறுகிறது. (15, அக்டோபர் 1993 மற்றும் 14 ஜுலை 1995 இதழ்கள்)

**மொழிபெயர்ப்பாளர்**

● *பிரித்தானியக் கலாசாரம் எவ்வாறு உங்களைப் பாதித்து வந்திருக்கிறது?*

இலங்கையில் நிலவிய கலாசாரம், பிரித்தானிய அரசியல் சூழலுக்குள்தான் நான் பிறந்தேன். அதுதான் என்னை உருவாக்கியது. பிரித்தானிய அரசியல் அல்ல, மாறாக பிரித்தானிய நிர்வாகம்தான் அனைத்திலும் தழுவியிருந்தது; பள்ளிக்கூடங்கள், பணிகள், நாட்டை நிர்வகிப்பது, தபால் அலுவலகம், ரயில்வே நிர்வாகம் என அனைத்திலும் நிரவியிருந்தது. பிரித்தானிய நிர்வாகம் இருந்த இடங்களில், ஆங்கிலக் கல்வி கற்றபின் தந்தை நான் என அனைவரும் பிரித்தானியக் கலாசாரத்துள் வந்தோம். கல்வியின் மூலம் தான் முதன்மையாகப் பிரித்தானிய

www.padippakam.com




கலாசாரத்துள் வந்தோம். குறிப்பாக இலங்கையின் வடபகுதி குழந்தைகளைத் தவிர எதுவும் வளரமுடியாத வரண்டபூமி. அங்கு மலைகள் இல்லை. நதிகள் இல்லை. உப்புநீர்தான் எங்கும். வயல்கள் சிறு நிலங்களேயன்றி பெரிய பண்ணைகளாக இருக்கவில்லை.

எனது தாத்தா ஒரு குறுநிலச் சொந்தக்காரர். அவரது ஒரே ஆசை ஆங்கிலப் பள்ளிக்கு தமது பிள்ளைகளை அனுப்பி படிக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் (அதாவது பயிற்றுமொழி ஆங்கிலம்) அதன்மூலம் அவர்கள் 'சரியான வேலை' பெறமுடியும். பிற்பாடு பொருளாதார சமூக ஸ்திரநிலை அடையமுடியும். இதுதான் வடக்கில் வாழ்ந்தோரின் ஆசை. அநேகமாக அனைத்துத் தமிழப் பகுதிகளின் நிலையும் இதுதான்.

எனது அப்பா பதின்மூன்று பதினான்கு வயதாக இருந்தபோது இவ்வாறுதான் தமிழ்ப் பள்ளியிலிருந்து ஆங்கிலப் பள்ளிக்குப் போய்ச் சேர்ந்தார். ஒரு சில ஆண்டுகளே அங்கு பயின்று பிற்பாடு தபால் திணைக்களத்தில் எழுத்தராகச் சேர்ந்தார். இந்த ஆசை, தம் மகனை இன்னும் மேலான ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பி அதன்மூலம் இன்னும் நல்ல சமூகப் பொருளாதார நிலை அடையும் வேலை தேடுவதாகத்தான் இருந்தது. அவர் தபால் பிரிவில் இருந்ததால் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கீழ் அவர் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டார். இந்த அரசு உத்தியோகஸ்தர்கள்தான் (சிங்களவர், தமிழர் ஆனால் பெரும்பாலும் தமிழர்) காடுகள், குக்கிராமங்கள் என நுழைய முடியாத இடங்களுக்கெல்லாம் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தைக் கொண்டு சென்றவர்கள்.

நல்ல பள்ளிக்கூடங்கள் கொழும்பில், சிங்களப் பிரதேசமான தெற்கிலேயே இருந்தது. கத்தோலிக்கர்களால் அல்லது ஆங்கிலிகன் கிறிஸ்தவர்களால் நடத்தப்பட்டன. அடிக்கடி இடம் மாறுவதால் என் படிப்பு தடைப்படுவதின் நிமித்தம் நான் கொழும்பில் இருக்க அனுப்பப்பட்டேன்.

எனது வாழ்வு முழுக்கவும் முரண்பாடுகள் நிறைந்து இருந்தது. நான் வெகுசாதாரண விவசாயப் பின்னணியில் இருந்து வந்தவன். நான் கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்தில் படித்தேன். ஒரு சிங்களச்சேரியில் மிக வறுமையான ஒரு மாமாவின் வீட்டில் தங்கியிருந்தேன். தமிழனும் இந்துவுமான நான் கத்தோலிக்க மதக்கல்வி கற்கவேண்டியிருந்தது. பொதுவழிபாட்டுக்குப் போகவேண்டியிருந்தது. அதேவேளை வெள்ளிக்கிழமைகளில் எனது மாமாவோடும் உறவினர்களோடும் இந்துக் கோவில்களுக்குப் போனேன். இவ்வாறு எனக்குள் மேற்கத்தியக் கலாசாரமும் மதமும் எனது இந்து நம்பிக்கைக்குள் கலந்திருந்தது. நகர்ப்புறம் கிராமப்புறத்துள் மத்தியதர வர்க்கமாகிக் கொண்டிருந்த ஒரு ஏழைப் பையன் இவ்வாறுதான் சேரிக்கலாசாரத்தைக் கற்றுக்கொண்டவனாயிருந்தான். எனது முரண்களை நான் அருவமாக சொல்கிறேன் என நினைக்கிறேன். இப்படி நான் வாழ்ந்தது பலவேளை எனக்கு துக்கமாகவிருந்தது. எல்லாவற்றிக்கும் மேலாக, ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பையன் பள்ளி, கல்லூரி, பிற்பாடு பல்கலைக்கழகம் எனச் சென்று நல்ல வேலைபெற்று குடும்பத்தைக் காப்பாற்றி பெற்றோருக்கு உதவவேண்டிய கடமையேயிருந்தது. அந்தப் பொறுப்புணர்வு நியராரே சொல்கிறபடி: 'எந்த மக்கள் நமக்குப் படிப்பைக் கொடுத்தார்களோ அவர்களுக்கு திரும்ப அவர்களின் நலனுக்கு நாம் படிப்பைத் தரவேண்டும்' என்கிற மாதிரியானது. எனது எல்லா முரண்களின் துக்கத்தின் மீதும் இதுவே நிரவியிருந்தது. என்னைச் சிதிலமாக்கிப் போட்ட அனுபவங்களும் உண்டு. ஒவ்வொருமுறை எனது பள்ளி விடுமுறையின் போதும் நான் கிராமத்துக்குப் போகும்போது, அங்கிருக்கும் எனது இரத்த சொந்தங்கள் மிக மிகப் பின்தங்கிய நிலையில் இருப்பதை நான் காணக்கூடியதாக இருந்தது. கிராமத்தின் கிரிக்கெட் விளையாட்டின்போதுகூட, பதினாறு வயதேயான நான் பதினொரு பேரில் முதலாவதாக விளையாடு பவனாயிருந்தேன். இது கொழும்பில் சென்று படிக்கும் மாணவர்கள் கிராமத்து மாணவர்களைக் காட்டிலும் மேலாக இருப்பதைக் காட்டியது. இந்தப்பிரிவு

**ஏ. சிவானந்தனின் முக்கியமான நூல்கள்**

1
Communities of Resistance
கட்டுரைகளின் தொகுப்பு
Verso, London, 1990


2
A Different Hunger
கட்டுரைகளின் தொகுப்பு
Pluto, London, 1982

3
From Resistance to Rebellion
கட்டுரை
Race and Class, London, 1986

4
When Memory Dies
நாவல்
Arcadia Books, London, 1997



www.padippakam.com




எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. ஏனெனில் நான் கிரா மத்தின் ஒருவனாகவே இருக்க விரும்பினேன். அதே வேளை எனது இன்னொரு பக்கம்: கொழும்புக்காரனாக, ஆங்கிலப் பள்ளியில் படித்தவனாக, படித்த நண்பர்களைக் கொண்டவனாக இருக்க வேண்டும் என்ற ஆசை. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எனது ஏழை மாமிக்கு நான் இழைத்த துரோகம். அவள் ஏழையாக அழுக்காக இருந்ததால் எனது மிகப் பிரியத்துக்குரிய அந்த மாமியை எனது குடும்பத்தின் வேலைக்காரி என்று பள்ளி நண்பர்களுக்குச் சொன்னது ஞாபகம் இருக்கிறது.

● *காலனித்துவப் பிரதிமையாகவே உங்கள் கல்வி உங்களை உருவாக்கியது. மிகச்சரியாகச் சொன்னால் தரகுவர்க்கத்தவனாகவே கல்வி உங்களை உருவாக்கியது. ஆனால் அங்கேயே நீங்கள் முடிந்துவிடவில்லை. அது ஏன் அப்படி நிகழ்ந்தது என நினைக்கிறீர்கள்?*

காலனியம் ஒரு வழிப்பாதை என நினைப்பது தவறு என நினைக்கிறேன். அது உனக்கு நேர்ந்ததாக, உன்னை முழுக்க எடுத்துக்கொண்டதாக, எதிர்க்கவே முடியாத அதிகாரமாக நினைப்பது தவறு. உமது கலாசாரத்தினின்று, உமது மொழியினின்று, உமது மதத்தினின்று எப்போதும் எங்கேனும் இருந்து எதிர்ப்பு இருந்துகொண்டேதானிருக்கும். அந்த எதிர்ப்பு முதலில் இருத்தலிலிருந்து எழும் கலகமாகவே முதலில் எழும். உனது வேர்களுக்கு சாராம்சத்திற்கு எதிரான எல்லாவற்றிற்கும் எதிரான கலகமாக எழும்.

நான் இந்துவாக இருந்தும் சர்ச்சுக்கு போகச் சொல்லி தாய் தந்தையர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டேன். அது எனக்கு கலகத்திற்கான தருணத்தைத் தந்தது. கல்வியின் போக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பின் எதிர்ப்பைக் காண்பித்தேன். ஆனால் ஒரு மாற்றை அப்போது கண்டிருக்கவில்லை.

இரண்டில் ஒன்றில் நான் போயிருக்க முடியும். முழுத் தமிழராக முழு இந்துவாக முழு இலங்கையனாகப் பின்நோக்கிய தேசியத்திற்கு நான் போயிருக்க முடியும். காலத்தைப் பின்னோக்கிப் போக வைத்து பிரிட்டிஷ், டச்சுக் கலாசாரம் எமது கலாசாரங்களை, கல்வி அமைப்பை, அரசியலை, எம்மைப்பற்றிய எமது உணர்தலை பாதிப்பைச் செலுத்தவில்லை என நிராகரித்திருக்க முடியும். (எனக்குள் ஒரு உணர்வு இருந்தது. நான் எனது கோவில்களுக்கு பின்னோக்கிப் போய் இருந்தால் எனது கலாசாரத்துக்கு போய் இருந்தால் கத்தோலிக்கத்திலிருந்து காலனியா திகத்திலிருந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து தப்பியிருக்க முடியும் என) மற்றொரு புறம் நான் ஸ்தானங்களைப் பெற விழைந்தேன். எனது ஏழைக் குடும்பத்தைக் காப்பாற்ற உழைத்தேன். ஒரு நேரம் நான் விரும் பியபடி ஒரு பரிஸ்டராக விழைந்தேன். ஏதோவொரு காலத்தில் இங்கி லாந்துக்குப் போக, பல்கலைக்கழகம் நுழைய, அமைப்புக்குள்ளேயே இருந்துவிட விழைந்தேன். நீங்கள் குறிப்பிட்ட மாதிரி 'தரகனாக' ஆக விழைந்தேன். ஆனால் உலகில் பொருளாதார ரீதியில், சமூக அளவில் போவதான காரியம் மட்டுமே இது என்று நான் நினைக்கவில்லை. நான் அப்படிப் பார்க்கவில்லை. தேர்வு, இரண்டு பாதைகளுக்கு இடையில் இருந்தது: தேசியவாதியாக இருப்பது அல்லது தரகனாக இருப்பது.


● *எவ்வாறு வரவேண்டும் என நீங்கள் தேர்ந்தீர்கள்?*

எனது சூழலில் இருக்கிற எவரும் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு இல்லை. எவரும் அப்படித் தேர்வு செய்ததும் இல்லை. நான் பல்கலைக்கழகத்தில் நுழைந்தபோது எனது எல்லா முரண்பாடுகளும் கொதிநிலைக்கு வந்தன. இந்தக் கிராமம், நகரம் போன்ற முரண் பாடுகள். மிகப் பிரமாண்டமான முரணாக தேசியம் அல்லது மேட்டுக்குடிக் காலனியம். அப்போது ஒரு நேரம் நான் ஒன்றாகவும், மறுநொடி பிறிதொன்றாகவும் இருந்தேன்.

● *ஆக ஒரு அரசியல் நபராக வருவதற்கு முன்பாகவே இந்தப் பிரமாண்டமான முரண்பாட்டில் நீங்கள் இருந்திருக்கிறீர்கள். என்ன அறிவார்த்தமான நிலைப்பாடு அரசியல் ரீதியில் உங்களை நிலைப்பாடு எடுக்க வைத்தது? ஒரே இரவுக்குள் நீங்கள்*




www.padippakam.com




*மார்க்சியவாதியாக ஆகி இருக்க முடியாது என நாங்கள் நினைக் கிறோம்?*

நான் மார்க்சிஸ்ட்டா என்றெ னக் குத் தெரியாது. என்னளவில் மார்க் சியம் ஒரு சூத்திரமோ, நம்பிக் கையோ அல்ல; அது உலகைப் புரிந்துகொள்ள ஒரு வழி முறை. உலகை மாற்றுவதற்காக உலகை புரிந்து கொள்ள ஒரு வழி முறை. என்னளவில் ஒரு அரசியல் மனித னாக இருப்பது என்பது எப் போதும் நீங்கள் அரசியல் பேசுவது என்பது காலனியம் தவிர்த்து சாத்திய மில்லை. எல்லா காலனியாதிக் கத்திற்கு உள்ளான மக்களும் எல் லாக் காலத்திலும் அரசியல் அகவு லகை கொண்டே இருக்கிறார்கள். அதிகாரம் பற்றிய உணர்தலாக அல்லது அதிகாரம் இல்லாத மக்க ளென உணர்தலாக இது இருக் கிறது. ஆகவே அரசியலினின்று ஒரு வர் அகற்றப்படுதல் முடியாதது. நான் பேசிக் கொண்டிருக்கின்ற எல்லா முரண்பாடுகளும் காலனி ஆதிக்கம் ஏற்படுத்திய சமூக முரண் பாடுகள், தனிநபர் முரண்பாடு



களாகவும் இயல்பாகவாகின்றது. ஒருவரை இழிந்து போகச் செய்த அவலங் களாக அந்த இழிவுக்கெதிரான எதிர்ப்பு உணர்வு அனுபவங்களாக நிகழ்கிறது. அதிகாரமற்ற சூழலின் பகுதிகளில் ஒன்றுதான் அரசியல் பிரக்ஞை என்பது, ஒருவர் பள்ளிக்கூடம் செல்வதான அனுப வத்துக்குள், குடும்பத்தின் உறவுகளுக்குள், ஒரே குடும்பத்தை சேர்ந்த வசதியானவர்கள் வசதியற்றோர்களுக்கிடையிலான எதிரெதிர் தன்மையின் வழி பெறுவதுதான் அரசியல் பிரக்ஞை.

பல்கலைக்கழகம் செய்ததெல்லாம் இந்த அரசியலை ஒரு வரைய றைக்குள் வடிவமைத்ததுதான். குறிப்பாக நான் அரசியல் விஞ்ஞானமும் பொருளாதாரமும் படித்தேன். சமூகத்தை எவ்வாறு நோக்க வேண்டுமென அது எனக்கு கற்றுக்கொடுத்தது.

பல்வேறு அரசியல் கோட்பாடுகள் என்முன் இருந்தன. Hobbes, Locke, Rousseau, Owen, Proudhon, Fourier போன்றோர்கள். இறுதியில் மார்க்ஸைக் கண்டடைந்தேன். ஒருவருக்குள் ஏற்படும் முரண்பாடுகள், பிளவுகளே இய ங்கு சக்தி என்பதை, ஒருவர் வாழும் சமூகத்தின் இயங்குசக்தி என்பதைக் கண்டு கொண்டேன். மார்க்சியம் கொடுத்த இந்த வரலாற்றுப் பொருள் முதல்வாதப் பகுப்பாய்வுக் கருவிதான் என் வாழ்வின் அதிசய நிகழ்வின் தருணம். டைலன் தாமஸின் வார்த்தைகளில் முடிவுறாத ஒளிக்கீற்று.

பிற்பாடு எனக்குத் தெரிந்தது, மிகப் பின்னால்தான் தெரிந்தது; கவிகளின் வழி நாவலாசிரியர்களின் வழி, இயங்கியல் வெறுமனே பகுப்பாய்வுக் கருவி மட்டுமல்ல, அது அனுபவம்சார் உணர்வு.

● *இது உண்மையிலேயே அவலநாடகம், இந்தப் பிரித்தானியக் கல்வி தான், உங்களுக்கு காலனியாதிக்கக்காரர்களிலும் அவர்களது காலனிய மொழியிலும் இருந்த நல்ல விஷயங்களுக்குக் காரணமாயிருந்தது. அதன் மூலம்தான் எங்கிருந்து போராட வேண்டும் என்னும் உணர்வையும் நீங்கள் கற்றீர்கள்?*

ஆமாம். அதேவேளை இல்லை. பிரிட்டிஷ் கலாசாரத்தின் முற்போக்கான, காலனிய எதிர்ப்பு, ஸபால்டன் கூறுகள்தான் எனக்குக் கற்றுத்தந்தது. பிரிட்டிஷ் கலாசாரத்தின் ஆதிக்கக்கூறுகள் என்னைப் பாதிப்புச் செலுத்தி எனக்குக் கற்றுத்தரவில்லை. இந்த உள்வாங்கல்/வெளியேறுதல் லண்டன் ஸ்கூல் ஒ.்.ப் எகானமிக்ஸ் நாட்களில்தான் நிகழ்ந்தது. ஹரால்ட் லாஸ்க கியின் Grammer of Politics, மாரிஸ் தோப், ஜோன் ரோபின்ஸன், வெப்ஸ், பேபியன்ஸ், இம்மாதிரி சிந்தனையாளர்களே இதைச் சாத்தியமாக்கினர். ஒரு பழைய கண்ணாடி பாட்டில் கடையில் T.A ஜாக்ஸனின் Dialectics புத்தகத்தை கண்டெடுத்த அந்த நாளை மறக்கவே முடியாது. கண்கூசச் செய்த ஒளிப்பிரவாகமான நாட்கள் அவை. சொக்கிப்போன நாட்கள் அவை.

யுத்தத்திற்கு பின்னால், எமது நாடுகள் விடுதலை பெற்றன. இந்தி யாவிலும் இலங்கையிலும் தேசியம் முற்போக்கு தன்மை கொண்ட காலம் வந்தது. காலனிய எதிர்ப்பு அதனோடு தொழிலாளி வர்க்கச் சார்பு. எனது பல்வேறு விரிவுரையாளர்கள் லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸில் கல்வி பெற்றவர்கள்.புரட்சிகரமான லட்சியங்களோடு அவர்கள் வந்தார்கள். பிரிட்டனில் இடதுசாரி மரபுகளைச் சுவீகரித்துக் கொண்டவர்கள் அவர்கள். எம்மீது அந்த மரபுகளைச் செலுத்தியவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

அவர்களில் பலர் இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களாக இருந் தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினராக அல்லது டிராட்ஸிகியக் கட்சியான லங்கா சமசமாஜ கட்சி சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களது போதனை கோட்பாடுகளாக அல்ல நடைமுறைகளாக இருந்தன. பள் ளிக்கூட அறைகளினின்று தெருக்களுக்கு அவை எங்களை எடுத்துச் சென்றன. ஆகவே நாங்கள் கற்றுக்கொண்ட அரசியல் வகுப்பறைகளில்

www.padippakam.com




பட்டப்படிப்பின் பாடத் திட்டத்திலிருந்து மட்டுமல்ல பல்கலைக்கழக நேரம் தவிர்ந்த பொதுக் கூட்டங்கள் LSSP (லங்கா சம சமாஜ கட்சி: ரொட்ஸ்க் கிஸ்ட் அரசியல் இயக்கம்) படிப்பு வட்டங்கள், குழுக்கள் போன்றவற்றி லிருந்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.

இந்த ஆசிரியர்கள் பிரிட்டிஷ் கலாசாரத்தின் அடங்கிப் போவதற்கு எதிரான கூறுகளைக் கற்றுத் தந்தார்கள். சுதந்திரத்திற்கும் சமத்துவத்து வத்துக்குமான பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் இருந்து கற்றுத் தந்தார்கள்.

இதேமாதிரியான சமத்தன்மையுள்ள எம் சமூக நிகழ்வுகளைப் பார்க்க வும், அதன் வழி எமது உழைக்கும் மக்களின் போராட்டங்களில் பங்குபெற வும் கற்றுத் தந்தார்கள். இடதுசாரிப் பகுப்பாய்வின்றி ஆங்கில இலக்கி யத்தை அவர்கள் பயிற்றுவிக்கவில்லை. Wife of Bath's Tale கதைக்குள் நாங்கள் எமது மனைவியரின் கதைகள், கவிதைகள், நாட்டுப்பாடல்கள் போன்றவற்றையும் பார்த்தோம். படைப்பாளிகளின் தரிசனத்தை எம் அனுப வத்தில் பார்க்க, செழுமைப்படுத்திக்கொள்ள ஸ்வீகரித்துக் கொள்வது என, எமது அனுபவங்களில் பொருத்திப் பார்க்க அல்ல, எம் அனுபவங் களை சிருஷ்டிகரமாக்க. பிரபஞ்சத் தன்மையை அவற்றினின்று எடுத்து எமது சொந்தக் குறிப்பனுபவங்களில் காண அவர்கள் பயிற்று வித்தார்கள். ஸாஸா - இன்னும் இங்கிலாந்திலேயே இருக்கவிட்டு அவரை உள்ளூர்காரர் ஆக்கினார்கள். இது பல்வேறு துறைகளில் எம்மை வழிந டத்தியது. எடுத்துக்காட்டாக இசை. சிங்கள தமிழ் இசைக்குள் மூழ்கினேன். குறிப்பாக தமிழ் தேவாரம் இப்போது கிரிகோரியன் ராகங்களைக் கேட் கிறபோது எமது மக்களின் தெய்வீக இசை எவ்வாறு அவற்றுள் இருந்தது என அனுபவிக்கிறேன். எங்களது பழைய மரபுக் கவிகள் எவ்வாறு எமது சிங்களக் கவிகள் கிராமம் கிராமமாகச் சென்று பாடினார்கள். இதை சந்தைக் கடைகளின்று ஓலைச்சுவடிகளைப் பாடினார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன்.

அவ்வாறு சுதந்திர இலங்கைக்கான கலப்புக் கலாசாரத்துக்கான போராட் டத்தால் நான் உருவாக்கப்பட்டேன். ஆகவேதான் நான் இப்போதும் நினைக்கிறேன்: கலாசாரம் என்பது செயல்படுவது, இயங்குவது, போராட் டத்தினிடையில் நின்று கலப்பது. மாறாக சில திட்டமிட்ட கலைச் சூத் திரங்கள் அல்ல. முன்கூட்டி உணரப்பட்டவை அல்ல. வெறுமனே நாடோடிப் பாடல்கள் அல்ல. (அதாவது உடனடியாக இப்போது பல்க லாசாரம் என்று அடையாளப்படுத்துகிறோமே அது அல்ல).

● *சரி. பல்கலைக்கழகத்தை விட்டு வெளியே வந்ததும், இடதுசாரி அரசியல் செயல்பாட்டாளனாகி விட்டீர்களா? உங்களுக்கு ஒரு வேலை வேண்டியிருந்தது, நீங்கள் பல்வேறு குடும்ப நபர்களுக்கு பொறுப்பேற்க வேண்டியவராகவும் இருந்திருக்கிறீர்கள்?*

எனது வாழ்வின் முதல் பகுதி முழுவதும், சொல்லப்போனால், சில முரண்பாடுகளைத் தீர்க்கப்போவதாக இருக்க, பிறசில முரண்பாடுகளுக்கு எதிராக நிற்க வேண்டியவனாகவே இருந்தேன். நான் ஒரு பல்கலைக்கழகப் பட்டத்துடன் வெளிவந்தபோது, எனக்கு பெரிய செல்வாக்கு செலுத்தக்கூடிய தகுதி கொண்ட பெரிய குடும்பம் இருக்கவில்லை. அப்போது ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தோர் கல்வி கற்பிக்கச் செல்வர். பணக்காரக் குடும்பங்களில் இருந்து வருவோர் சட்டம், மருத்துவக்கல்வி, மேல்நிலை அரசு உத்தியோகம், போலீஸ் சூப்ரண்டு, சிறைச்சாலை உயர் அதிகாரிகள் என உத்தியோகத்திற்குச் செல்வர்.

முதலில் ஒரு தேயிலைத் தோட் டப் பிரதேசத்தில் கல்வி கற்பிக்கச் சென்றேன். மாணவ மாணவிகள் பெரும்பாலோர் ஏழைச் சிங்கள தொழிலாளர் குழந்தைகள். ஒரு சிலர் மலையகத் தொழிலாளர் குழந் தைகள். இந்த இந்தியத் தமிழ் குழந்தைகள்தான் கல்வி கற்கவே வழியற்ற வறிய வரினும் வறியவர். அங்கிருந்து நான் கண்டி மலைப் பிரதேசத்துக்கு கற் பிக்கச் சென்றேன். இரண்டும் முக் கியமான அனுபவங்களாக இருந தன. தமிழ் நிலத்தை நானறிவேன், நகர்ப்புற மேட்டுக்குடி வாழ்வை நான றிவேன். இப்போது நான் மலைத் தோட்டத் தொழிலாளர்க்கிடையில் வாழ்ந்தேன். அவர்கள் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என நான் அறிந்தேன். கண்டியில் தேயிலை பயிரிடுவதற்காக கபளீ கரம் செய்யப்பட்டு வயல்களிலிருந்து வெளி யேற்றப்பட்ட நிலமற்ற சிங் கள மக்களோடு நான் வாழ்ந்தேன்.

எனது நேரடி அனுபவத்தின் மூலம் எனது நாட்டில் சமூக உரு வாக்கம் பற்றின புரிதலை நான் பெற் றேன்.

பிற்பாடு இந்த அனுபவங்கள்.

www.padippakam.com

எனக்கு எமது சமூகத்தின் பல்வேறு முரண்களைப் புரிந்துகொள்ள உதவியது. எவ்வாறு பிரிட்டன் மற்றும் பிற காலனியாதிக்கங்கள் எமது நாடுகளை பல்வேறு காலகட்டங்களில் எவ்வாறு பாதித்திருக்கிறது என உணர்ந்தேன். நாட்டின் பல்வேறு பாகங்களில், பல்வேறு வகைகளில் ஒரு சின்ன நாட்டில் எவ்வாறு வேறுபட்ட சமூக உருவாக்கங்களை வீசியிருக்கிறது என உணர்ந்தேன். எமது நாடுகள் வளர்ச்சியுறா நிலையில் தள்ளப்பட்டு, எமது நாட்டின் பிரச்சினையாக இன்று வளர்ச்சி பெற்றுப் பேசப்படும் இனத்துவ, இனக் குழு அரசியலின் வித்தியாசங்களாக முற்றிய நிலையடைந்திருப்பதை நான் உணர்ந்தேன்.

● *இலங்கை தோட்டப்பிரதேச ஆசிரியராக இருந்து பிரிட்டனின் இடதுசாரி அரசியல் சிந்தனையாளராக வளர்ந்திருக்கும் இந்த மாற்றம் சுமுகமாக நிகழ்ந்ததா?*

நிச்சயமாக இல்லை. காலனியாதிக்கத்துக்குள்ளானவர் வன்முறையிலான முரண்பாடுகளினூடே போய் வர வேண்டியிருக்கிறது. ஒரு நிமிடம் தரகனாக, எதிர்ப்புரட்சி தேசியவாதியாக மறுநிமிடம், முற்போக்காளனாக, இடதுசாரியாக அதற்கடுத்த நிமிடம். ஆசிரியதொழில் சொற்ப வருமானத்தையே தருகிறது. அதைக்கொண்டு என் குடும்பத்தை நான் காப்பாற்ற முடியவில்லை. ஆகக் கடைசியில் வங்கி அதிகாரியாக ஆகி வங்கியின் துணை மேலாளராகவும் ஆனேன். அந்த நேரத்தில் இலங்கையில் சில பட்டதாரிகளே இருந்தோம். அப் போது வங்கிகள் தேசவுடைமையாக் கப்பட்டன. ஆகவே இலங்கை பிரஜைகள் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டனர். உங்களுக்கு டிகிரி இருந்தால் நீங்கள் பதவி உயர்வுக்குக் காத்திராமலேயே நேரடியாக நிர்வாக உத்தியோகத்திற்கு உயரச் செல்லலாம்.

குடும்பக் காரணங்களுக்காகத் தான் நான் அந்த வேலையில் சேர்ந்தேன். ஆனால் அந்த வாழ்க்கை சில முறைமைகளைக் கொண்டிருந்தது. ஹொங்கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச்சட்டையை நான் அணியவேண்டும், மோட்டார் கார் ஓட்ட வேண்டும், வேலைக்காரர்கள் இருக்க வேண்டும், கிளப்புகளுக்குப் போகவேண்டும், இறக்குமதி செய்யப்பட்ட ஜெர்மன் லாகர் குடிக்க வேண்டும். இன்கம் டேக்ஸ் கமிசனருடனோ அல்லது ஏதோ ஒரு தரகனுடனோ அமர்ந்து குடிக்க வேண்டும். ஒரு FRCS அல்லது ஒரு பாரிஸ்டர். அதேவேளை அந்த வாழ்க்கைக்காக நான் அவமானம் கொண்டேன். எனது பெற்றோர்களைப் பார்க்க நான் வீடுதிரும்பும்போது, பின் கிராமத்துக்குப் போகும்போது, எனது மக்களின் வறுமையைக் காணும்போது எனது ஆடம்பரத்துக்காக நான் அவமானம் கொண்டேன். இதே சந்தர்ப்பத்தில் நானறிந்த சேரிகளில் இருந்து வேலைக்கு வந்து கொண்டிருந்த வங்கி கிளார்க்குகளோடு சேர்ந்து நான் குடிக்கப் போவேன். அவர்கள் வீடுகளுக்குப் போவேன். அவர்களின் வாழ்க்கை முறையும், வறுமையும், அவர்கள் சுரண்டப்படும் கொடுமையும் என்னை மிகமிகப் பாதித்தது. பேங்க் ஆப் சிலோனின், வங்கிக் கிளார்க்குகளின் முதல் யூனியன் குறித்த கூட்டப்பேச்சு எனது சொந்த வீட்டில்தான் நிகழ்ந்தது. இந்தக் காரணங்களால் மேனேஜ்மன்டின் பிரச்சினைக்குரிய ஆளாக நானாகினேன். மேனேஜ்மென்ட் பிரிட்டிஷ்காரர்களாயிருந்தார்கள். நான் தொந்தரவுக்குள்ளானேன். எப்போதும் நான் வேலை உயர்வு பெறவே இல்லை.

எனது பெற்றோருடன் எனக்கு அப்பொழுது பிரச்சினை ஏற்பட்டது. காரணம் ஒரு சிங்களக் கத்தோலிக்கப் பெண்ணிடம் நான் காதல் கொண்டிருந்தேன். ஓடிப்போய் கல்யாணம் செய்து கொண்டோம். சரியாகப் பாருங்கள்: எவ்வாறு ஒரு புறநிலை முரண்பாடு அகநிலை முரண்பாடாக வருகிறது? எமது இருவரது பெற்றோர்கள் இவ்வாறான கலப்புத் திருமணத்திற்கு எதிரானவர்கள்.


அப்புறம் 1958இல் சிங்கள தமிழ் கலவரம் வெடித்தது. எனது தந்தையின் வீடு தாக்கப்பட்டது. ஒரு வெற்றுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு போலீஸ்போல போலி வேடமிட்டு ஒரு கும்பலிருந்து என் தந்தையை நான் மீட்கப்போனேன். தமிழர்கள் என்று இருக்க நேர்ந்த காரணத்துக்காக மட்டுமே மனிதர்கள் கொல்லப்பட்டதை நான் கண்டேன். மனிதர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள். இந்தக் கொடுமைகளில் அகிம்சைக்கு அர்ப்பணித்து கொண்டதாகச் சொல்லிக்கொள்ளும் சிங்கள பௌத்த அரசாங்கம் இது குறித்து மௌனமாக இருந்தது. பெரிய பதவி களில் இருந்த படித்த மேதாவிகள் ஏதும் செய்யவில்லை. பத்திரிகைகளும் ரேடியோவும் நள்ளிரவில் உடைந்து போனது. எமது மக்கள் அவமானப்படுத்தப்பட்டதும், கேவலப்பட்டதும் என் நாசியில் எரிகிறது. இதைச் சகித்துக்கொள்ள முடியாது. எனது நாட்டிலிருந்து விரைவில் நான் வெளியேறிவிட விரும்பினேன். வேலையை விட்டேன். எதையெதை விற்க முடியுமோ அனைத்தையும் விற்றேன். இங்கிலாந்துக்கு என்னைத் தள்ளினேன்.

இங்கு வந்து பேய்ஸ் வாட்டரில் வாழ்ந்தேன். நேரடியாகவே நாட்டிங்ஹில் கலவரத்துள் நுழைந்து நடந்தேன்.

அக்கினிப் பிரவேசம். இரண்டுமுறை அக்கினிப் பிரவேசம். சிங்கள தமிழ் கலவரம் அங்கே. வெள்ளை - கறுப்பு கலவரம் இங்கே. பிற்பாடு நான் கறுப்பன் என்பதை உணர்ந்தேன். ஓரங்கட்டிக்கொண்டு இருக்க முடியாது. நிறம், இனம் ஒரு பிரச்சினை. அது என்னை நேரடியாகப் பாதிக்கிறது. பாங்க் வேலையோ அல்லது நான் பொருந்திப் போகிற,



www.padippakam.com




ஆம் பொருந்திப் போகிற எதற்காகவும் என்னை இழந்துவிட நான் தயாராயில்லை. சமூக மேம்பாட்டுக்கு என் பங்களிப்பைச் செய்ய ஏதேனும் நான் வழி கண்டுபிடித்தாக வேண்டும். மனிதன் மானுடனாக ஆகிற சமூக அமைப்பைக் கொண்டுவர நான் ஒரு வழிகண்டாக வேண்டும். எனக்கு படிக்க நேரம் வேண்டும், பிரதிபலிக்க, செயல்பட எனக்கு நேரம் வேண்டும். (ஒதுக்கல் நிறைய இருந்தது. நான் பட்டம் பெற்றிருந்தும் வங்கியில் அனுபவம் பெற்றிருந்தும் நான் வங்கி வேலை பெற முடியவில்லை. கறுப்பர்கள் அப்போது நம்பிக்கைக்கு உரியவர்களாக கருதப்படவில்லை). நான் மிடில்செக்ஸ் நூலகமொன்றின் டீ பாய் உத்தி யோகத்திலிருந்து படிப்படியாக அந்த நூலக மேலாளராக நான் ஆனேன். இறுதியாக 1964 ஆம் ஆண்டு இன்ஸ்டிட்யூட் ஒ.்.ப் ரேஸ் ரிலேஸன்ஸ் நூலகராகப் பணிபுரியப் போனேன்.

● *பெரும்பாலான உங்கள் அரசியல் எழுத்துக்கள் எல்லோருக்கும் பரிச்சயமான எழுத்துக்கள் நீங்கள் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்து பிறகு எழுதியவைதான். உங்கள் சிந்தனையும் உங்கள் எழுத்தும் நீங்கள் பணிபுரியும் இடத்தை மாற்றுவதாக அமைந்திருக்கிறது. 'படிப்புக்குத் திரும்புதல்' என்ற நடவடிக்கையோடுதான் உங்கள் மாற்றத்துக்கான செயல்பாடும் இணைந்திருக்கிறது என்று கருதலாம். அதாவது சமூகத்தை மாற்றுவது நீங்கள் சொல்கிறபடி அப்படித்தானே?*

நான் அப்போது உணர்ந்திருக்கிறேன். வாழ்வதும் இயங்குவதும் வேலையும் வேறு வேறு அல்ல. மாற்றுவது என்பது 'வெளியிலிருக்கும் சமூகத்துக்கு' ஒருவர் செய்வது அல்ல. மாறாக 'தனக்குள்ளேயே' நிகழ்வது அது. வேலையிடத்தில், அவர் வேலையில் அவரது தினசரி வாழ்வில் நிகழ்வது அது. 1960கள் கறுப்பு அதிகாரத்தின் (Black Power) காலம். ஆபிரிக்காவில் காலனிய நீக்கம், வியட்நாம் யுத்தம் போன்றவற்றின் காலம். கறுப்பு அதிகாரம் என்னோடு நேரடியாகப் பேசியது. இனம், நிறம், மற்றும் வர்க்கப் போராட்டம் என நேரடியாகப் பேசியது. ஒரே நேரத்தில் பேசியது. மேலாக அது இருத்தலின் அரசியலாக இருந்தது. ஆகவே இன்ஸ்டிட்யூட் ஒ.்.ப் ரேஸ் ரிலேஸன்ஸில் நான் செய்த வேலையானது - ஒரு சுயாதீன அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது. வெள்ளையர்கள், வெள்ளையர்கள் அல்லாதவர்களுக்கிடையிலான உறவுகள் பற்றி ஆய்வது. உலகெங்கும் பரந்ததான ஆய்வு இது.

காலனியாதிக்கம், காலனியாதிக்க வெளியேற்றம் இது பற்றி ஆய்வு செய்யவில்லை. இன்ஸ்டிட்யூட்டின் அதிகார பீடம் அருவமான முறையில் நிற, இன உறவுகளைப் பார்த்தது. ஆனால் நிற, இனம் பற்றிய ஆய்வென்பது நிறவாதம், இனவாதத்தை ஒழிப்பதோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என நான் நினைத்தேன். இன்ஸ்டிட்யூட் சார்பெடுக்காமல் இருக்க முடியாது என்று நினைத்தேன். ஏனெனில் லேபர் கட்சியும் கன்ஸர்வேடிக் கட்சியும் நிறவாத குடியேற்றச் சட்டங்களை இயற்றிக் கொண்டிருந்தது.

● *1960களில் இன்ஸ்டிட்யூட் என்ன மாதிரி அமைப்பாக இருந்தது என்பதையும் அதன்பின் அது எவ்வாறு உருமாறி வளர்ந்தது என்பதையும் சொல்வீர்களா?*

இந்த இன்ஸ்டிட்யூட் Royal Institute of International Affairs இன் ஒரு பிரிவாகத்தான் 1950இல் நிறுவப்பட்டது. 1958 கலவரங்களுக்குப் பின்னான காலத்தில் தான் அது சுயாதீனத்தன்மை பெற்றது. இது பிரிட்டனிலும் பிற இடங்களிலும் நிற, இன உறவுகள் தொடர்பாக கோட்பாட்டு ரீதியில் ஆய்வு செய்யும் அமைப்பாகவே இருந்தது. 1962 குடியேற்ற சட்டத்திற்குப் பின்னால் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதான இன, நிற உறவுகளுக்கு தேவையான வளர்ச்சிப் பாதை என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்தது. கொஞ்சமே கறுப்பர்கள் அதனால் மட்டுமே ஒருமைப்பாடு முடியும் என்ற நிலைப்பாடு. கறுப்பர்கள் இல்லையெனில் பிரச்சினை இல்லை. எண்ணிக்கை தவிர பிரச்சனை வேறில்லை. ஹிட்லர் இதே மாதிரித்தான் சொல்லியிருக்கிறான். இன்ஸ்டிட்யூட் தன்னளவில் சுயாதீனமாகத்தான் செயல்படுவது மாதிரியிருந்தது. பகாசுர நிறுவனங்கள் பண உதவி செய்தன. Shell, Nuffield, Rockfeller Ford போன்ற நிறுவனங்கள். Oppeheimer (of the Anglo - American Corporation of South Africa Barclays Bank ஆரம்பகால ஆய்வுகள் எல்லாம் எவ்வாறு ஆபிரிக்காவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தன என்பது நோக்கிய ஆய்வாகவே இருந்தது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளையும் இந்நோக்கில் ஆய்வு செய்தது. இதுதான் சர்வதேசிய இன நிற ஆய்வுகளின் அடியில் பொதிந்திருந்த மனக்கிடக்கை. பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை ஒப்புக் கொள்ளாத புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் தொடர்ந்த வியாபார



www.padippakam.com

முதலீடு செய்வதில் உள்ள பிரச்சினைகளை ஆய்வதற்கே நிற இன ஆய்வுகள் பயன்பட்டன. ஆகவே புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் தரகு முதலாளிகளோடு நீங்கள் போய் வியாபாரம் செய்ய வேண்டுமானால், அவர்கள் தாழ்ந்தவர்கள் என்று நீங்கள் கருதுவதாக அவர்கள் நினைக்கக்கூடாது. அவர்களது கலாசாரம் தாழ்ந்தது என நினைக்கக்கூடாது. நாம் எல்லோரும் சகோதரர்கள் ஒரே முதலாளித்துவ தோலுள்ளவர்கள் எனப் பிரகடனம் செய்ய வேண்டும். இது தான் அன்று நிலவிய ஆய்வுகளின் நோக்கமாக இருந்தது.

● 1972இல் இன்ஸ்டிட்யூட் பல காபந்துக்காரர்களை வெளியேற்றி புதிய கவுன்ஸிலை அமைத்தது. அதில் வேலை செய்தவர்கள், அதற்காக வேலை செய்தவர்களே இதைச் சாதித்தார்கள். புதிய அமைப்பு எந்த நோக்கங்களைக் கொண்டிருக்கிறது அது எவ்வாறு ஜீவித்தது எனச் சொல்வீர்களா?

● 1990களில் அமைப்புக்களில் ஏற்பட்ட பல்வேறு புரட்சிகர மாற்றங்கள் என்பன மறைந்து விட்ட சூழலில் உங்கள் அமைப்பின் ஜீவித நியாயம் பற்றிச் சொல்வீர்களா?

இன்ஸ்டிட்யூட் நிலவிய அமைப்பின் ஒரு பகுதியாகவே இருந்தது. பெரிய நிறவனங்களால் நிதி வழங்கப்பட்டு அதனாலேயே கட்டுப்படுத்தப்படுவதாகவே இருந்தது. அரசு நலன்களுக்காகவே அது பேசியது. அதேவேளை நிற இன உறவுகளுக்காக சுதந்திரமான கல்வித்துறை ஆய்வுகள் மேற்கொள்வதாக அது பாசாங்கு செய்தது. ஆனால் நிறவாதம், காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், மூன்றாம் உலக நாடுகளின் நிலை பற்றின அதன் ஆய்வுகளில் இப்பிரச்சினைகள் பற்றின அதன் ஆய்வுகளில், இப்பிரச்சினைகள் பற்றி குறைந்தபட்ச அக்கறையே இருந்தது. இந்தப் பார்வை இன்ஸ்டிட்யூட்டின் கருத்தரங்குகளிலும் பத்திரிகைகளிலும் அங்கு வேலை செய்பவர்களால் முன்வைக்கப்பட்டது. அப்போதே போராட்டம் தொடங்கி விட்டது. போராட்டத்தின் மூலம் எங்கேயோ இருந்தபோதிலும், போராட்டம் இன்ஸ்ட்யூட்டில் வேலை செய்தோர் மற்றும் ஆய்வாளர்களின் கல்வித்துறை ஆய்வுச் சுதந்திரம் என்ற முறையிலே வெளிப்பட்டது பத்திரிகைச் சுதந்திரம் என்கிற கருத்துருவத்தின் வழியே வெளிப்பட்டது. இந்த பிரச்சினைக்குப் பின்னால், நிறவாதத்தை ஒழிப்பதில் அக்கறையின்மை, அரசு நிறவாதத்தை ஆய்வுமூலம் நியாயப்படுத்தல், அரசு நிறவாதத்துக்கு நியாயம் வழங்குதல் போன்றவைகள் நிலவிவந்தன. பாக்கி எனும் வசை மொழி பரவல், பொலிஸ் வன்முறை, பள்ளிக்கூட நிறஒதுக்கல், பாஸ்போர்ட் ரெய்ட் போன்ற கொடுமைகள் தவிர்க்க முடியாமல் இன்ஸ்டிட்யூட்டை நெருக்கடிக்குக் கொண்டு சென்றது. நமது மனசாட்சி எழுந்துநின்றது. மாற்றம் வந்தே ஆகவேண்டும் என்ற நிலை வந்தது.

உங்கள் இரண்டாவது பகுதிக் கேள்விதான் மிக முக்கியமானது. இந்தக் கதையைச் சொல்லுமளவு நாங்கள் எப்படி ஜீவித்தோம் எனும் கேள்வி. நிறைய நெருக்கடிகள். முதலில் நிதி நெருக்கடி. ஏனெனில் பழைய நிதியை முழுவதும் பழைய ஆதிக்கக்காரர்களே கட்டுப்படுத்தி வந்தனர். இதற்கான விடை நான் நம்புகிறபடி இன்ஸ்டிட்யூட்டின் அலுவலர்கள் உறுப்பினர்களில்தான் தங்கியிருந்தது. வேலையில் ஈடுபாடு செலுத்தி, நிறவாதத்திற்கு எதிராக மக்களை கற்பிக்க வேண்டும் எனும் உறுதியுடன், இன்ஸ்டிட்யூட்டின் ஆதாரவளங்களையும் செயல்பாட்டையும் அதற்காக உபயோகிக்க வேண்டும். நிறவாதத்தால் பாதிக் கப்பட்டோர்க்கு உதவ வேண்டும் என்று செயல்பட்டது, பேசியது என உறுதியோடு நின்றனர். இன்ஸ்டிட்யூட் சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்ந்தது. களஞ்சியத்தின் பொருட்டே சிந்தித்தோம். கறுப்பு மற்றும் மூன்றாம் உலக மக்களின் களஞ்சியம். எமது அறிவுச் செயல்முறை விடுதலைக்காகவே இருந்தது. நிதி கிடைத்ததோ இல்லையோ, நாங்கள் செயல்பட்டோம். பொறுப்புடன், கறுப்பு மற்றும் மூன்றாம் உலகச் செயல்பாட்டுக் குழுக்கள் என்று சாத்தியமில்லாமல் இருந்ததை மீறியும் செயல்பட்டோம். ஒன்றிணைந்து செயல்பட்டோம்.

எமது சொந்த தேர்வுகளின் வழி செயல்பட்டோம். விவாதப் பொருளை மாற்றினோம். முன்பின் நுழைந்திராத ஆனால் நுழைந்தே ஆகவேண்டிய, கல்வித்துறை, பத்திரிகை, ஊடகம் அரசு போன்றவற்றில் ஊடுருவிச் செயல்பட்டோம். இத்தகைய பிரதேசங்களில் நாங்கள் தலைமை பெற்றோம். பல்வேறு சமூகக் குழுக்கள், அமைப்புக்கள் செயல்படக் காத்திருந்த தளங்களில் செயல்பாட்டுக்கு நாங்கள் தலைமையேற்றோம். இவ்வாறு இன்ஸ்டிட்யூட் ஆய்வமைப்பு, தொழில்ரீதியான அமைப்பு என்பதிலின்று இயக்கமாக, சேவகனாக மாறியது.

● *உங்களது பத்திரிகை Race and Class இனம், நிறம் மற்றும் வர்க்கங்களுக்கு இடையிலான உறவு குறித்துப் பேசுகிறது. 1960களில் இது அர்த்தமுள்ளதாக அமெரிக்க ஐரோப்பிய அனுபவத்தில் தோன்றியது. ஆனால் தற்போது இவைகளுக்கிடையிலான உறவில் இணக்கம் காண்பது கடினமாகவுள்ளதென சொல்லப்படுகிறது. நீங்கள் பிரக்ஞை பூர்வமாக உங்கள் பத்திரிகையை வர்க்கம். இனம், நிறம், என இணக்கம் கொண்டு நடத்தி வருகிறீர்கள். அதன் சித்தாந்த உள்ளடக்கம் பற்றிக் கூறுவீர்களா?*

1903இல் W.E.B.Dubois என்ன சொன்னார் என்று ஞாபகப்படுத்திக் கொள்கிறீர்களா? 'இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினை என்பது நிறத்தின் வழி' இன்று நிறம் தான் வறுமை மற்றும் அதிகாரம் போன்றவற்றின் வழி. நாங்கள் வெள்ளையர் அல்லாதவர்கள். நாங்கள் ஏழைகள். நாங்கள்

www.padippakam.com

அதிகாரமற்றவர்கள். முதலாளித்துவம் இவர்களுக்கிடையிலான உறவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம் இதன் தொடர்ச்சியாக இருக்கிறது. விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசில கறுப்பு மேட்டுக்குடியினர் தவிர, பெரும் பாலான வெள்ளையரல்லாத உலகமக்கள் ஏழைகள், தமது வறுமைபற்றி ஏதும் செய்ய இயலாதவர்கள். அதிகாரமற்றவர்கள். ஏகாதிபத்தியத்தினால் அவர்கள் அவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறார்கள். உழைக்கும் மக்களின் நோக்கத்துக்காகப் போராடாமல் நீங்கள் கறுப்பு மக்களுக்காகப் போராட முடியாது. கறுப்புச் சுரண்டலை எதிர்த்துப் போராடாமல் நீங்கள் கறுப்பு ஒடுக்குமுறையை மட்டும் எதிர்த்தீர்களானால் ஒன்றுக்கு மற்றதை பிணை யாக வைப்பதில்தான் நீங்கள் போய்முடிவீர்கள்.


மூன்றாம் உலக நாடுகளில் கடந்த 15 - 20 ஆண்டுகளாக நடந்துவருப வைகள் கவனம் பெறவில்லை. இடதுசாரிகள் இவை பற்றிய அக்கறை கொள்வதில்லை. உலகு தழுவிய தொழிற்சாலைகளில் (global factory) மிகக் குறைந்த கூலிபெறுகிற மிகக் கேவலமான வேலை செய்கிறவர்கள் இன்று மூன்றாம் உலக நாடுகளில்தான் இருக்கிறார்கள். ஐரோப்பாவில் அமெரிக் காவில் இல்லை. இங்கேயும் வெளிக்குத் தெரியாத குடியேற்றக்காரர்கள்தான் (கறுப்பர், ஆசியர்) கடைகளிலும் சேவைகளிலும் ஈடுபடுகிறார்கள். உற்பத்தி சக்திகளில் குணரீதியில் ஏற்பட்டிருக்கிற உலகளாவிய மாற்றங்களைக் காண மேற்கின் இடதுசாரிகள் தவறுகிறார்கள். தமது வாழ்வு மேம்பாடு உலகத் தொழிலாளி வர்க்கத்தின் சுரண்டலின் மீதுதான் சார்ந்திருக்கிறது என்பதைக் காணத் தவறுகிறார்கள். மாறாக அவர்கள் 'தொழிலாளி வர்க் கத்துக்கு விடை கொடுப்போம்' என்கிறார்கள். (அதாவது தங்கள் வர்க்கம் மட்டுமே இருக்கிறது என நினைத்துக் கொண்டு) புதிய சக்திகளான பெண்கள் இயக்கம், கறுப்பர்கள், சமப்பாலுறவாளர்கள், பசுமை இயக் கக்காரர்கள் போன்றோர்களை மட்டுமே முன்னிறுத்தி, இவர்களே சமூக மாற்றத்தின் பிரதிநிதிகள் என்கிறமாதிரி முன்னிறுத்துகிறார்கள். மூன்றாம் உலக நாடுகளை மேற்கின் கருணைக்கு நிற்கும் புறப்பொருட்களாக இந்த மேற்கின் இடதுசாரிகள் காண்கிறார்கள்.

Race and Class இவ்விடயத்தில் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்கிறது. நிறவாதத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்குமான உறவை Symbiotic ஆனதாக நாம் பார்க்கிறோம். அதாவது கறுப்பு மற்றும் மூன் றாம் உலக மக்கள் 'முதல் உலகில்' இருப்பதானது நேரடியாக 'முதல் உலகின்' பன்னாட்டுக் கம்பெனிகள் வடிவில், மூன்றாம் உலக வல்லரசு இயந்திரமாக்குதல் போன்றவற்றோடு தொடர்புடையது. ஆனாலும் Race and Class நிற இனத்தை வர்க்கத்திலும் கீழானதாக கருதுவதில்லை. (subsumes) வர்க்க அடிப்படையில் நிறம் இனத்தைப் பார்க்கிறது. அதே வேளை வர்க்கப்போராட்டத்தின் இன நிறப் பரிமாணத்தையும் புரிந்து கொள்ள முனைகிறது. இதுதான் பிற பத்திரிகைகளில் இருந்து இடதுசாரி மார்க்ஸிஸ்ட் அல்லது மூன்றாம் உலக இதழ்களிலிருந்து எம்மை வித்தி யாசப்படுத்துகிறது. எங்களுக்கு அப்படி ஒரு வரையறை இருக்கவில்லை. ஆனால் இன்ஸ்ட்டியூட்டை மாற்றுவது தொடர்பான போராட்ட அனுபவத்தில் நாங்கள் ஒரு விமர்சன அளவீட்டை எட்டினோம். குறிப்பாக அறிவுச் செயல்பாடு குறித்த போராட்டத்தின் போது இதை நாம் காண்பித்தோம்.

ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக வரலாறுகளைத் திரித்து ஒன்றுக்கு எதிராக பிறிதொன்றை நிறுத்துவதற்கு எதிராக Race and Class செயல்ப டுகிறது. அது ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் பொது வரையறையைக் காண முயல்வதோடு பொதுவான போராட்டத்தையும் முன்னெடுக்க முனை கிறது. மூன்றாம் உலகப் போராட்டங்கள் பற்றி 'திமிங்கிலத்தின் வயிற்றுக்கு உள்ளிருந்தே' பகுப்பாய்வு செய்வது மாதிரி (ஜியார்ஜ் ஆர்வலின் வார்த் தைகள்: 1940ஆம் ஆண்டு Inside the whale எனும் புத்தகத்தை ஆர்வல் எழுதினார். இதே வார்த்தைகளை தனது Imagionary Homelands எனும் நூலிலும் ஸல்மான் ருஷ்டி கையாள்கிறார்: மொழிபெயர்ப்பாளர்) நாங்கள் எழுதுகிறோம். ஆனால் விடுதலை இயக்கங்களுக்கிடையில் சார்பு நிலைப்பாடு எடுப்பதோ, குறுங் குழு வாத நிலைப்பாடு எடுப்பதோ எமது நோக்கமல்ல. எப்படி போராட் டத்தை நடத்துவது என அறிவு றுத் துவதும் எமது நோக்கமல்ல.

Race and Class மூலம் ஒருவகை யான இடதுசாரி கலாசார ஏகாதிபத் தியத்திற்கு எதிரான அரணாக நாங் கள் நிற்கிறோம் - மேற்கின் அனுப வங்களை நேரடியாக மூன்றாம் உலக சமூகங்களுக்கு மேலேற்று வதை அந்தப் போக்கை நாம் மறு தலிக்கிறோம். மூன்றாம் உலகின் குறிப்பான போராட்டங்கள் இயக் கங்கள் போன்றவற்றினின்று நாம் கற்றுக் கொள்ள விரும்புகிறோம்.

Race and Class இதழில் அடிக்கடி மரபுவழியிலான கல்விசார் படிப்பின் வர்க்கச் சார்பினை நாம் அம்பலப்ப டுத்துகிறோம். எந்தக் கலாசாரக் கட் டமைப்பின் சார்பாக அவை எழுந் தன என அம்பலப்படுத்த முயல்கி றோம். சமூகவியல், வரலாறு, தத்து வம், விஞ்ஞானம், கணிதம் என முடிகிறவற்றிலெல்லாம் இதனை மேற்கொள்கிறோம். புதிய கல்விசார் ஆய்வை, வரலாற்று மீட்பை நாம் மேற்கொள்கிறோம். அது பிராட் வாட் டர் பண்ணை குடியிருப்பாளர்கள் ஆனாலும் சரி மாவ்மாவ் எழுச்சி ஆனாலும் சரி அனைத்துக்கும் மேலாக கோட்பாட்டுக்கும் தத்து வத்துக்கும் இடையிலான பிளவை நாங்கள் கடக்க முயல்கிறோம். வேர்மட்டங்களுக்கும் கல்வித்துறை ஆய்வுக்கும் பாலமாகச் செயல்பட முனைகிறோம். எந்த மக்களுக்கா கப் போராடுகிறோமோ அந்த மக்க




www.padippakam.com

ளுக்காக எழுதவே நாம் எப்போதும் எக்காலத்திலும் முயன்று வருகிறோம்.

● *நீங்கள் அடிக்கடி சொல்கிறீர்கள் 'கறுப்பு மக்களின் போராட்டம் என்பது சோஷலிசத்திற்காகத்தான்'. இன்றைய சூழலில் நீங்கள் இதை எப்படி விளக்குவீர்கள்?*

ஒடுக்கப்பட்ட மக்களின் எந்தப் போராட்டமாயினும் அது கறுப்பு மக்களோ, பெண்களோ எவராயினும், அப்போராட்டம் தங்களுக்கு மட்டுமே இருக்குமானால் மிகவும் ஒடுக் கப்பட்ட மக்கள், சுரண்டப்பட்ட மக்கள் பற்றிய கவலையைக் கொண்டிருக்கவில்லையெனில் - அது மிகக் குறுகியதும், சுயநலம் கொண்டதுமே ஆகும். அவை மனிதனின் இருத்தலை எவ்வகையிலும் மேம்படுத்தாது. அது ஒடுக்குமுறை அனுபவம் கொள்தலின் சாராம்சத்தை மறுப்பது என்பது மாத்திரமே அல்ல, அதன் அர்த்தத்தை உயிருள்ள தாக்காததும் ஆகும்.

ஆகவேதான் எனது எழுத்துக்கள் கறுப்பு மக்கள் போராட்டத்தின் விடுதலை அம்சங்களை வலியுறுத்துவது மட்டுமல்ல அந்தத் தளங்களின் பொருத்தப்பாட்டையும் தேடிச் சொல்கிறது. கறுப்பு மத்தியவர்க்கம், கறுப்பு சமூகக் குழுக்கள், கறுப்புக் கல்வியாளர்கள் எனது அக்கறைக் குரியவர்கள் அல்ல. எனது பிரச்சினை என்னவென்றால்: கறுப்பு மற்றும் மூன்றாம் உலக மக்களின் அனுபவம் என்ன, ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களின் அனுபவம் என்ன என்பதுதான். இதுதான் எனக்கு பிற ஒடுக்குமுறைகளைப் புரிந்து கொள்வதற்கான ஆதாரம், அதனின்றுதான் அனைவருக்குமான சமதர்மமான நீதியான, சுதந்திரமான ஒரு சோசலிச சமூகத்துக்கான போராட்டத்துக்கான உறுதி பிறக்கிறது.



எந்த விடுதலைப் போராட்டமும், அது சோசலிசத்துக்கானதாக இல்லாத போது கொடுங்கோன்மையில்தான் சென்று முடியும். வழிகள்தான் இறுதி இலக்குகளும். இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை. விடுதலைக்குப் பின்பு சோசலிசம் என்பது இல்லை. சோசலிசம் என்பது விடுதலையை வெல்வதற்கான இயக்கப்போக்காகும்.

● *புதிய தொழில்நுட்பம் - சிலிக்கன் சில்லுப் புரட்சி - தகவல் தொழில் நுட்பம் போன்றவை பற்றி நீங்கள் தீர்மானமாகப் பேசி வருகிறீர்கள். இவைபற்றி, மூன்றாம் உலக நாடுகளில் இவற்றின் தாக்கம் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

● *நவீனகால ஏகாதிபத்தியம் பற்றிய உங்கள் ஆய்வு பிரசித்தமாகப் பேசப்படும் ஒரு கருத்தமைவு. பாட்டாளி வர்க்கம் தன் புரட்சிகரத் தன்மையை இழந்து விட்டது என்கிறார்கள். Micro chip Revolution வர்க்க உறவுகளை முற்றிலும் மாற்றி அமைத்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இச்சூழலில் ஏகாதிபத்தியம், ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம், மூன்றாம் உலக மக்களின் போராட்டங்கள் இவற்றுக்கிடையிலான உறவு பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

● *புதிய சமூக இயக்கங்கள் பற்றிய (New Social Movements) உங்கள் மதிப்பீடுகள் எத்தகையவை?*

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் Imperialism in the Silican Age என்ற கட்டுரையை எழுதினேன். 'கூட்டுச் சேரா நாடுகள்' என்ற சொல்லப்படுகிற மூன்றாம் உலக அரசுகள் உருவாக்கிய பொருளாதார அரசியல் சுயாதீன வளர்ச்சி அமைப்புகள் பின் வெற்றி பெறாமல் சிதைந்தன என்ற ஆய்விலிருந்துதான் எனது கருத்துக்கள் அமைவு பெற்றன.

நான் மிகக் கடுமையாக ஐரோப்பிய இடதுசாரிகளோடு முரண்படுகிற ஒரு அம்சம் அதிநகரமயமான ஐரோப்பிய தொழிலாளி வர்க்கத்தைத்தான் இவர்கள் தொழிலாளி வர்க்கம் பற்றிப் பேசுகிறபோது குறிப்பிடுகிறார்கள். இந்த இவர்களின் பார்வைக்கு எதிர்மறைதான் தொழிலாளி வர்க்கம் பற்றி எனது பார்வை. ஐரோப்பிய மையவாதத்திற்கெதிரான மூன்றாம் உலகின் தொழிலாளி வர்க்கம் பற்றியது அது. எனது கருத்து என்னவெனில் மேற்கின் அதிநகரமான தொழிலாளி வர்க்கமல்ல இன்று சுரண்டப்படுகிறது, மாறாக மூன்றாம் உலகின் தொழிலாளி வர்க்கம். எனது இரண்டாவது அக்கறை தொழிலாளி வர்க்கத்தினிடையிலான உறவு எவ்வாறு இங்கு மாற்றம் பெற்றிருக்கிறது என்பது. தொழிலாளி வர்க்கம். இங்கு ஒரே இடத்தில் செறிந்து காணப்படவில்லை. ஏனெனில் மூலதனம் இப்போது இதன் தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டு இடத்துக்கு இடம் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளிவர்க்கம் இப்போது Unskilled, Skilled என்று பிரிக்கப்பட்டுள்ளது. மாறாக அதி உயர்ந்த Skilled உழைப்புச் சக்தி ஒரு புறம் விளிம்பு நிலையிலுள்ள Unskilled உழைப்புச்சக்தி மறுபுறமென ஆகியி ருக்கிறது. இந்த உழைப்புச்சக்தி தற்காலிகமானதமாக, அர்த்தமிழந்து போகக் கூடியதாக இருக்கிறது. இதனால்தான் தொழிலாளி வர்க்க இயக் கங்கள் சிதறுண்டு போய்விட்டன. மூன்றாவதாக சுரண்டல் விகிதம் தொழில் முறை மூலதனத்தைக் கொண்ட இடத்திலிருப்பதைவிட மிக உயர்ந்த அளவிலாகி விட்டிருக்கிறது மூன்றாம் உலக நாடுகளில்.

இவ்விடத்தில் Post - Fordist சித்தாந்திகளோடு நான் உடன்படுகிறேன். தொழில்நுட்ப புரட்சியினால்:

1. உழைப்புக் குவிப்பு சிதறிவிட்டது.

www.padippakam.com

2. உழைப்புச்சக்தி ஒன்றிணைவது தகர்ந்து விட்டது.

3. ' மூலதனம் சார்புநிலையில் உழைப்பிலிருந்து 'விமோசனம்' பெற்றதாகி விட்டது.

இவையெல்லாம் மிகுந்த கசப்புடன் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மைகள். இவைகளை நாம் எதிர்கொள்ளவில்லையானால் நாம் மறுபடியும் நட்பை திரட்டிக்கொள்ள முடியாது. மாற்றத்துக்கான சக்தி எது என இனம் காண முடியாது.

சூழலியலாளர்கள், பெண்நிலைவாதிகள், சமப்பாலுறவாளர்கள், Anarchists and Road Protestors என்று புதிய சமூக இயக்கங்கள் செயல்படுகின்றன. இந்த எல்லா சமூக இயக்கங்களிலும் வதிகிற கீழ்நிலை மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மையமாகக் கொண்டு இந்த இயக்கங்கள் செயல்முறையை வகுத்துக்கொள்ளாவிட்டால் இவ்வகை இயக்கங்கள் இந்த இயக்கங்களை மேற்கொள்ளும் 'வர்க்கத்தவரின்' சுயலாபங்களுக்கும் தம் வாழ்வின் மேன்மைக்கும் மட்டுமே பயன்படும்.

இங்கு Equal Opportunities கொள்கையை வலியுறுத்தும் ஆபிரிக்க, ஆசிய மக்கள் புதிய மத்தியதரவர்க்கமாக உருவாகி இருக்கிறார்கள். இவர்களைப்பற்றி இவர்கள் உரிமைகள் பற்றி நான் பேச விரும்பவில்லை. எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் எல்லா இயக்கத்தின் அடிநாதமாகவும் ஒடுக்கப்பட்டோர், கடைக் கோடி மக்களின் நலன்களையே நான் முன்னிறுத்துகிறேன்.

இப்போது அடையாள அரசியலின் பெயரில், பல்கலாசாரத்தின் பெயரில் பிரிட்டிஷ் அரசாங்கம் நிதியுதவி கொடுத்து ஆசிய, ஆப்ரிக்க மக்கள் மத்தியில் நிரந்தரமான பிளவுகளை உருவாக்கிவிட்டது.

இப்போது சுரண்டல், வர்க்க, நிற அடிப்படையில் அரசியல் இல்லை. மாறாக அடையாள அரசியலாக ஆகிவிட்டது. பல்கலாசார அரசியலாக ஆகி விட்டது. இச்சூழலில் அகதிகள், அரசியல் அடைக்கலம் கோருவோர் போன்றோரோடு இங்குள்ள கறுப்பு மக்கள் பொதுவான ஒருமைப்பாட்டுக்கான அடிப்படைகளை காண வேண்டும்.

● *பல்வேறு மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக எழுதிவந்த நீங்கள் உங்கள் பத்திரிகையில் ஸல்மான் ருஷ்டி பிரச்சினை பற்றி துப்புரவாக எழுதாமல் இருப்பதன் காரணம் என்ன? எழுத்தாளனின் சுதந்திரம் பற்றி நீங்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறீர்கள்?*

இக்கேள்வி பல்வேறு முறைகள் கேட்கப்பட்டபோதும் நான் இங்கிருக்கும் பத்திரிகைகளுக்கும் பதில் சொல்லாமல் தவிர்த்து வந்தேன். எங்கள் பத்திரிகையில் அந்த விசயம் பற்றி முற்றிலும் எழுதுவதைத் தவிர்த்தோம்; காரணம் ருஷ்டி பிரச்சினையில் வெள்ளையர்கள் மற்றும் பிரிட்டிஷ் அரசின் ஆர்வத்தில் இருக்கும் இனவாதத் தன்மை.

எந்த எழுத்தாளனதும், எந்த மனிதனதும் வெளியீட்டுச் சுதந்திரம் கௌரவத்திற்கு உரியதுதான். அதற்காக நான் குரல் கொடுக்கிறேன். அதேவேளை அதைவிடவும் முக்கியமான விசயங்கள் இருக்கின்றன. Bradford வீதிகளில் நள்ளிரவில் ஒரு முஸ்லிம் பெண் சுதந்திரமாக நடந்து போகும் சுதந்திரம்தான் எனக்கு முக்கியம்.

ஒருபக்கத்தில் இனவாதத்தை நியாயப்படுத்துவதற்காக முஸ்லிம் வெறுப்பை நியாயப்படுத்துவதற்காகவே Civilized ஆன சுதந்திர எழுத்தாளர் ருஷ்டியின் பிரச்சினையை இந்த அரசாங்கமும் வெள்ளை அறிவுஜீவிகளும் கையாண்டார்கள்.

இந்தப் பிரச்சினையில் முழுக்கவும் ருஷ்டியின் சுதந்திரத்தை ஆதரித்து முஸ்லிம் எதிர்ப்பாளராகவே பிரிட்டனில் நான் இயங்கவேண்டும். அல்லது பிரிட்டிஷ் அரசாங்கம் வெள்ளை அறிவுஜீவிகளின் முஸ்லிம் வெறுப்புத் தன்மைக்கு இப்பிரச்சினையைக் கையாள்வதை விமர்சித்து நான் முஸ்லிம் மக்களோடு நிற்க வேண்டும்.

தனித்துவமான சுயாதீனமான கறுப்பின மக்களின் சுதந்திரத்திற்காகவே நான் நிற்க முடிவு செய்தேன்.

● *போஸ்ட் மாடர்னிஸம், போஸ்ட் ஸ்ட்ரக்சுரலிஸம் அனைத்து சிந்தனை அமைப்புக்கும் பின்னால் போஸ்ட் அல்லது Pre போட்டுக்கொள்வது இப்போது ஒரு மோஸ்தராகி வருகிறது. இவை பற்றி ஐரோப்பியப் பின்னணியில் நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?*

தொழில்நுட்பப் புரட்சி பல்வேறு அரசியல் போக்குகளை உருவாக்கியிருக்கிறது. பின் - மார்க்ஸியம் (அல்லது மார்க்ஸியம் கடந்த இசம்) வரலாற்றின் இறுதி, பின், காலனித்துவம், பின் - நவீனத்துவம் என ஐபடிஸ்பா புரட்சி இன்டர்னெட் புரட்சி என்கிறார்கள். ஆம், பரந்து பட்ட ஒரு விவசாய ராணுவமான ஐபடிஸ்பா இயக்கம் தொழில் நுட்ப முதலாளியத்துக்குள் வாழ நேர்ந்திருக்கிறது. இவற்றின் வளங்களை எதிர் நலன்களுக்கு பயன்படுத்த நேர்ந்திருக்கிறது. அதனால்தான் e -mail மூலம் தம் எழுச்சியை உலகுக்கு அறிவித்தார்கள். மனங்களையும் மூளையையும் சென்றுசேர தகவல் சாதனத்தையும் கைப்பற்ற வேண்டியது முக்கியம். ஆனால் மாறிய மனங்கள் யதார்த்தத்தை மாற்றிவிடாது. அப்போதும் அங்கு



www.padippakam.com

புரட்சியை ஏற்படுத்த மக்கள் வேண்டும். இதற்கப்பால் கிராமப்புற மெக்சிக் கோவில் மின்சாரமே இல்லை என்பதை இங்கு ஞாபகம் வைக்கவேண்டும். பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேல் அரச கட்டுப்பாட்டையும் தாண்டி இன்ட்டிபாதாவே இணைக்க முடிகிறது. ஆனால் தலைமை பங்குபெற முடியாது. பர்மாவிலும் கலகக்காரர்கள் ஒருவரோடு ஒருவரை e-mailஇல் இணைக்க முடியும். ஆனால் பூமியில் ஒரே இடத்தில் இணைக்க முடியாது. நான் முன்பே சொன்னபடி புரட்சியை சாதிக்க மக்கள் வேண்டும் பிற்பாடு இன்ரர்னெட் வேண்டும். ஒரே தளத்தில் ஒரே வகையில் கொண்டு சேர்க்கும் இவை மறுதளத்தில் விலக்கியும் விடுகிறது.

இதுதான் பின் - நவீனத்துவவாதிகளின் Typical ஆன குணம். போராட்டத்துக்குள் பங்குபெறாமலே அவைகளை ஸ்வீகரித்துக் கொள்வார்கள். கடைசியில் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்வதைத் தவிர வேறொன்றும் நடக்காது.

இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்தில் இந்த அறிவுஜீவிகள் பலம்வாய்ந்த நிலைகளில் இருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்கள் அது நம்யுகத்தில் ஆளும் கருத்துக்களாக இல்லாதிருக்கலாம். ஆனால் அது கவர்ச்சிகரமான கருத்துக்கள். நம்காலத்தின் பாஷன் இவர்களை விமர்சித்து ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏனெனில் இவர்கள் எதிர்ப்புரட்சியாளர்கள், அபாயகரமானவர்கள், வஞ்சகமானவர்கள், மக்களை வஞ்சிப்பவர்கள். இந்த தகவல் தொழில்நுட்ப யுகம் அவர்களுக்கு வாய்ப்புக்களை கொடுத்திருக்கிறது. அதை அவர்கள் விற்கிறார்கள்.

அவர்களின் சில கருத்துக்களைப் பாருங்கள்: வரலாறு முடிந்துவிட்டது. இனி முரண்பாடுகள் என்பது இல்லை. முதலாளித்துவத்திற்கு முரண் சக்தி இல்லை. இயங்கியல் என்பது இல்லை. காலனியாதிக்கம் ஒரு நிலைப்பாடு. (Condition) அது தவிர்க்கவியலாதது. அதற்கும் வறுமைக்கும் நிறவாதத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இனி உறவில்லை. அதன்பின் மார்க்சியவாதிகளுக்கு பின்நவீனத்துவவாதிகளுக்கு எல்லாம் நிலையற்றவை. சிதறுண்டவை. அலைந்துகொண்டிருப்பவை. ஒரு Grand Narrative உம் இல்லை. பிரபஞ்ச உண்மைகள் என்பது இல்லை. பகுப்பாய்வை மறுத்து உரையாடல் புனிதப்பட்டுவிட்டது. கட்டமைப்பை மறுத்து கட்டுடைப்பு புனிதப்பட்டுவிட்டது. தற்காலிகத் தன்மை நிரந்தரத்தன்மையை மறுத்து புனிதப்பட்டுவிட்டது.

ஆனால் மிருகங்கள்தான் காலத்தில் வாழ்கிறது. மனிதகுலம் நிரந்தரத்தில் வாழ்கிறது. ஆகவேதான் நமக்கு நினைவுகள், மரபு, மதிப்பீடுகள், தரிசனம் எல்லாமும் இருக்கின்றது. எல்லாம் குறுகப்பார்வை, அலைபவை என்பது தனிநபர் அகந்தையின் தத்துவம். சுயநலத்திற்கு பிரதி. சுயநலத்திற்கு அறிவுபூர்வமான விளக்கம் இதிலிருந்து தான் இந்த கலாசார அடிப்படையினின்றுதான் உலக முதலாளித்துவம் அதிகாரம் பெறுகிறது. பின் மார்க்சியவாதிகள் நிஜ உலகத்தில் புனிதமான வர்க்கமற்ற சமூகத்திற்கான தேடுதலை விட்டுவிட்டார்கள். மாறாக சொர்க்கம் Virtual Reality இன் வாசலில் இருக்கிறதென்று காத்திருக்கிறார்கள்.

இதை வேறு வகையில் சொல்வதானால் இந்த புதிய தொழில்நுட்பம் பிரம்மையை மாய நிஜமாக காண்பிக்கிறது. இந்த உலகம் வீட்டில் உருவாக்கப்படுவதால் நீங்கள் இந்த பிரமையில் வாழலாம். ஆகவே தனிமையான உலகத்தில் நீங்கள் தனியனில்லை. வர்க்க முரண்பாடு உள்ள உலகத்தில் உங்களுக்கு வர்க்கம் இல்லை. பின் மார்க்சியம் Cyper space யுகத்தின் கருத்தியல்.

இப்போது நிறைய கலாசார நிர்ணயம் பற்றி அடையாள அரசியல் பற்றி பேசப்படுகிறது. பொருளாதாரப் போரபாயம் அரசியல் போராட்டம் இரண்டாம் பட்சமாகி விட்டது. பிரிட்டனில் Democratic Left பழைய கம்யூனிஸ்டுகள் சுரண்டல் அமைப்புடன் தட்சரின் வாக்குறுதி அரசியலின் உரையாடலுக்குள் கரைந்து விடுவதுதான் அவர்கள் அரசியல் என்கிறார்கள். மார்க்சியம் முடிவு பெற்றுவிட்டதாக அவர்கள் கூறுகிறார்கள் New Times என்று பின் -சோவியத் பின் - கிழக்கு ஐரோப்பிய, தகவல் தொழில்நுட்ப யுகத்தை குறிப்பிடுகிறார்கள். அரசியல் போராட்டங்களை கைவிட கோருகிறார்கள். இவர்களைப் பொறுத்து இவர்களின் உலகம் என்பது மூன்றாம் உலக மக்கள் தவிர்த்த உலகம்தான்.

இவர்களது கருத்தியல் பின் நவீனத்துவக் கருத்தியல் தான் போராட்டத்தின் பக்கம் நிற்பதாகப் பாவனை செய்வார்கள். ஆனால் யதார்த்தத்தில் போராட்டங்களுக்கு எதிராகவே இவர்களின் செயல் இருக்க முடியும். இந்த கலாசார நிர்ணயவாதம் குறித்து நாம் விமர்சனபூர்வமாக இயங்க வேண்டும்.

● *காலனிய சிந்தனை நீக்கம், கறுப்பு அறிவுஜீவிகளின் சிந்தனா விடுதலை பற்றி சொல்லிவருகிறீர்கள். கறுப்பு அறிவுஜீவிகளின் மனோவிடுதலைக்கு தடையாக இருப்பவையாக நீங்கள் கருதுபவை என்ன?*

இந்தியாவிலிருந்து உதாரணம் சொல்கிறேன். காந்தியை ஒருவர் இவ்வாறு தான் பார்க்கவேண்டும். அவரது கோட்பாடு அவரது செயல் போன்றவற்றோடு தொடர்புபடுத்தி பார்க்க வேண்டும். அந்த மக்களின் மரபுகளோடு தொடர்புபடுத்தி பார்க்க வேண்டும். அந்த 'அரை நிர்வாணப் பக்கிரி (half - naked Fakir) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மாபெரும் அதி



www.padippakam.com




காரத்தை கோட்பாடு நடைமுறை மரபு என ஒன்றிணைத்து முறியடித்தார்.

பின்னோக்கிப்போயப் பழைய இந்திய இலக்கியங்களையும் கலைகளை யும் பார்க்க வேண்டும். இதில் கவிஞன் கவிதையை விட முக்கியத்துவம் குறைந்தவன். கலையுடன் ஒப்பிட கலைஞன் அடையாளம் அற்றவன். பெஞ்சமின் லோறன்ட் சொல்கிறபடி இந்திய கலை ஒரு சமூகத்தின் வரலாறு பற்றியவை. அது தனிப்பட்ட கலைஞர்களின் வரலாற்றை விட அதிகம் கோருவதாக இருக்கிறது. கலைஞன் எந்த தனிநபரையும் போலவே அறிவுஜீவியோ அல்லது வேறொருவரோ சமூகத்து உரியவன். சமூகம் அவனுக்கு உரியதல்ல. அவன் வெளியிடுகிறவை அதிகளவு அவனது சொந்த அனுபவ உண்மையல்ல. மாறாக அவன் அங்கமாக இருக்கிற கூட்டுத் தரிசனத்தையே அவன் வெளியிடுகிறான். அவனுக்கு மட்டுமே அத்யந்தமான மொழியில் அவனுக்காகவும் அவனது சகபாடிகளுக்காகவும் அவன் பேசவில்லை.



மாறாக அதிகம் தெரிந்த மொழியில் அல்லது குறியீடுகளில் உண்மையின் பொது மொழியில் பேசுகிறான். intellectual arroganceக்கு நாம் விரும்பும் சமூகங்களில் இடமில்லை என்கிறார் நைரரே. காலனியாதிக்கத்துக்கு உட்பட்ட மனிதனின் மொழி இன்னொரு மொழி. பிறிதொரு மனிதனின் மொழி. பெனான் சொல்கிறபடி 'ஒருமனிதனின் முழு உலகமும் அவனது சொந்த மொழியின் மூலம் தான் வெளிப்படுகிறது, பொருத்தப்பாடுடையதாகிறது! பிற மனிதனின் மொழி உருவாக்கும் எமக்கான கடவுள்கூட எமக்கு அன்னியக் கடவுள்தான். இந்தக் காலனிய மொழியை 'வெள்ளைமயமான' அதன் இலக்கணத்தை, உச்சரிப்பை அதன் மொழித் தொகுதியை என்ன செய்யலாம்? ஜெனே சொல்கிறபடி 'ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்த மொழியை ஒப்புக்கொள்வது, ஒப்புக்கொண்டு எவ்வளவு அதைச் சிதைக்கமுடியுமோ அவ்வளவு அதை புத்திசாலித்தனமாகச் சிதைக்க வேண்டும், வெள்ளை மனிதனை அவனது பொறியிலேயே சிக்கவைக்க வேண்டும். அவனது இருட்டில் அவனை ஆழ்த்தவேண்டும். அவன் இருக்கவே, அவன் பார்த்துக் கொண்டிருக்கவே அம்மொழியை விடுதலை செய்யவேண்டும்; மொழித் தொகுதி, ஸப்தம், எல்லாம் அரசியல் நடவடிக்கைகள்தான். எவ்வாறு நிகழ்வுகள் அனுபவப்பட்டனவோ அதை அவ்வாறே வெளியிட்டவைதான் இவை! ஆகவே மொழியை நிறவாதம், இனவாதம் காலனியாதிக்கத்தினின்று விடுவியுங்கள். சிந்தனையை விடுவியுங்கள்.

ஆங்கிலத்தினின்று நிறைய தமிழுக்கு மொழியாக்கம் செய்வதைவிட தமிழிலிருந்து நிறையச் செய்யுங்கள். மூன்றாம் உலகின் வளமான இலக்கியங்களை காலனிய மொழிகளுக்குள் கொண்டு வாருங்கள். கம்பனை, வள்ளுவனை, நமது மகாகவி பாரதியை ஆங்கிலத்துக்குக் கொண்டு வாருங்கள்.

கணிதம், கலை, சமூகவியல், வரலாறு என அனைத்திலும் காலனிய சிந்தனை நீக்கம் நிகழவேண்டும். மொழியை விடுதலை செய்வதன் மூலம் தான் நமது சிந்தனையை நமது வரலாற்றை நமது சமூகத்தை விடுதலை செய்யமுடியும்.

● *மூன்றாம் உலகின் அறிவுஜீவியாக மேற்கில் உங்கள் அனுபவம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

நான் என்னை அறிவுஜீவி என்று குறிப்பிடுவதை ஒப்புக்கொள்வதில்லை. ஏனெனில் உலகில் இந்த So called அறிவுஜீவிகள் தங்களை ஒரு Sect ஆக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு சலுகைக்குரிய மேல் வர்க்கமாக காணப்படுகிறது. சொல் வேறு, செயல் வேறு அதாவது கோட்பாடு வேறு நடைமுறை வேறு என நான் நினைக்கவில்லை. கிராம்ஸி சொல்கிற Organic Intellectual எனும் கருத்தமைவு இவ்விடத்தில் தான் முக்கியத்துவம் பெறுகிறது. நான் என்னை ஒரு நடவடிக்கையாளன் Activist என்றே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் என்னை மார்க்ஸிஸ்ட் என சொல்லிக்கொள்ளலாமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னளவில் மார்க்சியம் சூத்திரம் அல்ல. நடைமுறைக்கான ஒரு பகுப்பாய்வுக் கருவி என்றே நான் புரிந்திருக்கிறேன். எப்போதும் நான் என்னை ஒரு மூன்றாம் உலகத்தவனாகவே உணருகின்றேன். மேற்கத்திய சமூகத்தின் Social Project வேறு. மூன்றாம் உலக சமூகங்களின் Project வேறு. நான் இங்கேயிருந்தாலும், எங்கேயிருந்தாலும் அந்த மூன்றாம் உலக சமூக செயல்போக்குபற்றியே சிந்திக்கிறேன், செயல்படுகிறேன்.

● *இந்திய, ஈழத்து மனோவியலில் ஆபிரிக்க மக்களின் மீதான வெறுப்புக்கும் ஒதுக்கத்துக்கும் ஏதேனும் பலமான காரணங்கள் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?*

www.padippakam.com



Hinduism is the most racist religion in the world. இந்திய, ஈழமக்களின் வாழ்க்கையின் எல்லாத் தளங்களிலும் இந்த ஜாதீயத் தன்மை என்பது இருக்கிறது. மிகுந்த ஒதுக்கலையும் நிறவெறி இனவெறித்தன்மையையும் கொண்டது இந்துமதம்.

தன்சானியா, உகண்டா போன்ற நாடுகளுக்குச் சென்ற இந்தியர்களின் முதல் நோக்கமாக பணம் சம்பாதிப்பதுதான் இருந்தது. ஜாதீயத் தன்மை நிறவெறி ஒதுக்கலையும் இலாபம் சம்பாதிக்கும் தன்மை ஆபிரிக்க மக்களின் மீதான சுரண்டல் தன்மையையுமே கொண்டிருந்தது..

இஸ்லாமிய மதத்தில், புத்தமதத்தில் இந்த ஜாதீய ஒதுக்கல், நிறஒதுக்கல் இல்லை. ஆகவேதான் அம்பேத்கார் முஸ்லிம் மதத்துக்கோ புத்தமதத்துக்கோ ஜாதி ஒடுக்குமுறைக்குள்ளானவர்களை மாற்றினார். கோசாம்பி இந்திய வரலாற்றின் முழுமையிலும் மனிதத்தன்மையற்று நிலவிய இந்த ஜாதீயத்தன்மையைச் சுட்டிக் காட்டுகிறார்.

தென் ஆபிரிக்கா வாக்கெடுப்பில் ANC உடன் நிற்காது, நெல்சன் மண்டேலாவுக்கு எதிராக வெள்ளை நிர்வாகத்தை தென் - ஆபிரிக்க இந்தியர்கள் ஆதரிக்க இந்த மனோவியல்தான் காரணமாகிறது.

● *கலாசார ஏகாதிபத்தியம் பற்றி இப்போது நிறையப் பேசப்படுகிறது. அது குறித்து உங்களது அபிப்பிராயங்கள் என்ன? இங்கு நடக்கும் போராட்டங்களின் தலைமை சம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?*

வரலாற்றை காலனித்துவத்தினின்றுதான் தொடங்குவதாக இவர்கள் ஐரோப்பியர்கள் சாதிக்க முனைகிறார்கள். ஆய்வுகள் அவ்வாறே நிலவுகிறது. முன்காலனித்துவம், காலனித்துவம், பின் காலனித்துவம் என்று சகலவற்றையும் இவர்களே கற்று கொடுத்ததாகச் சொல்கிறார்கள். நிர்வாகம், அழகியல், வாழ்க்கை மதிப்பீடுகள் எல்லாம் இவர்களாலேயே எமக்கு நேர்ந்தது என்கிறார்கள். இவர்கள் அழித்தவை பற்றிய குற்றவுணர்வு இவர்களுக்கு இன்றும் இல்லை.


வெள்ளை அறிவுஜீவிகள், புரட்சிகரக் கட்சி, தொழிற்சங்கங்கள் என்று சொல்பவை ஆப்ரிக்க ஆசிய மக்களின் உரிமைப்போராட்டங்களின் திசைவழியைத் தீர்மானிக்க நினைக்கிறார்கள். எமது போராட்டங்களின் இலக்கும், திசைவடிவமும், நோக்குகளும் பல்வேறு தனித்தன்மைகள் கொண்டவை. இவைகளை நாமே தீர்மானித்து நாமே தலைமையேற்று நடத்த வேண்டும். பொதுவான போராட்டங்களும் உண்டு. அதுவும் கூட எமது மக்களை நாம் தலைமையேற்பது என்ற வழியிலேயே, பொதுவான புரிந்துணர்வு அங்கீகாரம் பகிர்ந்துகொள்ளுதல் நோக்கி வளர முடியும். இவ்வாறுதான் கறுப்பு வெள்ளை புரட்சியாளர்க்கிடையிலான புரிந்துணர்வு என்பதும் போராட்டத் தலைமை என்பதும் உருவாக முடியும்.

● *மிகமிகப் பர்சனலாக ஒரு கேள்வி. எங்கே இப்போது உங்கள் போராட்டம்? நீங்கள் நாடு அய்புவனாக இருப்பதாக தற்போது உணர்கிறீர்களா? நீங்கள் எங்கே சஞ்சரிக்கிறீர்கள்?*

நான் என்னில் சஞ்சரிக்கிறேன். எனது எல்லா அனுபவங்களிலும் நான் இருக்கிறேன், கலாசாரம், மதிப்பீடுகள், வரையறைகள் என நான் சென்று வந்த அனைத்திலும் நான் இருக்கிறேன். நான் ஒரு நாடு கடந்தவனாக என்னைக் கருதவில்லை. ஏனெனில் நான் எதிலிருந்து விலகியவனாக இருக்கிறேன் என என்னையே கேட்டுக்கொள்வேன். சொற்களில் வேண்டுமாயின் என் நாட்டினின்று அகன்றவனாக நானிருக்கலாம். ஆனால் இன்றும், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், எமது எல்லா எல்லைகளும் உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கும்போது, எமது வேர்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. சில இடங்களில், எமது சமூகத்தைப் புரிந்து கொள்ள அதில் நம்மைப் புரிந்துகொள்ள ஆதாரங்களையே பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாட்டில் நம் இடத்தை, கலாசாரத்தில் நம் இடத்தையே பார்க்கவேண்டும். என்னளவில் ‘அகன்றவனாக’ என்னைப் பார்ப்பதென்பது நான் எங்கிருந்து வந்தேனோ அந்த மூன்றாம் உலக மக்களின் கறுப்பு மக்களின் போராட்டங்களில் இருந்து ‘அகன்றவனாக’ இருந்தால்தான் நான் அப்படிப் பார்ப்பேன். நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே போராட்டம் இருக்கிறது. போராட்டம் அங்கும் இங்கும் எங்கும் இருக்கிறது. நிஜத்தில் இரட்டைப் பிரக்ஞை (Double Consciousness) நான் கொண்டிருக்கிறேன். சமூகத்தில் என் இடம், இங்கும் அங்கும் நிகழ்கிற கறுப்பு மற்றும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களில் எனது இடம். மற்றது மூன்றாம் உலக நாட்டு மக்களின் போராட்டத்தில் என் இடம், அங்கும் இங்கும் நடைபெறும் மூன்றாம் உலக நாடுகளின் அனுபவங்களில் என் இடம். நான் இவைகளிலிருந்து ‘அகன்றவன்’ இல்லை. நான் நேரடியான கால, இடத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவைகளில் நான் பங்குகொண்டிருப்பவன். ஆகவே ‘அகன்றிருத்தல்’ புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கே போராட்டமோ அங்கே என் இதயம் இருக்கும். ❑


www.padippakam.com





நீர்கொழும்புக் காட்சிகள் - S F T குணாளன்

www.padippakam.com





நீர்கொழும்புக் காட்சிகள் - S F T குணாளன்

www.padippakam.com

ஆர் சூடாமணி

# அவ்விருவர் மட்டுமே



இந்த நெருப்புக்குச்சி ஒரே உரசலில் பற்றிக்கொண்டால் அவர் உடம்பு சரியாகிவிடும்.

பற்றிக்கொண்டது.

இன்று பூக்காரி நித்தியமல்லி கொண்டுவந்தால் அவர் உடம்பு சரியாகிவிடும்.

கொண்டுவந்தாள்.

இந்தச் சாலையைக் கடப்பதற்குள் நாலு குழந்தைகள் தென்பட்டால் (அது ஒரு துவக்கப்பள்ளி அமைந்த சாலை) அவர் உடம்பு சரியாகிவிடும்.

தென்பட்டார்கள்.

சாரதா நம்பிக்கையைப் பிடிவாதமாய்ப் பற்றிக் கொண்டிருந்தாள். டாக்டர் "ஹீ இஸ் ஸிங்க்கிங், மிஸஸ் வேதகிரி. யாருக்கெல்லாம் சொல்லியனுப்பணுமோ அனுப்பிடுங்க" என்றபோதுகூட, அடிவயிற்றில் அதிர்ச்சி கல்லாய் உறைந்தாலும்கூட...

டாக்டர் கடவுளா என்ன?

பிள்ளைக்கு "உன் அப்பாவின் உடல்நிலை நன்றாயில்லை. நீ ஒரு நடை வந்து அவரைப் பார்த்தால் சரியாகிவிடும்" என்றுதான் எழுதினாளே தவிர "உன் அப்பாவுக்குக் கொள்ளிபோட வா" என்று எழுதவில்லை. அதுதான் நித்தியமல்லி வந்ததே! குழந்தைகள் தென்பட்டார்களே! நெருப்புக்குச்சி பற்றிக்கொண்டதே!

சாரதா விதியுடன் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்தாள். வேதகிரி நுரையீரல் கோளாறும் காய்ச்சலுமாய்ப் படுத்து மூன்று வாரங்களாகின்றன. நோய் வைத்தியத்துக்குக் கட்டுப்படவில்லை. அடையாய்க் கபம் கட்டி அடிவயிற்றிலிருந்து கிளம்பி மார்பைப் பிளந்துகொண்டு உடல் முழுவதையும் குலுக்கிப் போட்டு "கர் கர்" என்ற உரத்த ஓசையுடன் மூச்சு வெளியேறுகிறது. அதன் பிரயாசையைக் காணும்போது எந்தக் கணம் தாங்கமுடியாமல் நின்றுவிடுமோ என்று பயமாக இருந்தது.

எவ்வளவு கஷ்டப்படுகிறார், எவ்வளவு கஷ்டப்படுகிறார்... இத்தனை நல்ல ஆத்மாவைத் தெய்வம் இப்படித் துன்புறுத்தி... தெய்வமாவது

www.padippakam.com



தெய்வம். நான் கண்ட ஒரே தெய்வம் இதோ படுக்கையில் மயக்கமாய்ப் படுத்து மூச்சுவிடப் போராடிக்கொண்டிருக்கிறது.

துரும்பாக இளைத்துவிட்டார். எப்படி இருந்தவர்! சற்று சதைப்பூச்சான தேக வாகை 'ஆமாம், அதுக்கென்ன இப்போ?' என்பதுபோல் அநாயாசமாய் வகிக்கும் உயரம், வாளிப்பு. கருகருவென்ற தலைமுடி அறுபது வயதுக்குப்பிறகும் நரைக்க மறந்துவிட்டது. செவ்வரி ஓடிய பெரிய கண்களை விரித்து ஒரு பார்வை பார்த்தால் உலகின் கருணையெல்லாம் அதனுள் அடங்கி விடும்.

இந்த நைந்த எலும்புக்கூட்டுருவம் அவரே இல்லை. இது அவருடைய நிழல்கூட இல்லை. அவரது வெறும் நினைவு.

ooo

தஞ்சை. ஆடிப்பெருக்கு. காவேரிக் குளியல் முடித்துக்கொண்டு ஊர் திரும்பிய நாற்பத்தைந்து வயதான வங்கி அதிகாரி வேதகிரி தனியாகத் திரும்பவில்லை. அவருடன் இருபத்துநான்கு வயதான சாரதா, அவளுடைய இரண்டு வயதுப் பிள்ளை உமேஷ்.

ஒரு பெரிய வணிக நிறுவனத்தின் அதிகாரி ஒருவரின் வீட்டில் சமையலுக்கு உதவியாய் எடுபிடி வேலைகள் செய்துகொண்டிருந்த அநாதைப் பெண் சாரதாவுடன் எஜமானரின் மகன் விளையாடிவிட்டான். அவன் மோசடியைப் புரிந்துகொண்டவுடன் அவள் அங்கிருந்து விலகினாள். ஊரில் மானமாய்ப் பிழைக்க இரண்டு ரை வருஷம்போல் முயன்றாள். "மானங்கெட்டவளுக்கு மானமா!" என்று ஊரில் சிரிப்பு எழுந்தது. குழந்தையும் பிறந்துவிடவே சிரிப்பு அதிகமாயிற்று. அசிங்கமாயிற்று. படுக்கைக்கு அழைத்தது. தொல்லை தாங்கமுடியாமல் கடைசியில் அவள் காவேரிப் பெருக்கில் குழந்தையுடன் சேர்ந்து கஷ்டங்களை முடித்துக்கொள்ள முயன்றபோது வேதகிரி பார்த்துத் தடுத்தார். சிரித்தவர்கள் முன் ஒரு மஞ்சள் கயிற்றை அவள் கழுத்தில் கட்டினார்.

சென்னை திரும்பிய பின் புருவம் தூக்கியவர்களுக்கெல்லாம் "இவள் என் மனைவி, இவன் எங்கள் குழந்தை" என்று சலனமின்றி அறிமுகம் செய்தார்.

சென்னையிலும் சிரிப்புகள் எழாமல் இல்லை. சிரிப்பில் வியப்பு, ஏளனம். "சந்தைக்குப் போறவங்க மாடு பிடிச்சிட்டு வராப்பல இந்த ஆள் காவேரி ஸ்நானத்துக்குப் போய் மாட்டோடு கன்னுக்குட்டியுமில்ல பிடிச்சுகிட்டு வந்திருக்காரு!"


பாமரர்கள்தான் என்றில்லை. படித்தவர்களும் இதையே ஆங்கிலத்தில் சொல்லிச் சிரித்தார்கள்.

ooo

சாரதாவுக்கு பிரமை எளிதில் தீரவில்லை. அநாதைத்தனம், தங்கராஜு காட்டிய குறுங்கால வசந்தம், ஏமாற்றம், நெஞ்சமுறிவு, வாழ்க்கைப் போராட்டம், தற்கொலை முயற்சி, பிறகு - மீட்சி!

கனவுபோல் வந்த மீட்சி. கார், டீவி, டெலிஃபோன், வாக்வும் கிளீனர் போன்றவை அவள் வேலை செய்திருந்த வீடுகளில் பாராதவையல்ல. ஆனால் அவைகளைக் கொண்ட ஒரு வீடு இன்று அவள் வீடு. நொடியில் நிகழ்ந்த மாற்றம். பிச்சைக்காரியாய் உறங்கச் சென்று அரசகுமாரியாய்க் கண்விழித்த திகைப்பு.

இவை நிஜந்தானா? அவர் ஏன்



இவற்றை வழங்க வேண்டும்? ஆஜானுபாகுவாய் அவளைக் குனிந்து பார்ப்பவரைக் கண்டால் உடலில் ஓர் அச்சம் பூச்சியாய் ஊர்ந்தது. அவளறியாமலே பாதங்கள் பின்வாங்கின. சுயலாபம் இல்லாமல் யாராவது இப்படியெல்லாம் செய்வார்களா? திருமணம் செய்வதுபோல் பொய்த்தாலி கட்டிவிட்டு அனுபவித்துவிட்டு, பிறகு விபசார விடுதிக்கு விற்றுவிடுகிறார்களாமே சிலர், அந்த ரகமா? நாற்பத்தைந்து வயதாகியும் பிரம்மசாரி. ஏன்? இத்தகைய வாழ்வை இடைஞ்சலின்றி வாழவா? பெரிய மனித வெளித்தோற்றம் எதற்கு உத்தரவாதம்?

ஆனால் வேதகிரி அவளை நெருங்கக்கூட இல்லை. கீழ்ப்பாக்கத்திலிருந்த தம் ஆயிரத்து நானூறு சதுரஅடி, இரண்டு படுக்கையறை ஃப்ளாட்டுக்கு வந்துசேர்ந்ததுமே ஓர் அறையை அவளுக்குக் காட்டி "அம்மா சாரதா, இதான் இனி உன் ரூமாய் இருக்கும். உன்னுதும் குழந்தையுதும். நீ இங்கே எந்தக் கவலையும் இல்லாம பாதுகாப்பாய், நிம்மதியாய் இருக்கலாம்" என்றார். "ஏதாவது தேவைன்னா என்கிட்ட சொல்லு" என்றார். பிறகு மற்ற அறையில் தம் பெட்டியைத் திறந்து சாமான்களை எடுத்து ஒழுங்கு பண்ணினார். அது அவர் அறையாகவும் முதல் அறை சாரதாவுடையதாகவும் உருப்பெற்றன.

தம் குரலைக் கேட்டாலே அவள் லேசாய் அதிர்வதையும் தம் கண்களை நேராகப் பார்ப்பதைத் தவிர்ப்பதையும் சில நாட்கள் கவனித்தபோது ஒருநாள் சொன்னார்:

"அம்மா சாரதா! உன் இஷ்டம் இல்லாம நமக்குள் எதுவும் நிகழாது. நான் இந்த வீட்டுத்தலைவன் என்றால் நீ இந்த வீட்டுத்தலைவி. நாமிரண்டு பேரும் சமம். நம்முடையது எல்லாமே பரஸ்பரமானது. என்னிக்கும் அப்படித்தான் இருக்கும். பயமில்லாம இரு."

அப்போதுதான் முழுமையாய் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்தின் கனிவே ஓர் ஆசீர்வாதம்போல் இருந்தது. புன்னகை உதட்டிலிருந்து மட்டும் வரவில்லை கண்களிலிருந்து

www.padippakam.com



வந்தது. உள்ளத்திலிருந்து வந்தது. குளிர்ச்சியான மரநிழல் போல் இத மளித்தது.

அந்த நிழலில் அவள் வெம்மை சிறிது சிறிதாய்த் தணியலாயிற்று. அவர் ஒருபோதும் அவள் அறைக் குள் நுழையவில்லை. கதவுக்கு வெளியே நின்று "அம்மா சாரதா" என்று அழைத்துத்தான் எதுவும் சொன்னார். "ஆபீசுக்குப் போய்வ ரேன்" என்று அவளிடம் சொல்லிக் கொண்டுதான் செல்வார்.

வீட்டுத்தலைவி! அந்தப் பெயரை அவர் வாயால் கேட்டதும் தனக்கு ஓர் அந்தஸ்து வந்துவிட்டாற்போல் உணர்ந்தாள். தன் அறையைவிட்டு வெளிவரத் தயக்கம் குறைந்தது. டிவியையும் ஐஸ்பெட்டியையும் பார்ப் பதில் கூச்சம் குறைந்தது. அவர் பரம்பரைப் பணக்காரர். சொத்துள் ளவர். இந்த ஃப்ளாட் தவிர சொந்த ஊரில் வீடு, நிலம், தோப்பு எல் லாமே உண்டு. ஒரு கருணைச் செய லால் அந்த அனைத்து வளத்துக் கும் அவளை ஒரு சமபங்குதாரர் ஆக்கிவிட்டார்.

******

நினைக்க நினைக்க சாரதாவுக்கு வியப்புத் தீரவில்லை.

அந்த வீட்டுக்கு அவள் வந்த போது சமையற்கார அய்யரும் வேலைக்காரி மரகதமும் வெளிப் படையாகவே முகம் சுளித்தார்கள். எஜமானர் திடீரென்று எவளோ ஒரு பெண்ணையும் குழந்தையையும் அழைத்து வருகிறார். "என் பெண் டாட்டி, என் பிள்ளை" என்கிறார். எந்த மடையன் நம்புவான்? விஷ யத்தில் எங்கேயோ கோணல் இருக் கிறது. ஊருக்கெல்லாம் பிரம்மசாரி வேஷம். எங்கோ கண்காணாமல் ஒரு 'கீப்' இருந்திருக்கிறாள். கடை சியில் வீட்டுக்கே அழைத்துக் கொண்டு வந்துவிட்டார் கழிச டையை. 'கர்மம் கர்மம்' அப்படித் தான் பெண்சுகம் வேண்டியிருந் தால் இதுபோலவா மாநிறமாய், நெருங்க லாய்.... சே! நிகுநிகுவென்று ரேஸ் குதிரையாட்டம் ஒருத்தி கிடைக்க வில்லையா? இவர் உயரம் என்ன, கம்பீரம் என்ன, நிறம் என்ன! ராஜ சிகப்பு.

அய்யர் இப்படியெல்லாம் பேசிய பின் மரகதம் கேட்டாள்:

"ஏன் அய்யரே, அந்தப் புள்ள இவருக்குப் பொறந்ததுண்ணீங்க? எனக்கென்னமோ சமுசயமாத்தான் இருக்கு. ஒழுங்கா கல்யாணம் கட் டிப் பொறந்திருந்த புள்ளயாயி ருந்தா ஊரறிய கொண்டாடியிருக்க மாட்டாரு?"

"நூத்துல ஒரு பேச்சு. புண்யாச னம், நாமகரணம்னெல்லாம் ஊரைய ழைச்சு அமர்களப்படுத்தியிருக்க லாமே? எந்தப் பனாதிப் பயலுக்குப் பொறந்துதோ! கிரகசாரம் கிரக் சாரம்...."

ooo

அவர்களை முதல்முறை பார்த்த போது சாரதாவுக்குத் தன் இடம் அவர்களோடு சமையலறையும் கொடி கயிறும்தான் என்று தோன்றி யது. வேதகிரியுடன் சேர்ந்து சாப் பாட்டு மேசையிடை நாற்காலியில் அமர்ந்தது சங்கடப்படுத்தியது.

"அம்மா சாரதா, நல்லா சௌக ரியமா உக்காந்துக்க. அய்யரே, எங்க ரெண்டுபேருக்கும் சாப்பாடு போடுங்க" என்றார் வேதகிரி வீடு திரும்பிய முதல்நாள்.

அய்யர் அசையவில்லை.

"வாங்க அய்யிரே, எனக்கு பாங்க் குக்குக் கிளம்ப நேரமாகுது."

"வந்து.. இவளுக்கும் பரிமாற ணுமா?"



"அதிலென்ன சந்தேகம்?"

அய்யர் மௌனமாய் அவளுக்கு ஐஸ்பெட்டியிலிருந்து குடிநீர் எடுத்து வைத்தார். அவர் தட்டில் சோறும் கறிவகைகளும் வைத்தார். பிறகு பாத்திரங்களுடன் உள்ளே திரும்பி னார்.

"இந்தாங்க அய்யிரே, இவங்க ளுக்கும் பரிமாறிட்டுப் போங்க."

"இங்கே... உங்க கூட... மேசையி லா?"

"என் மனைவி என் கூட மேசை யில்தான் சாப்பிடுவாங்க."

"நான் வேணும்னா உங்களுக்குப் பரிமாறிட்டு சாப்பாட்டையெல்லாம் மேசைமேல வச்சிட்டுப் போறேனே! அவா எப்படி இஷ்டமோ எடுத்துப் போட்டுக்கட்டுமே."

சாரதா அவசரமாக அவரிடம் "எனக்குப் பசி இல்லீங்க. உங்க ளுக்குப் பரிமாறிவிட்டு அவர் போகட் டும். நான் அப்புறமா சாப்பிடறேன்" என்று கூறி எழுந்திருக்க முனைந் தாள்.

"நீ உக்காரும்மா."

வேதகிரி, அய்யரை ஒரு கணம் உற்றுப் பார்த்தார். எழுந்து சமைய லறைக்குச் சென்று உணவுப் பாத் திரங்களையெல்லாம் எடுத்து வந்து மேசைமேல் வைத்துக்கொண்டு அமர்ந்தார்.

"நீங்க உள்ளே போகலாம் அய் யர். நாங்க ரெண்டு பேருமாய் எங்க ளுக்கு எடுத்துப் போட்டுகிட்டு சாப்பி டறோம். இனிமேல் இதுதான் பழக் கம்."

ஒரு கரண்டி அன்னத்தை எடுத்து சாரதாவின் தட்டில் வைத்தார். அய் யர் பதறிப்போனார்.

"ஸார் ஸார், வேணாம் ஸார், நானே போடறேன். ரெண்டு பேருக் கும் போடறேன். கரண்டியை இப்ப டிக் குடுங்கோ."

அய்யர் கரண்டியைப் பிடுங்காத குறையாய் வாங்கித் தாமே இருவ ருக்கும் பரிமாறினார்.

பின்னால் ஒருநாள் வேதகிரி "நாமிருவரும் சமம்" என்று கூறிய தன் பொருளை அந்த முதல் நாளே அவர் விளக்கிக்காட்டி விட்டாற்போல் இருந்தது.

ooo

www.padippakam.com



குழந்தை உமேஷ் அவரிடம் ஒட்டிக்கொண்டிருந்தான். மாலையில் வீடு திரும்புகையில் அவர் அவனுக்காக ஊதல், பலூன், பொம்மை என்று ஏதாவது வாங்கிவருவார். "உமேஷ் கண்ணா, என்ன பண்றே? இன்னிக்கு என்னென்லலாம் விளையாடினே?"

இன்னும் பேச்சுத் திருந்தாத குழந்தை வாய்கொள்ளாத சிரிப்பை அவருக்குத் தருவான். உடை மாற்றிக்கொண்டு வந்து சோபாவில் அமர்ந்து அவனைத் தூக்கி மடியில் இருத்திக்கொண்டு அணைத்துக் கொஞ்சுவார்.

"குஞ்சுக் கண்ணா! நான் யாரு சொல்லு?"

உமேஷ் புரியாமல் பார்ப்பான். "ம்?" என்று கண்விரிப்பான்.

"அப்பா! எங்கே, நீ சொல்லு? அப்பா!"

"ப்பா" குழந்தை கன்னம் குழியப் புன்னகைத்தான். அவரிடம் கவிதையை ஈர்த்தான்.

"எங்கிருந்து மின்னுது
இந்தச் சின்ன அழகுப் பூ?
இது என் குழந்தை வாய்ப் புன்னகை
பகலில் எங்கே வந்தன
இரு விண்மீன் ஒளிகள்?
இவை என் செல்வன் முகத்துக் கண்கள்.
தேவகானம் ஏது இங்கே
தேவரில்லா மண்ணில்?
இது என் மழலையின் மழலைச் சொல்.
தென்றல் எப்படி அசையுது
அனத்தும்அக்கினிக் கோடையில்?
இது என் பாலகன் தளிர் நடை."

"நீங்க கவிதை எழுதுவீங்களா?" என்று சாரதா தயக்கத்தை மீறிய குறுகுறுப்பில் கேட்டாள்.

"ஊஹூம். இது நான் படிச்ச கவிதைதான். ஒவ்வொரு கவிஞனும் மொத்த மனித குலத்துக்காகத்தான் பாட்டெழுதறான். படிக்கிறவனிடமிருந்து அது பொருத்தமான தருணத்தில் அவனுடைய அனுபவமாகவே வெளிப்படுது."

சமையற்கார அய்யர் மரகத்திடம் சொன்னார்:

"எடி குட்டி மரகதம், பயல் இவருதுதான், சந்தேகமேயில்லை. இன்னொருத்தன் பெத்ததை இப்படிக் கொஞ்சத் தோணுமா? அதை மடியில் வச்சுண்டு கிண்ணத்திலேர்ந்து பருப்புச் சாதத்தை ஸ்பூனால் எடுத்து ஊட்டறார்னா சொந்தச் சதையாயிருந்தால்தான் முடியும்."

"நிசந்தான் சாமி."


"ஓசப்படாம எங்கயோ தில்லுமுல்லு பண்ணியிருப்பார் போல இருக்கு. குழந்தை பொறந்ததும் இவர் கொரவளையைப் புடிச்சிருப்பா, 'கட்டுடா தாலியை, இல்லேன்னா உன் மானத்தை வாங்கிப்பிடுவேன்'னு மிரட்டியிருப்பா. வசதியான ஆள்னு தெரிஞ்சுதானே திட்டம் போட்டு வலைவீசியிருக்கணும்!"

"நிசந்தான் சாமி."

"ரெண்டு வருஷம் தாக்குப்பிடிச்சுப் பார்த்து முடியாம கடைசில கல்யாணம் பண்ணி அழைச்சுண்டு வந்திருக்கார். எப்படியோ போறது. நீலியோ துஷ்டையோ, முறையா தாலிகட்டின பெண்டாட்டின்னு ஆயிடுத்து. சொந்தக் குழந்தை. அதுவரைக்கும் ஈச்வரன் கிருபைதான். ஏதானும் முறைகேடாய் இருந்திருந்தா இந்த வீட்ல நான் வேலை பார்க்க முடியுமோ?"

"நிசந்தான் சாமி."

OOO



வரவேற்பறை நாற்காலியில் அமர்ந்து 'குமுதம்' இதழைப் புரட்டிக்கொண்டிருந்த சாரதாவின் காதுகளில் சமையலறைப் பேச்சுக் கேட்க ஓர் இடைச்சுவர் தடையாக இல்லை. வருத்தம் தோய்ந்த புன்னகையில் 'என்ன உலகமடா!' என்ற விமர்சனம் தெரிந்தது.

இந்த ஆறு மாத காலத்தில் அவர் வடிவம் அசலாக மனத்தில் புலப்படத் தொடங்கியிருந்ததில் அவள் அச்சமும் தயக்கமும் பின்னும் குறைந்தன. தன் அறையிலிருந்து சகஜமாய் வெளியில் வரத் துவங்கியிருந்தாள். வரவேற்பறையில் தானாக வந்து அமர்ந்தாள். சிலசமயம் வெளிக்கதவிடை வந்து நின்றாள். வேலைக்குக் கிளம்புமுன் அவர், "அம்மா சாரதா, போய் வரட்டுமா?"என்னும்போது சன்னக் குரலில் "சரி" என்று சொல்லி, வழியனுப்புகிறவள்போல் வாசல் வரை வந்தாள்.

அவளுக்காக அவர் 'தினமணி' நாளிதழும் சில தமிழ்ச் சஞ்சிகைகளும் வாங்கித் தந்தார். பூக்காரியிடம் தினம் பூ கொண்டு தர ஏற்பாடு செய்தார். கேரம், ஜின்ரம்மி போன்ற பொழுதுபோக்கு ஆட்டங்களைக் கற்பித்து அவளுடன் உட்கார்ந்து ஆடினார். அவள் சேலைகள் நைந்திருப்பதைக் கண்டு புதுச் சேலைகள் வாங்கியபோது தம் வளத்தைப் பின்னுக்குத் தள்ளி அவள் விருப்பத்தை முன்நிறுத்தி எளிய சேலைகளே வாங்கித்தந்தார். சனிக்கிழமையில் எண்ணெய்க்குளி செய்து பளபளக்கும் ஈரத்தலையைத் துவாலையால் துவட்டிக் கொண்டே, "அம்மா சாரதா, இன்னிக்கு பேப்பர் பார்த்தியா? புது பட்ஜெட்டை எதிர்க்கட்சிக்காரங்க எப்படிப் பிச்சு உதறியிருக்காங்க! உனக்கென்ன தோணுது அதைப் பற்றி?" என்று ஒரு நண்பனுடன் பேசுவதுபோல் இயல்பாய்ப் பேசினார். பேச்சு, நடப்பு யாவிலும் இயல்பாக இருந்தார். ஆனால் அவள் அறைக்குள் நுழைவதில்லை.

"அம்மா!" உமேஷ் மெதுவாக ஓடி வந்தான். இங்கு வந்த புதிதில், மெழுகிய மொசைக் தரையில் வழுக்கி இரண்டு முறை கீழே

www.padippakam.com



விழுந்த பின் இப்போது எச்சரிக்கை வந்திருந்தது.

"என்னடா கண்ணா?" சஞ்சி கையை வைத்து விட்டு மகனை மடியில் அள்ளிக்கொண்டாள்.

"அப்பா வேனும்."

"இந்த நேரத்தில் அப்பா இங்கே ஏதுடா?

ஆபீஸ் போயிருக்காரில்ல?"

"ஆபீஸ் வேனாம், அப்பா வேனும்."

"நீ கொஞ்சநேரம் தூங்கறியா? சமத்து..."

மேலே சாய்த்துக்கொண்ட தலை திமிறி எழுந்தது.

"அப்பா வேனும்."

"சொல்றதைக் கேக்கணும். அப்பா ஆபீஸ் போயிருக்கார். சாயங் காலம் வருவார். ஜம்முனு கார்ல எப்படி வந்து இறங்குவார், நீ சொல்லு?"

"அப்பா இப்ப வேனும்."

எப்படி அவருடன் ஒன்றிவிட்டான்!

அவர் அவனிடம் காட்டும் அன்பின் எதிரொலி.

மார்போடு ஒட்டிக்கொண்டிருந்த குழந்தையின் முதுகைத் தடவிக் கொடுத்தபடி ஒருநாள் சொன்னார்!

"அம்மா சாரதா! குழந்தைக்கு ரெண்டரை வயசாகுது, இல்லே, ப்ரீ ஸ்கூல்ல (Pre-School) சேர்க்கலாம். இல்ல, இன்னும் ஒரு வருஷம் கழிச்சு எல்.கே.ஜி.யிலேயே போட்டு டலாம். நீ நினைச்சா அப்படியே செய்வோம். இவனை நல்லா படிக்க வைக்கணும். தில்லி ஐ.ஐ.டி.யில் சேர்த்துப் பெரிய என்ஜினியராக்க லாம். இல்லாட்டி கம்ப்யூட்டர் சயன்ட் டிஸ்ட்டாய் வரலாம். அவனுக்கு எப்படி இஷ்டம்னு பார்த்து அதன்படி செய்வோம். எப்படியும் பெரிய ஆளாக்கி முன்னுக்குக் கொண்டு வந்துடணும். எனக்கு ஆயுசில் லாட்டி நீ அதைச் செய்யணும்.

அவள் எத்தனை தடுத்தும் கேளாமல் தம் உடைமைகள் அனைத்துக்கும் அவளை வாரி சாக்கி அவர் உயில் எழுதியிருந் தார். இப்போது "எனக்கு ஆயுசில் லாட்டி" என்று அவர் சலனமில் லாமல் சொன்னபோது அவள் மனம் கூசி வேதனைப்பட்டது.


தினம் தினம் வியந்தும் அவள் வியப்புத் தீரவில்லை. இப்படி ஒரு மனிதரா! பல விதங்களில் அவர் ஒரு சராசரிதான். வெள்ளிதோறும் அர்ச்சனைக் கூடையுடன் கோயி லுக்குப் போகிறார். சனி நீராடுகிறார். புத்தகத்தின் மேல் கால் பட்டு விட் டால் தொட்டுக் கண்களில் ஒற் றிக் கொள்கிறார். தமிழ் சினிமா சூப் பர் ஸ்டார்களின் வீர சாகசங்களைச் சின்னத் திரையில் பார்த்து ரசிக் கிறார். எனினும் உள்ளே இப்படி ஓர் அசாதாரணம்.

வாழ்வின் எந்த மூலை முடுக் கையும் அலட்சியம் செய்யலாகாது. எங்கு வேண்டுமானாலும் ஓர் அதி சயம் ஒளிந்திருக்கலாம் என்பது போல்.

இவரைப் பற்றி முதலில் எத் தனை கேவலமாய்.. எண்ணம் மோதி நின்றது அவமானத்தில்.

அவர்களுடைய அப்பார்ட்மெண்ட் கட்டிடத்தின் எதிரே, சாலையின் அந்தப் பக்கம், ஒரு பல மாடிக் கட்டிடம் எழும்பிக்கொண்டிருந்தது. இரண்டு தளங்கள் சொந்தக்கார ருக்கும் அவர் மகனுக்குமாய்த் தலா ஒன்றாம். ஒன்று ஒரு வங்கிக்கும் மற்றவை கடைகளுக்குமாய் வாட கைக்காம். வாடகையிலேயே மாதம் இருபதாயிரம் வருமாம். வேலைக் காரி தெரிவித்திருந்த தகவல்கள்.

கட்டிட வேலை இன்னும் முடிவுற



வில்லை. சுற்றிலும் சாரங்கள், எலும் புக்கூடு போல்.மனிதனுக்கு எலும் புக்கூடு உடலின் உள்ளே இருக் கும். கட்டிடத்தின் எலும்புக்கூடு அதன் வெளியே இருந்தது. சாரங்க ளின் உச்சாணியில் நின்று வேலை யில் இயங்கிக்கொண்டிருக்கும் மினி ஆண் பெண்கள்.

காம்பவுண்டு இரும்பு வாசலுக்கு வெளியே சாரதா கரத்தில் குழந் தையை ஏந்தியபடி எதிரே அந்தக் கட்டிடத்தைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். மாலை நேரம். இன் னும் எத்தனை நேரம் வேலை செய் வார்கள்?

துவக்கப்பள்ளியிலிருந்த சீரு டைச் சிறுவர்கள் முதுகில் புத்தக வீக்கத்துடன் வீடு திரும்பிக் கொண் டிருந்தார்கள்.

அவ்வளவு உயரத்திலிருந்து தவ றிக் கீழே விழுந்தால் பிழைப் பார்களா?

"சாரு!"

அவளே தலைக்குப்புறக் கீழே விழுந்தது போன்ற அதிர்வு அந்தக் குரலைக் கேட்டதும். திடுக்கிடலும் திரும்பலும் ஒன்றாய் நிகழ்ந்தன.

நடுத்தர உயரமும் திடமான உடற்கட்டும் உதடுகளில் அந்த ஏமாற்றும் வசீகரப் புன்னகையுமாய் அவன் நின்றான்.

அவள் முகம் வெளிறியது. பிறகு கோபத்தில் சிவந்தது. வெடுக்கென்று தலையைத் திருப்பிக் கொண்டு காம்பவுண்டுக்குள் நுழைய முனைந்தாள்.

"சாரு, கொஞ்சம் நில்லு." சாலை யில் நிற்பதை முன்னிட்டுக் குரலைத் தாழ்த்திப் பேசினான். "உன் கோபம் புரியுது சாரு. ஆனா நான் சொல்ற தையும் கேட்டுக்க. பீடிகை இல்லாம சொல்றேன். அந்த சமயம் நான் என்ன செஞ்சிருக்க முடியும்? என் அப்பாவின் அந்தஸ்து, நாங்க பழ கற வட்டம்... வீட்ல எனக்குப் பெண் பார்த்துகிட்டிருந்தாங்க. அப்போ நான் போய், இந்த மாதிரி நம்ம வீட்ல வேலை செய்யிற சாரதாவைத்தான் கட்டிக்குவேன்னு சொல்லி, பெத்த வங்ககிட்ட பட்டுனு போட்டு உடைக்க முடியுமா? எங்கம்மா உயி ரையே விட்டுடுவாங்க. அதான் உங் கிட்ட 'பணம் தரேன், இதைக் கலை

www.padippakam.com



ச்சிடு, கொஞ்சகாலம் பொறுத்துக்க, பெரியவங்க கிட்ட மெள்ளப் பக்குவமா சொல்லி எப்படியும் உன்னையே கட்டிக்கறேன்'னு சொன்னேன். நீதான் அவசரப்பட்டு என்னை ஏசிட்டு வெளிய வந்துட்டே!"

தங்கராஜு நிறுத்தினான். அவள் பேசவில்லை. மீண்டும் 'கேட்'டைத் தாண்டி உள்ளே செல்ல யத்தனித்தாள்.

"இரு இரு, போகாதே. நான் உன்னை எத்தனை நேசிக்கறேன் தெரியுமா? நீ இருக்கிற இடத்தை விசாரிச்சு கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்சேன். உன்னைப் பார்த்துப் பேசணும்னுதான் இந்தப் பக்கமாவே நடமாடிக்கிட்டிருந்தேன்.."

அவள் தாடை இறுகியது.

"அட, இது யார், உன் பையனா? அதான் நம்ம பையனா? என்ன பேர்? ஆம்புளைப் புள்ளையா எனக்கு? பலே பலே! அட பயலே, நான் தாண்டா உன் அப்பா!"

"அப்பா ஆபீஸ்" என்றான் உமேஷ்.

தங்கராஜு சிரித்தான். "ஓ, இன்னொரு அப்பா இருக்காரில்ல? நீ கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு கேள்விப்பட்டேன் சாரு." தனக்கும் கல்யாணமாகி ஒரு பெண் குழந்தை இருப்பதைச் சொல்லவில்லை. "அதுவும் நல்லதுக்குத்தான். கல்யாணத்தைப்போல ஒரு நல்ல பாதுகாப்போ முகமூடியோ வேற கிடையாது. நான் என் வேலை விஷயமா இங்கே சென்னைக்கு அடிக்கடி வருவேன். உன்மேல இன்னும் உயிராயிருக்கேன் சாரு! நீயும் என்னை எத்தனை விரும்பினே ஞாபகம் இருக்கா? நாம் எப்படியெல்லாம் பழகினோம்! ஆனந்தமான நாட்கள். இனிமேல் மறுபடியும் முந்தி மாதிரி பழகத் தடையே இல்லை. ஒரு வேளை ஏதானும் ஏடாகூடமா ஆயிடுச்சுன்னா இருக்கவே இருக்கார் ஒரு ரெடிமேட் அப்பா! நான் இன்னும் ரெண்டுநாள் சென்னையில்தான் இருப்பேன். சொல்லு, எங்கே சந்திக்கலாம்?"

சாரதா கண்கள் கனல ஒரு முறை அவனை விழித்துப் பார்த்தாள். குனிந்து தரையில் காறித் துப்பினாள். நகரலானாள்.

"என்ன ரொம்பத்தான் பிகு பண்ணிக்கறே? உன் புருஷன் உன்னைவிட ரொம்ப வயசு பெரியவனாம். அந்தக் கிழத்தால் உனக்கு என்ன சுகம் தரமுடியும்? நான் வாலிபன்.. ஏ சாரு, எதுவும் பேசாம போனா என்ன அர்த்தம்?"

"பொம்புளைப் பொறுக்கி நாய்கள் கிட்டல்லாம் எனக்கு எதுவும் பேசவேண்டியதில்லை."

படபடப்புடன் அவள் உள்ளே திரும்பினாள்.

பக்கத்தில் பெரிதாக நிழல். வெள்ளை அம்பாசடர். அலுவலகத்திலிருந்து திரும்பியிருந்த வேதகிரி காரைவிட்டு இறங்கினார்.

"என்ன விஷயம் இங்கே? அம்மா சாரதா, ரொம்ப பதற்றமாயிருக்கியே! என்ன ஆச்சு?" பார்வை தங்கராஜுவின் பக்கம் திரும்பியது.

"யார் இவர்?"


"இவர் இல்லை. இவன்" என்றாள் சாரதா.

"ஓ" புரிந்துகொண்டார். முகம் கடுமையாயிற்று.

நிதானமாய்ச் சொன்னார்: "தங்கராஜ், இடத்தைக் காலி பண்ணு."

"ரோடு எல்லாருக்கும் பொது. உங்க பாட்டன் வீட்டு சொத்தில்லை."

"போடா இங்கிருந்து. இனிமே இந்தப் பக்கம் தலை காட்டாதே. மறுபடியும் வந்து சாரதாவைத் தொந்தரவு செய்தா நான் பொல்லாதவனாயிருப்பேன்."



"அன்பான கணவன்!" ஏளனத்தில் சமாளித்தாலும் அவருடைய நெடிய தோற்றத்தைப் பார்த்துச் சிறிது பயந்தான். வயதானவனென்று சொன்னார்களே! அப்படி ஒன்றும் கிழவனாய்த் தெரியவில்லையே! இளமைத் தோற்றமாய், ஆஜானுபாகுவாய்... அதுதான் சிறுக்கி மயங்கிவிட்டாள். இந்த ஆளைப் 'பொல்லாதவனா'க்காமல் இருப்பதே விவேகம் என்று தோன்றியது. அவன் பெயரைக்கூட அறிந்திருக்கிறார். சாரதா எல்லாமே சொல்லியிருப்பாள்போல் இருக்கிறது. எதையும் ரகசியமாக்கவில்லை. ரகசியம் இல்லை என்றால் எதிராளியைப் பலவீனப்படுத்தும் ஒரு வலுவான ஆயுதம் இல்லை.

"அப்பா!"தாயின் கரங்களிலிருந்த குழந்தை அவரை நோக்கித் தாவினான். எடுத்து அணைத்துக் கொண்டார்.

"அன்பான அப்பா!"

கையாலாகாத ஆத்திரத்தில் மறுபடியும் ஏளனம்தான் கைகொடுத்தது.

"ஆமாம்" என்றார் அழுத்தமாக.

"அன்பான மகன்!"

"ஆமாம்."

"உங்க மகன்." சிரித்தான்.

"என் மகன்!"

"உங்க செலவில் படிக்கப்போகிற மகன்!"

"எனக்குக் கொள்ளி போடப் போகிற மகன்."

காம்பவுண்டு பக்கம் திரும்பி "வாட்ச்மேன்!" என்று அழைத்தார். மறைவாய் அமர்ந்து, கொதிக்கும் தேநீரைக் குவளையிலிருந்து ஊதி ஊதி மெல்லப் பருகிக்கொண்டிருந்த கட்டிடக் காவலாளி "ஸார்!" என்று ஓடிவந்தார்.

"வாட்ச்மேன்! இந்த ஆளை நல்லாய் பார்த்துக்குங்க. இன்னொரு வாட்டி வந்தார்னா உள்ளே விடாதீங்க."

"சரி ஸார்."

OOO

நினைத்து நினைத்து அவர் குணத்தை வியந்திருந்ததற்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பு. பலவித உணர்ச்சிகளின் தவிப்பில் உழன்று,

www.padippakam.com



நம்பிக்கையைக்கூடச் சந்தேகக் கண்களால் பார்த்துத் தயங்கிக் கொண்டிருந்த நிலையில் குளிர் ஸ்பர்சமாய், எல்லாத் தயக்கங்களையும் உடைத்தெறிவதாய், ஒரு நல்ல இதயம் கூறிய உறுதியான உத்தரவாதம்போல் அவரின் அந்தச் சொற்கள்: 'எனக்குக் கொள்ளி போடப் போகிற மகன்.'

அவளையும் அந்தக் குழந்தையையும் அவர் தம் ஆயுள் முடியும் வரை தம்முடையவர்களாய் ஏற்றுக் கொண்டு விட்டதன் பூர்ண வடிவமாக அந்தச் சொற்கள். அவள் மகனை 'என் மகன்' என்று கூறியிருந்ததன் அறுதியிட்ட சத்தியப் பிரமாணம். தந்தை-மகன் உறவை இதைவிட அழுத்தமாக, எளிமையாக, முடிவாக, வேறு எப்படிக் கூற முடியும்?

தங்கராஜுவுக்குத்தான் அவர் இந்தப் பதில் தந்தார். எனினும் அதன் தாக்கம் உறைக்க, அவள் பிரமித்தாள்.

என்ன மனசு அவருக்கு!

இதனிலும் அங்கீகாரம் வேறில்லை.

அவன் அவர் மகன். அவள் அவர் மனைவி.

அவளைத் தம் சொத்துக்கெல்லாம் அவர் வாரிசாக்கிய பொழுதை விட அதிக சொந்தம் உணர்வாகும் மனநெகிழ்வில் சாரதா சிலிர்த்துக் கரைந்து போனாள்.

முகத்து வாட்டம் ஒரு கருந்திரையாய்க் கழன்று விழ, இருபத்துநான்கு வயது இளம் பெண் தனக்குரிய மலர்ச்சியுடன் வெளிப்பட்டாள். மனம் மலர்ந்தபோது, பார்க்கும் இடமனைத்தும் பூவாய் மலர்ந்தது. கூந்தல் மல்லிகையில் மணம் கூடியது.

இரவு ஏழு மணிக்கு வழக்கம் போல் உமேஷுக்கு சிறிது திட உணவும் பிறகு பாலும் கொடுத்தாள். வழக்கம்போல் வேதகிரி குழந்தையைத் தம் மடியிலிட்டுத் தூங்க வைத்தார். நிர்மலமான பிஞ்சு முகத்தைக் கனிவாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு கவிதை சொன்னார்:

"குழந்தைகளைக் காணப்
புதுக்கண்கள் வேண்டும்.
நோவையும் நோயையும்
நோக்கிய கண்களைக்
கழற்றி ஒருபக்கம்
வைத்து விட்டு-
பொய்யும் வன்முறையும்
பார்த்த கண்களைப்
பிடுங்கித் தொலைவில்
எறிந்துவிட்டு -
குழந்தைகளைக் காணப்
புதுக்கண்கள்
பெறவேண்டும்."

பல விஷயங்களைக் காணவும் புதுக் கண்கள் வேண்டும்தான் என்று சாரதா எண்ணிக்கொண்டாள். வாழ்க்கையை. மனிதர்களை.

தன்னை.

உறங்கும் குழந்தையை அவளிடம் நீட்டினார். சாரதா வாங்கிக் கொண்டு போய்த் தன் அறையில் படுக்கவைத்தாள். எட்டரை மணிக்கு இருவரும் சாப்பாட்டு அறையில் உணவருந்திய பின் தன் அறைக்குத் திரும்பினாள்.

வேதகிரி தொலைக்காட்சியில் ஆங்கிலச் செய்திகள் கேட்டுவிட்டு ஓரிரு நிகழ்ச்சிகள் பார்த்தபின் எழுந்து வந்து வழக்கம்போல் அவள் அறை வாசலில் கதவுக்கு வெளியே நின்று "அம்மா சாரதா, நான் படுக்கப் போறேன். அந்த ஆளை நினைச்சுக் கவலைப்படாதே. மறுபடி வந்தானானால் காலை உடைச்சு அனுப்பறேன். நீ நிம்மதியாய்த் தூங்கு. குட் நைட்" என்று கூறித் திரும்பினார்.

"உள்ளே வாங்க" என்றாள் சாரதா மென்மையான குரலில்.



○○○

கேரம்போர்ட் கறுப்பு, வெள்ளைக் காய்களில் கண்களை மூடிக் கொண்டு ஒன்றை எடுத்து அது வெள்ளைக் காயாய் வந்தால் அவர் உடம்பு சரியாகிவிடும்.

வந்தது.

சாரதா அவர் கட்டிலருகில் நாற்காலியில் அமர்ந்திருந்தாள். அவர் இடது கையைத் தன் இரண்டு கைகளாலும் அணைத்துப் பற்றிக் கொண்டிருந்தாள். அந்த இணைப்பின் வழியே தன் உடல் ,வலிமையை அவருள் செலுத்த முயல்பவள் போல.மருந்தும் மாத்திரையும் ஊசியும் சாதிக்கமுடியாத நோய் நிவாரணத்தைத் தன் அன்பின் தீவிரம் சாதித்துவிடும் என்று நம்பியவள் போல.

அவளுடைய மௌனமான, அசைவற்ற இருப்பே 'என்னை விட்டுப் போய்விடாதீர்கள்!' என்று ஓலமிட்டது. இந்தச் செல்வமெல்லாம் தொலையட்டும், அவர் குணமடைந்து எழுந்துவிட்டால் போதும்.

டாக்டர் அன்றாடம் வந்து பார்த்துக்கொள்கிறார். நர்ஸ் ஒருத்தி வீட்டோடு இருந்து கவனித்துக் கொள்கிறாள். எனினும் நம்பிக்கை தேய்கிறது.

இல்லை, இல்லை, வெள்ளைக் காய் வந்ததே!

எவ்வளவு பைத்தியக்காரி நான்!

அடி வயிற்றிலிருந்து இழுத்துக் கொண்டு நோயுடலைத் தூக்கிப் போட்டு போட்டு அவர் மூச்சு பிரயாசையுடன் வெளிவந்து கொண்டிருந்தது. ஒரு கையைப் பிணைப்பிலிருந்து கணநேரம் பிரித்து அவர் நெஞ்சை நீவிக் கொடுத்தாள்.

மயக்க நிலையில் உள்ளே என்ன வேதனைப்படுகிறாரோ! மூக்கு வழியே குழாய் மூலம் நர்ஸ் திரவ உணவு செலுத்துகையில் சொல்லவும் முடியாமல் எப்படித் திணறித் துடிக்கிறாரோ!

இவருக்கு ஏன் இந்தத் துன்பம்?

அந்த நெடிய உருவத்தை சாரதா தலைமுதல் கால்வரை கண்களால் மிருதுவாய் வருடினாள்.

எவ்வளவு நல்லவர்! எத்தகைய அன்புள்ளம் கொண்டவர்! அந்த அன்புதான் அவள் உள்ளத்திலும்

www.padippakam.com



அன்பை ஈர்த்தது. தங்கராஜுவின் துரோகத்துக்குப் பிறகு பயமும் இறுக்கமும் வேதனையும் தவிர வேறுவித வாழ்க்கை ஒன்று தனக்கு இருக்கக்கூடும் என்றே நினைத்துப்பார்க்க முடியாமல் இருந்தவளுக்கு, ஆசுவாசமாய் மூச்சுவிட்டு வாழ்க்கையைப் புன்னகையுடன் நிமிர்ந்து பார்த்து ரசிக்கச் செய்யும் சாதனமாய் அன்பு என்பதான ஓர் அற்புதம் உண்டு என்று காட்டியவர் அவர். வாழ்க்கையைக் கண்டு பயந்தோடியவளுக்கு வாழ்க்கையை ஒரு நண்பனாக்கியவர்.

உங்களுடன் பதினைந்து ஆண்டுகள் ஆனந்தமாய் வாழ்ந்தேன். உங்களுடன் வாழ்ந்தபோதுதான் உண்மையில் உயிர் வாழ்ந்தேன். இந்த உலகில் தங்கராஜுக்கள் மட்டுமல்ல, வேதகிரிகளும் உண்டு என்று உணர்த்தினீர்கள். அது புரிந்தபோது கண்களைத் திறந்து பார்த்தேன். உலகமே அழகு கொண்டிருந்தது.

நான் அழகானேன்.

அன்பை உயிர் மூச்சாய் உள்வாங்கிப் பதினைந்து ஆண்டுகள் மனமொத்த தம்பதியாய், தோழர்களாய், காதலர்களாய், வாழ்க்கையை ஓர் உற்சவமாய்க் கொண்டாடினோம். என் கல்வியை அபிவிருத்தி செய்தீர்கள். வெளியுலகை எனக்கு அறிமுகம் செய்தீர்கள்.

நமக்கொரு குழந்தை பிறந்தபோது எத்தனை மகிழ்ந்தோம்! ஆனால் அப்போதும் உமேஷிடம் உங்கள் அன்பு மாறவில்லை. "அவன் என் மூத்த மகன்" என்றீர்கள். நம் பாலகன் மூன்று ஆண்டுகள் கனவுபோல் முகம் காட்டி நம்மைத் துயரிலாழ்த்தி மறைந்தபோதும் உமேஷிடம உங்கள் அன்பு மாறவில்லை. "அவன் என் ஒரே மகன்" என்றீர்கள்.

உமேஷிடமிருந்து பதில் வந்துவிட்டது. "..அவர் எனக்கு என்ன ஆக வேண்டும்? அவர் உடல் நிலை சரியில்லையென்றால் நான் ஏன் வந்து பார்க்கவேண்டும்? அவர் என் சொந்தத் தகப்பனாரில்லையே!

"எப்படித் தெரிந்ததென்று ஆச்சரியமாய் இருக்கிறதா? சமீபத்தில் என் சொந்த தகப்பனாரைச் சந்தித்துவிட்டேன். நான் இருக்குமிடத்தைக் கஷ்டப்பட்டு விசாரித்துத் தேடி, இங்கே தில்லி ஐ.ஐ.டி.யில் முதலாண்டு எலெக்ட்ரானிக் என்ஜினியரிங் படித்துக்கொண்டிருக்கிறேன் என்பதைக் கண்டுபிடித்து இங்கே வந்து என்னைச் சந்தித்தார். அவருக்குத்தான் என்னிடம் எத்தனை அக்கறை! அப்படிப்பட்டவரின் பாசம் எனக்கு இத்தனை காலம் கிடைக்காமல் செய்துவிட்டாயே! 'நான் விரைவில் உன்னை மணந்து கொள்கிறேன்' என்று வாக்களித்தாராமே? 'நம் குழந்தைக்காகவாவது கொஞ்சம் காத்திரு' என்ற அவர் மன்றாடியதை மதிக்காமல் அவரைப் பழித்துப் பேசிவிட்டு விலகிப்போய் உன்னைவிட இருபத்தொரு வயது பெரியவரான அந்தப் பணக்காரனைக் கல்யாணம் செய்துகொண்டாயாமே? இந்த உண்மைகள் தெரிந்தபோது அதிர்ச்சியினால் என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? நான் 'இல்லெஜிடிமேட்'! துடித்துப்போனேன். அதோடு, அந்தக் கிழவனின் பராமரிப்பிலா இத்தனை காலம் வாழ்ந்தேன் என்று வெறுப்பாய் இருந்தது. பிறகு புரிந்தது. உன்னைக் கல்யாணம் செய்துகொண்டதற்குப் பிரதியாய்த்தானே என்னை வளர்த்துப் படிக்க வைத்திருக்கிறார்! ஒரு இளம் பெண்ணை வளைத்துப்போட அவர் தந்த லஞ்சம். 'நன்றாய் செலவு செய்யட்டும் கிழம்' என்று ஆத்திரமாய் நினைத்துக் கொண்டேன்.



"நான் அங்கே வரவில்லை. அவர் செத்தால்கூட வருவதாயில்லை. அவர் செத்தால் என் படிப்பு நிறைவடைய என்ன ஏற்பாடு செய்திருக்கிறார் என்று மட்டும் எழுது, போதும்.

"ஒரு நல்ல விஷயம் சொன்னாரம்மா என் அப்பா! நான் 'இல்லெஜிடிமேட்' என்ற எண்ணம்கூட மறைந்துவிடும். என் படிப்பு முடிந்ததும் என்னை - சொந்த மகனை! - சட்டப்படி சுவீகாரம் செய்து கொள்ள விரும்பு கிறாராம்! அவருக்கு வேறு ஆண் வாரிசு இல்லையாம். ஒரே ஒரு பெண்ணாம். அவர் மனைவிக்கு இந்த சுவீகாரத்தில் சிறிதும் ஆட்சேபம் இல்லையாம். இன்னொருத்தி பெற்ற பிள்ளையைத் தன் பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளத் தயாராம். எவ்வளவு நல்ல மனைவி!

"தன் மகளைக்கூட அப்பா ஒரு நாள் அழைத்து வந்தாரம்மா! எத்தனை அழகாய் இருக்கிறாள் தெரியுமா என் தங்கை?.."

நீண்ட கடிதத்தைப் படித்துமுடித்துத் தரையில் நழுவவிட்டாள் சாரதா. தலைகுனிந்து நெற்றியை இரு கைகளாலும் அழுத்திக்கொண்டாள். மனசில் புயல் வீசியது. பிறகு வெறுமை.

தங்கராஜு சொரூபத்தைக் காட்டிவிட்டான். பாவி நஞ்சைக் கலந்துவிட்டான். இவர்களுக்குச் செய்த தீங்குக்கு வலுவளித்திருக்கிறது ஓர் ஆண் குழந்தை வேண்டும் என்ற அவன் ஆசை.

'உங்க செலவில் படிக்கப்போகிற மகன்!' என்றிருந்தான் அவன் ஏளனமாக.

'எனக்குக் கொள்ளி போடப் போகிற மகன்' என்று அவர் விடையளித்தார் கம்பீரமாக.

அவன் சொன்னதுதான் பலித்தது. அவர் சொன்னது பலிக்கவில்லை. தங்கராஜு ஜெயித்துவிட்டான்.

ஆனால் வேதகிரி தோற்கவில்லை. கொள்ளி எனும் பயன் கருதி அவர் அன்பு செலுத்தியிருக்கவில்லை. கொள்ளி போடுவதைப் பற்றிய அவர் பேச்சு "அவன் என் மகன்" என்று மறுபேச்சுக்கிட

www.padippakam.com



மில்லாமல் கூறி தங்கராஜுவின் ஏளனத்துக்கு அவர் வைத்த முற்றுப்புள்ளி.

தங்கராஜு வெற்றி கொண்டது உமேஷைத்தான். மானிடத்தின் மேலான மதிப்புகளைப் புரிந்து கொள்ளாமல்-அல்லது புரிந்து கொள்ள வயதில்லாமல் - அவற்றைக் கைநழுவவிட்டுத் தோற்றுப் போனவன் உமேஷ்தான்.

உனக்கு உயர வாகு உமேஷ். தங்கராஜுவின் தகப்பனார் - என் முன்னாள் எஜமானர் - நல்ல உயரமாய் இருப்பார். ஆனால் நீ அவரைக் கொண்டு உயரமாயிருப்பதாய் நான் நினைக்கவில்லை: உன்னை 'மகன்' என்று அழைத்து மனசுக்குள் தூக்கிப் போட்டுக்கொண்டாரே ஒருவர், அவர் அன்பின் நிஜத்துக்கு அத்தாட்சியாய்த்தான் அவர்போல் உயரமாயிருக்கிறாய் என்று கற்பித்துக்கொண்டு மகிழ்ந்தேன்.

ஏமாற்றிவிட்டாய் உமேஷ்.

நீ தங்கராஜுவின் மகன்தான். கண்களைத் திருப்பி அவர் முகத்தைப் பார்த்தாள். சட்டென்று பார்வை மலர்ந்தது. நெஞ்சு படபடத்தது. எப்போது பிரக்ஞை திரும்பியது அவருக்கு? கண்களைத் திறந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். பேசமுடியவில்லை. சுவாசம் துருத்திபோல் வந்துகொண்டிருந்தது. ஆனால் உதடுகள் அசைந்தன. என்ன சொல்கிறார்?

ஊன்றி நோக்கினாள். முகத்தை நெருங்கிக் கவனித்தாள். உதடுகளின் குவிதலிலும் பிரிதலிலும் வார்த்தைகளைத் தேடினாள்.

ஊதுவதுபோல் உதடுகள் குவிந்தன. திரும்பத் திரும்ப குவிந்து விரிந்து குவிந்து விரிந்து.. உதட்டுக் குவிதலில் இருப்பது 'உ' ஒலியா? பொறி தட்டியது.

"உமேஷா? உமேஷ்தானே?"

மறுபடியும் உதடுகள் அசைந்தன.

..எப்படி.. இருக்கான்?..

"நல்லாயிருக்கான். லெட்டர் வந்துது.. ரொம்ப நல்லாவே இருக்கான்."

அவர் முகத்தில் திருப்தி.

பிறகு அந்த முகத்தில் ஆதுரம் நிறைந்தது. உணர்ச்சியின் ஆழம் பாய்ந்தது. அவளையே கண் உருகப் பார்த்துக்கொண்டிருந்தார். உமேஷ் மறைந்தான். மற்ற அனைத்துமே சிறிது சிறிதாய் மறைந்துபோக, அவளுடனேயே பார்வையால் ஒன்றிப்போனார். புன்முறுவல் எழுந்தது. முகபாவத்தில் மென்மை கனிந்தது.

சாரதா அவர் கையைத் தன் இரு கைகளால் அணைத்துப் பிடித்துக் கொண்டாள். அவரைப் பார்த்து மௌனமாய்ப் புன்னகை செய்தாள்.

அவரும் அவளும்.

அவ்விருவர் மட்டுமே.

தம் தனி உலகில் தனியாய் அவ்விருவர் மட்டுமே.

மூன்றாமவர் இல்லை. மூன்றாமவருக்கு அவசியமில்லை.. அவர்களுக்கு அவர்களே நிறைவு.

உங்களையும் என்னையும் மட்டுமே உள்ளடக்கி நம் உலகம் பூத்துக் குலுங்குகிறது. அந்தப் பூக்களின் நறுமணம் நம் உள்ளங்களைப் பிணைத்திருக்கும் நேசம்.

அவள் கண்கள் கசிந்தன.

தன் கைகளுக்குள் அவர் கை லேசாய் அழுத்துவதை சாரதா உணர்ந்தாள். பிறகு அவர் கண்கள் மீண்டும் மூடிக்கொண்டன. ❑

MOHAN
JEWELLERY MART

அசல் 22 கரட் தங்க நகைகளை அரச முத்திரையுடன் வழங்கும் ஒரே நகை மாளிகை

நீங்கள் விரும்பும் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பம்போல் செய்து கொள்ளவும்
சிறப்பு மிக்க

சங்கீதா வளையல்களை

பெற்றுக்கொள்ளவும்

முதலிடத்தை பெற்ற எமது நகை மாளிகையை நாடுங்கள்

201 RUE DU FG ST.DENIS, 75010 PARIS

TEL: 01 42 05 65 26
FAX: 01 42 05 65 79

www.padippakam.com


*With Compliments*

# Ivan Krama

## SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

*We Specialise in*

★ IMMIGRATION & NATIONALITY
★ CRIME
★ GENERAL LITIGATION
★ CONVEYANCING
★ WELFARE BENEFITS

**LEGAL AID WORK UNDERTAKEN**

**Contact for All Your Legal Sevices**

**348A Kilburn High Road**
**London NW6 2RT**

**Tel: 0171-624 8814 Fax: 0171-624 8813**

www.padippakam.com


ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

ஜனட் மிக ஒய்யாரமாக அமர்ந்திருந்து கண்ணாடியில் தன் அழகை ரசித்தபடி சிவப்பு லிப்ஸ்டிக்கை தன் உதடுகளுக்குப் பூசிக்கொண்டிருந்தாள். அவளின் செய்கை அவளின் காதலன் பீட்டருக்கு எரிச்சலைத் தந்தது. கொஞ்சக் காலமாக அவள் அளவுக்கு மீறித் தன்னை அலங்கரிப்பதாகப்பட்டது.

இவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை அவள் கடைக்கண்ணால் கண்டபடி, தன் வேலையைத் தொடர்ந்தாள். அவளுக்கு வயது இருபது. பதினெட்டு வயசிலேயே ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். இருந்தாலும் பதினெட்டு வயசில் அவள் இருந்த கவர்ச்சியை விட இப்போது பார்த்தவர்கள் வாயூறும்படி எடுப்பாக இருக்கிறாள்.

“பக்கத்து ரோட்டில் உள்ள பட்டேல் கடையில் ஏன் அடிக்கடி ஜனட் காணப்படுகிறாள்? ”

பீட்டரின் நண்பன் டாரன் என்பவன் சுவிங்கத்தைச்



# எந்த ஊர் வீரர்?

www.padippakam.com



சப்பியபடி பீட்டரைக் கேட்டான் ஒருநாள்.

பீட்டருக்குத் தெரியாத ரகசியமில்லை. பீட்டரில் உயிரையே வைத்திருந்தவள் இப்போது அவனை ஏனோதானோ என்று நடத்துகிறாள். பட்டேல் கடையில் உள்ள முதலாளிகளில் ஒருத்தன் வாட்டசாட்டமானவன்.

வாடிக்கைக்காரர்களோடு சுமுகமாகப் பழகும் சாட்டில் வாயூறக் கதைப்பான். "எப்படி உனது சுகம் டார்லிங்" என்று இளித்தபடி எல்லாப் பெண்களையும் கேட்பான். பீட்டர் ஒருநாள் ஜனட்டுடன் பட்டேல் கடைக்குப் போன போது, கடைக்காரன் ஜனட்டை 'டார்லிங்' என்று சொன்னது கோபத்தை உண்டாக்கியது.

"ஏய் பாக்கி! கடைக்கு வர்ற பெண்களெல்லாம் உனக்கு டார்லிங்கா?" பீட்டர் பொருமினான். "ஐயாம் சொறி சேர். அந்த மேடத்தின் பெயர் தெரியாது." கடைக்காரன் குத்தலாகச் சொன்னான். இந்தக் கோபக் காரனின் வார்த்தையைச் சட்டை செய்யாதே." ஜனட் ஒய்யாரமாகக் கடைக்காரனிடம் பீட்டரைப் பற்றிச் சொன்னாள்.

பீட்டருக்கு இன்னும் ஆத்திரம் வந்தது. அவனுக்கு இருபத்திரண்டு வயது. உழைப்பில்லை. 'சோசியல் செக்கியூரிட்டி' காசில் ஜனட் சிகரெட் பிடித்தும், லிப்ஸ்டிக் போட்டும் உல்லாசம் காண்பாள்.

காசு பற்றிச் சண்டை வந்தால், "உதவாத உன்னிடம் என்னத்தைக் கண்டேன், ஒரு பிள்ளை மட்டும் தந்தாய். ஒரு பெண்ணுக்கு எந்த முட்டாளும் பிள்ளை தரலாம். ஆனால் உருப்படியான தகப்பனாக இருக்கக் கொஞ்சம் அறிவு தேவை. அறிவைப் பாவித்து வாழும், உழைக்கும் வாழ்க்கை தேவை."

ஜனட் பிரசங்கம் செய்யத் தொடங்கிவிடுவாள்.

பீட்டர் அவள் செய்யும் அலங்காரத்தைப் பார்க்கச் சகிக்காமல் ரோட்டில் இறங்கினான். அவன் இருப்பது எட்டாம் மாடி பிளாட். லிப்டுக்குக் காத்திராமல் இறங்கி நடந்தான். எப்படி ரோட்டில் ஏறினோம் என்ற யோசனையின்றிக் கோபத்துடன் நடந்தான்.

ooo

கதிர்காமரின் மனைவிக்குக் கொஞ்ச நாளாகத் தன் கணவனில் சரியான கோபம். "உழைக்கத் தெரியாத மனிதன்" என்று கண்டபாட்டுக்குப் பேசுகிறாள்.

டொக்டர் கதிர்காமர் ஒரு ஜெனரல் பிரக்டிஷனர் (GP). காலை எட்டு மணியிலிருந்து பின்னேரம் ஆறு மணி வரை எத்தனையோ விதமான நோயாளிகளைப் பார்த்து, மருந்தெழுதிக் கொடுத்து, அவர்களின் இருதயத் துடிப்பை அளவிட்டு, வயிற்றுப் பிரச்சினைகளை ஆராய்ந்து, இருமலுக்குக் காரணம் தேடி, .. போவதற்கு மருந்து கொடுத்து, வலிக்கு ஊசிபோட்டு, ரிஸப்ஸனிஸ்டுகளுடன் கௌரவமாகப் பழகி அரசாங்கம் கேட்கும் 'றிப்போர்ட்ஸ்' எல்லாம் எழுதி முடித்து வீட்டுக்கு வந்தால் அவர் மனைவி ராதிகா ஏதோ ஒன்றில் அவரில் பிழைபிடிப்பாள்.

அவரைப்போல எத்தனையோ டொக்டர்கள் 'லோக்கம்' (ஏஜென்சி டொக்டர்) செய்து எத்தனையோ ஆயிரம் உழைக்கிறார்களாம். அவள் மைத்துனர் அப்படி உழைத்து சென்னையில் இரண்டு பிளாட் வாங்கிப் போட்டிருக்கிறாராம். தங்கச்சி கணவர் லண்டனில் மூன்றாவது வீட்டை வாங்கப்போகிறாராம். திருமதி கதிர்காமர் பட்டியல் போடுவார்.

கதிர்காமருக்கு அப்படி எல்லாம் ஓடி உழைத்துக் கஷ்டப்பட உடம்பு சரியில்லை. மிகவும் கஷ்டப்பட்டு டொக்டராக வந்தவர்.

யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்த ஒருவரின் மகன். ரியூசனுக்குப் போகமுதல் தோட்டத்துக்குத் தண்ணீரிறைக்கத் தகப்பனுக்கு உதவி செய்ததை நினைத்தால் இன்னும் கண்ணீர் வருகிறது.

அவருக்கு இரண்டு குழந்தைகள். பதினாலு வயதும் பன்னிரண்டு வயதும். அழகான இளம் பெண்கள். பரத நாட்டியம் பழகுகிறார்கள். வீணை பழகுகிறார்கள். லண்டனில் மத்தியதரக் குடும்பம் செய்யப்பண்ணும் எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

"இந்தப் பெண்களுக்கு அரங்கேற்றம் செய்ய பதினைந்து, இருபது ஆயிரம் பவுண்ஸ் வரப்போகுது." திருமதி கதிர்காமர் ஏதோ இவருக்கு தெரியாததைச் சொல்வதுபோல் பெருமூச்சு விடுவாள்.

அவளின் தொணதொணப்புத் தாங்காமல் தனக்குள்ள ஓய்வுநாட்களில் 'லோக்கம்' செய்ய முடிவு செய்தார். எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே என்று பாடவேண்டும்போல் வந்தது. தனது இரண்டு பெண்களையும் சரஸ்வதி லட்சுமியாகக் காண்கிறார் அவர். அவர்களின் எதிர்காலம் பயங்கரமாகத் தெரிகிறது. அவர்களின் அரங்கேற்றம் அவர்களின் சொந்தக்காரர்களின் அரங்கேற்றத்தைவிடத் திறமையாக நடக்கவேண்டும் என்று திருமதி கதிர்காமர் கட்டளை போட்டு விட்டாள்.

அவரின் இளம் வயதில் தெல்லிப்பளையை அண்டிய கிராமத்தில் வளர்ந்தபோது பரதநாட்டிய அரங்கேற்றமெல்லாம் ஏதோ பணக்கார விடயமாகத் தெரியும். கலைக்கும் காசுக்கும் எத்தனை தொடர்பு என்பது லண்டனுக்கு வந்ததும்தான் விசுவரூபமாகத் தெரிந்தது.

கலையின் தெய்வீகத்தன்மை காசின் காலடியில் சதிராடுகிறது. பரதத்தின் முத்திரைகள் பணத்தின் பிரதிபலிப்பாகின்றன. தாளமும் லயமும் லண்டன் வாழ் பணக்காரத் தமிழர்களுக்குப் பிடித்தபடி ஒலிக்கின்றன.

கதிர்காமர் பெருமூச்சுடன் நடந்தார். பின்னேரம் ஆறு மணியாகப் போகிறது. கடந்த இரண்டு நாட்களாக லோக்கம் செய்து எத்தனையோ நூறு பவுண்ஸ் உழைத்து விட்டார். நாற்பத்தைந்து வயசிலேயே அவருக்கு நீரிழிவும் 'பிளட் பிரஷரும்' வந்து விட்டன.

ஊருக்கு உபதேசம் உனக்கல்ல என்பதுபோல், அந்த டொக்டர் வாழ்க்கையுடன் மாரடிக்கிறார்.

வசந்தகாலம் முடிந்து குளிர் காற்றடிக்கத் தொடங்கி விட்டது. இலையுதிர்ந்து ரோட்டை அலங்காரம் செய்கிறது. மொட்டை மரங்கள் பரிதாபமாகத் தெரிகின்றன.

காரில் ஏறியவர் ஒரு கொஞ்ச நேரம் ஆசுவாசமாகச் சுவாசித்தார். நெஞ்சு கனத்தது. எப்போதோ பயின்ற

www.padippakam.com



யோகாசனத்தை ஞாபகப்படுத்தி தனது மூச்சை நிதானப்படுத்தினார். இருந்தாலும் தலை ஏதோ கனப்பதுபோலவும், நெஞ்சு பாரமாக இருப்பதுபோலவும் பட்டது.

லண்டனில் வாழும் ஆசிய மக்களுக்கு மிகவும் கூடுதலாக இருதய வருத்தங்கள் வருகின்றன என்று அவருக்குத் தெரியும். "எனக்கு நாற்பத்தைந்து வயதுதானே". அவர் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார். ஐம்பது வயதுக்கிடையில் அவர் மனைவி கேட்பதுபோல் சென்னையில் ஒரு பிளாட் வாங்கிப்போட வேண்டும். பெண்களின் அரங்கேற்றத்தையும் ஆடம்பரமாகச் செய்ய வேண்டும். அவர் திடசங்கற்பம் செய்தபடி காரை ஓட்டினார்.



பேசுவது பிடிக்காது.

பீட்டர் கொஞ்சம் படித்த குடும்பத்திலிருந்து வந்தவன். இளமைத் துடிப்பின் அகோரத்தில் அப்பாவித்தனமாக அப்பாவாகிவிட்டது அவனுக்குத் துயர்தான். ஆனாலும் ஜனட் ஒரு அழகான பெண் என்பதிலும், அவன் மகள் இரண்டு வயது மெலனி ஒரு தங்கச் சிற்பம் போலிருப்பதிலும் அவனுக்குப் பெருமை என்று ஜனட்டுக்குத் தெரியும்.

தனது எட்டாவது மாடியிலிருந்து வெளியுலகத்தைப் பார்த்தாள். தான் தனிமைப்பட்டிருப்பது போலவும் உலகமே தன்னைப் பார்த்து நகைப்பது போலவும் பேதைத்தனமாக யோசித்தபோது குழந்தையின் அழுகை அவளை உலுக்கியது.

குழந்தை மெலனி தத்தித் தத்தித் தாயிடம் வந்தாள். ஜனட் குழந்தையைத் தூக்கியதும் திடுக்கிட்டுப் போனாள். உடம்பு நெருப்பாய்க் கனத்தது. நேரமோ பின்னேரம் ஏழு மணியாகப் போகிறது. எந்த டொக்டரின் சேர்ஜரியும் அந்தப் பக்கத்தில் திறந்திருக்காது. ஹொஸ்பிட்டலுக்குக் கொண்டுபோய் 'க்சுவல்டியில்' மணிக்கணக்காக நிற்க அவளால் முடியாது.

"பீட்டர் எங்கே தொலைந்துவிட்டான்?" முணுமுணுத்தபடி கடமையிலிருக்கும் டொக்டருக்கு (On Call GP) போன் பண்ணினாள் ஜனட்.

ooo

ஜனட்டுக்கு அவள் காதலனின் செய்கை எரிச்சலைத் தந்தது. 'எனக்காக என்ன செய்துவிட்டான் பீட்டர்?" தனது பொன்னிறத் தலையை வாரிக்கொண்டு யோசித்தாள். அவனிடமுள்ள காதலில் பதினாறு வயசிலேயே அவனுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்து விட்டாள்.

குழந்தையின் படிப்பில் பெரிய அக்கறையில்லாமல், ஒன்றிரண்டு தலைமுறையினராக அரசின் உதவிப் பணத்திலும் அவர்கள் தந்த வீட்டிலும் வாழ்பவர்கள் ஜனட்டின் தாய் தகப்பன்.

இவள் தன் வழியைப் பார்த்துக்கொண்டு பீட்டருடன் போனது அவர்களுக்கு சந்தோசமே. ஜனட்டின் தமையன் ஒருத்தன் போதைமருந்துக்காளாகி அதனால் இறந்து விட்டான். தங்கை ஒருத்தி கிளப், பார் என்று பதினான்கு வயதிலேயே சுற்றத் தொடங்கிவிட்டாள். ஜனட்டுக்கு மட்டும் ஏதோ குழந்தைகள் என்றால் ஒரே ஆசை. நிறையப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று காதற் போதையில் அலட்டியதை பீட்டர் நம்பி அவளைத் தாயாக்கிவிட்டான்.

அவள் குழந்தையுடன் சிறைப் பறவையாகிவிட்டாள். குழந்தையுடன் வெளியில் சுற்றித் திரியமுடியாத ஆத்திரம் பீட்டரில் திரும்பியது.

அவன் நல்ல சம்பளமான உத்தியோகத்திலிருந்தால் தன் குழந்தையைப் பார்க்க யாரையும் சம்பளம் கொடுத்துக் கேட்கலாம் என்று யோசித்தபோது ஜனட்டுக்கு தன் வாழ்க்கையில் எரிச்சல் வந்தது.

"இந்த வயதில் எனக்குச் சிறை வாழ்க்கையா?"

தாய்மை என்பதை சுமையாய் நினைக்கும் அறியாமையுடன் பெருமூச்சுவிட்டாள்.

அவள் தனது ஏக்கத்தை தன்னை அழகாக அலங்கரிப்பதிலும், பக்கத்துக் கடைக்கார பட்டேலுடன் கும்மாளம் போடுவதிலும் மறந்தாள்.

பீட்டருக்கோ அவள் அவனைத் தவிர யாருடனும்

ooo

டாரன் அங்குமிங்கும் பார்த்தபடி பீட்டரின் கையில் அந்தப் போதைப்பொருளை திணித்தான். பீட்டர் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டான்.

"உன்னைப் பார்த்தால் உலகத்தைப் பறிகொடுத்தவன் மாதிரி இருக்கிறியே". டாரன் தன் மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டான். அவன் மிகவும் உயர்ந்து வளர்ந்த மொட்டையன். தடிமாடு மாதிரி உவமிக்கலாம்.

பீட்டரின் மென்மையான சுபாவத்திற்கும் டாரனின் முரட்டுச் சுபாவத்திற்கும் எத்தனையோ வித்தியாசம். ஆனாலும் இருவருக்கும் சினேகிதமாக போதைப் பொருட்கள் இருந்தன.

"சொல்கிறேன் என்று கோபிக்காதே..." டாரன் பீட்டரின் கண்களை ஊடுருவிப் பார்த்தபடி சொன்னான்.

"உனது காதலி அந்த 'பேட்டி' பாக்கியின் கடையில் இளித்தபடி திரிகிறாள்."

டாரன் பியர்க் கானை முடித்துவிட்டுச் சொன்னான். இன்னொரு போதைக்குளிசையை வாயிற் போட்டுக் கொண்டான்.

"ஐ ஹேற் த பாக்கிஸ்." பீட்டர் தானும் ஒரு போதைப் பொருளை வாயில் போட்டபடி சொன்னான்.

"ஏன் எங்கள் பெண்கள் இந்த 'பேட்டி' நாய்களுக்குப்

www.padippakam.com



பின்னால் போகிறார்கள்?" முட்டாள் டாரன் ஏதோ விரிவுரையாளரிடம் கேட்பதுபோல் பீட்டரைக் கேட்டான்.

பீட்டர் தன் பொன்னிறத் தலையைத் தடவிக் கொண்டான். அவர்கள் இருந்த 'பப்' இல் நிறையப் பேர் தங்களை மறந்து சந்தோசமாகக் குடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஒரு அரை நிர்வாண ஆட்டக்காரி அந்த மேடைக்கு வந்து எல்லோரையும் மகிழ்விப்பாள் என்று ஒரு அறிவிப்பாளன் மிகவும் உற்சாகத்துடன் சொன்னான்.

அப்போது ஒன்றிரண்டு ஆசிய இளைஞர்கள் அந்த 'பப்' க்குள் வந்தார்கள்.

"இளவரசி டயானாவைப் பார்த்தாயா? அவளுக்கு ஒரு இங்கிலிஸ்காரன் கிடைக்கவில்லையா? போயும் போயும் ஒரு எகிப்தியனையா பார்க்க வேண்டும்?" டாரன் முழங்கினான்.

"அவர்களிடம் காசு இருக்கிறது. அவர்கள் அதை வைத்துக்கொண்டு பெண்களைத் தங்கள் பக்கம் இழுக்கிறார்கள்."

"பட்டேல் கடைக்காரன் ஜனட்டைச் சுரண்டுவது போலா?" டாரன் இன்னொரு தரம் ஒரு போதைப் பொருளை வாயிற் போட்டான்.

"எங்கள் நாட்டுக்குக்கூலி வேலை செய்த நாய்கள் எங்கள் வேலைகளைப் பறித்தார்கள். வீடுகளை எடுத்தார்கள். இப்போது எங்கள் பெண்களுடன் படுக்கிறார்கள்." டாரன் கசப்புடன் சொன்னான்.

பீட்டர் மௌனமாக இருந்தான். டாரன் எப்போதாவது உடல் குனிந்து வேலை செய்வான் என்பதை பீட்டரால் கற்பனை செய்ய முடியவில்லை. சிறுசிறு திருட்டுக்கள் செய்தும், வீடுகளுக்குள் புகுந்து களவாடியும் காசு சேர்த்து தன் போதைப் பழக்கத்தைப் பூர்த்தி செய்பவன் டாரன். அவன் யாருக்கும் தலைகுனிந்து வேலை செய்வானா என்று பீட்டரால் அந்த நிமிடத்தில் யோசிக்க முடியாமலிருந்தது.

வந்திருந்த ஆசிய இளைஞர்கள் மிகவும் எடுப்பாக உடுத்திருந்தார்கள். டாரன் அவர்களைப் பொறாமையுடன் பார்த்தான். "இவர்களுக்கு இப்படியெல்லாம் வாழ எப்படிக் காசு கிடைக்கிறது?" டாரன் ஆத்திரத்துடன் சத்தம் போட்டான்.

இரவுபகலாகக் கடையில் உழைக்கும் பட்டேல் குடும்பம் பீட்டருக்கு ஞாபகத்தில் வந்து.

"நாய்கள்! நாய்கள்! எச்சில் பொறுக்க வந்த நாய்கள்! இப்போ வாங்கு கடைகளை வாங்கி, வீடுகளை வாங்கி, எங்கட பெண்களுடனும் படுக்கிறார்கள்." டாரன் திட்டினான்.

பீட்டருக்கு ஜனட்டின் ஞாபகம் வந்தது. கொஞ்ச நாட்களாக இவனைத் தொடவே விடமாட்டாளாம். இவனை அவள் வெறுப்பதற்கு அவளை டார்லிங் என்று கூப்பிடும் பட்டேல் ஒரு காரணமா?

பீட்டர் இன்னொரு பியர்க் கானை முடித்துக் கொண்டான். இன்னொரு போதைக் குளிசையையும் வாயிற் போட்டுக் கொண்டான். மனம் ஆத்திரத்தில் தடுமாறியது.

தூரத்திலிருந்து குடித்துக் கொண்டிருந்த ஆசிய இளைஞர்களில் கோபம் வந்தது.

டாரன் அந்த வட்டாரத்திலுள்ள நஷனல் ஃப்றொண்டுடன் தொடர்புடையவன். அவன் சேர்ந்திருக்கும் கூட்டம் இங்குள்ள கறுப்பர்களை யெல்லாம் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

"நல்லதுதானே?" பீட்டர் கனவில் சொல்வதுபோல் சொன்னான்.

"என்ன நல்லது? " டாரனின் குரலிலும் தடுமாற்றம்.

"இந்த நாய்களை எல்லாம் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். இவர்களுக்கு எங்கள் வேலை, வீடு, பெண்கள். பின்னர் இந்த நாட்டையும் சொந்தமாக்கிப் போடுவார்கள்.

"அப்படிச் சொல்லு பீட்டர். இவர்கள் ஒவ்வொருத்தரையும் எனது கையால் அடித்து நொருக்கி அவர்களின் தசையைப் பிழிந்து...."

டாரன் சொல்வதைக் கேட்கக் கேட்க பீட்டரின் உதிரம் துடித்தது. ஏதோ 'ஓ லெவலில்' ஒன்றிரண்டு பாடங்கள் பாஸ் பண்ணியவன். இங்கிலிசுக்காரனுக்கு என்ன 'ஓ லெவலும் ஏ லெவலும்?' நிறமும் மொழியும் தானே தகுதிகள். அப்படியிருந்தும் அவனுக்கொரு வேலையில்லை.

பீட்டர் ஏதோ வேலையிலிருந்தால், அதோ இருக்கும் ஆசியர்களைப்போல் ஆடம்பரமாய் இருக்கலாமே. ஜனட்டைக் கூட்டிக்கொண்டு வெளியே போய்ச் சந்தோசமாகத் திரியலாமே!

"பீட்டர் வில்லியம், நான் சொல்வதைக் கேள்.எங்கள் அரசாங்கம் உருப்படியில்லாதது. அரசாங்க மந்திரிகளைப் பார். எத்தனை பேர் ஹோமோ செக்சுவல்ஸ், எத்தனை பேர் 'லெஸ்பியன்' என்று தெரியும். இவர்களுக்கு நாட்டுப் பற்றிருந்திருந்தால் குடும்ப உறவுகளில் அக்கறையிருந்தால் இப்படி வாழ்வார்களா?" "டாரன் தன் மொட்டைத் தலையைத் தட்டிக் கேட்டான்.

"பீட்டர் வில்லியத்திற்குத் தெரிந்த அளவில் டாரனுக்கு அவன் தகப்பன் பெயர் தெரியாது. தாயின் பெயரில்தான் அவனுக்குப் பதிவிருக்கிறது. ஆனாலும் அவன் குடும்ப உறவுகள் பற்றிக் கொஞ்சம் சூடாகத்தான் சொல்கிறான். தகப்பன் தெரியாமல் பிறந்தவன். குடும்ப உறவின் தகுதி பற்றிப் பேசுகிறான்.

"இன்னும் ஐம்பது வருடத்தில் இங்கிலாந்தில் வெள்ளைக்காரனுக்கு இருக்க இடமில்லாமல் போகப் போகுது. இவர்கள் பன்றிக் குட்டிகள் மாதிரி பத்தும் பதினைந்தும் பெத்துப் போட்டு, அவர்களை வளர்க்க வீடும் காசும் கொடுக்க வேண்டும்." டாரன் இப்போது அரசாங்கத்தோடு தன்னையும் சேர்த்து 'நாங்கள்' என்று பேசினான்.

பீட்டர் தன்னைச் சுற்றிப் பார்த்தான். அரை நிர்வாண நடனம் பார்த்து ரசிக்கும் எல்லோரிலும் கோபம் வந்தது. "எல்லோரும் எங்கள் நாட்டைக் கறுப்பர்களுக்குத் தானம் பண்ணப் போறம்." பீட்டர் முணுமுணுத்தான்.

"நாங்கள் முட்டாள்கள். எங்கள் அரசாங்கம் முட்டாள்தனமானது." டாரன் தள்ளாடியபடி எழுந்தான்.

www.padippakam.com





இருவரும் வெளியே வந்தார்கள். தன் இயலாமையில் கோபம் வந்தது பீட்டருக்கு. இருபத்திரண்டு வயதில் தன் இனியவளை இழப்பதைவிட யாரையும் அடித்து நொருக்கிவிட்டுச் சிறை செல்லலாம். அவளில்லாமல் வாழும் தனியான வாழ்க்கையைவிட வேறு எந்தவிதமான வாழ்க்கையும் வாழலாம்.

கடந்த ஐந்து வருடமாக அவர்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் தெரியும். வாழ்க்கை முழுக்க ஒன்றாய் இருந்துவிட்டு முதுமையைப் பகிர்ந்துகொள்ளலாம் என்றெல்லாம் கற்பனை செய்திருந்தான்.

அவன் உள்ளம் கொதித்தது.

அவன் நடை வேகமாகியது. இன்று ஜனட்டிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். ஏன் அந்தப் பட்டேல் கடைக்காரனுடன் தேனொழுக இளிக்கிறாய் என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கேட்க வேண்டும்.

அவன் நடை துரிதமாகியது.

"இவர்களுக்கெல்லாம் நாங்கள் சோணையர்கள் என்ற நினைவு. இவர்கள் நாட்டில் நாங்கள் போய் எவ்வளவு முன்னேற்றம் செய்து கொடுத்தோம். இப்ப அவர்கள் எங்கட நாட்டுக்கு வந்து எல்லாத்தையும் குப்பையாக்கி விட்டார்கள்." டாரன் ஒரு ஆசியக் கடையைக் காட்டினான். "இவர்களைக் கண்ட இடத்தில் காலால் மிதிக்க வேண்டும்" டாரன் தொடர்ந்து உறுமினான்.

கதிர்காமநாதன் எட்டாவது மாடியிலிருந்து மெலனி வில்லியத்தைப் பார்க்க காரால் இறங்கி வந்தார்.

தனக்கு முன்னால் நிமிர்ந்து நிற்கும் அந்தப் பிரமாண்டமான கட்டிடத்தைப் பார்த்தார். இந்த இடங்களில் லிப்ட் வேலைசெய்யாவிட்டால் அதோ கெதிதான்.

பார்வைக்குப் பிடிக்காதவர்களைச் சந்திக்க அவர் விரும்பவில்லை. நெஞ்சு இன்னும்கூட கனத்தது. இன்னும் சில நாட்களில் ஒரு ECG (எலக்ரோகார்டியாக்கிராம்) செய்து பார்க்க வேண்டும் என்று யோசித்தபடி நடந்தார்.

அவரது அருமைப் பெண்களுக்கு தகப்பன் சுக மில்லாதவர் என்று தெரிந்தால் மிகவும் துக்கப் படுவார்கள். அதனால் அவரது நீரிழிவு வியாதியைப் பற்றிக்கூட அவரும் அவர் மனைவியும் யாருக்கும் மூச்சுவிடவில்லை.

இந்தக் கண்டறியாத 'ஏஜென்சி டொக்டரிங்'கைச் செய்யாமல் ஏதோ உழைக்கிற காசை வைத்துச் சமாளிக்கப் பழகிக்கொண்டால்போதும். அவர் திட்டமாக முடிவு செய்துகொண்டார்.

எப்படித்தான் அவர் மனைவி தலைகீழாகக் குதித்தாலும், இனி இப்படி இரவுபகல் இல்லாமல் பேயாட்டம் போடக்கூடாது என்று நினைத்துக் கொண்டார்.

நேரம் சரியான இருட்டானதென்றபடியால் அவர் கையிலிருந்த விலாசத்தைக் கவனமாகப் பார்த்தார். அவர் பார்க்கப்போகும் பெண் குழந்தை மெலனிக்கு இரண்டு வயதாம். காய்ச்சல் நூற்றி இரண்டைத் தாண்டி விட்டதென்று அந்தக் குழந்தையின் தாய் அழுதாள்.

"ஏய் டேட்டி பாக்கி" டாரன் கதிர்காமநாதனைப் பார்த்துத் துப்பினான். அவர் இதை எதிர்பார்க்கவில்லை. ஏஜென்சி டொக்டராகி இரண்டொரு கிழமைகள் தானாகின்றன. தனியாகப் போகும் டொக்டர்களுக்கு என்ன வெல்லாமோ நடக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் தனக்கு இப்படி நடக்குமென்று...

"என்ன இந்தப் பக்கம் யாரும் பெண்பிள்ளை தேடுறாயா நாயே?" டாரன், டொக்டர் கதிர்காமநாதர் வாய் திறக்க முதல் பளீரென்று ஒரு அறை போட்டான்.

பார்த்துக்கொண்டிருந்த பீட்டர் வில்லியத்திற்கு வீரம் செறிந்தது. இரண்டு போதைவஸ்து போட்ட ஆங்கிலேயர், உலகத்திற்கு உதவிசெய்யும் ஒரு அப்பாவித் தமிழ் டொக்டரை காலாலும் கையாலும் அடித்தனர்.

தங்களுக்கு வேலையில்லாமல் போனதற்கு ஒரு உதை, கையில் காசில்லாததற்கு ஒரு அடி, தங்கள் பெண்கள் அடுத்த இனத்தானோடு குலவுவதற்கு ஒரு குத்து. இரு இளைஞர்களும் ஒரு முதியவரைப் போட்டு உதைத்துத் தள்ளினார்கள். அந்த நேரம் டாரனின் 'மோபைல் டெலிபோன்' கிணுகிணுத்தது.

அடிப்பதை நிறுத்திவிட்டு டாரன் 'ஹலோ' சொன்னான். இந்த நேரத்தில் போதைவஸ்து வியாபாரிகள் போன் பண்ணுவதுண்டு.

"எங்கே உனது சோம்பேறிச் சினேகிதன்?" ஜனட்டின் கோபக் குரல் டாரனின் காதைப் பிளந்தது. டாரன் பீட்டரிடம் டெலிபோனைக் கொடுத்தான்.

"எங்கே தொலைந்துவிட்டாய்? மெலனிக்குச் சுகமில்லை. டொக்டர் உடனடியாக வருவதாகச் சொன்னார். இன்னும் காணவில்லை. மெலனிக்கு காய்ச்சல் கூடி வலி வரும்போலிருக்கிறது." ஜனட் அழுதாள்.

மயங்கிக் கிடக்கும் டொக்டரின் பெட்டியை ஆவேசமாக உடைத்தான் டாரன். ஸ்டெதஸ்கோப், அவசர மருந்துகள் போன்ற சாமான்களோடு அடுத்ததாக அவர் பார்க்கப்போகும் மெலனி வில்லியத்தின் விலாசமும் டாரனின் கையில் சிக்கின.

பீட்டர் அவசரமாக டொக்டரைப் புரட்டினான். அவர் குற்றுயிராய்க் கிடந்தார். அவரைப் பார்க்க ஒரு டொக்டர் தேவை இப்போது. ❑



www.padippakam.com

பாலரஞ்சனி சர்மா

அந்த பிரிட்டிஷ்காலத்து லயக்கூரைகளில் கவிந்திருந்த பனியை விடிகாலைப்பொழுது வெள்ளைப்புகைமண்டலமாக்கிக் கொண்டிருந்தது. லயங்களின் முன்காம்பராக்களில் கொழுந்துக்கூடைகள் கம்பீரமாகத் தொங்கிக்கொண்டிருந்தன. லயங்களுக்குள்ளே உறங்கிக்கொண்டிருக்கும் ஜீவன்களின் வாழ்க்கையோடு இந்தக் கொழுந்துக்கூடைகள் கொண்டிருக்கும் பாந்தம் என்ன, இன்று நேற்று உருவானதா?

எங்கேயோ கூவிய சேவலின் கூக்குரலையும் மீறிப் பக்கத்துக் காம்பராக்களில் எழுந்த 'தடபுடா' சத்தம் ராசாத்தியை எழுப்பிற்று. முதல்நாள் மேல்பெரட்டு மலையில் ஏறி மழையில் நனைந்தபடி கொழுந்தெடுத்த அசதியும், குசினியில் ஈரவிறகுடன் போராடியதால் ஏற்பட்ட கண்ணெரிவும் அவளை இன்னும் கொஞ்சநேரம் படுத்திருக்கக் கூறின. அந்த அசதியைப் பார்த்தால் ஆகுமா? தன்னோடு சேர்ந்து நான்கு ஜீவன்களின் வயிற்றைக் கழுவியாக வேண்டிய கட்டாயம் அவளை 'விருட்'டென எழவைத்தது.

"ஏய் செல்லா, காமாச்சி எந்திரிங்க! ஸ்கோலுக்குப் போவாணாமா? அப்படியே சின்னப்பயலையும் உசுப்பி விடுங்க."

ராசாத்தியின் குரல் கேட்டதும் அடித்துப் பிடித்துக்கொண்டு எழும்பினர் 'செல்லா' என அழைக்கப்பட்ட செல்வியும் 'காமாச்சி' எனப்பட்ட காமாட்சியும். இருவரும் பக்கத்திலிருந்த தோட்டப்பள்ளிக்கூடத்தில் முறையே மூன்றாம், முதலாம் ஆண்டுகளில் படிக்கிறார்கள். எல்லோராலும் "சின்னப்பய" எனச் செல்லமாக அழைக்கப்படுகிற குமரேசு இப்போதான் நான்கு வயதை முடித்திருந்தான்.

தாயோடு சேர்ந்து செல்லாவும் காமாச்சியும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டனர். குசினிக்குள் நுழைந்து அடுப்பைமூட்டி, கேத்தலை ஏற்றிவிட்டுத் திரும்பிய ராசாத்தியின் பார்வையில் இன்னமும் படுக்கையிலிருந்து எழும்பாத குமரேசு தட்டுப்பட்டான்.

"எலே சின்னப்பய! இப்ப நீ எழும்புறியா இல்லியா? தா, பாரு அக்கா ரெண்டுபேரும் ஸ்கோலுக்குப் பொறப்பட்டாச்சு! அப்ப நீ படுத்துக் கெட! நாங்க கதவ பூட்டிக்கிட்டு போறோம்" என்றாள். பாய்ந்து எழும்பினான் குமரேசு. "அம்மா கதவ பூட்டிக்கிட்டு போனா நா எப்



www.padippakam.com

பாலரஞ்சனி சர்மா



பிடி புள்ளகாம்புராவுக்குப் போறதாம்?'' என்ற யோசனையோடு கரித்துண்டை வாயில் தேய்த்தபடி வெளியே ஓடினான்.

''சாயத்தண்ணி'' ஊற்றி முடிந்ததும் ரொட்டித் தகரத்தை அடுப்பில் வைத்து ரொட்டியைத் தட்டிப் போட்டாள் ராசாத்தி. ''செல்லா' இந்தத் தேத்தண்ணிய தங்கச்சிக்கும் ஊத்திக் குடுத்திட்டு நீயும் குடி..! சின்னப்பய இன்னமுமா மூஞ்சி கழுவுறான்? அவனுக்குச் சட்டையப் போட்டுவிடு! புள்ளக்காம்புராவுல அவன விட்டுப்புட்டுல நா போவனும்?'' ராசாத்தியின் குரலையடுத்து பள்ளிக்கூடத்துக்குத் தயாராகிவிட்ட செல்லா தம்பியைக் கவனிக்கச் சென்றாள்.

செல்லாவும் காமாட்சியும் ரொட்டியைச் சுற்றி எடுத்துக்கொண்டு கையில் புத்தகங்களைச் சுமந்தவாறு ''அம்மா போயிட்டு வாறோம்'' என்றபடி லயத்தை விட்டுக் கிளம்பும் போதுதான் குமரேசு தேநீர் குடிக்க உள்ளே நுழைந்தான். ''தா பாரு வெரசுண்ணு ரொட்டியை தின்னுப்புட்டு பயணம் வைவி'' என குமரேசுவை அதட்டிய ராசாத்தி, தனக்குள்ளாகவே ''இன்னிக்கு எத்தனாம் நம்பரு மலையோ'' என அலுத்துக் கொண்டாள்.

துண்டுச் சாக்கை இடுப்பில் வாகாய் கட்டி, கொழுந்துக் கூடையின் பாரம் தாங்காது நைந்துபோய் வெட்டுண்டு சிலுப்பிக்கொண்டிருந்த மயிர்க்கற்றைகளை ஒதுக்கி, கொழுந்துக் கூடையைத் தொட்டு வணங்கிவிட்டு எடுத்துத் தலையில் மாட்டியபடி வேலைக்குப் போகத் தயாராகிவிட்டாள் ராசாத்தி.

''சின்னப்பய! என்னடா செய்யுற இவ்வுளோ நேரமா?'' என அவள் குரல் கொடுக்கவும் வெளியே ஓடி வந்தான் குமரேசு. வாயில் ரொட்டித்துண்டைத் திணித்தபடி புள்ளக்காம்பரா சகாக்களிடம் காட்டி மகிழவென, தன் சொத்தாகக் கருதிய உடைந்த தட்டுமுட்டுச் சாமான்கள் அடங்கிய ''சொப்பிங்பேக்கை'' கக்கத்தில் இடுக்கியபடி, நழுவிய காற்சட்டையை மேலே இழுத்துக்கொண்டு வந்து நின்ற மகனைப் பார்க்க ராசாத்திக்குப் பாவமாக இருந்தது.

''என்ட ராசா! ரொட்டிய தின்னுப்புட்டு ஒரு வாய் தண்ணி குடிச்சுப்புட்டு வா! நா நிக்கிறேன்'' என்றாள். அவசரமாக விழுங்கியபடியே உள்ளே ஓடியவன் தண்ணீரைக் குடித்து விட்டு ஓடி வந்து ''அம்மா, சரியம்மா'' என்றான்.

ராசாத்தியின் வேகமான நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்கிவிடுகிற குமரேசு, தாயின் அதட்டலைத் தொடர்ந்து ஓடிப்போய் தாயோடு இணைந்து நடப்பதும், அப்புறம் வீதியில் காணுகின்ற சகல காட்சிகளிலும் மனம் ஒன்றிவிட மீண்டும் பின்தங்குவதுமாகச் சென்றுகொண்டிருந்தான். ''பாதையில் போகின்ற வாகனங்கள் நாய், பூனை, காகம், குருவி, எறும்பு என்று எல்லாமே போய் மறைகிறவரை அவனது பார்வையும் கூடவே போகும். பாதையில் சாரிசாரியாகப் போகின்ற சீருடை அணிந்த பாடசாலைப் பிள்ளைகளைக் கண்டதும் ''அம்மா'' என்றழைத்தபடி ஓடிச்சென்று அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டான் குமரேசு. அடுத்து அவன் என்ன கேட்கப்போகிறான் என்பதை ஊகித்துக்கொண்ட ராசாத்தி, அவன் பேசுவதற்கு இடம்கொடாமல் ''டேய், சும்மா தொணதொணக்காம வா!'' என அதட்டினாள். அவனா மசிகிறவன்? ''அம்மா.. நா.. நா.. எப்பம்மா ஸ்கோலுக்குப் போறது? சொல்லும்மா எப்பம்மா போறது?'' என விடாப்பிடியாய் நச்சரித்தான் குமரேசு.

அவனது கேள்விக்குப் பதில் சொல்லமுடியாத தன் இயலாமையும், வேலைக்குச் செல்லும் நேரம் தாண்டிவிட்ட எரிச்சலும் சேர்ந்துகொள்ள நின்று குமரேசுவை திரும்பி முறைத்தவள் அவனது முதுகில் ஒன்று வைத்து கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். பதில் கிடைக்காத சோகம், தாய் தன்னை அடித்துவிட்ட கவலை இரண்டும் சேர குமரேசு அழுதபடியே தாயின் இழுவைக்கு ஏற்ப நடந்தான். இல்லை ஓடினான்!

அழுதபடியே இருந்த குமரேசுவை புள்ளக் காம்பராவில் விட்டுவிட்டுச் செல்ல ராசாத்திக்குக் கஷ்டமாய்த்தானிருந்தது. ''அழாதடா ராசா, வேலக்காட்டுக்கு போயிட்டு வாறப்ப ஒனக்கு மிட்டாயி வாங்கியாரேன்'' என்றாள். அழுகை சற்றே மட்டுப்பட சந்தேகத்தோடு தாயைப் பார்த்தான் குமரேசு. ''நெசமாத்தாண்டா'' என உறுதிமொழி வழங்கிவிட குமரேசு உற்சாகமாய்த் தாயை வழியனுப்பி வைத்தான்.

ராசாத்தி மேல்டிவிசனிலிருந்து இங்கே வந்து முருகையாவைத் திருமணம் முடித்தவள். அவள் இங்கு



www.padippakam.com



வந்தபோது தேயிலைச் செடிகள் எல்லாம் "தளதள" என்றிருந்தன. செல்லாவும் காமாட்சியும் பிறந்தபோது அவர்களது வாழ்வும் கூட "தளதள" என்று செந்தளிப்பாய்தானிருந்தது. முருகையா இந்த தேயிலைகளோடு ஒன்றிப்போனவன். காலையில் எழும்பியதும் சிலருக்கு வெற்றிலையோ, புகையிலையோ தேவைப்படுவதுபோல முருகையாவுக்கு கண்விழித்ததும் தேயிலைச் செடிகளை வருடி அதன் வாசத்தை நுகர்ந்தாக வேண்டும். இந்தப் புதுமையான பழக்கத்தை ராசாத்திகூடக் கேலி செய்வாள், "சக்களத்தியப் பாத்துட்டு வந்தாச்சா?" என்று.

ராசாத்தி குமரேசுவை உண்டாகியிருந்தபோது இந்நிலைமை மாறத் தொடங்கிற்று. அரசாங்கத்துக்குச் சொந்தமாயிருந்த அநேக தோட்டங்கள் தனியார் வசமாகியபோது நான்கைந்து மாதங்களிலேயே தோட்டத்து சனங்கள் வித்தியாசங்களை உணர ஆரம்பித்தனர். பாக்டரிக்கு வந்த சேருகின்ற கொழுந்துகளின் செழிப்புக் குறைய ஆரம்பித்தது. நிறையும் குறையத் தொடங்கியது. முருகையாவுக்குத் தன் பிள்ளைகளையே வெட்டிக் கொல்வது போன்ற வேதனை. கொழுந்துத்தாள் குறையக் குறைய வேலைநாட்களும் குறையத் தொடங்கின. கணிசமாகக் குறைந்துபோன வேலை நாட்கள் மேலும் குறைக்கப்பட்டபோது இயல்பாகவே முன்கோபக்காரனான முருகையா கையில் பணப்புழக்கம் இல்லாமல் போனநிலையில் ஒருநாள் கொதித்தெழுந்தான்.

"என்னய்யா நெனச்சுக்கிட்டிருக்கீங்க நம்மள. நீங்க பாட்டுக்கு தோட்டத்துல எவ்வளவு லாபம் வருதுங்கிறத மட்டும் பாக்றீங்க! தேயில செடிகளுக்கு ஒரம் போடணும். அத ஒழுங்கா கவனிக்கனுங்கிற எண்ணமே கெடயாது. அப்புறம் எப்புடி கொழுந்து வரும்? கடேசில நம்ம வயித்துல அடிக்கிறீங்களே! தாளு எவ்வளவு கெடைக்குமுங்கிறத மட்டும் கவனிச்சா போதாது. மொதல்ல செடிகளுக்கு உசிரு இருக்கான்னு பாருங்க" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

தன் குழந்தைகளின் பட்டினியை விட கொழுந்துகளின் கருகல் முருகையாவை மிகவும் பாதித்தது. முதன்முதல் சண்டைபோட்டுவிட்டு வந்த அன்று இரவு ராசாத்தியிடம் சொன்னான் "ராசாத்தி, நம்ம காலத்துலயே இத்தன பாடா கெடக்குதே, நம்ம புள்ளைங்க காலம் எப்படி இருக்கபோவுது? இதுக கொழுந்தெடுத்து பொழச்சாப்புலத்தான்! என்ன பாடுபட்டும் இதுகள படிக்க வச்சிடனும் ராசாத்தி! படிச்சாத்தான் இனி இந்த ஒலகத்துல சீவிக்க முடியும்." தொடர்ந்தும் முருகையாவுக்கும் முதலாளிகளுக்குமிடையில் அடிக்கடி வாக்குவாதம் நடந்தது. ராசாத்தி தடுத்தாலும்கூட இது நடந்து கொண்டுதானிருந்தது.

குமரேசுவை, பிரசவிக்கவென்று ராசாத்தியை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு விடைபெற்று வந்த முருகையா அடுத்தநாட்காலை பாதையோரத்தில் பிணமாய்க் கிடந்தான். "வமிசம் வளர ஆம்புளபுள்ள வேணும் ராசாத்தி" என ஆசையோடு கூறியவன் அக் குழந்தையின் முகம் பாராமலே கொலையுண்டு போனான். சின்னஞ்சிறிசுகளான செல்லாவும் காமாட்சியும் என்ன எதுவென்று புரியாத பதட்டத்தில் அழுதபடி இருக்க, பச்சிளங்குழந்தையின் வீறிடலையும் மீறிக் கதறினாள் ராசாத்தி. கொழுந்துகளையே தன் வாழ்க் கையாகக் கொண்டு அதற்காகவே உயிரைவிட்டவனின் உடலின் மேல் விழுந்து அவர்கள் கதறுகின்ற கோரத்தையும் அந்த தேயிலைக் கொழுந்துகள் பார்த்தபடிதான் இருந்தன.

பொலிஸ் இதுஅதுவென்று அலைந்ததில் ராசாத்தியின் கையிலிருந்து பணம் காணாமல் போயிருந்தது. "போன மனுஷன் போயி சேந்துட்டான். இனி பணத்த செலவழிச்சு அவ உசிரு திரும்பி வரவா போகுது? புள்ளங்கள காப்பாத்துற வழியா பாப்பியா..அத விட்டுட்டு.." ஊர்ப் பேச்சின் நியாயம் புலப்பட ராசாத்தி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு நிமிர்ந்தபோது தன் மூன்று குழந்தைகள் மட்டுமே தன் சொத்தாக மிஞ்சியிருப்பதை உணர்ந்தாள்.

ராசாத்தி வேலக்காட்டுக்குப் போய் உழைப்பது வயிற்றைக்கழுவக் சரியாயிருந்தது. கணவனின் விருப்பப்படி செல்லாவையும் காமாட்சியையும் பள்ளியில் சேர்ப்பித்து விட்டாள். நல்லவேளை புத்தகம், சீருடை என அரசாங்கம் உதவியதால் ராசாத்திக்கு அந்தச்செலவுகள் மிச்சம். ஆனாலும் கொப்பி, பென்சில் என்று பிள்ளைகள் கேட்கும்போது வாங்கிக் கொடுத்தாக வேண்டுமே? இந்த "செலவே மூச்சைமுட்ட வைக்க மூத்தவள் செல்லாவை பாடசாலையிலிருந்து நிறுத்திவிடும் யோசனையோடு ஒரு தடவை பள்ளிக்குப் போனவள் செல்லாவின் வகுப்பு ஆசிரியை கூறிய வார்த்தைகளால் செய்வதறியாது தடுமாறினாள். "வகுப்புல செல்வி ரொம்ப கெட்டிக்காரி. அநியாயமா அவளோட படிப்பை வீணாக்கிடாதீங்க. மத்த புள்ளங்கள மாதிரியில்லாம ஒங்க கஷ்டத்த அவ நல்லா தெரிஞ்சு வச்சிருக்கிறா. கொப்பி பென்சில் எல்லாம் வீணாக்காம பாவிப்பா. தயவு செஞ்சு அவள வெலக்கிடாதீங்க." ராசாத்தி ஆசிரியை சொன்னதற்குத் தலையாட்டினாள்.

புதிதாக முளைத்திருந்த இந்த பிரச்சினைதான் அவளைப் பாடாய்படுத்தியது. குமரேசு பள்ளிக்குப் போக வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருந்தான். அடுத்த வருடத்தில் அவனையும் பள்ளியில் சேர்த்தாக வேண்டும். ஆனால்.. "எப்புடியும் மொதமொத ஸ்கோலுக்குப் போறப்ப போட்டுக்கிட்டுப் போறதுக்கு சட்டைகளுசான் தச்சாகணுமே! கொப்பி, பென்சிலு எல்லாம வாங்கணுமே. அப்புறம் ஸ்கோல்ல சேக்கிறப்ப கலரு பெட்டி, கலரு பேப்பரு எல்லா கேப்பாங்களே, நா எங்க போவேன் காசுக்கு?" வயிற்றைப்பற்றி எரிகிற இந்த தீயிற்கு, புள்ளகாம்புராவுக்குப் போகும்போது 'சின்னப்பய' நெய்வார்ப்பான்.

ஒரு வாரமாய் ஊரே திமிலோகப்பட்டது. ஊரின் கண்ணாக விளங்குகின்ற மாரியம்மன் கோயில் திருவிழா. அந்தத் தோட்டப்பகுதிக்கே உரித்தான ஒரே கோயில் என்ற விதத்தில் அந்த தேர்திருவிழா ஊர்மக்களினால்

www.padippakam.com



மிகமிக விசேடமாகக் கொண்டாடப்பட்டது. சின்ன வாண்டுகளுக்கோ இனி இல்லை என்ற சந்தோஷம் விளையாட்டுச் சாமான்கள், தின்பண்டங்களடங்கிய கடைகள் களை கட்டின. திருவிழா என்றதுமே பெற்றோர், உறவினர்கள் என்று 'சந்தோஷம்' கேட்டு சில்லறை சேர்ப்பார்கள். ஆனால் பாவம் குமரேசு, ஏன் செல்லாவும் காமாட்சியும் கூடத்தான். மற்றவர்களிடம் சில்லறை சேர்ப்பார்கள். மற்றவர்களிடம் சில்லறை குலுங்கும்போது இவர்களிடம் ஒரு செல்லாக்காசுகூட இருக்காது.

"சாமி கும்பிட" என பிள்ளைகளோடு கோயிலுக்குப் புறப்பட்ட ராசாத்திக்கு மனசே சரியில்லை. கடவுளிடம் மனமுருக வேண்டினாள். "தாயே எங்கள சோதிச்சது போதும்மா. இனியாவது ஏங்குழந்தைங்க ஆசப்பட்டு கேக்குறத வாங்கிக் குடுக்கிற சக்திய மட்டுமாவது எனக்கு குடு..!"

கோயிலைச் சுற்றிக்கொண்டு வருகையில் கடைகள் நிறைந்த அந்தப் பகுதியைக் கடக்க ரொம்ப கஷ்டப்பட்டாள் ராசாத்தி. செல்லாவும் காமாட்சியும் விபரம் தெரிந்தவர்கள். கடையிலிருக்கின்ற எல்லாப் பொருட்களையும் ஆசையாக பார்ப்பதோடு மட்டும் நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் குமரேசு நேற்றுப் பிறந்த கன்றுக்குட்டியாய் துள்ளித் திரிந்தான். கடைகளிலுள்ள ஒவ்வொன்றையும் பார்ப்பதும் ஓடிவந்து அம்மாவிடம் ஒப்புவிப்பதுமாக இருந்தான். பார்த்த அத்தனை பொருட்களுமே அவனுக்கு வேண்டியதாயிருந்தன. "அம்மா.. அம்மா.. அந்த பெலூனை வாங்கித் தாங்கம்மா.." என நச்சரிப்பான். பதிலே பேசாமல் நடப்பாள் ராசாத்தி. "அம்மா பெலூனில்லாட்டி பரவால்ல அந்த கார் பொம்ம நல்லாருக்கும்மா வாங்கி தாறீங்களா?" எனக் கெஞ்சுவான். ராசாத்திக்கு கவலையில் உயிர் போனது. ஆரம்பத்திலிருந்தே 'அம்மா எதுவும் வாங்கி தரமாட்டாள்' என உறுதியாய்த் தெரிந்துகொண்டு அமைதியாய் வருகின்ற செல்லா, காமாட்சி இருவரையும் விட, நச்சரித்துக்கொண்டே வந்த குமரேசு தன் நப்பாசை அனைத்தும் உடைந்தவனாய் அமைதியாய் வரத் தலைப்பட்டபோது ராசாத்திக்கு 'செத்துவிடலாமா?' எனத் தோன்றியது. வீட்டுக்கு வந்த பின்பும் குமரேசு சரியாக வில்லை. அக்கம் பக்கங்களில் கேட்ட ஊதிசத்தமும் விளையாட்டுச் சாமான்களோடு சிறுவர்களின் கூச்சலும் அவனை ஏக்கப்படவைத்தன. படுத்து உறங்கிவிட்ட மகனின் கன்னங்களில் காய்ந்து போயிருந்த கண்ணீரின் தடம் ராசாத்தியின் நெஞ்சினைச் சுட்டது.

அடுத்தநாள் காலை எழும்பிய ராசாத்தி அந்தநாள் வயிற்றுப்பாட்டுக்கு என இறுக்கிப் பிடித்து வைத்திருந்த சில்லறைகளைப் பொறுக்கிக்கொண்டு கோயிற் பக்கமாக விரைந்தாள். வரும்போது அவள் கைகளில் ஒரு பை இருந்தது. "ஏய் சின்னப்பய எந்திரி! அம்மா என்ன வாங்கிட்டு வந்திருக்கேனு பாரு" என்றாள். எழும்பிய குமரேசுவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. மலர்ந்த அவன் கோலம் கண்டு ராசாத்தியின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனை இழுத்து அணைத்துக் கொண்டவள் சொன்னாள் "ராசா! பெலூனு, பொம்ம எல்லாமே கொஞ்ச நா கழிச்சா ஒடஞ்சு போயிடும். அதனால அம்மா ஒனக்கு இந்த காசு முட்டிய வாங்கி யந்தேன். இனிமே நீ ஒனக்கு கெடைக்கிற காசை யெல்லா இதுல போட்டு சேக்கோணும். அப்பத்தா நீ ஸ்கோலுக்கு போறப்ப பொஸ்தவம், கொப்பி, கலரு எல்லா வாங்கலாம்" ஆசையோடு பக்கத்தில் வந்து நின்ற செல்லாவுக்கும் காமாட்சிக்கும் கையோடு வாங்கி வந்திருந்த கலர் ரிப்பன்களையும் வளையல்களையும் கொடுத்தாள். குடும்பத்தின் அந்த மூன்று ஜீவன்களும் 'யானைப்பசிக்கு சோளப்பொரி" போல கிடைத்த இந்த பொருட்களால் தாம் பெரிய சொத்துக்கு சொந்தமாகி விட்ட பூரிப்பில் ஆழ்ந்துபோயினர்.

அதன் பிறகு ஒரு வாரத்திற்கு குமரேசுவை அந்த 'காசுமுட்டி'யோடுதான் பார்க்க முடிந்தது. பிளாஸ்டிக்காலான, வெள்ளையும் நீலமுமாகக் கோடுகள் போட்ட மேற்புறம் அழகான வளைவுடன் காணப்பட்ட அந்த உண்டியலை குழந்தையைச் சுமக்கிறாற்போல் பவித்திரமாய்த் தூக்கிக்கொண்டு திரிந்தான். தோட்டத்து வேலையைப் பார்த்தால் இனி வாழமுடியாது என ராசாத்தி புரிந்துகொண்டதால் பக்கத்து ஊருக்கு கூலிவேலைக்குப் போகத் தொடங்கினாள். தோட்டத்தில் வேலை செய்த நாட்கள் போக மற்றைய நாட்களில் ஏதாவது கூலிவேலை செய்து காசு புரட்டுவாள். உண்டியலை இடுக்கிக்கொண்டு திரியும் குமரேசுவின் தொல்லை பொறுக்கமாட்டாது வேலை முடிந்து வந்ததும் அவனுக்கென சில்லறை கொடுப்பதும் வழக்கமாயிற்று. எந்நாளும் இரவு படுக்கப்போகுமுன் உண்டியலைக் குலுக்கி அந்த இனிய ஓசையில் லயித்துப் போவான், "சின்னப்பய". ஏதாவது தின்பண்டங்களை ராசாத்தி இருந்திருந்து வாங்கி வருகின்றபோது குமரேசு பேசுவான். "ஏம்மா இத வாங்காம காசா தந்திருந்தா நா காசுமுட்டில போடுவேன்ல. அப்பத்தான் நா ஸ்கோலுக்கு போவமுடியும்" பெரிய மனுஷத்தோரணையில் அவன் பேசுகின்றபோது ராசாத்திக்கு முருகையாவின் ஞாபகம் எழும்.

ஓரளவு கஷ்டத்தைக் குறைக்க முடிந்த இந்த ஊதியத்தால் "பொம்புளபுள்ளைங்களுக்குனு எதையும் சேத்து வைக்கமுடியுதில்லியே" என்ற ஆதங்கம் ராசாத்தியிடம் ஏராளமாக இருந்தது. இதற்கிடையில் வேலைக்குப் போன இடத்தில் காலில் ஆணி ஒன்று குத்தியதைக் கவனத்திற்கெடுக்காமல் விட்டதில் மூன்று நாட்களாகக் காய்ச்சல். வேலைக்குப் போகாமல் படுத்துவிட்டாள்.

குமரேசுவுக்குக் காசு சேர்ப்பதில் ஆர்வம் அதிகரித்திருந்த வேளையில் தாய் வேலைக்குப் போகாதது அவனுக்கு வருத்தத்தைத் தந்தது. "ஏம்மா வேலைக்குப் போவல?" என்றான். "காய்ச்சல் கெடக்குதெடா, எப்புடி நா வேலைக்குப் போவேன்" என்றாள் ராசாத்தி. "அப்ப எனக்கு காசுமுட்டிக்குப் போட காசு தரமாட்டியா?" என அதிகாரமாய்க் கேட்க செல்லாவுக்குக் கோபம் வந்தது.

www.padippakam.com



பாலரஞ்சனி சர்மா

"அடேய் அம்மாவுக்கு காச்சலா கெடக்குதேன்னு கூட பாக்காம காசு கேக்கிறியா?" என அதட்டினாள். அவளை முறைத்துப் பார்த்தவன் வெளியே ஓடிவிட்டான். தொடர்ந்து தாய் வேலைக்கு போகமுடியாமல் அரற்றியபடி படுத்துக்கிடக்கவே செல்லா, "அம்மா வாங்கம்மா ஆஸ்பத்திரிக்கு போயி மருந்து வாங்கி யாறலாம்" என்றாள். "அதெல்லாம் வேணாம் செல்லா! ரெண்டு நாளு போச்சின்னா எல்லா சரியாயிடும்" என மறுத்து விட்டாள் ராசாத்தி.

எழும்பவும் முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தாயிடம் வந்தான் குமரேசு. "அம்மா! எனக்கு நீ காசு தந்து எத்தன நாளாச்சு? ஒரு காசாவது தாம்மா! காசு முட்டியில காசு போட்டு ரொம்ப நாளாச்சில்ல." கெஞ்சினான். "சின்னப்பய! அம்மா என்னடா செய்வேன். ஏங்கிட்டா இருந்தா ஒனக்கு தராமலா இருப்பேன்? செத்தா நெத்திக்காசு வைக்கக்கூட ஏங்கிட்ட ஒத்த காசில்லடா" என வருத்தத்தோடு சொன்ன ராசாத்திக்கு ஏனோ கண்கலங்கியது. பார்த்துக்கொண்டிருந்த செல்லா தம்பியை மெல்ல அழைத்துச் சென்று "அம்மா பாவமில்லையா சின்னப்பய. இப்ப போயி அம்மாவை கஷ்டப்படுத்தறியே, நல்ல பிள்ளையா போயி வெளையாடு" என அனுப்பி வைத்தாள்.

அன்று இரவு ராசாத்திக்கு ஜன்னி கண்டது. சுயநினைவில்லாமல் அவள் அரற்றிக்கொண்டிருந்ததைக் காணப் பொறுக்காமல் செல்லா பக்கத்து வீட்டுக்கு ஓடி சேதி சொன்னாள். அந்த நடுநிசியில் ஊரே ஓடி வந்தது. "ராசாத்தியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணும் யாராச்சும் போயி தலைவருகிட்ட சொல்லி தோட்டத்து லொறியை கேக்கச் சொல்லுங்கப்பா" என ஒரு பெரியவர் கூற தலைவரைக் காண ஒரு கூட்டம் போனது. ஆனால் லொறி கொண்டு வருவதில் ஏற்பட்ட தாமதம் ராசாத்தியின் உயிரைக் கொண்டு போனது. ஆம்! முதலாளிகளிடமிருந்து லாபத்தை எதிர்பாராமல் தம் உயிரைக் கொடுத்து உழைத்த ஜீவன்களின் ஜீவமரணப் போராட்டத்தின் போதும் உதவி செய்யாத அந்த முதலாளிகளுக்காக உழைப்பதைவிட உயிரை விடுவதே மேல் என ராசாத்தி நினைத்தாள் போலும்.

தந்தையையும் பறி கொடுத்து தாயையும் இழந்து நிற்கின்ற சோகம் தாங்காது தாயின் உடலில் விழுந்து கதறி அழுதனர் செல்லாவும் காமாட்சியும். இவர்களது துக்கத்தைக் கண்டு ஊரே கண்ணீர் விட்டது. தாயின் பிணத்தின் நெற்றியின் மீது 'நெத்திக்காசு' வைக்கப்பட்ட போது செல்லாவுக்கு தாள முடியாமல் போனது. "தம்பி அம்மாக்கிட்ட காசு கேட்ட கரைச்சல்படுத்துவியே. இனி என்னடா பண்ணுவ. யாருகிட்ட காசு கேக்கப்போற? நமக்கு இனி யாரிருக்கா?" கதறினாள் அவள். தனக்கு காசு தர யாருமில்லை என்ற எண்ணமே குமரேசுவுக்கு அழுகையை வரவழைத்தது.

ராசாத்தி தன் இறுதிப் பயணத்தை ஆரம்பித்தாள். மகன் குமரேசு முன்னால் 'தீமுட்டி' தூக்க, செல்லாவும் காமாட்சியும் கதறிக் கதறி வழியனுப்ப, ராசாத்தி பயணமானாள். கூடவே சென்ற குமரேசுவுக்கு "அம்மா தனக்கு காசு தராமலே போய்விட்டாளே" என்பது தாள மாட்டாத கவலையைக் கொடுத்தது. "நா காசு கேட்ட தாலதா அம்மா செத்துப் போச்சோ" என்ற சந்தேகமும் இடையிடையே எழுந்தது.

சுடுகாட்டில் ராசாத்தியின் பிணம் இறக்கப்பட்டது. அப்போது அவளது நெற்றியிலிருந்து அந்த "நெத்திக்காசு" நழுவி குமரேசுவின் காலடியில் விழுந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்த குமரேசுவுக்கு "அம்மா எனக்கு காசு தந்துவிட்டாள்" என்ற சந்தோஷத்தில் அழுகை வந்தது. கதறிக் கதறி அழுத குமரேசுவை அடக்க வழிதெரியாமல் திணறியது கூட்டம்.

ஒருவாறு தாயின் சிதைக்கு தீமூட்டி அவளை வழியனுப்பிவிட்டு ஆற்றில் மூழ்கி எழுந்த குமரேசுவின் பிடியினுள் அந்த நெத்திக்காசு பத்திரமாய் இருந்தது.

"எட்டுக்கு கும்பிடுவதற்காக" செலவுக்கு அம்மா காசு வைத்திருப்பாளா" என்ற பெரியவரின் கேள்விக்காக வீட்டிலுள்ள சகல சாமான்களையும் செல்லா புரட்டி எடுத்துவிட்டாள். செல்லா வயதில் சிறியவளென்றாலும் மூத்தவள் ஆகையால் சில பொறுப்புக்கள் அவளுக்கு தானாகவே ஏற்பட்டிருந்தது. எட்டுக்கு கும்பிடுவதற்காக வீட்டில் இருந்த சில சாமான்களை விற்கலாம் என தீர்மானித்த பொழுதுதான் அந்த முடிவையும் எடுத்தாள் செல்லா.

அம்மா தந்த கடைசிக்காசை ஏனோ காசுமுட்டியில் போட விரும்பவில்லை குமரேசு. அதைக் கவனமாக ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான் அவன். யாராவது எடுத்து விடுவார்களோ என்ற பயத்தில் "பூனை தன் குட்டியை தூக்கிச் செல்வதுபோல" தன்னோடு எல்லா இடமும் எடுத்துச் செல்லத் தொடங்கினான். எங்காவது விழுந்து தொலைத்து விடுமோ என்ற பயத்தில் காசு முட்டியிலேயே போட்டுவிடுவது எனத் தீர்மானித்து உள்ளே நுழைந்தவன், அடுத்தநாள் "எட்டுக்கு கும்பிடுவதற்காக" வாங்கி வைக்கப்பட்டிருந்த சாமான்களில் மோதிக் கொண்டான். தன் காசு முட்டியை எடுப்பதற்காக காம்பராவுக்குள் நுழைந்தவனின் கண்ணில் வெள்ளையும் நீலமுமாக கோடுகள் போட்ட பிளாஸ்டிக்கினாலான அந்த உடைந்த துண்டு பட்டுத் தெறித்தது! ❑

www.padippakam.com





# இறுக்கு காலடிகள்

காலைப்பொழுதின் இதமான குளிர்மை தெரியவில்லை. யன்னலுக்கூடாகக் கலந்துவரும் மல்லிகை மணம் வரவில்லை. கீச் கீச் என்று கத்தும் பறவைகளின் கீதமும் இந்தக் காலத்தில் இல்லை. கலகலவென்று தொட்டுத் துயிலெழுப்பும் காற்று எங்கே.

நித்திரையினின்று கண்முழித்து ஒருகண விழிப்பில் சில அங்கலாய்ப்புக்கள். சொந்த மண்ணை விட்டு, உறவுகள் விட்டு, வீட்டை விட்டு இத்தனை ஆயிரம் ஆயிரம் மைல்களுக்குப்பால் வெளிநாட்டிற்கு வந்து ஏழு, எட்டு வருடங்கள் முடிந்த போதும் சில காலைப் பொழுதுகள் இவ்வாறான அவசரத்திலும், இப்படியான அங்கலாய்ப்புகளுக்கும் மத்தியில்தான் முழித்துக் கொள்கிறது.

திரையை மெதுவாக விலக்கி அறைக்குள் வெளிச்சத்தை படர விட்டு யன்னலுக்குப் பக்கத்தில் முகத்திற்கு கைகொடுத்து வெறுமனே உட்கார்ந்தாள்.

பஞ்சு பஞ்சாய் பறந்து பறந்து "ஸ்நோ" கொட்டிக்கொண்டிருந்தது. ஒரு பச்சை இலையைக்கூட காணவில்லை. எல்லாம் காய்ந்துபோய் வெறுமனே. இதில ரசிக்கிறதுக்கு... என்ன இருக்கிறது. ஒருகணம் மனம் நினைத்து முடிப்பதற்கிடையில் இல்லை, இதுவும் ஒரு வகையில் இயற்கையின் கோலம். ஒத்துப் பார்த்துக் கொண்டது மனம். பொதுவாகவே இந்தக் காலங்கள் மனத்தினை சோகமாகவே வைத்துக் கொள்கிறது. எல்லாமே விட்டெறிந்து விட்டாற்போன்று. நெருங்கிக்கொண்டிருக்கும் தனது கலியாணவீட்டு நினைவுகளும் அடிக்கடி அடிமனத்திலிருந்து தலைகாட்டிக்கொண்டுதானிருந்தது.

இங்கு வெளிநாட்டிற்கு எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு ஏஜன்சி மூலம் வந்து அண்ணாவின் ஆதரவில் இருந்து தனக்கென ஒரு வேலை தேடிக்கொண்டு தனக்கென ஒருவாழ்க்கையை அமைத்துக் கொண்டு தான், தன் என்ற வட்டங்களைப் போட்டுக்கொண்டு, இந்த வாழ்க்கையுடன் ஒட்டியும் ஒட்டாமலும் இப்போது எட்டு வருடங்கள் ஆகிவிட்டிருந்தது.

வீட்டிலிருந்து.... இல்லை எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டிலிருந்து, எங்கள் குடும்பத்திலிருந்து அப்பா, அம்மா, அக்கா அவர்கள் இப்போது எங்கே என்றுகூடத் தெரியவில்லை. கடிதங்கள்கூட ஒழுங்காக வருவது நின்றுபோய் விட்டது. அடிக்கொரு தடவை கடிதம் வந்து கிடக்குமா என்று ஏக்கத்தில் பார்த்தே பல மாதங்கள் சென்று விட்டது. எதிலும் பதட்டம். அங்கிருந்து திக்குத்திக்காக வரும் செய்திகள் மட்டும் தலைக்குள் போர் நடத்திக்கொண்டிருக்கும் எப்போதும்.

இந்த வாழ்க்கையின் அவசரங்கள். அந்த வாழ்க்கையின் அல்லோலங்கள். இடையில் நாங்கள்... இதற்கிடையில் கலியாணத்திற்கான

www.padippakam.com



சந்தோஷங்கள் தலைகாட்டத்தான் இல்லை. என்றாலும் எதிர்காலத் திட்டங்களில் ஒரு கண லயிப்பு. இப்படி இப்படி செய்யலாம். எப்படி எப்படியெல்லாம். அதற்குக்கூட நிரந்தரங்கள் இருப்பதாகப் படவில்லை.

வாழ்க்கையை நினைப்பதற்கும், யன்னலுக்குள்ளால் ஓடிக்கொண்டிருக்கும் வானத்துக்கும் முகிலுக்கும் உள்ள இடைவெளியில் தொங்கிக்கொண்டு அலசுவதற்கும் நன்றாகத்தான் இருந்தது.

வெளியே கொட்டிக்கிடந்த ஸ்நோவிற்குள் கண்கள் உறைந்து போய்க்கிடந்தன. அங்குமிங்குமாகப் பல காலடிகள். ஓடிச்சென்று அதற்குள் கால்பதித்து சந்தோஷமாய் ஓட வேண்டும் என்று இத்தனை வருடங்களாய்த்தான் நினைக்கிறாள். ஆனால் நினைவில் நின்றாற்போல ஒருநாளும் ஆசைதீர நடந்ததில்லை. மனமும் விட்டதில்லை. அழகான வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி பிள்ளையை வண்டியில் வைத்துத் தள்ளியபடி அமிழ்ந்துபோன காலடிகளுக்கு மேலால் தனது பாதச்சுவடுகளைப் பதித்துச் சென்று மறைகிறாள். ஆசையுடன் அதனைப் பார்க்கிறாள்.

மீண்டும் அந்த நேரத்திற்குரியபடி வழமையான ஆண்களும் பெண்களும் வேலைக்கு அவசர அவசரமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குச் சிறிது தள்ளியிருக்கும் வயதுசென்ற கிழவன் நடக்கமுடியாமல் மெதுமெதுவாக ஊர்ந்தபடி நாய்களைக் கையில்கொண்டு வெளிக்கிட்டுவிட்டார். காற்றாடவா அல்லது தனது உடல் ஆரோக்கியத்திற்கா, நாய்களின் உற்சாகத்திற்கா? இவரது பிள்ளைகள், மனைவி எங்கே என இவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

கையில் கிடைத்ததைக் கொண்டு வீட்டிற்குக் கடிதம் எழுதினாள். மனத்திற்குள் லேசான ஆற்றோட்டம். மீண்டும் கைகொடுத்து யன்னலுக்கு வெளியே பார்வையை விட்டு எதையோ தீவிரமாக ஆராய்ந்தாள்.

ஓ! இந்தக் கிழவிக்கு இன்னமும் நடக்கமுடிகிறதா என்ன. வயதில் முதிர்ந்தவள். பலவீனமான உடல் போல பட்டது. முதுகில் வேறு கூன். ஒரு கையில் கடையில் பொருள்கள் வாங்கிய பை. மற்றைய கையில் பொருள்களுடன் கூடிய சிறுவண்டி. இழுத்துக்கொண்டு இத்தனை வேகமாக நடக்கமுடிகிறதா? முன்பு எப்போதோ ஒருமுறை அண்மையில் இருக்கும் வீடொன்றின் முற்றத்தில் குந்தியிருந்து உடலெல்லாம் வேர்வை ஓட புற்களைச் செதுக்கித் துப்பரவாக்கிக் கொண்டிருந்தாள். பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள். அருகே குவித்துக் கிடந்த குப்பைகள். திகைத்துத்தான் போனாள். அவளுக்கென்று உறவுகள் வீட்டில் இருந்ததாகத் தெரியவில்லை. யாருடனும் நிறைய நேரம் கதைப்பதில், பகிர்ந்துகொள்வதில் அவளுக்கு நிறைய விருப்பம். மனம் திறந்தும் பேசுவாள். மனித உறவுகளைப் பற்றியெல்லாம் பேசுவாள்.

இப்போதும் இத்தனை நேரமாய் யாரோடோ மிகவும் சத்தமாகச் கதைத்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் வீட்டு நினைவு தொட்டுத் தொடருகிறது.

எத்தனை காலடிகளை பதித்து எங்கே நகர்ந்து கொண்டிருக்கிறார்களோ? உலர்ந்து தோய்ந்து.... மனம் இவளுக்கு களைத்தது.

இவள் யன்னலிலிருந்து விடைபெற்றுக் கொண்டாள். கலியாணத்திற்கு முன்பு வேலையிடத்தில் செய்து முடிக்கவேண்டிய வேலைகள் நிறையவே இருந்தன. அவசர அவசரமாகத் திரும்பினாள். வெளியே காய்ந்துபோன வெறும் தடிகளோடு இருந்த மரங்களும் பார்வையில் பட்டது. மணி பாய்ந்து கொண்டிருப்பதாகப் பட்டது. மனம் வேலைக்குப் போகவேண்டும் என உந்தியது. சாப்பாட்டில் இரண்டுவாய் சாப்பிட முன்னரே வீட்டு நினைவு தொடர்ந்தது. அம்மா பின்னால் திரிந்து சாப்பாடு கொடுப்பது ஞாபகத்தில் வந்து குத்தியது. சாப்பிட வாருங்கள் என்று கூப்பிட இங்கு ஒருவருமில்லை. அடிக்கடி இப்படி நினைவுகள் தோன்றினாலும் வாழ்க்கையின் வேகத்தில் சமாளித்துக் கொள்ளப் பழகிவிட்டிருந்தாள். ஆனால் கல்யாணம் நிச்சயமாகிய நாளிலிருந்து அப்பிடி அந்த நினைவுகளை இலகுவில் துரத்தமுடியவில்லை. ஏன் இவ்வளவுநாளும் தோன்றவில்லை? ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருந்தாள். இப்போது மனதிற்கு ஓய்வு கொடுக்கிறேனோ? புதிதாகச் சிந்தனை ஓடியது. அவ



www.padippakam.com

நளாயினி இந்திரன்



எது சிந்தனைகள் புதிதாகப் பட்டது. வாழ்க்கையைப்பற்றி ஒரு நாளும் ஆழமாக அலசியதில்லை. இப்போதெல்லாம் ஆற அமர இருந்து சிந்திக்கிறாள்.

அவசர அவசரமாக கைப்பையில் வைக்கவேண்டியவற்றைத் திணித்துக்கொண்டு நடந்தாள். பார்த்து ரசித்த குளிரும் ஸ்நோவும் ஒருபக்கம் மறைந்துகொள்ள வேலை மட்டும் மனதில் நிற்க காலில் வேகம் ஒட்டிக்கொண்டது. வழமையான பஸ் ராண்ட். வழமையாக அந்நேரத்திற்கு உரியவர்கள் இன்றும் நிற்கிறார்கள். யாரும் அவளுக்கு மிகத்தெரிந்து நெருங்கிப் பழகுபவர்களாக இல்லை. சாதாரண ஒரு புன்சிரிப்பைத் தவிர.

வெறுமே நிலத்தில் குந்திக்கொண்டிருந்த வெள்ளைக்காரப் பையனை நோக்கி இன்றும் ஆச்சரியம் தலைதூக்கியது. இன்று எத்தனையாவது நாளாக இப்படி இருக்கிறான் என நினைவுபடுத்தினாள். இந்த விறைக்கும் குளிரில், உறையும் ஸ்நோவில் வெறுமே ஒரு ரி-சேர்ட், கோட் மட்டும் அணிந்துகொண்டு எந்தவித காரணமுமே இல்லாமல் தொடர்ந்து மூன்று நாட்களாக இரவுபகலாகத் தொடர்ந்து ஒரு இளம் வயது பையன் ஏன் இப்படி இருக்க வேண்டும் எனக் காரணத்தினை அலசத் தொடங்கியது இவளின் மனம்.

அக்கம் பக்கத்தில் நின்றவர்களும் காரணங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் போலும். ஆளுக்கொன்றாய் விளக்கிக் கொண்டிருந்தார்கள் ஏன் எப்படி என்றெல்லாம். அருகில் நின்ற வயது சென்ற பெண்ணொருத்தி புன்சிரிப்பொன்றை உதிர்த்து அறிமுகமாகி, அவனைப் பற்றிக் கூறினாள்.

வீட்டை, குடும்பத்தை விட்டு ஓடி வந்திருக்கிறான் இந்தப் பையன். வீட்டில் கருத்து முரண்பாடுகளாம். வீட்டுச்சூழல் பிடிக்கவில்லையாம். அன்பு செலுத்துவதற்கு யாருமில்லையாம், வந்துவிட்டானாம். நண்பன் ஒருவன் தான் வந்து அழைத்துப்போவதாகவும், இங்கே வந்து காத்திருக்கும்படியும் கூறியிருக்கிறான். வந்தபாடில்லை. காத்திருக்கிறான். அந்தப் பெண் கதையைக் கூறிக்கொண்டிருந்தாள்.

தவிர்க்கமுடியாதபடி மீண்டும் மனம் பறந்தது. தெருவெல்லாம் ஓடியது. வீட்டைச் சுற்றியது. கவலைப்பட்டது. ஒடுங்கிக்கொண்டது. அங்கே இப்போது ஓடிக்கொண்டிருக்கும் மக்களைப்பற்றியும் பசி தூக்கம் கெட்டு ஓடித்திரிவதையும் ஒருமுறை நினைத்தாள். மூச்சு ஒரு கணம் நின்றுவிடும்போல உணர்ந்தாள். பெரிதாக ஒரு பெருமூச்சினை எறிந்தாள்.

பக்கத்தில் நின்றவள் விமர்சனத்தை எதிர்பார்த்தவள்போல நின்று கொண்டிருக்கிறாள் போலும். பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இன்னமும் அவளது சிந்தனைகளுக்குள்ளும் காலடிகளுக்குள்ளும் நின்றாள். ஆனால் பார்வை மட்டும் வெறுமனே அந்தப் பையன் மீது.

பஸ்ஸில் போகும்போதே தான் வேலைசெய்யும் சுப்பர் மார்க்கெட்டின் உதவி மனேஜரிடம் சொல்லப் போவதை ஒத்திகை பார்த்துக் கொண்டாள். அவன் ஏற்கனவே சிடுமூஞ்சி என்று பெயரெடுத்தவன். நின்று நிமிர்ந்து ஒருவருடனும் ஆறுதலாகக் கதைக்கமாட்டான் என்பதும் தெரியும். இத்தனைக்கும் அவன் இவளது நாட்டுக்காரனாக இருந்தும்கூட எந்தவித ஆலோசனை அறிவுரை கூறவும் மாட்டான். அவனது பேச்சுக்களில் நீதி நியாயம் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால்தான் இத்தனை ஒத்திகைகளையும் பார்த்துக்கொள்கிறாள். இத்தனையும் இவளது கல்யாணத்தை ஒட்டி ஒரு இரண்டு கிழமை லீவு கேட்கத்தான். இத்தனை நாளாக ஓடி ஓடி உழைத்திருக்கிறாள். இப்போது அவனிடம் சென்று தனக்குரிய லீவு எடுப்பதற்கு இத்தனை பயம். தனக்குத் தன்னிலேயே ஆத்திரமாகக்கூட இருந்தது. இப்படிக் கேட்கலாமோ? இந்த வசனத்தையும் சேர்த்துக் கொள்வோமா? பஸ்ஸின் கண்ணாடிக்குள்ளால் ஓடிமறைந்த உயர்ந்த கட்டிட வரிசைகளைத் தாண்டி அவளது பார்வை வெறுமனே ஓடிக்கொண்டிருந்தது. அதிலும் விட வேகமாக சென்றது மனம்.

இப்படி லீவு கேட்கப்போய் இவனிடமே வாங்கிக்கட்டிக்கொண்டதும் நினைவுக்கு வந்தது. எல்லாவற்றுக்கும் வசனங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டாள். ஏன் இவன் இப்படி இருக்கவேண்டும்? இவளின் வெகுளி மனம் நினைத்துக் கொண்டது. அங்கு வேலை செய்யும் பெரும்பாலானவர்களுக்கு இவன் மீது எப்போதும் ஒரு ஆத்திரம். தம் உழைப்பிற்கு பங்கம் வந்துவிடக் கூடாதே எனக் கண்டும் காணாதவர்களாக இருந்தார்களே தவிர அவனைப்பற்றி அடிக்கடி கதைத்துக் குமைந்து கொள்வார்கள்.

பஸ் ஹோல்ட்டில் இறங்கினாள். முன்னே வழமையான கலகலப்புடன் கடை. அதையொட்டி ரெஸ்றோரண்ற். அதற்குப் பக்கத்தில் எங்கள் இனத்தவன் ஒருவனது கடை. அதில் விற்கும் பொருள்களும் வெளியே அடுக்கி வைத்திருக்கும் எம்நாட்டு பழங்கள், மரக்கறிகளை பார்வையிலேயே ஒவ்வொருநாளும் விலக்குவாள். அதற்கு முன் நின்று தெருவைத்தாண்டி இந்தப்பக்கம் வந்தால் நீண்டுகொண்டு போகும் இவள் வேலை செய்யும் சுப்பர் மார்க்கெட். அதற்குள் இன்று உள்ளே போகவே பிடிக்கவில்லை.

வழமையான கலகலப்பு இன்னும்

www.padippakam.com



தொடங்கியிருக்கவில்லை. காலை வேளை அமைதியாகக் கிடந்தது. ஷெல்புகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வழியில் எதிர்ப்படுபவர்களுக்கு ஹலோ - காலை வணக்கம் சொல்லிக் கொண்டே மனேஜரின் அறை நோக்கிப் போனாள்.

ஏளனமான சிரிப்புக்களுடன், குழந்தைத்தனமான ஒரு வெள்ளைக்கார சிறுவனுடன் கதைத்துக் கொண்டிருந்தான். இவள் ஒதுங்கி நின்று காத்திருந்தாள். அவர்களது உரையாடல் காதில் விழுந்து கொண்டிருந்தது. இப்போது விளங்கியது அந்த சின்னப்பையன் வேலை கேட்டு வந்திருந்தான். அவனது தாயாருக்கு இன்னும் சில தினங்களில் பிறந்தநாள். தன்னுடைய தாய்க்குப் பரிசொன்றினை அளிக்க விரும்புகின்றான். அதற்கு அவனுக்கு பணம் தேவைப்படுகிறது. அதனாலேயே வேலை கேட்டு வந்திருந்தான். "எந்த சின்ன வேலையையாவது கொடுங்கள். செய்து முடித்து விடுவேன். நான் மிகவும் கெட்டிக்காரன்." தன் ஆற்றலை, திறமையை மிகவும் கஷ்டப்பட்டு ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிருந்தான். வேலை கொடுக்கலாமா இல்லையா என்பது வேறு. ஆனால் இவனது முகத்திலோ எவ்வித இரக்கமோ. சலனமோ இல்லை. அவன் என்ன தான் நினைக்கிறான் என்பது கூடப் புலப்படவில்லை. கடுமையாகவே கிடந்தது. இல்லவே இல்லை என்று மட்டும் பலமாகத் தலையாட்டினான். ஆகக்கூடியது அவனது மனத்தினை, முயற்சியைப் புரிந்தவனாகத் தெரியவில்லை. இவள் அவனை அளந்துகொண்டிருந்தாள். என்ன மனிதன், புருவங்கள் இறுகிக்கிடந்தன. உதடுகள் பிதுங்கி மறுத்துக் கொண்டிருந்தன. சாவகாசமாக எதையோ எழுதவும் தொடங்கினான்.

அந்தச் சிறுவன் இவனை உதறியெறிந்து விலகத் தன் முறைக்குக் காத்திருந்தவள்போலச் சென்றாள். ஏன் என்பதுபோல தலையை தூக்கினான். வாய் குமுறியது. அவன் முன்னே, திரும்பத் திரும்பப் பாடம் பண்ணி வைத்த வசனங்கள் வரவேயில்லை. ஏதோவொன்றை எங்கேயோ இருந்து தொடங்கினாள் இவள்.

"இரண்டு கிழமை லீவு வேண்டும்.."

அதற்கு அவள் தகுதியற்றவள் போல ஏளனச் சிரிப்புடன் ஏன் என்பதுபோலப் பார்த்தான்.

கலியாணம் பண்ணப் போகின்றேன்..

ஓகோ.. அவன் மனதுக்குள் வேலை செய்கிறான் என்பது புரிந்தது, அவனது மௌனத்தில்.


இவள் சிறிது உயிர்பெற்றவள்போல சிறிது உசாரானாள்.

"ஓ.. எடுக்கலாம்" என்றான் மெதுவாக.

நிறைய யோசிக்கின்றான் போலப் பட்டது.

"இப்போது கலியாணத்திற்கு லீவு, பின்பு இன்னும் சில மாதங்களில் பிள்ளை என்பீர்கள். இன்னும் சிறிது காலத்தில் அசதி, களைப்பு, வருத்தங்களோடு நிற்பீர்கள். பின் பிள்ளை பிறந்த பின் அதற்கும் உங்களுக்குச் சம்பளத்துடன் லீவு வழங்கவேண்டும். எத்தனை விதமான கஷ்டம் பார்த்தீர்களா?" அவன் மிகவும் சாதாரணமாக சிரிப்பொன்றுடன் கூறிக்கொண்டிருந்தான்.

"எப்போது பிள்ளை பெறுவதாக



யோசித்திருக்கிறீர்கள்.." கூடவே இதனையும் சிரிப்புடன் கேட்டு வைத்தான்.

அவளின் உடலில் விஷம் பரவுவதைப்போல உணர்ந்தாள். முகமும், உடலெல்லாம் சிலிர்த்து விறைத்திருக்க வேண்டும். அவனை ஒரு துச்சமான பார்வையில் தூக்கி அடித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியான கேள்விகளை ஏனைய பெண்களிடமும் கேட்டிருக்கிறான். தெரியும். கதைத்திருக்கிறார்கள் குமைந்து குமைந்து. ஆனால் அதே கேள்விகள் அவளுக்கு முன்பும் எறியப்பட்டபோது.

முகத்தில் தழைவாக நின்று கொண்டிருந்த புன்சிரிப்பு மறைந்திருக்க வேண்டும். வார்த்தைகளை இன்னமும் தேடிக்கொண்டே இருந்தாள்.

இவன் எந்த சமூகத்து, எந்த மனித இனத்தின் பிரதிநிதியாக இருப்பான் என்று ஒருகணக் கேள்வி கூட.

சமூகம் - பெண் - உரிமை - நிமிஷங்களுக்குள் அடுக்கடுக்காய் ஒன்றுக்கு பின் ஒன்றாய் ஏறி இறங்கி அடம்பிடித்தன.

இவன் இப்படி கதைத்ததற்கே சட்ட நடவடிக்கை எடுக்கலாம் இங்கே. நினைத்துக்கொண்டாள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடவே வந்தது. சொன்னாள். "..கலியாணம் பண்ணுவதற்கும் பிள்ளை பெறுவதற்கும் அதற்குரிய லீவுகளை எடுப்பதற்கும், வேலை செய்வதற்கும் எனக்கு உரிமை இருக்கிறது. எப்போது நான் பிள்ளை பெறப்போகிறேன் என்பதை விண்ணப்பப்படிவத்திலேயே உனக்கு சொல்ல வேண்டியதில்லை.

மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பதற்கும், வாழ்க்கையின் உண்மையை புரிந்துகொள்ளவும் முயற்சியும், மற்றையவரின் உரிமைகளை மிதிக்கவும் மாட்டேன். அதேநேரம் எனக்கிருக்கும் உரிமைகளை யாருக்காகவும் விட்டுக்கொடுக்கவும் மாட்டேன்." கூறிமுடித்ததில் மனம் களைத்தது. ஆனால் தெளிவாக இருந்தது. திரும்பி அடுத்த காலடிகளை உறுதியாகப் பதித்துச் சென்றாள்.❑

www.padippakam.com


# DAK Travels


369 High Street North, Manor Park, London E12 6PG

*We Promise to Meet All Your Travel Needs!*

*Contact Us on:*

**Tel: 0181-471 7242/ 7800**

**Fax: 0181-471 7800**



Book With Us And Enjoy A TENSION-FREE HOLIDAY

*We Offer Competitive Prices on All Airlines World-Wide!*

- We do P.T.A., T.O.D., Travel Insurance, Charter Flights & much more..
- SPECIAL FARES TO:
  India, Colombo, Singapore/Malaysia, JFK, Toronto & Many More Destinations ...
- Special discounts for O.A.P's to India in Air India & British Airways!

We Are Open Mon - Sat From 9.00 am - 6.00 pm.
Tel: 0181-471 7242/7800

# EURO-INDO Property Mart

**369 High Street North, Manor Park, London E12 6PG**

*For More Information Call Us Now On*

**0181-471 7800/0181-471 7242**
**0956 111 370 Or Fax Us on 0181-471 7800**

The Dream Holiday Resort
Site Costs only £3,000
Attractive Discounts for
Full or Two Half Payments
Payment in
Monthly Instalments accepted.


**Buy Your Own LAND In Madras For Your Bright Future!!**

★ 13.75 cents i.e. 6,000 sq. ft. (60' x 100')
★ Access Roads
★ Developed with 11 coconut trees and 6 different fruit trees
★ Space for Construction of Your House
★ Protected Water ★ Electricity
★ Compfortable Conveyance to and from Madras
24 Hours Security with Watch and Ward Staff

www.padippakam.com

ரெ கார்த்திகேசு

# கொல்ல வரும் புலி



வைகறை வேளையில் அந்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் தமிழ்நாட்டு மண்ணில் இறங்கத் தாழப் பறந்துகொண்டிருந்தது. பொன்னம்பலம் ஒருவித மனப் படபடப்போடு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் வைகறை வெளிச்சத்தில் பலவீனமான மஞ்சள் விளக்குகளில் மங்கலாகத் தெரிந்தன.

தமிழாராய்ச்சி மாநாடு தொடங்கி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. போக முடிவுசெய்து பயணச்சீட்டுக்குப் போய் நின்றபோது எந்த விமானத்திலும் இடம் கிடைக்கவில்லை. நூற்றுக்கணக்கானோர் மாநாட்டுக்கும் சுற்றுலாச் செலவுக்குமாக ஏற்கனவே பணம் கொடுத்து இடம் பிடித்து வைத்து விட்டார்கள். செவ்வாய்க்கிழமை காலையில் சென்னையை அடைகின்ற விமானத்தில் இடம் கிடைத்தது. ஞாயிறு திறப்பு விழாவையும் திங்கள் முதல் நாள் நிகழ்ச்சிகளையும் செவ்வாய் காலை நிகழ்ச்சிகளையும் இழக்கவேண்டி வரும். ஆனால் இன்னும் மூன்று நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். அப்படித்தான் கடைசியில் முடிவு செய்து பயணச்சீட்டும் வாங்கினார்.

இந்தப் பயணத்திற்கான இனிமையும் ஏமாற்றமும் கலந்த காரணங்கள் அவருடைய நினைவுக்கு வந்தன.

OOO

"என்ன நினைக்கிறீர்கள் டாக்டர் ரம்லி?"

"அருமையான யோசனை" என்றார் பேராசிரியர் ரம்லி. "இருவருமே காலனித்துவ ஆட்சியை எதிர்த்துப் பாடியவர்கள். இருவருக்குமே சுதந்திரதாகம் இருந்திருக்கிறது. இருவருமே புதிய சமுதாயங்கள் காண ஆசைப்பட்டவர்கள்!"

"அதைவிட இருவரும் மனிதநேயம் மிக்கவர்கள். தேசிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். இந்த விசயத்தைத்தான் கருவாக எடுத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்!" என்றார் பொன்னம்பலம்.

"நன்றாக! இந்தக் கவிஞர்களின் போர்க்கால, காலனியாதிக்க எதிர்ப்புணர்வுகளை மறந்துவிட்டு அவர்களின் மனிதாபிமான உணர்வுகளை ஒப்பிட்டுக் காட்டுவது மிகவும் நல்லது. காலத்துக்கு ஏற்றது. செய்யுங்கள் டாக்டர் பொன்னம்பலம். ஆனால்... உஸ்மான் அவாங் பற்றி உங்கள் தமிழ் உலகுக்குச் சற்றும் தெரியாதே. உங்கள் தலைப்பு மாநாட்டுக்கு எடுபடுமா?"

"நான் இந்தத் தலைப்பை நினைத்ததற்குக் காரணமே, நமது மலேசிய உஸ்மான் அவாங்கைத் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். பாரதியே பாடியிருக்கிறாரே ரம்லி. "சென்றிடுவீர், எட்டுத்திக்கும்; கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

"பலே! நன்றாகச் செய்யுங்கள். உங்கள் கட்டுரை மாநாட்டில் ஏற்கப்பட்ட கடிதம் கிடைத்ததும் சொல்லுங்கள். உங்கள் பங்கேற்புக்கு நம் பல்கலைக்கழகமே எல்லாச் செலவுகளையும் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார் ரம்லி.

கைகுலுக்கிவிட்டு உற்சாகமாக வெளியே வந்தார். பொன்னம்பலம்.

OOO

பொன்னம்பலம் மாநாட்டு மனுப் படிவத்தை முறையாக நிரப்பிக் கையெழுத்திட்டபின் மாநாட்டுச் செயலாளருக்கு முன்னிணைப்புக் கடிதம் ஒன்றினை எழுதினார்.

"அன்புடைய பேராசிரியர் செ.செயராம் அவர்களுக்கு,

வணக்கம்.

மாநாட்டுக்கான படிவம் முறையே நிரப்பியுள்ளேன். ஆய்வுக் கட்டுரைத் தலைப்பு, துறை, சுருக்கம் ஆகியவையும் இணைத்துள்ளேன். ஆனால் நீங்கள் கேட்டிருந்த மாநாட்டுப் பதிவுக் கட்டணமான 100 அமெரிக்க டாலர் இப்போது இணைக்கவில்லை. இதற்குக் காரணம் இந்தப் பதிவுக் கட்டணம் உட்பட பிரயாணம் முதலிய எல்லாச் செலவுகளையும் நான் வேலை பார்க்கின்ற மலேசிய மத்திய பல்கலைக்கழகம் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கு என்னுடைய ஒப்பீட்டு இலக்கியத்துறையின் தலைவர் உறுதியளித்திருக்கிறார். ஆனால் ஆய்வுக் கட்டுரை மாநாட்டுக் குழுவினரால் ஏற்கப்பட்ட உறுதிக் கடிதம் கிடைத்த பின்னர்தான் இந்தச் செலவுகள் அங்கீகரிக்கப்படும் ஆதலால், தாங்கள் விரைந்து கட்டுரை ஏற்கப்பட்ட முடிவினை எனக்கு அறிவிக்கக்

www.padippakam.com



கேட்டுக் கொள்கின்றேன்.

நான் இந்த நாட்டிலேயே பிறந்தவன். இலங்கையிலிருந்து வந்து மலேசியாவில் குடியேறிய தமிழர்கள் வழியில் இரண்டாம் தலைமுறை மலேசியன். இந்நாட்டிலேயே தமிழ் படித்து மலாய்ப் பல்கலைக்கழகத்தில் மலாயும் தமிழும் கற்று ஒப்பீட்டு இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றவன். இலங்கை, சிங்கப்பூர், தமிழ்நாட்டு தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிகள் செய்து கட்டுரைகள் எழுதியுள்ளேன். என் 'கரிக்யூலம் விட்டே' பார்க்க. இதுவரை தமிழ்நாட்டுக்கு வந்ததில்லை. முதல் முறை தமிழ் மண்ணில் கால் வைத்து, தமிழ் அறிஞரிடையே பேசிப் பழக உங்கள் மாநாட்டின் மூலம் வருகின்ற அரிய வாய்ப்புக்குக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
டாக்டர் நடேசன் பொன்னம்பலம்
விரிவுரையாளர், ஒப்பீட்டு இலக்கியத்துறை
மலேசிய மத்திய பல்கலைக்கழகம்.

ooo

கட்டுரை நன்றாக வந்திருந்தது. பூர்வாங்கப் பிரதியை ரம்லி படித்துப் பார்த்தார். சில இடங்களில் கேள்விக் குறிகள் போட்டார்.

"உஸ்மான் அவாங்கின் சொற்களில், பாரதியின் சொற்களில் உள்ள உணர்ச்சிக் கொப்பளிப்பு இல்லை என்கிறீர்கள். உங்கள் மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படிக்கும் போது, நீங்கள் சொல்வது சரியென்று படுகிறது. ஆனால் இதை இப்படி வெறுமனே சொல்லாமல் இந்த இரண்டு கவிஞர்கள் பிறந்த சமுதாயங்களின் பின்னணிகளைக் காட்டி கலாசாரக் காரணங்களை நிறுவுவது அவசியம். எங்கள் மலாய்க்காரச் சமுதாயம் -அதாவது கம்பத்து (கிராமிய) வாழ்க்கையில்- எதையும் மரியாதையாகச் செய்தும், பெரியவர்களுக்கு மத்தியில் உரத்துச் சொல்லாமல் தணிந்த குரலில் பேசியும் பழக்கப்பட்டு விட்டது. ஆகவே உங்கள் பாரதியைப்போல் 'எரிதழல் கொண்டுவா' என்று உஸ்மானுக்குச் சொல்ல வாய் வராது. இதை விளக்குவது நல்லது என்றார்"

"பாரதியும் கிட்டதட்ட அந்தப் பின்னணிக்காரர்தான். ஆனால் மரியாதை அடிமைத்தனமாக ஆகும்போது அவருக்கு வரும் கோபம் நெருப்பாக இருந்திருக்கிறது!" என்றார் பொன்னம்பலம்.

"அதைத்தான் விளக்குங்கள் என்கிறேன். இந்தியாவில் சுதந்திரம் அக்கினி நட்சத்திரமாக வந்திறங்கியது. மலேசியாவில் குளிர் நிலவாக வந்திறங்கியது. இது இந்தக் கவிஞர்களை எப்படிப் பாதித்தது என்பதை விளக்குங்கள்"

பொன்னம்பலம் குறிப்பெடுத்துக்கொண்டார்.

"உங்களுக்கு மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடமிருந்து கட்டுரை ஏற்கப்பட்டதாகப் பதில் வந்து விட்டதா பொன்னம்பலம்? "

"இன்னும் வரவில்லை டாக்டர் ரம்லி."

"உங்கள் படிவம் வந்து கிடைத்ததற்கான அறிவிப்பு."

"அதுவும் இல்லை."

"நினைவுக் கடிதம் எழுதிப் போடுங்கள். எனக்கு விரைவாகச் சொல்லுங்கள். வெளிநாட்டுப் பயணமாக இருப்பதால் உதவித் துணைவேந்தருக்கு எழுதி முன் அனுமதி வாங்கவேண்டும். நாள் போய்க்கொண்டிருக்கிறதே!"

ooo

கட்டுரையை முழுமைப்படுத்தி, அதனோடு மூன்றாவது நினைவூட்டுக் கடிதமும் இணைத்து விரைவஞ்சலில் அனுப்பி வைத்தார். பதில் இல்லை. ஃபாக்ஸ் அனுப்பினார். பதில் இல்லை.

"ஆச்சரியமாக இருக்கிறதே! ஒருவேளை மாநாட்டை ரத்துச் செய்து விட்டார்களோ?"என்று கேட்டார் ரம்லி.

"இல்லை. தமிழ்ப் பத்திரிகைகளில் ஏற்பாட்டுச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன" என்றார் பொன்னம்பலம்.

"அப்படியானால் ஒரு பதிலும் எழுதாமல் இருப்பது மரியாதையில்லையே!" பொன்னம்பலம் சொன்னார்.

"நிர்வாகக் கோளாறுகளாக இருக்கலாம். நேரில் போய் எல்லாம் சரிப்படுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறேன். காலம் குறைவாக இருப்பதால் ஒரு சுற்றுப் பயண விசா வாங்கிக்கொண்டு நானாகப் போகலாம் என்று பார்க்கிறேன். பல நல்ல அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பையும் முதன்முறையாகத் தமிழ் நாட்டில் காலடி எடுத்து வைக்கும் வாய்ப்பையும் விட்டுவிட விரும்பவில்லை!"

ரம்லி யோசித்துச் சொன்னார். "சரி பொன்னம்பலம். இந்தச் சூழ்நிலைகளை விவரித்து எனக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, உங்கள் சொந்தச் செலவில் போய் வாருங்கள். அங்கு போய்க் கட்டுரை படித்துவிட்டுச் சான்றுகள் கொண்டுவந்தால் அந்தச் செலவுகளைப் பல்கலைக்கழகம் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். உஸ்மான் அவாங்கின் பாடல்கள் ஓர் அனைத்துலக அரங்கில் இடம்பெறுவது இந்த நாட்டுக்குப் பெருமைதானே" என்றார் ரம்லி.

ooo

விமானம் தரை தொட்டது. அண்ணா அனைத்துலக விமான நிலையம் என்ற தமிழ் எழுத்துக்கள் பார்க்கப் பெருமையாக இருந்தன. மண்ணில் கால்வைத்தபோது, இது வள்ளுவன் பிறந்த மண், இளங்கோ பிறந்த மண், கம்பன் பிறந்த மண், பாரதி பிறந்த மண், அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும் அருமணி வாசகரும் சுத்தானந்தரும் பிறந்த மண், அண்ணா பிறந்த மண், திரு வி.க.வும் மறைமலை அடிகளும் பிறந்த மண், கல்கியும் மு.வ.வும் அகிலனும் ஜெயகாந்தனும் பிறந்த மண் எனத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக்கொண்டு பெருமிதப்பட்டார். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியது இந்த நாட்டில் இல்லை. ஆனால் அவர்கள் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடுதான்.

ஆனால் தமிழ்நாட்டுக்குத் தான் முதன்முறையாக

www.padippakam.com



விமானமேறத் தயாராகிக் கொண்டிருந்தபோது, தமிழ் நாட்டுக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ளும் அதை நன்கு அறிந்த அவரது பல்கலைக்கழக நண்பர் ஒருவர் கூறியிருந்தார். தமிழ் நாட்டில் கவனமாக இருங்கள். அதன் நகரக் காட்சிகளும், சாதாரண மக்களும், அவர்களுடைய பேச்சும், பழக்க வழக்கங்களும் உங்கள் எதிர்பார்ப்புகளையெல்லாம் ஏமாற்றிவிடும். அதிலெல்லாம் மோசமானது, அவர்களுடைய அரசியல் கலாசாரம். முதன்முறை அனுபவிக்கும்போது கலாசார அதிர்ச்சி அடைவீர்கள் நீங்கள் வார மாத இதழ்களில் படித்தவை, சினிமாவில் பார்த்தவையெல்லாம்கூட இந்த அதிர்ச்சிக்கு உங்களைத் தயார்படுத்தியிருக்க முடியாது. இந்தக் காட்சிகளை வைத்து தமிழ்நாடு பற்றிய நிரந்தரமான கருத்தை அவசரமாக முடிவு செய்துவிட வேண்டாம்.

"ஆனால் உண்மையான தமிழ்க் கலாசாரத்தின் ஆன்மா இதற்கெல்லாம் அப்பால் இருக்கிறது. அதன் இலக்கியவாதிகள், சமயச் சான்றோர்கள், சமுதாய அறிஞர்கள், உன்னதமான இசை நாட்டியக் கலைஞர்கள் இவர்களைத் தேடிப்பிடித்து பார்த்துப் பழகித் தமிழ்நாட்டைப் புரிந்து கொள்ளுங்கள்."

மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டார் பொன்னம்பலம்.

ООО

விமான நிலையத்திலிருந்து தஞ்சாவூர் மாநாட்டுச் செயலகத்தின் தொலைபேசி எண்ணை அழைத்துப் பேசினார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். செயலாளர் பேராசிரியர் செயராம் அறையில் இல்லை. எங்கிருக்கிறார் என்று சொல்ல முடியாது. எப்போது திரும்புவார் என்றும் சொல்லமுடியாது. பேசுவது செயலக உதவியாளர்.

தன் வரலாறு சொன்னார். தான் வந்துவிட்டதைச் சொன்னார்.

"உங்கள் பேப்பர் நேற்றைய நிகழ்ச்சி நிரலில் முடிந்து விட்டதே? ஏன் நேற்றே வரவில்லை?" என்று கேட்டார் செயலக உதவியாளர். தனக்கு அறிவிக்கவில்லையே என்று பதில் கூறினார்.

பதிவு எப்படி என்று கேட்டார். செயலாளரிடம் நேரில் வந்து பேசிக்கொள்ளச் சொன்னார்கள்.

விமான நிலையத்தை விட்டு வெளியே வந்து தன்னைச் சூழ்ந்துகொண்ட பல்வேறு விதமான அழுக்கு உடைகள் அணிந்திருந்த டாக்சி டிரைவர்கள் கூட்டத்தில் யாரிடம் பேசுவதெனத் தெரியாமல் கொஞ்ச நேரம் விழித்திருந்து சொன்னார், "தஞ்சாவூர் போகணுமே!"

"போலம் சாரு. மாநாட்டுக்குத்தான, வாங்க டாக்சி இருக்கு!"

"ரயில், பஸ்?"

"சார் ஊருக்குப் புச்சா? அதெல்லாம் ஆப்டாது சாரு. மூணு நாளைக்கு டிக்கெட் கெடைக்காது. வாங்க நான் கொண்ட உட்றேன்!"

எவ்வளவு என்று விசாரித்தார். ரூபாய்க் கணக்கில் பயங்கரமான தொகையாக இருந்தது. ஆனால் பதினொன்றால் வகுத்து மலேசிய ரிங்கிட்டில் பார்த்த போது பெரிதாகத் தோன்றவில்லை.

கதவு முதல் ஸ்டியரிங்வரை கடகடவென ஆடிய அம்பாசடர் டாக்ஸியில் சென்று உட்கார்ந்தார். ஓட்டுநரின் முன்னால் ஐந்தாறு தெய்வப் படங்கள் மாலையிடப்பட்டு இருந்தன. நகரச் சாலைகளின் போக்குவரத்தின் முரட்டுத்தனத்தையும் ஒழுக்கமின்மையையும் அபாயத்தையும் பார்த்தபோது இத்தனை தெய்வங்களின் அருள் தேவைதான் என்று பட்டது. தஞ்சாவூர் பயணம் தொடங்கியது.

ООО

அழகான ஆனால் வீங்கிய முகத்துடன் ஊதிப் போயிருந்த முதல்வரின் பூதாகரமான அட்டை உருவங்கள் வழிநெடுகிலும் இருந்தன. இவர் ஆடிப்பாடி நடித்த படங்களைப் பார்த்து ரசித்த நாட்கள் நினைவுக்கு வந்தன. "நாங்க புதிசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க...."

எவ்வளவு திறமைசாலி இவர்? ஒரு நடிகையின் தூரத்துக் கனவாக மட்டுமே இருந்திருக்கக்கூடிய ஆசைகளை, தீவிர லட்சியங்களாக்கி நிறைவேற்றி யிருக்கின்ற வீராங்கனை. வாழ்க்கையில் வெற்றி காண விரும்பும் இளைஞர்களுக்கு நிதர்சனமான எடுத்துக் காட்டு.

ஆனால் ஏன் இந்தப் புகழ் வெறி? தமிழன்னை என்றும், ஆதிபராசக்தி என்றும் இந்த அதீதப் புகழ் மொழிகள் இப்படி எழுதி வைக்கப்படுவதேன்? அதன் கீழ் எழுதியவரின் பெயரும் போட்டுக் கொள்வதேன்? இத்தனை படங்கள் முக ஓவியங்கள் எதற்காக? இதில் எவ்வளவு வஞ்சகப் புகழ்ச்சி? இது சர்வாதிகாரிகளின் வழியல்லவா? மா சே துங், ஹோ சி மின், ஸ்டாலின் போன்றவர்களின் வழி இந்த மக்களாட்சி நாட்டுக்கு எதற்காக?

"ஏம்ப்பா? இந்த திமுக, காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் போஸ்டர்கள் அடிச்சி ஒட்றது கெடையாதா?" என்று ஓட்டுநரிடம் கேட்டார் பொன்னம்பலம்.

"அத்தெல்லாம் அம்மாகிட்ட நடக்காது சார். அம்மாவோட ஆளுங்க ராவோட ராவா கிய்ச்செறிஞ்சிர மாட்டாங்க?"

"ஏன்? அவங்க தலைவர்களப் பத்தி இப்படி விளம்பரப்படுத்திக்க அவங்களுக்கு உரிமையில்லையா?"

அதெல்லாம் அந்தக் காலம் சாரு! இப்ப அம்மாவ உட்டு வேற ஒட்னா பொலிஸ்காரங்களே ஒதப்பாங்க சாரு!"

அந்நாட்டுக்காகப் பரிதாபப்பட்டார்.

ООО

திருச்சியில் சாப்பிட ஏதாகிலும் ஒரு ஹோட்டலுக்குக் கொண்டுபோகச் சொன்னார். ஓட்டுநர் 'ஹோட்டல்' என்ற பெயர் போட்டிருந்த ஒரு அசுத்தமான விடுதியில் கொண்டுபோய் இறக்கினார். சாப்பிட்டுப் புறப்பட்டார்கள்.

பரபரப்பான நகர மையத்தில் கார் நெரிசலில் மாட்டிக் கொண்டு இயந்திரம் கொதிக்க நின்று நீண்ட நேரம் காத்துக் கொண்டிருந்தது. எல்லாப் பக்கங்களிலும் பொறுமையும் சாலை ஒழுக்கமும் இல்லாத வாகனங்களின் ஹாரன்கள் காதைப் பிளந்தன. அந்தச் சாலை

www.padippakam.com



யோடு வந்து இணையும் ஒரு பக்கத்துச் சந்தில் பெரிய கொம்புகளுடனான மாடு ஒரு பாரமான வண்டியை இழுத்தவாறு சாலையில் வந்து சேரமுடியாமல் அடைத்துக் கொண்டு நின்றது. அதன் பின்னால் அந்தச் சந்தில் ஸ்கூட்டர்கள், ஆட்டோக்கள் மாட்டு வண்டியைத் தாண்டி வரமுடியாமல் பொறுமை இல்லாமல் ஹாரன்களை அடித்துக்கொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தன.

"முன்னுக்கு போப்பா மெதுவா. நின்னுக்கிட்டிருந்தா பொளுது விடிஞ்சிரும்!"

ஒரு சிறுவன் மாட்டை பளீரென்று கம்பால் அடித்தான். மாடு திமிறி முன்னேறியது. வண்டியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓடிவந்து பொன்னம்பலத்தின் டாக்சியில் கொம்பை மோதிக்கொண்டு பெருமூச்சு விட்டு மிரள மிரள நின்றது.

டாக்சி டிரைவர் இறங்கிப் பார்த்தார். அவர் பக்கத்துக் கதவு நெளிந்துபோயிருந்தது. கொம்பு குத்திய கோடுகள் இருந்தன. கெட்ட வார்த்தையால் வண்டிக்காரனைத் திட்டினார்.

பொன்னம்பலம் காரை விட்டிறங்கி டிரைவரின் கையைப் பிடித்தார். "ஐநூறு ரூபாதானப்பா! நாந் தாரேன் வா. அவர விட்டுடு! ரகள பண்ணி நேரத்தக் கடத்தாத. நான் சீக்கரம் போகணும்!" என்றார்.

ஓட்டுநர் தணிந்தார். "ஐயா மூஞ்சிக்கோசரம் ஒண்ண விட்டேன் இன்னக்கி!"

காரைக் கிளப்பி ஊர்ந்தார்கள். தன் பணப் பையிலிருந்து 20 அமெரிக்க டாலரை எடுத்து ஓட்டுநரிடம் கொடுத்தார். வாயெல்லாம் பல்லாகச் சிரித்தார் ஓட்டுநர். பொன்னம்பலம் ஒன்றும் பேசாமலிருக்க ஓட்டுநர் சுருதி மாறிப் பேசினார்,

"பாவம் சார், என்னப் போல தொழிலாளி! அதான் இதோட உட்டுட்டேன்!"

ooo

தஞ்சாவூர் என்னும் மக்கள் கடலில் வந்து சேர மேலும் மக்கள் சிற்றாறுகள் பஸ்களின் வடிவிலும் கார்களின் வடிவிலும் ஊர்ந்து கொண்டே இருந்தன.



"மன்னிச்சிக்க சாரு! மாடு திமிறிடுச்சி! அடிச்சி பயங்காட்டிட்டாங்க!"

"யாரு என்ன ---ரக் காட்டினா எனக்கு என்ன --- போச்சி? இத ரிப்பேர் பண்ண ஐநூறுவாயாவும்! குடு!"

"ஐநூறா? எங்க போவேன் சாமி? அம்பது ருவா குடுக்கிறேன். ஆள விட்டிரு!"

ஓட்டுநர் வண்டிக்காரரின் தலையைப் பிடித்துத் தள்ளினார். "அம்பது ருவாவா? என்னா — காசு? ஐநூறு குட்றா! இப்பவே குட்றா!" மீண்டும் மீண்டும் தலையில் அடித்து முகத்தில் அறைந்தார்.

வாகனங்கள் தேங்கி நின்றன. கூட்டம் தன் அவசரத்தை மறந்துவிட்டு சண்டையை வேடிக்கை பார்த்தது. பொன்னம்பலத்தின் டாக்சி பல இடங்களில் நின்று, பல இடங்களில் போக்குவரத்துப் போலீசால் நிறுத்தப்பட்டு முன்னேறிக் கொண்டிருந்தது.

தஞ்சாவூரின் வெளிப்புறத்திலேயே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெளிவாசல் தெரிந்தது. தமிழ் கட்டடக் கலைக்கு அடையாளம் கூறுகின்ற அதன் நுழைவாயிலில் டாக்சி நுழைந்தபோது அவர் நெஞ்சு விம்மியது. "இதற்காகத்தான் வந்தேன். இந்தத் தமிழ்ச் சூழலை ஆழப் பருகுவதற்குத்தான் வந்தேன். இந்தத் தாமரை பூத்த தடாகத்தில் தமிழ் மணத் தேன் அள்ளிப் பருகத்தான் வந்தேன். இந்தப் பண்பாடு தெரியாத டாக்சி ஓட்டுநரும், திருச்சியில் அந்த அசுத்தமான உணவு

www.padippakam.com



விடுதியும், தவிர்க்க முடியாத நிலையில் பயன்படுத்தப் போய் குடலைக் குமட்டவைத்த இவர்களின் கழிவறைகளும், இவர்கள் நாட்டின் அநாகரிக அரசியலும் என்னைப் பாதிக்க அனுமதிக்க மாட்டேன். தமிழ் நாட்டின் ஆன்மாவை இந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் கண்டு என் ஆன்மாவை வளப்படுத்திக் கொள்வேன்" என்று சொல்லிக் கொண்டார்.

மாநாட்டு அலுவலகம் அமைந்திருந்த கம்பீரமான கட்டிடத்தின் முன்னால் இறங்கிக் கொண்டு பெட்டிகளை இறக்கி வைத்தார். முன்பு பேரம் பேசாமலேயே ஒப்புக் கொண்ட பணத்தை எண்ணிக் கொடுத்தார். இது அதிகமாகத்தான் இருக்க வேண்டும்; ஆனால் கொண்டு வந்து சேர்த்தாரே, அதுவே பெரிய விஷயம்.

கட்டணத்தை வாங்கிக் கொண்ட ஓட்டுநர் பல்லை இளித்தார். "கொஞ்சம் பாத்து கூடப் போட்டுக் குடுங்க சார்! கஷ்டப்பட்டு வந்திருக்கிறேன்!" கோபம் சுர்ரென்று ஏறியது. அடக்கிக்கொண்டார். இன்னொரு நூறு ருபாயைச் சேர்த்துக் கொடுத்தார்.

ஓட்டுநர் வாங்கத் தயங்கினார். "இல்ல சார்! அதான் அமெரிக்கன் டாலர் வச்சிரிக்கிறிங்கள, அதில எதினா பத்து பதினைஞ்சி குடுத்தா போதும் சார்!"

"என் மனத்தை இவன் பாதிக்கக் கொஞ்சமும் அனுமதிக்க மாட்டேன்" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டார். கையில் வைத்திருந்த நூறு ருபாயை மண்ணில் எறிந்து விட்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு கட்டிடத்திற்குள் நுழைந்தார். ருபாயைப் பொறுக்கிக் கொண்ட ஓட்டுநர் 'பேமானி' என்று திட்டுவது அவருக்குக் கேட்டது. வாய்ப்புக் கிடைத்தால் இந்தப் பல்கலைக்கழகத்தின் நூலகத்திற்குப் போய் தமிழகராதி எடுத்து இந்தச் சொல்லுக்கு என்ன பொருள் என்று பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கோபத்தை மென்று தின்றுவிட்டு படிகளில் ஏறினார்.

ooo

அந்தக் கட்டிடத்திற்குள் ஏராளமானவர்கள் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார்கள். பெரும்பாலோர் கண்காட்சி பார்க்க வந்திருந்த கிராமத்து வாசிகள். ஒரு சந்தையின் சூழ்நிலை அங்கு இருந்தது.

செயலகத்தைத் தேடிப் பிடித்து ஒரு மூலையில் பெட்டிகளை வைத்துவிட்டு வரவேற்பு மேசைக்குச் சென்று நின்றார். அங்கு உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் என்னவோ கணக்கைக் கூட்டிக் கொண்டிருந்தார். பொன்னம்பலத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தலைகுனிந்து கூட்ட ஆரம்பித்தார். சிறிது காத்திருந்து பொன்னம்பலம் சொன்னார்,

"நான் பேராளராகப் பதிவு பண்ணிக் கொள்ள வந்திருக்கேன்."

அந்த மனிதர் நிமிர்ந்து பார்த்தார். "லேட்டா வந்திருக்கிறிங்களே!"

"ஆமா. அது பெரிய கதை. பேராசிரியர் செயராமைப் பார்க்க முடியுமா?"

எட்டி உள்ளே பார்த்தார். "அதுதான் அவர் ரூம். இருக்காரோ என்னவோ தெரியல. போய்ப் பாருங்க!"

"என்னுடைய பெட்டி இங்க இருக்கு!"

"இருக்கட்டும்."

அறைக்குள் போனார். தலை இலேசாக நரைத்த ஒரு மனிதர் போனில் பேசிக் கொண்டிருந்தார்.

"செக்யூரிட்டி எல்லாம் சரியா இருக்கான்னு பாத்துக்குங்க! பின்னால நாம்தான் பதில் சொல்லணும்!"

போனைக் கீழே வைத்தார். பொன்னம்பலத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"பேராசிரியர் செயராம்?"

"எஸ்"

"நான் டாக்டர் நடேசன் பொன்னம்பலம். மலேசியா!"

செயராம் அதிர்ச்சியடைந்தவர் போல் காணப்பட்டார். எழுந்து கைகுலுக்கினார். "நீங்க வரலைன்னுல்ல நெனைச்சோம்" என்றார்.

"என் கடிதங்கள், ஃபாக்ஸ் எதுக்குமே நீங்கள் பதில் போடலையே!" கோபம் வந்தாலும் அடக்கமாகப் பேசினார்.

செயராம் கண்களில் ஒரு வெறுமை இருந்தது. "இங்க நெலம ரொம்பக் குழப்பம். ஒண்ணும் சொல்ற திக்கில்ல. உங்க பேப்பர ஏற்று நிகழ்ச்சி நிரல்லகூட போட்டுட்டோம்."

"நேற்றுன்னு கேள்விப்பட்டேன். ஒரு பொன்னான வாய்ப்பு தவறிப்போச்சே! ஆனா உங்க கடிதம் இல்லைன்னாலும் என் சொந்த முயற்சியில வந்திட்டேன்."

"நீங்க வந்திருக்கக் கூடாது" என்றார் செயராம். "முறையான பேராளர் அங்கீகாரக் கடிதம் பெறாம நீங்க வந்திருக்கிறீங்க. அதுக்கு நான் பொறுப்பில்லை!"

பொன்னம்பலம் அதிர்ச்சியடைந்தார். "என்ன சொல்றீங்க பேராசிரியரே? என்னுடைய கட்டுரையை ஏற்று நிகழ்ச்சி நிரல்ல போட்ட பிறகு நான் பேராளரா வர்றதில என்ன பிரச்சினை?"

"உங்களுக்கு விளங்கல. இது வேற கமிட்டி! உங்களுக்கு விசா வழங்கிறது வேற கமிட்டி!"

பூட்ஸ் சத்தம் ஒலித்தவாறு மூன்று பேர் செயராமின் அறைக்குள் நுழைந்தார்கள். ஒருவர் பொன்னம்பலம் அருகில் வந்தார். "ஆர் யூ நடேசன் பொன்னம்பலம் ஃபிரம் மலேசியா?" அழகிய ஆங்கிலத்தில் கேட்டார்.

"யெஸ்" என்றார் பொன்னம்பலம்.

தொடர்ந்து ஆங்கிலத்திலேயே பேசினார். "நாங்கள் மத்திய போலீஸ் அதிகாரிகள். உங்கள் பாஸ்போர்ட், உங்கள் விமான டிக்கட், தயவு செய்து...!"

எடுத்துக் கொடுத்தார். பிரித்துப் பார்த்த அந்த அதிகாரி மற்றவரிடம் சொன்னார், "இவர்தான். பெயர் சரியாக இருக்கிறது!"

அவரை அந்த அதிகாரிகள் கனிவாகப் பார்த்தார்கள். "மன்னிக்க வேண்டும், டாக்டர் பொன்னம்பலம். உங்களைத் தடுத்து வைத்து உடனடியாக மலேசியாவுக்குத் திரும்ப அனுப்பி வைக்க வேண்டும் என்பது எங்களுக்கு உத்தரவு. ஜீப் ரெடியாக இருக்கிறது. உங்கள் பெட்டிகளை எடுத்துக் கொண்டு எங்களோடு வாருங்கள். இந்தப் பாஸ்போர்ட்டும், இந்த விமான டிக்கட்டும் எங்க

www.padippakam.com



ளிடம் இருக்கும். நீங்கள் விமானமேறும்போது திரும்பக் கொடுப்போம்."

பொன்னம்பலம் அதிர்ச்சியடைந்து போய் செயராமைப் பார்த்தார். செயராம் அவரைப் பரிதாபமாகப் பார்த்தார். "டாக்டர் பொன்னம்பலம், எங்களைத் தவறாக நினைக்க வேண்டாம். இந்தப் பல்கலைக்கழகத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நம்புங்க! நேத்துக்கூட மூணு பேர இப்படித்தான் திருப்பி அனுப்பினாங்க."

"நான் என்ன செய்தேன்?" பொன்னம்பலம் ஒவ்வொருவர் முகத்தையும் பார்த்தார். மௌனம்தான் அவர்களின் முகங்களில் பூரணச் சந்திரனாகப் பூத்திருந்தது.

○○○

போலிஸ் துணையுடன் அவர் ஜீப்பில் ஏறியதைப் பார்க்க ஒரு கிராமத்துக் கூட்டம் சூழ்ந்திருந்தது. வரும் வழி அனைத்திலும் ஜனக்கூட்டங்கள் அவரை திரும்பித் திரும்பிப் பார்த்தன. போலிஸ் அதிகாரிகள் அவரிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆனால் மரியாதையாக இருந்தார்கள். வழியில் காப்பிக்கும் சாப்பாட்டுக்கும் நிறுத்தினார்கள். அவர் விரும்பியதை வாங்கிச் சாப்பிட அனுமதித்தார்கள்.

வழியெல்லாம் "என்ன தவறு செய்தேன்?" என்ற கேள்வியே ஓங்கி நின்றது. "பேராசிரியர் ரம்லிக்கு இதனை எப்படி விளக்குவேன்?" என்ற துணைக் கேள்வியும் எழுந்தது. அதிகாரிகளின் இறுகிய முகங்களைப் பார்த்தபோது அந்தக் கேள்விகளுக்கு இவர்கள் பதில் சொல்வார்கள் என்று தோன்றவில்லை.

அண்ணா அனைத்துலக விமான நிலையத்தில் அவரைப் பாதுகாப்பாக ஒரு தனி அறையில் ஓர் அதிகாரியின் காவலுடன் உட்கார வைத்தார்கள். தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு ஜீப்பில் ஆடிக் குலுங்கிப் போய் வந்த அலுப்பில் பொன்னம்பலம் தலை கலைந்து, ஆடை அழுக்காகி, கண்கள் செருகி, அரை உயிராகி இருந்தார்.

மூன்று மணி நேரம் காத்திருந்து தனிமையில் சோர்ந்து, மேசையில் தலை கவிழ்த்துத் தூங்கிவிட்ட போது, ஒரு புதிய அதிகாரி வந்து எழுப்பினார். கையில் காப்பி வைத்திருந்தார். அவரிடம் தந்தார். பாஸ்போர்ட், ரிக்கட்டையும் தந்தார். "இன்னும் அரை மணி நேரத்தில போர்டிங். தயாரா இருங்க!" என்று கனிவுடன் சொன்னார்.

பின்னர் அவரே கேட்டார், "என்ன சார் ப்ராப்ளம்?"

காப்பியை உறிஞ்சியவாறு பொன்னம்பலம் சொன்னார், "சத்தியமாய்த் தெரியாது. மாநாட்டுக்கு இலக்கியக் கட்டுரை வாசிக்க வந்தேன். அங்கேயே பிடித்து திருப்பி அனுப்புகிறார்கள்!"

"அப்படியா? சார் இலங்கைத் தமிழரா?"

"மலேசியத் தமிழன். ஆனால் என் முன்னோர் இலங்கைத் தமிழர்கள்தான்!"

"பாத்திங்களா? ஏதாவது கனெக்ஷன் இருக்கணுமே!" என்றார்.

"என்ன கனெக்ஷன்? "

"அதான் புலிகளோட கனக்ஷன்!"

"எந்தப் புலிகள்?"

"அதான் சார் விடுதலைப் புலிகள்."

பொன்னம்பலம் அதிர்ச்சியடைந்தார். "நானா? விடுதலைப் புலிகளுடனா? நான் இலங்கைக்குக்கூடப் போனதில்லையே!"

"எல்லாம் ஒரு சந்தேகம்தான். ஒரு ரிஸ்க் எடுத்துக்க முடியாது பாருங்க!"

○○○

மாஸ் விமானத்தில் இருக்கையில் உட்கார்ந்த போது நிம்மதியாக இருந்தது. பணிப்பெண் கொண்டுவந்து கொடுத்த ஜூசை புன்னகையுடன் வாங்கிக் கொண்டார். இது மலேசிய விமானம். என் பிறந்த பொன்னாட்டின் ஒரு பகுதி. இனி அந்நியர்களால் எனக்கு ஆபத்தில்லை.

கடந்த ஏறக்குறைய 20 மணி நேரங்களில் தனக்கேற்பட்ட அனுபவங்கள் மனத்தில் பொங்கிப் பொங்கி வந்து கொண்டிருந்தன. ஏன் இப்படியெல்லாம் ஆனது? ஓர் ஆராய்ச்சியாளனுக்கு, வெளிநாட்டு மண்ணில் வாழும் தமிழனுக்கு என் தாய்க் கலாசாரம் தருகின்ற வரவேற்பா இது? இமைகளுக்குள் கண்ணீர் அரும்பியது. துடைத்தார்.

விமானம் புறப்பட்டு பறக்கத் தொடங்கியது. உடலும் உள்ளமும் களைத்திருந்தன. ஆனால் கொப்புளித்து கொப்புளித்து வரும் கோபத்தினால் தூக்கம் வரவில்லை. மனத்தை அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார். நண்பர் சொன்னது நினைவுக்கு வந்தது. "உண்மையான தமிழ்க் கலாசாரத்தின் ஆன்மா இதற்கெல்லாம் அப்பால் இருக்கிறது". ஆனால் இந்தச் சின்னத்தனங்களை தாண்டிச் செல்ல இந்த அமைப்பு என்னை அனுமதிக்கவில்லை. தமிழ்நாட்டு ஆன்மாவைப் புரிந்து கொள்ள எனக்கு வாய்ப்பே தரப்படவில்லை.

எல்லாவற்றையும் மன்னித்து மறக்கத் தீர்மானித்துக் கொண்டார். கண்களை மூடி நூறு முதல் ஒன்று வரை எண்ணினார். அனல் தணிந்து கனிந்து கொண்டிருந்தது.

அரைத் தூக்கத்தில் போன 20 மணி நேரக் காட்சிகள் குழப்பமான புகைமூட்டமாக வந்து வந்து மறைந்தன. டாக்சியோட்டியின் முன் வரிசையாக வைக்கப்பட்ட கடவுளர் படங்கள், டாக்சியை மோதிப் பரிதாபமாக விழிக்கும் மாடு, வண்டிக்காரனை "குட்றா, குட்றா" என்று அடிக்கும் டாக்சியோட்டி, குடலைப் புரட்டும் கழிவறை, முகம் உப்பிய பெண்மணியின் பூதாகர அட்டை வடிவங்கள், துப்பாக்கி தூக்கிய புலிகள். இதற்கிடையே ஒரு பாட்டு.

"கொல்ல வரும் புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்!"

இன்றைய தமிழ்நாட்டுக்கு எத்தனை பொருத்தமான பாட்டு! பாரதி, நீ எத்தனை பெரிய தீர்க்கதரிசி!

பொன்னம்பலம் களைப்பில் தூங்கிப்போனார். ❑

இரா கோவர்தனன்

“அப்பா, இங்கே வந்து பாரேன்!”

கணனியில் மூழ்கியிருந்த நான் முகிலனின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். நான் எழுந்துசெல்ல எத்தனிப்பதற்குள் என்னை முந்திக்கொண்டு சன்னல் பக்கம் இருந்த தன் அண்ணனிடம் ஓடினாள் கனிமொழி.

பனியென்றாலே முகம் சுளிப்பவர்கள்கூட, ‘என்ன இது, கிறிஸ்துமஸுக்குக்கூட பனி இருக்காது போலிருக்கிறதே’ என்று விசனப்படத் தொடங்கியிருந்த டிசம்பர் மாத ெ ாராளோ. காலை ஏழரை மணியாகியிருந்தாலும் இருள் இப்போதுதான் விலகத் தொடங்கியிருந்தது.


முகிலன் காட்டிய இடத்தில் இரண்டு அணில்கள் சண்டையா, சல்லாபமா என்று விளங்காதபடிக்கு விளையாடிக்கொண்டிருந்தன. அருகிலேயே இன்னும் ஆறேழு அணில்கள் இவையிரண்டையும் வேடிக்கை பார்ப்பது போல அசையாமல் அமர்ந்து கொண்டிருந்தன. பிள்ளைகளை உற்சாகப்படுத்தும் குரலில் நானும், “ஹையோ!” என்றேன். கனிமொழியும் தன் மழலையில், “ஊ..ஊ, பூ..” என்று கண்களை அகல விரித்துக் கூத்தாட, “என்னப்பா இது, எட்டாகப் போகுது, வேலைக்குப் போறமாதிரி எண்ணமில்லையா?” என்றபடியே பின்னால் வந்து நின்றாள் டெய்சி.

இந்தக் கனடிய அணில்கள் நான் அரக்கோணத்துப் பக்கம் பார்த்திருந்த அணில் பிள்ளைகளைப் போலல்லாமல் வாட்டசாட்டமாய் இருந்தன. குளிருக்குத் தோதாக புசுபுசுவென்று ரோமத்துடன் ஏறக்குறைய பெருச்சாளி சைஸுக்கு இருந்தாலும் அழகிலென்னவோ குறைவில்லாமல் இருந்தன. அதுவும் கருப்பு, பழுப்பு, வெண்மை என்று வெவ்வேறு நிறங்களில் இருந்ததும் இந்த அணிலக் கூட்டத்தின் அழகைக் கூட்டியே காட்டியது.

அப்போதுதான் கவனித்தேன். நம் ஊர் அணில்களுக்கு முதுகில் இருக்கும் கோடுகள் போன்ற எவ்வித அடையாளமும் இந்த அணில்களுக்கு இல்லை. “இதுங்களுக்கு முதுகில் கோடே இல்லை பார்த்தியா? என்றேன் டெய்சியிடமும். அவள் உடனே, “ராமபிரான் அந்த மூலையிலிருந்து உதவிக்குக் கூப்பிட்டது இங்க இருக்கிற இதுங்களுக்குக் கேட்டுச்சோ இல்லையோ!” என்றாள். “ராமன் தடவிக் கொடுத்தது நம்ம ஊர் அணில் பிள்ளைகளை மட்டும்தானே”.

“யாருப்பா ராமர்?”என்றான் முகிலன் எதுவும் புரியாமல். ஓரிரு வரிகளில் நான் அவனுக்கு இராமாயணப் பின்னணியைச் சொல்ல முற்பட்டேன். அவனும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, “இந்த அணில்கள் ஏன் அவருக்கு உதவப் போகலை?” என்றான். ஒருசில நொடிகள் யோசித்த நான், “ராமருக்கு ஆங்கிலம் தெரியாதே. அவர் நம் மொழியில் பேசியது இந்த இங்லிஷ்கார அணில்களுக்குப் புரியாமல் போயிருக்கலாம்” என்றேன். டெய்சி சிரித்தபடியே, “அப்பா சும்மா சொல்றாரு, ராமர் கடவுள் அவதாரம்; அவருக்கு எல்லா மொழியும் தெரியும்” என்றாள். “அப்ப ஏன் இதுங்க போகலை?” என்றான் முகிலன் விடாமல். “ஏன்னா, அப்பல்லாம் கனடாவிலிருந்து நம்ம ஊருக்கு ஏரோப்ளேன் இல்லை” என்றேன் நான் இடையில் புகுந்து.

“டேய்,” என்று ஏளனமாய் என்னைப் பார்த்துச் சொன்ன டெய்சி, “அப்படி அப்ப விமானமெல்லாம் இருந்திருந்தால் இலங்கைக்கு முதலில் பாலம் கட்டும் அவசியமே ராமருக்கு வந்திருக்காதே! அப்புறம் குரங்குகளும் அணில்களும் எதற்கு?” என்றாள் “சரி சரி, முகில், நீ போய் முதலில் பல் விளக்கு. இன்னும் கொஞ்ச நேரத்துல பள்ளிக்கூட பஸ் வந்துடும். நீயும்தாம்பா, கம்யூட்டரைக் கட்டிக் கொண்டு அழுதது போதும்; அலுவலகம் கிளம்பும் வழியைப் பார்!”



நானும் வலைப்பக்கங்களை மடித்து கணனியை அணைத்து மடமடவென்று வேலைக்குப்போக ஆயத்தமானேன். இந்த அணில்களுக்குக் கோடில்லாததற்குக் காரணம் உண்மையில் என்னவாயிருக்கும்? மாலையில் வந்ததும் வலை வீசியாவது (கணனியில்தான்) விடை அகப்படுகிறதா பார்க்க வேண்டும்.

www.padippakam.com

இரா கோவர்தனன்

"இங்கு எக்காரணத்தைக்கொண்டும் எந்த நேரத்திலும் யாரும் கார் நிறுத்தக்கூடாது" என்று பளிச்சென்று எழுதியிருந்த பலகையின் முன்னே, "ஆம், நிறுத்தக்கூடாது" என்று சொல்லிக்கொண்டிருந்தது ஒரு கார். நான் என் காருக்கு இடம் தேடி நிறுத்திவிட்டு ரயில் நிலையம் அடையும்போது மணி எட்டு முப்பத்திரண்டு. நான்கு நிமிடங்கள் தாமதம். வழக்கத்துக்கு மாறாக அன்று ரயில் நிலையத்தில் எக்கச்சக்கக் கூட்டம். வேறு என்ன, வெள்ளிக்கிழமையாகி விட்டது, வரும் பண்டிகை நாட்களுக்காகத் தமக்கு வேண்டியதையும் பிறருக்கு வேண்டாததையும் வாங்கத்தான்!

இந்தியாவில் சென்னை, கல்கத்தா, ஹைதராபாத் என்று பல இடங்களில் வேலை செய்துவிட்டு கனடா வந்த இரண்டு ஆண்டுகளாக வின்னிபெக்கில் பணிபுரிந்த எனக்கு இந்தக் கூட்டம் சற்று ஆறுதலாயிருந்தது. ஏற்கனவே கனடாவில் மக்கள் தொகை குறைவு. அதிலும் வின்னிபெக் கேட்கவே வேண்டாம். முதன்முதலில் தனியே வின்னிபெக் சென்று இறங்கிய நாள் நினைவு வந்தது. பதிவு செய்திருந்த ஓட்டல் இருந்த இடம் "டவுன் டௌன்" என்று சொன்னார்கள். நகர மையம். மாலை ஆறேழு மணியிருக்கும். அறைக்குச் சென்றதும் பெட்டி படுக்கைகளைப் போட்டுவிட்டு வெளியே வந்து வெளிநாடு எப்படித்தான் இருக்கிறது என்று பார்க்கலாம் என்று ஆவலுடன் வந்தவனின் கண்களில் முதலில் பட்டது நெடிதுயர்ந்து நின்ற கட்டிடங்களும் சுத்தமாயிருந்த சுற்றுப்புறமும் அல்ல; மனிதர்கள் பேருக்குக்கூட இல்லாமல் வெறிச்சென்று இருந்த சாலைகளே! பாலைவனத்தின் நடுவில் யாரோ மயன் வந்து கட்டிய மாளிகைகள்போல். அந்த மயான அமைதியே எனக்கொரு பீதியைத் தர உடனே அறைக்குத் திரும்பினேன்.

பிறகு வந்த நாட்களில், 'அலுவலகங்கள் மூடிவிட்ட பிறகு ஜன நடமாட்டம் எப்படி இருந்திருக்கும்?', 'ஆறு மணிக்குத்தான் கடைகளையும் மூடிவிடுகிறார்களே!' என்று ஆளாளுக்குச் சிலர் சமாதானம் சொன்னாலும் வருடத்தில் குறிப்பிட்ட இரண்டு மூன்று நாட்களைத் தவிர்த்து வின்னிபெக்கில் சேர்ந்தாற்போல் ஒரு நூறு பேரை ஓரிடத்தில் பார்ப்பது அரிதாகத்தான் இருந்தது. அதற்கு இந்த டொரானோ எவ்வளவோ தேவலாம்.

ஆனாலும் இந்த மயான அமைதி! இந்த ரயில் நிலையத்தில் இவ்வளவு கூட்டம் இருந்தும் யாருக்கோ கட்டுண்டதுபோல கப்சிப்பென்று இந்த ஜனங்கள். அரக்கோணத்திலிருந்து சென்னைக்குத் தினமும் மின்வண்டியில் வேலைக்குப் போய்வந்த நாட்களுக்கும் இதற்கும்தான் எத்தனை மாற்றங்கள்? சீட்டு, புத்தகம் என்று கையில் கிடைத்ததை வைத்துக்கொண்டு தாளம் பாட்டுகளென்ன, தெரியாதவர்கள் தெரிந்தவர்கள் ஆக, தெரிந்தவர்கள் முகம் திருப்பிப் போக, பேச்சு, சிரிப்பு, வாதம், விதண்டாவாதம் என்று போட்ட கூச்சல், கும்மாளமென்ன? 'கடலே..ய்' என்று நிலக்கடலை விற்கும் சிறுவர்கள், வெயில் காலத்துக்கு "வெள்ரீ, வெள்ரீ", வெயில் முடிந்ததும் "சகாயத் தோட்டத்து கொய்யா சார்", மழைக்காலத்தில் "அர்நெல்லி, தித்திப்பு அர்நெல்லிம்மா" என்று சீஸனுக்கேற்றாற்போல் மாறி மாறி விற்கும் பெண்கள். பிறகு அங்கு நிற்கும் எகஸ்பிரஸ் வண்டிகளில் இருக்கும் பம்பாய், பெங்களூர் பக்கப் பயணிகளிடம், "வாங்கிக்கோ சாரே, ஜோரான பொம்மை சாரே," என்று உள்ளிருக்கும் கறியைத் தின்றுவிட்டு தோலுக்குள் பஞ்சையடைத்து குருவிக்கார சமூகம் விற்கும் அந்த அணில் பொம்மைகள்..

பதினொரு மணிக்கு காபி அருந்தச் சென்றபோது கூடவந்த ஓம்கார் முகர்ஜி என்னைப் பார்த்து, "கோபர்தொன் ஜூலியன் டேட்டுன்னா என்னம்மா, அதை ஓராகில்ல எப்படி கன்வர்ட் பண்றது தெரியுமா?' என்றான். அவனையே உற்றுப் பார்த்த நான், "ஓம்கார், இந்த ஊர் அணில்களுக்கு ஏன் முதுகில் கோடுகளில்லை?" என்றேன். என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்த அவன் அதற்குப் பிறகு அலுவலகம் திரும்பும் வரை பேசவில்லை.

உணவு இடைவேளையின்போது பொறுக்கமாட்டாமல் அலுவலகக் கணனியிலேயே, "அணில்" என்று தட்டிவிட்டு, "தேடு" என்றேன். அகப்பட்ட முதல் இடம், "கருப்பு அணில் பற்றி



www.padippakam.com



சூடு பறக்கிறாற்போல் பால் கதை ஏதாவது இருந்தால் எழுதவும்" என்று அரசல் புரசலாக எதைப்பற்றியோ சொல்லத் தீப்பட்டதுபோல் வெடுக்கென்று வலைப்பக்கத்தை மூடினேன். வேலை செய்யும் இடத்தில் வீண் வம்பு எதற்கு?

மாலையில் வீடு திரும்பும்போதும் ரயிலடியில் எதிர்பார்த்ததுபோல் ஏகப்பட்ட கூட்டம். இந்தமுறை பெரும்பாலோரின் கைகளில் பெரிய சைஸ்களில் பிளாஸ்டிக் பைகளும் பல வண்ண நாடாக்களில் முடிச்சுப் போட்ட பரிசுப் பொட்டலங்களும்."மாம், அதை என்னிடம் கொடு, நான் வைத்துக் கொள்கிறேன்." குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஆறு வயது இருக்கும். அந்தச் சிறுமி தன் தாய் வைத்திருந்த வண்ணப்பெட்டியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வட்ட வட்டத் துளைகளுடன் அந்தப் பெட்டி மேலே கொக்கி போன்ற ஒரு கைப்பிடியுடன் இருந்தது.

"நோ ஹனி, வீட்டுக்குப் போனதும் கொடுக்கிறேன்." "நோ, எனக்கு இப்பத்தான் வேணும்!" பொது இடத்தில் அடம்பிடிக்கும் கனடியக் குழந்தை! எனக்குச் சற்று நார்மலாகப்பட சுவாரஸ்யமாக அவர்களைப் பார்க்கத் தலைப்பட்டேன். தாயும் கொடுப்பதாக இல்லை. சிறுமியும் சிணுங்கத் தொடங்க, "ஸ்டாப் இட் ஹனி. பிஹேவ் யுர்செல்ஃப்."

"நோ மாம், எனக்கு அது வேணும்; கிவ் இட். நவ்!" என்ற குழந்தை அந்தப் பெட்டியை நோக்கி ஒரு முடிவுடன் நெருங்க, தடதடவென்று உள்ளே நுழைந்தது ரயில். கூட்டத்துடன் ரயிலேறுவதில் அந்தத் தாய் பரபரப்பாக, அந்தக் குழந்தை அதற்குள் அந்தப் பெட்டியின் மேல் கையை வைத்திருந்தாள். மேலே பார்க்க நேரமில்லாமல் நானும் உள்ளே சென்று இருக்க இடம் பிடிக்க முயன்றேன். ஒருவழியாக இடம் கிடைத்து அமர்ந்தவுடன் என் கண்கள் தாமாக அந்தச் சிறுமியைத் தேடின. நாலைந்து இருக்கைகள் தள்ளி அந்தத் தாய் மேலே கைப்பிடியைப் பிடித்தபடி நின்று கொண்டிருக்க எதிரில் ஒடுங்கிக்கொண்டு அந்தச் சிறுமி. தாயின் கண்களில் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. ஏனென்று தெரியாமல் நான் அச்சிறுமியின் பக்கம் நோக்க வெற்றிகரமாக அவள் கைகளில் அந்தப் பெட்டி. ஆனால் அது தாறுமாறாகக் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. நானிருக்கும் இடத்திலிருந்து அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று என்னால் பார்க்க முடியவில்லை. எழுந்து நின்றால் தெரியும். ஆவலை அடக்கிக் கொண்டேன். அப்புறம் ஆசாமி யார்றா இவன் என்று இவர்கள் என்னைப் பார்ப்பானேன்!

ஒன்று, இடையில் இருக்கும் ஜனமெல்லாம் வடிய வேண்டும் அல்லது நான் இறங்கும் இடம் தாண்டி அவர்கள் பயணம் செய்யவேண்டும் என்று அளவில்லா ஆவல் ஏற்பட, எனக்குள், 'என்ன இது!' என்று சிரித்துக் கொண்டேன். அடுத்த நிலையத்திலேயே ரயில் நின்றதும் அந்தத் தாய், "ஹனி, கம் வித் மீ" என்று நகர முற்பட எனக்குச் சப்பென்றானது. எனக்குப் பக்கத்தில் அங்கே அப்போதுதான் காலியான இரு இருக்கைகளை நோக்கித்தான் அவர்கள் வருகிறார்கள் என்பதை உணர்ந்ததும் எனக்கு வியப்பான வியப்பு. நெஞ்சுக் குழி வரை ஒரு மகிழ்ச்சி.

அந்தச் சிறுமி என் பக்கத்தில் அமர்ந்ததும் நான் அடக்கமாட்டாமல் அந்தப் பெட்டியை எட்டிப் பார்த்தேன். பார்த்ததை நம்புவதற்கு எனக்குச் சில நிமிடங்கள் தேவைபட்டன. இமைக்காமல் பார்த்தேன். "கீச், கீச்" சென்று கத்திக்கொண்டு இரண்டு சின்னஞ்சிறு அணில்பிள்ளைகள். அதற்குமேல் நான் கண்டதுதான் ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்! அவற்றின் அழகிய முதுகுகளில் ஒன்றல்ல, இரண்டல்ல, பத்துக்கும் மேல் கோடுகள்!

நான் வியந்து நோக்குவதைக் கண்ணுற்ற அந்தப் பெண்மணி சற்று தண்மையாகி என்னை நோக்கிப் புன்னகை புரிந்தாள். "இந்த அணில்கள் எங்கிருந்தோ தவறி எங்கள் தோட்டத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்தன. சாதாரணமாக இந்த வகை அணில்களை இங்கே பார்க்க முடியாது. மத்திய சமவெளியில் இருக்கும் பதிமூன்று கோட்டு நிலத்தணில்கள் இவை. என் தமக்கையைப் பார்க்கச் சென்றபோது அங்கே நிறையப் பார்த்திருக்கிறேன்" என்றாள். "அப்படியா? அழகாயிருக்கின்றன." என்றவன் தன்னிச்சையாய் எழுந்த ஆர்வத்தில் "உங்கள் தமக்கை வசிப்பது எங்கே?" என்றேன்.

"வின்னிபெக்கில்" என்றாள். ❑



www.padippakam.com



கருணா

www.padippakam.com





S சாந்தகுணம்

உழைப்பு

www.padippakam.com

அ முத்துலிங்கம்




சோமாலியப் பெண்கள் அப்படித்தான். உலகத்தை பிரட்டிப்போட்டாலும் மாற மாட்டார்கள். அவசரமில்லாத நடை. ஒரு காலை ஊன்றி, மறு காலை நிதானமாக வைத்து நடப்பார்கள்.

மைமுனும் அப்படித்தான் நடந்துகொண்டிருந்தாள். கபில நிறம். நீள் வட்டமுகம். உயர்ந்த கழுத்து. ஒட்டகம்போல நடை. உரசி உரசி வந்துகொண்டிருந்தாள்.

அவள் மொட்டாக்கு இட்டிருந்தாள். அந்தத் துணி தலையை முற்றிலும் மறைத்து மார்பு வழியாக வந்து முதுகிலே சென்று மறைந்தது. அவள் தலை மயிரைப் பற்றி அறியும் ஆவலையும் அது தூண்டிவிட்டது.

அவள் முதுகிலே வெறுமையான தண்ணீர்க் குடம் ஒன்று தொங்கியது. காட்டுப் புல்லினாலும் நாரினாலும் இறுக்கிப் பின்னிச் செய்தது. பள்ளிப் பிள்ளைகளைப் போல அவள் அதை முதுகிலே கட்டிக்கொண்டிருந்தாள். அது முதுகோடு ஒட்டிக்கொண்டு அவளுக்கு வழித்துணையாக வந்து கொண்டிருந்தது.

அவள் எட்டு மைல் தூரம் போய் தண்ணீர் பிடித்து வரவேண்டும். போக வர பதினாறு மைல்கள். ஏதோ மேய்ச்சலுக்குப் போவதுபோல நித்திய நியமமாக அவள் அதைச் செய்து கொண்டிருந்தாள். இன்று அவள் வேண்டுமென்றே கொஞ்சம் தாமதமாக வந்திருந்தாள். அவள் சிநேகிதிகள் முன்பே போய்விட்டார்கள்.

வழிநெடுக அகாஸியா முள் மரங்கள். ஆள் உயர கத்தாளைகள்; உயரமற்ற புதர் மரங்கள். பயந்த சுபாவம் கொண்ட பற்றைகள். மைமுன் தன் பாதையை அந்த வழியில்லாத காட்டில் இலகுவாகக் கண்டுபிடித்து நடந்து கொண்டிருந்தாள்.

வழக்கம்போல அதிகாலையில் ஹைனாவின் கூவல் அவளை எழுப்பிவிட்டது. களிமண்ணினாலும், மெல்லிய மரத்தடிகளினாலும் கட்டிய வீடு அது. புல்லினால் வேய்ந்த கூரை. குளிரைத்தடுக்கும் வல்லமை இல்லாதது. அந்த காலைக் குளிரில் ஒட்டகத்தின் ரோமத்தில் செய்த சௌகரியக் குறைவான பாயில் கண்களை விழிக்காமல் சுருண்டு படுப்பதற்கு அவளுக்கு மிகுந்த ஆசையாக இருக்கும்.

ஆனால் ஹைனா முதலாவது எதிரி என்றால் அவளுடைய தாயார் இரண்டாவது எதிரி. மைமுன் எழும்பும் வரை அவள் தாயார் காயம்பட்ட விலங்குபோல கத்தியபடியே இருப்பாள். இந்த காலை நேரத்துச் சுகத்தை தினமும் இப்படி கெடுப்பது மைமுனுக்கு மகாகொடூரமாகப்பட்டது. தண்ணீருக்காக இந்த அலைச்சல் பட வேண்டி இருந்தது. அவள் தாயாருக்குகூட அவள் படும் இம்சை புரியவில்லை. இதில் மைமுனுக்கு நிறைய வருத்தம்.

அவள் தகப்பனார் நூர் அந்த ஊர் குடித்தலைவர், நபதூன். அவரிடம் ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் என்று எல்லாம் இருந்தன. பொதி சுமப்பதற்குக் கழுதைகள்கூட நிறைய இருந்தன. பலபலவென்று விடியுமுன்பாகவே அவையெல்லாம்

www.padippakam.com



மேய்ச்சலுக்குப் போய்விடும். ஒரு கழுதையை அனுப்பி தண்ணீர் பானைகளை நிரப்பி வந்தால் அவளுக்கு வேலை மிச்சம். அப்படித்தான் சல்மா வீட்டில் செய்கிறார்கள். கழுதைகளை அனுப்பி வைக்கும்படி அவள் தாயார் அடிக்கடி கேட்டுக் கொள்வாள். ஆனால் மைமுனின் தகப்பனார் மிகக் கவனமாக அதை மறந்து விடுவார்.

அவருக்கு இரண்டு மனைவிகள். அவருடைய மேய்ச்சல் வட்டம் ஐம்பது மைல் தூரம் இருக்கும். அந்த எல்லைக்கு மந்தை மேய்ச்சலுக்கு போகும்போது அவர் அங்கேயே இரண்டாவது மனைவியோடு தங்கிவிடுவார். இப்படி வருடத்துக்கு இரண்டு மாதங்களாவது காணாமல் போய்விடுவார்.

மதியம் இரண்டு மணி ஆகிவிட்டால் நூர் அகாஸியா மரத்தை தேடி வந்துவிடுவார். அங்கே அவருடைய கூட்டாளிகள் காத்திருப்பார்கள். ச்சாட் என்று சொல்லப்படும் போதை இலையை கொடுப்பிலே எல்லோரும் இடுக்கிக் கொள்வார்கள்.அந்தச் சாறு தொண்டையிலே இறங்க இறங்க அவர்கள் மேலே மேலே போய் மிதப்பார்கள்.

இந்த நேரத்தில் சோமாலியாவில் எல்லா ஆண்களும் அப்படித்தான் இருப்பார்கள். பின் மதியத்தில் தொடங்கி இரவு படுக்கப்போகும் வரைக்கும் இது தொடரும். உள் சுவாசம், வெளி சுவாசம் என்று



விட்டபடி கைகால்களைப் பரப்பி அவர்கள் இந்த போதை சாம்ராஜ்யத்தில் தங்களை மறந்து சஞ்சரிப்பார்கள்.

ஐ.நா. பிரிவு இப்படித்தான் ஒரு சாயங்கால வேளையில் அவர்களிடம் வந்தது. நூரும் ஊர் மூப்பர்களும் அப்போது ச்சாட் போதையில் இருந்தார்கள். ஐ.நா. ஊழியர்கள் ஒவ்வொரு கிராமமாக வந்து அவர்கள் தேவைகளை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் ஆழ் கிணறு தோண்டித் தரும்படி வேண்டினர். சிலர் வாய்க்கால் கேட்டனர். சிலர் பம்புசெட் என்றார்கள். இவர்களுடைய முறை வந்தது. பெண்கள் ஆழ் கிணறு வேண்டுமென்று கெஞ்சினர். ஆனால் ஊர்ப் பெரியவர்கள் கூடி மசூதி ஒன்று கட்டித் தரும்படி கேட்டார்கள். அவ்வளவு பணவசதி இந்தக் கிராமத்துக்கு ஒதுக்கப்படவில்லை. 'நீ மசூதியை கட்டித்தா, மீதியை அல்லா பார்த்துக் கொள்வார்' என்று ஊர் மக்கள் சார்பாக நூர் அடித்துச் சொல்லிவிட்டார். வாழ்க்கையில் அவர் செய்த மிகப் பெரிய பிழை இதுதான்.

அந்த ஊழியர்கள் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து இவர்கள் சொல்வதை ஏற்பார்கள் என்று நினைத்தார். அவர்கள் என்றால் பக்கத்து கிராமத்துக்கு போய்விட்டார்கள். அங்கே தூர்ந்து கிடந்த கிணற்றை பழுதுபார்த்து இன்னும் ஆழமாக்கினார்கள். வருடம் முழுவதும் நீர் சுரக்கிறது. தினம் தினம் எட்டு மைல் தூரம் அவள் தண்ணீருக்காக அங்கேதான் போகிறாள்.

சூரியன் மேலே மேலே வந்து கொண்டிருந்தான். மைமுன் தனக்குத் தெரிந்த ஒரு குறுக்குப் பாதையில் இறங்கினாள். அங்கே பார்த்த இடமெல்லாம் ச்சாட் பயிரிட்டிருந்தார்கள். வேப்பம் செடிகள் போல அவை கூர்மையாகவும், செழிப்பாகவும் வளர்ந்திருந்தன. ஆடுகள் மேயாமலிருக்க முள்வேலி போட்டிருந்தார்கள். ஆடுகள் மேய்ந்தால் அவைவேறு போதையில் துள்ளித் திரிந்து கலகம் விளைவிக்கும்.

வழியிலே ஒட்டகம் ஒன்று முன்னம் கால்கள் இரண்டையும் மடித்து தொழுகையில் இருப்பதுபோல படுத்திருந்தது. உணவும், உடையும், உறைவிடமும் தருவது. அதனுடைய கழுத்து ஆடாமல் அசையாமல் மிதந்துகொண்டு நின்றது. அண்ணாந்து பார்த்தாள். நதி நகர்வதுபோல கண்ணுக்குத் தெரியாமல் ஒரு உருண்டை அதனுடைய கழுத்தில் மேலே ஏறிக்கொண்டிருந்தது. பெண் ஒட்டகம். இடது செவியின் நுனி வெட்டப்பட்டு இருந்தது. அதற்கு முன் நின்று மரியாதை செய்ய வேண்டும் போல தோன்றியது. அப்படியே நின்று செய்தாள்.

அந்த மரத்தை கடக்கும் போது அவளுடைய இதயம் கொஞ்சம் வேகமாக அடித்துக்கொள்ளும். அது ஒரு குர்ரா மரம். பெரிய நிழல் தரும் மரம். ஒட்டகத்தின் தடித்த உதடுகளுக்கு எட்டாத உயரத்தில் அது படர்ந்திருந்தது. கன காலமாக இந்த இடத்தில் ஒரு தாயின் எலும்புக் கூடும், ஒரு குழந்தையின் எலும்புக்கூடும் கிடந்தன. தாயின் எலும்புக்கூட்டை இப்பொழுதெல்லாம் காணவில்லை. பிள்ளையின் எலும்புக்கூடு மாத்திரம் எஞ்சிக் கிடந்தது.

இந்த எலும்புக்கூடுகளின் கதை ஊரில் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. நாலு வருடத்திற்கு முன்பு. மழை இல்லை; பயங்கரமான வறட்சி. தண்ணீர் நிலைகள் எல்லாம் வற்றிவிட்டன. இந்தத் தாயும் கைக்குழந்தையும் குடிக்கத் தண்ணீர் தேடி அலைந்தார்கள். பத்து மைலுக்கப்பால் ஒரு ஆழ் கிணறு இருந்தது. அதிலே தண்ணீர் கிடைக்கலாம் என்று அவ்வளவு தூரம் நடந்து வந்தார்கள். அங்கே வந்து பார்த்தால் அதிலேயும் தண்ணீர் இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் வந்த வழியே திரும்பினார்கள். ஆயாசம் மேலிட்டு இந்த குர்ரா மரத்தின் நிழலில் தங்கினார்கள்.

யார் முதலில் இறந்தது என்று தெரியவில்லை. முதலில் குழந்தை போயிருக்கலாம். அழுது அழுது தாய் பிறகு உயிரை விட்டிருப்பாள். ஒருவேளை தாய் முதலில் இறந்து பிறகு பிள்ளை செத்திருக்கலாம். அந்தக் குழந்தை தாயைப் பிடித்து இழுத்து, இழுத்து அழுது களைத்துப்போய் இறந்திருக்கலாம்.

www.padippakam.com



மைமுன் கிட்ட வந்து அந்தக் குழந்தையின் எலும்புக் கூட்டைப் பார்த்தாள். பெண் குழந்தையா, ஆண் குழந்தையா என்று தெரியவில்லை. உள்ளங்கையில் அடங்கும் அந்தச் சிறிய மண்டை ஓட்டில் ஒரு சிறிய துணி ஒட்டிக்கொண்டு இருந்தது. அது பூப்போட்ட துணி போல தெரிந்தது. அது பெண்குழந்தையாக இருக்கலாம் என்று ஊகித்துக் கொண்டாள்.

இப்ப சில நாட்களாக அவளுக்கு தனிமை தேவைப்பட்டது. அதுதான் அமீனாவை முன்னாலே போகவிட்டு இவள் பின்னாலே வந்துகொண்டிருந்தாள். தனிமையில் சிந்திப்பதற்கு அவளிடம் நிறைய சங்கதிகள் இருந்தன. இந்த யோசனையில் பெரும் இடத்தை அலிசாலா பிடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் அவளுக்கு அடிக்கடி தோன்றியது. பதினைந்து வயதுப் பிராயத்தவளுக்கு இது புதுமையாக இருந்தது.

மைமுன் என்றால் வசப்படுத்தியவள் என்று அர்த்தம். இப்படி அவள் தன் எதிர்காலத்தை வசப்படுத்தும் எண்ணத்தில் தனிமையில் நடந்து கொண்டிருந்தாள். அதேநேரத்தில் மைமுனின் தகப்பனார் அவளுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரு காரியத்தில் இறங்கியிருந்தார். அது அவளுக்கு தெரியாது.

பளபளவென்று மின்னும் நாள் அது. தூரத்திலே ஒரு ஒட்டகக் கூட்டம். அவன் வந்து கொண்டிருந்தான். வெள்ளையாக ஈமாத் துணியில் ஒரு தலைப்பா. கையிலே ஒட்டகக் குச்சி. ஒட்டகக் கயிற்றை முன் எடுத்து தோள்பட்டையில் மாட்டிக் கொண்டிருந்தான். ஒட்டகத்துக்கு முன்பு மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். ஒட்டகத்தின் நீண்ட கழுத்தும் அந்தத் தலையும் மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சி மிகவும் அழகாக இருந்தது.



சோமாலியாவில் மனிதர்களைப் பார்க்கிலும் ஒட்டக எண்ணிக்கை அதிகம். பொதி சுமப்பதற்குத்தான் ஒட்டகம். அதன் பின்னே செல்வார்கள்; அல்லது முன்னே போவார்கள். பயணம் செய்வது என்பது கிடையாது. அலிசாலாவும் அப்படித்தான் அதன் முன்னே மிக்க மரியாதையுடன் நடந்து வந்துகொண்டிருந்தான்.

அவனுடைய முகம் தெரிந்தது. தயக்கமான கண்கள்; இன்னும் தயக்கமான தாடியும், மீசையும். முளைப்பதா, வேண்டாமா என்ற தயக்கம். எதையோ சொல்ல விரும்புவது போன்ற முகம். ஒல்லியாக இருந்தான். அவன் அருகில் வந்ததும் இவள் நடப்பதை நிறுத்திவிட்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இருதயம் ஓர் அலகு வேகம் கூடியது.

அது விவகாரமான ஒட்டகம். அவர்கள் சம்பாஷணையில் குறுக்கிடாமல் நின்றது. ஒரு நூறு வருடங்கள் அப்படியே நிற்கப்போவது போன்ற ஆயத்தங்களுடன் கால்களை அகட்டிவைத்து கழுத்தை உயர்த்தி நின்றது.

'அஸ்ஸலாம் அலைக்கும்.'

'அலைக்கும் ஸலாம்.'

'சமாதானம் உண்டாகட்டும்.'

'சமாதானம் உண்டாகட்டும்.'

'நான் உன்னைப் பார்க்கிறேன்.'

'நான் உன்னைப் பார்க்கிறேன்.'

'புதினங்கள் உண்டா?'

'புதினங்கள் அநேகம்.'

'இன்று தாமதமாக வந்து விட்டாயே!'

'அதற்கு நான் என்ன செய்ய; சூரியன் தாமதமாக அல்லவோ இன்று எழுந்திருந்தான், கவனிக்கவில்லையா?'

'உண்மைதான், சூரியனும் சோம்பலாகிக் கொண்டு வருகிறான், உன்னைப்போல.'

'நான் ஒன்றும் சோம்பலில்லை. பார், எவ்வளவு தூரம் போய் வருகிறேன். ஒரு ஹான் தண்ணீர் சுமக்கிறேன். உன்னைப்போல ஒட்டகத்துக்கு முன்னே கைவீசிக்கொண்டு நடக்கிறேனா?'

முகம் பார்த்து பதில் சொன்னாள். வலது கையை இடது இடுப்பில் வைத்து ஒரு காலில் சரிந்து நின்றாள். மற்றக் கை மொட்டாக்குத் துணியை நளினமாக பிடித்தபடி இருந்தது.

அப்பொழுது அவள் மந்தையில் எதையோ பார்த்து அருண்டாள். அவள் கண்களில் ஒரு புதுவிதமான இரக்கம் தெரிந்தது.

'மறுபடியும் அந்த ஒட்டகக் குட்டியை கட்டிப்போட்டுவிட்டாயே!'

அந்த மந்தையிலே ஒரு சின்ன ஒட்டகம். அடிக்கடி மந்தையை விட்டு ஓடிவிடும். அதன் முன்னங் கால்களை இணைத்து இடைவெளி விட்டு ஒரு கட்டு. அந்தக்குட்டி கால்களை தடக் தடக் என்று சிரமத்துடன் எடுத்து வைத்து மந்தையுடன் சேர்ந்து கொண்டிருந்தது.

'நான் என்ன செய்ய. அது பொல்லாத குட்டி. எப்பவும் ஓடிக்கொண்டே இருக்கிறது. அதைப் பார்ப்பதற்கு எனக்கு நேரம் போதாது. இன்னொரு ஆள் தேவை. நீ வந்துவிடு.'

'அதைப் பிறகு பார்க்கலாம். இப்ப அவிழ்த்துவிடு.'

அவள் குரல் சிணுங்கலாகவும் இருந்தது; அதிகாரமாகவும் இருந்தது. அலிசாலாவின் மனது இளகிவிட்டது. உனக்காக செய்கிறேன் என்று சைகையால் காட்டியபடி அதன் கால்களை அவிழ்த்து விட்டான். அந்தக் குட்டி கால்களை உதறி துள்ளி தன் சந்தோஷத்தைக் காட்டிக்கொண்டது.

அவள் அறியாச் சிறுமியாய் இருந்த காலத்தில் ஒட்டகக் கூட்டத்தோடு திரிவாள். பொதி ஏற்றும்போது அவர்கள் பாடுவார்கள். ஒவ்வொரு பொதிக்கும் ஒவ்வொரு பாட்டு. ஒட்டகத்தை ஏமாற்றும் பாட்டு. சிறுமி

www.padippakam.com




களின் பாட்டு.

ஒட்டகமே ஒட்டகமே
என் ஆசை ஒட்டகமே
இந்த விறகுகட்டை மாத்திரம்
சுமந்து வருவாயா?
உனக்கு நிறைய புல்லுகட்டு
தருவேன்.
ஒட்டகமே ஒட்டகமே
என் ஆசை ஒட்டகமே
இந்த கூரைமுகட்டை
மாத்திரம் சுமந்து வருவாயா?
உனக்கு நிறைய தண்ணீர்
தருவேன்.
ஒட்டகமே ஒட்டகமே
என் ஆசை ஒட்டகமே
என் படுக்கைகளை மாத்திரம்
சுமந்து வருவாயா?
உனக்கு முதுகு தேய்த்து
விடுவேன்.

ஒட்டகமே ஒட்டகமே
என் ஆசை ஒட்டகமே
என் ராசகுமாரனை மாத்திரம்
சுமந்து வருவாயா?
உனக்கு கட்டி முத்தம்
கொடுப்பேன்.

இந்தக் கடைசி வரிகள் அவளாகவே சேர்த்துக் கொண்டது. அடிக்கடி அவள் இந்தப் பாடலை பாடுவாள். தனிமையில் இருக்கும்போது கடைசி வரிகளை உரத்து சொல்லுவாள். அது அவள் காதுகளுக்கு கேட்க இனிமையாக இருக்கும்.

அலிசாலா வேறு பிரிவைச் சேர்ந்தவன். அவன் வந்து பெண் கேட்டால் அவள் தகப்பனார் நிச்சயமாக சம்மதிப்பார். வேறு பிரிவில் பெண் எடுப்பது அவர்கள் வழக்கம். அந்த இனம் பகைமையை விடுத்து சிநேகமாகிவிடும் என்ற நம்பிக்கை. இவனுடைய பெயர் வீட்டிலே அடிக்கடி பேசப்படுகிறது. இவர்கள் 'பறவை தின்னிகள்' என்ற ஒரு குறை மாத்திரம் இருந்தது. இருபது ஒட்டகங்கள் சீர் கொண்டு அலிசாலா வருவதில் சிரமம் இருக்காது என்று எதிர்பார்த்தார்கள்.





கிணற்றடியில் ஒரே பெண்கள் கூட்டம். பச்சைப் பசேல் என்று மரங்கள். பார்ப்பதற்கு சுவனப் பூங்கா போன்று குளுமையாக இருந்தது. கிணற்று கட்டிலே அமீனா சாய்ந்தபடி காணப்பட்டாள். தொடையிலே ஒரு கை தொட்டுக்கொண்டு இருந்தது. மற்றக்காலை ஒய்யாரமாக விசிறியபடி இருந்தாள்.

மைமுன் முக்காட்டை எடுத்து விட்டாள். அவளுடைய சிகை வசீகரத் தன்மையுடன் இருந்தது. கைகளை விட்டு அவற்றைக் கலைத்து காற்றை வெளியே விட்டாள். தண்ணீரை முகத்தில் அடித்து ஆசை தீர பருகிக்கொண்டாள். அவள் கண்கள் பிரகாசமாகின.

இரு சிநேகிதிகளும் முகத்தை திருப்பிக் கொண்டார்கள். ஒன்றுமே பேசவில்லை. தண்ணீர் குடத்தை எடுத்து முதுகிலே மாட்டுவதற்கு மட்டும் அமீனா உதவி செய்தாள். இருவரும் புறப்பட்டார்கள். குடத்திலிருந்து தண்ணீர் கொஞ்சம் கசிவது போல மைமுனுக்கு பட்டது. அடுத்த நாள் மறக்காமல் பானைக்கு அலஸு மரத்து பிசின் தடவவேண்டும் என்று நினைத்துக்கொண்டாள்.

வறுமையில் வாடிய இரண்டு தங்க நரிகள் நிலத்தை மணந்தபடி அவர்களைத் தாண்டி ஓடின. ஒரு மஞ்சள் குருவி 'உய்க், உய்க்' என்று சத்தம் செய்தது. மைமுனுக்கு திடீரென்று சிறுநீர் கழிப்பதற்கு பேரவா பிறந்தது. நெளிந்தபடி அமீனாவை ஒரு அரைக்கண் பார்வை பார்த்தாள். அவளும் மைமுனின் உடல் மொழியை புரிந்துகொண்டு தலையை அசைத்தாள்.

தண்ணீர் பானையை மெதுவாக இறக்கி வைத்தார்கள். இரண்டு கற்களை எடுத்து உரசி சத்தம் செய்தபடியே பற்றை மறைவில் ஒதுங்கினார்கள். மைமுன் காலை அகட்டி குந்திய சிறிது நேரத்திலேயே ஒரு வித உற்சாகத்துடன் நீர் பிரிந்தது. பாம்பு சீறுவது போன்ற சத்தத்துடன் அது நிலத்தை அடைந்தது. மைமுனுக்கு பெரும் சுமை ஒன்று இறங்கிய சுகம். அந்த நேரத்தில் அலிசாலாவின் நிச்சயமற்ற கண்கள் நினைவுக்கு வந்தன. அவனைத் தீவிரமாக காதலிக்கலாமா என்ற எண்ணம் அவளுக்கு மறுபடியும் தோன்றி மறைந்தது.

'உன்னுடைய ஆள் அங்கே சுற்றிக்கொண்டு இருந்தானே', இப்படிச் சொல்லி அமீனா அவர்களுக்கிடையே இறுகிப்போன காற்றை மெல்ல உடைத்தாள். பிறகு சிநேகிதிகள் இருவரும் கலகலவென்று பேசத்தொடங்கினார்கள். அவர்கள் அந்நியோன்யம் தானாகவே பற்றிக் கொண்டது. அமீனா அவளுடைய வழக்கமான புலம்பலைத் தொடங்கினாள்.

'இவனை நம்பி இராதே. இவன் உனக்கு மஹர் கொண்டு வரப் போவதில்லை. வேறு ஆளைப் பார். இவன் பெண்கேட்டு வரும்போது உனக்கு நாற்பது வயது தாண்டி

www.padippakam.com



விடும். அதற்குப் பிறகு உனக்கு எப்படி பிள்ளை பிறக்கப் போகிறது.'

'பிள்ளை கிடக்கட்டும். ஒரு நாளைப்போல் ஒட்டகம் செய்யாத வேலையெல்லாம் செய்கிறேன். என்னைப்போய் சோம்பல் என்று சொல்கிறானே.'

மைமுனுடைய தாயார் இருபது வருடங்களில் பதினொரு பிள்ளைகளைப் பெற்றவள். ஒட்டகங்களில் கூட பத்து குட்டிகள் ஈன்றதும் அவற்றின் இடது காது நுனியை அடையாளமாக வெட்டி விடுவார்கள். அந்த ஒட்டகம் அதற்குப் பிறகு இளைப்பாற அனுமதிக்கப்படும். அந்தச் சலுகை கூட பெண்களுக்கு இல்லை. அவர்கள் சாகுமட்டும் பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

மைமுன் உதடுகளை விரிக்காமல் கறுப்பு புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.

'அமீனா, என் இனிய சிநேகிதியே! நான் என்ன செய்யப்போகிறேன் என்று உனக்குத் தெரியுமா? என்னை அவ்வளவு சுலபத்தில் அடிமைப்படுத்த முடியாது', இப்படிச் சொல்லிக்கொண்டே அவள் அருகில் வந்து அமீனாவின் காதுகளில் ஏதோ ரகஸ்யம் சொன்னாள். இருவரும் ஒரு சதியாலோசனையை முடித்த திருப்தியோடு விழுந்து விழுந்து சிரித்தார்கள். வீடு வரும்வரை கண்ணில் நீர் பொங்க சிரித்தார்கள். தண்ணீர் குடம் குலுங்க சிரித்தார்கள். வீடு வரும்வரை இப்படி சிரித்துக்கொண்டே வந்தார்கள்.



வீட்டிலே இன்னும் நிறைய வேலைகள். தண்ணீர் குடத்தை இறக்கி வைத்தாள். அவளுடைய தாயார் வழக்கம்போல சந்தைக்கு போய்விட்டாள். காட்டிலே போய் விறகு பொறுக்கி இரவுச் சமையல் செய்யவேண்டும். பிறகு மீதமிருக்கும் ஒட்டகப் பாலை சந்தைக்கு எடுத்து போகவேண்டும்.

இரவுச் சமையலை விரைவாக முடித்தாள். பாலிலே உதிர்ந்த சோளத்தைப் போட்டு காய்ச்சினாள். நம்பிக்கை ஊட்டும் நறுமணத்துடன் அது பொங்கியது.

சுரைக்குடுவையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். ஒட்டகம் அவளுக்காக பொறுமையுடன் நின்றுகொண்டிருந்தது. இடது காலில் நின்று வலது காலை மடித்து முழங்காலில் ஊன்றிக் கொண்டாள். உறுதியான வடிவம் கொண்ட வலது தொடைக்கும் மெலிந்த வயிற்றுக்கும் இடையில் குடுவையை வைத்தாள். அது அங்கே கச்சிதமாகப் பொருந்தி நின்றது. பாலைக் கறக்கத் தொடங்கினாள். சரி கணக்காக அது குடுவையை போய் ஒரு வித கதகதப்புடன் நிறைத்தது. முழங்கையை நக்கியபடி குடுவையை எடுத்துக் கொண்டு சந்தைக்கு விரைந்தாள்.

ஊரடங்கி நிசப்தமானபோது அவள் படுக்கச் சென்றாள். அடுத்தநாள் அதிகாலையை நினைக்கும்போது அவளுக்கு பயமாக இருந்தது. இந்த ஹைனாவும் அவளுடைய அம்மாவும் அவளுக்கு விரோதம் செய்கிறார்கள். விடியு முன்பாகவே அவளை எழுப்பிவிடுவார்கள். ஆசை தீர நித்திரை கொள்ளும் சுகம் எப்படி இருக்கும் என்று அவளுக்கு தெரியாது. அந்த அதிகாலை நித்திரைக்காக அவள் எதுவும் செய்யத் தயாராயிருந்தாள். இந்த சிந்தனைகளுக்கிடையில் அவள் இமைகள் ஒன்றையொன்று தீண்டின.

அடுத்த நாள் அவளுடைய விடியற்காலை அவலங்கள் ஒரு முடிவுக்கு வந்தன.

ஹைனாவின் தொந்தரவு இல்லை. அம்மாவும் மௌனமாகி



விட்டாள். தூரத்தில் மேய்ப்பவர்களின் மேய்ச்சல் ஓசைகள் மாத்திரம் கேட்டன. இவ்வளவு அழகான விடியலை அவள் கண்டதில்லை. பக்கத்து ஊரில் இருந்து பெருங்கூட்டம் ஒன்று வந்திருந்தது. பலபலவென்று விடியும்போதே வந்துவிட்டது. நூரும் ஊர்ப் பெரியவர்களும் கிராமத்து எல்லையிலே நின்று அவர்களை வரவேற்றார்கள். அவர்கள் வழக்கப்படி வேரோடு பிடுங்கிய சோளப் பயிர்களை கைகளிலே தூக்கி அசைத்து அசைத்து அவர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள். ஒரு சைன்யம் திரண்டு வருவதுபோல அது இருந்தது.

மைமுனைப் பெண்கேட்டு வந்திருந்தது அந்தக் கூட்டம். ஒரு நாள் பயணத் தொலைவில் இருந்து வந்திருந்தார்கள். அந்த ஊர் நபதூன் அவர். ஐம்பது வயதுக்காரர். மூன்றாம் தாரமாக மைமுனை மணக்கச் சம்மதம் தெரிவித்திருந்தார். ஐம்பது ஒட்டகங்கள் சீர் கொடுப்பதாக பேசிக் கொண்டார்கள். ஊர் முழுக்க இந்த அதிசயத்தை பார்க்க திரண்டு வந்திருந்தது.

மைமுனின் தாயார் தட்டையாக மறுத்துவிட்டாள். இவ்வளவு தூரத்தில் மகளைக் கட்டிக் கொடுத்தால் பின்பு அவளைப் பார்ப்பது என்பது

www.padippakam.com



நடக்காத காரியம். அலிசாலா பெண் கேட்டு வருவான் என்று எதிர்பார்த்தாள். மைமுன் அவனிலே எத்தனை ஆசை வைத்திருந்தாள் என்பது அவளுக்கு தெரியும்.

நூர் அப்போது ச்சாட் போதையில் இல்லை. இறையச்சம் உடையவர். ஆதலால் மறு வாசிப்பில் ஐம்பது ஒட்டகங்களுக்காக மகளை விற்பதா என்று தயங்கினார். தாயும் தகப்பனுமாக மகளிடம் வந்தார்கள். சிக்கல் இல்லாத சொற்களை தெரிவு செய்து அவளிடம் யோசனை கேட்டார்கள். எப்பவும் மைமுனிடம் அதிசயிக்க வைக்கும் சில நிமிடங்கள் கைவசம் இருக்கும். அவள் தயங்காமல் சம்மதம் தெரிவித்து விட்டாள். பிடிவாதமாகக் கூட இருந்தாள். அவர்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

நிக்காஹ் முடிந்த கையோடு மைமுன் தன் கணவன் வீட்டுக்கு புறப்பட்டாள். அவர்கள் கொண்டு வந்திருந்த ஒட்டகங்களும், கழுதைகளும் பயணத்திற்கு தயாராக இருந்தன.

அந்தச் சமயம் பார்த்து அவளுடைய பிராண சிநேகிதி அமீனா வந்து சேர்ந்தாள். அவள் காதுகளில் மைமுன் ரகஸ்யம் பேசிவிட்டு வீடு வந்து சேரும் வரை சிரித்தது ஞாபகத்துக்கு வந்தது. 'இவள் உண்மையாக அல்லவோ சொல்லியிருக்கிறாள், பாவி' என்று அமீனா நினைத்துக் கொண்டாள்.



'நான் ஒரு ஐம்பது வயதுக் கிழவனை மணக்கப் போகிறேன். அவனுக்கு மூன்றாவது மனைவியாக. அவன் ச்சாட் சாப்பிடுபவனாக இருக்கவேண்டும். அந்த மயக்கத்தில் அவன் என்னை அதிகம் அணுகமாட்டான். மிஞ்சிப் போனால் இரண்டு குழந்தைகளுடன் தப்பி விடுவேன்.' இப்படிச் சொல்லி விட்டு அவள் ஓவென்று சிரித்தாள். பரிகாசம் என்றுதான் முதலில் அமீனா நினைத்திருந்தாள். அப் படியில்லை. இவள் உண்மையாகத்தான் கூறியிருக்கிறாள்.

அமீனாவுக்கு சொல்லாத இன்னொரு காரணமும் இருந்தது. அதுவும் சீக்கிரத்திலேயே அவளுக்கு தெரியவரும்.

புறப்படும் சமயம்.திடீரென்று மைமுன் அழத்தொடங்கினாள். காரணம் தெரியவில்லை. 'ஹுயா, ஹுயா' என்று அழைத்து தாயாரைக் கட்டிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

'அடி, பாவிப்பெண்ணே! எதற்காக இப்படி அழுகிறாய். சொல்லித் தொலை. உன் விருப்பப்படிதானே ஒரு முழு நாள் பிரயாண தூரத்தில் இருக்கும் இந்தச் சின்ன ஊரில் உன்னக் கட்டிக்கொடுக்கச் சம்மதித்தோம். நீ இங்கே ராசாத்தி மாதிரி இருந்திருக்கலாமே! பாதகத்தி, இப்ப போய் அழுகிறாயே!'

மைமுனால் அப்பவும் அழுகையை அடக்க முடியவில்லை. மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது. விம்மியபடியே சொன்னாள்.

'உண்மையான காரணத்தைச் சொல்லட்டுமா, ஹுயா.'

'கூறு கெட்டவளே, சொல்லடி, இப்படி குடியை கெடுத்துவிட்டாயே!'

'ஹுயா, அந்த ஊரில் தண்ணீர் கொட்டி கொட்டி வருமாம். வருடம் முழுக்க வற்றாதாம். தினம் தினம் பதினாறு மைல் தூரம் நடக்கத் தேவையில்லை.'

இதைச் சொல்லிவிட்டு மைமுன் தன் தாயின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள். பார்த்துவிட்டு இன்னொருமுறை அழத்தொடங்கினாள்.

(இந்தக் காட்சி இங்கே முடிந்து விட்டது)

○○○

மைமுனின் தகப்பனாருக்கு முதலில் கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனாலும் தேற்றிக் கொண்டார். ஒருநாள் பயணம்தானே, மகளை அடிக்கடி பார்க்கலாம் என்று நினைத்தார். ஆனால் அப்போது அவருக்கு தெரியவில்லை அதுதான் அவளைப் பார்ப்பது கடைசித் தடவை என்று.

விரைவில் அவரது மனைவி இறந்துபோவாள். ச்சாட் போதையில் உடல்நிலை கெட்டு மனம் குலைந்து எஞ்சியிருக்கும் நாட்களை அவர் மற்றவர்கள் தயவில் கழிக்க நேரிடும். அந்த நேரங்களில் எல்லாம் அவர் மைமுனின் சிந்தனையாகவே இருப்பார்.

ஒருவரும் பார்க்கவில்லை என்ற அந்தரங்கமான சமயத்தில் அவள் அகாஸியா மரத்தின் கீழ் கல்லிலே குந்தியிருந்தது ஞாபகத்துக்கு வரும். ஓர் உடைந்துபோன கண்ணாடித் துண்டில் முகத்தைப் பார்த்து தலையை வாரியதும் அவளாகவே இட்டுக்கட்டிய குழந்தைகள் பாட்டை அவள் குரல் மெல்லியதாக முணுமுணுத்ததும் நினைவுக்கு வரும்.

ஒட்டகமே, ஒட்டகமே
என் ஆசை ஒட்டகமே
என் ராசகுமாரனை மாத்திரம்
சுமந்து வருவாயா?
உனக்கு கட்டி முத்தம்
கொடுப்பேன்.

அலிசாலாவில் அவள் எவ்வளவு காதல் வைத்திருந்திருப்பாள். அவ்வளவையும் ஒரு கணத்தில் தூக்கி எறிந்துவிட்டாளே. அதிகாலையில் தண்ணீருக்கு போய் வருவதை அவள் எவ்வளவு தூரம் வெறுத்திருக்க வேண்டும்.

ஒரு வேளை ஐ.நா. பிரிவு கேட்டபோது கிணறு வேண்டும் என்று கூறியிருந்தால் மைமுன் அலிசாலாவை மணமுடித்து அவருடைய ஊரிலேயே தங்கி இருந்திருக்கக்கூடும். வெகு காலத்திற்கு பிறகு அவர் மனதில் இந்தச் சிந்தனைகள் எல்லாம் திருப்பி திருப்பி ஓடும்.

ஆனால் அப்போது அவருக்கு அது தெரியவில்லை. ❑

www.padippakam.com

மு புஷ்பராஜன்

தூக்கத்திலிருந்து விழித்தபோது ஒன்றுக்குப் போக வேண்டியிருந்தது. எழுந்தால் மீண்டும் தூங்க வெகுநேரம் எடுக்கும். புரண்டு புரண்டு படுக்க வேண்டும். "குயில்ரி"ன் இதமான சூட்டைப் பிரிய மனமில்லாமல்..

'இனி இது தூங்க விடாது... இஸ்ரத்துக்கு எது தான் நடக்குது'.

வாசல் அருகில் கிடந்த சிலிப்பர்களை மாட்டியபடி ரொய்லெற்றுள்.. லைற்கூடப் போடவில்லை. தூக்கக் கலக்கில் உடல் சோர்ந்த நிலை. காரியம் நடந்து கொண்டிருந்தது.

நீண்டு ஒடுங்கிய சிறு யன்னலால்...

அழகான காட்சி. அழகு மட்டுமா அபூர்வமான காட்சியும்கூட.. யன்னலூடாய்த் தெரிந்த கட்டிடத்தின் மத்தியிலிருந்து நீண்டு உயர்ந்திருந்த சதுரக் கற்றூணின் உச்சியைத் தொட்டபடி ஒடுங்கிய நிலவு. பீடத்தில் ஏற்றி வைக்கப்பட்ட மெழுகுவர்த்தி போல.. வீட்டின் பின்பக்கம் பூத்திருந்த அப்பிள் மலர்கள் பீடத்தில் பரப்பி வைக்கப்பட்ட மலர்களைப் போல.. நிலவொளி படர்ந்த வானில் திட்டுத் திட்டாய் இருண்ட மேகங்களின் மெல்லிய அசைவு. வைரப் பொடியாய் நட்சத்திரங்கள்..

தூக்கம் கலைந்துவிட்டது. காரியம் முடிந்தும் வெகுநேரமாய் கை சாரத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. சிலிர்த்துக் கொண்டான்.

'எவ்வளவு காலம்.. இப்பிடி பாத்து.

இங்கிருந்து பாக்கத்தான் இப்பிடி தெரியுதா... மணி என்ன...?

எல்லா அறைகளும் இருண்டு கிடந்தன. படிகளில் ஓசை எழாமல் கீழிறங்கி, பின்கதவைத் திறந்து அண்ணாந்தால்.. அப்பிள் மலர்கள் மட்டும் வெண் கொத்தாய்ச் சொரிந்தபடி.. பீடம், பரப்பிய மலர்கள், மெழுகுவாத்தி எல்லாம் இடம்மாறிப் போயிருந்தன.

வானம் மட்டும் அதே அடர்த்தியான மேகங்களுடன். முற்றத்தை நிலவு விழுத்திய மரநிழல்கள் மெல்லக் கூட்டின.

'நிழல்கள் உடலில் பட மணலில் இருந்தால்... முடிகிறதா... பிறகு நாளைக்கு டொக்ரர்தான்... இன்று மட்டும் ஏனிந்தச் சோபை...

பின் சுவருக்கு அருகில் உயர்ந்திருந்த கட்டிடத்தின் கூரையின் கீழிருக்கும் பிரகாசமான மின்விளக்கு எரியவில்லை.

'இது என்ன கட்டிடம் வீடுமாதிரியும் தெரியயில்ல.. நாளைக்கும் இப்பிடி எரியாமல்..'

# நிலவு



www.padippakam.com



வந்து ஏழு வருடங்களாகிவிட்டது. பக்கத்து வீட்டுக் காரன் பெயர்கூடத் தெரியாது. காலை வேலை. மாலை வீடு. தனித்த வாழ்க்கை. வாழ்க்கையா..?

போய் வரும் வழியில் தெரிந்தவர்கள் வந்தால் ஒரு கையுசத்தல்... ஒரு ஹலோ. தனியே சென்று தனியே வருதல். யார்பற்றி யார் கவலைப்படப் போகி றார்கள். வேலை முடிந்துவரும் வீதிகளெல்லாம் மின் விளக்குகளின் ஆட்சியில். நிலவின் ஒளி தொலைந்தது பற்றி யாரும் கவலைப்படுவதாகவேயில்லை.

'என்னப் போலத்தான் நிலவும்..'

நிலவிற்கு ஒரு கவிதை எழுத எத்தனை தடவைகள் முயன்றதுண்டு. நிலவின் ஒளியில் குளிக்காத சோக த்தை சரியாகச் சொற்கள் ஏந்தவில்லையே.

வாழ்விற்கும் நிலவிற்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி இங்கு அது வேண்டாத பொருளாய் எங்கோ தொலை வில்...

மூன்றாம் பிறை நான்காம் பிறையுடன் வலைகள் பிடுங்கி பௌர்ணமி கழிந்த இரண்டு மூன்று நாட்க ளுக்குள் வலைகள் பொத்தி, அவித்து, பிதைந்து மீண் டும் பாய்ந்து.

ஒவ்வோர் அதிகாலையும் நிலவின் கவிர் மினுங்கும் அலையோடு தொழில். சோழகத்தில் ஓ வென்று சீறும் காற்றும் கடலும். எதிர்த்து வலிமையுடன் வள்ளம் தாங்குதல்... கடலிறன் சீற்றமா... உடல் வலுவா...

'இங்கு சோழகமுமில்ல.. வாடயுமில்ல...'

பின் அறைக் கதவு திறக்கும் சத்தம்.

'சுந்தர். அவனுக்கும் ஒண்டுக்கா...?

"யாரது?"

"நான்தான்."

"நானெண்டா"

லைற் எரிந்தது.

"நீயா..? ஏன் பேய் மாதிரி இந்தச் சாமத்தில் நிக்கி றாய்.. அதுவும் கதவ திறந்து போட்டு.."

அவன் கீழ் ரொய்லெற்றுக்குள் போயக் கதவைச் சாத்திக் கொண்டான்.

'லூஸ் என நினச்சிருப்பான்'

மேலேறி வருகையில் முதல்மாடி அருகிருந்த பெரிய யன்னலால் கட்டிடத்தின் முழுப்பகுதியும் தெரிந்தது. அது பீடத்தைப்போல் இல்லை. கட்டிடமாகவே இருந்தது. அதன் அருகிருந்த கட்டிடமும் அதன்மேல் ஏற்றப்பட்ட கொடியும் இப்போது தெரிந்தன. அப்பிள் மலர்கள் பரப்பி வைக்கப்பட்டவை போலவே இருந்தன. நிலவு தூண் அருகை விட்டு சற்று விலகியிருந்தது. கட்டிடங் களைத் தவிர்த்துப் பார்த்தால் அது இன்னமும் மெழுகு வர்த்திதான்.

கீழே நிழல்களின் கூட்டல்....

"மோனத் திருக்குதடி வையகம்
மூழ்கித் துயிலினிலே.
நானொருவன் மட்டிலும்".

நானொருவன் மட்டிலும். நானொருவன் மட்டிலும்.

'றாணியும் பிள்ளைகளும்.. இப்ப மண்டபம் காம்பில நல்ல தூக்கத்தில.. சிலவேளை விடிஞ்சு இருக்கும்... ம்... எல்லாம் சிதறிப் போச்சு...'

கடல் நுனியைத் தொட்டபடி சூரியன் களைத்துச் சிவந்திருப்பான். மம்மல் எங்கும் கவிந்திருக்கும். பண ணைப்பாலத்தில் தலைகலைய சேட்டு படபடக்க.. கட லைப் பார்த்தபடி.. ஏ.ஜே., சூரியுடன். சிலவேளை சட்டநாதன் அல்லது நுஃமான்... இலக்கியம், நாடகம், சினிமா, அரசியல் என நீளும் உரையாடல்கள்..

களங்கட்டிக் கம்பில் குந்தி இருக்கும் கொக்குகள் ஊசலாட்டமாய்த் தெரியும்போது நிலவின் துகில் கடல்மேல் படரத் தொடங்கும்.

ரீகல் தியேட்டர் அருகிலுள்ள தகரக்கடையில் ஏ.ஜே. கணக்கில் பிளேய்ன் ரீயுடன் அவரவர் வீடு நோக்கி..

கோட்டை எப்போதும் அந்நியச் சுவடுகளை நினைவுறுத்தியபடி.. நிலவில் இன்னமும் புதிராய்..

கோட்டை மூலையில் சூரி, வில்வனுடன் மணிக கூண்டு கோபுர உச்சியில் பௌர்ணமி நிலை. புல்லுக் குளத்தில் தென்னை மர நிழல்கள் நில வொளியில் மினுங்கலாய் ஆடியபடி..

நிலவுக்கு மட்டுமேன் இந்த மோனம்'?

வில்வன் பாடினர். "ஓ! வண்டிக்காரா"வை அனுப வித்துப் பாடினான்.

"பனியின் விழிநீர்த் துயரத் திரையில்
பாதை மறையும் முன்னே..
பிணியில் தேயும் நிலவின் நிழல்நம்

www.padippakam.com



பின்னால் தொடரும் முன்னே..''

புற உலகு கரைந்து போனது போல்..

வில்வன் பாடிக் கொண்டேயிருந்தான்.

``ராதே..! ராதே..!
நெஞ்சம் அலைமோதவே
கண்ணும் குளமாகவே..''

இன்னும்

``காற்று வெளியிடை கண்ணம்மா''..

அவன் பாடப்பாட உடல் லேசாகி.. மூடிய கண்ணுள் வட்டவடிவில் அடர்த்தியான வெண்புகை. அதனுள் காற்றில் மிதப்பதுபோல் வளைந்து வளைந்து இறங்கிக் கொண்டிருக்க, புகைவடிவம் நீண்ட குழாய் போல் இறங்கிக் கொண்டேயிருந்தது.

அன்று அவன் அனுபவித்துப் பாடுவதற்காகவே வந்தவன் போலிருந்தான்.

கீழே மீண்டும் கதவுச் சத்தம். சுந்தர். மேலிருந்து பார்ப்பது அவனுக்கு தெரியவில்லை. தன் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

நிலவில்தான் எம்மூர் பெண்கள் முற்றத்தில் கூடி ஊர்வீட்டு நியாயங்களுடன் மல்லாடிக் கொண்டிருப்பார்கள்.

சிறுவர்கள் இரைச்சலுடன் பச்சிக்கம்மா பச்சிக்க, நூல்துள்ளி, வார்குடுத்து. எத்தனை விளையாட்டுக்கள்..

நிலவில் அப்பம் சுடும் கதையைக் கேட்டபடி தாத்தாக்கள் பாட்டிகள் மடியில்.. பேரன்கள்.. பேத்திகள்..

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்..
அவர் கன்னியராகி நிலவினிலாடிக் களித்ததும்..''

எத்தனை எத்தனை வண்ணங்களாய் நிலவைப் பற்றிப் பாடல்கள். இன்னும் எத்தனை எத்தனை தலைமுறைகளுக்கு..

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந் தந்தை யுடையேம்
எம்குன்றும் பிறர் கொளார்..''

யன்னல் ஊடே இருண்டு கறுத்த மேகங்கள் நிலவை மூடியிருந்தது.

இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்... ❑

7.02.96


THANGAMALIKAI

தூரத்தில் சிறந்த தங்கநகைகள்
தன்னிகரற்ற அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்திற்கும் தவறாது நாடுங்கள்
தங்கமாளிகை

தங்கமாளிகை

199, Rue du Fg. Saint Denis , 75010 Paris

Tel. 01-42 05 39 05 Metro: La Chapelle / Gare du Nord

www.padippakam.com

அ இரவி

# ஜேர்மனியில் ஒரு நகரம்; பிறகு பிறேமன் நகரத்துக் காகம்

ஓடிக்கொண்டிருந்தபோது பனி முகத்தில் அறைந்தது. நான் அப்போது பஸ்ஸைத் தவறவிட்டு விடுவேன் என்றஞ்சி ஓடினேன். பனிச்சேறு என் கால்களின் கீழே அப்பிக் கொண்டும் நெரிபட்டுக்கொண்டுமிருந்தன. மிக்க இருட்டான விடியற்புறத்தில் நான் ஒரேயொரு நிமிசத்தில் பஸ்ஸைத் தவறவிட்டு விடுவேன். பிறகு அரைமணித்தியாலம் காத்திருக்க வேண்டும். நகரம் தன் வேலையில் அரைமணித்தியாலம் அதற்காகக் காத்திருக்காது.

சஞ்சயும் சஞ்சுவும் என்னைத் தடியா என்றனர். சுசி என்னைக் குண்டா என்றாள் இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அப்படி அழைத்தனர். ஜேர்மனியின் உபசாரத்தில் மேலும் நான் தொக்கையாகிவிட்டேன்.

வீதியின் ஓரங்கள் சறுக்குவதற்கு ஏதுவாகப் பனிப்பஞ்சுப் பொதிகள் இறுகிப் பாறையாக மின்னின. நான் அதில் சறுக்கி 'தொபுக்கடீர்' என விழுவேனாக இருந்தால்; நாரி விட்டுப்போவது ஒருபுறம் இருக்கட்டும். பிறேமன் நகரம் ஒருமுறை அதிர்ந்து குலுங்கும். லைற்றின் மஞ்சள் ஒளியில் பனித்துகள்கள் பொன் வண்ணத்தில் மின்னி ஒளிர்ந்து கீழிறங்குகின்றன.

என் ஓட்டம் கண்ட பஸ் சாரதி மெதுவாகப் பஸ்ஸை நிறுத்தத்திற்குக் கொண்டு வந்தான். நன்றி கூறி ஏறினேன். நானொருவனே பஸ்ஸில் இருந்தேன். வெளியில் பெய்கிற பனியின் குளிருக்குப் பஸ்ஸினுள் இளஞ்சூடு வெதுவெதுப்பாய் இருந்தது. போதாக்குறைக்குக் கையுறைகளைக் கழட்டிக் கைகளைத் தேய்த்தேன்....

.....ட்ராம் எடுத்து அரைமணித்தியால ஓட்டம். இருண்டு போய் கிடக்கிற ரெஸ்ரோறண்டினுள் நான் கால் வைப்பேன்.

ஜேர்மனியர்கள் சுத்தமாகக் கால் வைப்பதற்கும், சுத்தமாக அமர்வதற்கும், சுத்தமாகக் குடிப்பதற்கும், சுத்தமாக உண்பதற்கும் சுத்தமாகச் சலம், மலம் கழிப்பதற்கும் நான் அங்கு தேவை. ஜேர்மன் மகளிர் தம் சுகயீன காலங்களின் கழிவுகளை வீசுவதற்கும் நான் தேவை.



யாவும் முடிய ரெஸ்ரோறண்ட் வாசனையுடன் பனிச் சென்றிருக்கும். இரண்டு மணித்தியாலம் ஆகிவிடும். வேலை முடிந்து வெளியில் வருகிறபோது சுத்தமாகத் துடைத்து மின்னுகிற கண்ணாடியில் முகம் பார்ப்பேன். சரிதான். தெரிந்ததுதான். முகம் விகாரமாய் இருக்கும். பனிக்குளிரினுள் முகம் வியர்வை கசிந்து தெரியும்.

மாதம் முடிகிறபோது 300 மார்க் சம்பளமாக மகான் வாங்கித் தருவார். இந்த வேலையை மகான் எடுத்துத் தந்திருந்தார். மகானின் மனைவி என் நெருங்கின உறவினள் கமலா அத்தையின் மகள். கமலா அத்தையின் சிரிப்பைப் போலவும், கமலா அத்தையின் சந்தோசத்தைப் போலவும், அவர் இருந்தார். இந்நகருக்கான என் வரவு இந்நகரில் பாய்கின்ற 'வெசர்' ஆறுபோல அவர்களுக்கு மகிழ்வை ஏற்படுத்தியது. சொந்தம் இல்லாது, சூழ நண்பர்கள் மாத்திரமே வாழ்கின்ற இந்த ஊரில், என் வரவினூடாக நான் அவர்களுக்கு மகிழ்வையே ஏற்படுத்தினேன்.

"இந்த வீட்டை உங்களின்ரை வீடு மாதிரி நினையுங்கோ" என்று மகான், அடிக்கடி இராச்சாப்பாட்டிற்கு அழைத்துச் சொன்னார். இராச்சாப்பிட்டால் பால் குடிக்க வேண்டுமென்றார். "இஞ்சை படுக்கலாம்" என்ற படுக்கை விரித்தார். அவரின் அழகான சின்னுட்டி வாய் கொண்ட ஒற்றை மகளுக்கு ஏதும் வாங்கிச்செல்ல என்னிடம் அப்போது காசில்லை. நான் அதனால் மனம் நொந்திருந்தேன். இந்நகரின் கடைகள் இரவு ஆறரை மணிக்குப் பூட்டுவதும் இரவு ஏழுமணிக்குப் பிறகே மகான் வேலையால் வீடு வருவதும், அதன் பிறகே நான் அவர் வீடு செல்வதும் எனக்கு வாய்ப்பானதாக இருந்தது. ஆனால் அப்படி இருந்து விடமுடியுமா? முகாமில் சாப்பாட்டின் பின்

www.padippakam.com



தருகிற பழங்களைச் சேகரித்துப் போகிறபோது கையில் கொண்டுபோய்க் கொடுத்தேன். "மாமாவிட்டை வாங்கோ...."

"எனக்கு உங்களின்ரை நிலைமை தெரியும். அதெல்லாம் வேண்டாம்" என்றுதான் மகான் சொன்னார். அதற்காகக் குழந்தை இருக்கிற இடத்தில் கையை வீசிச் சும்மா போக முடியுமா?

ரெஸ்ரோறண்ட்டில் கோப்பை கழுவுகிற வேலைக்கு இதுவரை நகர் முழுக்க நான் உலைந்து விட்டேன். ஒரு சீனக்காரன் என் உருவத்தைக் கடைக்கண்ணால் கவனித்துப் போன் நம்பர் தரச் சொன்னான். போன் நம்பருக்கு நான் எங்கு போவேன்? "இளைஞர்களுடன் உன்னால் வேலை செய்ய முடியாது" என்றான் ஈரான்காரன். "இவ்வளவு வயதில் உன்னிடம் எவ்வாறு வேலைகளை ஏவுவது?" என்று துருக்கிக்காரன் கேட்டான். இந்தியனின் கேள்வி இது: "எட்டு மணித்தியாலம் வேலை. இரண்டு மணித்தியாலம்தான் சம்பளம். ஏலுமோ?" ஆலோசனை சொல்ல ஜேர்மன்காரன் தவறவில்லை." ஒழுங்காகப் பாஷையைக் கற்றுக்கொண்டு வா."

இவ்வகைத் துரத்தல்களுக்கும் அப்பால் இந்த வேலையை மகான் முதலாளியுடன் கதைத்து எடுத்துத் தந்திருந்தார்.

முதல் 15 நாட்கள் பயிற்சி என்றார் மகான். "அதுக்குச் சம்பளம் தரான். உங்கன்ரை வேலை பிடிச்சிருந்தால் தொடர்ந்து வேலை. நீங்கள் முதலாளியோடை ஒண்டும் கதைக்க வேண்டாம். உங்களின்ரை பாஷை அவனுக்கு விளங்காது. நான் சம்பளம் வாங்கித் தருவன். 300 மார்க். இஞ்சை ஒருத்தனும் இப்பிடித் தரான். நல்ல சம்பளம். நீங்கள் வேலை ஆக்களோடை சம்பளத்தைப் பற்றி ஒன்றும் கதைக்காதையுங்கோ. எங்களின்ரை சனம் பொறாமை பிடிச்ச நாய்ச் சாதி. தாங்கள் 200, 250 மார்க்கிற்குக் குறைஞ்சு வேலை செய்வம் எண்டு கேப்பாங்கள். உதுகள் வெளிநாட்டுக்கு வந்தும் திருந்தாதுகள். யாழ்ப்பாணத்துப் புத்தியைக் காட்டுங்கள். சரி, அதை விடுங்கோ. நீங்கள் கவனமா இருந்தாச் சரி. இப்ப இந்த வேலையைச் செய்யுங்கோ. பிறகு நல்லதொரு வேலை பாப்பம்."

மகானின் வார்த்தைகள் மனசுக்குத் தென்பாக இருந்தன. அருமையான மனுசன்!

சம்பளம் எவ்வளவு என்று கூறாத என்னையிட்டு முகாமிலுள்ளவர்கள் திருப்திப்படவில்லை. அது தாங்காது சம்பளம் பற்றிக் கூறினேன் நான். ஆயினும் வேலை செய்கிற நேரத்திற்குச் சம்பளம் போதாது என்று கூறினர். புளுகுகிறான் என்று அயல் அறைகளில் புறுபுறுத்தார்கள்.

இதனால் மாத்திரம் நான் சஞ்சலமடைந்து போகவில்லை. ரெஸ்ரோறண்டில் அடிக்கடி நான் ஓங்காளிக்கிறேன். ஆரம்பத்தில் சிகரெட் கட்டைகள் இருக்கிற குப்பைத் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது ஓங்காளித்தேன். ஆனால் தொடர்ந்தும் தீட்டுத்துண்டுகளைத் தூக்கி அப்புறப்படுத்துகிறபோது வருகிற ஓங்காளத்தைத்தான் கட்டுப்படுத்த முடியாமலிருக்கிறது.

இவற்றால் மாத்திரமல்ல பிறகு இரண்டு, மூன்று முறை இவ்வேலை செய்வது தொடர்பாக நான் தடுமாறினேன்.

வெளிப்புறம், முற்றத்தில் குவிந்து கிடக்கிற பனிச்சேற்றினை வாரிக் கொட்டுகிறபோது மகான் வந்தார். வேலை செய்யிற முறை சரியில்லை என்று முதலாளி போன் அடித்ததாகப் பிரஸ்தாபித்தார். மிகச் சுத்தமாக வேலை செய்வதாகவே நான் நினைத்தேன். என் ஓங்காளச் சத்தம் சுவர்களில் பட்டிருக்குமோவென்று சுவர்களைத் துடைத்தேன். நான் கீழிறங்கும் படிகளில் கறுப்புப் படர்வது கண்டு உரஞ்சித் துடைத்தேன்.

இல்லை, என் வேலையில் பழுதிருக்கிறது என்றுதான் மகான் அபிப்பிராயப்பட்டார். "அப்பிடி என்ன பிழை?" என்று நான் கேட்டேன். பிழை இன்னதென்று சொல்ல முடியா விட்டாலும் பிழை இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

"உங்களுக்குத் தெரியாதண்ணை. உவங்கள் இப்பிடித்தான். சோனிகளை நம்ப ஏலாது. எவ்வளவு திறமாச் செய்தாலும் சரியில்லையெண்ணுவாங்கள். இவன் முதலாளி நிலத்திலை கொஞ்சம் மண்ணிருந்தாலும் நாக்காலை நக்கி எடுப்பான்.." இவ்வாறு சொல்லிவிட்டு மகான் போனார்.



www.padippakam.com



மகானின் குரல் தடித்துக் கரடு முரடாய் இருக்கிறது. அச்சுறுத்தும் வகையில் விழியுருட்டி மகான் கதைக்கிறார். அவர் மேல்வரிசைப் பற்களின் இடையே இடைவெளி இருந்தும் அதன் வழியாகப் பொய்களை உதிர்க்கவில்லை என நான் நம்பினேன். சிறு வயதில் நாக்கு வழிக்காததனால் குரல் தடித்து இருக்கிறதேயொழிய அந் நாக்குக் கரடுமுரடாய்க் கதைக்கும் என நான் நம்பவில்லை. அறியாப் பருவத்தில் பேய்களைப் பார்த்துப் பயந்ததாலோ என்னவோ, விழிகள் முழியாகப் பெரிதாக இருக்கிறதேயொழிய, மகான் விழியுருட்டிக் கதைக்கக் கூடியவரல்ல என நான் நம்பினேன். அவரைப்பற்றி எனக்கு நன்கு தெரியும்.

ஆனால் இதற்கு மிஞ்சி எப்படிக் கவனமாகச் செய்ய வேண்டும் என எனக்குத் தெரியவில்லை. எப்படிக் கவனமாகச் செய்யலாம் என எனக்கு ஒப்பிப்பார் யாருமில்லை. நான் ஓடுகிற ட்ராமிலிருந்தபோதும், அழகிய பெண்கள் வந்தபோதும், வண்ணமயமான கடைகள் தெரிந்த போதும், கவனஞ்சிதறாமல் இன்னும் எப்படி வேலையைத் திறம்படச் செய்யலாம் என்று யோசித்தேன்.

ஒருநாள், குளிர் பிய்த்தெடுக்கிற அந்த விடியற்புறத்திலும் முதலாளி வந்தார். எல்லா இடமும் 'கூவர்' பிடித்த பிறகு, மருந்து விட்டுச் சுடுதண்ணீரினால் 'மொப்' பண்ணிக் கொண்டிருந்தபோது முதலாளி வந்தார். தன் நித்திரையைத் தியாகம் செய்துவிட்டு. என் வேலையில் பிழை கண்டு ஏசுவதற்கு அவர் வருகிறார் என்பது நன்றாகத் தெரியும். ஒரு விதத்தில் சந்தோஷப்பட்டேன். பிழை இன்னதுதான் என்று தெரிந்தால் இனித் திருத்தமாகச் செய்யலாம். வந்தவர் அவசரம் அவசரமாக லாச்சியைத் திறந்து ஏதோ எடுத்தார். நான் வேலை செய்கிறதைப் பார்த்து "குட் குட்" என்றுவிட்டுப் போனார்

அவர் முகத்தில் திருப்தி நிலவியதாகக் கண்டேன். அவர் தொலைத்து விட்டேன் என்று நம்பி, இராமுழுக்க, விசனப்பட்டுக் கலங்கித் தேடிய பொருள் லாச்சிக்குள் இருக்கக் கண்டதால் முகத்தில் திருப்தி நிலவியது. அந்த நித்திரைத் தூக்கத்தில் விடியற்புறத்தில் என் குறை சொல்ல அவர் விரும்பவில்லை. நான் அப்படித்தான் நம்ப விரும்பினேன்.

இரண்டு கிழமை கழித்து மகான் ரெஸ்ரோறண்டிற்கு வந்தார். நான் கதிரை மேசைகளில் சிந்தியிருக்கிற கஞ்சல்களைத் தட்டிவிட்டு, அலுமாரிகளின் இடுக்குகளில் இருக்கிற தூசிகளைத் துடைத்துக் கொண்டிருந்தேன்.

"வேலை சரியில்லையெண்டு என்னைத்தான் முதலாளி ஏசுறான்" என்றார் மகான். மெல்லெனவே நான் சொன்னேன். "போனகிழமை நான் வேலை செய்யேக்கை முதலாளி வந்தவர். வேலை சரியில்லையெண்டு ஒண்டும் சொல்லேல்லை" என்றேன். மகான் சடக்கென தடுமாறுவது தெரிந்தது. முகம் கறுத்துப்போவதும் அப்பட்டமாகத் தெரிந்தது.

கதிரை சரியாக வைக்கப்பட்டிருக்கவில்லை. இதில் கையை ஊன்றிய மகான், கதிரை சரியத் தடுமாறினார். அவ்வளவுதான்! மகான் நின்ற இடம் வெளிச்சம் எத்துப்பட முடியாத இருட்டான பகுதி. விடிந்து வெளிச்சம் வராத நேரம். அதுதான் முகம் கறுத்துப் போனதாகத் தெரிந்தது. அவ்வளவேதான்!

"சரியண்ணை. இனிக் கவனமாகச் செய்யுங்கோ" என்றார்.

"எனக்கு இவ்வளவுதான் செய்யத் தெரியும். கஷ்டமெண்டால் இந்த வேலையை விடுவம்" என்று மட்டும் சொன்னேன்.

"நீங்கள் நல்லாய மாஸ்ரரா இருந்தனீங்கள். வேலை செய்யத் தெரியாதெண்டால் எப்படி இருக்கும்? நான் நாலைஞ்சு நாளிலையே 'மொப்' பண்ணப் பழகீட்டன் நீங்கள் நாலைஞ்சு கிழமையாச்சு. இன்னும் 'மொப்' பண்ணத் தெரியாதெண்டால்?.." என்றார்.



எனக்கு இப்போது கொஞ்சமாக என்றாலும் சீற்றம் வந்தது. என்னில் கொஞ்சம் கோபமும் தெரிந்தது. "சில பேர் சில வேலைக்கெண்டே பிறந்திருக்கினம்" என்றேன்.

அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது என்று தெரிந்தது. நான் சிறிதாக உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அதுதான் பிசகு.

"இப்படிக் கதைக்காதையுங்கோ அண்ணை" என்றார் மகான். வெளிச்சத்தில் திரும்பியபோது மகானின் சுட்டமுகம் தெரிந்தது. எனக்குப் பிறகு

www.padippakam.com



ஒன்றும் பேசத் தோன்றவில்லை. அப்பொழுதே மகான் "இரவைக்கு வீட்டை வாங்கோவன்" என்று அழைத்தார். எனக்கு அந்நேரத்தில் மறுக்கவும் தோன்றவில்லை. 'மகான் எவ்வளவு அருமையான மனுசன்!'

இராச்சாப்பாடான பிறகு, மகான் பாலைக் குடித்துப் பிறகு சொன்னார்: "அண்ணை, நீங்கள் வேலை சரியாச் செய்யிறீங்கள்தான். ஆனால் முதலாளி நெடுகப் போன் அடிச்சு வேலை சரியில்லையெண்டிறான். என்னவோ உங்களை அவனுக்குப் பிடிக்கேல்லை." பிறகு ஒரு மிடறு பால் அருந்தினார். அதே மிடறு கதைக்க இன்னும் வலிமையைக் கொடுத்தது. பால் போலவே அவரதும் வெள்ளைச் சொற்களாக இருந்தன.

"உங்களுக்கு எப்பிடி எண்சாத்திரத்திலை நம்பிக்கை இருக்கோ?" கேட்டு என் முகத்தைப் பார்த்தார். நான் ரீவியைப் பார்த்தேன்.

மகானே தொடர்ந்தார். "நான் அதை நல்லா நம்பிறன். என்ரை பெயரிலை 'எச்'சிற்குப் பதிலாக 'கே' போட்டாப் பிறகுதான் என்ரை வாழ்க்கையிலை முன்னேற்றம் வந்தது. உங்கன்ரை பெயரை எப்பிடி மாத்தலாம் எண்டு பாப்பம்."

எனக்கு உடம்பு தொக்கையாகிவிட்டது. நான் பாலை மறுத்து கறுத்தக் கோப்பியை குடித்தபடி இருந்தேன். ஒரு மிடறு அருந்த வாய் வைக்கமுன், கசக்கிற அந்த மிடறை விழுங்க முன், நான் ஒரு வரி பேசினேன். "எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை." என்கிறமாதிரி.

மகான் குன்றிப்போனார். என்னை நம்பவில்லை. "சாதகம், குறிப்பு ஒன்றிலையும் நம்பிக்கை இல்லையோ?" கேட்டார்.

"இல்லை" என்று மேம்போக்காகக் கூறினேன். இவ்வாறு சொன்னதையிட்டு நான் பயந்தேன். மகான் முகம் கறுத்துப் போனது. பாத்திரங்கள் உருள்கிற சப்தங்கள் நின்று, கமலா அத்தையின் மகளும் குசினிக்குள்ளிருந்து எங்கள் கதைக்குக் காது கொடுத்தார்.

"அதிமேதாவிகள்தான் இப்பிடிக் கதைப்பினம்" என்றார் மகான்.

"அப்படியா?" என்று நான் ஆச்சரியப்பட்டேன். 'அவுஸ்வைஸை'க் (அடையாள அட்டை) கேட்டார். கொடுத்தேன். புரட்டிப் பார்த்து விட்டுத் திருப்பித் தந்தார். "ஏன் உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாதோ?" எனக் கேட்டார்.

"நான் தமிழன்" என்று மட்டும் சொன்னேன்.

"நீங்கள் இப்பிடித் தமிழிலை கையெழுத்து வைச்சால் உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாதெண்டு டொச்சுக்காரர் மதிக்கமாட்டினம்" என்றார்.

"ஏன் டொச்சுக்காரர் இங்கிலீசிலையோ கையெழுத்து வைக்கினம்?"

"அது இங்கிலிஷ் எழுத்துத்தானே?"

"இங்கிலிஷ் வேறை; டொச் வேறை" என்றேன்.

இம்முறை மகானின் பார்வையில் பயம் தெரிந்தது. கொஞ்சம் யோசிக்கிறார் போலப் பார்த்தார்.

கோப்பி முடிந்து விட்டிருந்தது. எழும்பி நடக்க முடியுமாக உடம்பு இளகி இருந்தது. விடிய வேலை இருப்பதாக நினைவும் வந்தது. புறப்பட்டேன். "போட்டு வாறன்."

"ஓமண்ணை..." என்று குசினிக்குள்ளிருந்தும் மெல்லிய குரல் வந்தது. எப்போதும் அதுதான். கமலா அத்தையின் மகளை வந்தபோது காண்பதும், பிறகு அவர் மறைவதும், புறப்படும் போது "ஓமண்ணை" என்று குரல் கேட்பதுமாக இருக்கின்றது. சாப்பாடோ சுட்டபடியும், ருசித்துப்போயும் இருக்கிறது.



*****

மரங்கள் யாவும் இலைகளை இழந்திருந்தன. இனி அடுத்த வசந்தம் வரும்வரை காத்திருக்க வேண்டியதுதான். இலைகளை இழந்த மரங்கள், மேகங்களைக் கூட்டி அப்புறப்படுத்த, விளக்குமாறாக நின்றன. பிறகுதான் சூரியன் மெதுவாகத் தயங்கி, முகிற் புகாரினூடாக எட்டிப் பார்க்க முயலும். நான் சூரியனை முழுமையாக இங்குதான் கண்டேன். திரண்டெழுந்த பனிப்புகார்களின் இடையே அதன் வட்டவடிவமான வெள்ளி விளிம்புகளுடன் சூரியனை கண்ணில் எந்தக் கூச்சமுமின்றிக் கண்டேன்.

www.padippakam.com



எனினும் என் மனதில் சிறிது குழப்பம்தான் எஞ்சுகிறது. என்மேல் துயர் படிந்திருக்கிறது. நகரம் முழுவதும், வீதிகள் வரையும், புல்வெளிகள் யாவும், சிறுமரம் செடி, கொடிகள் மேலும், கூரைகளிலும், காரின் மேற்கூரைத் தகட்டிலும், சுண்ணாம்பு பூசியது போல பனித்துகள்கள் படிந்திருக்கக் கண்டேன். அவ்வாறே நானும் ஆகினேன். ஒன்றும் பேசாமால் மொட்டை மரமாக, பனிக்காலத்து மரமாக நானும் நிற்க விரும்பினேன்.

நான் மென்மேலும் சஞ்சலப்படுவதற்கான ஏதுக்கள் என் வாழ்வில் நிகழ்ந்தன. நான் வார்த்தைகளை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்பதில் உன்னிப்பாகவும் கவனமாகவும் இருந்தேன். நான் கவனமாக இருப்பதற்குச் சாத்தியம் இல்லாமற்கூட சில கருமங்கள் நடந்தேறின.

மகான் அந்த ரெஸ்ரோறண்டின் சுவர்க் கண்ணாடிகளையும், கண்ணாடிக் கதவுகளையும், லைற்சேட்டுக்களையும் மாதத்திற்கு இரண்டு தடவை சுத்தமாகக் கழுவித் துடைக்கச் சொன்னார். அதற்கு மேலதிகமாக 40 மார்க் என்றார்.

அதற்கென்று மூன்று மணித்தியாலம் போனது. சிறு ஏணி வைத்து ஏறிப் பளிச்சென்று துடைத்தேன். எனக்கே ரெஸ்ரோறண்ட் இன்னொரு அழகாக இருந்தது. வெளியில் ஏணி வைத்து ஏறித் துடைத்தபோது விறைத்துப் போய்விட்டேன். என் கைச்செலவுக்கு, நான் எழுதும் கடிதங்களுக்கு அனுப்பும் கதைகளுக்கு முத்திரை ஒட்டப்போதுமான அருமையான காசு!

ஆனால் அது வழங்கப்படவில்லை.

“ஏன்” என்று மகானிடம் கேட்டேன்.

“உங்கன்ரை வேலை சரியில்லை. கண்ணாடிகள் சரியாத் துடைபடேல்லை. அதுதான் தரேல்லைப் போலை...” என்று சாதாரணமாகச் சொன்னார்.

இம்முறை நான் கோபப்படுவதில் தேவை இருந்தது. “முதலாளியோடை நான் ஒருக்காக் கதைச்சுப் பாக்கிறன்” என்றேன்.

“வேண்டாமண்ணை. கதைக்காதையுங்கோ. உங்களுக்கு டொச் தெரியாது. அவனுக்கு இங்கிலிஷ் தெரியாது. எல்லாத்தையும் குழப்பிப் போடுவியள். மற்ற தண்ணை இவங்கள் சரியான தொப்பி பிரட்டிகள். இவங்களை நம்ப ஏலாது. அடுத்த முறை நான் கேட்டு வாங்கித்தாறன்.” என்றார். மகானின் முகத்தை இப் போது நான் அதிகம் கூர்ந்து கவனித்தேன்.

மகானின் குரல் தடித்துக் கரடுமுரடாய் இருக்கிறது. கண்கள் ஒளி வீசாது, உண்மைகள் அற்று, சந்தேகச் சாயல் படிகிறவைகளாக அவ்விழிகள் அக்கம் பக்கம் பார்த்துப் பேசுகிறவைகளாக இருக்கின்றன. அவரது மேல் வரிசைப் பற்களின் இடையே இடைவெளி இருந்தும் அதன் வழி பொய்களை உதிர்ப்பவராக அவரை நான் நம்பவில்லை. அவர் கைகள் கறுத்தப்போய் இருந்தன. கைகளில் கறைகள் இருந்தன. அவர் கண்ணின் வெள்ளை மணியில் கறுப்புப் புள்ளி இருக்க நான் கண்டேன். அது ஊரின் பீநாறி மரத்தடியோ, ஈச்சம்முள்ளோ செய்த கொடூரம்.

என்னால் இப்போது ஒன்றையும் ஊகிக்க முடியவில்லை.

வேண்டாம் ஒன்றையும் ஊகிப்பதும், அதன் வழி முடிவெடுப்பதும் பிழை. மகானின் முகத்தை நான் ஊன்றிக் கவனிக்கவும் விரும்பவில்லை. என் ஊகத்தில் தவறு நடக்கச் சந்தர்ப்பம் உண்டு. நான் இவ்வுலகில் வந்து 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டால் என்ன? என் மூளை பெரிதாக விருத்தி அடையவில்லை. என் அறிவும் அவ்வளவாக விசாலமடையவில்லை. என் ஊகத்தில் தவறு நிகழ்கிற சந்தர்ப்பம் உண்டு. அப்படி நிகழ்ந்தது. பின்வரும் சம்பவத்தைக் கேளுங்கள்.



ஒவ்வொரு நாளும் ரெஸ்ரோறண்டை ‘மொப்’ பண்ணிவிட்டு, ட்ராம் ஏற நான் வருகிற போதுகளில் அடிக்கடி ஒரு பாகிஸ்தானியைக் கண்டேன். ஒருவரின் உயரம், நிறம், தலைமயிர் இவைகளை வைத்து அவர் எந்த நாட்டவர் என்பதை என்னால் ஊகிக்க முடியும். அதன் படிக்கு அவன் ஒரு பாகிஸ்தானி. அனேகமாக ஒவ்வொரு நாளும் அவனை நான் சந்தித்தேன்.

என்னைக் கடந்து போகிறபோது சிரிப்பமோ, விடுவமோ என அவன் யோசிப்பது தெரிந்தது. இந்தக் குளிருக்குள் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை என்று நான் ஓடிப்போய் ட்ராமில் ஏறினேன்.

www.padippakam.com



"அலாம்" ஒருநாள் விடியற்புறத்தில் அடிக்காமல் விட்டது. பிந்தி விட்டது என்பதால் கக்கூஸ்கூட இருக்காமல் வெளிக்கிட்டு ரெஸ்றோறண்டிற்கு ஓடினேன். அன்றைக்குத் தான் ரெஸ்ரோறண்டில் முதன்முறையாக ரொய்லட்டில் நான் குண்டி கழுவினேன். பாத்ருமில் பளிச்சிட்ட கண்ணாடி அன்று என் முகத்தை விகாரமாகக் காட்டவில்லை என்று நான் நம்பினேன். அன்று ஆச்சரியப்படும்படியாக, நான் வழமையாகச் சந்திக்கிற பாகிஸ்தானி நான் சுத்தம் செய்கிற ரெஸ்ரோறண்டிற்குள் நுழைந்தான்.

"நீங்கள் இலங்கையோ?" என்று அவன் சுத்தத் தமிழில் கேட்டான். எனக்கு மிகுந்த ஆச்சரியம். "ஓம்..." என்று பிறகு, "நீங்கள்..?" என்று இழுத்தேன்.

"நானும் இலங்கைதான்... யாழ்ப்பாணம்" என்றான். என்னில் அசடு வழிகிறமாதிரி இருந்தது. நான் சொன்னேன், "நான் உங்களை ஒரு பாகிஸ்தானியெண்டு இவ்வளவு நாளும் நினைச்சன்."

"நீங்கள் என்னைப் பாத்துச் சிரிக்காமல் போகேக்கையே நான் வேறை நாட்டவன் எண்டு நீங்கள் நினைக்கிறது விளங்கிட்டுது. எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறது" என்று சிரித்தான். அவனது சிரிப்பில் அழகு இருந்தது; கள்ளம் இல்லை.

நான் ஒவ்வொரு நாளும் மேலும் அரைமணித்தியாலம் பிந்தி வந்து அவனுடன் கதைப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். பாத்ரும் கண்ணாடியும் என் முகத்தை விகாரமாகக் காட்டுவதாயில்லை. அவன் பற்றிய தகவல்களை நான் மேலும் சேகரித்துக் கொண்டேன்.

பெயர் ஞானி, வந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் அம்மாவிடம் போகவில்லை. அம்மாதான் அவனுக்குத் தெய்வம். பல நாடுகளில், பல நகரங்களில் உலைந்து திரிந்திருந்தான். 'பவுடர்' அடிக்கிற பழக்கம் இருந்தது. 'பவுடர்' வியாபாரம் செய்தான். அதன் பலனை 4 வருடங்கள் சிறையில் கழித்தான். ஜேர்மன்காரியை மணம்முடித்து பிள்ளையும் இருந்தது. அவள் சரியில்லை. அவளை விட்டு இப்போ மாதாமாதம் பணம் கட்டுகிறான். இப்போது இன்னொரு ஜேர்மன்காரியுடன் சீவியம். அருமையான பெட்டை அவள். இத்தாலியச் சமையலில் கைதேர்ந்திருக்கிறான். இந்த ரெஸ்ரோறண்டின் பிரதான சமையல்காரன். முதலாளி நல்ல சம்பளம் கொடுக்கிறார்.

"செவ்(f) அருமையான மனிசன். நல்ல சம்பளம். வலு ஒழுங்கு. நான் வேறை ரெஸ்ரோறண்டிலை வேலை செய்தனான். இப்பிடி இல்லை" என்று இறுதியாகச் சொன்னான்.

"அண்ணை நீங்கள் இந்த வேலை செய்யாதையுங்கோ. நீங்கள் செய்யிறதைப் பாக்கப் பாவமா இருக்கு. உங்களுக்கு நான் வேறையொரு வேலை எடுத்துத் தாறன்" என்றான் ஞானி.

அருமையான யாழ்ப்பாணத் தமிழில் ஊரில் கேட்குமாப் போல கதைத்தான் ஞானி. இவனையா நான் பாகிஸ்தானி என்று ஊகித்தேன? எனக்கு அது கூச்சமாக இருந்தது.



சுசி எழுதியிருந்தாள், "நீங்கள் ஒருத்தரையும் நம்பாதையுங்கோ. எல்லாரையும் உடனை நம்பிவிடுவீர்கள். உங்களுக்கு வந்த கஷ்டம் முழுவதற்கும் அதுதானே காரணம்." அம்மாவும் அதையொட்டியே தொடர்ந்தார். "ராசா நம்ப நட நம்பி நட வாதை. இனியாவது கவனமா இரப்பன். நான் உன்னையிட்டு வேண்டாத தெய்வ மில்லை." எனது அறையில் இருக்கிற ராஜனும் அதையே ஒருநாள் சொன்னான். "அண்ணை நீங்கள் எல்லாரையும் உடனை நம்பிறியள். என்ரை உண்மையான பெயரை உங்களுக்குக்கூட நான் சொல்லேல்லை..."

இவ்வெச்சரிக்கைகளுக்கும் அப்பால்தான் நான் ஒருமுறை மகானுக்குக் கூறினேன். "நான் மனிசரை நம்பிறன்."

உடனே மகான் மறுத்துச் சொன்னார். "நான் மனிசரை ஒருக்காலும் நம்பமாட்டன். அதுவும் வெளிநாட்டுக்கு வந்தவங்களை நான் கடைசி வந்தாலும் நம்பமாட்டன். கடவுளை மாத்திரம்தான் நம்புவன்."

கடவுளை நம்புபவர்கள் பாவத்திற்கு அஞ்சுவார்கள். கடவுளை நம்புபவர்கள் மனிதரை நேசிப்பார்கள். அவர்கள் மனச்சாட்சிக்கு அஞ்சுவார்கள். மேலே ஒருவர் பார்த்து நிற்கிறார் எனும் உணர்வே அவர்களைப் பாவம் செய்ய விடாது. கூப்பிய கைகோபுரம். கும்பிடும்

www.padippakam.com



நெஞ்சு ஆலயம்.

"கடவுளை நம்பாத நாட்களிலைதான் நான் பாவம் செய்தனான். பவுடர் வித்தது அந்தக்காலம்தான். இப்ப அப்பிடியில்லை. இப்ப எனக்குக் கும்பிடவேணும் போலை இருக்கு. ஓடிப்போய் அம்மாவின்ரை காலிலை விழுந்து கும்பிட வேணும் போலை இருக்கு. அம்மாதான் கடவுள்" ஞானி இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறபோது நான் கக்கூஸ் பேசினையும், மூத்திர பேசினையும் கழுவிக் கொண்டிருந்தன். பாத் ரூம் வாசலில் ஞானி நின்று சொன்னான்:

"உங்கன்ரை அம்மா, மனிசி, பிள்ளைகள் எப்பிடி இருக்கினம் அண்ணை? சுகமா இருக்கினமே? நீங்கள் எடுக்கிற 600 மார்க் என்னத்தைக் காணும்? நான் கொஞ்சக் காசு தாறன். அனுப்பி விடுங்கோவன். பிறகு கொஞ்சம் கொஞ்சமா எனக்குத் தாங்கோ. வேறை என்ன மாதிரி நான் உதவலாம்? எது எண்டாலும் என்னட்டைக் கேளுங்கோ."

ஞானி சொன்ன பிறகான வார்த்தைகளில் நான் அக்கறைப்படவில்லை. காற்றில் கரைந்த வார்த்தைகள் அவை. ஒரு வார்த்தை - '600 மார்க் என்னத்தைக் காணும்?"

"600 மார்க்கோ? எனக்கு 300 மார்க்தான் தாறது" என்று சொல்லவேண்டிய தேவை வந்தது.

"உங்களுக்கு மகான்தானே காசு தாறவர்? போனமாசமும் மகானிட்டை 'செவ்' 600 மார்க் குடுக்கேக்கை நான் பக்கத்திலை நிண்டனான். பிறகு கண்ணாடி துடைச்சதுக்கெண்டு 40 மார்க்கும் வாங்கினவர்." உயரமாக இருந்த ஞானி இதனைச் சொன்னான்.

"எனக்கு 300 மார்க்தான் மகான் தாறவர்" என்றேன். ஞானி ஆச்சரியப்படவில்லை. அப்படியாகும் என்று ஊகித்தார் போல. "நான் மகானிட்டை ஒருக்காக் கதைக்கிறன்."

"வேண்டாம் நான் கதைப்பன்" ஞானியால் சும்மா இருக்க முடியவில்லை. மூடுண்ட, வெக்கையான அடுப்புக்குள் 'பிற்சா' வெந்துகொண்டிருப்பதாக ஞானியின் மனமும் வெந்தது.

மகானுடன் ஞானி கதைத்து விட்டான். மகான் இரண்டொரு நாளில் எதிர்ப்பட்ட போது தான் கதைத்து விட்டதாக ஞானி சொன்னான். சொன்னபோது, ட்ராமின் 'தடக் தடக்' என்றொலி கேட்டது.

"தான் கிழமையிலை நாலுநாள் வேலை செய்யிறனெண்டு எனக்குக் காதுகுத்தப் பாக்கிறார். நீர் வேலை செய்யிறதை நான் ஒருநாளும் காணேல்லை எண்டு நான் சொல்லீட்டன்." ஞானி வெப்பியாரத்துடன் பேசினான்.

மகான் என்னைச் சந்தித்தபோது "நீங்கள் உங்களின்ரை வேலையைச் செய் யுங்கோ. மற்ற ஆக்களோடை தேவையில்லாத கதை கதையாதையுங்கோ உவங்கள் பொறாமை பிடிச்சவங்கள். தேவையில்லாமல் கொளுவி விடுவாங்கள்." என்று சொன்னார். அன்றிரா மகானின் மனைவி தந்த சாப்பாட்டில் உறைப்பு அதிகம் இருந்ததாக உணர்ந்தேன். சின்னுட்டி வாய் கொண்ட அந்த அழகிய மகள் என் னுடன் அதிகம் கதைத்தாளில்லை. அன்று மாத்திரமே என்னை வெளியில் வழி அனுப்ப வந்த் மகான், "நீங்கள் உங்களின்ரை சம்பளத்தை ஒருத்தருக்கும் சொல் லாதையுங்கோ. மொப் பண்ணுறதக்கு 300 மார்க் தாறது பெரிய காசு. நீங்கள் சம்பளத்தைச் சொன்னால் நாங்கள் குறையக் காசுக்கு வேலை செய்யிறம் எண்டு மற்றாக்கள் போய் வேலை கேப்பாங்கள்" என்றார். குளிர் அதிகமென்று மகானை உள்ளே போகச்சொல்லி நான் புறப்பட்டேன். கட்டையான மகான் குனியச் சிரம மின்றித் தன் கதவு திறந்து உட்சென்றார்.



வீதிவழியெங்கும் செம்மஞ்சள் பழங்கள் எரிந்தும், ஒழுங்கை வழி வெள்ளி விளக்குகள் ஒளிர்ந்தும் தெரிந்தன. கம்பங்கள் தவிர்த்து வெளியழாவி இருள் பனியில் தன்னைக் கரைத்துப் பூசியிருந்தது.

சில நாட்கள்தான் ஆகியிருந்தன. மகான் எனக்குச் சொன்னார். "உங்களின்ரை வேலை சரியில்லையெண்டு முதலாளி வேறை ஒராளைப் போடப்போறாராம். நீங்கள் இந்த 30ஆம் திகதி மட்டும்தான் வேலை செய்யலாம்." இதைச் சொன்னபோது என் முகத்தை மகான் பார்த்தாரில்லை. ஆச்சரியப்படவோ அதிர்ச்சி

www.padippakam.com



யடையவோ நான் வலிந்து மறுத்தேன். "ம்.." என்று கேட்டு வைத்தேன். "உங்களுக்கு வேறை வேலை எங்கையும் நான் பாக்கிறன்" என்றார். கறுத்தக்கட்டையான காரில் புதைந்து அவர் ஓடிப்போனார்.

ரெஸ்ரோறண்டின் முன்னே காய்ந்து போயிருந்த பூமரங்களின் இடையில் இருந்த கஞ்சல்களை இன்னும் நான் பொறுக்கவில்லை. பொறுக்குவதற்காகக் குனிந்தபோது ஞானி தலைகீழாக வந்தான். நிமிர்ந்து, "மோர்கள்" சொல்லி விட்டு, ஞானியின் முகம் பார்ததேன். "இந்த முப்பதாம் திகதியோடை எனக்கு வேலை இல்லை."

"நல்லதண்ணை இந்த வேலையை விடுங்கோ. நான் 'செவ்'வோடை கதைக்கலாம். ஆனால் மகான் எடுத்துத் தந்த வேலை. நான் கதைக்கிறது சரியில்லை. மகான் உங்களின்ரை சொந்தக்காரர் என்றீங்கள். இதுக்குள்ள நானொண்டும் கதைக்க விரும்பேல்லை. அவர் உங்களை நல்லாச் சுரண்டுகிறார். உங்களுக்கு நான் கட்டாயம் வேறை ஒரு வேலை எடுத்துத் தாறன். நீங்கள் யோசிக்காதையுங்கோ" என்றான் ஞானி.

வேலை முடிந்து வெளிக்கிடுகிறபோது, ஞானி மிசினிலிருந்து பாலை நுரைக்க வைத்துக் கோப்பி போட்டுத் தந்தான். ருசித்தது.

ட்ராம் போகிற திசைக்கு எதிர்ப்பக்கம் பார்க்கிற சீற்றில் நான் இருந்தேன். எனக்கு சீற் அப்படி வாய்த்தது. நகரம் என்னுடன் ஓடி வரமாட்டேன் என்றது. எதிர்த்து, எதிர்த்து அது என்னை விட்டு நகர்ந்து சென்றது. இரு தண்டவாளங்களும் தம்முடன் தாம் சேர மறுத்து. ஆயினும் என்னைத் தொடர்ந்து வந்தன. நகரம் இப்போது களைத்துக் கறுத்துப்போய்க் கிடந்தது. உயரமான கட்டிடங்களில் சோகத்தின் சாயல் மழை மேகமாகப் படிந்து கிடந்தது.

30ஆம் திகதி வேலை முடித்து, திறப்பைக் கொண்டுபோய் மகானின் வீட்டில் கொடுத்தேன். மகான் இல்லை. மகானின் மனைவி கீழிறங்கி வெளிக்கதவுக்கு விரைந்து வந்து, "அவர் இல்லை. நீங்கள் திறப்பைத் தாங்கோ, குடுக்கிறன்" என்றார். பட்டுப்போகிற மரமாக அவர் நின்றார்.

திறப்பைக் கொடுத்து, நான் அப்பால் நடந்தேன்.

பிறகு வானம் குளிரைக் கக்கிக்கொண்டிருந்த மாலையில் மகான் என் முகாமிற்கு வந்து, "என்ன, அப்பிடியே திறப்பைக் குடுத்திட்டுப் போட்டீங்களாம். கோப்பியாவது குடிச்சிட்டுப் போயிருக்கலாமே" என்றார்.

குளிர் வீசுகிற தேசத்தில் கோப்பியை றோட்டில் நின்று குடிக்க முடியாது. நான் சொல்ல இவ்வளவும் இருந்தது. கசக்கிற கோப்பியை என் வாய் தொடாது என்பது அம்மாவிற்கு மாத்திரம் தெரியும். போக, கோப்பியைத் தருவாரும் அங்கில்லை. ஆயினும் நான் மனதுள் சிரித்து "நான் அவசரமாய் போக வேண்டியிருந்தது" என்றேன்.

'பேர்ஸைத் திறந்து "கடைசி மாதச்சம்பளம்" என்று தந்தார் மகான். கசங்கிய நோட்டுக்கள்.

"மற்றது முக்கியமண்ணை, இனி நீங்கள் வீட்டை வாறதெண்டால் எனக்குப் போன் பண்ணிப்போட்டு வாங்கோ என்றார்.

"நீங்கள் சொன்ன நாளிலைதான் நான் உங்களின்ரை வீட்டை வந்தனான்." என்றேன்.

"சரி, இனி அப்பிடிச் செய்யாதையுங்கோ" என்றார்.

அவர் வீட்டு வீதியில் இனி என் கால்கள் பயணிக்காது. அழகான, அன்பைப் பொழிந்து பரிமாறுகிற பெண் மகவை இனி நான் வருட மாட்டேன்.

*******

"வேலைக்கு ஆக்களிடம் சொல்லி வைச்சிருக்கிறன். இரண்டு மூண்டு கிழமை செல்லும். வின்ரரும்தானே?" ஞானி சொல்லியிருந்தான்.

காத்திருப்போம். அதற்கிடையில் சுசி நான் எழுதிய கதைகளை அனுப்பியிருந்தாள். எவ்வித விக்கினமும் இல்லாமல் அவை என்னிடம் வந்தடைந்தன. மழை தூறிக் கொண்டிருந்த பின்னேரத்தில் நான் போன் பண்ணப் போனேன். "கிடைத்தன." என்றொரு சொல் கூறவேண்டும். ரெலிபோன் கார்ட்டும் முடியும் தறுவாயிலிருந்தது. என் மகன் போன் எடுத்தான். சஞ்சயா, சஞ்சுவா? தெரியவில்லை.

"அம்மா, போனிலை அப்பா! உடனை ஓடியாங்கோ" என்று கத்தினான்.

"சுசி கதைகள் கிடைச்சுது."




"எப்ப கிடைச்சுது?"

இதற்கு நான் பதில் சொல்வதற்கிடையில் ரெலிபோன் தன் தகவலை அறுத்தது. பிறகு மெல்லிய கீச்சிட்ட சத்தம். எனக்குத் தெரியும். என் பதிலுக்காக அவள் ரெலிபோன் அருகே காத்து நிற்பாள். ஒரு 'பெனிக்' கையில் இல்லை. அவளை நான் ஏமாற்ற வேண்டிய நிலைக்கு ஆளானேன். இப்படித்தான் மெல்லிய ஏமாற்றம் தரும் தருணங்களை அடிக்கடி நான் அவளுக்கு அளித்தேன்.

முகாம் நோக்கித் திரும்பி வருகிறபோது கடும்துயர் என்னை ஆட்கொண்டது. "போனிலை அப்பா. உடனே ஓடியாங்கோ." மைந்தனின் குரல் என்னைப் பலமிழக்கச் செய்தது.

சரி, இனியாவது ஒரு வாய் அழுவமோ என்று யோசித்தேன். ❑

www.padippakam.com



மஹா

பார்த்திபன்



**முன்கதைச் சுருக்கம்**

ஜேர்மனியின் பெரிய வீதிகளில் ஒன்று.

எங்கு பார்த்தாலும் கார்கள்.. லொறிகள்.. பாரிய வாகனங்கள்.. நீளத்திற்கு வரிசையமைத்திருந்தன.

பொறுமையிழந்தவர்கள் காரிலிருந்து இறங்கித் தாராளமாகத் திட்டினார்கள். மற்றும் பலர் சிகரெட் பிடித்தார்கள். கொண்டுவந்திருந்தவர்கள் எடுத்துச் சாப்பிட்டுக் குடித்தார்கள். ஒருசிலர் புதினம் பார்க்க நடந்து போனார்கள்.

எல்லாக் கார்களுக்கும் முன்பாக பொலிஸ் வாகனங்கள், நீல வெளிச்சம் கக்கியபடி. தொடர்புக் கருவிகள் பரபரப்பாயிருந்தன.

முற்றிலும் ஆயுதபாணிகளாகவும், கவசமணிந்துமிருந்த பொலிசார் நிலைமையைத் தலைமையகத்திற்கு அறிவித்து அங்கிருந்து கட்டளைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கும் முன்னால் சுமார் நூறுக்கும் மேற்பட்ட குர்திஸ்காரர்கள் பாதையில் குறுக்குமறுக்குமாகத் தங்கள் வாகனங்களை நிறுத்தி வைத்துக் கொண்டு தங்கள் பாஷையில் முழங்கிக்கொண்டிருந்தார்கள். பாதையில் படுத்துமிருந்தார்கள். அவர்களில் சில ஜேர்மனியர்களும் கலந்திருந்தனர். அவர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் நின்ற மூன்று குர்திஸ்காரர்கள் ஒரு கையில் பெற்றோல் வாளியும், மறுகையில் லைற்றருமாக விறைத்திருந்தார்கள்.

மேலால் இரண்டு ஹெலிகள் வட்டமடித்துக்கொண்டிருந்தன.

நேரம் போனது.

நாள் போனது.

பின் -

தலைமையகக் கட்டளைக்கிணங்க சில பொலிஸ்காரர்கள் துப்பாக்கிகளை நீட்டிப்பிடித்தபடி அடியெடுத்து வைத்தார்கள்.

தங்களது எச்சரிக்கை மீறப்பட்டவுடன் முதலாவது குர்திஸ்காரன் தனக்கு மேல் பெற்றோல் ஊற்றி நெருப்பைப் பற்றவைத்தான்.

தீப்பிடித்தது.

பொலிஸ் பின்வாங்கியது.

"குர்திஸ்தான் வாழ்க!"

"துருக்கிய அரசை முறியடிப்போம்!"

"ஜேர்மனியப் பணமும், இராணுவ உதவிகளும் குர்திஸ் மக்களைக் கொலை செய்கின்றன."

கோஷங்கள் ஹெலியின் இரைச்சலையும் மீறிப் பலமாய் ஒலித்தன.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் முழுதாய் எரிந்து முடியும்வரை.

பொலிஸ்காரர்கள் வீடியோவில் படம் பிடித்தார்கள்.

மாரிகால மாலை. குளிர் கலந்த இருள். அவிழ்த்துப்போட்டு நின்ற மரங்கள் பனியில் சிலிர்த்துப் போயிருந்தன. பாதையையும், சிறிய செடிகளையும் வெண்பனி பக்குவமாய்ப் போர்த்தியிருந்தது. காற்று விறைத்திருந்தது.

வீடுகளிலும், தெருக்களிலும் வெளிச்சம் போட்டிருந்தார்கள். சனி பிற்பகுதிக்குரிய நெரிசலற்ற போக்குவரத்து. ஆங்காங்கே சிறுவர்கள் பனியை எறிந்தும், உருவங்கள் செய்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குதூகலித்து ஆரவாரித்தார்கள்.

குளிருக்கெதிராக அல்கஹோலை சிலர் நாட, இளஞ்சோடிகளோ இறுக அணைத்து, உதட்டோடு உதடு சேர்த்து வெப்பமானார்கள்.

'புள்ளி X' என்ற கொஞ்சமாய் பாழடைந்துபோன அந்த மண்டபத்தில் நிறையப் பேர் குழுமியிருந்தார்கள். அவர்களது தோற்றம் ஜேர்மனிய அடையாளங்களுக்கு முரணாயிருந்தது. தலையைக் கோணல்மாணலாக வெட்டியிருந்தார்கள். அதற்குப்

www.padippakam.com



பலவர்ணங்களும் பூசியிருந்தார்கள். எல்லோரும் கறுப்பு லோங்சும், ரீ சேட்டும் போட்டிருந்தார்கள். அவை கசங்கியும், பொருத்த இடங்களில் கிழிந்துமிருந்தன. தடித்த இராணுவச் சப்பாத்துகள் பழசாயிருந்தன. மூக்குத்தி, காதுக்குத்திகளும் தென்பட்டன. கட்டிடத்துச் சுவர்களைப் போலவே ரீ சேட்டுகளிலும் அரசியல் விமர்சனங்களைத் தடித்த மையினால் கிறுக்கியிருந்தார்கள். நாஸிகளுக்கெதிரான சின்னம் பரவலாகக் குத்தப்பட்டிருந்தது. Aயைச் சுற்றி வட்டம் போட்டிருந்தார்கள்.

ஒட்டோனொமன்களாகிய அவர்களின் வருடாந்தச் சந்திப்பு. முன்னைய வருடங்களைப் போலவே இன்றும் நிறைய நிகழ்ச்சிகள். கலந்துரையாடல்கள், வாக்கு வாதங்கள் பகலில் முடிந்து இப்போது ஆடல் பாடல்களை எதிர்பார்த்திருந்தார்கள்.

மேடை போன்ற இடத்தில் வாத்தியங்களைச் சிலர் சரிபார்க்க, ஒலிப் பெட்டிகள் பலமாகச் சத்தம் போட்டன.

பியர் போத்தல்கள் கிலுங்க, எங்கும் புகை மயம்.

பாதையில் போன ஒறிஜினல் ஜேர்மனியர்கள் இவர்களை விசித்திரமாகப் பார்த்து, அருவருத்துப் போனார்கள். கடும் கோபம் கொண்டவர்கள் நடுவிரலை நீட்டிக்காட்டித் திட்டினார்கள்.

▲▲▲

குற்றவியல் திணைக்களம்.

இரண்டு உயர் அதிகாரிகள் மட்டும் அந்த அறையிலிருந்து புகைத்துக் கொண்டிருந்தார்கள். முகங்கள் தீவிரமாயிருந்தன.

"அவர்களது நடவடிக்கைகள் மிகவும் மோசமாகிவிட்டன. பொறுத்திருப்பது ஆபத்தானது."

"எங்களுக்கு விளங்குகிறது. விளங்க வேண்டியவர்களுக்கும் விளங்க வேண்டுமே. பக்கம் பக்கமாக அறிக்கைகள் எழுதியனுப்பியாகிவிட்டது."

"தேர்தலை நினைத்துப் பயப்படுகிறார்கள் போலும். துணிவில்லாத அரசியல்வாதிகள்."

"இப்போது இப்படி இருப்பார்கள். நிலைமை மோசமானபின் எங்கள் மீதுதான் பாய்வார்கள்."

"எமது ஒப்பிறேசன் X சரிவருமா?"

"நம்பிக்கை இருக்கிறது. இம்முறை பி.என்.டி.யை அணுகியிருக்கின்றேன். அவர்களிடம் நிறையத் தகவல்கள் இருக்கின்றன. எப்படியும் வென்று தருவார்கள். அவர்கள் முடிவு எந்த நேரத்திலும் வரலாம். நாம் தயாராக இருக்க வேண்டும்."

அவர்கள் இருவரும் உயிராயிருந்த கணனியின் முன் காத்திருந்தார்கள்.



**முன்கதைச் சுருக்கம் (தொடர்ச்சி)**

இருள் சுத்தமாக நகரைப் பூசியிருந்தது. அவ்வப்போது வாகனங்கள் போய் வருவதைத் தவிர வேறு சத்தமில்லை. எறோற்றிக் படம் பார்க்காத வீடுகள் தூங்கிப் போயிருந்தன. ஏற்கனவே அது ஒதுக்குப்புறமான குடியிருப்புத்தான்.

தெருவின் முடிவிலிருந்த நான்குமாடிக் கட்டிடத்தின் முன் அந்த வான் சத்தமில்லாமல் நின்றது. மிக எச்சரிக்கையுடன் அதிலிருந்து இறங்கிய நால்வர் இருளுடன் கலந்தார்கள்.

உரிய திறப்புக்குப் பதிலாக வேறு கம்பிகள் முயற்சி செய்ததால் நான்கு மாடிக் கட்டிடத்தின் முன் வாசல் தாமதமாகவே திறந்தது. பேனா விளக்கு வெளிச்சம் படிகளில் ஏறியது. இரண்டாம் மாடியின் வலது பக்கக் கதவும் தாமதமாகவே சத்தமின்றித் திறந்து உடன் மூடியது.

உள்ளேயிருந்து சில பொருட்கள் உடைந்த சத்தமும் ஒருவனின் அலறலும் வெளியே கேட்கவில்லை.

எல்லாக் கதவுகளும் திரும்ப மூடி, வான் புறப்படும்போது, தற்செயலாக ஒரு வீட்டின் சன்னலால் எட்டிப் பார்த்த ஒருவர் வானைக் கவனித்தார்.

www.padippakam.com



இசைக் குழு முழங்கத் தொடங்கிவிட்டது.

எல்லாம் அடக்குமுறைக்கெதிரான பாடல்கள்தான். வரிக்கு வரி சூடு கிளம்பியது. தங்களுக்குப் பிடித்த வரிகள் வரும்போது கைதட்டி விசிலடித்தார்கள். தாங்களும் சேர்ந்து பாடினார்கள்.

ஒரு பகுதி ஓரளவுக்குச் சுமாராக ஆடியது. பியர் போத்தல்கள் தொடர்ந்து காலியாகிக் கொண்டிருந்தன. அந்த நேரத்திலும் இரண்டொருவர் தனித்து நின்று அரசியல் கதைத்தார்கள்.

சுவர்களில் ஜேர்மனிய அரசியல் தலைவர்களின் கேலிச் சித்திரங்களுக்குக் கீழ் தாறுமாறாகக் கிழித்து எழுதியிருந்தார்கள். தூசணங்களும் பரவாயில்லை.

சேகுவராவின் தொப்பி போட்ட படம் மட்டும் அழகாயிருந்தது.

இசைக்குழு பொப் மாலியின் பாட்டை முடித்து, தாங்கள் சுயமாக இயற்றிய 'அகதிகளைக் கொளுத்துபவர்கள் பாராளுன்றத்தில்...' என்ற பாடலை ஆரம்பித்தார்கள்.

கேட்டுக்கொண்டிருந்தவர்கள் உணர்ச்சிவசப்பட்டார்கள்.

▲▲▲

பி.என்.டி.யின் இரகசிய அறைகளில் ஒன்று.

அங்கிருந்த மூவரில் அரசியல்வாதியும் ஒருவர். மிகவும் கவனமாக வார்த்தைகளை அளந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"இது தேர்தல் வருடம். எதிர்க்கட்சிகள் உன்னிப்பாக இருக்கின்றன. சிறிய தகவல் கசிந்தாலும் உசாராகிவிடுவார்கள்."

"அவர்களுக்கும் இவர்கள் எதிரிகள் என்பதுதான் இங்கு முரண்நகை."

"இதுவரை எவ்வளவோ பெரிய வேலைகள் செய்திருக்கின்றோம். ஒன்று கூட வெளியாகவில்லை. இப்போது செய்யப்போவது மிக மிகச் சின்ன வேலை. ஒரு சிறு பிள்ளையின் விளையாட்டைப் போல."

"எதற்கும் எச்சரிக்கையாயிருப்பது நல்லது. பத்திரிகைகள்கூட எல்லா இடங்களிலும் உளவுக்கு ஆட்கள் வைத்திருக்கிறார்கள்."

"எங்களையே உளவா?" என்று சிரித்தார் பி.என்.டி. அதிகாரிகளில் ஒருவர்.

"இதில் மொத்தமாக எத்தனை பேர் சம்பந்தப்படுவார்கள்?"

"நாங்கள் மூவர், நீங்கள், உங்கள் நகர குற்றவியல் திணைக்கள அதிகாரிகள் இருவர், முக்கியமாக உள்நாட்டமைச்சர். இவ்வளவுதான்."

"அவரும் உங்கள் அரசியல் கட்சிதானே."

"அவருக்கு ஏற்கனவே விபரமாகத் தொலைநகல் அனுப்பிவிட்டோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் அவர் எம்முடன் தொடர்புகொள்வார்."

"அவருடைய பதிலைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்."

காத்திருந்தார்கள்.

**முன்கதைச் சுருக்கம் (தொடர்ச்சி)**

ஜேர்மனிய, நெதர்லாந்து எல்லை.

ஐரோப்பிய இணைவில் உத்தியோகபூர்வ எல்லைகள் காணாமல் போயிருந்தன. என்றாலும் சாதாரண உடையிலும், சாதாரண கார்களிலும் பொலிஸ்காரர்கள் ஆங்காங்கேயிருந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். கோடைகால விடுமுறைக்காலம். கார்களுக்கு மேலோ அல்லது பின்னாலோ சைக்கிள்கள் கட்டப்பட்டிருந்தன. படகுகளையும் இழுத்துக்கொண்டு போனார்கள். இத்தனைநாள் உழைத்தது ஊர் சுற்றிச் சந்தோசிக்கவே என்பதாக அவர்கள்.

வாகனங்களின் முன்பக்கத்தால் வந்த வெளிச்சக் கோடுகளும், பின் பக்கத்தால் தெரிந்த சிவப்புப் புள்ளிகளுமே அந்த நேரத்து இயக்கமாயிருந்தன.

நடுநிசிக்குப் பின்னதாக.



www.padippakam.com





நெதர்லாந்து எல்லைப் பொலிசாருக்கு ஜேர்மனியப் பொலிசாரிடமிருந்து தகவல் வந்தது.
அவர்கள் காத்திருந்து, அந்த வான் வந்தபோது, குறுக்கே வந்து மறித்தார்கள். ஆயுதம் தரித்திருந்த பொலிசார் தடதடவென வானைச் சூழ்ந்தார்கள்.
சாரதி ஆசனத்திலும், பக்கத்திலும் ஜேர்மனியர்கள்.
பொலிசார் மிகக் கவனமாக வானின் பின் கதவைத் திறந்தபோது - பயந்த விழிகளுடன் அல்ஜீரியர்கள்.

உள்நாட்டமைச்சர் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கையில் தொலைநகல் இருந்தது.

"நீங்கள் எழுதிய சம்பவங்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றனவா?"

"நிச்சயமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவர்களின் கடந்தகால நடவடிக்கைகளை ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். அண்மைக் கால நடவடிக்கைகளையும் சேகரித்திருக்கின்றோம். குர்திஸ்காரர்களின் வீதித் தடை நடவடிக்கைகளில் இவர்கள் பங்குபற்றியது எம்மிடம் வீடியோ நாடாவாக இருக்கிறது. தம்மில் ஒருவனைத் தாக்கிய புதிய நாஸிக்காரனின் வீட்டுக்குள் புகுந்து அவனது உடைமைகளைச் சேதமாக்கியதுடன், அவனையும் குற்றுயிராக்கிவிட்டு இவர்கள் தப்பிச் சென்றபோது இவர்கள் வானைப் பக்கத்து வீட்டுக்காரர் அவதானித்திருக்கிறார். தேவையென்றால் இன்னும் சாட்சியங்களை நாங்கள் உருவாக்கலாம். ஏனெனில் அந்தக் கட்டிடத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் புதிய நாஸிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். கடைசியாக நாடுகடத்தப்பட இருந்த அல்ஜீரியக் குடும்பங்களைச் சட்டவிரோதமாக நெதர்லாந்துக்குக் கடத்தியமைக்கு நெதர்லாந்துப் பொலிசார் விசாரணைகளும் எமக்கு வந்து சேர்ந்திருக்கின்றன."

"இவர்கள் எந்தளவுக்கு ஆபத்தானவர்கள் என்று இதுவரையான தகவல்கள் சொல்லுகின்றன?"

"அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என்பது தெளிவு. வெளிநாட்டு இடதுசாரிப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு உண்டு. இங்குள்ள வெளிநாட்டு அரசியற் குழுக்களுக்கும் பின்னணியில் இருக்கிறார்கள். இதுவரை சாதாரண ஆயுதங்கள் வைத்திருப்பதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விரைவில் பயங்கர ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்."

"இப்போது நீங்கள் உத்தேசித்துள்ள ஒப்பிரேசன் X இனால் எதிர்பார்க்கப் படுகின்ற விளைவுகள் நிச்சயமானவை என்று நம்புகின்றீர்களா?"

"ஆம். அவர்கள் கூடுவதற்கும், பொதுசன வேலைகளில் ஈடுபடுவதற்கும் அந்த மண்டபம்தான் உதவுகிறது. அதை அவர்களுக்கு இல்லாமல் ஆக்கிவிடலாம். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்ற சாதாரண மக்களுக்கு அவர்கள் மேல் வெறுப்பை உண்டாக்கிவிடலாம். சனநாயக நடவடிக்கையில் ஈடுபடாதவகையில் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்தால் பொலிசார் அவர்கள் மீது எப்போது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்க சுலபமாயிருக்கும். முக்கியமாக எமது நடவடிக்கையினால் அவர்களில் தீவிரமானவர்களை கைது செய்து சிறையிலடைத்தால் மற்றவர்கள் சிதறிவிடுவார்கள்."

"கவனம் தேவை. ஏற்கனவே பேர்லினில் நடந்த ஊர்வலத்தில் பொலிசாரே ஊர்வலக்காரர்கள் போல கலந்து கலகத்தைத் தொடக்கி வைத்ததைப் பத்திரிகைகள் மோப்பம் பிடித்துவிட்டன."

"விட்ட பிழைகளிலிருந்து கற்றுக்கொண்டு கவனமாயிருக்கின்றோம்."

"உங்கள் நடவடிக்கைக்கு எனது சம்மதம்."

▲▲▲

புள்ளி X கட்டிடத்திற்கு முன்னாலுள்ள கத்தோலிக்க தேவாலயத்திற்கு மிகவும் சாமர்த்தியமாக ஒளிந்து ஒளிந்து ஒருவன் வந்தான். தான் கொண்டுவந்த பொருட்களை எடுத்து முயற்சியில் இறங்கினான். பிறகு வந்தவழியே மறைந்தான்.

www.padippakam.com



சிறிது நேரத்தின் பின் -

பலத்த சத்தம். தேவாலயம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

புள்ளி Xஇல் குழுமியிருந்தவர்கள் பரபரப்புடன் வெளியே ஓடிவந்தார்கள். நெருப்பைப் பார்த்தார்கள். சிலர் தேவாலயத்தை நோக்கி ஓடினார்கள்.

அயல்வீடுகள் விழித்துக்கொண்டன. தூக்கக் கலக்கத்துடன் சன்னல்களைத் திறந்தார்கள். தேவாலயத்திற்கும், புள்ளி Xக்குமாக ஓட்டொனொமன்கள் ஓடித் திரிவதைப் பார்த்தார்கள். பொலிசுக்குப் போன் செய்தார்கள்.

தயாராக இருந்த பொலிசார் வந்து புள்ளி Xஐ சுற்றிவளைத்தார்கள். வெளியே நின்றவர்களையும் உள்ளே இழுத்துவந்து அடைத்தார்கள். அவர்கள் எல்லோருடைய விபரங்களும் பொலிஸ் கணனியில் பதியப்பட்டன. ஏற்கனவே திட்டமிட்டபடி குறித்த ஆறு பேருக்கு விலங்குமாட்டி, பொலிஸ் வானில் ஏற்றினார்கள்.

...இன்றிரவு நூறன்பேக் சங்ற் ஜோசப் தேவாலயத்திற்குத் தீவைக்கப்பட்டது. இத்தேவாலயத்திற்கு முன்பாக உள்ள புள்ளி X என்ற மண்டபத்தில் கூடியிருந்த இடதுசாரித் தீவிரவாதிகளே இந்நெருப்பை வைத்ததாக அயல்வீடுகளில் வசித்தவர்களின் சாட்சியங்கள் மூலம் தெரியவந்துள்ளது. தீவைப்புக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. கருக்கலைப்பைத் தடுக்கவேண்டுமென்ற பாப்பரசரின் அண்மைய வேண்டுகோளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே தீவைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஆறு பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். புள்ளி X காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக நகர முதல்வர் அறிவித்துள்ளார். இம்மண்டபத்தை மூடிவிடும்படி ஏற்கனவே இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தது தெரிந்ததே. இக்குழுவினர் பொலிசாரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டுமென அரச வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் கிளின்டனின் பாலியல்...

**பின்கதைச் சுருக்கம்**

சில மாதங்களின் பின் -

புகையிரதங்கள் கடைசியாக நிறுத்திவைக்கப்படும் தரிப்பிடம்.

இறுதிப் புகையிரதத்தையும் நிறுத்திவிட்டுப்போன சிலமணி நேரங்களின் பின், அவை தீப்பிடித்து எரியத் தொடங்கின.

பொலிஸ், தீயணைப்புப்படை எல்லாம் விரைந்து வந்தன.

அணுக் கழிவுகளை ஏற்றிவருவதற்கான எமது எதிர்ப்பு. இந்த வடிவில் தொடரும் என்ற உரிமை கோரல் பொலிசுக்குக் கிடைத்தது.



**இன்னொரு குட்டிக்கதை!**

ஜேர்மனிக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்து பல ஆண்டுகள் போயிருந்தன.

அவர்கள் -

திரையிசை நடனம் ஆடினார்கள்.

பெண்பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு முடிந்ததும் இலங்கை அல்லது இந்தியாவில்விட்டு சுத்தமாக வளர்ப் பதைப் பற்றி யோசித்தார்கள்.

செற்றியிலிருந்து ஜொனிவோக்கர் அடித்தபடி சோவியத் யூனியனின் சரிவை ஆராய்ந்தார்கள்.

நாஸிகள் துரத்தினர்.

www.padippakam.com



# எல்லைகள்

நாங்கள் அந்த வீட்டில் கொண்டு வந்து விடப்பட்டோம் என்பதைவிட ஒரு வீட்டுக்குள் அடைக்கப்பட்டோம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

வெள்ளைச் சேறாகப் புதையும் பனியில், காதுகளில் ஊசியாய் குத்திக் கொல்லும் கடுங்குளிரில் நாம் அந்த ராட்சத பஸ் வண்டியிலிருந்து இறக்கப்பட்டோம். அந்த பஸ்ஸின் பின்பக்கம் அடைக்கப்பட்டு எம்மை மறைத்து வைத்து எல்லையை கடந்து மூன்று நாள் பிரயாணத்தின் பின்னர் இந்த வீட்டுக்குள் எங்கள் ஐந்துபேரையும் அடைத்தே விட்டான்.

இடிந்துவிழும் நிலையிலிருக்கும் இந்தப் பேய்வீடும் நாறிக்கொண்டிருக்கும் அறைகளும், ஐஸ் பிடித்து ஈரமான சுவர்களுமாய் இருக்கும் அந்த மரவீடுதான் எமது சிறை.

நாம் இப்போது போலந்துள் நிற்கிறோம்; இல்லை சிறை வைக்கப்பட்டுள்ளோம். இது வார்ஸோ நகருக்கு வெளியே உள்ள ஒரு சிறு பகுதியாம்.

அடுத்த நாடு ஜேர்மனிதான்.

ஆறுமாதமாய்த் தொடர்ந்த எனது வெளிநாட்டுப் பிரயாணத்தில் இது இறுதிக்கட்டம் என்றுதான் நான் எதிர்பார்த்தேன்.

இலங்கையில் காசுகட்டி, உக்ரேன் வரை கொண்டு வந்து விட்ட எமது பயண முகவர், எல்லாவற்றையும் சுத்திக்கொண்டு ஓடிவிட்டான்.

மொஸ்கோவில் அவனது ரஷ்யக் காதலியுடன் ஏதாவது ஆடம்பர ஹோட்டல்களில் உல்லாசமாக இருப்பான், எங்கள் பணத்தில்.

நாங்கள் இங்கே நாய்படாப்பாடு.

அவனது ஆசை வார்த்தைகளும், ஆடம்பரமான வாழ்க்கையும், எனக்கு எரிச்சலாக இருக்கிறது. மன்னிக்கப்பட முடியாத பிறப்புகள்.

பணம் பல லட்சங்கள் செலவாகிவிட்டது. பிரயாணப்பாதை முழுவதும் - விமான நிலையங்களிலும், நாட்டு எல்லைகளிலும் எமக்கு மிகவும் அருவருக்கத்தக்க கெடுபிடிகள். நாங்கள் மனிதப்பிறவிகளே இல்லை என்று எழுதப்பட்டாகிவிட்டது.

www.padippakam.com



உயிர் துச்சமாகிப்போய்விட்ட பிரயாணம் இது.

எதிர்காலக் கனவுகள் எல்லாம் அழிந்து தொங்குகிறது.

கொள்ளையர்கள், காடையர்கள், இனவெறியர்கள் என்று பலர் எம்மை பயமுறுத்தியும் தாக்கியும் விட்டார்கள்.

எமக்கு இருந்த எல்லா தைரியங்களும் இழந்துவிட்டதான உணர்வுதான் மிச்சமுள்ளது.

உக்கிரேனில் நாம் கைவிடப்பட்டபோது எம்மோடு கூட இருந்தவர்கள் இருபத்துமூன்று பேர். அதில் ஐந்து பெண்களும், ஆறு குழந்தைகளும்.

பொலிஸ் கெடிபிடிகளும், இலங்கையரைக் கைது செய்து நாடு கடத்தும் உத்தரவும் நாம் வெளியே ஒரு முகவரைத் தேடும் நிலையையும் தடுத்து விட்டது.

ஹொலண்டில் இருக்கிற நண்பனுக்கு அதிகாலையில் தொடர்புகொண்டு இக்கட்டான இந்த நிலையை எடுத்துரைத்தேன்.

அவன் யார் யாரையே தொலைபேசி மூலமாக பிடித்து..

மறுநாள் அமீர் என்பவன் எங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

வெளிநாடுகளிலுள்ள எமது உறவினர்கள் ஊடாக பணம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்றும், கிடைத்த ஏழு நாட்களுக்குள் ஜேர்மனிக்குள் எல்லோரையும் அனுப்பி வைப்பதாகச் சொன்னான்.

அமீர் மிகவும் நல்லவன் என்றும் நேர்மையாய்ச் சொன்னதை செய்வான் என்றும் உக்கிரேனில் எம்மோடு இருந்தவர்கள் பலர் பேசிக் கொண்டார்கள்.

நம்பிக்கைக்கு நமஸ்தே சொல்லி நானும் அவனது கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டேன்.

அமெரிக்க டொலர்களை ஆரிடம் கேட்பது.

நண்பர்கள், மாமா, மச்சான்மார்?

நிலைமையைச் சொல்லி எல்லோரையும் கேட்டுப் பார்க்கலாம்.

இயலாமையும், வேதனையும், எரிச்சலும் அழுகையாய் வந்தது.

ஒன்றும் சரிவராவிட்டால் திரும்பிப் போய்விடலாம்.

எனது தேசத்தின் பொங்கி எழும் கடல் அலையையும், அதன் கரையின் சுடுமணலையும் ஏன் நான் விட்டு வந்தேன்.

ஆமியோ, இயக்கமோ எதற்குள்ளும் அங்கேயே இருந்திருக்கலாம்.

இந்தப் பிரயாணம் என்னை முழுமையாய் கொன்றுவிட்டது.

நான் ஒன்றும் கோழையாய் இங்கு ஓடிவரவில்லைத்தானே என்று சமாதானப்பட்டுக் கொண்டேன்.

என் அண்ணனைக் கொன்றவனை அல்லது கொண்டு போனவனைத் தேடினேன்.

எவரும் நேர்மையாய் எதுவும் சொல்லவில்லை.

'காணாமற் போனவர்கள்' பட்டியலில் பெயரை இட்டு விட்டு அவர்கள் எல்லாவற்றையும் மறைத்துவிட்டார்கள்.

எம்மால் அதனை மறக்கமுடியவில்லை.

அண்ணியும் பிள்ளைகளும் அவர் திரும்பி வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள்.

என் தேடலில், தொல்லைகளின் சூரியன் உதயமாகிப் பிரகாசித்தான்.

அங்கும் மிரட்டலும், கைதும் என்னைத் துரத்தின. என் ஆத்மாவைக் கொன்று என்னால் எப்படி வாழ முடியும். ஓடு எல்லாவற்றையும் துறந்துவிட்டு ஓடு...

இந்துமாகடலின் தொப்புள் கொடியில் அறுந்து தொங்கும் கிராமம் என் தீவு. முறியாத பனைகள் முகிலை விலக்கி சாமரம் வீசும். பனங்காய் விழுந்து பாறையில் தெறிக்கும். முரல்மீன் பாய்ச்சலில் கடல் அலை எழும்; திருக்கைகள் வந்து கடற்பாறைகளில் முட்டும். குதிரையின் கனைப்பில் நாரைகள் பறக்கும். அந்த நீண்ட இனிய தீவின் நெசவுத்தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவன் நான்.

மிகவும் ரம்மியமான இளமைக்கால கனவுகளோடு வாழ்ந்தவன். பெரிதாக ஒன்றையும் எதிர்பார்க்காத சுயசார்பில் வாழப் பழகிக்கொண்ட என் தீவின் மக்கள் மிகவும் இனிமையானவர்கள். எதிர்பார்த்துக் காத்திருப்பது நாம் காதலர்கள் மட்டும்தான்.

அவனுடைய வருகைக்காய் மணற்கிணத்து மதகிலும் மாவிலித்துறை மண்டபத்திலும், காத்திருந்து கதைத்தோம்.

நெடுவினிப்பிள்ளையார் தேர்த்திருவிழாவும் அந்தோனியார் கோவில் சுற்றுப்பிரகாரமும், பாதிரியார் கோவில் கரோல் கீதங்களும் வெட்டகாடு அம்மன் கோவில் பொங்கலும் எங்களைக் குதூகலப்படுத்தின.

தாமரைப்புக் குளத்துக்கு நீந்தப் போவதும், சாறாப் பிட்டியில் தண்ணீர் கொண்டுவருவதும் வெட்டுக்குழியில் கரப்புக்குத்துவதும், வல்லையில் போய் மீன் பிடிப்பதும், தர வையில் சுற்றி மாடுகட்டுவதும் குதிரையை பிரட்டி குளம்பு அடிப்பதும் எமது இளமைக்கால வீரச்செயல்களாகவே கருதினோம்.

குறிஞ்சாப்பூக்களை ஊதிவிளையாடுவதும், காவோதிகளுக்குள் ஒளிப்பதும், ஈச்சம்பாழைகளை இழுத்துச் சப்புவதும், கோணற்புளிகளுக்கு கொக்கை கட்டுவதும், கொட்டு ஆட்டிக் குருவிகள் நிலத்தில் இட்டு வைக்கும் முட்டைகளைத் தேடுவதும், நொச்சிக்காட்டுக்குள் குரக்கன் பிட்டு மணத்தில் கொட்டாவி விடும் பாம்புகளுக்கு கல் எறிவதும், கிட்டிப்புள்ளும் கொடிவிளையாட்டும் எம்மை துடிப்புடன் இயங்கவைத்தனதான்.

காலம் வெகுவாய் மாறி, அரசியலும் ஆயுதமும் எம்மை அதிகாரம் செலுத்தத் தொடங்கியபோது நாம் மிகவும் திணறித்தான் போனோம்.

ஏதோ விடிவு வரும் என்று எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டோம்..

நானும் அவளும், அந்தப் புழுதித் தெருக்களில் காதலித்துக் கருவுற்றோம்.

என் நேசத்துக்குரியவளை விட்டுப் பிரிந்தபோது மிகவும் சோகமாக இருந்தாள்.

எமது குழந்தை பிறந்த செய்திகூட மிகத் தாமதமாகத்தான் எனக்குக் கிடைத்தது. நான் உக்கிரேன் வந்திறங்கி ஒரு கிழமைக்குப் பின்னர்தான் அறிந்தேன்.

நிரந்தரமான முகவரியில்லாத அலைச்சல் மிகுந்த

www.padippakam.com



மனிதர்கள் நாம்.

எல்லாம் இழந்துபோனது போன்ற மனச்சுமையுடன், பலவற்றை இழந்துவிட்ட போலந்துக்குள் நிற்கிறோம்.

மீசை வைத்த வலேசாவைக் கூப்பிட்டு மண்டையில் குட்ட வேண்டும்போல் இருக்கிறது. என்னையே நான் குட்டிக்கொண்டேன்.

அமீர் எங்களை இப்போது போலந்திலுள்ள இன்னோர் முகவரிடம் ஒப்படைத்துவிட்டான்.

அவன்தான் எங்களை இந்த வீட்டில் சிறை வைத்தவன்.

அவனுடைய பெயர் தாஹா.

தட்டித்தட்டி ஆங்கிலத்திலே பேசுவான்.

இந்தியிலோ, உருதுவிலோ மிகவும் கோபமாய் பேசுவான்.

எப்போதும் போதையில் இருக்கிறான்; கஞ்சாவையோ, கட்டையையோ பத்திக்கொண்டு கண்கள் சிவந்து கிடக்க இடையிடையே வந்தான்.

பாண்தான் எமது உணவு. காய்ந்து கிடக்கும்; வெறும் சாயத்துடன் விழுங்கினோம்.

எங்கள் ஐந்துபேரில் வன்னியிலிருந்து சிவமும், மட்டக்களப்பு மகேந்திரப்போடியாரும், திக்கத்துச் சீலனும், திருமலை மோகனும் அடங்குவர். எல்லோருக்குள்ளும் ஒவ்வோர் பிரச்சினை. ஆமியாலும், இயக்கங்களாலும் அடிக்கப்பட்டவர்கள். குடும்பங்களில் பலரை இழந்தவர்கள்; இயக்கங்களிலிருந்து தப்பி வந்தவர்கள். போடியார் எம்மை விட வயது கூடியவர். பல அனுபவங்களுடையவர். ஊர்காவல் படையாலும் இராணுவத்தாலும் பாதிக்கப்பட்டவர். எல்லாச் சோகங்களையும் தூக்கி வைத்துவிட்டு கலகலப்பாகப் பேசுவார்.

எங்களை எதிலும் மனம் கலங்காமல் நம்பிக்கை கொள்ள வைத்திருப்பவர் அவர்தான்.

எல்லைகள் கடக்கும்போதுள்ள பல சோக முடிவுகளை கதைகதையாக கேட்டு வைத்திருந்தோம். ஆற்று நீர் இழுத்துச் சாகடித்ததும், பனியில் விறைத்துச் செதுக்கிடந்ததும், 'கொன்ரையினர்'களுக்குள் மூச்சடைத்து இறந்ததும், கடலோடு அடிபட்டுப் போனதும், இலங்கையில் தொடங்கி உலகின் நிலப்பரப்பு எங்கும் அகதியாய் ஓடிவந்த பாதை முழுவதும் புதையுண்ட எம்மவரின் வரலாறு என்னோடும் தொடர்கிறது என்றுதான் நான் எண்ணினேன்.

தாஹா வந்திருந்தபோதெல்லாம் ஏதோ பணத்தைப் பற்றிப் பேசினான்.

இன்னமும் அதிக பணம் கேட்கப் போகிறான் என்பது போல்தான் இருக்கிறது.

மறுநாள் வந்தபோது சிவம் மாஸ்டர் என்ற பெயரில் ஒரு இலங்கையனைக் கூட்டி வந்தான்.

அவன்தான் தற்போதைய மொழிபெயர்ப்பாளன்.

அவனும் மடாக்குடிகாரன். வெள்ளை 'வொட்கா'வை போத்திலோடு குடித்தான்.

அவனது மொழிபெயர்ப்பின்படி நாம் இன்னமும் ஆயிரம் டொலர்கள் கொடுக்க வேண்டுமாம். 'அமீர் தனக்குத் தந்த பணம் போதாது. அதை நீங்கள் ஒழுங்கு செய்தால் ஓரிரு நாட்களில் அனுப்பிவிடுவேன்' என்றான்.

இப்போது புதிய இடியொன்றைப் போடுகிறான்.

நாம் மறுத்துவிட்டோம். "நாம் பணம் முழுவதும் கட்டிவிட்டோம். இனிமேல் பணம் எங்களுக்கு யாரும் தரமாட்டார்கள்".

சிவம் மாஸ்டர் குடிபோதையில் அழுதான், "நான் இயக்கத்துக்குப் போய்த்தான் இப்படிச் சீரழிந்து போனேன்" என்று.

வேலையில் இருந்த இவனை வில்லங்கத்துக்கு இயக்கம் பிடித்து, ஆயுதப்பயிற்சி கொடுத்து, இயக்க மோதல்களில் தப்பி இந்தியாவிற்கு ஓடிவந்து இப்போது குடிக்காகவும், சாப்பாட்டுக்காவும் எதுவும் செய்யும் ஒரு பரிதாபமான மனிதன்.

"கேட்கிற காசைக் கொடுத்து ஓடித் தப்பிவிடுங்கள். இல்லாட்டி இந்தச் சனியன்கள் உபத்திரமானதுகள், நடுத்தெருவில் விட்டிடுங்கள்" என்றான் மீண்டும் அவன்.

எனக்கு அவன்மேல் கோபம் கோபமாய் வந்தது.

என்ன செய்வது யாரைக் கேட்பது?

எல்லோருக்கும் என் போன்ற சிக்கல்கள்தான். ஐரோப்பாவில் காசு பிரட்டுவது சுலபமான காரியமா? அதுவும் வந்த சேராத ஒரு அகதிக்காக!

சீட்டுக்கட்டியும், வட்டிக்கு வேண்டியும் அவர்கள் செய்கின்ற உதவிகளை என்னால் மறக்கமுடியாதுதான்.

எந்த முகத்துடன் எப்படி ரெலிபோனில் கதைப்பது?

மாமாவைத்தான் பிடிக்கவேண்டும். அம்மாவின் தம்பி. கொஞ்சம் கடுமையான மனுஷன். ஆனால் இரக்க முள்ளவர்.

இரவே அவனது கைத்தொலைபேசியில் எல்லாவற்றையும் அவருக்குச் சொல்லிவிட்டேன். அனுப்புவதாக ஒப்புக்கொண்டுவிட்டார்.

அமீர் அனுப்பிய ஆட்கள் ஆறுபேர் 'போடரில்' பிடிபட்டதாக தாஹா சொன்னான். எம்மைக் கூடியகெதியில் வெளியேற்ற வேண்டிய நிலையில் அவன் இருக்கிறான். எல்லோருடைய காசும் வந்து கிடைத்துவிட்டது.

அன்று இரவு மூடிய வான் ஒன்றில் ஏற்றப்பட்டோம்.

போலந்துக்கருகே பழைய கிழக்கு ஜேர்மனிக்குள் இருந்த ஒரு சிறிய புகையிரத நிலையத்தின் பின்பகுதியில், ஓடிக்கொண்டிருந்த வானிலிருந்து குதித்துப் பதுங்கிக்கொண்டோம்.

ஒரு பத்து நிமிடங்களின் பின்னர் ஒளிபாய்ச்சிக் கொண்டு வருகின்ற பச்சை வாகனங்களின் இரைச்சல்..

வெள்ளையாய்க் கொட்டிக்கிடந்த பனிக்குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த எம்மை அந்தப் பச்சை வாகனப் பொலிசார் கைதுசெய்தனர்.

நாம் தஞ்சம், தஞ்சம் என்று கத்தினோம்.

சிரித்துக்கொண்டே பச்சை வானில் ஏற்றினார்கள்.

கைரேகை, படப்பிடிப்பு, சோதனை, சிறை?

நாமும் பிடிபட்டு விட்டோம். எல்லைகளில்.

இலங்கையா, போலந்தா, ஜேர்மனியா?

அரசியல், தஞ்சம், அகதி, அடையாளம்.

எங்கே கொண்டுபோகிறார்கள், எங்களுக்கு எதுவும் விளங்கவில்லை. எனக்கு நேர் எதிரே இருந்த போடியார் அழுதுகொண்டிருந்தார். அவர் முகத்தை என்னால் பார்க்கமுடியவில்லை. ❑

www.padippakam.com

பொ கருணாகரமூர்த்தி

# எவ்வழி

மாலைச்சூரியன் குழம்பை அள்ளி எவரோ ஒரு பிராட்டி வான்முகடு முழுவதையும் மெழுகிவிட்டிருந்தாள். உருகும் தங்கத்தின் தகதகப்பில் சேஷத்திரம் முழுவதும் பொன்மஞ்சளாய் ஜொலித்துக்கொண்டிருந்தது. நாங்கள் நடந்துகொண்டிருந்தோம். எம் பாதையில் மண்குளித்து விளையாடிக் கொண்டிருந்த வால்நெடுத்த கெண்டைக்குருவி ஒன்று எழுந்து பறக்கப் பஞ்சிப்பட்டு எமக்கு முன்னே தத்தித்தத்திச் சென்றது. நாமும் விடாது தொடரவும் கீசி வைதுவிட்டு எழுந்து பின்னோக்கி அரைவட்டமடித்துப் பறந்துபோய் மீண்டும் அதே இடத்தில் மண்குளித்தது.

தொடுவானத்திலிருந்து இன்னும் பெயரிடப்படாத ஆயிரம் வர்ணங்கள் மையம் நோக்கி மெல்ல வந்து சேர்ந்தன. வழமையான நீலம் விடுப்பில் சென்றிருந்தது. குறுக்குமறுக்காகப் போர்விமானங்கள் கோடிழுத்துச் சென்றதுபோல் அடிவானத்தில் பல கோலங்கள் உண்டாயின. வெளிர் மின்னற்கொடிகள் சில தோன்றித் துளிர்த்துத் தழைத்தோங்கிச் சடுதியில் மறையவும், நடுவானம் அரிந்து வைத்த கறுத்தக்கொழும்பான் மாம்பழமெனச் செஞ்சிவப்பாகியது. நவீன ஓவியங்கள் போலும் சில கட்டமைப்புக்கள் தோன்றின. அடிவானத்தில் ஒளிரும் நியோன் விளக்குகள் போலும் குண்டுகுண்டாக ஊதாவர்ண எழுத்துக்களாலான தெளிவான கவிதை ஒன்று தோன்றி மறைந்தது. பின் இன்னொரு கவிதை. அது மறைய இன்னொன்று.... அது மறைய இன்னொன்று. ஒரு கணம் வானமெங்கும் கவிதைகள் இறைந்து கிடந்தன. எதைப் படிப்பது.... எதை விடுவது....? எல்லாமே சிருஷ்டியின் நோக்கமும், பிரபஞ்ச இரகசியங்களும் கூறும் மந்திரக்கவிதைகள். படிக்க முதலே மறைந்து மறைந்து போயின. ஓவியங்களிலிருந்து ஓரேஞ்சிலும், ஆப்பிள் பச்சையிலும், குருவிச் சம்பழ நிறத்திலும், இதழ்களால்



www.padippakam.com

பொ கருணாகரமூர்த்தி

ஒளி உமிழும் மலர்கள் மலர்ந்தாடின. வானவீதியில் முண்டாசு கட்டிய மனிதர்கள் மாடு களை ஓட்டிச்சென்றனர். மலர்கள் எவற்றையும் மாடுகள் மிதித்துச் சேதஞ் செய்யாதிருக்க வேண்டுமென மனது கவலை கொண்டது.

இந்த ஜென்மத்தில் அந்த இடத்திற்கு முன்னெப்போதாவது வந்ததாக ஞாபகம் இல்லை. மலைப் பாங்கான குளிர்வலயத்தில் வளரக்கூடிய பன்னங்கள், நெ.'. ப்ரலொப்பிஸ், அந்தூரியங்களும் உலர் வலயத்திற்கான முங்கிற் ।ற்கள், இலாமிச்சை (வெட்டி), அலரி, அன்ன முன்னாச் செடிகளும் மண்டிய புதர்க்காட்டினா டாக அந் த' ।ாதை நீண்டு கட்புல எல்லையில் அடிவானத்தைத் தொடுவது போலத் தோன் றினாலும் அதற்கு அப்பாலும் நீண்டது.

பாதையை ஒட்டி இருமருங்கிலும் செறிந்த தேக்குமரக் காடுகள் இருந்தன. கடந்து செல்லச்செல்ல ஓக், பைன் மரங்களும் அடர்ந்த வானத்தை நோக்கிச் சென்றன.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். எங்கள் தேகம் முழுவதும் ஹீலியத்தால் நிரப்பப்பட்டதுபோலும் மிக லேசாக இருந்தது. சிறு ஈரத்திற்காகத் துள்ளியபோதுகூட முப்பது மீட்டர் தூரத்திற்கும் அப்பால் போய் விழுந்தோம். கனவும் நனவும்போல இரு அனுபவங்களைத் தொடர்புபடுத்தக் கஷ்டமாக இருந்ததால் நேரத்தை உணரமுடியவில்லை. முன்பொருமுறை ஹஷீஷ் புகைத்தபோது கிடைத்த அனுபவம் மாதிரியிருந்தது. இதைப் புகைக்கத் தொடங்கி அரைமணியிருக்குமா.... ஒரு மணியிருக்குமா.... அல்ல ஐந்தாறு மணிகளுக்கும் அதிகமா....? தற்செயலாய் துருத்திய அறிவு கேட்கிறது.. எந்தச் சிகரெட்டாவது மணிக்கணக்கில் புகையுமா?

சரி.... அப்ப ஒரு பத்து நிமிஷந்தான் இருக்கும். மணி என்பது என்ன.... நிமிஷம் என்பதென்ன.... புரியமுடியாது மீண்டும் குழப்பியது. அனுபவங்களோ மாயையோ....?

நாங்கள் நடக்கத் தொடங்கி எவ்வளவு நேரமிருக்கும்....?

எவருக்குமே தெரியாது. இதை எண்ண சிரிப்புச்சிரிப்பாய் வந்தது. நான் பாட்டிற்கு இளித்துக்கொண்டிருக்கப்படாது. என் கௌரவம் என்னாகும். பட்டென நிறுத்திக்கொள்கிறேன்.

அவள் கண்டுகொண்டால் என்னை என்னவென்று நினைப்பாள்....? என்னவாவது நினைத்துவிட்டுப் போகட்டுமே.... ஏன் நான் யாருக்காகவேனும் வாழ்ந்துகொண்டிருக்கிறேனா....? இல்லைத்தான்.

ஆனாலும் நான் அவள் மதிப்பிலிருந்து சரிந்து போதலாகாது.

ஏன்..? அவள் என்னை நம்பி வருகிறாள்.... என் பிரக்ஞையில், சித்தத்தில், அறிவில், திறமையில் நம்பிக்கை வைத்து.... தனி வழியில்.

அவளைத் தனிவழியே அழைத்துச்செல்லத் துணிந்தது என் பலமா, பலவீனமா தெரியவில்லை. கேட்டது - அழகியபெண் - என்றதும்.... கொஞ்சம் பரிவு, கொஞ்சம் காபந்துணர்வு, கொஞ்சம் ஆசை பிறந்ததென்னவோ உண்மைதான். நவீன பெண்ணியவாதிகள் முதல் இரண்டும் - டூப் - மூன்றாவதுதான் நிஜம் என்பார்கள். ஏன் நான் பொய் சொல்லவேணும்..? நிலவில் இருப்பதைப்போல.... பெண்ணின் அருகில் இருப்பதும் சுகமே. இவ்வுணர்வுகள் இயல்பூகமாக என் ஜீன்ஸ் வழி வந்தவை. காமம் தோன்றவில்லையா....?

தோன்றுவதாவது.... அது எப்போதுதான் இல்லாதிருந்தது....?

ஒவ்வொரு இதயத்துடிப்பிலும்.... ஒவ்வொரு உணர்வின் தெறிப்பிலும் கலந்தேகிடக்கிறதே. காமம் நீங்கிய நான் அசாத்தியம். அதைச் சொல்லவில்லையே....? இக்கேள்வியில் உனக்கப்படியில்லை என்கிற பாசாங்கிருக்கு.... இருக்கட்டும். ஒவ்வொரு துளி இரத்தத்திலும்.... தசையிலும் அது

உறைந்திருப்பதை உணர்ந்திருந்தும் பலரிடமும் இப்பாசாங்கிருக்கு.

திரும்பிப்பார்க்கிறேன்.... அவள் வந்துகொண்டிருக்கிறாள். ஆரோக்கியமான ஒல்லியான உடல்வாகு. இடையில் வைன்கிளாஸ் மாதிரி மேலும் ஒடுங்கிப்போகிறது. மெல்லிய ஊதாக் கலர் பின்னணியில் அடர்கத்தரிப்பூ வர்ணத்தில் சின்னச் சின்னப் பூக்கள் உடலெங்கும் செறிந்த கைத்தறிச் சேலையைக் கச்சிதமாக உடுத்தியிருக்கிறாள். தனி முத்துப்பதித்த தோடுகள் அழகுபடுத்தும் பெரிய காதுமடல்களைத் தொடரும் கன்னக்கதுப்புக்களில் படர்ந்திருந்த மென்பூஞ்சு ரோமங்களிலும், அம்மாலை ஒளியில் மஞ்சள் குளித்தது போலிருந்த அவள்

www.padippakam.com



தோற்றத்திலும் ஏராளமாய் பெண்மை வழிந்தது.

பெரிய்ய தோற்பையொன்று தோளில் தொங்க முந்தானையின் ஒரு தலைப்பை எடுத்துப் போர்த்தியிருக்கிறாள்.

முதலில் அவள் முகத்தையும் விழிகளையும் கவனிக்கப்படாது என்பதில் பிடிவாதமாயிருந்தேன். கவனித்தால் அவை ஹரிகேசனாகிய என்னை விடுத்து எனக்குள்ளே இன்னொருவனுடன் பேசும். அவன் நொடியில் பலஹீனகேசனாகி விடுவான். அவள் விழிக்கோளங்களிருக்கே.... கொக்கயின் பார்ட்டி.... அவை கால்பவைதான் எவ்வகைக் கதிர்கள்? சும்மா பட்டமாத்திரத்தில் சித்தம் தடுமாறிப் போகுதே.... கூடாது.... அவைகளை நான் நோக்கவேகூடாது.... நெப்போலியன் சுண்டெலிக்குப் பயப்படும் இந்த இரகசியம் அவள் அறியவேகூடாது.

## 2

அவள் என்னை நம்பி வருகிறாள்.

தன் உடைமைகளைப் பறித்துவிடமாட்டேன் என்று நம்புகிறாள். தன்னைப் பறித்து விடமாட்டேன் என்று நம்புகிறாள். தன் உயிரைப் பறித்துவிடமாட்டேன் என்றும் நம்புகிறாள். என்னைத் தொடர்ந்து வருகிறாள். அவள் என் அருகாக வரட்டும் என்று என் நடையின் வேகத்தைச் சிறிது தளர்த்தினேன். அருகில் வந்ததும் கேட்டாள்:

- உங்களுக்குள்ளேயே பேசிக்கொள்வீர்களோ.... -

- அவ்வப்போது பேசிப்பேன்.... தர்க்கிப்பேன்.... சண்டையெல்லாங்கூடப் பிடிப்பேன்.... வெளியில தெரியாது.... ஆனால்.... விடயத்தின் உஷ்ணந் தாங்காது போனால் மட்டும் வார்த்தைகள் எப்போதாவது தெறித்து வெளியில் விழுவதுமுண்டு.... -

- இப்பவும்.... ஏதோ விழுந்தாப்போல.... -

- இருக்கலாம்.... ஒரு விவாதமொன்று நடந்துகொண்டிருந்தது..-

- சுவாரஸ்யமானதாக இருந்தால் நானும் பங்கேற்கலாமா.... ரொம்ப அந்தரங்கமானது என்றால்.... வேண்டாம்....-

- அந்தரங்கமாவது.... அறிவார்ந்த விஷயமென்றால் எனக்கு எல்லாமே வெளிப்படைதான்.... -

- என்னவாம்..? - (குரலில் கொஞ்சம் கிசுகிசுப்புடன்)

- பெண்களாலதான் உலகமே அழகாகிறதென்கிறேன்.... இல்லை என்கிறது உள்ளேயிருந்து ஒரு முரட்டுக்குரல்.... -

- எப்பிடி....? -

- பெண்கள் பூஞ்செடிகளைப் போல அழகும் வனப்புமாய் இருக்கிறார்கள்.... ஒரு பூஞ்சோலை ஊரின் எழிலைக் கூட்டுவதில்லையா.... அப்படித்தான். -

- ஆண்கள் பார்வையில் என்றிருந்தால்.... சரி -

- அப்போ.... ஆண்களுக்கொரு உலகம்.... பெண்களுக்கொரு உலகமென்று இருக்கவேணும்.... ஒரு பெண்ணின் அழகை இன்னொரு பெண் ஒத்துக்கொள்ளமாட்டாளா என்ன....? -

- ஒத்துக்கொள்ளமாட்டாள் என்றில்லை.... ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் அழகுணர்ச்சியில் வேறுபாடு உண்டு.... ஆணுக்குப் பெண்ணிடத்தில் கவர்ச்சி ஏற்பட அவமீதான காமந்தான் காரணம் -

- இல்லை.... என்றலை.... காமம் என்பது ஒன்றும் விலக்கப்பட்ட, சபிக்கப்பட்ட வஸ்துவோ, உணர்வோ இல்லையே.... இன்னும் சரியாகச் சொல்லப்போனால்.... காமந்தான் வாழ்வின் அடிப்படையே என்பேன்.... அனாதியிலிருந்தே பெண்தான் ஆணை ஆகர்ஷிப்பவளாக இருந்திருக்கிறாள்.... -

- பெண் போதைப்பொருள் அல்ல என்ற வாதமிருக்கே....?-

- இல்லை என்றலை.... பாலை, பழமையை வைச்சு ஒருத்தரை இன்னொருத்தர் ஆளுமை செய்யறது தப்பிலுந்தப்பு.... ஆனால் ஆண் பெண்ணிடையேயான இயல்பான லயிப்பை கேலியாக்குதலோ, ஆகாதென மறுத்தலோ மடமையான குருட்டாம்போக்கே என்பேன்.... நீ இதைத்தான் ரசிக்கலாம், இதை ரசிக்கவேகூடாது என்று யாருக்கு யாரும் கட்டளையிட முடியாது.... இந்த உரிமை உலகத்தில யாருமே எடுத்துக்கொள்ள முடியாது. ஹோமோஸெக்ஸுவல்ஸை பாருங்கள்.... நாம தப்பு

www.padippakam.com



என்றதால இல்லையென்றாகிவிடுமா....? -

- இதைப் பெண்ணிலைவாதிகள் ரொம்ப விவாதிக்கிறாங்க இல்லை....? -

- விவாதிக்கிறாங்க சரி.... ஆனால் ரொம்ப வரட்டுத்தனமாயிருக்கு.... பெண்களில்லாத உலகத்தில ஆண்களும், ஆண்களில்லாத உலகத்தில பெண்களும் உற்சாகமாயிருக்க மாட்டார்கள்.... சின்னச்சின்ன வேற்றுமைகளைப் பெரிதுபடுத்திக்கொண்டு ஆணும் பெண்ணும் தர்க்கிச்சு அடிச்சுக்கொள்றதபோல முட்டாள்தனம் வேறில்ல.... -

- அப்போ.... என்ன செய்யலாங்கிறீங்க....? -

- முதல்ல.... இந்த வேண்டாத விவாதங்கள நிறுத்திட்டு.... ஆணும் பெண்ணும் சேர்ந்து அறிவுபூர்வமா சிந்திச்சு இந்த உலகத்தை இன்னும் அழகா.... ரம்யமா பண்ணவேணும். அன்பை பரவிப்பரவி எல்லைகள் அற்றதாய் இதை விஸ்தரிக்கவேணும்.... எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா.... என்று பூரிக்கிறானே.... ஒரு கவிஞன்.... இருப்பதை நுகர்வோம், களிப்போம் -

- கடவுள் நம்பிக்கை வர்றதா....? -

ஆஸ்திகனாகவோ.... இல்ல நாஸ்திகனாகவோ இருக்கக்கூடிய ஞானம் இன்னும் எனக்குக் கைவரவில்லை என்பதே சரி.-

- மாலைக்காடு இன்னும் மஞ்சள் குளித்துக்கொண்டிருந்தது. வானத்தில் பொருளும் நடையும் புதிய கவிதைகள் மேலும் பல தோன்றித்தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

- எதுவரை படித்தீர்கள்? - என்றேன்.

- ஆரம்பத்திலே சூனியம் தவிர்த்து எதுவுமேயிருக்கவில்லையாம். பின்பு எங்கிருந்தோ இவையெல்லாம் மெல்ல மெல்ல வந்து சேர்ந்ததாம். சிக்கல் கொண்டுதாம்.... இந்தச் சிக்கலை அதன் கட்டமைப்பை புரியற மாதிரிக் கொஞ்சம் படித்திருக்கேன்....

- ஆனா இதெல்லாம் எதிலிருந்துதான் வந்தன.... ஏன் வந்தன....

- எதுக்குச் சிக்கல் கொண்டன.... எதன் வழிகாட்டலில போய்க்கொண்டிருக்கின்றன? இதுகள்தான் புரியமாட்டேங்கிறது.-

- நான் அந்தக் கவிதைகளைக் கேட்டேன்....-

- நம்ப பாரதி கவிதைகள் மாதிரி எல்லாம் எளிமையாய்த்தான் இருந்தன.... ஆனாலும் எதுவுமே அர்த்தம் பிடிபடல்ல.... உங்களுக்கு....? -

- நான்கூட வேகமாய்ப் படிக்கிற வகையில்லை.... ஒரு கவிதையைத்தானும் முழுசாய்ப் படித்து முடிக்கல.... சில கவிதைகள் மெற்றா∴பிஸிக்ஸ் பற்றிப் பேசின மாதிரியிருந்துதே? -

பிரபஞ்ச இரகசியத்தைப் பிட்டுவைக்கிற மந்திரக் கவிதைகளை அநியாயமா மிஸ் பண்ணிவிட்டோமோ.... கவலையாயிருந்தது. மனிதநடமாட்டமே இல்லாதிருந்த அந்தப் பிராந்தியத்தில் அக்கவிதைகளைப் புரிந்துகொண்ட ஜீவனேதாவது இருக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். சில கழுதைகள் ஆவரசுப் புதர்ப்பக்கமாகத் மேய்ந்துகொண்டு நின்றன.

3

-ஆறாவது, ஏழாவது, எட்டாவது புலன்கள் நீங்கள் நினைப்பதுண்டா....? -

- கடித்துக்கொண்டிருந்த தேன்புல்லைத் துப்பிவிட்டு - விளக்கமாகச் சொல்லுங்கள் - என்றாள்.

- இப்போ எம்மைச்சுத்தி எத்தனை ரகமான மின்காந்த அலைகளில எத்தனை மொழிகளில் எத்தனை விதமான இசைகள் மிதந்து கொண்டிருக்கே.... எதையாவது கேட்கிறோமா.... -

- இல்லை -

- அதை வடித்துச் செவியில செலுத்த ரேடியோ என்றொரு சாதனம் தேவைப்படுகுதில்ல.... இதுபோல

எமது புலன்கள் கடந்த சக்திவீச்சுக்கள் இந்தப் பிரபஞ்சவெளியில எமக்குப் புலப்படாம இருக்கலாம்.... இன்னும் பல மில்லியன் வருஷங்களில பரிமாணம் அடைந்திருக்கப்போற மனிதன் அந்த சென்ஸ்களை எல்லாம் உணர்பவனாயிருப்பான்.

www.padippakam.com



அவனுக்குப் பிரபஞ்ச இரகசியங்கள் எல்லாம் புரிவதாயிருக்கும்.-

- அவன் அந்த சென்ஸ்களையெல்லாம் அடைகிறவரையில் இருக்கிற தலைமுறை மனிதர்கள் பூமியை விட்டுவைத்திருப்பார்களா.... -

- சும்மா ஒரு எதிர்பார்ப்புத்தான்.... -

- இந்த மாயைத்தத்துவம் பற்றி என்ன நினைக்கிறீங்கள்.... -

- அது என்னை நல்லாக் குழப்புது.... -

- எப்படீன்னு சொல்லுங்க.... -

- அது வஸ்துக்கள் எதையுமே இல்லேன்னு நிராகரிக்குதில்ல.... எமக்கு சென்ஸ்.... அதாவது புலனுணர்ச்சி இருக்கிறதாலதான் எமது இருப்பையும், பிறவஸ்துக்களையும், பிரபஞ்சத்தையும், சூனியத்தையும் சொல்லமுடியுது.... ஸ்தூல உடம்பு கொண்டிருக்கிற பொறிகள் இந்த உலகத்து வஸ்துக்களோட பெறுகிற அனுபவங்களாலதான் மனுஷனுக்கு அறிவோ, ஞானமோ பிறக்கிறது. இந்த ஞானத்தின் பிறப்பிடம், இருப்பிடம் வேற மனசா ஆத்மாவா என்றொரு கேள்வி இருக்கு....

மனசு என்று வைச்சா அந்த மனசைக்கொண்டிருக்கிற ஸ்தூல உடம்பு மாயை, அதன் அறிவு, ஞானம் எல்லாமே மாயை என்று நிறுவலாம்.... ஆத்மா என்றாகிறபோது இவ்வளவு ஞானம் வாய்த்திருந்தும் எதுக்குப் போய் கன்மாவில சிக்குப்படிகிறது என்பது புரியல.... மேலும் கன்மாவின் வேலைகளைப் பார்க்கிறபோது ஏதோ பழிவாங்கற மாதிரியெல்லாம் படுது.... தவிர நான்

கொஞ்சம் ஆச்சர்யப்படற மாதிரி ஒரு தியறி இருக்கென்றால்....

அது அத்வைதந்தான்.... -

- அதாவது சத்து, சித்து, சிவம் என்னாமல் எதையாவது புரியும்படி பேசறதா....?

- அத்வைதம் எதையுமே மறுக்கல்ல.... ஒன்றேயான பிரமத்தின் வேறுபட்ட தோற்றங்கள்தான் இப்பிரபஞ்சத்தின் வஸ்துக்கள் என்று விபரிக்குது.... இதில அற்புதம் என்னவென்றால், தத்துவம் விஞ்ஞானத்திற்கு முந்திப்போய் எலக்ரோன் நுணுக்குக்காட்டி இல்லாமலேயே மூலகங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைச் சொல்லுது.... இது ரொம்ப அபூர்வமான விஷயந்தான்.... ஆனால் இதுகள் எதனாலுந்தான உயிர், சிருஷ்டிப்பு, அதன் நோக்கங்கள் இதுகள்ல எனக்குத் தெளிவு கிடைக்கல.... பரமாத்மாவே ஆணவம், கன்மம், மாயையால பற்றுண்டு ஜீவாத்மாவாகி பின் பிறப்புக்களால ஸம்ஸ்காரம் பண்ணிக்கொண்டு பரமாத்மாவா ஆகிறதென்கிறதையோ என் பிரக்ஞை ஒப்புதில்ல....-

- விஞ்ஞானி நாப்பது மில்லியன் வருஷங்களுக்கு முன்னே பூமியில் உயிர் இருக்க வாய்ப்பேயில்லையென்று அடிச்சே சொல்லிடறான்.... அப்போ அதுக்கு முன்ன ஸம்ஸ்காரம் எல்லாம் எங்க நடந்திச்சாம்? -

-வேறொரு மண்டலத்திலயாயிருக்கலாம்.... -

விழுந்து விழுந்து சிரிச்சாள். அவள் கனிந்து மகிழ்ந்து குலுங்கிச் சிரிப்பது மனதில் எங்கேயோ செல்லமாகக் கடிக்கிறது.

- இந்த உலகத்தில நீங்கள் பார்த்து ரொம்ப அதிசயிக்கிற.... அல்லது உயர்வானது என்று கருதிற விஷயந்தான் என்ன....? -

- இந்த உயிர் எங்கிற விஷயமும் பிரம்மம் மாதிரியே எங்க அறிவு வட்டத்தில சரியா பிடிபடாமத்தான் இருக்கு.... அதை விடுத்துப்பார்த்தால்.... நான் மனித உணர்ச்சிகளைத்தான் சொல்லுவேன்.... ஏன் மனிதன் என்று குறிப்பிட்டுச் சொல்கிறேன்னா மற்ற விலங்குகளில அது அவ்ளவா பரிணமிக்கவில்லை.... இந்த உலகத்தை இன்னும் அழகாக்கிடறதா.... இல்லை கொழுத்திடறதா என்று தீர்மானிக்கிறது நாளைய மனுஷன்ட உணர்ச்சிகளின் கைக்கு வந்தாச்சு.... உலகத்து வளங்களை நுகர்றதில மனுஷருக்குள்ள சமத்துவம் இல்லை என்கிற அடிப்படை உண்மை, ஒருத்தனுடைய உணர்வில தாக்கினதாலதான் பொதுவுடைமைத் தத்துவமே தோன்றிச்சு. இன்றைய உலகில யார் அதிநாகரிகன் என்றால், எவனொருவனிடம் சூப்பர் ஸென்ஸிடிவ் மனம் இருக்கோ அவன்தான் என்று கையைக் காட்டுவேன்.... அஹிம்சை, கருணை, காருண்யம் என்கிறதெல்லாம் ஹை ஸென்ஸிடிவ் மனதாலதான் சாத்தியம். முழுதா விபரித்துவிட முடியாத அபூர்வ உணர்ச்சிகளை அருட்டக்கூடிய சக்தி கலை, இலக்கியம், இசை, இயற்கையழகு இதுகளுக்கும் இருக்கிறதால நான் இவைகளில்லயும் லயித்துப்போவதுண்டு.... -

இப்படிப் பேசிக்கொண்டே போனோம்.

www.padippakam.com



ஒரு திண்மக்கோணத்திற்கு (Radian) ஆயிரத்திற்கும்மேல் ஒளிர் வெள்ளிகள் நிறைய சேஷத்திரம் பகலாகியது. ஒவ்வொரு முகிலும் ஒவ்வொரு வண்ணத்தில் தோய்ந்து கொண்டு எல்லாத் திசைகளிலும் சுயாதீனமாய்த் திரிந்து கொண்டிருந்தன.

கட்சி மாநாட்டிற்குச் சென்று திரும்புபவர்கள் போல அணில்களின் கூட்டமொன்று எதிர்த்திசையிலிருந்து வந்து கொண்டிருந்தது. கடந்து செல்லும் எந்தவொரு அணிலாவது எம்மை ஏறிட்டும் பார்க்கவில்லை. எதையாவது மிதித்துவிடாமலிருக்க பாதங்களை நிதானமாகத் தூக்கி வைத்து நடந்தோம். பின் ஒரு கூட்டம் அகிழான்கள் வந்தன. சில பாதத்தின் அடியில் புகுந்து கீச்சுக்கீச்சுமூட்டின. அவள் பயந்து போய்ப் பதிவாயிருந்த கொய்யாமரமொன்றின் கிளையில் ஏறிக்கொண்டாள். அகிழான்கள் கடந்து போனபின் என்னைத் தொடர்வதற்காக ஓடிவந்தாள்.

"அகிழானுக்கே பயந்தாலெப்படி.... இனிக் கரடிகூட வரலாம்." "சும்மா பயங்காட்காதீங்க. வரும்போது பார்த்துக் கொள்ளலாம்"

"நீங்கள் வந்தபின் காப்பான் 'டைப்'பா....?

"அதிபுத்திசாலி.... சாமர்த்தியசாலி.... தைர்யசாலி.... என்று நினைப்பதற்குரிய எவருடைய உரிமையையும் நான் மறுக்கேல்ல...."

இரண்டு பக்கமும் ஈரலிப்பான பள்ளமான வயற்காட்டுப் பிரதேசங்களிருக்க நடுவே அணைபோன்ற ஒரு மேட்டுத் திடலில் பாதை தொடர்ந்தது. மேலே செல்ல இருமருங்கிலும் இருவாட்டி வயல்களில் சோளம் விளைந்து கதிர்தள்ளியிருந்தது. அவள் கீழே இறங்கி நல்ல பால்பருவத்தில் பொத்திகளை முறித்துவந்து மடலையும் குந்துகளையும் நீக்கிச் சுத்தம் செய்துவிட்டுப் பவ்வியமாக என்னிடம் நீட்டினாள். தானும் ஒன்றைக் கடித்து 'சூப்பராயிருக்கு' என்றபடி இன்னும் பக்கமாக வந்தாள். "சோளமென்றால் உங்களுக்குப் பிடிக்குமா....?" கேட்டேன். "பொதுவா அடுப்பில் ஏத்தாம கிடைக்கிற இயற்கையான காய்.... கனிகள்ல இஷ்டம் அதிகம்.... இளனி.... கரும்பு.... வெள்ளரிப்பழம்.... கெக்கரி இப்படி."

"சரி இன்னும் இப்படிப் பிடித்த விஷயமா ஒரு பத்து சொல்லுங்களேன்...."

"பத்தா பிடித்த சமாச்சாரங்கள் இன்னும் அதிகம்....!"

"சொல்லுங்க்" என்றேன்.

"ஆனந்தவல்லி என்கிற என்னை"

"வெண்ணிலா என்றல்லா கூப்பிட்டார்கள்...."

"என் ஒரிஜினல் பேர் ஆனந்தவல்லிதான்.... ஏன் கர்நாடகமாயிருக்கா....?"

"அப்பிடி நான் சொல்லேல்லயே....?"

"யாருமே நேர்ல உன்பேர் கர்நாடகமாயிருக்கென்று சொல்லமாட்டாங்கள்ல.... குறிப்பா ஆண்கள்னா ஆ.. அதுவா.. லவ்லி என்பார்கள். ஏதோ ஆண்கள்னா உங்களோட போட்டிபோடவென்றே ஜனிச்சிட்ட ஜென்மங்கள் மாதிரித்தான் நீங்களும் நினைக்கிறீங்க.... சரி மேல...."

"என் குடும்பம்.., எங்க புரொபெஸர் அச்சுதனைப்போல இன்டலெக்சுவலா.. சுயநலமில்லாம, ஈகோ இல்லாம உண்மையாய் பழகிற ப்ரண்ட்ஸ், மற்றும் மேதைகள், ஞானிகள், பெரியவா இவர்களுடைய அருகாமை, குழந்தைகள், புல்வெளிகள், தோப்பு, அருவி, அமைதியான கடல், மலை என்று இயற்கையை அனுபவிக்கப்பண்ணும் பயணங்கள், சமர்த்தாய் உழைக்கும் ஒரு கார், மழை, ஜாலியாய் நீந்திற ஒருமீன், புத்தங்கள், Zenனோ இல்ல கொன்.ஃபியூஸியஸோ தத்துவங்கள், கவிதை, பரதநாட்டியம், கர்நாடக இசை...."

"வாவ்!" என்று கத்தினேன்.

"என்ன?" என்பதாகப் பார்த்தாள்.

"இத்தனை விஷயங்களுமே எனக்கும் பிடித்தவையென்றால் நம்புவீங்களா?"

"நம்புவேன்."

"நானென்னா இன்னுமொன்றையும் சேர்ப்பேன்...."

மீண்டும் அதே 'வித'மாகப் பார்த்தாள்.

"அது ரொம்பவும் பேர்ஸனல்.... அந்தரங்கம்.... நான் இதில உண்மை பேசிறன் என்றால் சொல்லியே ஆகணும்.... அது.... அதுவந்து.... காதலுடன் கூடிய செக்ஸ்...."

விழிகளை மேலே எறிந்துவிட்டு காட்ச் பிடித்தாள். இதை அவளின் ஆமோதிப்பு.... என்பதா.... மறுப்பு என்பதா....?

"கர்நாடக இசையென்றால் என்ன?"

www.padippakam.com



"கர்ணம் என்பது செவி. செவிப்புலனின் உணரப்படக்கூடிய - மேல் - கீழ் ஸ்ருதி எல்லைகளுள் அடங்கும் எல்லா இசையும் கர்ண - அடக இசையே...."

"இசை கற்றுக்கொண்டீர்களா....?"

"கற்றது கொஞ்சம்.... கேட்டது அதிகம்...."

"பாடுவீர்களோ....?"

"அடிக்கடி பாடுவேன்.... எனக்குள்ளேயே ஆலாபனைகள் செய்து.... எனக்குள்ளேயே கற்பனைகளா வளர்த்துக்கொண்டு.... சில வேளைகளில் ரொம்ப விஸ்தாரமாய்ப் பாடிக்கொண்டேயிருப்பேன்.... பார்த்தா தெரியாது யாருக்கும்...."

"இப்போது எனக்காகவும்"

முதன்முதலாக வெட்கப்பட்டாள்.... மஞ்சள் ஒளி முகத்தில் படரச் சமாளித்துக்கொண்டு 'பிகு' ஏதுமில்லாமல் பாட ஆரம்பித்தாள்.

தாழ்தொனியில் பூஞ்சிறகொன்று காற்றில் மிதந்து அசைந்து அசைந்து வருவதைப் போல ஹிந்தோளத்தை மிருதுவாக ஆலாபனை பண்ணினாள். சுருதி மெல்ல மெல்ல மேலே போய் ஏறிவிட்ட கொக்குப்பட்டத்தின் 'வால்' போல. அங்கங்கு சுழித்தும் துடித்தும் ஜாலங்கள் காட்டியது. ஒரு வண்ணத்துப்பூச்சி பறக்கப் போதுமான மெல்லிய பிரயத்தனத்துடனேயே அனாயாசமாய் சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து மீண்டது. இந்த ரசானுபவத்தில் திளைத்துச் சிலிர்த்து என்ன இவள்கூடப் பறக்கிறேனா, நடக்கிறேனா என்பது புரியாமல் மயக்கமாகவிருந்தது. ஆலாபனை முடியவும் "சபாஷ்" என்றேன்.

"நிஜமாலுமா....?"

"நிஜமாலும் இத்தனை அற்புதம் செய்வீர்களென்று நான் நினைக்கவில்லை."

தலையைச் சாய்த்துப் பாராட்டை ஏற்றுக்கொண்டு "மேல பாடலாமா....?" என்றாள்.

"ஜோராய்!"

"மா.. ரமணன்.. உமாரமணன்
மலரடி பணி மனமே தினமே.."

பாபநாசம் சிவனின் கீர்த்தனை.... பாவத்தைப் பிழிந்து பாடினாள். தாளம்போட வேணும் போலிருந்தது. நான் தடுமாறவும் கையில் 'ரூபகம்' காட்டித்தந்தாள். (திகட்டல் தராத கந்தர்வக் குரலில்) அசைப்புக்களும் பிருகாக்களும் என்னே சுகம்! மனம் சிறைப்பட்டுப் போனது.

தான் பாடி முடித்ததும் என்னையும் ஏதாவது பாடும்படி வற்புறுத்தினாள், "இவ்வளவு சுத்தமாய்.... நுட்பமாயெல்லாம் பாடவராது.... கொஞ்சநாள் வீணை படிச்சேன்.... அதுக்கான நேரத்தை ஒதுக்கி என் குருத்தினிக்கு நான் Sincereராயில்லை.... அதனால நிறுத்திவிட்டேன்."

"முடிஞ்சவரையில பாடுங்க...."

அவள் விடுவதாயில்லை. என் கீழ்மத்திமக் குரலுக்கு ஏற்றதாயிருக்க வேணுமே.... யோசித்துவிட்டு ஹம்ஸாநந்தியில்.... நேரடியாகவே,

"ஸ்ரீநிவாஸ திருவேங்கடமுடையாய்
ஜெய கோவிந்த முகுந்த அனந்த
தீனசரண்யன் எனும் பெயர் கொண்டாய்
தீனன் எனைப் போல் வேறெவர் கண்டாய் - ஸ்ரீநிவாஸ
ஜெகம் புகழும் ஏழுமலை மாயவனே
திருமகள் அலர்மேல் மங்கை மணாளனே
ஜெகநாதா சங்கு சக்ர தரனே
திருவடிக்கபயம் அபயம் ஐயா - ஸ்ரீநிவாஸ...."

என்று பாடி முடித்தேன்.

"பரவாயில்லை பாடறீங்களே."

எனக்கும் தெரியும் இது பரவாயில்ல ரகந்தான்.

"நீங்க வற்புறுத்தினதுக்காக ஏதோ முயற்சி பண்ணனேன்....
இதெல்லாம் ஸங்கீதத்துக்குள்ள வராது...."

"No.... you are too modest.... நல்ல சாதகம் பண்ணினாத் தேறிடுவீங்கள்.... இன்னொன்று...."

"ஐயொ.... இன்னொன்றா.... அவ்வள்வுக்கு வருத்திக்கத் துணிஞ்சாச்சா..?"

"ஓகே ஒரு தில்லானா...?"

www.padippakam.com



"வெரிகுட்"
தகதீம் ததீம் நாகிருதீம்
ததோம் திருதீம் திரனா தனதிரனா
நாகிருதாநி தோம் திருதீம்
நாகிருதாநி தோம்திருதீம்
தரிகிடதீம் தரிகிடதீம் தரிகிடதீம்
தரனதீம் திரனா திரனா
கிடதக தரிகிடதீம் தக்கிட தரிகிட தீம்
தாகிடததீம்த தகதளாங்கு தகதீம்
தளாங்கு தகதீம் தளாங்குதகதீம் தளாங்குதகதீம்.

கையில் 'ஆதி' போட்டவள் கைப்பையை என்னிடம் தந்துவிட்டு மெல்லிய விரல்களைக் காற்றில் வீசி ஆடினாள். தில்லானா முடியவும் அவள் இந்தியில் 'பஜன்' ஒன்று பாடினாள். (லேசான அவள் குரல் வானம் வரை ஏறிப்பின்) காட்டுப்புலம் முழுவதும் பரவ நாம் நடந்தோம். பொன்வானம் பதிவில் வயலிடையே குட்டையொன்றில் பிரதிபலித்துப் பாரிய தங்கத் தாம்பாளம் போல் மின்னியது. சிறிய கண்மாயொன்று வரவும் அதிலே அமர்ந்தோம். வயல்களுக்கான பாசன வாய்க்காலொன்று அதன் கீழே 'கிளுக் கிளுக்' கென்றது.

"சாப்பிடுவோமா?" என்றாள்.

"ஏது..?"

"புளியோதரை கொண்ணந்திருக்கிறேன்." தன் தோற்பையைத் தூக்கிக் காட்டினாள். வாய்க்காலில் கையலம்பிவிட்டுச் சாப்பிட்டோம். வாழைமடலிலிருந்த புளியோதரை கட்டுச் சாப்பாட்டுக்கேயுரிய வாசனையுடன் திவ்யமாகவிருந்தது. வானத்து நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக மெல்ல விடைபெறத் தொடங்கின. மீண்டும் நடக்கத் தொடங்கினோம். பாதையின் மருங்கில் நின்ற நாணல்களும், பால்மொண்டிகளும் பூனை வாலொத்த குந்துகளாலும், கதிர்களாலும் எம்மைத் தடவின. கோவை, கூழாம்பழங்களை வைத்து நன்னிக் கொண்டிருந்த சிறுகுரங்குகள் நெற்றியில் கையை வைத்து எம்மை நோக்கிவிட்டு மரங்களில் ஏறின. குழிமுயல்கள் கண்டுவிட்டு குட்டிகளுடன் விரைந்துபோய் புதர்களிலும் பற்றைகளுள்ளும் ஒளிந்துகொண்டன. பாதை இப்போது மணற்பாங்காக மாறியது. ஒரு ஆற்றுப்படுக்கையாக இருக்கலாம். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல காற்றும் அதீத குளிரை அள்ளி வந்து போர்த்தது. தனியாகப் பறந்து வந்த கொக்கு ஒன்று தன் இடது சிறகைப் பதித்து அரைவட்ட 'டைவ்' ஒன்று அடித்துத் திசையை மாற்றிக் கொண்டு பறந்தது. மீதமிருந்த வெள்ளிகளும் ஓய்வெடுக்கச் சென்றிருந்தன. பாதையைக்கூட நன்கு கவனித்தே நடக்க வேண்டியிருந்தது.

"குளிருதே....ஸ்வெட்டரை எடுத்து வந்திருக்கலாம்.." என்றாள். "ஆமாம்.. எடுத்து வந்திருக்கலாம்.." என்றேன் என்னிடமும் ஸ்வெட்டர் இருப்பதைப் போல். நடைபாதையைவிட்டுக் கொஞ்சம் விலகினாலும் தொட்டாற்சுருங்கியும் நாயுருவியும் கால்களைப் பிராண்டின. பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல் தகதகத்துக் கொண்டிருந்த வானம் மெல்ல மெல்ல ஆறிப் போயிருந்தது. வயல்வெளிகளின் பின்னே தெரிந்த காடுகளும் இருட்டில் மறைந்து போயின. மேலே நடக்க மணற்பாதை ஈரமானதாயிருந்தது. பாதை பள்ளத்தில் இறங்கியது.... அங்கே 'சிலுங்' 'சிலுங்'கென்று சிற்றருவியொன்று நடந்து கொண்டிருந்தது. இதுதான் பாலி ஆறோ? ஆழம் அதிகமில்லை. இலகுவாகக் கடந்து வெளியேறினோம். தூரத்தில் புள்ளிப் புள்ளியாக மினுக்மினுக்கென்று வெளிச்சங்கள் தெரிந்தன. அவை ஏதேனும் வீடுகளிலிருந்து வரும் வெளிச்சமா இல்லை காவற்கொட்டில்களிலிருந்து வருபவையா தெரியிவில்லை. வேட்டைக்குப் போவபர்களின் சூழ்களாகக்கூட இருக்கலாம்.

இருள் அதிகமாக அதிகமாக எனக்கு நெருக்கமாக நடந்தாள். நெருங்கி நடக்கையில் தோளும் தோளும் உராய்ந்தன.

என் தோட்பட்டையும் அவள் நாசியும் ஒரே உயரமாக இருந்ததால் அவள் மூச்சின் உஷ்ணம் என் கழுத்தையும் தோட்பட்டையையும் சுட்டது. பாதையிலிருந்த கிடங்குகளில் கால்கள் இடறுப்பட்டுப் பல தடவைகள் விழவும் போனாள். அடுத்த தடவை அவள் காலிடறியபோது தெறிவினையாக அவள் இடதுகையைப் பற்றினேன். பாதரசம் கொண்ட பாத்திரத்தினுள் கையைப் புதைத்ததைப்போல் சில்லென்று

www.padippakam.com



இருந்தது. இது எதனால்? பயத்தினாலா? நான் கையைப்பற்றிக் கூட்டிப்போவது எதுவும் தப்புமாதிரிப்படவில்லை. ரொம்ப நியாயமாகவேயிருந்தது. அவளும் ஆட்சேபிக்கவில்லை. மிருதுவான அவள் விரல்களுக்கு வலிக்காமலும் - அதே வேளை பறிபட்டுவிடாதபடிக்கு அழுத்தமாகவும் பற்றிப்பிடித்தேன். குளிர்ந்திருந்த அவள் கைகளும் நேரம் ஆக ஆக உஷ்ணமாவதை உணர்ந்தேன். இந்த ஸ்பரிசத் தொடுப்பினூடாக வேறேதோ அதிர்வலையில் ஏதோ ஒன்று என்னுடலுள் செலுத்தப்பட்டு என்னுள் இருந்த ரயில் எஞ்ஜின் அருட்டப்பட்டது. அதன் பகுதிகள் சூடாகத் தொடங்கின. அந்த ஸ்பரிசம் தேவையாகவிருந்தது. அந்தத் தொடுகை அறுபட்டால் சக்தியற்றுச் சாய்ந்து விடுவேன் போலுமிருந்தது. இது எப்படி வந்த உரிமை என்று சிந்திக்க விருப்பமில்லாதிருந்தது. அந்தச் சண்டைக்காரன் 'விட்றா கையை அயோக்கியப் பயலே....' என்றால் அந்த சுகத்தை இழந்து விடுவேனா? இந்த படவாவின் முகத்தை இப்போது கண்ணாடியில் பார்க்க வேண்டும் போலிருந்தது... ஊகூம் மாட்டேன்.

இது தப்பென்றால் அவள் உதறியிருக்கலாமே.. அவளும் என்னைப் போலவே தன்னுள் போராடுகிறாளோ.. என்னை அவமதித்ததாகவோ புண்படுத்தியதாகவோ இருக்குமென எண்ணுகிறாளோ? நான் நினைக்கவும் - 'சரக்' கென்று முள்ளம்பன்றியொன்று என்னை விளக்குமாற்றுக்கட்டால் போலும் அடித்துவிட்டு தேய்த்துக்கொண்டு ஓடியது. "ஐயே!" என்று குதித்தவள் என்னில் தாவிச்சாய்ந்தாள். அவள் ரொம்பவும் பயந்துவிடுவாளென்று "என்ன முயலாயிருக்கும்.." என்றேன். அடுத்ததாய் நிஜமாய் கரடிதான் மேலே விழுந்து பிடுங்கப்போகிறதோவும் தெரியாது. அவளின் மொத்தலால் மார்பின் மென்மையான ஸ்பரிசம்பட்டு மனது நெக்கி அலைந்தது. "இவ்வளவு அருகிலிருக்கே.... சும்மா அலையாமல் அள்ளேன்டா பயலே...." அவன் சொன்னான். என் உணர்ச்சிகளை அவள் முழுவதும் புரிகிறாளா....? புரிந்துகொண்டு.... "ப்பூ.. இவ்வளவுதானா நீ....?" என்று துப்பினாளேயென்றால்.... நான் எப்படி நொறுங்கிப் போயிடுவேன்? என்றோ ஒருநாள் அரைத்தூக்கத்தில் கேட்டுவிட்டு மறந்துபோன ஒரு ஹிந்துஸ்தானி மெலடி, பின்னால் பல தடவைகள் நினைவில் கொண்டுவர முயன்றும் அதன் அமைப்போ இல்லை அதன் சாயலின் ஒரு சிறுகூறுதானோ கண தரிசனம்கூடத் தரமுடியாதென்று முரண்டு பண்ணியது.... இப்போது வலியவே பூரணமாய்ப் பெருகிவந்து என் இசைப்புலம் முழுவதையும் நனைத்தது.

மின்மினிகள் குறுக்கும் மறுக்கும், பறந்தன.

எமது அரவத்தை உய்த்துக்கொண்ட ஆட்காட்டிப் பறவைகள் குரல் கொடுத்தன.

மண்பாதை மணற்பாங்காகி மெல்ல ஈரமாக மீண்டும் அருவி குறுக்கிட்டது. அருவியின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த மருதமரத்தின் கிளைகள் குனிந்து அருவியைத் தொட்டுக்கொண்டு நிற்பது இருட்டில் இராட்சத அரக்கர்கள் அப்படி அணிவகுத்து நிற்பது போலிருந்தது. அவளையும் அவை அப்படித்தான் பயங்காட்டினவோ.... என்னை இன்னும் உரசிக்கொண்டு நடந்தாள்.

இந்தப்பாதையும் அருவியும் இருட்டிலும் என்ன கில்லித் தாண்டி விளையாடுகின்றனவா? பின்னல் ஜடையின் பிரிகளைப் போலத் தம்பாட்டில் பிணைந்து பிணைந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு சென்றன. நடந்தோம். மறுபடி அருவி வந்தது. இம்முறை நாலைந்து அடிகள் வைத்தவுடனேயே நீர் மட்டம் முழங்கால்வரை ஏறியது. நடுவில் ஆழம் அரைக்குமேல் போகலாம். முழங்கால்வரை சேலையை உயர்த்திச் சிரமப்பட்டாள். ஒரே ஒரு வழிதான் இருந்தது. கேட்டேன்.

"சேலை நனைந்து விடாது. உங்களை நான் தூக்கி வந்து விடவா..?" அவள் 'வேண்டாம்' என்று மறுக்க அவகாசமே தராது நான் லங்கோட்டுடன் நின்று கொண்டு வேஷ்டியை மடித்து உத்தரீயம் போல் தோளில் போட்டுக்கொண்டு அவளை ஒரு வாழைக்குட்டியைப் போல அலாக்காகத் தூக்கிக்கொண்டு மேலே நடந்தேன். இடுப்புவரை ஆழம் இருக்கத்தான் செய்தது. தண்ணீர் உணர்ச்சியை முறிக்காமல் என்னுள் இன்னும் அனலைமூட்டி வளர்த்தது. உணர்ச்சியில் மயிர்க்கால்கள் வேறு சிலிர்த்தன. 'கீலா'விலிருந்த காவாலித் தவளை ஒன்று எங்கிருந்தோ உரத்து விசிலடித்தது. கொஞ்சம் இறுக்கமாகவே.... அணைத்தேன். பட்டாக அரைத்த மாவினுள் விழுந்து புரண்டு அளைந்தமாதிரி அவள் தேகம் தந்த சுகம்

"மோடி கிறுக்குதடி தலையை

www.padippakam.com



கனியே நினது இன்பம் வேணுமடி..'' என்று ஏங்கவைத்தது. கைகள் மேலும் மேலும் தேவைக்கதிகமாகவே இறுக்கி அணைத்தேன். தண்ணீர் மட்டம் முழங்காலுக்குக்கீழ் வந்தபோது இறங்க எத்தனித்தாள். மேலும் இறுக்கினேன்.

ஒரு மானைப் போல் திமிறி என்னிடம் விடுவித்துக்கொண்டு தள்ளிப்போய் நின்றாள். என் ஆசைகள் அருவியில் தட்டிக்கொட்டப்பட்டிருக்க சங்கடம் நிறைந்த கணம் நகரா நின்றது. Sorry சொல்லவேணுமா.... வேண்டாமா? அவன் எந்த ஆணையுமிடாமல் என்னை வேடிக்கை பார்த்தான். யார் மேலென்று தெரியவில்லை கோபம் வளர்ந்தது. மேலே நடந்தேன்.

எத்தனை 'அழகுருபிணி'களைக் கண்டு கொள்ளாமலிருந்திருக்கிறேன். அனைவரும் அலர் அகவைப் பருவத்து மாணவிகள். பௌதிகத்தில் ஓட்டமின்னியல் பாடம். கரும்பலகையில் சுற்று ஒன்றை வரைந்து கொண்டிருக்கிறேன்.

"மாஸ்டருக்கு வடிவான பல்லடி..''

"போடீ கட்டைத் தாரா.. அவர் எனக்குத்தான் மாட்ச்!''

விமர்சனங்களைக் காதில் போடாதிருந்தால்தான் ஒழுங்காய் பாடம் நடத்தலாம். முன் பெஞ்சில் ஒருத்தி ''கிசுகிசு'ப்பான குரலில் சொன்னாள்:

"சேர்..இவ உங்களை அத்தானாம்..!''

'யாரந்தத் துணிச்சற்காரி..?' சட்டெனத் திரும்பினேன். என்னையே குறுகுறுப்புடன் பார்த்துக்கொண்டிருந்த வகுப்பின் ஹீரோயினான அழகி நாணித் தலைக் கவிழ்கிறாள்.

இன்றைய இந்தச் சலனத்தின் மூலவேர்தான் என்ன.... அவள் கலையா? நடக்கிறேன். அவள் தொடர்ந்து வரவில்லை. சற்று நின்றேன். வருவதாயில்லை. எங்குதான் போய்விடப்போகிறாள் என்று மனது வக்ரம் கொண்டது. மெதுவாகவே நடந்தேன். பாதையை விட்டிறங்கி காட்டினுள் மெல்ல ஒளிந்து விடுவோமா.... அப்போது என்னதான் செய்கிறாளென்று பார்ப்போம்.... வேண்டாம் நிஜமாகவே அவள் என்னைத் தொலைத்துவிட்டாளாயின் எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம்.... நளன் காலத்திலிருந்து வரும் பழி! அவள் ஓடி வரும் காலடி அதிர்வு கேட்டது. அருகில் வந்ததும் மூச்சு வாங்கியபடியெ "sorry ஹரிகேசன்'' என்றாள்.

"எதுக்காம்....?''

"நான் அருவியில் மூழ்கியே போவதாக்விருந்தாலும் என்னைத் தொட்டுத் தூக்க வைத்திருக்கப்படாது.... It's absolutely my fault.... I admit it.... Yes I admit it.... நானும் ஒரு நிமிடம் மயங்கி விட்டேன் என்று வைப்போமே.... நாளைக்கு என்மேல உங்களுக்கு இன்றைக்கு இருக்கிற அபிப்பிராயம் இருக்காதில்ல....?''

மாடுகளுக்கு குறி இழக்கும்போது உண்டாகும் தோலும் உரோமமும் கருகும் மணம் காற்றில் வந்து குமட்டியது.

மௌனமாகவே நடந்தோம். பனியில் குளித்த தேன்புற்கள் பாதங்களை நனைத்தன. முன் உடல் கெழுத்தி மீனைப் போலவும் பின்பக்கம் டொல்பினைப் போலவுமிருந்த விலங்கொன்று வானில் 'டைவ்' அடித்துப் போனது. நாங்கள் கவனிக்காத கணமொன்றில் சூரியனிலிருந்து உடைத்துக்கொண்டு வந்த பெரிய துண்டுபோல் ஒரு வெள்ளி வடகிழக்கில் தோன்றித் துள்ளித்துள்ளி எறித்தது. "அதோ விடிவெள்ளி'' என்றாள்.

வானத்தின் வெள்ளிப்பனித் திட்டுகளிடையே குள்ளமான மனிதர்களிலிருந்த sledgeகளைப் பிணைத்திருந்த ஏழெட்டு நாய்கள் வேகமாக இழுத்து வழுக்கிக் கொண்டு போயின.

"Fritjof Capra ன் The Tao of Physics படித்தீர்களா....?'' கேட்டாள்.

"கேள்விப்பட்டிருக்கிறேன்.... இனிமேல்தான் படிக்கவேணும்....''

கீழ்வான விளிம்பில் மெல்லச் சிவப்பேறியது.

"பார்த்தீர்களா.... வானத்தை அது விடிவெள்ளியேதான்....!'' குதூகலித்தாள்.


மல்லிகை, முல்லை மருக்கொழுந்துடன் என்றுமே பார்த்திராத ஆயிரம் மலர்கள் எல்லாமே இதழ்களால் ஒளி உமிழ்வனவாய் வானத்தில் மேலும் பூக்க பவனம் சுகந்தம் நிறைந்தது. Teddy Bearஐப் போலிருந்த முகிலொன்று தூரத்தே காட்டில் இரகசியமாய் வழுக்கி இறங்கிக் கொண்டிருந்தது. இன்னும் பாதை அடிவானம் நோக்கி நீள்வதாயிருந்தது..

ஆனால் தெளிவாக இருந்தது.

நாங்கள் நடந்தோம். ❑

www.padippakam.com






நகரத்தைவிட்டுக் கடல் பிரித்து வைத்திருக்கும் அந்தச் சிறிய அழகிய வட்டத் தீவான மாட்டுப் பிட்டியை நகரத்தோடு இணைக்கும் பாலம் மாட்டுப்பிட்டிப் பாலம்.

நம்மிடத்திலும் கண்ணாச் செடிகளும், வீச்சுளாத்தி, சடக்கு, வீளி மரங்களும் நிறைந்த ஓர் அழகிய மாடோடிப்பிட்டி இருக்கிறது. மண்டைதீவுச் சந்தியிலிருந்து வடகிழக்காய், சிறுத்தீவுக்குத் தென் திசையில் அது அமைந்திருக்கிறது. 91ஆம் ஆண்டு அந்தத் தீவின் கரையில்தான் என் அப்பனின் உழைப்புறுதியில் புடைத்த கால்களிலொன்று மிதிவெடியில் காணாமல் போனது. (இது என் அப்பனின் தொலைந்துபோன காலைப்பற்றிய கதையல்ல, எனவே அதை விட்டு விடுவோம்) அந்த மண்டைதீவு மாடோடிப்பிட்டியைப்போல் இந்த மாட்டுப்பிட்டியும் அழகுக்குப் பஞ்சமில்லாத ஓர் தீவு.

மாட்டுப்பிட்டிப் பாலம் நகரத்தை நோக்கி வந்து தொடுவது சின்னப்பூங்கா வீதியை. சின்னப்பூங்கா வீதி இரு கூறுகளாகப் பிரிந்து ஒன்று நகர மையத்தைச் சென்றடைகிறது. ஒன்று ஆடியாடிச் சென்று பேடர்சன் தெருவோடு கைகுலுக்கிக் கொள்கிறது. பேடர்சன் தெருவின் 105ஆம் இலக்க வீடு, கிழவி லின்டா குலாகசனின் வீடு. கிழவியின் வீட்டுக்கு எதிர்த்திசையில், வீதியின் மறுகரையில் 106ஆம் இலக்கத்தில் மாறித் துரொண்ணிங் குடியிருக்கிறாள். மாறித்தின் வீட்டுக்கு எதிராகவும், கிழவியின் வீட்டுக்கு வலது அருகாகவும் 107ஆம் இலக்கத்தில் நிலவறைக் குடித்தனமாய் நாங்கள்.

ஆந்த்ரேக்கு சுகந்தியில் சரியான நேசம். சுகந்தியும் அப்படித்தான். ஆந்த்ரேயில் நல்ல விருப்பம். ஆனால் இவர்கள் இருவரும் நேசம் பகிர்ந்து கொள்வது டேவிட் குலாக்சனுக்கு அறவே பிடிக்காது. கிழவி லின்டா குலாக்சனுக்கு அப்படியல்ல. சுகந்தியும், ஆந்த்ரேயும் சந்தித்து ஒருவரையொருவர் கொஞ்சி, உரசிக்கொளவதைக் கண்டு தன்னை மறந்து ரசித்துக் களிப்பாள்.

தாங்கள் ஒருவரையொருவர் சந்திப்பதையும், கொஞ்சிக் கொள்வதையும் டேவிட் குலாக்சன் விரும்பவில்லையென்பதை சுகந்தியும், ஆந்த்ரேயும் அறிந்தே வைத்திருந்தனர். அதனால் டேவிட் குலாக்சன் வீட்டிலில்லாத சந்தர்ப்பம் புரிந்து சந்தித்துக் கொள்வதை வழக்கமாக்கிக்கொண்டனர். இவர்களிருவரின் புத்திசாலித்தனத்தைக் கவனித்த கிழவி லின்டா தனக்குள் வியந்து கொண்டதோடு, விரும்பி ரசிக்கவும் செய்தாள். 'இவர்களிருவரின் பாசப் பகிர்வை வெறுப்பது முறையல்ல' என தன் கணவன் டேவிட் குலாக்சனுடன் பல தடவைகள் சச்சரவுப் பட்டிருக்கிறாள். ஆயினும் கிழவன் தன் வெறுப்பைக் காட்டவே செய்தான்.

சுகந்திக்கு இன்று ஐந்தாவது பிறந்ததினம். சிறுவர் பூங்காவில் தனது சகாக்களுடன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடிவிட்டு நின்றவளை வீட்டுக்கு அழைத்துவரப் போனேன். என்னைக் கண்டதும் 'சுகந்தி, ஐந்து வயது' என பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ரோசாநிறக் கிரீடம் அவளது தலைமேல் அலங்கரித்து நிற்க, என்னைத்தேடி நிறைந்த புன்னகையோடு ஓடி வந்தாள். அவளை அள்ளியெடுத்து முத்தமிட்டுக் கொண்டேன்.

"இண்டைக்கு என்ட பிறந்தநாளுக்கு ஆந்திரேயும் வருந்தானேயப்பா?" ஆவலோடும், அதேகணம் ஆதங்கக்

www.padippakam.com



கீறல் விழவும் கேட்டாள்.

"இல்லக் குஞ்சு. இண்டைக்கில்ல. நாளண் டைக் குத்தான் வீட்ட உங்கட பிறந்தநாள்." என்றேன்.

"இல்லயப்பா. நீங்க பிழ. இண்டைக்கித்தானேயப்பா என்ட பிறந்தநாள்". என்றாள் எனது தவறைத் திருத்தும் தொனியில்.

"ஓம் குஞ்சு. இண்டைக்குத்தான் செல்லத்துக்குப் பிறந்தநாள். ஆனா இண்டைக்கு வியாழக் கிழம யெல்லோ..." கேட்டேன்.

"ம்..." என்றாள்.

"நாளண்டைக்குத்தானே சனிக்கிழம...?" கேட்டேன்.

"ம்...:அவனைஅவனை" என்றாள்.

"அப்ப குஞ்சுக்கு நாளண்டைக்குத்தான் வீட்ட கேக் வெட்டுறது" என்றேன். சிறிது யோசித்தாள்.

"இல்லயப்பா... நீங்க பிழயாச் சொல்லுறீங்க..." தவறைச் சுட்டும் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

"நீங்க மறந்திட்டீங்களப்பா. இஞ்சப் பாருங்க.... பார்னஹாகனிலயெல்லாம் இண்டைக்கு எனக்கு முடியெல்லாஞ் செய்து, கேக் வெட்டினனாங்கள். இண்டைக்குத்தான்"

"ஓம் செல்லம். இண்டைக்குத்தான். ஆனா, வீட்ட நாளண்டைக்குத்தான் கேக் வெட்டுறம்" என்றேன்.

"ஏனப்பிடி...?" கேட்டாள் திரும்ப என்னை. குளிருடைக்குள் அவளைத் திணித்தவாறே

"இண்டைக்கு வியாழக்கிழம, நாளைக்கு வெள்ளிக்கிழம, நாளண்டைக்குத்தானே சனிக்கிழம...?" என்று கேட்டேன் அவளை.

"ஓம்" என்றாள்.

"நாளண்டைக்குத்தான் அம்மாவுக்கு, அப்பாவுக்கு, கணேஸ் மாமாவுக்கு, கோமளா அன்ரிக்கு எல்லாருக்கும் லீவு. சனிக்கிழம கேக் வெட்டினாத்தானே எல்லாரும் வருவினம்?" எனது விளக்கமும், கேள்வியும் அவளைக் குழப்பியிருக்க வேண்டும். சிறிது யோசித்தாள்.

"அப்பிடியெண்டால்.... சனிக்கிழம தமிழ்ப்பள்ளி இல்லயோ..?"சப்பாத்துகளுக்குள் தனது கால்களைப் புதைத்தவாறே கேட்டாள்.

"தமிழ்ப்பள்ளி முடியத்தானே கார்த்திகாக்கா, கமலனண்ணா, சுரேசண்ணா, மாலதியக்கா, ஹம்சன் எல்லாரும் வருவினம். தமிழ்ப்பள்ளி முடிஞ்சபிறகுதான் நீங்க வீட்ட வந்து கேக் வெட்டுறது." சிறுவர் பூங்கா கட்டடத்தை விட்டு வெளியே வந்தபடி கூறினேன். தனது முதுகுப் பையின் செவிகளிரண்டுக்குள்ளும் தனது கைகளிரண்டையும் பக்குவமாய்ச் சொருகி முதுகுப்புறம் தொங்கவிட்டபடிதனது, எனது சின்ன விரலை இறுகப் பற்றிக்கொண்டு அவளும் என்னோடு வந்தாள். எனது பதில் எதுவும் அவளுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை.

"அப்பிடியெண்டால், சிவதாஸ் மாமாவுக்குச் சனிக்கிழமதானே வேல...?, அவர் வரமாட்டாரோ...?" தொடராய் அவளது கேள்விகள் வந்து கொண்டிருந்தன.

"வருவார் குஞ்சு. சிவதாஸ்மாமா வேலயக் கெதியா முடிச்சுப்போட்டுச் செல்லத்தின்ர பிறந்தநாளுக்கு ஓடி வந்திருவேர் என்ன்" எனது பதில்கள் அவளுக்கு திருப்தியைக் கொடுக்கவேண்டும் என்பது எனது அவா.

"ம்... அப்ப சரி. பார்னஹாகனில இண்டைக்கு நான் கேக் வெட்டி, எல்லாருஞ் சாப்பிட்டனாங்கள். ஆந்திரேக்குங் கொண்டாறன்.:" என்றபடி தனது முதுகுப்பையைத் தொட்டுக் காட்டினாள்.

"ஓம். நீங்க கொண்டுபோய் ஆந்திரேக்கும், ஆந்திரேயாச்சிக்குங் குடுத்திட்டு வாங்க, பிறகு சனிக்கிழம அவயள் எங்கட வீட்ட வருவினம் என்ன?!"

"ம்...:" பெரிதாய்ச் சிரித்தபடி தலையசைத்தாள்.

கடந்த நான்கு வருடங்களாய்ச் சுகந்திக்கு பிறந்த தினம் கொண்டாடவேயில்லை. கொண்டாட வில்லையென்றால்...?! ஆட்களை அழைத்து, அழைக் கப்பட்டவர்கள் பரிசுப்பொட்டலச் சுமைகளுடன், வெளிக் காட்டமுடியாத ஒரு சினத்தையும் சுமந்து புடைசூழ நிற்க, ஒரு கப்பல், அல்லது ஒரு விமானம், அல்லது ஒரு முயற்குட்டி, அல்லது ஒரு பூனைக்குட்டி, அதுவுமில்லையேல் ஒரு வண்ணத்துப்பூச்சி இப்படி ஏதாவது ஒரு உருவ அமைப்பில் செதுக்கப்பட்டு வண்ணக் கோலங்களிட்ட கேக் ஒன்றின்மீது வயதெண்ணிக்கையிலான மெழுகுதிரிகளை நாட்டி, (அதிலும் ஆணென்றால் நீலமும், பெண்ணென்றால் றோஸ் நிறமுமென வகுத்து) சர்வதேச பிறந்தநாள் மந்திரமான "ஹப்பி பேர்த்டே டு யூ" என்ற வரிகளை அவரவர் தத்தமக்கேற்ற சுருதிகளில் மூன்று தடவைகள் உச்சரித்து, அதிலும் மறக்காமல் மூன்றாவது தடவை உச்சரிக்கும்போது பிறந்தநாளுக்குரிய நபரின் பெயரை இறுதி 'யூ'வுக்குப் பதிலாய்ச் சேர்த்துச் சொல்லி முடிய, கேக்கின்மேல் ஏற்றி வைத்த மெழுகுதிரிகளை குழந்தை ஊதி நூர்த்தபின் (ஊதி நூர்க்கத் தெரியா சிறிய குழந்தையென்றால் தாயும், தந்தையும் சேர்ந்து ஊதி நூர்த்து, கேக்கையும் தாங்களே வெட்டுவது) எல்லோரும் கைதட்டி, முட்டைக்கேக் சாப்பிடா விருந்தாளிகளுக்கு ஓடர் கொடுத்துச் செய்யப்பட்ட சைவக் கேக் பரிமாறி....,

ஒரு பிறந்தநாள் வைபவத்தில் சைவக் கேக் பற்றிய விவாதமும் நடந்தது. "சைவக் கேக் அடிப்பதற்கு பட்டர் பாவிக்கிறார்கள்தானே, தொழிற்சாலைகளில் பட்டர் தயாரிப்பதற்கு பன்றிக் கொழுப்பும் சேர்க்கிறார்கள் அப்படியிருக்க இதெப்படிச் சைவக் கேக் ஆக முடியும்?" என்று ஒரு சாராரும், "இல்லையில்லை பன்றிக் கொழுப்புச் சேர்க்காத பட்டரும் உண்டு. அதனைத்தான் சைவக் கேக் தயாரிக்க உபயோகப் படுத்துகிறார்கள்" என இன்னொரு சாராரும், "பாபம் சாப்பிடுபவர்களுக்கில்லை, விற்பவர்களைத்தான் சேரும்" என நடுநிலைச் சாராரும் விவாதங்களைப் பகிர்ந்துகொண்டனர். (பரிமாறல்களுடன் தாங்கள் தாங்கள் தயாரித்துவந்த சர்வதேச அரசியற் கண்ணோட்டங்கள், புடவைத் தொழிற்சாலை விபரங்கள், தங்கச்சுரங்கப் பட்டியல்கள் எனப் பலதும் பரிமாறி)

இப்படியான எடுப்புச் சாய்ப்புகளுக்கு என் மனைவியோ, நானோ பிரியப்படவில்லை. கடந்த சில மாதங்களாய் மகள் தமிழ்ப் பாடசாலையில் சேர்ந்தபின் தானாகத் தேடிவரும் பிறந்தநாள் அழைப்புகளைத் தட்டிக்கழிக்க முடியாத சூழ்நிலையாதலால், நானோ, அல்லது என் மனைவியோ அவளைப் பிறந்தநாள்

www.padippakam.com



கொண்டாட்டங்களுக்கு அழைத்துச் செல்வோம். அப்படிச் சில கொண்டாட்டங்களுக்குப் போய்வரத் தொடங்கியதும் அவள் பிஞ்சுமனதில் பல கேள்விகள் எழுந்திருக் கின்றன. அவற்றை எம்மிடம் பல தடவைகள் கேட்டும் விட்டாள்.

தவிர்க்கமுடியாது. நாம் சொல்லி, அவள் புரிந்து கொள்ளும் வயதுவரை தவிர்க்க முடியாது. நானும் என்னவளும் முடிவெடுத்துக் கொண்டோம். ஆனாலும் சில எல்லைகளை வகுத்துக் கொண்டோம். எப்படித்தான் எல்லைகளை வகுத்தாலும் கிழமை நாட்களில் கொண் டாட முடியாமல், சனி ஞாயிறென பிற்போடும் நிலை தான். தவறாமல் பிறந்தநாள் கொண்டாடும் பிள்ளை யெனில், கேக் வெட்டுவது ஏன் சனிக்கிழமையாகப் பின் போடப்பட்டுள்ளதெனச் சட்டெனப் புரிந்து கொண்டி ருப்பாள். இதென்னவென்றால், இப்போதுதான் முதற்த டவையாக தனது பிறந்தநாளை, அதுவும் ஐந்தாவது பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடப் போகிறாள். தாமதமாகவே அவளுக்கு சிறுவர் பூங்காவில் இடம் கிடைத்ததால் கேக் வெட்டும் முன்னனுபவமும் இல்லை. இம்முறைதான் அதற்கும் வழி பிறந்திருக்கிறது.

வீட்டுக்குள் சென்றதும் சிறுவர் பூங்காவில் தனக்குச் சூட்டிய கிரீடத்தைத் தாயிடம் காட்டினாள். அவளை இறுகத் தழுவி முத்தமிட்டாள் தாயாள். தனது முதுகுப் பையிலிருந்து பொட்டலமொன்றை எடுத்துத் தாயிடம் காண்பித்தாள். சிறுவர் பூங்காவில் அவளுக்கெனக் கொடுத்த கேக் துண்டில் ஒருபாதி அது. அது ஆந்த் ரேக்குரிய பங்கு எனவும், தான் அதனை ஆந்த்ரேக்குக் கொடுத்து வரப்போவதாகவும் தாயிடம் அனுமதி கேட் டாள். தாயும் சம்மதித்தாள். சிறுவர் பூங்காவிலிருந்து வந்த உடைகளுடன் ஆந்திரேயைத்தேடிப் புறப்பட்டாள் சுகந்தி.

வாசலின் அழைப்புமணியோசை கேட்டு கிழவி லின்டா கதவைத் திறந்தாள். வாசலில் சுகந்தியைக் கண்ட கிழவி அவளை முகமலர்ச்சியோடு வரவேற்று, பிறந்ததின வாழ்த்துக்களைக் கூறிக் கொண்டதோடு, கட்டித் தழுவி முத்தமிட்டாள். வீட்டுக்குள்ளிருந்து ஆந்த்ரே வாலை ஆட்டிக்கொண்டு ஓடிவந்தது. இரண்டு தடவைகள் "வவ்... வவ்:." என்று குரைத்தது. சுகந்தி யின்மீது ஏறிப் பாய்ந்து ஆனந்தக் கூத்தாடியது. அவ ளைக் கொஞ்சியது. சுகந்தியும் அதனை முத்தமிட்டாள். ஆந்த்ரேயின் மோவாயை, முதுகை தடவினாள். அது மீண்டும், மீண்டும் அவளைக் கொஞ்சியது. ஆனந்தக் குரைப்புக் குரைத்தது. கிழவி பூரிப்போடு இருவரையும் கண்ணிமைக்காது பார்த்து ரசித்தாள். தான் ஆந்த் ரேக்காகக் கொண்டுவந்த கேக் துண்டைக் கிழவியிடம் காட்டினாள். ஆந்த்ரேக்குக் கொடுக்கலாமா என அனுமதி கேட்டாள்.கிழவியும் சம்மதித்தாள். சுகந்தி தான் கொண்டுவந்த பொட்டலத்தைப் பிரிக்கத் தொடங்கினாள். தனக்கு அவள் பிரியமாய் ஏதோ கொண்டு வந்திருக்க றாள் என்பது ஆந்த்ரேக்குப் புரிந்து விட்டது. அவள் பொட்டலத்தைப் பிரித்தெடுக்கும்வரை பொறுமை யிழந்ததாய் அங்குமிங்கும் ஓடியது. குரைத்தது. அவளைக் 'கொஞ்சியது. பிரித்த பொட்டலத்திலிருந்து கேக் துண்டை எடுத்து ஆந்த்ரேக்கு ஊட்டத் தொடங் கினாள். வாசற்கதவு திறக்கும் சத்தம் கேட்டது. போதை யில் தள்ளாடியபடி வீட்டினுள்ளே நுழைந்தான் கிழவன் டேவிட் குலாக்சன். ஆந்த்ரேக்குக் கேக் ஊட்டிக்கொண் டிருந்த சுகந்தியைக் கண்டதும் கிழவியுடன் சீறினான். சுகந்தியின் கையிலிருந்த பொட்டலத்தைப் பறித்துச் சுவரோடு வீசி எறிந்தான். "மனிதப் பண்போடு நட வரம்பு மீறாதே" என உச்ச ஸ்தாயியில் எச்சரித்தாள் கிழவி கணவனை. ஆந்த்ரேயைக் காலால் எட்டி உதைத்தான். ஆந்த்ரே அடுக்களைப் பக்கம் வீரிட்டபடி ஓடியது. சுகந்தி பயந்து நடுங்கினாள். சுகந்தியின் நிலையைப் புரிந்துகொண்ட கிழவி, அவளைத் தன் அணைப்புக்குள் உட்படுத்திக் கொண்டாள். "அவளை வெளியே அனுப்பு" என்று உரத்த குரலில் கத்தினான் கிழவன். "வெளியேறவேண்டியது மனிதப் பண்பில்லா நீதான்" என்று கோபாவேசமாக, வாசற்கதவைக்காட்டி உத்தரவுத் தொனியில் கூறினாள் கிழவி லின்டா. என்ன நினைத்தானோ தெரியவில்லை, மகுடியிடும் கட்ட ளைக்கு மண்டியிடும் சர்ப்பம்போல் எதுவுமே பேசாது கிழவன் அடங்கிப்போனான்.

சனிக்கிழமை.

வியாழக்கிழமை இரவிலிருந்து சுகந்திக்கு ஒரே காய்ச்சல். வாயுளறினாள். பயந்து பயந்து நடுங்கினாள். இரண்டு தடவைகள் வைத்தியரிடம் காட்டியாயிற்று. காய்ச்சல் நிற்கவில்லை. இன்று அவளை வைத்திய சாலையில் மறித்து விட்டார்கள். சுகந்தியின் பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு அழைத்தவர்களுக்கு, இன்று கொண்டாட்டம் இல்லையென தொலைபேசியில் அறி விப்பதற்காய் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு வந் தேன். கிழவியின் வீட்டு முன்றலில் பொலிஸ் வாக னங்கள் இரண்டும், அம்புலன்ஸ் வாகனமொன்றும் தரித்து நின்றன. பொலிஸ் வாகனத்தில் டேவிட் குலாக் சன் ஏற்றப்படுவதையும், "கொலைஞனைக் கொண்டு செல்லுங்கள். பாவாத்மாவைத் தண்டியுங்கள்" என்று கிழவி கண்ணீர் பெருக புலம்பிக்கொண்டு தெருவோரம் நிற்பதையும் கண்டு சற்றுக் குழம்பித் தடுமாறித்தான் போனேன்.

"இரண்டு நாட்களாக ஆந்த்ரே எதுவுமே சாப்பிடாமல் நோன்பிருந்ததாம். ஆந்த்ரேயின் வைராக்கியத்தைப் பொறுக்கமுடியாத கிழவன் கோபங்கொண்டு இரும்புச் சட்டத்தால் அதன் தலையில் போட்டிருக்கிறான். ஆந் த்ரே அந்த இடத்திலேயே தன் உயிரைத் தான மிட்டது. கிழவி பொலீஸுக்கு அறிவித்துவிட்டாள்" மாறித் துரொண்ணிங் செய்தி சொன்னாள் எனக்கு.

ஆந்த்ரேயின் உடல் பிரேத உறைக்குளிட்டு அம்பு லன்ஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டது.

எனது விழிகள் என்னையுமறியாது பனித்தன. நெஞ்சு க்குள் ஏதோ கனத்தது. மூச்சு முட்டுவ தைப்போலிருந் தது. 'சுகந்தி குணமாகி மீண்டும் வந்து ஆந்த்ரேயை விசாரித்தால்...?' எனக்குள் எழுந்த கேள்வி என்னையே பயமுறுத்திற்று. பேடர்சன் தெருவுக்கு விடை கொடுக்கும் எண்ணம் மட்டுமே இப்போதைக்கு எனக்குப் புலப்பட்ட தீர்வாய்த் தெரிந்தது. ❑

www.padippakam.com

இளையவன்

# போர்க்களம்

“தம்பி, இந்தாரும் தேத்தண்ணி” கிறீச் என்ற மெல்லிய ஒலியுடன் கதவு திறபடுவதற்கு முன்பாகக் குரல் செவிப்பறையில் வந்து தட்டியது. விமலன் நித்திரை கலைந்து கண் திறந்தான்.

சூரியக்கதிர்கள் சில நிலத்தில் வட்டப் பொட்டாக..

சுவரில் தொங்கிக்கொண்டிருந்த மணிக்கூடு நேரம் ஆறரை என்பதை உணர்த்தும் வகையில் ஒரு தடவை ஒலித்து ஓய்ந்தது.

“இனியும் படுத்திருக்கக் கூடாதுதான். ஆனால் இப்பவே எழும்பி செய்யிறதுக்குத்தான் என்ன வேலை கிடக்கு” விமலனின் மனம் எண்ணிக் கொண்டது.

“என்ன தம்பி, என்ன ஏதோ கடுமையா யோசிக்கிற மாதிரிக் கிடக்கு” தனலட்சுமி கேள்வி எழுப்பினாள்.

“அப்பிடி ஒண்டும் விசேடமாயில்லை” என்றவன் படுக்கையை விட்டெழும்பினான். தலையணையின் அருகில் நோட்டம்விட்டு மறைத்து வைத்திருந்த பிஸ்டலையும், ரவைக்கூட்டையும் பார்வையால் அலசினான். குனிந்து அவற்றை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டபின் தலையணையை ஓரமாக எடுத்து வைத்துவிட்டு பாயைச் சுருட்ட ஆரம்பித்தான்.

“அது கிடக்கட்டும் தம்பி, தேத்தண்ணியை சூடாற முன்னம் குடியுமன்” தனலட்சுமி வேண்டுகோள் விடுத்தாள்.

“ஓமோம் கொஞ்சம் பச்சைத்தண்ணி தாங்கோ.. வாயைக் கொப்புளிப்பம்” விமலன் கூறினான்.

செம்பு நிறையத் தண்ணீருடன் வந்த தனலட்சுமி, அறைக்கு வெளியே வரவேண்டாம் எனச் சைகை காட்டியபடி செம்பைக் கதவோரமாக வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

“என்ன ஆச்சி இண்டைக்கு நேரத்தோட வந்திட்டியள்?”

“ஓம் மோன பழுத்தல் இல குத்திக்கொண்டு போவமெண்டு வந்தனான். ராத்திரியும் ஆட்டுக்கு ஆன தீன் போடேல்ல.”

“அதுக்கென்ன முத்தத்துப் பிலாவில விழுந்து கிடக்கிறதைக் குத்துங்கோவன்” எனக்கூறிய தனலட்சுமி முன் வராந்தாவில் கிடந்த கதிரையொன்றில் இருந்து கொண்டாள்.

தான் கொண்டுவந்திருந்த நீளமான கம்பியொன்றில் ஒவ்வொரு பிலா இலையாகக் குத்தி மேலுக்கு இழுத்துவிட்டுக் கொண்டிருப்பதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தனலட்சுமி. ஒவ்வொரு இலையாகச் சேர்த்து சுமார் இரண்டரை அடி நீளமான அக்கம்பி நிறைய பிலா இலை சேர்ந்ததும்?

“பிள்ளை! நான் போட்டு வாறன்” என்று சொல்லிவிட்டு ஆச்சிமுத்துக் கிழவி நகர்ந்தாள்.

“ஓமோம் போட்டு வாருங்கோ” தனலட்சுமி வழி அனுப்பி வைத்தாள். அவளையும் அறியாமலே ஒருவித நிம்மதிப் பெருமூச்சு தோன்றியது.

“இனியெண்டாலும் வெளியில வரலாமோ” விமலனின் குரல் தனலட்சுமிக்கு தெளிவாகக் கேட்டது.

“இது சரியான விண்ணாளம் பிடிச்ச கிழவி. உம்மை இதில கண்டால் ஆர் எவர் எண்டு விசாரிக்கத் தொடங்கி

www.padippakam.com



அதைப் பிறகு பத்து வீட்டுக்கு சொல்லி திரியும். எதுக்கு வீண் சோலி" தனலட்சுமி தனது செய்கைக்குக் காரணம் கூறினாள். "ஓமோம்.. அது சரிதான்" விமலனின் உதடுகள் ஆமோதித்தன. ஆனால் உள்ளத்தின் மூலையில் ஏதோ இடித்தது போலிருந்தது.

"இந்தாங்கோ இதை அம்மாட்டைக் குடுங்கோ" தேநீர்க் கோப்பைகளை நீட்டினான் விமலன் - குழந்தை சிந்துஜாவை நோக்கி.

கண்களைக் கசக்கிக்கொண்டு அப்போதுதான் நித்திரையை விட்டெழும்பி வந்த சிந்துஜா "அம்மா.." எனச் சிணுங்கினாள்.

"இங்க இருக்கிறன் வாங்கோ.." எனக் குரல்கொடுத்த தனலட்சுமி குசினிக்குள் தனது வேலையில் மூழ்கியிருந்தாள்.

"எங்கையக்கா.. அண்ணையைக் காணேல்ல" கிணற்றடியை நோக்கி நடந்த விமலன் வினா எழுப்பினான்.

"அவர் பாலும் வாங்கிக்கொண்டு பேப்பரும் எடுத்து வாறன் எண்டு போனவர்" தனலட்சுமி கூறி முடித்தாள்.

"அம்மா எனக்குத் தேத்தண்ணி" எனச் சிணுங்கியபடி சிந்துஜா தாயினருகே வந்து சேர்ந்தாள்.

"உது ஆர் பிள்ளை கிணத்தடியில குளிக்கிறது.. உன்ரை அவரின்ரை ஆக்களோ.."

ஆரோ கேள்வியும் கேட்டு பதிலும் கூறுவது விமலனுக்குத் தெளிவாகவே கேட்டது.

"ஓமோம்.. அது எங்கடை அவரின்ரை அண்ணன் பெஞ்சாதியின்ரை அக்கா புருஷனின் அண்ணன் மகள்" தனலட்சுமி நீட்டி முழக்கி ஒரு சொந்தம் சொன்னாள்.

"ஆ.. ஆ.. ஏதும் விசேடமாய் வந்தவரோ"

அந்தக் குரல் அடுத்த கேள்விக்குத் தாவியது.

ஓமோம்.. இங்கயிருநது தான் இனிமேல் படிக்கப் போறார். தாய் தகப்பனவை தீவுப் பக்கத்தில் இருக்கினம்.. ரியூசனுக்கு வந்து போறது கஷ்டம். இங்க இருந்தால் ரவுணுக்குப் போய்வர சுகம்தானே" தனலட்சுமி விபரித்தாள்.

"ஓமோம்.. உங்களுக்கும் உதவி ஒத்தாசையாய் இருக்கும்தானே" குரலுக்குரியவரின் அபிப்பிராயம் வெளிப்பட்டது.

"சாய்.. எத்தனைபேர் என்னென்ன விதமாய் எல்லாம் கேள்வி கேக்கினம்.. இதுக்கெல்லாம் பதில் சொலலித்தானே என்னைக் காப்பாத்த வேண்டிக் கிடக்கு" எண்ணிக்கொண்டபோது விமலனின் உள்ளம் துணுக்குற்றது.

நாய்கள் உரத்துக் குரைத்தன. தொலைவில் கேட்ட குரைப்பொலி தொடர்ச்சியாக.. நெருங்கி நெருங்கி வருவதாக..

"சலோ.. சலோ.. ஜல்தி..ஜல்தி" இந்தி மொழி வார்த்தைகளும் கூட கேட்கத் தொடங்கிவிட்டன.

விமலன் விரைவாக ஆனால் நிதானமாக தனது குளிப்பை முடித்துவிட்டு அறைக்குள் வந்து புகுந்தான். பத்திரப்படுத்தி வைத்திருந்த பிஸ்டலைக் கைகளில் எடுத்தவன் திடீரென அதற்கொரு முத்தம் கொடுத்துவிட்டு நிமிர்ந்தான்.

"அவங்கள் சும்மா ரோட்டால போறாங்கள். கடைசி ஆளும் போய்ச் சேர்ந்திட்டான். நீர் சாப்பிடுமன்." எதிரில் நின்ற தனலட்சுமி சொன்னாள்.

காலைச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்த விமலன், இனி இந்தப் பகல் முழுதும் என்னதான் செய்யிறது என அலுத்துக் கொண்டாள்.

"நீங்கள் எங்கயும் போகப் போறியளோ" தனலட்சுமி கேட்டாள்.

"ஏனக்கா.. எங்கை போறது? அதுகும் பகல் நேரம்.. ஆரும் கண்டாலும் வீண் சோலி"

"இல்ல.. நான் குளிக்கப் போறன்? வெளியில போறதெண்டா வெளிக்கேற்றை பூட்டுவம் எண்டுதான் கேட்டனான்."

"நேரமும் பத்தாகப் போகுது.. அண்ணரையும் காணேல்ல"

"ஆரும் கதைக்கு கிடைச்சிருப்பினம்.. கதைச்சுக் கொண்டு நிக்கிறாராக்கும்" என விமலனுக்கு பதில் கூறிவிட்டு "சிந்துஜா வாங்கோ" எனக் கூப்பிட்டுக் கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

மூலையில் கிடந்த கரம் போர்ட்டை எடுத்து குட்டி மேசையில் வைத்து காய்களை ஒருவிதமாக அடுக்கி வைத்தான் விமலன். காய்களை அடிக்கும் மஞ்சள்நிற டிஸ்க்கை எடுத்துக்கொண்டு ஒரு காய்க்கு மூன்று தரத்திற்கு மேல் குறி வைக்கக்கூடாது. ஒரு காய் இன்னுமொன்றில் தட்டுப்படக்கூடாது.

இந்தப் பதின்மூன்று காய்களையும் குழிகளில் விழுத்த வேணும் என்று தனக்குத் தானே விதிமுறை வகுத்துக்கொண்டு ஆட்டத்தில் இறங்கினான்.

ஒன்று.. ரண்டு.. மூன்று.. நான்கு.. ஐந்து சனியன் பிழைச்சுப் போச்சு. மீளவும் காய்களை எடுத்து அடுக்கினான். மீண்டும் ஒன்று, இரண்டு, மூன்று.. சாய் அடிபட்டுப் போச்சுது. மீளவும் அடுக்கினான்.

"மாமா சீப்பையும் பவுடரையும் எடுத்துத் தாங்கோ" சிந்துஜா.. கேட்டாள்.

கண்ணாடிக்கு முன்பாக இருந்த சீப்பையும், பவுடரையும் எழும்பிப்போய் எடுத்தவன் இந்தாங்கோ என நீட்டினான்.

"இங்க வாங்கோ நான் பிள்ளைக்கு தலையிழுத்து விடுறன்" விமலனின் அழைப்பை ஒருபக்கமாக தலையை திருப்பி நிராகரித்தாள் அவள்.

"ஏன் மாமா நானும் வரட்டுமே 'விளையாட' சிந்துஜாவின் கேள்வி.

"நீர் கரம் அடிப்பீரோ"

"ஓமோம், நானும் இப்பிடி சுண்டுவன்" என விரல்களைச் சேர்த்துக் காட்டினாள்.

"இண்டைக்கு பள்ளிக்கூடம் போகேல்லையோ"

"நான் பள்ளிக்கூடமே போறனான். நேர்சரிக்கெல்லோ போறனான்" சிந்துஜாவின் குரலில் ஒருவித நளினம்.

அப்போது வெளிப்படலைக்கு அருகே, சைக்கிளின் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது. "ஆரெண்டு பாருங்கோ" எனச் சொல்லிய விமலன் டக்கென்று எழுந்து அறைக்குள் புகுந்தான். ஜன்னலின் ஊடாக எட்டிப் பார்த்தான்.

சிந்துஜா போய் படலையைத் திறந்தாள். சாறமும்,

www.padippakam.com



சேட்டும் அணிந்த இருவர் வந்திருப்பதும் ஒருவரது கைகளில் உரப்பை ஒன்று இருப்பதும் தெளிவாகத் தெரிந்தது.

வந்திருப்பவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருக கக்கூடும் என்பதை யூகித்துக்கொண்ட விமலன் வீட்டுக் கூரைக்குள் லெவல் சீற்றுக்குள் தாவி ஏறிக் கொண்டான். கைத்துப்பாக்கியுடன் தன்னையும் மறைத்துக் கொண் டான்.

"என்ன வேணும்" வந்திருப்பவர்களிடம் சிந்துஜாவின் கேள்வி.

"அப்பா இல்லையோ" சிறிது தடுமாற்றத்தின் பின்னர் ஒருவன் சிந்துஜாவைக் கேட்டான்.

"அப்பா கடைக்குப் போட்டார்"

அடுத்ததாய் என்ன கேட்கலாம்.. அவர்களுக்குள் ஒருவித குழப்பம்.

"வீட்டில வேற ஆரம்மா இருக்கினம்" செல்லக் குரலில் ஒருவன் கேட்டான்.

"அம்மா" என்றாள் சிந்துஜா.

"அம்மாவை வரச்சொல்லுறியளோ" என்றாள் மீண்டும்.

"அம்மா குளிக்கிறா"

இதனிடையில் தோளில் போர்த்த துவாயும், நெஞ்சு வரை போர்த்திக் கட்டிய பாவாடையுமாக வந்த தன லட்சுமி, படலையில ஆர் பிள்ளை" என்றாள் சிந்து ஜாவை நோக்கி. "ஆரோ ரெண்டு மாமாவை வந்தி ருக்கினம்" சிந்துஜா பட்டெனக் கூறினாள்.

"முன் விறாந்தையில வந்து இருக்கச் சொல்லுங்கோ" தனலட்சுமி அறையொன்றினுள் புகுந்து விட்டாள்.

சற்றும் எதிர்பாராத இந்த அழைப்பையடுத்து வந்தி ருந்தவர்களிலொருவன் படலையைக் கடந்து வீட்டு வளவுக்குள் விறுவிறு என நடந்தான். மற்றவன் வேலி யோரமாக உரப்பையுடன் நின்று கொண்டான்.

"அம்மா" எனக் கூப்பிட்டபடி சிந்துஜா ஓடி வந்தாள்.

"மாமாவை வருகினம்" உரத்த குரலில் தெரிவித்தாள் அவள்.

"தம்பி .. முன் விறாந்தையில இருங்கோ உடுப்பு மாத்திறன் வாறன்." தனலட்சுமி பலத்த குரலில் தெரி வித்தாள். அங்கும் இங்கும் திரும்பி இரு கண்க ளாலும் எதையோ துழாவித் தேடிக்கொண்டான். அவன் சிறிது தாமதித்து முன் விறாந்தையிலிருந்த கதிரை யொன்றில் அமர்ந்து கொண்டாள்.

சிந்துஜா அவனுக்கு முன்பாக நின்று கொண்டி ருந்தாள். "உங்கட அப்பாவுக்கு என்ன பேர்" அவன் கதை கேட்டான்

"அருணாசலம்"

"உங்களுக்கு என்ன பேர்"

"சிந்துஜா"

அறைக்குள்ளிருந்து வெளியே வந்த தனலட்சுமி, "என்ன தம்பி என்ன விசயம்" என்றாள்.

"அருணாசலம் வீடு. இதுதானோ"

"ஓமோம்.. அவர் வெளியில போட்டார்."

"இங்க விமலன் எண்டு ஆரும் நிக்கினமோ"

கேள்வி செவிப்பறையில் வந்து பட்டதும் விமல னுக்கு நெஞ்சு திக்கென்றது. என்ன பதில் வரப் போகிறதோ? அடுத்து என்ன நிகழப் போகிறதோ? என்று மனம் திடுக்குற்றது.

"நீங்கள் ஆரைத்தேடி வந்தனீங்கள் தம்பி"

அவள் நிதானமாகத் திரும்ப கேட்டாள்.

"விமலன் அல்லது ரமேஷ் எண்டு சொல்லுவினம். முந்தி இங்க ரியூட்டரியில படிச்சவர். நெடுந்தீவு ஆள்". "அப்பிடி ஒருத்தரும் இங்க இல்லையே." அவள் நறுக்கெனப் பதிலளித்தாள்.

"அருணாசலம் வீடு இது.. தானே..

இங்கதான் நிற்கிறது எண்டு சொன்னவர்." அவன் திரும்பவும் கேட்டான்.

"இவருக்கும் அதுதான் பேர்.. ஆனா நீங்க சொல்லுற மாதிரி ஒருத்தரும் இங்க இல்லை." அவள் திட்டவட்ட மாகத் தெரிவித்தாள்.

"சரி.. அப்ப நான் போட்டு.. வாறன்" என்று கூறி அவன் எழும்பிய வேகத்தில் கதிரை சுவருடன் சென்று மோதியது.

மௌனமாக. ஆனால் அவனுக்கு கோபம் வந்து விட்டதை யூகித்துக் கொண்டவளாக அவள் தலைய சைத்தாள்.

படலைவரை போனவன் திரும்பி "எப்ப வந்தால் அவரைச் சந்திக்கலாம்." என அங்கேயே நின்றபடி கேட்டான்.

"இப்ப கடைப்பக்கம் போனவர். வந்து வேலைக்குப் போனால் இரவு நேரம் செல்லும் திரும்பி வர. எதுக்கும் நாளைக்கு வெள்ளென நேரத்தோட வாங்கோவன்" எனப் பதிலளித்தாள் படலையை நோக்கி நடந்தபடி.

வந்த இருவரும் சைக்கிளில் தாவி ஏறி வேகமாக மறைந்தனர். படலைவரை அவள் சென்று விட்டபோது எவரையும் காணவில்லை. படலையைச் சாத்திக் கொழு வியைப்

பூட்டி விட்டு திரும்பினாள்.

"இங்க மாமா கூரைக்குள்ள இருந்து வாறார்." சிந்துஜா கூறினாள்."

"இப்ப ஏன் உப்பிடிக் கத்துறாய். மெதுவாய்க் கதையன்." அதட்டினாள் தனலட்சுமி.

அதனிடையில் படலையடியில் மீண்டும் சத்தமும் ஆளரவமும் தென்பட்டது.

ஓடிப்போன சிந்துஜா, படலையைத் திறந்து கொண்டு அப்பா வாறார் என்றாள்.

தலைநிறைய ஒட்டடையும், தேகம் முழுவதும் சளி யும் ஊத்தையுமாக விமலன் நின்ற கோலம், அருணாச லத்திற்கு ஆச்சரியம் ஊட்டியது.

"இதென்ன கோலம் தம்பி விநோத உடைப் போட்டிக்கு உடுப்புப் போட்டவன் மாதிரி."..

அவர் கூறிமுடிப்பதற்கிடையில் "இனியும் இங்க நிற்கிறது சரிப்பட்டு வராது அண்ணை".

விமலனின் குரலில் இறுக்கம் தொனித்தது.

"என்ன நடந்தது, என்ன பிரச்சினை இங்க உமக்கு."

"அவனவை இங்கையும் வந்திட்டுப் போறாங்கள்".

"நீர் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். உம்மைப் பாதுகாக்கிறது என்ர பொறுப்பு" அருணாசலம் கூறினார். "அது நீங்க நினைக்கிற மாதிரி அவ்வளவு சுலபமான

www.padippakam.com



வேலையில்லை அண்ணை." விமலன் கூறியபோது கையிலிருந்த பிஸ்டலின் ரவைக்கூடும் தனியாக்கப் பட்டது. விரல்களால் ஒவ்வொரு ரவையாக கழற்றி எடுத்து அவன் பிஸ்டலின் ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாகக் .கழற்றினான்.

"உந்தக் கிறிஸ் பேணியைத் தாங்கோ" எனக் கேட்ட விமலன் சாக்குத் துண்டு ஒன்றை எடுத்து நன்கு உதறி விரித்து விட்டு அதில் குந்திக் கொண்டான்.

பிஸ்டலின் ஒவ்வொரு பகுதிக்கும் கிறிஸ் பூசி பொலித்தீன் பேப்பர்களால் நன்கு சுற்றி, அதற்கென இருந்த பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைத்தான். பின் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு நடந்தான். இவனது செயல்கள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டிருந்த அருணாசலம் எதுவும் புரியாதவராக முழித்துக் கொண்டார்.

சற்று நேரத்தில் நன்கு குளித்து உடைமாற்றி கம்பீரமான தோற்றத்தில் விமலன் முன் வந்தான்.

"என்ன தம்பி.. எங்கையோ வெளிக்கிடுமாப்போல கிடக்கு"

தனலட்சுமி கேட்டாள்.

"ஓமக்கா.. நான் ஒருமுடிவுக்கு வந்திட்டன். இனியும் இப்பிடி ஒழிச்சு ஒழிச்சு சீவிக்க ஏலாது." என்ன வார்த்தை சொல்லி எப்படி அவனைத் தடுப்பது என்பது தெரியாமல் தனலட்சுமியும், அருணாசலமும் தடுமாறினர்.

"உங்கட ஆக்கள் ஆரும் வந்தால்.."

அருணாசலம் இழுத்தார் மெல்லிய குரலில்.

எங்கட ஆக்களை தேடித்தான் போறன். ஆனா போய்ச் சேருவனோ தெரியாது. உங்களுக்கு நல்லாய் தெரிஞ்ச ஆக்கள் வந்தா இதை மட்டும் குடுங்கோ என்று கூறி ஒரு காகிதத் துண்டை நீட்டினான்.

காகித துண்டை அருணாசலம் கைநீட்டி வாங்கவும் அவனது கால்கள் நடக்கத் தொடங்கவும் சரியாக இருந்தது. அவன் போகும் திசையையே அருணாசலமும் தனலட்சுமியும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றனர். சிந்துஜா ஓடி வந்து "மாமா டட்டா", "மாமா டட்டா" எனக்கூறி கையை அசைத்தாள்.

போகேக்கை பின்னால கூப்பிடக்கூடாது எனத் தாய் கூறியதை அவள் பொருட்படுத்தியதாக இல்லை.

விக்டோரியா வீதியும், பலாலி வீதியும் சந்திக்கும் இடத்தில் அடையாளவும் தெரியாத ஒரு இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தி மறுநாள் தினசரிப் பத்திரிகையின் ஒரு மூலையில் பிரசுரமாகியிருந்தது. அதனைக் கவனித்த அருணாசலம் ஒவ்வொரு எழுத்தையும் உன்னிப்பாக வாசிக்கலானார்.

"துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சுமார் இருபத்து நான்கு வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலம் ரவுசர், சேர்ட் அணிந்த நிலையில் கண்டெடுக் கப்பட்டுள்ளது. நன்கு சவரம் செய்யப்பட்ட முகத்தையுடைய இச்சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது." என்பதற்கு மேலே படிக்க முடியாமல் கண்களை நீர் மறைத்து விட்டது.❑

With Best Compliments

ALAGA & CO

Solicitors


190 TOOTING HIGH STREET
LONDON SW17 0SF
TEL: 0181-767 3345
TEL/FAX: 0181-767 9892

www.padippakam.com



எம்.எஸ்.சுப்புலஷ்மியின் வெங்கடேஸ சுப்ரபாதம் கேட்டுக்கொண்டு, கணனியிலே ~DOOM II விளையாட்டில் ஏவுகணையிலே கண்டபடி காணாதபடி காவற்படையையும் அசுரவிலங்குகளையும் சுட்டுக் கொன்று தள்ளிக் கொண்டிருந்தேன். முப்பத்தைந்து வயது நான்.

இதனால், இவன் ஒரு 'புட்டுக்கு பிளேன் சோடா ஊத்திப் பிசைஞ்சு சாப்பிடக்கூடிய நட்டுக் கழண்ட கேஸ்' என்று நீங்கள் சிரிக்கக்கூடாது. சூழ்நிலை



அப்படி நண்பரே! அப்பனும் அண்ணனும் அருமையாக இல்லாமல், 'ரியூசனுக்குப் போகமா'ாந சாமர்த்தியப்பட்ட பொம்பிளைப்பிள்ளையெல்லாம் துவக்கைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள்ளை அலையவோ அல்லது முகம் தெரியாத மாப்பிள்ளையை எண்ணி, அகம் தெரியாத ஏஜென்சிக்காரனை நம்பி, நகை - அதுக்குத் தங்க நட்டெல்லாம் - உடம்பில நட்டு, மொஸ்கோ கண்டு, லெசெத்தோ கண்டு, ஒயில் ராங்கருக்குள்ள கண்டவன் நிண்டவனோடயெல்லாம் உராஞ்சு கிடந்து உயிர் தப்பிக் கரை வரும்' நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு சமூகத்திற் பிறந்த ஒருத்தன் இப்படியெல்லாம் செய்தால், அதைக்கண்டு நீங்கள் சிரிக்கக்கூடாது என்றில்லை; சரியாச் சொன்னால், சிரிக்க முடியாது.

சொன்னாற்போல, நான், சுகுணன் சுகுணன் செல்லத்துரை (நேற்று, Tomorrow Never Dies பார்த்தேன்); முக்கோணக்குன்று இந்துக்கல்லூரி பேராதனை (எட்டு வருடங்கள்; படிப்பு, பல்கலைக்கழகம் மூடல், திறத்தல், வேலை) சிங்கப்பூர் (இரண்டு வெரு ங்கள்; (சொல்லப்பட்டது) மேற்படிப்பு, (செய்யப்பட்டது) 'ஜேர்மனி - இலங்கை ற்றான்ஸிற் பாஸ்சருக்கும் ஏஜென்ஸி கைவிட்டுக் கைபிசைஞ்சருக்கும் லிற்றில் இண்டியா காட்டலும் கொழும்புக்கு ரிட்டேன் ரிக்கற் புக் பண்ணுதலும்') ..இப்போது, இங்கே, 'செயின்ற் லூயிஸ், மிசூரி' (போன ஒரு வருடம்; அதே மேற்படிப்பு 'பம்மாத்து'). ஊரிலிருந்து வரும் வீட்டாரினதும், எப்போதென்று தெரியாமல், ஐந்து நாளுக்கொரு முறை என்ற சராசரி மீடிறனில் அர்த்தசாமத்திலே எடுத்து, "சென் லூயிசில இருக்கிற நான் எப்பிடி கத்திரிக்கோல் கொண்டு போறது?" என்ற என் வெட்டுப்பதிலுக்காக, "ஸியாட்டிலிலை வந்து இறங்கி மச்சான்ரை மனிசியின்றை மச்சாட்காரிப்பெட்டை ஸியாட்டில் - வான்கூவர் போடரிலை பாஸ்போட்டைக் கிழிச்சுப்போட்டுக் கையைத் தூக்கப் போறாள், உதவி செய்ய ஏலுமே?" என்ற கேள்வி கேட்டவர்களின் அழைப்புகளும் இரவிற் சொந்த அறையில் அறைச் சிங்கள நண்பனுக்கு இடைஞ்சலையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தும் என்பதாலும் கனடியத் தமிழ் வானொலியை மின்வலை ஊடாக இரவில் இடைஞ்சல் இன்றிக் கேட்க முடியும் என்பதாலும் இரவில் ஆய்வுகூடத்திற் தங்குவது வழக்கம்.

கடவுள் நம்பிக்கை எனக்கு இருக்கிறதோ இல்லையோ, எனக்கே தெரியாது. தேவைக்கு வரும், தேவைக்கு வராமலும் விடும். அது முக்கியமான விடயமில்லை. ஆனால், எம்.எஸ்.சுப்புலஷ்மியின் காலைச் சுப்ரபாதம் முக்கோணக்குன்றின் எனது வீட்டின் - பத்துவருட காலம் முந்திய - காலை நினைவுகளின்




நிறைவினைத் தருவதினாற் கேட்கிறேன். சுப்பிரமணியசுவாமி சுவரம் செய்யக் கடைபரிற் சுவரக்கத்தி வாங்கி வரும் நேரங்களில் ஆயுதம் வைத்திருந்த குற்றமென்று தென்கொரியாவிற்குக் கிடைக்கவிருக்கும் உலக வங்கிக் கடன் அளவிற்கு அடித்து, உதைத்துத் தள்ளிய இலங்கை, இந்திய இராணுவத்தினரின் உருவொத்த 'கமஸாக்கி' உடைப்பிரதிநிதிகள், DOOM II இல், பிஸ்டலுக்கும் ரிவோல்வருக்கும் வித்தியாசம் தெரியாத என் கையினால் ஏவுகணைத்தாக்குதலில் "ஹா" என்று மாயயதார்த்தத்தில் வாய் பிளந்து செத்துப்போவது மனதுக்குத் திருப்தி தருகிறது. மிகுதிப்படி ஆயுதரீதிப் புரட்சியா, அஹிம்சைப்புரட்சியா என்று யோசித்துப் பலகாலம்;

www.padippakam.com



சரியாகச் சொன்னால், பத்து வருடங்கள். சொந்த வாழ்க்கையைப் பற்றி யோசித்து இங்கு வந்தவனுக்குப் புரட்சி பேசுதல் அத்தியாவசியமற்ற போலி முகமூடி என்று அர்த்தப்படுகிறது.

இதற்கு மேலே என்னைப் பற்றி உங்களுக்குத் தேவையில்லாமல் எனக்கு மட்டும் திருப்தி தரச் சுவார சியமாகச் சொல்வதெனில், உண்மையிற் பாதிக்கப்பட்ட மக்கள் ஊரிற் செத்துக்கொண்டிருக்க, நயாகரா நீர் வீழ, பார்க்கிறேன் என்று கனடிய எல்லைக்குட் போய் விட்டு, வா(ல்)ள்கொள்(ல்) சிங்கமுத்திரைக் கடவுச் சீட்டைக் கிழித்துப் போடமாட்டேன் என்ற உறுதி மனம் வைத்து, புலம்பெயர் பத்திரிகைகளில், புலம்பெயர் இலக்கியம் என்பது புலம்பெயர்ந்தவர்களின் புலம்பல் மட்டும், இல்லை என்பதில் என் மண்டையையும் தண்டை இடலாமா என்று யோசிக்கும் ஏனஸ்ரோ 'சே'கு வாராவும் கௌதம புத்தனும் மட்டுமே உண்மை மனிதர்கள் என்று பூசிக்கும் ஒரு கட்டை, மெலிந்த, இருள் வர்ண கீழ்க் காற்சட்டையும் வெளிர் வண்ண மேற்சட்டையும் அணியவிரும்பும், புகைபிடிக்காத, மதுஅருந்தாத, மணமாகாத (இத்தனை காலத்துக்குப் பிணமாகாதது மட்டுமே போதாதோ?) வெள்ளத்திலோடிய சிறு நெல்நாற்றுத்தாடிப் பேர்வழி.



ஒரு நிமிடம், அடுத்த அறையில் தேநீருக்குச் சுடவைத்த நீர் இவ்வளவுக்குட் கொதித்திருக்கும். வரும்போது, இலங்கை அரசுக்கு வருமானம் கொடுக்கக்கூடாதென்று, சிங்கப்பூர் விமானசேவையில் United Airlines என்று வந்துவிட்டேன்; ஆனால் இங்கு குளிர்; என்ன செய்வது? விரும்பியோ விரும்பாமலோ, இலங்கைத் தேயிலை குடித்தே ஆகவேண்டிக்கிடக்கிறது. பிச்சைக்காரர், தேர்ந்தெடுக்க முடியாது. அந்த லிப்டன் பெட்டிகளில் மட்டுமே சார்பான குறைவிலையிற் தேயிலை கிடைக்கிறது. கொஞ்சம் பொறுங்கள். தேநீருடன் வருகிறேன்; உங்களுக்கும் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு புகைபிடிக்கவோ அல்லது சமையலறைக்குள் புகைக்குள் கண் எரிவுடன் கிடக்கும் மனைவியிடம் எட்டி 'என்னப்பா, பொரிச்சு முடிஞ்சுதோ? இங்கை மனுசன் வாசிக்க ஏலாமல் புகையாலை கண்ணெரியிது. நீரென்னவெண்டால் சந்தோசமா எரிச்சுத் தள்ளுறீர்'' என்று இந்த மணி நேரத்திற்கான அவள் மேலான அநாவசியக் குற்றச்சாட்டைச் சொல்ல ஒரு அவகாசமாக இருக்கும்..

..என்ன வந்தாகி விட்டதோ? நான் அப்போதே வந்து நீங்கள் வந்தபிறகு எழுதுவோம் என்று காத்துக்கொண்டு இருக்கிறேன். சீச்சீ, அதிக நேரம் இல்லை; அத்தோடு, அப்துல் வந்து, Chicago Bullsன் நேற்றைய கூடைப்பந்து விளையாட்டைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததால், வெறுமனே வழமைபோல ஒன்றுமே புரியாமல் புரிந்ததுபோலத் தலையாட்டிக்கொண்டிருக்க நேரம் போய்விட்.. சொன்னாற்போல, உங்களுக்கு அப்துலை அறிமுகப்படுத்தாமற் சொல்லிக்கொண்டு போகிறேன். இஃது அப்துல் கிரிஸ்டி வுட்ஃபியர்; எங்கள் ஆய்வுகூடம் எல்லாம் பதினைந்து ஆண்டுகளாகச் சுத்தம் செய்கிறேன் என்று சொன்ன நாற்பத்தியிரண்டு வயது, ஃப்ராக்கானின் பத்துஇலட்சம் மனிதர்களில் ஒருவர் (போன இரு வருடங்களாய்). அண்மையில் கடாபியைப் ஃப்ராக்கான் சந்தித்த விபரம் எல்லாம் தெரிந்திருந்த அவருக்கு, மல்கொம் எக்ஸின் மகள், ஃப்ராக்கானைக் கொல்லச் செய்த முயற்சி, அதன் காரணம் எதுவுமே தெரிந்திருக்கவில்லை, தமிழ், சிங்கள மக்களின் உரிமைக்காக 70களிற் பாராளுமன்றத்திற் பகிரங்கமாக ஒருவருக்கொருவர் வார்த்தைச்சாட்டைகள் சாட்டிய அரசியல்வாதிகளைத் தெரிந்த நாம், அவர்கள் பின், பாராளுமன்ற உணவகத்தில், ''இன்றைக்கு எப்படி உமக்கெதிராக எனது கத்துதல்?'' என்று வினாவிக்கொண்டு, 'சமன்' ஸாண்விட்ஸ் தின்றது தெரிந்திராததுபோல. மனைவி, இன்னும் முட்டாள்தனமாய் வெள்ளையரின் கிறிஸ்துவின் மீள் எழுச்சிக்காகக் காத்திருக்கிறாள் என்று வருத்தப்படும் bulldog நாய் வளர்ப்புப்பிரியர். இன்றும் வழமைபோல, எம்மைப் போன்ற கறுப்புச்சகோதரர்களின் நட்பை அமெரிக்க வெள்ளையர் கொஞ்சமும் விரும்புவதில்லை என்று சொல்கிறார்.

உங்களை அவருக்கு நான் அறிமுகம் செய்யவில்லை. ஒன்று, இத்தனை நேரமாக என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறார், உங்களிடத்திலிருந்து வந்த சிகரெட் சமையலறைப் புகையைப் பற்றி இந்த புகை தடை செய்யப்பட்ட அறையிலிருந்து ஏது விபரமும் என்னிடம் கேட்கவில்லை. மற்றையது, உங்கள் முகங்களையும் எனக்குச் சரியாக அறிமுகம் இல்லை, ஆக நாமிருவரும் ஒரே மொழியைப் புரிந்துகொள்கிறோம் என்பது தவிர.

www.padippakam.com



அவருக்கும் எங்கள் இருவரின் முகத்திற்கும் பெரிதாக வித்தியாசம் தெரிந்துவிடப்போவதில்லை, எங்களுக்கும் சீனப் பிரதமருக்கும் கொழும்பு சைனீஸ் கஃபே சமையற்காரருக்கும் இடையே புரியாததுபோல. இருவரையும் அசட்டையாக, ஹிட்லரின் கூர்மூக்கு ஆரியர் நாம் என்பதுபோல, சப்பட்டைகள் என்றுதானே சொல்கிறோம்: இல்லை என்கிறீர்களோ?

அப்துல் என்னைச் சந்தித்த முதல் நாளில் முதலிற் கேட்ட விடயம், எங்கள் நாட்டில் எத்தனை கறுப்புச் சகோதரர்கள் இருக்கிறார்கள் என்பதுதான். கறுப்புச் சகோதரர்கள் என்பதற்கு அப்போது எனக்குச் சரியான விளக்கம் தெரியவில்லை. "நான் அறிந்தமட்டில் சில ஆபிரிக்கத் தூதராலயங்களிற் கடமையாற்றும் சிலர் மட்டுமே" என்று சொன்னேன். ஏனெனில், அவர் கேட்டதை 98இல், இலங்கை அமைச்சர் மங்கள சமரவீர, ஓட்டப்பந்தயவீராங்கனை சுசந்திக்கா பற்றி எனக்கோ அல்லது வேறு எவருக்குமோ ஏதும் விபரமோ அபிப்பிராயமோ முற்கூட்டியே தெரிவித்து இருக்கவில்லை. ஆனால், அப்துல் முகவாட்டத்துடனும் சந்தேகத்துடனும் திரும்பத்திரும்பக் கேட்டபோது, என் புகைப்படத் தொகுப்பினை என் சாட்சிக்கு எடுத்துக் காட்டவேண்டியதாயிற்று. அதில், என் ஒரு தம்பியையும் சிவத்தையும் சுகுமாரையும் அவர் திட்டமான கறுப்புச் சகோதரர் என்று இனம் கண்டுகொண்டார். பின், முதற்படக் கறுப்புச் சகோதரர் என் தம்பி என்பதையும் அறிந்ததால், என்னையும் செம்மண்ணிறச் சகோதரர் வகையிலிருந்து கறுப்புச்சகோதரர் வகைக்கு உயர்த்திக் கொண்டு நட்பின் அடுத்தகட்ட முஷ்டி வணக்கத்தை 'ஆத்ம வலுவை' கற்பிக்க முயன்றார். ம்ம்ம். ட்ஃப்ரான்ஸிஸ் ஃபோட் கொப்லாவின் க்ரி ஓல்ட்மென் ட்ரகுலாவின் இரத்தமும் மோனாலிஸா மர்மமும் சேர்ந்த ஒரு கடவாய்ப் புன்னகையைத் தரமுயல்கிறீர்கள். எனக்குப் புரிகிறது.. "ஜோசப், ஜோக் அடியாதையும்: அவ்வளவுக்கு அவனென்ன முட்டாளா, சாத்துக்கு வித்தியாசம் தெரியாமல் இருக்கிறதுக்கு?" என்று.



ஆனால், அதுதான் யதார்த்தம். அவர் முட்டாள் இல்லை; ஆனால், எங்களின் நாட்டைப்பற்றி, எங்கள் வாழ்வின் கஷ்டங்களைப் பற்றி, அவரது நாட்டு அரசாங்கம் போலல்லாது- அவருக்கும் பயன் இல்லாதபோது அறியவேண்டிய தேவை இல்லை. இவ்வளவு எதற்கு? அவர் அரசாங்கம்போல, அவருக்கு, முக்கோணக்குன்றுத் துறைமுகத்தில் நிறுத்தச் சொந்தக் கடற்படை வைத்திருக்கும் கவலையில்லை; விற்பதற்கு ஆயுதங்கள் இல்லை: புத்த அரசாங்கத்தில் அக்கறையும் இந்துப் பயங்கரவாதத்தில் எதிர்ப்பும் வருவதற்கு அவற்றைப்பற்றியே தெரியாது. இந்தியத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெல்லுமா என்பதைப் பொறுத்து, ஈழத்தில் உள்ளது இந்துப் பயங்கரவாதமா இல்லை வெறும் 'சாதா' பயங்கரவாதமா என்று நிறம் கண்டுபிடிக்கும் தேவை இல்லை. உங்களுக்கு, அமெரிக்கக் கறுப்பர் எல்லோருமே History படிக்கும் பாட்டுக்காரர் இல்லை என்பதோ, நிமிடத்துக்கு அறுபது தடவை நிலத்திற் பந்து தட்டி, விளையாட்டு உலகத்திற்கூடச் சம்பாதிக்கும் கூடைப்பந்துக்காரர் இல்லை என்றோ, வெறுமனே பத்து டொலருக்கு ஒரு மில்லிகிராம் போதைமருந்து விற்பவர் இல்லை என்றோ தெரிவதில் அக்கறை இருந்ததுண்டா?

அதுவே தெரியாதபோது, அவர்களுள்ளும் வெளுப்பாக உள்ளவர்கள் மற்றையவரிலும் கூட உயர்வுச்சிக்கலில் வாழ்கிறார்கள் என்பதோ கீழ்த்தட்டு மேற்தட்டு மத்தியதட்டு என்ற இடியப்பச்சிக்கலில் இருக்கிறார்கள் என்றோ தெரியவாய்ப்பில்லை. இல்லையா? உங்களைக் குற்றம் சொல்லவில்லை. உங்கள் நிலையிலும் நீங்கள் ஜிப்ஸிகளைப் பற்றி அதிகம் தெரிந்துவைத்திருக்கிறீர்கள். எனக்கு அந்த வாய்ப்பில்லாததால், போன வருடம் கி.பி.அரவிந்தன் கதை சொல்கையில், "ஆ" என்று வாசித்து வைத்தேன்.பிறகு, அது தெரிந்து இனியும்விட்டால், நான் அதைப் பற்றியும் தாறுக்கும் மாறுக்கும் கதை எழுதிப் பெயரைக் கெடுத்துப் போடுவேன் என்று புனித பாப்பரசரும் இரண்டாம் உலகமகாயுத்தத்திற் செத்த ஒரு ஜிப்ஸியை ஐம்பது ஆண்டுகளின் பின்னாவது திருநிலைப்படுத்தினார். (முதல் ஒருமுறை இதுபோலவே தான், அவரும் ரேகனும் வலேஸாவுடன் சேர்ந்து சதி செய்துதான், வார்ஸோ நாடுகளில் முதல் பிளவை ஏற்படுத்திப்போட்டார்கள் என்று எழுதிப் போட்டேன் என்ற பயம்). அதனால், இவர்களைப் பற்றி நான் உங்களுக்கு சொன்னாற்றான் உண்மை தெரியும். வெறுமனே, கியூபாவைப் பயங்கரவாத நாடு என்று சொல்லிக்கொண்டு, தனது நிலக்கண்ணி ஒப்பந்தக் கையெழுத்து மறுப்புக்கு ஆயிரம் நியாயம் சொல்லும் ஒரு நாட்டின் செய்தித்தாபனங்களை மட்டும் நம்பி வையாதீர்கள். அதனாலோ, இல்லை ஆகவேயோ, நான் இந்த பெரியமனித அபிப்பிராயம் சொன்னதுக்காக நீங்கள் என்னிற் கோபிக்கவில்லை, இல்லைத்தானே?

காண்போர் வலக்கை முஷ்டி மடித்து முழங்கை மடித்து, கிடைக்கு முப்பது பாகை நிலைக்குத்தச்சுப் பற்றி ஒரு நாற்பத்து ஐந்து பாகை கீழ் நிலைக்குத்திலிருந்து தோள் பந்துக்கிண்ணமூட்டு அச்சுப்பற்றிப் பின்னிழுத்து, பின் முன் எடுத்து இருவரும் ஒருவரின்


www.padippakam.com






முஷ்டியின் கீழ்ப்புறம் மற்றவரினது மேற்புறத்திலே இடிக்கக் குத்தி, பின் முறை மாற்றிக் குத்தி, மீள முஷ்டி முன்மடிப்புகள் மோத இடித்து, இறுதியாக அவரவர் இட நெஞ்சின், இதயம் இருக்கலாம் என்று எண்ணப்படும் இடத்தே, முஷ்டி மேற்புறத்தால் மோதுவதோடு முடியும் இந்த - சொல்ல ஒரு நிமிடமும் செய்ய இன்னொரு நிமிடமும் எடுக்கும் - முஷ்டி வணக்கம் நான் அவரின் திருப்திக்காகச் சரியாகக் கற்றுக் கொள்ள ஒரு வாரம் எடுத்தது.

அவருக்கு இந்தச் சடங்கின் அர்த்தம் தெரியவில்லை. தெரியவும் ஆசை இருக்கவில்லை. ஆனால், அது தனக்கு, தன் இனத்துக்கு உரியது என்பதில், மகிழ்ச்சியும் பெருமையும் இருந்தது. வேறு ஒருவருக்குப் பாதிப்பு இல்லாமல் ஒரு காரியம் ஒருவருக்கு மகிழ்ச்சியைத் தருமானால், அதைச் செய்வதில் எந்தத் தவறும் வருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை எனக்கும். அவரைக் காணும்போது இச்சடங்கு செய்தாகிவிடும். சிலவேளை கூட இருக்கும் போலந்து நண்பர், ஹரியானா நண்பர், ஓரிரு சீன நண்பர்கள் அவருக்குத் தெரியாமல் ஒரு புன்னகை சிந்துவார்கள். ஆனால், எவரும் எதையும் மனம் திறந்து பேசுவது இல்லை. Politically incorrect எனப்படும் 'அரசியற்படி திருத்தமற்றது' ஆகப் போய்விடுமோ என்ற பயந்தான். மிகுதிப்படி, இந்நாடு பேச்சுச் சுதந்திரம் மிகுந்தது என்பதில், என்னைப் போலவே அவர்களுக்கும் - வரும்காலத்தில், அவர்களை இயற்கை மயப்படுத்தப்போகும் நாடு என்பதால் - எதுவித கருத்துவேறுபாடும் இருந்ததில்லை.



அப்துல் போகவேண்டுமாம். அவருக்கு "Puff Daddy " இன் ஊரிலுள்ள அனைவரையும் புணர்தலுக்கு அழைக்கும் 'Rap' காதிலே 'நடைமனிதனிற்' (ஹி ஹி ஹி..walkman தான்; நடையன் என்றால், செருப்பு என்று ஆகிப்போகிறது; தமிழ்ப்படுத்தல்: தமிழிற் பற்று தமிழைக் காட்டி மேற்கு நாடுகளில் வசதியாக வாழ ஓடுகிறதில் மட்டும் இல்லை, இயலுமானவரை தமிழை அடுத்த நூற்றாண்டுக்குப் பதமாக்கி மேம்படுத்திக் கொண்டுபோவதிலும் இருக்கிறது என்று என் சில மின் வலை நண்பர்கள் சொல்வதோடு நானும் உடன்படுகிறேன்) கேட்டபடி, இந்தக்கட்டிடம் (63 அறைகள், 10 மலசலகூடங்கள், 4 விலாசமான நடைபாதைகள், 108 மாடிப்படிகள், ஏனைய சந்து பொந்துகள், நான்கு தளங்கள்) கூட்டி, வெற்றிடச் சுத்தமாக்கி போட்டு தூசு உறிஞ்சி, பிறகு நீரடித்து அழுத்தி, பிற்பகல் ஒருமணிக்கு வீட்டிற்குப் போகவேண்டும் (முறைப்படி).



அவர், பத்துமணிக்கு வந்து - அங்கே பாருங்கள், தெரியவில்லையோ; மன்னிக்கவேண்டும், படமும் இங்கே கதைக்குப் போட்டால், பக்கங்கள் கூடிவிடுமல்லவோ? தவிர, நீங்களும் இன்னும் முத்து 'கொமிக்ஸ்' சித்திரக்கதை வாசிக்கும் சின்னப்பிள்ளைகள் இல்லைத்தானே? - பல கணனி காவி வந்த பெட்டிகள் இருக்கின்றனவே, சின்ன வயதில் நாங்கள் சிகரெட் பெட்டிகள் ஆக்கி விளையாடியதுமாதிரி, அவற்றுக்கிடையில், பலமான கோட்டை அவை என்று எண்ணிக்கொண்டு, அவரின் கறுப்பு மேற்பார்வையாளருக்குத் தெரியாமல், படுத்து நித்திரை கொண்டுவிட்டு, ஒரு பன்னிரண்டரைபோல எழும்பி வெளியே வந்து, ஒரு சாட்டிற்கு வாங் லீ இன் மேசையையும் என் மேசையையும் (நான் ஏற்கனவே செய்ததுபோல) ஈரத்துண்டாற் துடைத்து விட்டு, "ஹே ..chief (அதுதான், எங்கள், 'தலைவரே')! நாளைக்குச் சந்திக்கிறேன்; இன்றைய நாளை இனிதே நகர்த்து" என்று விட்டு என் பதில் வருமுன் அறை கடந்து விடுவார்.

நான் அதிக சந்தர்ப்பங்களில் காலை ஏழு மணிக்கு என் அறைக்கு நித்திரை கொள்ளப்போய் மீளப் பிற்பகல் இரண்டு மூன்று அளவிலேயே திரும்பி வருவது வழக்கமாதலால், இந்த இறுதிச் சந்திப்புகள் நிகழ்வது மிக அருமை. தற்செயலாக இருந்தால், அவரின் நித்திரையின் இடையே அவரைத் தேடி மேற்பார்வையாளர் வந்தால், ஓடிப்போய், தட்டியெழுப்பி, (காதிற் கிடக்கும் நடைமனிதன் - தேலைபேசியை எடுக்கும்வரை காத்திருந்து) விபரம் சொல்லும் தற்காலிக திருநந்திதேவன் பணியும் 'Simulink' இல் மென்பொருளில் செயின்ற் லூயிஸ் கழிவுத்தண்ணீர் சுத்திகரிப்பு மாதிரி ஆக்குதலுடன், வாங் லீ இற்கு வரும் தனி ஸிசுவான் வட்டாரச் சீனத் தொலைபேசி அழைப்புகளுக்கு 'தா பூ ஸாய்" என்று அவனில்லாதது பற்றிச் சீனத்திற் சொல்லும் வேலையும் கூடவிருந்தது.

இப்படி அடிக்கடி கந்தசாமிப்பிள்ளைக்குக் கடவுள் கொடுத்தமாதிரி, திடீர்த் தோன்றுதல் தருவதால், கறுப்பு மேலதிகாரியை வெள்ளையரின் பிருஷ்டம் நக்கும் வெள்ளைப் புள்ளிகள் விழுந்த ஒரு கறுப்புநாய் என்றும் அவருக்கு மேலுள்ள வெள்ளை அதிகாரிப்

www.padippakam.com





பெண்மணி முன்னர் 'மொண்டனா' மாநிலத்தில் 'ku klas klan'இல் இருந்த நிறவெறியள் என்று நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் மேற்கோள் காட்டிக்கூறியதாகவும் சொல்வார். (எனக்கு எப்போதுமே இப்படிப்பட்ட எதேச்சை எடுகோள்களும் தகர்க்க முடியாத் தர்க்கங்களும் ஒத்த நிகழ்வு ஒப்புவமைகளும் அவற்றிலிருந்து உய்த்தறிவுகளும் சரியாக விளங்குவதில்லை என்பதை இங்கே நான் குறிப்பிடாவிடின், வெற்றுப்பொய்யன் ஆகுவேன்) ஒருமுறை, ஒருமாதகாலம் வேலைநேரத் தூங்குதல் கண்டுபிடிக்கப்பட்டு வேலையிலிருந்து விலக்கவும்பட்டிருந்தார். ஆனால், பின்னர் இனப்பாகுபாட்டுப் பாரபட்சமே காரணம் என்று எப்படியோ எடுத்துக்காட்டி வேலைக்கு வந்துவிட்டார்.

எனக்கு 70களில் நாவலப்பிட்டித் தோட்டப் பாடசாலை ஒன்றிற்குப் படிப்பிக்கிறேன் என்று போய்விட்டு, ஊர்க்கடைகளுக்குத் தேயிலை மொத்தவியாபாரமும் தன் சீதன நிலங்களில் வெங்காயத்தோட்டமும் போட்டிருந்த (உங்களுக்கு வேறு பெயரில் அறிமுகமான) இரகுநாதன் 'மாஸ்ரரே' ஞாபகத்திற்கு வருவார். அவரும் தனது முக்கோணக்குன்றில் இருப்பு பண்ணுகையில் நாவலப்பிட்டியில் வரவு வைத்து எங்கும் பரந்து வாழ் தனது அரிதாரமில்லா அவதாரத்திற்காகப் பிடிபட்டு வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோது, 'எளிய வடக்கத்திப் பிரின்ஸிப்பலும்' 'துவேசம் பிடிச்ச மோட்டுச்சிங்கள சி ஈ ஓ (வட்டாரக் கல்வி அதிகாரி)' உமே தமிழர்மீதான இனவெறி அழுத்தத்தின்பேரில் இதைச் செய்துவிட்டனர் என்ற பரிதாபத்தைச் சனத்திடம் ஏற்படுத்தி 77 தேர்தல் வரும்போது அன்றைய தமிழ் அரசியற்கட்சியொன்றின் எங்கள் ஊர் அமைப்பாளர் ஆகிப்போனார். (பிறகு, மீள வேலை கிடைத்தவுடன், பின்தங்கிய மக்களுக்குச் சேவைசெய்யத் தன் பழிவாங்கு உணர்வையும் விட்டுவிட்டு மகாத்மா ஆகிப்போய் பாதுகாப்பாய் நாவலப்பிட்டியிலேயே உருளைக்கிழங்குத் தோட்டம் போட்டு, பள்ளிப்பிள்ளைகளைக் கொண்டு பிடுங்கிவிற்றது இங்கு விபரமாகச் சொல்லப்படவில்லை என்பதற்கு நீங்கள் வருத்தப்படவில்லைத்தானே?)

அப்துல் போய்விட்டார். இன்றைக்கு அவரின் இரண்டாவது மகனின் கூடைப்பந்து விளையாட்டு பார்க்க அவனது பாடசாலைக்குப் போகவேண்டும் என்று ஆவலோடு இருந்தார். மூத்த மகன், பக்கத்து மாநிலப் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட மருத்துவம் படிக்கிறான். நான்கு நூற்றாண்டுகள் முன் அடிமைகளாக வந்தவர்கள் அடுத்த நூற்றாண்டிற்கும் பந்து விளையாடிக்கொண்டும் பாட்டுப்பாடிக்கொண்டும் வீதிச்சந்திகளில், சகோதரர்களிடம் காற்பணம் கேட்டுப்பெற்று, போதை ஏற்றிக்கொண்டும் இருக்கமுடியாது என்று அடித்துச் சொல்வார். மூத்த மகன் அவருடன் வசிப்பதில்லை. அவனது ஒஹையோ க்ளிவ்லாண்டிற் பிறந்த வெள்ளை நண்பியுடன் தனியே வசிப்பதாகவும் வார இறுதிச் சனி காலைகளில் அவர் வீட்டிற்கு (அவர் - சுத்தம் செய்யும் வேலை மனைவி - 'Pick ~n Save' இல் விற்பனைப்பணி வேலை, கடைசி மகன் - பாடசாலையிற் பந்து, இரண்டு 'எருதுநாய்கள்' ஊர் குழப்பும் குரைப்புகள்) வந்துபார்த்துப் போவதாகவும் கா(ை)லப்பனியும் கார்ப்புகையும் படிந்து கிடந்த - நான் தினம் முகம் கீறி என் பெயரெழுதி, ஈழம் எழுதி விளையாடும் - அறைப்பின் புறக் கண்ணாடி ஈரத்துண்டாற் துடைத்தபடி கூறினார். சனி காலை தவறினால், அடுத்த கிழமைதானாம். ஏனெனில், சனி மாலைகள், நிறம், நாட்டுமூலமென்ற பேதமின்றி எல்லோரும் கொஞ்சம் தத்தம் சுதந்திரம் கண்டு உல்லாசமாக இருக்கும் நேரங்களாம்; இரவு நடன விடுதிகள், காலாற நடைகள், கூடிவாழப் பொருத்தங்கள் வாய்ப்புப் பார்க்கும் நேரங்கள். ஞாயிறு, அவர் மனைவிக்கு வடக்கு இருபத்தைந்தாம் வீதியிலுள்ள 'கறுப்பு மக்களின் மீட்பர் ஆலயக் கௌரவ காரியதரிசி' வேடம் மிகப்பொருத்தும் மும்முரம். ஆகவே, அவருக்கு அதுவே இரண்டு நாய்களையும் 'எடுத்துச்செல்' வாகனத்தின் பின் இருக்கைகளிற் தூக்கிப்போட்டுக் கொண்டு அவை அவர் பின் கழுத்தை நக்க, அரைமணிநேரம் மேற்காகப் பிரதான சாலையில் ஓடி, பிறகு, அடைக்கப்படவேண்டிய குறுக்கெழுத்துப்போட்டிக் கட்டங்களாக அங்கும் இங்கும் அலையும் ஒழுங்கற்ற ஒழுங்கைத்தனமான பாதைகளில் பண்பலை வரிசை 104 மெகாஹேட்ஸினைச் சுற்றிச் செத்த துபக் சகூருடனும் Notorious Big உடனும் பெரிதாகத் தானும் சேர்ந்து கூவி, வளையத்துள்ளாற் பாயும் வீதி வேடிக்கைக் குரங்கின் இலாவகத்துடன் வளைந்து போய் இரண்டு வருடப் பனிகால நிறந்தீட்டுகை காணா ஆறுமாடி ஆர்தர் மன்றோ முதியோர் இல்லத்தின் நாலாம் மாடி பூச்சியம் - பூச்சியம் - ஆறாம் அறையினை இருமுறை தட்டி "மா..ஆ..மா! நான் சின்ன பொஞ்சோ (அவரின், குடும்பச் சிறுவயதுச் செல்லப்பெயர்)" என்று சொல்லி, தன் தாயுடன் - அறுபதுகளின் மார்ட்டின் உலூதர் கிங்குடனும் இலினோய் கெய்ரோ நகர் நிறப்பாகுபாடுப் போராட்டத்துடனும் - ஓர் இருமணி நேரங்கள் பின்தங்கி இருக்க ஒரு சந்தர்ப்பம்.

மகன் வெள்ளை நண்பி ஒருவருடன் வாழ்ந்து வருவது பற்றி அவரின் கருத்து என்ன என்று ஒருநாட் காலை ஐந்து மணிக்கும் ஐந்தேகாலுக்கும் இடைப்பட்ட - 37 பாகை பரனைட் வெப்பநிலை, 100 வீத ஈரப்பதன், 3 மைல், மணி கிழக்கிலிருந்து வடகிழக்கு என மாறு காற்று, 30.05 அங்குலப் இரச வளியமுக்கம் கொள் (மன்னிக்கவேண்டும், இன்னமும் இங்கு பிரித்தானிய அலகுகளிலேயே நாளாந்த வாழ்வு நமக்கு) - ஒரு சோர்வு கொ(ள்)ல் குளிர்காலவேளையிலே, 'தமிழ் வட்டம் - இலங்கைத்தமிழர் ஈடுபாடு கொள் செய்திகள்' வாசிக்கையிலே கேட்டுவைத்தேன். கதவு இடுக்குகளுக்கு, தும்புமுகத்



www.padippakam.com






தூசு உள்ளுறுஞ்சு வெற்றிடத்துடைப்பானாற் கீச்சுக்கீச்சுமூட்டும் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தவர், நிறுத்திவிட்டு நிதானமாகச் சொன்னார், "அ∴து ஒரு பரஸ்பரம் உதவி. நாளைக்கு அவன் அவளைத் திருமணம் செய்தால் அவர்களின் குழந்தைகளுக்குக் கறுப்புத் தன்மை, அதனால் கஷ்டங்கள் குறையும். அதனால், அவளுக்கு என்ன பயனெனில்.." - ஒரே கணனி ஏட்டிலிருந்து (computer file) எடுக்கப்பட்ட வேறு பதிப்பியின் (printer) வெளியீடு கணக்கில் நீங்கள் முன்னர் சிரித்து வைத்ததுபோலவே ஒரு 'நமுட்டுச்சிரிப்பு'- "தலைவரே, உனக்குத் தெரியாதா வெள்ளைப் பெண்கள் கறுப்பர்களை அதிகம் விரும்புதல் என்று..?" இன்னமும் எதற்காக தனிக்கட்டையானவனும் பாலியல்ரீதியாக உயிர்ப்பான செயற்பாட்டில் இல்லாதவனுமான நான் அதைக் கண்டுகொள்ளாமலே, "அப்படியானால், உங்கள் நிறம் உங்களுக்கே கேவலம், விலக்கப்படவேண்டியது எனப்படுகிறதோ? பிறகு ஏன் நிறவேறுபாட்டுக்கு எதிராகப் போராட்டம்?" என்று கேட்டு வைத்தேன். 'தலைவர், நான் ஒரு நிலத்தில் நடக்கும் மனிதன்; வானத்திற் பறக்கும் பட்சி என்று என்னை எண்ணிக்கொள்வதில்லை. கனவிற் கண்ணிருந்தாலும், கால்கள் நிலத்திற் கிடக்க வேண்டுமென்று கவனமாக இருக்கிறேன். ஏன் அடுத்த தலைமுறையும் அப்படியே என்னைப்போலவே இந்த நோக்குடன் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். மற்றவரைப் பாதிக்காமல், எப்படி முன்னேறினாற்றான் என்ன?" அடுத்த கதவுக்குக் கிளுகிளுப்பு மூட்டப்போய் விட்டார்.

அவரது பத்து மில்லியன் மனிதர் நிலைப்பாடும் மகனின் வெள்ளை நண்பி விரும்பு வாழ்க்கைத் தத்துவமும் முரண்பட்டன, எங்கள் 'ஊர் பழைய தாழ்த்தப்பட்ட மக்கள் 60ம் ஆண்டுகளின் எழுச்சிப்போராட்டப் பிரமுகர் ஒருவர், ஒரு புறம் "என் தந்தை ,,,,,, தொழிலாளி என்பதிற் பெருமைப்படுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு, தன் மகனுக்கு மேல்சாதி எனப்பட்டதொரு குடும்பத்திற் திருமணம் செய்து வைத்ததை ஞாபகப்படுத்தியது. திரும்பவும் ட்-மொ கூட்டணிச் சிரிப்பு, உங்கள் கடவாயில் ஒழுகுகிறது; "தம்பி; நீர் ஒரு உயர், கீழ் சாதிக்காரர்; அதுதான் ஒரு யதார்த்தத் திருமணப்பந்தத்தின் எதேச்சை நிகழ்வினை உமது கோணற்- தற்செயலாக, குருட்டு அல்லாவிடில் - கோழியின் தலைசாய்த்த பார்வையினால் வக்கிரப்படுத்துகிறீர்." அடுத்த சிகரெட்டுக்கோ, அல்லது அடிமைவாழ்க்கை தரும் அந்நியநாட்டில் உங்கள் 'நான்' இனைத் திருப்திப்படுத்த அடுத்த, மனைவி மீதான உங்கள் எசமானத் தன்மையை உறுதி செய்ய ஒரு சந்தர்ப்பத்திற்கோ அவசரப்பட்டு இப்படி ஒரு முடிவுக்கு வந்து என்னையும் அதை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தாதீர்கள். நேரம் ஐந்தரைதான் இங்கு. இன்னுமொரு, ஒன்று ஒன்றரை மணிநேரம் இங்கு இருப்பேன். அதனால், நீங்கள் என் ஹம்லட்டின் தனிப்பேச்சு வகைத் தொய்வு உரை நடையிலிருந்து விலகி, மேலே சொன்ன எதையாவது செய்தோ, அல்லது இந்தத் தொகுப்பிலிருக்கும் வேறொரு சுவராசியமான கதைசொல்லி, கவிதை எழுதியின் ஆக்கத்தை வாசித்து மீள வருவதாலோ, நான் ஒன்றும் குறைந்துபோகப் போவதில்லை. DOOM II இன்னும் நான்காம் கட்டத்தில் 'தயக்கம்' நிலைமுனைப்பிலேயே (pause mode) கிடக்கிறது. எனக்கும் என் 89ம் ஆண்டு கண்டி முக்கோணக்குன்று வைகாசி வெசாக் விடுமுறை வீட்டுப்பயணத்தில், கணதெய்யோபுர இராணுவச் சோதனைச்சாவடியில் பிபிஸி தமிழோசை கேட்டுவிட்டு அப்படியே வானொலிக்குள் தவறுதலாக மறதியில் விடுபட்டுக் கிடந்த இரட்டை .AA மின்கலத்தின் காணரமாக மேனிக்கலமெல்லாம் விழுந்த மின்னல்களுக்காக, கொஞ்ச கமஸாக்கிக்காரர் கொல்ல அவகாசம் வேண்டிக்கி(ெ)டக்கிறது.

ஓ... நீங்களோ? வந்து மிகுந்த நேரம் காத்துக்கிடக்கின்றீர்களோ? கண்டு நான்கு மாதங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். எப்படி நலமோ? மகள் எப்படி புதியமொழியில் படிக்கக் கஷ்டப்படுகிறாளோ? மகன்.. என்னை மாதிரித்தான் உங்களுக்கு விழுந்த அடிக்கெல்லாம், தன் வயதொத்த ஈழத்திலிருக்கும் பையன்களின் அடிகளுக்கெல்லாம், தான் கணனி விளையாட்டுகளில் தான் காணாத இராணுவம் கொன்று விளையாடுகிறான் போலும். அன்றைக்கு நீங்கள் போன பிறகு ஏழு மணிவரை (கமஸாக்கிக்) கொலையும் (உங்களுக்குக்) காவலுமாய் இருந்துவிட்டு, பிறகு போய்விட்டேன். மன்னிக்கவேண்டும். இன்றைக்குக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. நேற்று, ஸ்ரீபன் ஸ்பீல்பெர்க்கின் 'அமிஸ்ராட்' பார்க்கப்போய் வந்து உருளைக்கிழங்கு அவித்து உப்பும் மிளகும்போட்டு ஓர் என் பாணி 'பிரட்டல்' வைத்து எலுமிச்சம்புளி விட்டுப் 'பாணுடன்' சாப்பிட்டு, படுக்க நேரம் இரவு 11:00. படம் பரவாயில்லை. ஒருமுறை பார்க்கலாம். ஆனால் திரையரங்கிற் பின்னுக்கு இருந்த சில கறுப்பு இளம் நண்பர்கள் (பல்கலைக்கழக மாணவர்கள் என நினைக்கிறேன். சோளப்பொரி, பெப்ஸிக் குடி, அவர்களின் யாரோ ஒருவரின் பேரு பெண்நண்பியின் ஒரு வாரம் முந்திய துரோகம் இடையில் "ஏன் எல்லா 'ஹொலிவுட்' படங்களிலும் கறுப்பரைக் காப்பாற்ற, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப் போராட வெள்ளை மனிதரே வருகிறார்கள்?" என்று (த மிஸ்ஸீப்பி இன்ஸிடண்ட் படத்தினையும் மேற்கோள் காட்டி) தமக்குள் கேள்வி எழுப்பிக் கொண்டார்கள்; எனக்கு, கறுப்பு எடிமெர்பி ஒரு படத்தில் தீபெத்திய சிறுவனைக் காப்பாற்றியதைப் பற்றியும் டென்ஸில் வோஷிங்டன் எங்கேயோ ஒரு படத்தில், முடிவதற்கு மூன்று நிமிடங்கள் முன் தங்க முடியழகி மெக்ரைய




www.padippakam.com



னுக்காகப் போராடியதும் சம்பந்தமில்லாமல் ஞாபகம் வந்தன. அவர்களிடம் கேட்கவில்லை. எல்லாம் குழப் பமாக இருந்தது. சிறிதோ பெரிதோ எதற்கும் மறுபக்கம் இருந்தே செய்கிறது. அவையும் பார்க்கும் கண், கண் ணாடி என்பனவற்றினப் பொறுத்து பரிமாணங்கள் பெரிது சிறிது ஆகின்றன..

.. இது யார் புதிதாக என் பின்னால், பொப்மாலியின் 'இரஸ்த.'.ர்ரரி' தொங்குமுடியுடன் வாங் லீயின் மேசை துடைப்பது என்று கேட்கிறீர்கள்? ஜேம்ஸ் 'சிறுத் தைப்புலி' ஒஹுனுங்கா, அப்துலின் நண்பரும் ஓர் இரண்டு மாதங்களாக அப்துலின் முன்னைய வேலையைச் செய் பவருமான கறுப்பு-இலத்தீன் கலப்பினத்தவர். அப்துல், செயின்ற் லூயிஸ் கறுப்பு முஸ்லிம் இயக்கத்தில், சங்கத்தில் ஒன்றியத்தில் (சரியானதன் கீழ்க் கோடிட இன்னும் மேலதிகவிபரம் தேவை) இணைக்காரியதரிசி பதவி கைக்கெட்டியதால் போய்விட்டதாயும் நியூயோர்க்கில் உள்ள மேலிட விருப்புதற் சமிக்ஞை யின்பேரில் மகனின் வெள்ளைப்பெண் ச(சு)கவா சத்தினை விடும்படி வற்புறுத்துவதாகவும் இது மகனுக் குப் பிடிக்காமற்போக, இப்போது தந்தையும் மகனும் ஒரு மாதமாகப் பேசிக் கொள்வதில்லை என்று தகவல் என்றும், ஆனால் அப்துல் தங்கள் சேரிக்கும் அவரது பதவிக்கும் கொஞ்சம் கௌரவ இடைவெளி இருப்பதால், கறுப்பின எழுதுவினைஞர், காப்புறுதிமுகவர் வாழும் மத்தியகுடிப்பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்துவிட்டதால், தொடர்பு துண்டிக்கப்பட்டு மேலதிக விபரம் தனக்குத் தெரியாது என்றும் ஜேம்ஸ் சொல்கிறார். என்ன..? எங்கள் ஊர்ப்பிரமுகரின் செயல் மீது அன்று நான் உங்களுக்குச் சொல்லவந்த குற்றச்சாட்டின் மீதான என் விளக்கமோ? பெரிதாய் ஒன்றுமில்லை. அந்தப்பிரமுகர் சாதாரணமாக மகனுக்கு, அந்தக் குறிப்பிட்ட மேல்சாதியென்று சொல்லப்பட்ட குடும்பத்திற் சம்பந்தம் பண்ணியிருந்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை ("உன், இல்லை, இருக் கிறது பற்றி யார் கேட்டார்?" என்கிறீர்களா? <புன்னகை>). ஆனால், எனக்கும் அவருக்கும் ஊரிலுள்ள தெரு நாய்கள் உட்பட்ட எல்லாச் சீவராசிகளுக்கும் தெரிந்து, எனக்கு மூன்று வருடங்கள் முன் பல்கலைக்கழகத்திற் படித்த அவர் பொறியியற்பீட மாணவ மகனுக்கு, அவர் தங்களிலும் 'கொஞ்சம் இளக்காரமான சாதி' என்று நினைக்கிற சமூகத்தைச் சேர்ந்த ஒரு விவசாயப்பீடக் காதலி இருந்ததுதான், எனக்கு எங்கோ தவறு இருக் கிறது என்று பட்டது. உங்களுக்கும் சொன்னேன். அன்றைக்கு இருந்ததுபோல் என் இந்தக் காரண விளக்கம் கேட்க, உங்களுக்கு இன்றைக்கு அவ்வளவு ஆர்வம் இல்லை எனத்தெரிகிறது. ஜேம்ஸைப் பற்றிக் கொஞ்சம் தெரிய ஆசையோ..? அதுதானே பார்த்தேன், 'எங்கையடா, எங்கட, ஊர்விடுப்புக் கேக்கிற கல் தோண்டி மலை தோண்டாக் காலத் தமிழ்க்கலாச்சாரம் ஊர் விடுத்துப் போனதாலை விட்டுப்போயிட்டுதோ எண்டு! இருபத்தைந்து வயது ஜேம்ஸ் அப்துலிலும் வயதாலும், அதனாலோ என்னவோ, ஈடுபாடுகளிலும் வித்தியாசம். நேற்றைக்குக்கூட, நான் மின்வலையில்; 'தமிழ்ச்சினிமாப்பக்கங்களில்' ஏதோ ஒன்றில் தாயின் மணிக்கொடியின்கீழ் இரத்தம் சிந்தியதாற் பெற்ற இந்தியநாட்டுப் பொன்விழாச் சுதந்திரத்தினத்திற்கு வாழ்த்திப் போட்டிருந்த ரம்பாவின் சுதந்திர மேல்மலை நாட்டைச் சுதந்திரமாக மேய்ந்துகொண்டிருந்த போது (ஹி..ஹி.ஹி..வயது அப்படி என்று விட்டுவிடுங்களேன் பின் இடப்பக்கவாட்டுத்தலை சொறிதல்>),எட்டிப்பார்த் தவன், "சஉய்ய்ப்..இய்.. உய்ய்ப்..இய்!" என்று சீட்டிய டித்து, "உப்..பூஊ.." என்று காற்று கன்னம் உப்ப ஊதி வெளியிட்டுச் சுருக்கி, "மனிதா (man என்று உணர்க நண்பரே), உங்கள் இந்தியப்பெண்கள் (அவ னுக்குத் தெற்காசியமுகங்கள் எல்லாம் இந்தியர்கள் தான்; ஸ்ரீலங்கா என்பது, தனக்குச் சரியாக வாயிற் பெயர் நுழையாக் கிழக்கு ஐரோப்பியநாடொன்றின் மொச்சைச்சோளம் ஆறுமாதம் ஊறப்போட்டுத் தயாரித்த குடிவகை என்ற அவனின் அபிப்பிராயம் எனக்கு அவ்வ ளவு திருப்தி தராததால், மேற்கொண்டு பங்களாதேசம், பாக்கிஸ்தான்.. விளக்கங்கள் அவனுக்குக் கொடுக் காமல், தெற்காசியா என்றால் அவனளவில் இந்தியா என்றே எனக்கும் என்று விட்டுவிட்டேன்) அபூர்வ அள் ளிக் கொண்டுபோகும் அழகு. (பண்பட்ட தமிழ்மண் பண்பாட்டிற்கு இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய ஆண்- பெண் உடலுறுப்புகள், உடலுறவுகள் சம்பந்தப்பட்ட வர்ணனைகள் தொகுப்பாசிரியருக்குத் தொல்லை இல் லாமல் என்னாலேயே இலங்கைப்பத்திரிகைச் செய்திகள் கதிக்கு உள்ளாக்கப்படுவதை மன்னிப்பீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் மன வக்கிரத்திற்கேற்ப விரும் பியதை நிரப்பிச் சூழ்(ல்)நிலையைச் சிருட்டித்துக் கொள் ளுக. வாசகனையும் தன் சிந்தனைத் தளத்திற்குக் கொண்டுவந்து, கதாசிரியனும் வாசகனும் கூட்டுமுயற் சியாகப் படைக்கும் தரமான இலக்கியத்தில் ஓர் எல் லைக்கல்லாக என் இந்தக்கதையை தோண்டிப் புதைத் துவைக்க எனக்கும் ஒரு வாய்ப்பு நீங்கள் தந்ததாக இருக்கும்). ஒரு நாளைக்கு - பொறுத்திருந்து பாரேன் - காசு கையிற் சேர்ந்தபிறகு, ரினிடாட்டுக்கோ டுபாக் கோவுக்கோ போய் அங்கு ஓர் அழகு இந்தியவம்சாவளி (மீள உங்களுக்கு ஓர் இலக்கியபடைப்பாக்க வாய்ப்பு) உடன் மிகுதி வாழ்க்கையைக் கழிக்கிறேனா, இல் லையா என்று?" என்றான். இந்த முற்றுப்புள்ளி தொட நேரத்துக்காய் மூன்று நிமிடம் கரம் நீண்ட மனோகரா, பராசக்தி வசனத்திற்கு அர்த்தம், அவன் இதே சொற் தொடர்க் குவியலை, இந்தியாவிற்குச் சீனாவையும்



www.padippakam.com



(தூரகிழக்கு என்று அல்ல) ரினிடாட்டுக்கு கனடிய பிரிட்டிஷ் கொலம்பியாவையும் இடப்பிரதியீடு செய்து, வாங் லீ இற்கு வசதிப்பட்ட இன்றைக்கோ, நாளைக்கோ, அல்லது வேறு என்றைக்கோ எடுத்துச் சொல்ல. வாங் லீ வழமைபோல பயந்து ஆறடி தூரத்தில் நின்று அரையும் குறையும் புரிந்து, மேலே இந்தப்பந்தியில் நான் சிரித்ததுபோல ஓர் அசட்டுச் சிரிப்பு அள்ளித் தெளித்துவிட்டு, மீள தனது, ஷங்காய் பங்குச்சந்தை முதலீடு கடைசி ஒரு நிமிடத்தில் எவ்வளவு மாறியி ருக்கிறது என்று வையவிரிவுவலையிற் (world wide web) பார்க்கப்போய்விடுவான். (காசு முதல், கல்வி தொட்டும்; பிறகு அமெரிக்கா வந்து இறங்க விமானநிலையத்திற் கண்டுபிடித்த கர்த்தர்; பிறகு நேரமிருந்தால், சீனாவில் பேசமறுத்த தியனான்மென் படுகொலையில் அமெரிக்க அரசாங்கம் எவ்வளவு சீன மக்கள் பேச்சுச்சுதந்திரத் திற்காகப் போராடுகிறது என்பது பற்றி வேறு சீன மாணவர்கள். விஜயம்செய் சீன ஆய்வாளர்கள் இல்லாத நேரத்திற் பேசுவேனாம்).

இவற்றை எல்லாம் விடுங்கள். எனக்கும் முன்னர் பின்னர் கதை எழுதியோ அளந்தோ பழக்கம் இல்லாத தால், அச்சுக்குத் தொகுக்கும் கடைசி நாளுக்கு முதல் எதையாவது சொல்லவேண்டும் என்று உங்களுக்கு ஈடுபாடு (தேவை) அற்ற பெருக்கிய அப்துல், கூட்டிய ஜேம்ஸ் பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டு இருக் கிறேன். அவர்களின் கூட்டித்தள்ளலோடு அவர்களை யும் கூட்டித்தள்ளி விட்டு, நான் சும்மா உதாரணத்திற்குச் சொன்ன, 'கனடா எல்லையிற் கடவுச்சீட்டுக் கிழித்தலும் கத்தரிக்கோல் கொண்டுபோகமறுப்பும்'; 'இரகுநாதன் ஆசிரியரின் கற்பிப்பும் கிழங்கு கிளறலும்'; ஊர்ப்பிர முகரின் மகனின் மாங்கல்யமுடிச்சிடல்' எல்லாவற்றிலும் மிக அவதானமாக இருந்ததை உங்கள் முகம் அடிக்கடி ஆங்காங்கே என் பேச்சிடையே எடுத்துச் சொன்னதால், எங்கே என்னைத் தமிழ் இனக்கோடரிக்காம்பு, கீழ் மேல்சாதிவெறியன் என்று எண்ணி விடுவீர்களோ என்று ஒரு பயம். இப்படித்தான், அரசமரம் நிழலுக்கு வளர்க்க, புத்தர் சிலையாய் வந்தமர்வதாய், பக்தியால் பிள்ளை யார் ஊர்வலம் போக, ஹிந்து-முஸ்லீம் கலவரம் வருகிறதுபோல, வழமையாக, நான் ஏதும் யதார்த்த மாய்ச் சொல்ல, சனம் ஏதும் தப்பார்த்தமாய் விளங்கிக் கொள்கிறது. என் சொல்கிற தோரணை சரியில்லை யென்று நினைக்கிறேன். அதனால், இங்கே என் பக்க விளக்க.. அட, நீங்கள் நித்திரையோ..? குழப்பவிருப்ப மில்லை. சொல்லாமற் கொள்ளாமற்போகிறது சரி யில்லை என்பதால், எழும்பினால், வாசிக்க மட்டும் இந்தக்கடைசிக் குறிப்பு.

'அன்பு பெயரறியா முகந்தெளிவிலா நண்பருக்கு, இதுவரை இந்தவரி வரை வந்திருந்தால் நன்றி. பிற கொரு முறை - வாய்ப்பிருந்தால்-, வேறு ஒரு சஞ்சிகை யிற் சந்திப்போம். அப்போது, உங்களை நித்திரையில் ஆழ்த்தாத, ஈடுபாடு தருகிறமாதிரி எழுத புலம்பெயர்ந் தபுலம்பல் கொஞ்சம் தேட அவகாசம் அதற்குள் அகப் படுமென்று நினைக்கிறேன்.

-நட்புடன்
சுகுணன்

❑

**With Compliments**

# Rengan N. Devarajan

First Floor 128 Ilford lane Essex IG1 2LE
Telephone: 0181-478 5797 Facsimile 0181-478 1716
Mobile: 0836 548429

www.padippakam.com



www.padippakam.com



S சாந்தகுணம்

உழைப்பு

www.padippakam.com

# “யாரோடு நோவேன்..”

சிவலிங்கம் சிவபாலன்

குளிரும் வெக்கையும் மாறிமாறி வருவதால் யாருக்கு என்ன இலாபம், டாக்டரைத் தவிர. மூக்கு உள்ளவரை சளியும் இருக்கத்தான் செய்யும். இவ்விரண்டுக்கும் எத்தனை பொருத்தமோ அதுபோல வேதான் இந்தக் குளிர் வந்தாலுஞ்சரி வெக்கை வந்தாலுஞ்சரி காலநிலை மாற்றத்தை வைத்தே சளியும் இருமலும் காய்ச்சலும் கூட்டுறைத் துக்கொள்ளும். சனி கிரகம் பின்தொடருவதாகச் சொல்வார்கள், அதுபோலவே இந்த 'வைரஸ்' கிருமியும் வேறு வேலையின்றித் தொடரவே செய்கிறது.

பிழைத்துக் கொள்ளுவது என்னவோ மருத்துவர் கூட்டந்தான், இளைத்துக் கொள்ளுவது என்னவோ நோய்க்கு இரையானவர்தான்.

வழக்கம்போலவே அன்றும் என் மகன் சுஜனுக்கு சளி நெஞ்சிலும் மூக்கிலுமாக சாவகாசமாக உட்கார்ந்து கொண்டிருந்தது. வாழ்க்கையும் வினாடிக்கு வினாடி வெறுத்தவண்ணமேயிருந்தது. இவன் பிறந்து ஐந்து மாதங்கள்தான் ஆகிறது. இருந்தாலும் ஒரு வயதுக்கு குழந்தையின் தோற்றம், உடல்வாகு அப்படி 'தாயைப் போலைதான்' இவனைப் பார்த்த மாத்திரத்திலேயே யாவரும் வாய்ப்பாடு மாதிரி சொல்லித்தீர்த்துவிடுவார்கள். உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை குளிர்ந்து போகும், என் துணைவிக்கு. 'என்னைப்போல' என்று என்னைத் தவிர யாரும் சொல்லுவதில்லை.

இவன் சிரிப்பை சாப்பாடு தண்ணீர் இல்லாமல் நாள் முழுக்க பார்த்துக்கொண்டேயிருக்கலாம். தூங்கும்போதும் எதையாவது, கைகளில்படுவதை இறுகப்பற்றியவண்ணமே துயில்கொள்ளுவான். இவனுடைய பிஞ்சு விரல் நகத்துக்கு 'வில்கின்சன் பிளேட்' எம்மாத்திரம். ஆனந்தம்தான், "பம்பஸ்" மாற்றுகிற விடயத்தைத் தவிர.

மூத்த மகன் அஸ்வின் பாடசாலைக்குப் போய் வருபவன் வயதும் நாலாகியது. பாடசாலையால் வந்ததும் முதல்வேலையாக அவனது உடுப்புக்கள் யாவற்றையும் களைந்து உடலில் எங்கெங்கே வெளிக்காயங்கள், வீக்கங்கள் இருக்கின்றன என்பவற்றைத் தெரிந்து கொள்ளுவது எனது அல்லது எங்கள் மாலைக் கடன்களில் ஒன்றாகிவிட்டிருந்தது.

பள்ளிச் சிறுவர்களுக்கு என்ன வருத்தங்கள் தொற்றிக் கொள்ளுகிறதோ அதே வருத்தம் மூத்தவனுக்கூடாக வீட்டிலிருக்கும் இளையவனுக்கும் தொற்றிக்கொள்ளும். இரவு பகலாக வீடு அமர்க்களப்படும். திருடன் தப்பித் தவறிபேனும் எங்கள் வீட்டைத் திரும்பியும் பாரான், இதனால் வீடும் பொருட்களும் தப்பிக்கின்றன.


பெயர்புரியாத மருத்துவர்கள், பெயர்புரியாத வருத்தங்களைச் சொல்லி பெயர் மட்டுமல்ல பருமனையே பார்த்து அறியாத மாத்திரைகளையும் கூடவே கலவைகளையும் தந்து, குளிர் தொடங்கிவிட்ட தொல்லையுடன் இந்தத்தொல்லைவேறு, சுமத்திவிடுகிறார்கள். அவ்வளவும் சாப்பிட்டேயாகவேண்டும்.

ஓய்வு நேரம் கிடைக்கும்போதெல்லாம் தொலைக்காட்சி பார்ப்பேன், பத்திரிகை சஞ்சிகை படிப்பேன், முத்திரைகள் சேகரிப்பேன் என்ற பொழுது போக்குகள் போய் மருத்துவமனைக்கு மனைவி பிள்ளைகளை அழைத்துச் செல்லுவேன் என்றாகிவிட்ட நிலை. நல்லவேளை மனைவி என்ற சொற்பதத்துடன் மட்டும் நின்றுகொண்டு விட்டேன.' 'கள்' என்ற பதமும் கூடியிருந்தால் என்பாடு கோவிந்தாதான்.

சின்னவனை நான், ஒன்றுக்கு இரண்டு தள்ளுவண்டிகள் இருந்தாலும், அதில் கொண்டுபோவதில்லை. உடுப்புக்கள் ஒன்றன்மேல் ஒன்றாகப்போட பஞ்சுக் குட்டிபோல இருப்பான். இவனைத் தோளில் போட்டால் என்ன இதமாக இருக்கும். தலையை நிமிர்த்தியும் திருப்பியும் அடிக்கடி பார்த்துக்கொள்ளுவான், சிரித்துக கொள்ளுவான். இதற்காகவே, நான் இவனை எவ்வளவு தூரமானாலும் தூக்கியே கொண்டுபோவது வழமை.

வேலையால் வரமுதலே வேலைத்தளத்துக்கு என் துணைவி 'போன்' பண்ணியிருந்தாள.' "பிள்ளைக்குச் சளி.. கொஸ்பிற்றலுக்குப் போக வேணும்" என்பதன் பொருள், வேலை முடிந்ததும் வீடு. இவளது தந்தி மாதிரியான செய்தியில் ஒரு கண்டிப்பும் இருந்தது.

சாதாரணமாகவே 'போன்' பண்ணும்போது "கெதியா வாங்கோ" என்ற சொல் கண்டிப்பாக இடம்பெறும். கூடவே "..உங்கை நிண்டு ஆடிக்கொண்டிராமல்.." என்ன காரணமோ மேற்படி இந்தச் சொல் மட்டும் அன்று வரவில்லை. எனக்கும் ஆச்சரியம்தான்.



வேலையால் வந்தாகிவிட்டது. உடுப்பு மாற்றியதாக ஞாபகமில்லை, முகங்கழுவியதாக ஞாபகம். ஒன்றன் மேல் ஒன்றாக உடுப்புக்கள் போட்டிருந்ததால், உடம்பில் காற்றுப்பட நியாயமில்லை. எனவே உடம்பு நெக்கி நாறியது, வியர்வை வழுவழுத்துக் கொண்டது, இந்தக் குளிரிலும் வியர்த்தது எனக்கு ஒன்றும் புதி ரானதல்ல.

தேவையான ஒருசில ஆவணங்கள், மருத்துவருக்கும் மருத்துவமனைக்குமானவை ஒரு தோல் பையில் போடப்

www.padippakam.com



பட்டு எப்போதும், மருத்துவமனை நோக்கிப் படையெடுக்கத் தயாரானநிலையில் வைக்கப்பட்டிருக்கும். சிறிய சீப்பு. சிறிய துவாய், சில மென்தாள் கட்டுக்கள் (tissue), குழந்தை அழுதால் அதை ஏமாற்ற வாய்க்கு 'ரப்பர் சூப்பி' போன்ற உடனடி, நீண்டநேர தேவைப்பொருட்களும் மேற்படி தோல்பையில் முடங்கிக் கிடக்கும்.

மகனைக் குளிர் காப்பு அங்கியினுள் திணித்தாகிவிட்டது. அவனைக் கட்டாகத் தூக்கி தோளில் போட்டாகிவிட்டது. மனைவி ரெடி, மூத்த மகனை அவன் போட்டிருந்த அந்த கசங்கல் உடுப்புக்குமேல் குளிர் அங்கியைப் போட்டு நாலாபக்கத்துக்கும் சுருக்கிக்கட்டியாகிவிட்டது. அவனை ஒரு கரத்தில் பற்றியவாறு மறுகரத்தில் அந்தத் தோல்பை கூடவே மனைவியின் கழுத்தில் ஒரு தோள் பை தொங்கல், இரண்டு பைகளும் ஏறத்தாழ பதினைந்து கிலோவுக்குக் குறையாது. சுடுதண்ணீர்ப் போத்தலில் இருந்து தான் குடிக்க போத்தல் தண்ணீர்வரை இருக்கும்.

போத்ததல் தண்ணீர் குடித்தால் உடம்பு குறையும் என்ற விளம்பர தாரகமந்திரத்தால் வீட்டில் யாவருக்கும் போத்தல் தண்ணீர்தான் பாவனைக்கு. இதில் ஒரு சிறிய பிரச்சினையென்னவெனில் மனைவி மெலிய இடமில்லை. நான் பெருக்க இடமில்லை. என்னைப் பார்த்ததும் மாரித்தவளையின் ஞாபகம்தான் வரும்.

மனைவியின் தோள் பையில் உதட்டுப்பூச்சு, கண்பூச்சு நகப்பூச்சு, நகச் சுரண்டல் தகடு, தலைப்பூச்சைத் தவிர யாவும் உள்ளடக்கம். குடை, பேனா, டயரி, கறள் பிடித்த சில்லறைக் காசுகள் என்றும் கழுத்துப் பட்டுத்துணியென்றும் ஏராளம். நடமாடும் சிகை, முக அலங்காரகூடம் என்றும் சொல்லலாம்.

வீட்டில் கம்பி முறிந்த ஒரு குடையுடன் மூன்று குடைகள். ஒரு குடை எப்போதுமே தோள்பையில் உறங்கிக்கிடக்கும். தெரியாத்தனமாக மழையினுள் அகப்பட்டால் மட்டும் தோள்பையினுள் குடை கிடையாது. முதல் மழைக்குப் பிடிக்கப்பட்ட நனைந்த 2குடை. காயவைத்ததின் பின் மீண்டும் தோள்பையினுள் அடையாததே காரணமாகும். வேறுவழியிராது மழைத்துமிபட்டு சளி தும்மல் தலையிடி.

"ரீவியிலை இண்டைக்கு மழையில்லையெண்டாங்கள்.." ஒரு சாட்டை முன்வைப்பாள். வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் மீதும் தொ(ல்)லைக்காட்சி நிறுவனத்தின் மீதும் வீண் பழியைச் சுமத்துவாள். வீட்டைவிட்டுக் கிழம்பும்போதே மப்பும் மந்தாரமுமாக மப்பும் மந்தாரமுமாக இருந்திருக்கும். அப்போது குடையின் ஞாபகம் வந்திராது.

மழைபட்டு இவள் என்ன கரையவா முடியும்? பூசுக்கள் கரைந்து கத்தரிக்கு அடித்த டீசீயாக மாறிவிடும். அதுதான் ஆதங்கம்.

நாங்கள் வீட்டு வாசலைவிட்டு வெளியேறி முன்றலுக்கு வந்தபோதே அந்த வெள்ளைக்காரத் தம்பதியினர் வந்து கொண்டிருந்தார்கள். நான் எத்தனையோ சிரித்த முகங்களைப் பார்த்திருக்கிறேன், படிக்கவென்று வெளிக்கிட்டு பாடியோடித்திரிந்த காலங்கள் முதலாக, ஆனால் இப்படியானவொரு அழகு முகத்தை, பரிவான கண்களைப் பார்த்ததில்லை. இத்தம்பதியினர் வயோதிபர்கள் என்று அல்ல, நடுத்தர வயதைத் தாண்டிய வர்கள்தான்.

கடந்த பதினொரு வருடங்களாக நான் இதே கட்டிடத் தொகுதியில்தான் வசிக்கிறேன் அன்றிலிருந்து இன்றுவரை இவர்களைப் பார்க்கிறேன். உருவ அமைப்போ முக மலர்ச்சியோ குன்றாமல் அவர்களிருவரும் கரம்பற்றியபடி வலம்வரும் காட்சி.. அவர்களுக்கு என்ன கவலை? நிம்மதியில்லாத வாழ்வா, அகதிமுகாம் வாழ்வா, அவர்கள் மீது பொருளாதார? மருந்துத் தடையா, இராணுவ அழுத்தங்களா எதுவுமேயில்லை. அப்போ மனதில் கவலை குடிகொள்ள இடமேது? வாழப்பிறந்தவர்கள் அனுபவிக்கப் பிறந்தவர்கள். அவர்கள் அணியும் ஆடைகள் என்ன ஆபரணங்கள் என்ன அவர்கள் முகங்களைப் போலவே பளபளத்துக் கொண்டேயிருக்கும்.

எங்களைப் பார்த்து வணக்கம் சொன்னபடி அருகில் வந்தார்கள். மூத்தவன் வழக்கம்போலவே எங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டான். அவர்களும் விடுவதாக இல்லை. தலையைத் தடவி நாடியைத் தடவி செல்லக் கேள்விகள் கேட்டார்கள். அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ தலையையாட்டிய வண்ணமேயிருந்தான்.

தோளில் சாய்ந்திருந்த சின்னவனைப் பார்த்தார்கள்; குளிர்கால அங்கியைச் சற்று விலக்கிப்பார்த்தார்கள். அவர்கள் கொண்ட மகிழ்வுக்கு அளவேயில்லை. கருமையான தலைமுடியாம், அழகான புருவமாம், நீல நிறக் கண்களாம். எதையெதையோவெல்லாம் சொன்னார்கள். யாவற்றுக்கும் சின்னவன் சிரிப்பிலேயே பதில் சொன்னான். தங்கள் புருவங்களை உயர்த்தி கண்கள் விரிய ஆனந்தப்பட்டுக் கொண்டார்கள். குளிர் என்பதை நினைவூட்டி "பிள்ளைகள் பத்திரம்" என்ற தொனியில் சைகை காட்டினார்கள்.

அவர்களுக்குப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. கோடை கால விடுமுறையின் போதும் இவர்கள் உலா போவதாக இல்லை. ஒருபக்கம் மழை தூறிக்கொண்டிருந்தது. பஸ்ஸிலும் நசிந்துகொள்ள ஒரு இடம் கிடைத்தது. சன்னல்கள் யாவும் அடைக்கப்பட்ட நிலையில் பஸ்ஸினுள் காற்றுப் புகவோ அன்றி உள் காற்று வெளியேறவோ எந்தவித வழிவாய்க்கால்களுமில்லை. அந்தப் பேருந்தினுள் நின்றுகொண்டு பயணித்த கொடுமையைவிட, அதனுள் பரந்து தேங்கி நின்ற சன வெப்பக் காற்றைச் சுவாசித்தே எனக்கு மயக்கம் வருவதுபோலாகிவிட்டது.

ஒருவர் சன்னல் கண்ணாடியை விலக்கிவிட்டு காற்று உட்புக வழிவிட்டுக் கொண்டார். வரவேற்க வேண்டிய விடயம். யன்னலோரம் அமர்ந்திருந்து பயணித்த சில வயோதிப மாதர் உரத்தகுரலில் தம் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு, வெளியில் தூறிய மழையைக் காரணங் காட்டி மீண்டும் யன்னல்கதவை அடித்துச் சாத்திவிட்டார்கள். மூச்செடுக்க முடியாத நிலைமை.

பிள்ளைகள் வேறு நிலைமையைப் புரிந்துகொள்ளாதவர்களாய் அனுங்கியும் சிணுங்கியும் கொண்டனர்.

www.padippakam.com



பஸ் வேறு ஆமையைவிடக் குறைந்தவேகத்தில் ஊர்ந்து கொண்டு பொறுமையைச் சோதித்தது. பஸ்ஸின் டீசல் மணம் வயிற்றைக் குமட்டியது.

"நடந்தே போயிருக்கலாம்" ஒரு கரத்தில் மூத்தவனையும் மறுகரத்தில் பொருட்களடங்கிய தோல் பையையும் பற்றிய மனைவி என் பொறுமையை மேலும் சோதித்தாள். ஒரு சில நிமிடங்கள் யுகங்களாகவே கழிந்தன.

மருத்துவமனை வாயிலை பஸ் சென்று அடைந்தது. முன் கதவும் நடுக்கதவும் திறந்து விடப்பட்டன. மூட்டையிலிருந்து சிந்துப்பட்ட நெல்லிக்காயாட்டம் பயணிகளில் ஏறத்தாழ முழுப்பேருமே முண்டியடித்துக்கொண்டு இறங்கிக்கொண்டனர், இல்லை பறித்துக் கொட்டப்பட்டனர். அவர்கள் பாதங்கள் நிலத்தில்பட்டதாகத் தெரியவில்லை. யாவரும் மருத்துமனை நுழைவாயிலைக் கடந்து கொண்டிருந்தனர்.

"உந்தச் சனங்களுக்கெல்லாம் என்ன வருத்தமாம்?" எனது கேள்வியும் அதுவாகத்தானிருந்தது. பலத்த பிரயத்தனத்தின் பின் அவசர சிகிச்சைப் பிரிவை அடைந்தாகிவிட்டது. இங்கும் என்ன வாழுதாம்? சனக்கூட்டம்தான். இது அந்தக்கால 'பாண் கியூவை' நினைவுபடுத்திற்று. இடுப்பிலும் தோளிலும் மார்போடு அணைத்தபடியுமாக குழந்தைகளைத் தாங்கிய வண்ணம் பெற்றோர், பாதுகாவலா, வேலைக்காரர். நாங்கள் குடும்பமாகவே பிரசன்னம்.

சிலருடைய கண்கள் காய்ச்சலால் சோர்ந்து போயிருந்தன, சிலருக்கு மூக்கின் இரண்டு துவாரங்களினூடும் சளி கலர் கலராக வந்தவண்ணமிருந்தது. சிலர் தம் பிடித்தவண்ணம் சளியை நாசியிலேயே வைத்துக் கொண்டிருந்தார்கள். இருமி இருமிக் களைத்து குரல் வெளியே வராமல் தொண்டையடைத்துச் சிலர் காணப்பட்டார்கள். யாவருமே ஆறு, ஏழு வயதுக்குட்பட்டவர்கள்தான்.

யாருடைய குழந்தைகளையும் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடவிடவேண்டாம் என்ற கட்டளை அறிவிப்புப் பலகை மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிருமி எதிர்ப்புச் சக்திகொண்ட தடுப்பூசியை சகலரும் ஏற்றிக்கொள்ளும்படியான வேண்டுகோளும் விடுக்கப்பட்டுக்கொண்டேயிருந்தது. வந்திருந்த எல்லாப் பிஞ்சுகளையும் பார்க்க முடியவில்லை. ஒன்றையொன்று பார்த்து விம்மி விம்மிக் கொண்டும், பொருமியடித்துக்கொண்டும் சினத்துடனேயே காணப்பட்டார்கள். அவர்களைப் பார்க்கவே பொறுக்கவில்லை.

குழந்தைகள் இலவம் பஞ்சு மெத்தையிலே காலையும் கையையும் எறிந்து அமைதியாகத் தூங்குவதையும், இடையிடையே கனவுகண்டு அழுவது மாதிரியும் சிரிப்பது மாதிரியுமாக தம் பூ முகத்தை அபிநயப்படுத்திக் கொள்ளுவதையும், அவர்கள் நெஞ்சப் பரப்பிலே காதை வைத்துக் கேட்டால் வரும் அந்த இதயத் துடிப்பின் நாதத்திலேயும் என்னையே நான் மறந்த நாட்கள் அதிகம் உண்டு. மேலும் அவர்களின் இரு பிஞ்சுக் கரங்களையும் இறுகப்பற்றி மூக்கினால் அவர்களது தொப்புள் பகுதியை வருடும்போது அவர்கள் படும்பாடு கூச்சத்தினால். இவை தவிர நான் என்னை மறந்ததாக எங்கும் ஞாபகம் இல்லை குடியுட்பட.

உடுப்புக்கள் யாவும் களையப்பட்ட நிலையில் சின்னவனின் மார்புப் பகுதியை நன்கு 'மசாஜ்' செய்தார் மருத்துவர். ஏற்கெனவே வாடிவதங்கிப்போயிருந்த, முழுசாக ஐந்து மாதங்களேயான மழலையால் இதைத் தாங்கமுடியுமா? வீறிட்டுக்கத்தியது. இது போதாதென்று கோழியின் கழுத்தைத் திருகுவது போலவே, திருகி மூச்சைசத்திமறடித்து வாயால் மார்புச் சளியைக் கொண்டுவந்து காட்டினார் மருத்துவர். நானே மயங்கிவிழாத குறை. தாயும் மூர்த்தவனும் கண்களையும் காதுகளையும் இறுகவே மூடியவண்ணம் ஒடி மறைந்து விட்டனர். எனக்குக்கூட ஒரு மாதிரியாகத்தானிருந்தது.

கண்டபடி 'அன்டிபயோடிக்' கொடுப்பது உடலாரோக்கியத்துக்கு உகந்தது இல்லை என்ற ஆலோசனையின் பேரிலேயே மேற்படி 'மசாஜ்' தொடர்ந்த மருத்துவரின் கனதியான கைகளைப் பற்றிக் கொண்டேன். மகனும் வீறிட்டுக்கொண்டேயிருந்தான். மருத்துவரும் விடுவதாக இல்லை. ஒரு கை பார்ப்பதாகவே திடங்கொண்டார் போலும். 'இந்தப் பச்சைக் குழந்தையைப் போய்.. இப்படி வருத்தி..' அவனும் என்னையே பார்த்தவண்ணம் கதறினான்

'உனக்குப் போய் புள்ளையாப் பிறந்தனே..' என்கிற மாதிரி இருந்தது அவனது அழுகையும் பார்வையும். டாக்டரும் என் வேண்டுகோளுக்கு இணங்கினார் போலும். ஒரு நொடிப் பொழுதில் என் மகனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டேன். டாக்டருக்கு நன்றி சொன்னேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. "இனி என்ன பாடுபட்டாலும் நான் இஞ்சை வரமாட்டேன்" என்றது மட்டும் எனக்கு ஞாபகம்.

கொண்டுபோன பொருட்களைச் சரிபார்த்துப் பொறுக்கி எடுக்க நேரமில்லை. யாவற்றையும் அள்ளி உமலில் அடைவது மாதிரி அடைந்தாகிவிட்டது. வெளிக்கிட்டாகிவிட்டது. மீண்டும் பஸ் பயணம். அங்கும் பனங்கிழங்கு அடுக்கிய மாதிரியிருந்தது. சனக்கூட்டம். நெரிசல்தான். நசிஞ்சு போனேன்தான். பிள்ளையையும் தோளில் போட்டபடி நின்றேன், நின்றேன். யாரும் எழும்பி இடந்தந்ததாகவில்லை. நானும் கேட்டதாக இல்லை. மகனின் பயத்திலான இதய அடிப்பு மட்டும் என்னுடலை அடித்துக் காயப்படுத்திக் கொண்டது. இடையிடையே விக்கல் வேறு. இன்னும் அவன் நோர்மலுக்கு வரவில்லை.

வீடு வரும்வரை நான் யாருடனும் பேசவில்லை. வலிதாங்கமுடியாமல் மகன் துயில் கொண்டு கொண்டிருக்கிறான். அவனைவிட மனவலி எனக்கு.

வரும் வழியிலேதான் "மும்ஜிதா கல்ரா"னை சந்திக்க நேர்ந்தது. இவள் தனது பெற்றோருடனும் சகோதரியுடனும் எங்கள் வீட்டுக்கருகிலுள்ள கட்டிடத்தில்தான் வாழ்கிறாள். எகிப்து தான் இவர்களது பூர்வீகம். இவர்களுக்கும் எங்களுக்குமிடையேயான நட்பும் பல வருடங்களாகவே தொடருகிறது. இவர்கள் நல்ல பணவசதி படைத்தவர்கள். நகர மையப் பகுதியிலே மோட்டார் வண்டி காட்சியறை வைத்திருக்கிறார்கள். சனி, ஞாயிறு மாலைவேளைகளில் நாம் உலா வரும்போது இவர்க

www.padippakam.com



ளைச் சந்திப்போம். ஆனால் பேசுவது கிடையாது.

எங்களை இவர்கள் பாகிஸ்தானியர் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கும் அவர்க ளுடன் பேச பழக விருப்பம். அவர்களுக்கும் எங்களை யார் என்று அறிய விருப்பம். நாங்கள் ஏன் வலியப் போவான்? எனக்கு அந்த அகங்காரம் இடங்கொடுக் கவில்லை. அவர்களாகவே பேசினார்கள். எங்களைத் தெரிந்து கொண்டார்கள்.

"பிஸ்மில்லா கான் "அவர்களுடைய செனாய் இசை கசட் கொடுத்தேன் கூடவே" "இந்தியன்" பாடல் கசட்டும் கொடுத்தேன். நட்பு நல்லபடி மலர்ந்து கொண்டது. அவர்கள் வீட்டுக்கும் எங்களை அழைத்துக்கொண்டது நட்பு. இதுவரை நான் அவர்களை எங்கள் வீட்டுக்கு அழைக்கவில்லை. காரணத்தையும் சொல்லிவிடுகிறேன். இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது. என் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் ஊறுகிறது. அவள் (மும்ஜிதா கலீரா) வீட்டுக் கிணற்றில் எண்ணெயல்லவா ஊறுகிறது. அவள்வீட்டு, சப்பாத்துக் கழற்றிவைக்கும் அறையினது பரப்புத்தான் எனது வீட்டுப் படுக்கையறை.

அவள் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தபோதுதான் உணர்ந்தேன் அது வீடு அல்ல என்று. சினிமாவில் பாத்திருக்கிறேன் எத்தனையோ அரண்மனைகளை, இதைப்பார்த்ததும் பிரமித்துப் போனேன். இருந்தாலும் அவர்களுக்கு எனது நிலையைக் காட்டிக்கொள்ள வில்லை. அவள் வீட்டுச் சோபாவில் உட்கார்ந்தபோது எனது உடம்பின் பாதி மறைந்தேவிட்டது.

இதிலும் ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும். இங்கு எத்தனையோ பிரபல்யமான தளவாடக் கடைகள், எல்லாம் ஆறு மாடி ஏழுமாடிகளைக் கொண்டவை. அனேகமானவற்றில் ஏறி இறங்கியிருக்கிறேன். ஒரு வினாடியேனும் இப்படியான சோபாவில் அமர்ந்து இருந்து பார்த்தில்லை.

வீட்டையும் அங்கு காணப்பட்ட பொருட்களையும் பார்வையிட்டதுதான் தாமதம், எனது துணைவியின் முகத்தல் கடுகு தாளியுடன் சேர்ந்து வெடித்துச் சித றியது.

"உன்னையெல்லாம் போய். கட்டினனே பார்" என்றவி தமாக இருந்தது அவளது பார்வை. உண்மையும் அதுதான். அப்படியான ஒரு வீடு.. அதையேன் இப்ப.. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக்கூடாது, ஆனால் முயற்சிக்கலாம். முயற்சிக்க முயற்சிக்க முயலும் சிக்கும் அல்லவா?

என்னிடமிருந்த "பிஸ்மில்லா கான்" அவர்களுடைய செனாய் இசை ஒலிஇழை இந்த மும்ஜிதா கலீரானின் அக்காள் கணவருக்குப் பிடித்துப் போகவே அவர் என்னை ஓர் நண்பனாகவே நினைத்துக் கொண்டார் போலும்.

மும்ஜிதா கலீரானைப் பற்றி எழுதினாலும் தொந்தரவு எழுதாவிட்டாலும் தொந்தரவு, அவளுடைய அழகு, அந்த அரபுக் கடலோரத்துக்குத்தான் தெரியும். நடிகர், நடிகைகள் பூச்சுப்பூசி வெளிச்சத்தை அள்ளி வீசினாலே ஒளிருவார்கள். இவளது அழகு அப்படியானதல்ல. படைப்பவன் பிரம்மன் என்று சொல்லுகிறார்கள் அது உண்மையாகவிருந்தால், அவன் கண்டிப்பாக இவளைப் படைத்திருக்க மாட்டான்.

நான் கூட எனது மனைவியிடம் சொல்லுவேன் "வாழ்க்கைப்பட்டால் .. இவளுக்குப் போய் வாழ்க்கைப் படவேணும்."

"ஆர் இப்பவேண்டாமெண்டது.. போய் வாழ்க் கைப்படுங்கோவன்"

தாமரை இலையிலை தண்ணீர் நின்றாலும் நிற்கும்.. ஆனால் இவளது முகத்தில்.. வேண்டாம். நான் இவளை வர்ணிக்கப்போக.. இவளது அக்காள் புருசனை எனது துணைவி வர்ணிக்கப்போக.. வேண்டாம். பின்னர் பொல் லுக்கொடுத்து அடிவாங்கிய கதியாகிவிடும் என் கதி.

மெதுவாகத்தான் பேசினாள். ஜீன்ஸ் போட்டு கோட் போட்டிருந்தாலும் பர்தாவும் போடுவது. புர்தாவால் தலையை மறைக்காமல் நான் இவளைப் பாாத்த தேயில்லை. உதடும் உதடும் அசைவது தெரிந்தது. சத்தம் எப்படி வந்ததென்பது தெரியவேயில்லை. ஆசுப் பத்திரிக்கு அலைஞ்ச விசயத்தைச் சொன்னேன். ஆச்சரியமாகக் கேட்டாள். "கசவாரங்கள்" என்று நினைத்தாளோ என்னவோ.

அவள் வீட்டு முன்றலில் எப்போதும் இரண்டு "றோல்ஸ் றொய்ஸ்" கார்கள் அரேபிய இலக்கத் தகட்டு டன் காணப்படும். ஏழடி உயர மல்லன்கள் இருவர், அவர்களும் அரேபியர் போலத்தான் காணப்படுகிறார்கள். சாரதிகளாம். இவ்வளவு வசதிகளுடன் வாழ்பவளுக்கு என்னுடைய சில்லெடுப்பு எங்கே விளங்கப்போகிறது. ஆச்சரியப்படுவாள்தானே.

அறிவு கெட்டதனமாக நான் அவளுடன் எதையாவது கதைத்து வழிந்து கொண்டிருந்தாலும் என்றோ என்னவோ என் துணைவியும் என் காலை மிதித்த வண்ணமேயிருந்தாள். தோளில் துயின்று கொண்டிருந்த மகனும் வலி அகோரத்தால் விக்கல் எடுத்தபடியே யிருந்தான்.

அவளிடமிருந்து விடைபெற மனமில்லாமல் விடை பெற்றுக்கொண்டு அடியெடுத்து வைத்தது தான் தாமதம் "பெட்டைகளைக் கண்ட உடனே.. பல்லை இளிச சுக்கொண்டு நிக்கிறது.. பக்கத்திலை ஆர் நிண்டாலும் தெரியிறதில்லை" உண்மையும் அதுதான். நானும்தான் என்னத்தை செய்யிறது. எனக்கு இருப்பது கலைக்கண்.

பிரதான வீதியைக் கடக்க வேண்டும். மின்விளக்கு சிவப்பு முகத்தைக் காட்டி என்னைத் தடுத்து நிறுத தியது. நின்றோம். தெருவின், போவதற்கும் வருவதற்கு மான இரண்டு பாதைகளிலும் மோட்டார் வண்டிகள் தரையைத் தொட்டதும் தொடாததுமாக வழுக்கிக் கொண்டே சென்று கொண்டிருந்தன. மழை தூறிக் கொண்டிருந்ததால், பிரதான பாதையை எப்படியாவது கடந்துபோய்விட வேண்டுமென்ற எண்ணமும் உந்து தலும் யாவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

தங்களுக்குச் சிவப்புமுகம் வருவதற்குள் தாங்கள் போய்த் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற கெதியில் வண்டிகளும் போட்டி போட்டுக் கொண்டு ஒன்றை யொன்று முட்டுமாப் போல் சவாரித்துக் கொண்டிருந்தன. தப்பித்தவறி அந்தச் சாலையில் காலை வைத்தால்

www.padippakam.com



கருமாதிதான். நோ அப்பீல். உடம்பைப் பச்சடி போட்டு விடும் அந்த வண்டி நிரைகள்.

இந்த நேரம் பார்த்து ஒரு நாலு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் வில்லிலிருந்து அம்பு பாய்வது போல் விரைந்தே வந்து கொண்டிருந்தான். பின்னே அவனுடைய தாயாக இருக்கவேண்டும், நல்ல பருமனான ஒருத்தி அடித்தொண்டையால் எதையோ சொல்லி இரைந்து கொண்டே அவளும் ஓடியே வந்தாள். யாரும் அவர்களைக் கண்ணுற்றதாகவில்லை. தோளில் சாய்ந்திருந்த மகனைப் பற்றியிருந்த கரத்தால் அம்பெனப் பாய்ந்த அந்தச் சிறுவனின் கரமொன்றை எட்டியே நான் பிடித்துவிட்டேன்.

வாகன நெரிசலினுள் சிக்கி பந்தாடப்பட்டிருக்கக் கூடியவனைப் பிடித்து நிறுத்திவிட்டேன். கைதப்பியிருந்தால் கரணம்தான். எனக்குள் ஒரு மகிழ்ச்சி. பருத்த உடலுடன் கர்ச்சித்துக் கொண்டுவந்தவள் தன் பிள்ளையை, அதுதான் அந்தச் சிறுவனை குலையிலிருந்து இளநீரை இடுங்கி எடுப்பதுபோல என்னிடமிருந்து அவனை இடுங்கி எடுத்தாள். குரலை மேலும் கூட்டினாள். நாய்பேயடி, சனல் சாத்து. பையனும் முரண்டு பிடித்தது. அவளோ கைப்பிடிவிடவில்லை. "சனியன், மூதேசி, தரித்திரம், நாய் பண்டி கழுதை" போன்ற வார்த்தைகளைத்தான் உதிர்த்திருப்பாளென நினைக்கிறேன். பாதசாரிகளும் கூடி விட்டனர், பாதையைக் கடக்க பச்சை முகம் வேறு விழுந்துவிட்டது.

சாலையைக் கடக்காமல் அவளிடமிருந்து நன்றி சொல்லும் வார்த்தையை எதிர்பார்த்து கொண்டே நின்றேன். அந்த அடித்தொண்டைச் சத்தத்தில் எனது மகன் வேறு திடுக்கிட்டபடி எழுந்து கொண்டான். மலங்கமலங்க முழித்தான். ஒரு பையனைக் காப்பாற்றி விட்டேன் என்ற பெருமை எனக்கு.

நன்றியா.. எனக்கா.. அவளா.. இல்லவேயில்லை. பையனைப் பார்த்து எப்படியெப்படிப் பேசினாளோ அதே போலவே என்னையும் பார்த்துத் திட்டினாள். ஏன் அடிக்கவே வந்து விட்டாள். எனக்கு ஏமாற்றமாகி விட்டது மட்டுமல்ல அவமானமுமாகிவிட்டிருந்தது. யாவரும் என்னை ஒரு மாதிரியாகவே பார்த்தார்கள். பையனை கொற இழுவையில் இழுத்துக்கொண்டு சாலையையும் கடந்து போய்விட்டாள். கர்ச்சனையும் தொடர்ந்தே கேட்டது. இதுவரை ஏன் என்னை ஏசினாள். இல்லை திட்டினாள் என்பது எனக்குப் புரியவில்லை.. ஒருவேளை ..துவேசமோ..

எதிரே அந்த வயோதிபத்தம்பதியினர், அவர்களிடமும் அவள் என்னைப்பற்றி ஏதேதோவெல்லாம் சொல்லி ஏசினாள். அவர்களும் தலையையாட்டிக் கேட்டுக் கொண்டிருந்தனர். சாலையைக் கடக்க எனக்கு பச்சை முகம் வரும்வரை நான் காத்துக்கொண்டு நின்றேன். மழை தூறியபடியேயிருந்தது.

மழைத்துமிபட்டு மூத்தவனுக்கு இப்போ, சளி பிடித்து விட்டிருந்தது. தும்மல் தொடங்கியிருந்தது. ❑

Greetings

S Satha & Co.

Solicitors & Administrators of Oaths

378 High Street North
Manor Park, London E12 6PH

Tel: 0181-478 9484 Fax: 0181-471 9485
Mobile: 0956 288 671 DX: 133012 UPTON PARK 2

For A WIDE RANGE OF LEGAL SERVICES

www.padippakam.com

ப வி சிறீரங்கன்



# சவக்காலை

இந்த மனுசனுக்கு இப்படியா? யாருக்குத்தாம் நேருவதென்று விவஸ்தையில்லாமப் போச்சு.

நீங்கள் சொல்லுவது சரியண்ண. போனகிழமை எல்லைக் கூட்டிக்கொண்டு போய் சாப்பாடு தந்த மனுசன்.

மாமன் மருமக்கள் பிரச்சினையாலதானாம்...

"என்ன பழைய காயமே?"

"ஓமெண்டுதான் டொக்டர் சொன்னவராம், என்னன்டாலும் நாலு தவ்வல்களின்ர வாழ்க்கைதான் பாழாய்ப்போச்சு."

"பொடியளா, பொட்டையளா?"

"நாலும் பொட்டையள்."

ஐயோ பாவுத்தை. சின்னச் சின்னக் கூட்டமாக நின்று சனங்கள் பரிதாபக் கூட்டம் நடத்திக் கொள்ள மூன்று மணியாகிக் கொண்டிருந்தது. ஆனால், எனக்கு மட்டும் நெஞ்சுமுட்டும் சோகம். எதுவுமே கதைக்க முடியவில்லை.

"டேய் வாவன்ரா, நீ என்ர மச்சாளின்ரை பிள்ளை. நாளைக்கு உனக்கு ஒண்டெண்டால்.... நான்தான் ஓடிவரவேணும"

"பெட்டை எந்த இடமடா? எங்கட ஆட்கள்தானோ? உன்னைவிடு. நீ ஊரிலேயே இதுகள் பாக்கிற தில்லை. இருந்தாலும் பறுவாயில்லை. இரண்டு பேருமாய் வாங்களன்."

அதே குரல்.

போனில் கேட்ட அதே குரல்.

என் காதோரம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

"ஆரும் அடிக்கடி வந்து போனால்தான்டா உறவு ஒண்டிக்கொண டிருக்கும். இல்லாட்டா எல்லாமே தூரத்துாரத்தான்டா." மனுசன் அடிக்கடி கூறியமாதிரி நான் இறுதிவரை அவரைப் பார்க்கப் போகவில்லை.

சித்தி- தலைகுலைந்து, சுருள் முடிகள் நாலாபக்கமும் பரப்பிக் கொண்டிருக்க தலையைத் தொங்கப் போட்டவண்ணம் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார். பக்கத்தில் குழந்தைகள் தாயைத் தொட்டுப் பார்ப்பதும், தங்களுக்குள் ஏதோ பேசிக்கொள்வதுபோல முகத்தை முகம் பார்ப்பதுமாக இருந்தார்கள்.

நானும், சிறுவர்களோடு சிறுவனாகப் பக்கத்தில் போய் நின்றேன். சித்தி ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

"சொறி சித்தி.

அழுது சிவந்த கண்கள் என்னை ஏளனமாகப் பார்த்து மூடியது. நான் எனக்குள்ளே குறுகிக் கொண்டேன்

"சித்தி, இவையெல்லாம் என் மனைவியின் சகோதரிகள். இவர்தான் என் மனைவி.

www.padippakam.com



"…"

அட சீ!

நானொரு மனுசனா. எந்த நேரத்தில் எதைக் கதைக்க வேணுமெண்டு தெரியாதவனாய் போய் விட்டேனே.

சித்தி, சித்தப்பா வாடா வாடா வெண்ட போதெல்லாம் வரமுடியவில்லை. இப்ப அவர் என்னை தண்டிச்சிட்டார் சித்தி. நான் ஆறுதல் சொல்லி அவஸ்தைப்பட்டேன்.

"மூண்டு மணியாச்சு. எல்லாரும் வெளிக்கிடுங்க... ஐயோ என்ர குஞ்சு உனைப் பார்க்க... ஏனிந்தக் கடடுப்பாடு"

வயசான என் ஆசையம்மா எல்லோரையும் வெளிக்கிடச் சொல்லிக் கொண்டு ஒப்பாரியுடன் ஒரு காரில் ஏறிக் கொண்டாள்.

நானும், தலைகுனிந்த வண்ணம் வீட்டை விட்டு வெளியேறி, சகலனின் காரில் ஏறிக்கொண்டேன்.

"தம்பி சூடத்தை ஒரேயடியாய்க் கொழுத்தாமல் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொழுத்த வேணும் என்ன?

"ஓம்."

"இந்தப் பூக்களின்ர தண்டை யாராவது ஒடியுங்க. சந்தனம் எங்க?"

"கண்ணாடி யாரப்பா கொண்டு வாறது? ஆளைக் குளிப்பாட்ட விட மாட்டாங்கள். கண்ணாடியைத் தான் குளிப்பாட்ட வேணும். நேரம் போகுது கண்ணாடியைக் காண யில்ல..."

"இந்தா வந்திட்டுது."

"கொண்டு வாரும்."

"கொஞ்சம் விலத்துங்க."

"தேவாரம் பாடுங்கப்பா."

"யாரப்பா தேவாரம் பாடுங்கப்பா."

எனக்குள் நான் இன்னும் சுருங்கிக் கொண்டேன். இந்த நேரத்திலயாவது தேவாரம் பாடலாமே. மனனம் பண்ணியதெல்லாம் மறந்து போச்சு.

இருந்தாலும் இயற்றிப் படிக்கலாமே என்று என் மனம் பிராண்டிக் கொண்டது. அறிவு விடவில்லை.

கடுமையான தேவாரம் ஒன்றை ஆசையம்மா குரலெடுத்து ஆரம்பித்தா. பின்பு முன்னின்று நடத்துபவர் அரைமணி நேரத்துக்குப் பாடினார்.

கை நடுங்கியது.

உஷ்ணம். நான் காட்டிக் கொள்ளவில்லை.

"தம்பி சூடச் சட்டி சுடுதோ? இந்தாரும் இந்தச் சட்டியையும் கீழை வைத்துப் பிடியும்." என்னையே பார்த்துக் கொண்டிருந்த ஒரு வயோதிபர் இக்கட்டான நிலையில் உதவினார்.

"நவப் பார் பதி பதியே"

"அரகர மகா தேவா"

"தென்னாடுடைய சிவனே போற்றி"

சூடப் புகையும் ஊதுபத்திப் புகையும் சவக்காலையை நிறைத்து மூச்செடுக்க விடவில்லை, கூடிநிற்பவரை.

"சரி சரி. உறவுக்காரர்கள் எல்லாம் வந்து வாய்க்கரிசி போடுங்க."

"தங்கச்சி நீங்க தாலியைக் கழட்டிப் போடுங்க."

தாலி பிணத்தின் மார்பில் போடப்பட்டது.

"தம்பி, நீ போடாதே!" தன் மகனுக்கு ஆசையம்மா காதுக்குள் வந்து கூவிக்கொண்டா. வீட்டிலிருந்து வெளிக்கிடும் போதும், சவப்பெட்டி திறக்கும் போதும் கூடப் போவது போல் அழுதவ ஆசையம்மா. நான் வாய்க்கரிசி போட அரிசியைக் கிள்ளினேன்.

"தம்பி. உமக்கு கொப்பரில்லையா?"

"அப்பா இருந்தாலும் போடுவன்."

சில வயதானவர்களும் போட்டார்கள்.

"நேரம் நாலு மணியாச்சு.

சவப்பெட்டிக்கு இறுதி ஆணியடிக்கும் நேரம் வர சவக்காலைத் தொழிலாளியொருவன் நெருங்க வந்து கொண்டான்.

எல்லோரும் அழுதார்கள்.

எனக்குள் மனம் வெம்பிக் கொண்டிருந்தது.

ஊரில் இப்படியில்லையே.

தாலியை கட்டியவரின் பிணத்தோடு அனுப்புவது இல்லையே.

சாமிப்படம் தாலியைக் கேட்டு தனக்கு பூசை செய்யச் சொல்லுமே.

ஆனால், இங்கு சவத்தை மூடுபவன் உடனேயோ அல்லது சுணங்கியோ பவுணை எடுக்கப் போறானே.

நாலு பிள்ளைகள். எதுவுமேயில்லை.

சித்தப்பா இறந்தபோதும் இதயத்தையும் கிட்னியையும் தானஞ் செய்த வண்ணம் உயிரிழந்தார்.

இப்ப இதையுமா?

"ஓர் ஆண்மகன் பெண்ணுக்குக் கட்டும் தாலி அவன் இறப்புடன் இழக்கப்படும் ஒன்றல்ல. அது அவன் மரித்த பின்பும் மனைவியுடன் உறவாடவல்லது. கணவன் இன்னும் வாழ்கிறான் என்ற உணர்வையூட்டவல்லது. கணவனின் நினைப்புடன் வாழ்வை எதிர்கொள்ள வைப்பது. அத்தகைய தாலியை இறந்த சித்தப்பாவுடன் போட்டனுப்பினால் இடையில் யாராரோ அபகரித்துச் செல்வார்கள். அது சித்தப்பாவுடன் கூடச் செல்லாது. எனவே அதை எடுத்து சாமியறையில் வைத்து பூஜை செய்யுங்கள். உங்கள் கணவர் இன்னும் உயிருடன் வாழ்வதாக எண்ணிக்கொள்ள இது உதவும்."

என்னைச் சிதைத்து தாலியைப் பற்றி சிறு விளக்கம் சொல்லி முடிக்கும்வரை சவப்பெட்டியை மூட வந்தவன் தாமதித்துக் கொண்டிருந்தான்.

"தம்பி நீங்களே எடுத்து சித்தியிடம் கொடுங்க." அதே பெரியவர்.

என் எதிர்பார்ப்பு வீணாகவில்லை.

எனினும், எனக்குள்- நான் தோற்றுத்தான் போனேன்.

பவுண், காசு!

நாலு குழந்தைகள். எதுவுமேயில்லை.

அகதி. குழந்தையகதிகள்.

எனக்குள் - நான், இருக்கட்டும் இவ்வேளைகளில் மட்டும்.

மூக்கினுள் கரும்புகை சளியுடன் உறவாடியது.

சீறினேன். அது போகவில்லை.

சனங்கள் நகர, சவக்காலையைச் சுத்தஞ் செய்து, சகலனின் காரில் ஏறியமர சித்தியும் நாலு குழந்தைகளும் ஈழத்தில் நிற்பது போல் காட்சியளித்தார்கள். ❑

www.padippakam.com



# புதைமணல் மாந்தர்

நா.சுவாமிநாதன்

**காட்சி –1**

நியூஜெர்சியில் ஒரு சிறு நகரக் கடைத்தெருவில் ஒரு பிட்ஸா கடை. பிடஸா விலை 5 டாலர் என்று அறிவிப்பு தெரிவிக்கிறது. விசுவும் சூரியும் பிடஸா ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருக்கிறார்கள்.

சூரி: என்ன இந்த வருஷமாவது படிப்பு முடிக்க முடியுமா? தெரியலே.

விசு: பசி வேளையிலே ஏன் அந்த பேச்சு? உரல்லே தலையெ விட்டாச்சு. நடக்கறது நடக்கட்டும். உன் அட்வைசர் பாரிஸ்லெ இருந்து வந்தாச்சா?

சூரி: அவருக்கென்ன? சந்தோசமா இருக்காரு. இதுலெ வாரத்துக்கு மூனு தடவே போன்லே கூப்பிட்டு அதை பண்ணு இதை பண்ணுன்னு ஆணை வேற. நான் தறிகெட்டுப்போய் இங்கெ வந்து மாட்டினேன். பேசாமெ இந்தியாவிலேயே ஒரு விரிவுரை யாளரா இருந்திருக்கலாம். எல்லாம் உருத்து வந்து ஊட்டும் ஊழ்வினை. உன் கதை எப்படி?

விசு: அடுத்த வாரம் மீட்டிங் இருக்கு. அப்ப கேட்டுருவேன், எப்ப தீஸிஸ் எழுதலாம்னு. ரிஸர்ச் முடிச்சாச்சு.

சூரி: தமிழ்லே பேசேன். ஆய்வு, ஆய்வுக்கட்டுரை, நீ என்ன வெள் ளைக்காரனா?

விசு: சரி அய்யா, பட்டம் வாங்கிட்டா பணி கிடைக்குமா?

சூரி: கடினமே. கிடைக்கிற ஊருக்கு மூட்டை கட்டணும். ஆனால் எனக்கு ஒரு திட்டம் இருக்கு.

விசு: என்ன அது?

சூரி: இப்ப கிடைக்கிற சொல்ப சம்பளத்திலே பிட்ஸாவெ பெரிசா இருக்கு. வேலை கிடைச்சா, 5 வருஷத்துலெ பத்தாயிரம் டாலர் சேத்தா போறும். அதை எடுத்துக்கிட்டு இந்தியாவிலே பாங்கிலே போட்டு வட்டியிலேயே காலம் தள்ளலாம். கிராமத்துலெ போய் தமிழ் வாத்யாரா கூட இருக்கலாம். மாடு, மனை, வீடு, வாசல்.. வாசலில் வீசும் தென்றல்..
பஸ் போனா வர புழுதி மண்வாசனே மனசிலேயே இருக்கு.

விசு: ப்ளான் நல்லாத்தான் இருக்கு. ஆனா, பத்தாயிரம் டாலர், எப்படி சேக்கப்போறோம்? ஊருக்கு டிக்கட் வாங்க 500 டாலர் கூட பைலெ இல்லே. மூணு வருசத்திலே திரும்பிடுவேன்னு அம்மாகிட்ட சொல்லிட்டு வந்தேன்..

சூரி: மனசிலே உறுதி வேணும். பணம் பண்ணியாகணும். காசில்லாம ஊருக்குப் போனா காறித்துப்புவாங்க.
பிடஸா தயாராம், கத்தரான் பாரு. கிரீன் பெப்பர்னு சரியா சொன்னியா, பெப்பரோனி போட்டுறப்போறான். மிளகாய்பொடி இருக்கா பாரு.

**காட்சி –2**

இடையில் பத்தாண்டுகள் கழிந்துவிட்டன. சூரியும், விசுவும் படித்து முடித்து வேலையில் இருக்கிறார்கள். இருவருக்கும் திருமணமாகி விட்டது. பிட்ஸ்பெர்க் விமானநிலையத்தில் சந்திக்கிறார்கள்.

சூரி: ஹாய், விசு, எப்படி இருக்கே?

விசு: நல்லாத்தான் இருக்கேன். இப்ப வேர்ஜினியாவிலே ஒரு

www.padippakam.com



கம்பெனிலே இருக்கேன். மனைவியும் டீச்சரா வேலை செய்யறா. குழந்தை இல்லே. கம்பெனி வேலையா வந்தேன்.

சூரி: நான் பொஸ்டன்லே வேலை செய்யறேன். மனைவி டாக்டரா இருக்கா. இரண்டு வயசிலே ஒரு பெண். அபிராமின்னு பேரு. கோயில்லெ மொட்டெ போட வந்தேன். சின்னக் குழந்தே பாரு. இந்தியாவுக்கு போனால் ஏதாவது ஹெல்த் ப்ராப்ளம் வரும். எல்லா எடத்லெயும் ஒரே டஸ்ட் பாரு.

விசு: என்ன விசா உனக்கு? கிரீன் கார்டு வாங்கிட்டயா? எனக்கு இப்பதான் கிடச்சுது. அட்டர்னி ரொம்ப காசு புடிங்கிட்டான்.

சூரி: எனக்கும் இப்பதான் வந்தது. இனிமே சம்பளம் கூடுதலா கேக்கலாம்.

விசு: ஆமா, பத்து வருசம் முன்னாலெ நாம நீயூஜெர்சிலே பிட்ஸா தின்னப்போ சொன்னது நினைவிருக்கா? பத்தாயிரம் டாலர் சம்பாதிச்சா இந்தியா போயிடலாம்னு சொன்னயே? பணம் பண்ணிட்டயா?

சூரி: ஆமாம் விசு, ஆனால் நம்ம அப்ப ஸ்டுடன்ட்ஸ். பெண்ணடாட்டி புள்ளே இல்லயே. தப்பா கணக்கு போட்டுட்டேன். நான் ஊருக்குத்தான் போகப் போறேன். இங்க எவன் இருப்பான்? ஊரா இது? இந்திய வாழ்க்கையே தனி. அங்க இருக்கிற நிம்மதி சந்தோஷம் இங்கெ வருமா? ஆனா, பணம் வேணும். 10,000 போதாது. 50,000 டாலர் இருந்தா போதும். ஊர்ல போய் செட்டிலாகலாம். ஒய்ப் இப்பதான் மெதுவா பாஸ் பண்ணினா. இனிமேலதான் காசு பாக்கணும்.

2 வருசம் கணக்கு வச்சிருக்கேன் ஊருக்கு திரும்ப.

விசு: உனக்கென்னப்பா, மனைவி டாக்டர். இரண்டே வருஷத்லே சம்பாதிப்பே. எனக்கெல்லாம் 5 வருஷம் ஆகும். ஒரு தடவே ஊருக்குப்போய் வந்தா, கடனே அடைக்க 3 வருஷம் ஆறுது. கார் வாங்கணும். தங்கைகளுக்கு கல்யாணத்துக்கு பணம் அனுப்பணும். அம்மாவுக்கு ஹார்ட் ஆபரேஷன் செய்யணும்.

சூரி: மனுசனுக்கு குறிக்கோள் வேணும். இருந்தா சம்பாதிச்சுரலாம். ஒரு அளவு சம்பாரிச்ச ஒடனே ஊருக்கு ஓடிப்போயிரணும். வீடு, கார், பங்களான்னு செட்டில் ஆயிரணும். நம்ம ஒட்டு ஒறவோட கௌரவமா இருக்கலாம்.

விசு: என் ப்ளைட்டுக்கு நேரமாச்சு. வேர்ஜினியா பக்கம் வந்தா வீட்டுக்கு வா. இந்தா கார்டு.

**காட்சி – 3**

இன்னும் பத்தாண்டுகள் கழிந்தன. பொஸ்டனில் ஒரு பெரிய வீட்டின் வரவேற்பறை. ஸோபாவில் விசுவும், சூரியும் அமர்ந்திருக்கிறார்கள். பெரிய்ய்ய்ய ஸ்க்ரீன் டிவி, ஸ்டிரியோ பணக்காரக்களை சொட்டும் சூழ்நிலை.

விசு: சூரி, உன்னப்பாக்க வருவேன்னு நினைக்கவேயில்லை. லக்கியா ஒரு ப்ராஜெக்ட்லெ ரெண்டு நாள் பொஸ்டன் போயிட்டு வான்னு அனுப்பினான். இந்த வீடு பிரமாதமாயிருக்கே. கஸ்டம் ஹௌசா?

சூரி: எஸ், நானே, ப்ளான் போட்டுக்கட்டினேன்.

விசு: உன் பெண் அபிராமி எங்கே?

சூரி: அபிராமின்னா ஸ்கூல்லே பசங்க சிரிக்கிறாங்களாம். ஸ்கூலுக்குன்னு ஏமின்னு பேரெ சுருக்கிட்டம். தெலுங்கு இல்ல, அமெரிக்கன்

www.padippakam.com



பேரு. ஏய், ஏமி, கம் ஹியர்.அங்கிள் பாரு. மை பெஸ்ட் ப்றண்ட். விசு அவளுக்கு தமிழ்கூட தெரியும் கம் ஆன், ஏமி, ஸே ஸம்திங் இன் டமில், ஐ.ஸே.

ஏமி: டோன்ட் பி ஸ்டுபிட் டாடி. ஐ டொன்ட் நோ வெரி மெனி வோர்ட்ஸ் இன் டமில்.

விசு: வெக்கப்படாதே. உங்கப்பா ஒரு டமில் ஸ்காலர். நீ என்ன பேசெரென்னு பாக்கத்தான். கம் ஆன்..

ஏமி: வெல்... சானி, டிவி, இட்லி, டெலிபோன், ..தட்ஸ் ஆல்

விசு: கிரேட், நல்லா பேசறாளெ, அதென்ன சானி? ஸோனி டிவியா.

சூரி: போன தடவே இந்தியா போனபோது ரோட்லே மாடு சாணி போட்டதைப் பாத்தா. அது சாணின்னு சொன்னதும் கப்னு பிடிச்சுகிட்டா.

விசு: தேவலாமெ. ஆமா நீ தமிழ் சொல்லிக்குடுத்தா என்ன? உன் மனைவியும் சொல்லித்தரலாமே?

சூரி: குழந்தே பாரு. 2 லேங்வேஜ் பேசினா கன்ப்யூஸ் ஆயிடுவா. அதனாலே நானும் ஒய்பும் வீட்லே இங்லிஷ்தான் எங்கே டைம் இருக்கு. பிரெஞ்சு, டான்ஸ், பாலே, பியானோ எல்லாம் கத்துக்கறா. வெரி, வெரி, பிஸி. டமில் ஈஸ் ஈஸி.ஊருக்குப்போனா கத்துக்கலாம்.

விசு: ஆமா, என்ன ஆச்சு இந்தியா திரும்பற உன் ப்ளான். பணம் சேத்துட்டாயா? உங்கிட்ட இப்ப 50,000 டாலர் சுலபமா தேறுமே?

சூரி: ஆனஸ்ட்லி, 500,000 டாலர் வேணும் இந்தியா போறதுக்கு. போய் ஒரு இண்டஸ்ரி ஆரம்பிக்கணும். தவிர, பெண்ணுக்கு இந்தியா எஜுகேஷன் சரியா வராது. இங்கெ ஸ்டாண்டார்டே தனி. நம்ம இந்தியாலே காலேஜ்லே படிச்சதெல்லாம் இவ 7வது கிரேட்லேயே படிக்கறா. அட் லீஸ்ட் இவ படிப்பு முடியற வரைக்கும் இங்கதான் இருக்கணம். ஊர்லே போய் ஒரு நல்ல பையன் பாத்து கல்யாணம் பண்ணிடலாம்... ஒய்ப்போட ப்ரைவேட் ப்ராக்டீஸ் இப்பதான் சூடு பிடிக்கறது. நீ போய் செட்டிலாகப்போறியா ஊருலே இப்ப?

விசு: மனைவிக்கு இஷ்டமில்லையே. மாமியார், நாத்தனார், பிக்கல் சண்டை இல்லாமெ இங்கே ப்ரீயா இருந்தாச்சு. மறுபடியும் போய் அங்கே பாமாயில், சக்கரைன்னு க்யூவிலே நிக்கறதான்னு கேக்கிறா. அதுலேயும் ஒரு பாயின்ட் இருக்குல்ல. தவிர எனக்கும் மனேஜ்மென்ட் லெவல்லெ வேலை எவன் தருவான் அப்படி வேலை கெடச்சாலும் இங்க வர காசு வருமா? இங்க ஒரு வசதிலே பழகிட்டோமில்ல. அதை விட முடியுமா? கையில நிறைய காசு தேறட்டும், பாக்கலாம்.

ஏமி: டாடி, மாம் ஈஸ் ரெடி. லேட் அஸ் கோ அவுட் டு ஈட். ஐ வான்ட் ஸ்பகெட்டி.

சூரி: விசு, தப்பா நினைச்சுக்காதே, ஒய்ப்புக்கு ட்யூட்டி ஹெவி. வீட்லெ சமைக்க நேரம் இல்ல. ரெஸ்டாரென்ட்லெ போய் சாப்பிடுவோம். இந்தியா போனாதான் சமையல்காரி, வேலையாள் எல்லாம் வச்சுக்கலாம்.

**காட்சி – 4**

இன்னொரு பத்தாண்டுகள் கழிந்தன. ஒரு பள்ளியின் அரங்கம். இரவு 8 P.M. ஒரு போர்டில் Lecture on Sangam Tamil Poems by Chennai Kavignar KUDIMAHAN (sponsored by Tamil Sangam) 7.30 P.M. sharp என்று எழுதியிருக்கிறது. விசுவும் சூரியும் சந்திக்கிறார்கள். ஒரு நிர்வாகி அவர்களிடம் வருகிறார். மகிழ்வோடு கையெடுத்துக் கும்பிடுகிறார்.

www.padippakam.com



நிர்வாகி:ஹி.ஹி.ஹி. இண்டியன் பங்ஷன். அதான் லேட்டு. இலக்கிய கூட்டமில்ல அதான்.. தப்பா நினைக்காதீங்க நான். செக்யூரிட்டி, எலக்டிரிசியன், உங்களெச்சேத்து 7 பேர் வந்தாச்சு. கவிஞர் குடிமகன் வந்தாச்சு.

பக்கத்து ருமுலே படுத்திருக்காரு. வாந்தி எடுத்தாரு. செவஸ் ரீகல் அவருக்கு உடம்புக்கு ஒத்துகிடலே. ஸ்லைட் ஹாங் ஓவர் இதோ ஆரமிச்சுருவோம். எந்த சீட்ல வாணா ஒக்காருங்க. ப்ளீஸ் டோன்ட் கோ அவே. இன்னிக்கு பாருங்க, நடிகை ஜில்ஜில் படம் நம்ம போட்டி தமிழ் சங்கத்லே போடராங்க, அங்க அவுஸ் புல்லாம், டிக்கட் கிடைக்காதவங்க இங்கேதானே வந்தாகணும்.. ஹி..ஹீ

(அவர் நகர்ந்தவுடன்)

சூரி: ஒரு பயலாவது எனக்கு ஒரு சினிமா நோட்டீசு குடுத்தானா பாரு. எனக்கு இன்னிக்கு சினிமா இருக்குன்னெ தெரியாம போச்சே. ஜில்ஜில் ஈஸ் எ கிரேட் ஸ்டார். நீ எங்க வேலெல இருக்கே?

விசு: போன வருசம் என்னை கம்பெனிலே தூக்கிட்டான். கேஸ் போட்டு பார்த்தேன். ஹியரிங், அப்பீல்னு லாயர் சாப்பிட்டு பணம்தான் நஷ்டம். லக்கியா ஒய்புக்கு வேலெ இருக்கு. யதேச்சயா என்னோட கஸின் ஸன்னெ பாக்க வந்தேன். யங் பெலோ. டேட்டிங் போறானாம். என்னை இங்க போங்கன்னு கழட்டிவிட்டான். நீ தமிழ்நெட்லே கூட எழுதரே போல இருக்கே. The importance of writing in Tamil and speaking Tamil at home ன்னு சூரிங்ர பேருலே இங்லீஷ் ஆர்ட்டிகிள் படிச்சேன். வெரி குட்.

சூரி: யு னொ ஐ லவ் டமில்.. லெக்சர் கேக்க வந்தேன். என் டாட்டர் ஏமி தான் இப்ப டிராப் பண்ணினா. அடட, அதோ பாரு அங்க ஏமி போயிட்டிருக்கா.

விசு: அட வைரடோலாக்கு போட்டுருக்கா, தலையிலெ மயிரக்காணொம் மொட்டயா இருக்கு.

சூரி: செசெ, அது என் மாப்பிளென்னா. பக்கத்திலே பான்ட் சட்டெ போட்டுரக்கரதுதான் ஏமி.

விசு: என்னடா இது. பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிருக்கெ ஒ இன் விடேஷன், சாப்பாடு இல்லயா? என்ன ப்ரண்ட் நீ.

சூரி: எனக்கே இப்பதாண்டா தெரியும், இங்கிலாண்ட் போனா படிக்கி றேன்னு. ஒருத்தனே கல்யாணம் பண்ணிண்டு வந்துட்டா. என்ன பண்றது. அவன் இங்கிலீஷ் அக்செண்ட் நன்னாயிருக்கு. தலதான் மொட்டே, காதுல கடுக்கன். நல்லவேளை, அவனும் இந்தியனாம் பஞ்சாபி ஒரிஜின்.

விசு: குதிரே லாயத்தெ விட்டு ஓடியாச்சு. சரி இந்தியாக்கு திரும்பி போகப்போறியா?

சூரி: நான் இதைப்பத்தி நினைச்சிறேன். பணம் போதாதுன்னு தோணுது. இப்ப இருக்கறதைப்போல பத்துமடங்கு வேணும். உழைக்கிறது ஒரு ப்ரச்னையில்லை. ஐ ஹேவ் ப்லெண்டி ஆப் பவர் பட். ஆனா பாரு, என் பெண் இங்கெ இருக்கறச்சே எப்படி நான் மட் டும் ஊருக்குப் போகமுடியும். இவங்களுக்கு நம்ம ஹெல்ப் வேணுமே. பேரக்குழந்தைகளுக்கு தமிழ் சொல்லித்தரலாமே. தவிர, இந்தியாலே என்ன பண்ணுவே. இட் ஈஸ் நாட் அ ஹெல்தி ப்ளேஸ் டு லிவ். வி நீட் கான்ஸ்டன்ட் மெடிகல் அட்டென் ஷன். ஒய்ப் ஹாஸ் ஏ ரோரிங் ப்ராக்டிஸ் ஹியர். இந்த வயதிலே நான் எதுக்கு இண்டஸ்ற்றி ஆரம்பிக்கணும். வீ வில் கோ அன்ட் விஸிட் ஒன்ஸ் இன் பைவ் இயர்ஸ். இந்தியாலே

www.padippakam.com



ரொம்ப இன்பெக்ஷன், டிஸிஸஸ்.. ஹௌ அபொட் யூ? ஆர் யூ கோயிங்? லக்கிலி யு ஹாவ் நோ கிட்ஸ். ஒரு bumper sticker பார்த்தேன். Insanity you inherit from childrenன்னு போட்டுருக்கான்.

விசு: எல்லாத் தங்கைக்கும் கல்யாணம் பண்ணியாச்சு ஒவ்வொருத்திக்கும் மூணு நாலு பசங்க. ஒரு தடவே ஊருக்குப்போனா கிப்ட் கொடுத்தே பெண்ட் கழல்ரது. இந்த அழகிலே அவங்க ளுக்கு எல்லாம் ப்ராண்ட் நேம் உள்ளதா வேணுமாம். நானே ஊரிலே வாங்கின டயர் செருப்பு போடறேன். நம்ம புழுதி ரோடுக்கு இவனுகளுக்குNikki shoe வேணுமாம். நமக்கே இதெல்லாம் தெரியலே. மூணு மாசத்துக்கு ஒரு தடவே மூணு லச்சம் கொடு, ஏழு லட்சம் கொடு ப்ளாட் வாங்கணும், பிசினஸ் பண்ண ணும் பிள்ளயே காலேஜ்லே சேக்க லஞ்சம்னு, ஒரே நச்சரிப்பு. நான் அட்றசே கொடுக்கலையே இந்த தடவே. என் ஒய்ப் ஸைடு இன்னும் மோசம். Disposable Razor Blade அனுப்புன்னு collect call போடரானுக. பாரின் சென்ட் வேணுமாம் மூஞ்சிக்கு. பினாயிலே போதாதா? எப்பவும் பஞ்சம் ஊர்லே. அது இல்லே, இது இல்லேன்னு. நான் போகமாட்டேனே. அவளும் போகமாட்டா. இந்தியாவே மோசம். ஆமாம், commodities, real estate investment இப்ப பண்ண நல்ல டைமா? நானுங்கொஞ்சம் இதெல்லாம் கத்துக்கணும்.. அதோ பாரு, குடிமகன் ஆடிக்கிட்டு மேடையிலே ஏறிட்டாரு..

**காட்சி – 5**

பத்து வருஷம் கழித்து, நியூஜெர்சி பிட்ஸா கடை. நிறைய மாற்றம். பிட்ஸா 50 டொலர் என்னும் போர்டு தொங்குகிறது. ரகு, வாசு என்ற இரு இளைஞர்கள் பிட்ஸாவுக்குக் காத்திருக்கிறார்கள். ரகு கையில் ஒரு பத்திரிக்கை.

ரகு: இதொ பாரு, obituary. அதுலெ ரெண்டு தமிழ் பேரு.
Suri Boston resident millionaire born in Tamil Nadu..
Visu Virginia resident engineer born in Tamil Nadu..

வாசு: போதுண்டா சாவு செய்தியெல்லாம். இவங்க மாதிரி நம்ம இங்க சாகக்கூடாது. சீக்கிரம் படிச்சி முடிச்சுட்டு காசு பண்ணிட்டு ஊருக்கு ஓடிரணும்.

ரகு: எவ்வளவு பண்ணனும். 100,000 போதுமா?

வாசு: ஆமா, அதெ இந்தியாலே பாங்கிலே போட்டா வட்டியிலேயே சாப்பிடலாமில்ல. இப்ப என்ன வட்டி தராங்க தெரியுமா? ஆம்போ நிதி நிறுவனத்திலே போட்டா, ஒரு குடை, துண்டு, ப்லாஸ்டிக் பைகூட ஊக்கப் பரிசா தராங்க.

ரகு: முதலலெ லோயருக்கு காசு கொடுத்து கிரீன் கார்ட் வாங்கற வழி பாரு.

வாசு: பச்சை அட்டைன்னு தமிழ்லே சொல்லுடா. நாம் தமிழரென்று பெருமை கொள்ளடா, திரை கடலோடி திரவியம் தேட வந்தவர்களடா.

சர்வர் பிட்ஸா தட்டை மேசை மேல் வைக்க தட்டு சுழல்கிறது. தட்டு மட்டுமா, காலமும் கூட.

**(திரை)**

www.padippakam.com



www.padippakam.com




# தோப்பிழந்த குயில்

முறிந்த பனைகளல்ல இவை
நிமிர்ந்து நிற்கும் பனங்கூடல்
பசுமையாய்
பகலவன் பார்வையில் கவிதையாய்
படையெடுப்பொன்றின் முன்

கலைந்துவிட்ட கவிதைக் கோலமாய்
காவலரண் ஒன்றில்
காக எச்சங்களுடன்
சில சன்னங்கள் சுமந்து
அவலமாக...

பருவமழையின் பின்
காளான்கள் முகிழ்த்து நிற்க
முகமிழந்த எம்மவரைப் போல்
விகாரமாக...

வளரும் வடலி
நுங்கு தள்ளி மூப்பேறிய பனை
எதுவுமே இன்றில்லை
'சூரியப்பிரகாசம்' ஒன்றில் கருகின
வல்லைவெளி வாழ்விழந்தது
வசீகரமிக்க வயல்களை இழந்தது


தோப்பினை இழந்து தவிக்கும்
குயிலின் குரல் மட்டும்
பூபாளமாய்...
எங்கோ தொலைவில்
வேட்டொலிகளின் விதைப்பிலும்
தனித்துக் கேட்கிறது
எங்கள் நம்பிக்கையைப் போல்...!

அமுதமொழியன்

www.padippakam.com

# நிர்ணயமே..

ஓட்டமாவடி அறபாத்
17.12.97



எம் தாயகத்து எல்லையெது
வனராஜனற்ற குயில்வனமா
வர்ருங்கள்
ரத்தத்தால் வரைந்தேனும்
அதை அந்நியமாக்குவோம்.

துயர்வரினும் சுகம்வரினும்
நமது கூட்டுக்குள்,
சுதந்திரமாய் செத்துமடிவோம்.

அந்த மண்ணிலிருந்து
நம் காயங்களைப் பேசவிடுவோம்.

அவமானச்சின்னங்களாய்
வேற்றுமண்ணில்,
சிறுத்துக்குறுகும் ஒட்டுண்ணி வாழ்வுக்கொரு
விடைகொடுப்போம்.

மழைக்காற்றின் சீதளிப்பில்
மண்ணோடு இறுகிய
முற்றத்திலமர்ந்தெம் புராதனவடுக்களை
தடவிப்பார்ப்போம்.

சிறைக் கம்பிகளுக்குள்
புதையுண்டு கிடக்குமெம்
மைந்தர்கள் இருப்பிற்காய்
ஏதேனும் செய்வோம்.

ஒருக்கால்
அவர்களின் புதைகுழிகள்
சிறைக்குள் ஒரு சிறையாய் உ வைக்கூடும்.

ஒருவனத்தின் மூலையில்
அன்றில்-
ஒரு சிப்பாயின் வெஞ்சினத்தில்
பய்ருபத்திலேனும்
அது நிகழல் சாத்தியம்.

எனினும்,
நமக்குரிய எல்லையை
வரையறுப்போம்.

புதையுண்ட மனைகள் குறித்தும்,
பாங்கொலிக்காத பள்ளிகள் குறித்தும்,
அங்கிருந்து விவாதிப்போம்.

நிர்வாணியாய்,
நாமலைந்த துயர்களை
நமது நிழலறியும்
அங்கங்களை பேசவிட்டு மௌனித்திருப்போம்.

நமதெல்லையை வரைவோர்
கரத்திலோ
கூர்மிகு கத்திகள்

ஆயினும்-
என் பிரிய தோழர்களே
எமதெல்லையை அந்நியப்படுத்துவோம்
திரளுங்கள்.

www.padippakam.com

# மொழிவுகள்

1
முன்மொழிவு ஏதொன்றும்
எழுதப்பட்டிராத
ஒருபாலை வெளியும்
பாலையோர விளிம்பில்
குழுமியிருந்த நினைவும்
என்னொத்தவர் பலர்க்கும்
எழாதிருக்கக்கூடும்..!
நெடும்வழித் தொலைவா?
தொடுவானந்தான் முடிவா?
மணற்புயல் பலதா?
ஒயாசிஸ்தான் இலக்கா?
எதுவரும் எதிரே....?
எவருந்தான் அறிந்திலர்
அவ்வேளைதனில்;
'ஆனாலும்
இருளுள்ளும் நாம்நடப்போம்
எம்கால்களில் நிற்போம்
விடியும்பொழுதில் நாமிருப்போம்
நம் புல்வெளியில்....'
இச்சொற்களை மொழிந்தோர்
யாராகவும் இருக்கலாம்
எல்லாமே குறிப்புகள்தான்
வெற்று வார்த்தைகளன்றி
வேறெதுவுமிருந்ததில்லை
அப்போது.

2
ஆயினும்
என்றைக்கோ
இருந்துமிருக்கிறதாம்
வாக்களிக்கப்பட்ட பூமியும்
கர்த்தரான வல்லவரும்
அந்த வல்லவரோட
தெரிவான மொய்சேயும்
மொய்சேக்கான கைக்கோலும்
கல்மழையும்
கல்மழையூடே கலந்த அக்கினியும்
கூடவே
நீர்நிலைகள் எல்லாவற்றின் மேலும்
இரத்தமயமாக்கவும்
சமுத்திரம் பிளக்கவும்
சமுத்திரம் பிளந்து
வெட்டாந்தரை தோன்றவும்
அற்புதங்கள் செய்யவும்
அடிமைகளை மீட்கவும்
விவிலியத்தில் முன்மொழிவு
அப்புறம் என்ன....

3
இதோ
எல்லாமே முடிந்து விட்டது
முடிவை நெருங்கிவிட்டது
எனத்தான் அவ்வப்போதிங்கே
பலரும் முன்மொழிகின்றனர்
என்னொத்தவரும் கூடத்தான்
தம்மொழிவுகள் மறந்தவராய்
அப்பாலை நிலப்பயணிகள் பற்றி..
அப்பயணிகள் எதிரே
இமயம் புரண்டு இடியென்றிறங்கியதும்
கானல் நீராடும் ஒயாசிஸ் குறுக்கிட்டதும்
முகிற்கற்றைகள் வானின் முடிவென்றிலங்கியதும்
உண்டுதான் ஆனால்..
சொரிமணல் போல் ஒட்டாது
உதிரும் உதிரிகளால்
கட்டப்பட்டது எனமொழியப்பட்ட
என் சின்னஞ்சிறு கூடே
முகம் கொண்ட முதற்கொண்டு
எவ்வண்ணம் இவ்வாறாய்
அற்புதங்கள் நிகழ்த்தி நீ
மிளிர்கின்றாய்
உந்தன் ஒளிகண்டு
சிலிர்க்கின்றது உலகு.

4
தொல்கதைகளில்
இதிகாசங்களில் தோன்றும்
வானின்றிறங்கிய தேவர்கள்
தேவதூதர்கள் போலன்றியும்
விவிலியம் கூறுமாப்போல்
அற்புதங்கள் நிகழ்த்த
கர்த்தர்களால் இரட்சிக்க
வழிவகைகள் ஏதுமின்றியும்
உனதருமைப் புதல்வர்கள்
கரந்துறைந்து உலவினர்
இரத்தம் நனைத்தனர்
உடலம் புதைத்தனர்
உள்ளம் உயிர்த்தனர்
ஓர்மம் வளர்த்தனர்
ஔடதம் ஆகினர்
நெடும்பாலை வெளிதனிலோ
ஒளிரும் பாதையாகினர்
இப்போது பார்க்கிறேன்
சுற்றிவரவும் என்னொத்தவர்
எவருமிலர்
ஓர விளிம்பதனில் தனியே
குந்தியிருக்கின்றேன்
இன்னமும் நான் வியந்தபடி
வழிமொழிதல் ஒன்றுக்காய்..!

**கி. பி. அரவிந்தன்**

www.padippakam.com

# கர்மம்

துயரங்கவிந்த நிலத்தில்
போர்விரும்பித் திரண்ட அணிகள் நடுவே
பிரானே!
நீ விரித்துரைத்த பிறப்பின் ரகசியத்தின்முன்
தந்தையரும் தனையரும் துரும்பாய்ப் போயினர்.

பிரம்மத்தின் பின்னின்று
அம்பெய்து வென்றவனென
காரியங்கள் உனைத் தூஷிக்கின்றன.
நீட்டிய கையை உதறி இம்சித்துச் சென்றவன் - நீ
களவெடுத்து கூச்சமின்றி முகங் கொண்டவன்.

நீயுரைத்த பொய் என்னுள் இருந்தது.
உன்பாடல் என்னுள் வளர்ந்தது.
நீயோ
நான் சந்திக்க விரும்பாதவரை
அணியணியாய் அனுப்பி வைத்தாய்!
உண்மையில் உன்னால் கொல்லப்பட்டவரையே
நான் கொன்றேன்.



கர்மத்துறவிலும் கர்மமே சிறந்ததென - நீ
உரைத்த வண்ணம்
கர்மமேயாகத் தேசாந்திரம் போய் அதலுற்றேன்.
தவமியற்றி தத்துவம் பயின்றேன்.
உலகோர் வியக்க அஸ்திரம் கொணர்ந்தேன்.
அன்பு அதன் பிரம்மம் நீயென
சுமகர்வும் எழுந்தது.
போர் விரும்பிக் கூடிய நிலத்தில்
நாள் குறித்த நன்னாளில்
நீ நிரையைந்தாய்.
முன்வந்து தன்னால் தந்த மகவின்
முகமேன் ஆன்மாவைச் சுடுகிறது!
என் நெஞ்சேன் துயருற்றது.
18 நாட்களிற்கப்பால் செய்தி இருந்தது.
எவரையும் நாட்களிற்கப்பால் செய்தி இருந்தது
எவரையும் கவரும் செய்தியாய்
அது மாறவேண்டி இருந்தது.

**அஸ்வகோஸ்**

www.padippakam.com

# இன்னும் வலுவாய்

ஆகர்ஷியா

"எத்தகு நம்பிக்கையைச்
சுமந்து நிற்கிறோம்
நேற்று
நம்பிக்கை செத்து
வேரறுத்த
நண்பியின் நினைவுப் புண்கள்
ஆறு முன்னரே
நம்புகிறோம் - வாழ்வு பற்றி
அமைதி நிறைந்ததாக
எளிமையானதாக
சுதந்திரமானதாக
சுவையானதாக
அவையும் பொய்த்துப்போக
அடி தங்காய்....
முறிவு கொள்ளாதே
மேலும் மேலும் நம்பு
வாழ்வு பற்றி
உன் இருப்பு பற்றி
அதன் அர்த்தம் பற்றி
இன்னும் வலுவாய்."

14.03.97

..............

எனக்கு அதிகம் நண்பர்கள்.
எனக்கு 'நண்பர்கள்' இல்லை.
இப்போது எல்லாம்
இருக்கவிடாது தொந்தரவு செய்ய
பலர் கூடவே வந்த வண்ணம்.

யாரிடமும் மனம் விட்டுப் பேச
யாருமே இல்லாது தவிக்கிறேன்
நான்
இழந்தது
பலப்பல.
அதற்குள் எனது சிறு பிராயம்...
முதிராக் காதல்...
இன்று
தூசுத் துகள்களுடன்
திணிக்கும் வாழ்க்கையோடு
கால் மாற்றி கால் மாறி
கால் மாறி கால் மாற்றி
பிராண்ட பிராண்ட
வலிதரும் சுகத்துடன்
முகங்களையும் தொலைத்து
இருப்பின் அர்த்தம் தேடி
இழந்து கொண்டிருப்பதும்
ஊனமான வாழ்வு.

நான் கற்பனை செய்கிறேன்
எனது அனுபவத்தில் அமிழ்கிறேன்
ஏதும் படைப்பாய் வந்தால்
'நான்'
உலகம் சுற்றி வருவேன்.
ஆனால் மொழி மட்டும்
எனக்கு வளைந்து நெளிந்து கொடுக்க
பிசைந்து வர மறுக்கிறது.
வந்தாலும் நேற்று ஓங்காளித்து
வாந்தியின் அசைவேகம் போல்.

என் வாழ்வு
எனக்குள் ஓடிப்பிடித்துக் கொண்டாலும்
என்றுமே நான்
மைதானத்தில் இறங்கி ஓடிப்பிடித்து
விளையாட மறந்தவன்.

இன்று
குழந்தைகளின் விளையாட்டுக்களை
அதிகமாகவே நேசிக்கிறேன்
அந்த நேசிப்பினால் மீளவும்
நான்
என்னைக்
கண்டு கொள்ள முடியுமா...?

ஆண்டி

www.padippakam.com

# நிலுவை

ஆழியாள்

நீ திருப்பித் தரலாம்
மணிக்கூட்டை
கை விளக்கை, கத்தரிக்கோலை
(கன்னிமீசை வெட்ட நீயாய்க் கேட்டது நினைவு)
கடும்பச்சை, வெளிர்நீலக்
கோடன் சேட்டுக்களை
தரலாம் - இன்னமும் மிச்சங்களை
இன்று பல்லி எச்சமாய்ப்
போனவற்றை.

உன் முகட்டில் சுவடாய்ப்
பதிந்த
என் காட்டு ரோஜா உணர்வுகளையும்,
அள்ளியள்ளித் தெளித்து
பூப்பூவாய்ப் பரவிய
திவலைக் குளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?
எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?

கடிதத்திலா
காகிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ
நீ எனக்குள் செலுத்திய
ஆயிரத்தெட்டுக்கோடி விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்து
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்குள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்.

20.10.95

www.padippakam.com




சூரிய வர்ணங்குழைந்த
பெருந்திரை ஓவியமாய்
குங்கும சந்தனத்திலக வதனமாய்
பொலிந்தொளிர்ந்த அந்திவானும்
மனிதம் பிளந்து பீறிச்சுவறிய
குருதிப்படிவமெனத் தோன்றுகுது.

விழியளைய,
விரிசிறகு வெண்புறாவாய்
மாமயிலாய் மானாய்
வெள்ளலையில் முழுகும்
முழுவழகுப் பெண்ணாய்
குதூகலிக்கும் குழந்தைகளாய்
இன்னும் பலவாய்
உருத்து நெகிழ்ந்து ஜாலமிடும்
கலை முகிலும்,
துகிலுரிந்த பிணத்திற் கனன்றெரியும்
நெருப்பெனத் திகழுது.

தென்றலில் குளித்து
கிளைகளிற் களிப்புறும் பட்சிகளின்
அமிர்தங்குழைந்த மெல்லிசையை
அமுக்கியெழும்;
எறிகணைகளின் கூவல்கள்.

தழுவுஞ் சுகத்தில் விழிசொருக
இனிய கனவுகள் தந்த இரவுகள்
முளித்திருந்து அலறுவதாய்....
அவல நனவுகள் சுமந்து திரிவதாய்....

தெரியும் திசையெங்கும் யுத்தமயமாக
வெட்டவெளிப் பட்டமரமாயாகிறேன்.

இனிக்கும் பொழுதுகள்
இனிய இரவுகள் இனிய கனவுகள்
திரும்பவுந் துளிர்க்காதோ?
துளிர்த்து செழிக்காதோ?

16.11.1995

# நிஜமும் நிழலும்
## அல்லது
# அழியாநிழல்

எந்தத் திசைவழியில் உலவுகிறபோதும்
அகல்வதாயில்லை என் நிழல்:

நிற்க நின்று
நடமாட நடமாடி
மந்தகதிக்கும் துரிதகதிக்கும் ஈடுகொடுத்து
முன்பின்னாய்ப் பக்கவாட்டாய்
இழுபடுகிறதேயொழிய
அற்றுப்போகிறதாய் இல்லை.

காலநிலைக்கேற்றபடி
குறுத்தும் பெருத்தும்
மங்கியும் துலங்கியும்
மாறி மாறி ஜாலமிடும் நிழல்

குழிவெட்டி அதனுள் விழுத்தி
மூடமூடப் புதையுறுமோ?
அப்போதும் லாவகமாய் நெளிந்து
மேவிமேவி வெளியேறி
ஜெயிக்கும் தானே.

கழுத்தை நெரித்துப் பிடுங்கி எறியவும்
சரமாரியாய் சுட்டுப்பொசுக்கவும் வசதியில்லை.
பிறகெப்படி
சாவுறுதல் நிழலுக்குச் சாத்தியம்?

என் துடிப்பிருக்கும் வரையில்
இதன் தொடுப்பிருக்கும் போலும்.

விரும்பியோ விரும்பாமலோ
சிறுவிளக்கடி நிழலாயேனும் பற்றி
இளைத்து இளைத்து
என்னுடனேயே இழுபடும் போலும்.

ஒருவேளை
சூழவும் பேரொளி பெருகப் பெருக
நிழல் கரைந்தழிதல் கூடுமோ?

12.02.1997

**இளந்திரையன்**

www.padippakam.com

# குருவிகள் பற்றி மூன்று கவிதைகள்

இளவாலை விஜயேந்திரன்



1

எதற்காகவும் இருக்கலாம்
இந்தத் தலைச் சிலுப்பல்.
ஏனோ
கோபமென்றதைப் புரிந்துகொள்கிறேன்.

எதன்மீது கோபம் குருவிகட்கு?

உடுப்புத் தோய்க்க வேண்டியதில்லை
கடைக்குப் போவதும், பொருள்
காவித் திரிவதுமான அவஸ்தைகளில்லை.

கிடைத்த சம்பளம் எல்லைக்கோட்டைத்
தொடமுடியாதெனும் வேதனையில்லை.
சனிக்கிழமைகளில் பியர் குடிக்கவும்
ஞாயிறு காலையில்
நித்திரை குழப்பும் ரெலிபோன் அடிகளில்
திடுக்கிட்டெழவும்
நியதிகளில்லைக் குருவிக்கு.

ஆனாலும், இருக்கலாம் கோபம்
குருவிகட்கு.
யார் கண்டார்
குருவிகட்கும் இருக்கலாம் அல்லவா
ஆண்குறி அவஸ்தை.

2

இலைகள் உதிர்ந்த மரங்களைப்
பார்க்கிறேன் -
எளியதோர் கொடுமை.

இனிவரும் நாட்களில்
இரவுகள் நீளவும்
அடித்துப் போட்ட சூரியன் கிளம்பி
ஆவெனச் சோர்ந்து
மறுபடி வீழவும் ஆகும் காலம்.

இழுத்துப் போர்க்கையில்
கண்ணிடைத் தெறித்தன குருவிகள்.
சுண்டு விரலளவில்
வெறும்மரப் பட்டையுட்
பூச்சி தேடுகுது ஒன்று
விழுந்த இலைகளின் வெறுங்கிளைகளில்
தொங்கும் பழங்களைச்
சுவைப்பதின் னொன்று -

காலம் கொடியதே ஆயினும்
போர்வை விலத்தல் தகுமெனச்
சன்னலிற் சொண்டினாற் தட்டிச்
சொன்னதின் னொன்று.

3

எப்போதும்போல
வந்தமர்ந்து கொள்வன குருவிகள்
பல்கணியில்.

பார்த்துக் கொண்டிருக்கிறேன்

இவைகள் வருமென்று
உதிர்த்துவிட்ட தானியங்கள்
போதும்
இன்னும் எட்டு நாளைக்கு

இருந்தாலும்
தாவுவதும், தன்பாட்டில்
இன்னும் வேணுமெனத் தேடுவதும்
போதாதே என்கின்ற விதமாகத்
தலைதிருப்பி எனைப் பார்த்து
முறைப்பதுவும்
சகிக்கவில்லை.

கொழுப்பதிகம் குருவிகட்கு
என்றெண்ணித் திரும்புகையில்
உள்ளத்துள் ஒரு கேள்வி

இப்படித்தான் தம் மகிழ்வைச்
சொல்லிடுமோ இக்குருவிகள்?

www.padippakam.com

# மூன்றாவது குற்றம்

அக்குறணை இளையஅப்துல்லாஹ்

எகிறி விழுந்தென்
உயிர் சுருங்கியொடியுமென்
உதடுகள்.

பின்புலம் பாரா
மொழி வேட்கையால்
உடலம் தாங்கி
உருக்குலையுமென்
மானம்

அலைக்கழிப்பாதலும்
சுற்றிச் சுலாவிய பயணம்
பயம் மிகுந்தது.

அவதூறு வீங்கிய பார்வை
என்னைச் சுட்டெரித்துப் பின்
அடையாளக் காட்டில்
மீண்டு தணியும்.

ஏன் தானின்னும் தமிழூரில்
பெண்ணெடுத்தேன்.
முகாமிற் சிதைவுகள்தேடி
சுயமாய் நடப்பதென்
கால்கள்.
அடையாளம் தேடி மறிக்கும்.

ஆலமர விழுதொன்றின் கீழ்
நானும் மொழியுமுட்கார்ந்திருந்தோம்.
கண்டவரஞ்சினர்.

பினனருமென் பேனா
உருவாடியது.
ஒருமுறை யுத்தரவொன்று வந்தது
எழுதாதே!

கானல் நீரிடை கழுகு வரினும்
உயிரினில் கூரிய
கத்தியுருவிப் பாயினும்
மழு வரினும் எழுதும்.
உறுதி பிடிததுலுக்கிற்று.

வயது மீறாக் கனவொன்று
ஓங்கியோங்கி அலறுமென்னுளம்
துப்பாக்கி கொண்டு
ஓடியுன் உயிரைப் பாதுகார்!

வெறுமொரு கனவில் ஆடும்
விதர்ப்பவுலகில் நானுமென்ன
ஜடமா?

வெறறியறுப்பதில் விலகியெழுந்தது.
இடறி மீழ்ந்தது
பட்டாளப் பயிற்சியில்லாத
காலம்.
உருக்குலையுமவ் விழல்நீரிடை
வீறாப்பும் வீரமும் பீறிடக்
கொப்பளிக்குமொரு ஊற்று.
நாலு கிலோ மீட்டர்
நடந்தே போனேன்.

வழிநெடுகவென் பேனாச்சுமை.
அழிவுகளையெல்லாம்
அண்மித்தது.
சிவப்புப் பேனா மூன்று
விரல்களுக்குள் இறுகிப்போகுமவ்
வேளையென்
வெள்ளைத்தாள்களில்
இரத்தம் பெய்க்கும்.
கோடு போட்டுக் குதறும்
அவர்களின் தோல்களை
உரித்து மீளும்.

இரண்டாவதுத்தர வெனக்கு வந்தது.
தலையொட்டாத் தபாலொன்று
எழுதுவது பிடிக்காதா மென்றொரு
குறிப்பு.

பல்விளக்கம்: பல்லுடைப்பு,
மூக்கந்தண்டு திருத்தல் -
என்றெல்லாம்.
என் இலக்கியம் பரவுவதொரு
குற்றம்.
வீணாயென் மக்களென்னை
நேசிப்பது குற்றம்.
வடலிக்குள்ளே வீற்றிருந்து
வரைவது மூன்றாவது குற்றம்.

சீற்ற மொன்றெழுந்து முன்
சீறிப் பாய்தலில் உக்கிரம்
கொண்டவென் எழுத்துரு கண்டது.

அலறும் செவிப்பறை அதிர்தலில்
அடியோடு விழுமென் மூளை
கலங்கி ஒலித்தது
விடுதலை.

உடல் முழு நஞ்சாகி
அரவம் தீண்டி என்னையே
அது கொத்தியது.
குருதியொருமுறை
கொப்பளித் தோய்ந்தது.

பின்னருமென் பேனா
பீறிடட்டுழுதது; எழுதியது.
அரைவடி அட்சரம்
கண்களைக் குத்தியது.
அச்சுமை தாங்கா
ஆணவத் தலைகள்
அலறியெழுந்தன.
அமிழ்த்தி நின்றன.

புதைகுழிச் சாட்சியம் கூறிய
கட்டியம் உயிரினை உருக்கி
உள்ளொளி பெருக்கின.

இரட்டைவால் குருவியும்
ஆண்மையாய் அச்சங்காட்டியவ்
வழியிடை போனது.

நாலு பிள்ளைகள் நம்முன்
நின்றனர்.
நாண் சூடிப் பத்தினி நாதியிழந்து
போனதாய்..
ஆறுகள் தொடர்ந்தன.
அவள் மைகள் அழிந்தன.
தொங்கு பனையொன்றின்
தூரத்தில்
பனங்குயில் "கூ கூ".. என்றது.

ஒற்றையாய் என் பேனா
உரசுமச் சத்தம் ஓங்கி வெடித்தது.
உடைந்தன வெல்லாம்.
விடிந்தவக் காலையில்
மூன்றாவதெச்சரிக்கை யென்
கரத்தில் விறாண்டியது.

கூரிய நகங் கொண்ட
விலங்குருத் தோற்றம்
பற்றிய விபரிப்பில் விழித்தேன்.

களிசான் பூட்டிய
வெள்ளைக் குதிரையில்
காலன் வந்தான்.

ஊர் சேர்ந்து ஒப்பாரி
வைத்தனர். நான் செத்துப்
போனதாய் சொன்னனர்.

என் பேனாவையிழுத்து வீசினர்.
உயிரது வேண்டும்
உயிரது வேண்டும்.
ஓலமிட்டார் உளறிவைதனர்.

கற்பக தருவிடம்
கருவொன்று கேட்டனர்.
அப்படியெழுதா அவஸ்தை
பண்ணினர்.
விரதமாய் நானுமோர் முடிவைச்
சொல்லிட
ஓங்கியின்னுமுரத்து
எழுந்தனர்.

ஊர் சேர்ந்து ஒப்பாரி
வைத்தனர்.
நான் செத்துப் போனதாய்
சொன்னனர்.

முடிவது மீறி எம்பியது
என் பேனா.
வருந்தியழுத்தினர்.

பழைய தும்புத்தடிக்கருகில்
ஈசான மூலையில்
என் பேனா
எகிறித் துடித்தது
பின்னரழுதது.

www.padippakam.com

எஸ் உமாஜிப்ரான்

## வெறி

துப்பாக்கி முனையணிந்த உன்குறி
குத்திக்கிழிக்குமென் குறியை.

குரோதம்வழியும் கோரப்பற்கள்
குதறுமென் முலைகளை.

காமம் பிசுபிசுக்கும் கைகளால்
கசாப்புக்கடை இறைச்சித்துண்டென
பிழிந்து பருகுவாய் என்னை.

பிறகு
ஒரு வண்ணத்துப்பூச்சியை
வாளால் அரிந்து வீழ்த்தி
அதன் வண்ணங்களைச் சிதைத்த
வெற்றிக்களிப்பில்
உன் துவேசம் சற்றேயடங்கிய ஆசுவாசிப்பில்
எஞ்சிய என் எலும்புகளையும் தசைகளையும்
உயிருடன் புதைப்பாய்.
சிலசமயம் புதைக்காமலும் விடுவாய்.

என்னுடைய எல்லாவற்றிலும்
எரிச்சலூட்டும் உனது அத்துமீறல்கள்.
ஒரு பொருட்டல்லவெனும்
உனது மனப்பாங்கை சகியாது பொருமுவேன்.
நாற்றமெடுக்கும் உன் தேகம்
அப்பிய அழுக்குகள்
புழுக்களாய் நெளியும் என்னில்.
நெளிந்து நெளிந்து அவையூர
உன்குறி கடித்துத் துப்புமொரு வெறிகிளரும்.
வெறிகிளர்ந்து வெறிகிளர்ந்து
கிளர்ந்த வெறி விரவியென் தேகமெங்கும் தீமுளைக்கும்.

முளைத்த தீ சடைத்தெழும்ப
நானே தீயாகி தீயிற் திளைப்பேன்.
திளைத்துத் திளைத்து
தொன்மைமிகு உருவழிந்து சாம்பலாய் உதிர்வேன்.
அச்சிறு சாம்பல் மேடிருந்து
அழிவற்று எழுவேன் ஒரு பீனிக்ஸ் பறவையென.
என் விசைமிகு சிறகுதைப்பு காற்றில் உரச
காற்றிலே தீயெழும்.
அது கடல் வான் நிலமெலாம் பற்றி
உன் இருப்பின் பஞ்சபூதங்களும் பற்றியெரியும்.

## போராளியின் காதலி

செய்தித்தாள்
வானொலி
அவதியில் திரியும் விமானங்கள்
காற்றை வருத்தும் போரின் ஊளை
இவை போதாதா?
உன் இருப்பின் அந்தரிப்பை உணர்வதற்கு.

மெலிந்து
கண்ணோரங்களில் கருமைபடிந்து
ஆனால் புலனைந்தும் மிக விழிப்புற்று
மண்ணிலொரு பிடியெனினும்
அள்ளவரும் கைதறிக்க காத்திருக்கிறாய்
ஒரு பொறியென நீ.

திறந்த பதுங்ககழியில்
சற்றேனும் விழிமூட கிடைத்த சிறுபொழுதில்
களைத்த விழிகளைக் குவித்தபடி
உன் எண்ணங்கள் யாரை வட்டமிடும்
என்னைத்தானே?
(சுயநலம்தான்
ஆனாலும் அப்படி ஏங்கும் மனசுக்கு
கழிவிரக்கமில்லையே என்னிடம்)
அல்லது உன் அம்மாவையா?
இல்லை ஒற்றைத் தங்கையையா?
எல்லோரையும் ஒதுக்கி விட்டு
எதிரியின் அடுத்த நகர்வையா?

கௌரி நோன்பு
சஷ்டி நோன்பு
சதுர்த்தி நோன்பு
வெள்ளி நோன்பு என
நீளும் நாளெல்லாம் நோன்பிருந்து
நீ வருந்தா வரம் வேண்டி
நான் வருந்தித் தொழுகின்றேன்
மனசுக்குள்
உன் பதுங்ககழியின் சுவரில்
வைரவர் சூலம் வரைகிறேன்.
வேறு என்னதான் செய்வது நான்
ஒரே தவிப்பாக இருக்கிறது எனக்கு.

மெலிந்து போவதாயும்
கண்ணோரங்களில் கருமைபடிவதாயும்
அடிக்கடி
புலனறுந்து சூனியத்தை வெறிப்பதாயும்
பெற்ற வயிற்றுக் கொதிப்பைக்
கொட்டுகிறாள் அம்மா.
பெற்ற வயிறு மட்டுமா கொதிக்கும்?

போராளியின் தாயென்ற பெருமிதம்
விகசிக்கும் முகத்தினளாய்
காட்சிகளில் துலங்குகிறாள் உன் அம்மா.
பொருளறியாப் பொறாமையில் கசங்குது மனம்
போராளியின் காதலி என்ற பூரிப்பு
ஔிர்கிறதா என் முகத்தில்?
மற்றவர்களுக்கு எப்படியோ!
கண்ணாடி சொல்கிறது
பூரிப்பில் மிளிருதென் முகமென்று.

நேற்று
ஒரு பெண் போராளிக்கு
அஞ்சலிக்கவிதை எழுதினேன்.
உனது நிலைக்கு
அடுத்தடுத்த நிலையொன்றில்தான்
அவளும் வீரசாவடைந்திருக்க வேண்டும்.
அவளின் உடல் கிடைக்கவில்லை.
எழுதத் தொடங்கியது முதல்
அபத்தமான சிந்தனைகளில் சிக்கி
அலைக்கழிந்தது மனம்.
அழ வேண்டும் போல் இருந்தது எனக்கு.
அந்தக் கவிதை மிகநன்றாக இருந்ததாக
பலரும் சொன்னார்கள்.
எனக்குப் பிடிக்கவில்லை

www.padippakam.com

## இறகுகள் முளைத்தெழு சிறகுகள் கிளரும்!

உயிர் உருவும்
ஓர் இரும்புத் துண்டு
ஊடுருவிய பொத்தல் வழி
உன் உயிர்க்குருவி பறந்தது.

விடுதலைக் குருவியின்
சிறகிலொரு இறகாய்
முளைத்தாய் நீ!

தேராவில் துயிலுமில்லத்
தரையின் ஒரு குழியினுள்ளே
துயிலுமென் திருமகனே!

பிஞ்சாய் நீயிருந்த போதிலுன்
செம்பஞ்சுப் பாதமென்
நெஞ்சுதைத்த மென்னுணர்வு
நெஞ்சைப் பிசைகிறது.
வாயிதழில் வீணீர் வடிய
தோளோடு நீ துயின்ற காலங்கள்
மனசுக்குள் பிசுபிசுக்கின்றன.

வானெழுந்து சடைத்தடர்ந்த வனத்தினிடை
உலுப்புகின்ற போர்ப் புரவி தனிலேறி
சதிராடும் உன்னுயிரை மடியேந்தி
திறந்தவெளிச் சிறைநடுவே
துயர்ப்பளுவைச் சுமந்திருந்தேன்
என் குருதிக் கொடியினிலே
பூத்த என் குருதிப் பூ
உயிரொழுகி உதிர்ந்ததெனும்
கொடியவாள் என் மடியில்
செருகிநின்று ஆடியதே!

தலையிலடித்து
நெஞ்சிலறைந்து
ஓவென்று அலறி
உயிர்கருக்கும் வலி கரைய
அழுவதற்குக் குரலெடுத்தால்
குரல்வளையில் பல்லழுத்தும்
சிங்களத்துச்சேனை சூழ் சிறைநிலத்தில்
துயர் விழுங்கி நான் புழுங்கினேன்

நான் வடித்த சிலையுடலை
ஊனுருக்கி உயிரெரித்த திருமெழுகை
ஐயோ என் மகனே
என்றணைத்து அழுவதற்கும்
மண்ணிலொரு பிடியள்ளி
மனக்குழியில் உன்னைப் புதைப்பதற்கும்
கொடுப்பினையோர் துளியுமில்லாப் பாவி என்
ஆவி பற்றி எரிகிறது.

என் கட்டை இருக்க
நான் கொள்ளியிடும் கட்டையின்னும் இருக்க
நீ குழியில் நீடுதுயில்.

கொள்ளிப்பிள்ளை மூட்டுகின்ற தீயெரித்து
கட்டை வெந்து நீறாகும்
மூப்பின் கனவழியும் காலமிது !

வருங்குருத்து வாழவென
குருத்தோலை விழுகிறது.
குருத்தோலை விழுகுதென
காவோலை அழுகிறது.



## சுகித்தல்

ஈவிரக்கமற்ற எனது யுகங்கள்
எப்போதையும்விட இப்போது
என்னில் அதிக அக்கறையோடும்
சுதந்திரத் தன்மையோடும்
பற்றிப் படர்கின்றன.
வியக்கத்தக்க முறையில்
அவை தமது கரங்களால்
எனது மூளையையும் நரம்பு நாளங்களையும்
நாளாந்தங்களையும் குத்திக் குடைகின்றன.
நான் உக்கிச் சிதைவுறுகிறேன்.
தலைமுறையின் தவறுகள்
நித்தியத்தன்மையான; உயிர் அழுகிநாறும்
பிணங்கள்
கண்களுக்குப் புலப்படாத பிம்பங்களின்
சகவாசம் -
எனக்கு ஞாபகமிருக்கிறது;
இவைகளால் நான் சாகடிக்கப்பட்டேன்.
எதிர்காலத்திற்கான ஒவ்வொரு நகரங்களின்
தலைவாசல்களும்
பிணக்குவியல்களால் மூழ்கடிக்கப்பட்டன.
எனது யுகங்களில் வெள்ளமாய் நகர்கிறது
இருள்.
எனது பிரயத்தனமெல்லாம்
ஈவிரக்கமற்ற எனது யுகங்களை
யாரையும்விட அதிகமாய்
நேசிக்க முயல்வதே.

எஸ்போஸ்

www.padippakam.com

# அபாயம்




ஒரு இரவை
நாய்கள் குரைத்துக் குரைத்துச் சீரழிக்கின்றன
யாரோ வளர்த்த நாய்கள்
யாரையும் பொருட்டெனவுணராமல்
வயிறெக்கிக் குரைக்கின்றன
நாய்களின் குரல் மோதிச் சிதறுகிறது என் தூக்கம்.
தூக்கம் சிதறிய வெற்றிடத்தில்
முளைத்துப் பரவுகின்றன;
தணல் பூத்துச் சொரியும் மரங்களுக்குக் கீழே
நிழலுக்கொதுங்கு என்று
தண்ணீருக்குள் நின்றபடி
குரலுயர்த்திக் கேருகிற
நேற்று,
என்னோடு இருந்துவிட்டுப் போன பேர்வழியின் ஞாபகங்கள்.
தீய்ந்துபோய்
வெடித்துப் பிசிறுசிந்த
கண்கணாய்
பொங்கிப் பொங்கி வெடிக்கின்றன
கடந்த காலங்களில்
அவனோடு இருந்த பொழுதுகள்.
துக்கமும் வெட்கமும்
வதைக்கின்றன கோபமூட்டி.
நாய்களின் குரைப்பில்
இந்த இரவோடு,
என் தூக்கமும் அதன் கனவுகளும் சிதைகின்றன
நாய்கள் பற்றிய என் கவலையெல்லாம்
அதை வளர்ப்போரைக் குறித்தே.



# யாருடைய வீடு?



இந்தவீடு உன்னுடையதென்று சொல்வதற்கில்லை
ஆனாலும்
நீ சொல்கிறாய் இது உன்னுடையதென்று
பல்லிகள், கரப்பான் பூச்சிகள்
எல்லாமே உன் வீட்டிலுள்ளன
நீ வளர்க்கும் நாயும் உன் பூமரங்களும்
உள்ளன இந்தவீட்டில்.
நீ சொல்லிக்கொண்டிருக்கிறாய் இன்னும்
இந்தவீடு உன்னுடையதென்று
உன்நாய் அதன் இன்னொன்றை அழைத்துவருமே
இதைத் தன்வீடென்று சொல்லி
உன் வேலைக்காரன் சொல்வானே
தன் சகாவிடம் இதுதன் வீடென்று
கரப்பான் பூச்சி நினைக்கும்
இது தன் வீடென்று
பல்லி யோசிக்கும்
இதுதானிருக்கும் வீடென்று
சிலந்தி நினைக்கும்
இது தன் வீடிருக்கும் வீடென்று
உன்னுடைய பிள்ளை எண்ணுகிறான்
இது தன்னுடைய வீடென்று.
இன்னும் நீ சொல்லிக் கொண்டிருக்கிறாய்
இந்த வீடு உன்னுடையதென்று.

www.padippakam.com



..........

## கலா

ஒரு சின்னக் குருவியாய்
இந்த மலை, ஆறு, கடல், நதி
பூந்தோட்டங்கள், மனிதர்கள், மிருகங்கள்
எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்.

ஆனாலும் என்ன?
நான் தூக்கணாம் குருவி
தும்புகளின் தொடுதல்களில் தொங்கிக்
கொண்டிருக்கிறது
எனது கூடு.

என் மெதுமெதுப்பான
தசைகளை பிறாண்டிக் கொட்டியும்,
குருதியைப் புசிக்கவும்
எனியும்,
அழுகிய இறக்கைகளை பிடுங்கி எறியவும்
எஞ்சி உள்ள தோலைக் கூட
தங்களுக்காக எடுத்து
என் உடலில்லா ஆன்மாவை
பூமியின் ஆயிரம் அடிகள்
ஆழத்தில் புதைத்துவிட
என் சிறு கூண்டைச் சுற்றி
பேய்களின் கொட்டம்.

என்னைக் காப்பாற்றுங்கள்
என்னை மட்டுமல்ல
புயலோடு வந்த பேய்
கூட்டிக் கொண்டு போன என்னுறவுகளையும்
வாழ்வைத் தொலைத்துவிட்டு
விழிகளால் மட்டுமே
தேடி அலையும் என் தாய் தந்தையையும்

எனியும் எனைச் சுற்றியிருந்த எல்லாவற்றையும்
பேய்களிடம் இருந்து காப்பாற்றுங்கள்
என் உயிர்மூச்சுப் பறிக்கப்படும் முன்
துப்பாக்கி ஏந்திய இந்தப் பேய்களிடம் இருந்து
என்னைக் காப்பாற்றுங்கள்.

# எதுவரைக்கும்

**கொற்றவை**

எதுவரைக்கும் இதுவென்று
இன்னமும் தெரியாது
பரிச்சயம் தரும் வார்த்தைகள்
நினைவு கொள்ளவென
சிறிதேயான ஸ்பரிசங்கள்

நீ முதலிலேயே வந்திருக்கலாம்
குறைந்த பட்சம்
நானாவது.

வாக்குறுதிகள் பரிமாறப்பட்டு விட்டன
இனி
மீறுதல் என்பதில்
அதிகம் அக்கறையில்லை
குறி தேடும் குவிமையம்
ஒன்றெனவே ஒடுங்குமெனில்
யாராயிருந்தாலென்ன..

சேர்ந்து படித்த புத்தகங்கள்
கேட்டு ரசித்த பாடல்கள்
மனனமேயாகிவிட்ட சில கவிதைகள்
இவை கடந்து
என்னை என் வார்த்தைகளுள்
பொருத்துதலில் ஏற்படும்
சின்னச் சின்ன அவஸ்தைகள்

கடைசியில்
எதை நினைவில் கொள்வது...
எதை தவிர்த்துக் கொள்வது...
புரிதல் நிலை கடந்து போவது கூட
இயல் பெனவே...

நோகக் கூடாதெனில்
நகம் போல
மயிர் போல
வெட்டுவது பற்றிய சில படிமங்கள்
புதியன வளர்தல் பற்றிய அதீத -
நம்பிக்கைகளுடன்
பொழுதுகள் கழிகின்றன.

18.10.97

www.padippakam.com

# தழும்புகளும் பஞ்சுமிட்டாயும்

வெள்ளக்காரன் ஓடிப்போயி
வருசமம்பது ஆவுதாண்டி!
சொல்லிப்போனார் தலையாரி,
செல்லம்மாநீ கேட்டியாடி?

நம்பிநாய்க்கரு வந்தாரு,
நல்லவிசயம் சொன்னாரு.
ஆடிமாச ஜாத்திரைக்கு
அடுத்தவாரம் திர்நாவாம்.

மந்திரிஉடையார் வாராராம்,
முட்டாயெல்லாம் தாராராம்.
பண்ணையாரும் நடந்துவர
பள்ளிப்பசங்க ஊர்வலமாம்.

சேரிவரைக்கும் வருதாண்டி,
சேர்ந்துகிட்டு போவோமடி.
அய்யருட்டு அம்மாவோட
அடியேநாம பேசலாண்டி.

படையாச்சி வீட்டெதிரே
பந்தல்போட்டு படுஜோராம்,
பசிச்சுவந்த ஜனங்களுக்கு
பானகம்கூட நீர்மோராம்.

பாலுத்தேவர் பணத்துலதான்
பட்டாசுபாணம் கலக்கிடுமாம்,
பஞ்சாயத்து மரத்தடில
புதுப்படமுன்னு அமக்களமாம்.

சொல்லிகிட்டே போறேன்நான்,
சொமகல்லாவ நிக்கிறியே!
சந்தோசமா இல்லியாடி?
சாதிசனம் ஒண்ணாறதில?

மக்காநாள் கதைபத்தி
மச்சிராதிரி கேக்காதே,
அம்பதுவருசக் கொண்டாட்டம்
அஞ்சுநாளாது நிக்காதா?



இரா கோவர்தனன்

www.padippakam.com

# RADIO ASIA CANADA

# INTERNATIONAL TAMIL SERVICE

# சர்வதேச தமிழ் ஒலிபரப்பு




கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளெங்கும் தினமும் தமிழ் ஒலிக்கிறது




**ASTRA SATELLITE இல் 24 மணிநேரமும்**
**VIDEO CHANNEL - 7 11.303 MHZ**
**AUDIO FREQUENCY 7.38 MHZ**

முற்றும் இலகுவாகவும் இலவசமாகவும் SW ஒலிபரப்பை லண்டனில் தினமும் 14.00 மணிக்கு RADIOவில் கேட்கலாம்.

உலகெங்கும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் விளம்பரங்கள், வாழ்த்துக்கள், அறிவித்தல்கள் அனைத்தும் பரந்து வாழும் உங்கள் உறவையும் நட்பையும் உடனுக்குடன் சென்றடைய RADIO ASIA CANADA துணை நிற்கிறது.

RAC யின் இலங்கை இந்திய மத்திய அலை (SW 12.005 MHZ) ஒலிபரப்பு தினமும் GMT 14.00 மணி முதல் 15.00 மணி வரை ஒரு மணிநேரமும் சனி ஞாயிறு தினங்களில் மூன்று மணி நேரமும் ஒலிபரப்பாகிறது.

**சிறப்பு நிகழ்ச்சிகள்:**

நாடகம், சிறுகதை, இசையும் கதையும், கலைஞர் சந்திப்பு, புலம்பெயர் வாழ்வு, பொதுமேடை, சிறுவர் பூங்கா, நீங்களும் பாடலாம், மீண்டும் தாய்நாடு, சிங்கப்பூர், வத்திக்கான், வரித்தாஸ்
தமிழ் வானொலிகளின் சிறப்பு வானொலிப் பாலம்
இன்னும் பற்பல நிகழ்ச்சிகள்.

**தலைமையக முகவரி:**
Radio Asia Canada
1- 680 Progess Ave. Scarborough, Ontario, MIH 3A5 Canada
Tel: 001 416 289 1522 Fax: 001 416 289 1840
www.radioasiacanada.ca

**ASTRA SATELLITE CANADA** வை கேட்கமுடியாமல் உள்ளதா?
இலவச ஆலோசனைக்கும் **SATELLITE** இணைப்புக்கும்
**எஸ். விஜயன்**

CANADA
TORONTO
STEREO
1670 AM

EUROPE
ASTRA
SATELLITE
CHANNEL -7
7.38 MHZ


AUSTRALIA
SYDNEY
MELBOURNE
151 MHZ

SOUTH ASIA
SW 12.005
MHZ 11.695

விளம்பரங்கள்
வாழ்த்துக்கள்
அறிவித்தல்கள்
நிகழ்ச்சிகள்
கருத்துக்கள்
அனைத்துக்கும்
S.VIJAYAN
0181 571 9282
0956 396354
FAX:
0181 571 9282
24 மணிநேரம்
உங்கள்
தகவல்கள்
பதிவுசெய்யப்படும்.

www.padippakam.com

**சன்னதமாடி**



## செத்துப்போன உலகம்!

முதலில் ஒரு
உலகப்போரால் தோற்றபின்
மறுபடியும் பூமி
இரண்டாவது உலகப்போரில் தோற்றது.
பின்
ஒரு தடவை
ருவாண்டா நாட்டில்
'ஜெனசைட்'டில் தோற்றுப்போனது.
செத்துப்போன ருவாண்டா பிரஜைக்கும்
வயிற்றில் சில
உணவுப் பருக்கைகள் இருந்தன.
அதைப் பார்த்தபின் அழுதேன்
ஊர் பேர் உறவற்றுக் கிடக்கும்
உடன்பிறப்பே
வயிறும் வெறுமையாக்கப்பட்ட பின்னல்லவா
உன் வாழ்வு முடிக்கப்பட்டிருக்கிறது.
இடிந்துபோன
நவாலித் தேவாலயத்தின் சிலுவைக்குள்
உன் குடரை அள்ளியபோது
மீண்டும் அழவேண்டி நேர்ந்தது.
ஏனென்றால்
அப்போது
உலகம் செத்துப்போயிருந்தது.

# ஸ்கோல் !

இனிய ஐரோப்பிய நண்பர்களுக்கு.
ஒவ்வொரு நத்தாருக்கும்
உங்களுடன் நான்
ஒன்றாக அமர்ந்து கொள்கிறேன்.
உங்களை நானும்
என்னை நீங்களும்
ஆழம் பார்க்க இது ஒரு நாள்.
உங்களிடம் இருப்பதில்
விலைகூடிய ஆடைகளை
அணிந்து வந்திருக்கிறீர்கள்
என்னைப்போலவே.
இப்போது
உங்களில் பலர்
வயோதிபம் அடைந்திருக்கிறீர்கள்
என்னிலும் அப்படியே.
முதல் தடவையாக
உங்கள் சிலரிடமிருந்தும்
துவேசக் குரல்களைக் கேட்கிறேன்.
முப்பது முகங்களில்
மூவர் துவேசக் கொடிபிடித்தனர்.
இனியவர்களே!
என் உடன்பிறப்பு உயிர் கொடுத்தது
உங்கள் நாட்டிலிருந்து இறக்கிய
துப்பாக்கிக் குண்டுகளுக்குத்தான்.
இனியவர்களே!
என் வீட்டு மாடு செத்ததும்
உங்களின் நிலக்கண்ணிக்குத்தான்.
ஐரோப்பியக் கனவான்களே!
உங்கள் நாட்டுப் பணமும்
உங்கள் நாட்டு ஆயுதங்களுமே
எங்களை அகதியாக்குகின்றன.
இயேசுவிற்காவது சொல்ல நினைக்கிறேன்
அவரையும் நீங்கள்
வருடந்தோறும் பாலனாகவே பிறப்பிப்பதால்
உங்களோடு சேர்ந்து
என் மதுக்கிண்ணத்தை உயர்த்தி
"ஸ்கோல்" என்கிறேன்.

ஸ்கோல் cheers

www.padippakam.com

# நன்றியுரை

தாரணி போற்றிட
தமிழ்விழா முடிந்தது.

தமிழ் முழக்கம்
புத்திமதிமாலை
கவிதா வீச்சு
திரும்பத் திரும்ப திறனாய்வு

சிங்கப்பூர் சேலைகட்டி
அழகுபார்க்க வந்தவை ஒருபுறம்.

சீட்டு வட்டி
பாக்கி வசூலிக்க சிலர்

கலைவிழா தவிர்த்து
வேறிடங்களில்
கண்மாடுகளை மேய்ச்சலுக்கு ஏவல்

தரித்து நிற்கும் வாகனங்களில் புகுந்து
வயிற்றுமாரியம்மன் மகிழ முடாவி
வீசும் நெடிமறைக்க
சுவீங்கங்கள் இறப்பராய் இழுபட
சுந்தரத் தமிழில் ரீங்காரமிட்டு
சிறகடிக்கும் வண்டுகள்

கோமாளி வேடமிட்டு மேடையேறி
அதைவிட
தூக்கலான வேடமிட்டோர் கண்டு
சிரித்துக் கெலிக்கும் கூத்தர் பாணர்

சனம் தமிழை மறக்கவில்லையென்றே
மகிழ்ந்துபேச
நன்றியுரை கேட்கமுன் நடந்தார் தமிழர்

நாற்றமடிக்கும் மலசல கூடம்
குழந்தைகள் சிறுநீர் தேக்கிய பஞ்சுகள்
சோறுகறி சத்தி
விஸ்கிப்போத்தல் துண்டுகள்
புட்டிப்பியர்
எங்கும் எதிலும்
தமிழ் விழாவிற்கு நன்றிகள்






சனம் தமிழை மறக்கவில்லை
புகழ்மாலை
தொடரும் நன்றியுரையாய்
காதில்...

**சன்னதுமாடி**

www.padippakam.com

# தொட்டாற் சுருங்கிகள்

சித்திவினாயகம்



பெண்!
மென்மையின் சின்னம்!

இனிய கனவுடன்,
மெல்லிய அசைவில்...
விரைகிற சுகந்தம்!
ஆடை தைக்கலாம்....
விற்பனை செய்யலாம்....
டாக்டராகலாம்..
ஆணுக்குப் பெண் சமமாய்,
எங்கும்.... எதிலும்....

பொட்டை அழிக்கலாம்!
பூவை விலக்கலாம்!
மெல்லிய கூந்தலை,
வாரி விடாமல்..
வெள்ளையர் பாணியில்..
வீதியில் விரையலாம்!
ஆணுக்குப் பெண் சமமாய்
எதிலும்..

நான் சொல்ல வருவது,
ஈழத்துப் பெண்ணை...
காரணமின்றிக் கந்தலான - என்
கண்மணிகள் பற்றி....
வாயடைத்து வல்லுறவுக்காளான,
வனிதையர்கள் பற்றி....
காயாகி, கனியாகி,
பத்தாய், ஆயிரமாய்,
பலன் கொடுக்கும் அம்மாக்கள்,
பிஞ்சிலேயே கிள்ளி யெறியப்பட்ட,
பச்சைத் துரோகம் பற்றி....
ஆக்கிரமிப்பும், அச்சுறுத்தலும்,
மார்பகங்களிலே நகக்கீறல்களாய்....
கன்னக் கதுப்பில் கடித்தெடுத்த,
பற்தழும்பல்களாய்....
வீதியோரத் தொட்டாற் சுருங்கிச்
செடிகளைப் போல நசிந்து,
சவங்களாய்ப்போன - என்
சகோதரிகளைப் பற்றி....

வீடு, வயல், காடு,
கப்றடி, கல்லறை, சுடலை,
எல்லாம் ஒன்றுதான் - இந்த
உயிரற்ற உடலை,
எங்கு போட்டாலென்ன?

பரினாவின் கப்றடி!
மரியாவின் கல்லறை!
சாந்தியின் சுடலை! - என்று
அடையாளப் படுத்தினால் மட்டும்
போன உயிர்கள்,
திரும்பப் போகிறதா என்ன?
வானை நோக்கிக் கரத்தை,
உயர்த்தி அல்லா என்பதும்....
நெஞ்சிற்குக் குறுக்கே,
சிலுவை போட்டு, யேசு என்பதும்....
நெற்றி நிறைய வெண்ணீறணிந்து,
முருகா என்பதும்....
துன்பச் சுமையில்,
மூச்சடங்கிப் போன,
உயிர்களை - எங்ஙனம்
மீட்கும்?

தூக்கிய துப்பாக்கியும்,
தொடங்கிய யுத்தமும் - முடிவில்
சந்தோசங்களை மீட்கும்,
என்பதை விட....
பெண்ணே! உன்னைச்
சங்கடப்படுத்தியோரைச்
சாகடிக்கட்டும்!!

www.padippakam.com



# மாநகரும் மானுடரும்

ஒவ்வொன்றும்
விலக்கின்றி
மற்ற ஒவ்வொன்றும் போல வளர்வதன்றி
வேறுவழியின்றி
மாநகரம் வளர்கிறது.
அதன் விளிம்பு அயல்களைக் கரைத்துப் புரள்கிறது
அதன் மையம் வானை விழுங்கி உயர்கிறது
மாநகரம் தனது முகத்தை
மொழியைப்
பண்பாட்டை
அடையாளத்தை இழக்கிறது

வருவதையன்றி
வேறுவழியின்றி
மனிதர் மாநகருள் வருகின்றனர்
மாநகரின் மையத்தின் கோபுரங்களுட் புதைகின்றனர்
அதன் விரையும் விளிம்பினுள் கரைகின்றனர்
மாநகரின் முகத்தை
மொழியைப்
பண்பாட்டை
அடையாளத்தைத் தமதா க்கும் முயற்சியில்
தமது நாட்களை இழக்கின்றனர்
விலக்கின்றி
மனிதர் ஒவ்வொருவரும்
மற்ற ஒவ்வொருவரும் போல
மாநகரம் போல
தமது....

**சி. சிவசேகரம்**

## ஒரு ராணுவ வீரனுக்கு..

நேற்றோடு எனது சிறைநாள்
முடிவடைகிறது.
நாளை விடுதலை
ஒரு தடுப்புச்சட்டத்தில்
குற்றவாளியாய் சோடிக்கப்பட்டேன்
எதுவும் தெரியாது என்றதற்காய்
பத்துவருடச் சிறை
தெரியுமென்றால்? விஷேசம்.

சிறைக்கம்பிக்குள் வந்து நீ
அடிக்கடி பார்க்கிறாய்
சாப்பிட்டாயா வென்று நீ
கேட்கிறாய்?

நிலாக்காயும் ஜன்னலிடுவில்
நான் விடியலைத் தேடுகிறேன்
புது உடுப்பு வழங்கப்படுகிறது
மண்போடாத சாப்பாடு தருகிறாய்

'யாலுவா' வென பலபேர் கேட்க
அழைக்கிறாய்.

நான்! நாளை பிணையில்
விடுதலை

யாலுவா?
நீ யெதையும் வெளியே சொல்லாதே?

இந்த சிறையில் நடந்த
மூலத்தில் கம்பி விடுத்தலை
கொச்சிக்காய் புகையடித்ததை
ஆண்குறி மேசைலாச்சியில்
அடிக்கப்பட்டதை.

**வி சுதாகர்**

www.padippakam.com

# உன் உள்ளம் என்ற துணியை

கொஞ்சம் பிழிந்து வடிக்கவேண்டும் என்னை.
வெள்ளை மல்லிகையே,
உன் உள்ளத்தைத் திருப்பியா, துணியாக்கி

கேட்கின்றாயில்லை.
எனக்குள் அப்பியுள்ள சிறு அழுக்கை
மனதுக்குள் வைத்தது
உலகத்துள் வாழ்ந்ததனால் உருவான
சின்னப் புழுக்களினை
அகற்றி என்னைப் பால்வெள்ளையாக்கி
இந்த
வாழ்க்கையிலே மிதுங்க.

ஒளி நட்சத்திரம்போன்று நான் மிதுங்க.
நிலவின் ஒளியாய் தேசம் வழிக.
தினசரி என்னைப் பிழிந்து வடிப்பது
கட்டாய தேவை!

என் வெள்ளை மல்லிகையே,
உன் உள்ளத்துள் ஒரு
கறுப்பும் இல்லை. இருந்திருந்தால் இந்த
பொன் இரவில் வாசம்
ஊர் பரவி வீசிடுமா! தென்றல்
அதில் குளித்து ஓதிடுமா வேதம்!

இங்கு,
வேதம் ஓதுகின்ற தென்றலைப்போல் நானும்
மாறப் போராட, மல்லிகையே என்னைப்
பிழிந்து வடிக்க நீ உதவு!
உன் உள்ளத்துச் சீலையிலே
சில் வண்ணக் [illegible] மறுப்புச் [illegible] இல்லையென்று
ஓர் இரைச்சல் வருகின்றது

அது ஆறு!
தினமும் நான் ஓடி
உடம்பை மட்டுமல்ல,
மீன் ஒளிந்திருக்கும் இருதயமும்
சுத்தமாக்கிப் பாய்வதுதான் ஊர் குடிக்க!

என்னை எப்போது மல்லிகையே இந்த உலகம் பருகுவது

**சோலைக்கிளி**

**நட்சத்திரன் செவ்விந்தியன்**




மஞ்சட் பூக்காடுகளில் பூத்த மப்பில்
கிழக்கிலிருந்து கொழும்புக்கு
இந்தப் பிரிவுப் பயணம்
மழை பெய்து ஓய்ந்து
நான் மனசார இளைப்பாறிய கொஞ்சக்காலம்
வாழ்வு கொடுத்த ஊர்
உன்னைப் பிரிந்து கொண்டிருக்கிறேன்
இந்தப்பயணம் தருகிற போதை
எழுதச் சொல்கிறது
இழந்த வாழ்வையும் வாழ்வின் கவிதையையும்
கவிதையின் போதையையும்
எழுதச் சொல்கிறது
பிரிவில் பூக்கிற துயரம் இதில் இல்லை
வெண்மணல் கொடுக்கிற நதியும்
காடுகளும் கூட
என்னோடு தொடர்ந்து வருகிறது

மீண்டும் மீண்டும் நகரங்களை நோக்கிப் போனாலும்
நகரங்களை அவாவிய என் கனவுகள் போயின
நகர வாழ்வும் போயிற்று
அழிந்துபோன நாகரிகங்களைப்போல
அந்த வாழ்வு அப்படியே இருப்பினும்
அங்கிருந்தபோது எனக்கு எழுதமுடியவில்லை
மனசார வாழவும் கிடைக்கவில்லை.

1997

●●●●●●●●●●●

கிழக்கு ஆஸ்திரேலியச் சிறுநகரில்
மதுக்கடை ஒன்றில்
குளிர்காலம் தொடங்குகிற ஒருநாள் மாலையில்
D H Lawrence பிலியட்ஸ் விளையாடக் கண்டேன்

நெடுங்கூரிய நாசி
செம்பட்டைத் தாடி
கன்னிகளின் விரக ஆன்மாவை ஊடுருவும்
அதே 19ஆம் நூற்றாண்டு கடலோடிகளின்
கண்களுமாய்
நெடுவல் ஒல்லி மேனியன்
D H Lawrence பிலியட்ஸ் விளையாடக் கண்டேன்.

தங்கள் தலைமுறையையே சூதாடும்
தன் வயதொத்த ஆண்களோடு
பிலியட்ஸ் பந்துகள் அடிபடுகிற படுக்கைக்கும்
மதுக்கிண்ணம் இருக்கிற மேசைக்குமாய்
நீண்ட கோலோடு போய்க்கொண்டிருக்கக் கண்டேன்

என் மதுக்கிண்ணம் காலியாகும்வரை
D H Lawrence பிலியட்ஸ் விளையாடக் கண்டேன்.

1997

# வீடு பேறு

ஆறு மாத அஞ்ஞாத வாசம்
மீண்டு வந்தேன்,
வீடு நிற்கிறதே
வீட்டின் மேலே
கூரை நிற்கிறதே
உடைமைகள்...
ஒரு சில களவு போனாலும்
பெரும்பாலானவை இருந்தன;
கிடந்தன!
மிதிவெடி எதையும் மிதித்திலம்!
ஆண்டவன் பேரருளால்
நாம் பிழைத்தனம் என்று

ஆறுதலாகச் சுற்றிப் பார்க்கிறேன்
வழமையாய் என்னை
வரவேற்கின்ற சீவன்
'கறுவல்' இல்லை, சிவ சிவா!
அயலெல்லாம் பார்க்கிறேன்
பாதை, கிணற்றடி,
பற்றை பறுகெலாம்
அன்றும்
அடுத்த ஒருசில நாளும்
தடவிப் பார்த்து, பார்த்து,
ஏமாந்தேன்.

மனமோ
ஐப்பசி மாதத்து ஒருநாள் மாலைப்பொழுதை
இரை மீட்கிறது
வாழ்ந்த மண்ணை -
மனையைத் துறந்து
கையில்
ஓரிரு பைகள் எடுத்து
குழந்தை குட்டிகளைக்
கிடுகு கூட்டைகளை
ஏற்றிப் புறப்படும்
வேளை
நீ நின்றாய், கறுவலாய்!
நாம் கைவிட்ட வீட்டுக்கு
காவலாய், கடமை வீரனாய் நின்றாய்!

பிறகு
புகலிடத்திருந்து மும்முறை வந்தேன்,
கையில் உணவுப் பொதியுடன்
கண்டதும்
களிகொண்டு தாவினாய்,
குதித்தாய், மோந்தாய்
சுற்றி ஓடி
ஏதேதோ சொன்னாய்.

மூன்றாம் முறை -
பிரிவு தாங்காது
பின்னே தொடர்ந்தாய்!
கல்லாய் மனதை
இறுக்கிக் கொண்டு
கல்லால் எறிந்து
உன்னை நானே துரத்தினேன்.

இன்று -
நீயில்லை
உன்றன் நினைவே கனக்கிறது!
ஒவ்வொரு நாயையும் உற்றுப் பார்க்கிறேன்
அவையோ
குட்டை பிடித்து
மயிரெலாம் கொட்டி
அலைந்து திரியும் அங்காடி நாய்கள்!
மனித சகவாசம் இன்றி,
சூனியப் பகுதியில் அடிக்கடி கேட்கும்
துப்பாக்கி வேட்டொலிக் காற்றாது ஓடி
பயந்து பயந்து
பழகிய நாய்கள்!
மீண்டு வந்த மனிதரைக் கண்டு
விலகி விலகி ஓடும் நாய்கள்!
அவற்றிடை,
நீயில்லை,
உன்றன் நினைவே கனக்கிறது.

நாம்
கைவிட்ட வீட்டைக் காக்கும் முயற்சியில்
உயிரை விட்டிருப்பாய்
என்ற உண்மை
உறைக்கும் போதெல்லாம்
குற்ற உணர்வால் குறுகிப் போகிறேன்.

உடைந்த வீடுகள்,
இழந்த உடைமைகள்,
பிரிந்த உறவுகள்,
பெயர்ந்த மனிதர்
என்று ஐந்தொகைக் கணக்கு
முடிக்கும் வேளையில்
உன் பேரில் உள்ள 'வரவு'
என்னிடம் நீ 'பற்றி' யதை விட
அதிகமாய்ப் போனதால்
அடைக்க முடியவில்லை!
'அழித்து எழுத' லாம் எனிலோ
அனுமதி தரநீ அருகில் இல்லையே!

சோ. பத்மநாதன்

www.padippakam.com

# ரயில் பயணம்

தா பாலகணேசன்

1

கட கட கட கட கட கட
கட கட கட கட கட கட

இருண்ட கருங்கோட்டையை
தகர்த்துக் கொண்டு
தாவியே ஓடுது ரயில்.

அல்லாடும் சோகத்தோடு
கவிந்துள இருள் தேவியை
ஓவென அலறும் படியாய்
எழுப்பி விடுகின்றது ரயில்.

முனையில் தாங்கிய
ஒளிவெள்ளப் பாய்ச்சலில்
இருள் சேலை கிழிபட்டு
ரயில் சாளரங்களில்
பலமாய்ச் சடசடக்கின்றது.

இந்தக் கடுகதி ரயில்
எங்கே போகின்றது...?

பயணிகள் சிலர்
ஏக்கத்தோடு கேட்கிறார்கள்
இன்னும் சிலர்
குரலெடுத்துப் பாடுகிறார்கள்

வழித்தடம் மாறி ஓடுது கடுகதி
வாழ்வதன் நிலை தடுமாறவே
வழித்தடம் மாறி ஓடுது கடுகதி
வாழ்விடம் சேரா வலி சூழவே!

கடுகதி ஓடுது வழி தடுமாறி
கட கட கட கட கட கட
வழித்தடம் மாறியும் ஓடுது ஓடுது
காலநதியதன் ஓடமெனவே!

இது எங்கட ஊருக்குப்
போகாதா தம்பி...?

இருள் எனும் தேவியின்
குரலாய்
அழுகின்றது உயிரான்மா.



2

நீலவான் சொரியும்
வெள்ளிப் பூக்களை
ஆம்!
நீலவான் சொரியும்
வெள்ளிப்பூக்களை
எங்களுக்காக பறிக்கவே
இத்தனை வேகம் சூடி...

ஊர் மனை விளக்கொளிர
நீர் நிறை வயல்களில்
முழுகித் தலை துவட்டி
கனி மரக் கிளையிலிருந்து
வான் வெளி கிழித்து
மறைகிற சிட்டுப் போல் ரயில்
கடுகதி ரயில்

உயிர்ப்புடன் மொழிதல்
ஒடுங்கிய மனிதர்
ஒடுங்கி ஒடுங்கி ஓரமாய்
நின்று இரந்து இரந்து
அஞ்சிப் பயந்து பயந்து
கஞ்சிக்கும் கூழுக்கும்
பரதேசியென திரிந்து திரிந்து
ஜீவநதிகளின் அலைகள்
ஆர்த்து ஆர்த்து கும்மாளமிடுகின்ற
அழகு குலைந்த
முகத்தினரே எழுந்திருங்கள்.
உங்கள் இருப்பினைச் சுமந்த ரயில்
கடுகதி ரயில்

கடகட கடகட கடகட கடகட
காலநதி ஓடமெனக்
கடகட ரயிலே
அடிமையெனும் நிலையினைக்
கடகட ரயிலே
அகதியெனத் திரிதலைக்
கடகட ரயிலே

கடகடத்து ஓடுமென் ரயிலே
மலை குகை பனைவெளி
கட கடப் போ!
மாண்புறச் சுடரும்
பொன்னிறச் சூரியக்கதிர்களைச்
சூடிடப்போ!


அழகு ஒளிர
வீரியத்துடன் வீற்றிருக்கின்ற
மண்ணின் சுகந்தக் காற்று வெளியில்
நுழை!
இருள் கவிந்துள்ள
வெளிமுழுதும் பரவிய
கூவலை அடக்காதே
நீயும் கூவியெழு...!

கடகட ரயிலே...

www.padippakam.com


மு பொன்னம்பலம்

# பிரிவோலை



என் காதலி -
இப்போ அடிக்கடி பெரிதாய் சன்னதம் 'கொள்கிறாள்.
என்றும்போல் நான் அவளை இடையறாது நேசித்தும்
அவள் இடையில் என் கை வளையவரும் போதெல்லாம்
இடறி எழுகிறாள்!
ஏன்?
எனக்குள் ஏதோ வஞ்சகம் இருப்பதை அவள் கண்டதாய்
இடித்திடித்துச் சொல்லி கண் சிவக்கிறாள்.
கனவு கண்டு பயந்து விழித்தெழுந்தவள் போல்
'கலை' ஆடத் தொடங்கிறாள்.
'துரோகி நீ என்னைச் சுரண்ட வந்தவன்' எனப் பெரிதாய்
கூச்சலிடுகிறாள்
'ஹிஸ்ரீறியா இவளுக்கு' எனச் சில மருத்துவர்
அறிக்கை வாசித்தபோதும்
இன்னும் சில ஊர்ப் பெரியவர் 'பேய் பிடித்தது இவளுக்'கென
வேப்பமரக் கொப்பை உருவியெடுத்தபோதும்
பல் நறநறத்து,
"உன் போன்ற ஆண் அயோக்கியரும் பேயரும் வாசிக்கும்
வெற்றறிக்கை இது!" என வீசி எறிந்தனள்.
காலை உயர்த்திக் கதவையறைந்தனள்!
முன்பொரு பெண் கால் உயர்த்தியபோது
அவள் கால்கீழ் நசிந்த கூத்தனை நினைந்தேன்.
நான் கூத்தாடியா?
அவள் சொற்படி யன்றோ அனைத்தும் செய்தேன்!
ஆயினும் இன்று
ஆண்மாரியாய் இவள் கோலம் கிளர்ந்ததேன்?
ஆண்மையின் வீரியம் அனத்தும் இழந்து ஓர் மூலையில் குந்தி,
முகட்டைத் துழாவினேன்.

www.padippakam.com



ஹுஃக்கும், முடியவில்லை.
அப்போதும், நப்பாசையில் அவள் அருகு சென்று,
‘எங்கள் காதல் இனி....?’ எனக் குசுகுசுத்தபோது,
கட கடவெனச் சிரித்தாள்!
‘காதலா? என்னை நுகர உன்போன்றோர் நெற்றியில் ஒட்டும்
‘லேபல்’ அது என்பதை மறந்தாயோ?’ எனப் புதுமொழி
பேசினாள்.
எனக்கோ விளங்கவில்லை!

உண்மை.
மேல்மாடியில் வாழ்ந்த ஜோடிகள் மத்தியில்
பிரச்சினை இருந்தது.
கீழ் வீட்டிலும் பெண்கள் சிலர் விசும்பியது
என் காதில் விழுந்தது.
அவர்கள் விழி மல்கிய துளி நெருப்பு
இடையில் கிடந்த என் முகட்டில் சிந்திற்றோ!
அவர்கள் துன்பத் தீர்வுக்காய்
உயிர்த்தேன் ஒழுகும் எம் கூட்டைக் குலைத்தனரோ?
எனக்கு விளங்கவில்லை.
ஈற்றில், ‘இனி என்ன உத்தேசம்?’ என்று என்னவளை
வெட்கம் மறந்து மீண்டும் வினவினேன்.
‘நான் வேறு, நீ வேறு
இனிநாம் பிரிந்து செல்வதே உத்தமம்’
என்றவள் கூறிப் பிரிந்தபோது
என் நெஞ்சடைத்தது.

நேசிப்பதைத்தவிர வேறொன்றும் தீமை நிகழ்த்தத் தெரியாத
என் நெஞ்சில் அவள் செயல் நகம் கிழித்தது.
அவள் என் தாயாய் இருந்தவள்.
தந்தையின் ஆண்மையும் எனக்குள் வளர்த்தவள்
சேய்பல தந்து என் நெஞ்சமயிர் கிளர அதில் தொட்டிலாட விட்டவள்.

இன்று போகிறாள், பிரிந்து!
உடனிருந்த எம் அர்த்தநாரீஸ்வரப் புணர்ச்சி
திரிபுபட்டு
நபுஞ்சகம் உற்றது.

❀❀❀❀❀

துக்கித்து,
நானும் அவளும் முன்னர் ஒன்றாய் முகம் புதைத்த
தலையணையில் நான் வீழ்ந்தபோது
ஏதோ மூஞ்சியில் குத்திற்று!
என்ன அது?
தலையணையைக் கிழித்து,
துருத்திக்கொண்டு வெளித்தெரிந்த அதை இழுத்தெடுத்தேன்.
செப்பினால் செய்த பிரிவோலை!
எவர் எழுதி இதைஎம் தலையணையுள் புகுத்தினர்?
எந்தச் சூனியக்காரி செய்த சதி?
எம் உறவின் உயிர்க்காதலைப் பொறுக்காத
ஏதோ மனப்பிறழ்வின் உச்சாடனம் இது?
பிரிவோலையில் இருக்கும் வாசகங்கள்
இன்னும் எவர்க்கும் புரியாத புதிர்.
எம் தலையணையைக் கிழித்து
மதகுருமாரும் புதைபொருளாய்வாளரும்
ஆய்வுகள் செய்தனர்.
எம் வாழ்க்கை பஞ்சாய்ச் சிதைந்து
காற்றில் பறந்தது!

www.padippakam.com

# சி.வி.யே
# உன்னோடு சில வார்த்தைகள்

மல்லிகை சி செழியன்



மக்களின்
மணி மகுடமே
மன்னித்தருள் எங்களை!

உன்னைச் சுகமாக
வாழ்த்த எங்களுக்குச்
சுதந்திரம் இல்லை.
நாங்கள்
அடிமைச் சிறையில்
அகப்பட்டுக் கிடப்பதால்!

நீ
கவிதைகளால்
வாழ்க்கையைச் சொன்னாய்.
மக்கள் மன்றத்திலும்
மக்களுக்காய் வாழ்ந்தாய்.

நீ
எங்களுக்கு
தொலைந்து போகும்
தூரத்து உறவல்ல
தள்ளி வைக்கப்பட்டிருப்பதால்
தவிக்கிறோம்.

இம் மன்னர்களோ!
வாக்கு வேட்டைக்கு
மட்டுமே
பரிவாரங்களுடன்
மக்கள் முன்
தோன்றுவர்.

ஒரு தரமேனும்
உன் கழுத்து
மாலைகளுக்காக
மன்றாடியதில்லை.
இந்தப் பெரியவர்களோ!
மாலைகள் இல்லாவிட்டால்
மக்கள் முன்
தோன்றுவதேயில்லை.

உன்னை
உழைத்தே - நீ
ஊரைக் காத்தாய்.
இந்தப் பாண்டவர்களோ!
மக்களைப் பணயம்
வைத்தல்லவா தேசத்தை
சூறையாடுகிறார்கள்.!

மா... மனிதா
நீ
மறுபடியும்
இருந்தால்
வேண்டாமென்ற
வாக்குப் பெட்டியில்
இந்தத் தலைவர்களின்
வாக்குகளே
முழுமையாக விழும்.

ஈழத்தான் பார்க்கிறது
எமது தேசம் எரிமலையாய்!
அவசர அவசரமாய்
எங்கள் எஜமானர்கள்
கொடுக்கின்ற
அவகாசப் போதையால்
திரும்பவும் போய்
துயில் கொள்ளவே
தருணம் பார்க்கிறது.

கொதிக்க வேண்டிய
குருதிகள்
குளிர்ந்து உறைந்து
போனதால்
மரத்துப் போய்
மரக்கட்டையாய் ஆனது
மனிதம்.

தலைவா! - நம்
தேசம் விழித்துக் கொள்ள
ஒரு
வீர விடியலை
அனுப்பு.

www.padippakam.com

# நேசத்தின் வேர்கள்

கடல்நீரை சிறுசெம்பில்
அடைப்பேன் என்கிறாய்...
மரங்களும்
தலை அசைத்து ஆமோதிக்கின்றன.

ஒற்றைக்காலில்
தன் காதலுக்காய்
கொக்கும் தவமிருக்கும்...
காலம்.... காலமாய்....

சிறு தும்பிகூட
என் கரம்பட்டு சாகடிக்கப்படவில்லை.
வண்ணத்துப் பூச்சிகளின்
சிறகசைப்புக்கும் ராகமுண்டு...
ரசிப்பேன்...

காலம் கிளை முறித்தது.

'இன்று அவனை கொன்றே வருக'
என்று
ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது...
ஓட்டுக்குள் முடங்கிக்கிடந்த
ஆமைக்கும்
துப்பாக்கி தரப்பட்டுள்ளது...
நேசத்தின் வேர்கள் காயம்பட்டது.
வானம்
பொடிபடாமல் என்ன
செய்யும் சொல்?

முல்லை அமுதன்

20.2.97

# எதிரி யாரென...

நா விச்வநாதன்

பிறந்த அன்றே
செவிப்பறை கிழிபட
இரண்டு தடவை
எங்கள் வீட்டு
இடிந்த சுவர்
தூளாக்கப் பட்டதென்றாள்
அம்மா -

அப்பா
யாரோ அழைத்தாரென
படலை தாண்டிப் போனவர்
பத்து வருஷமாயிற்று
இன்னும் திரும்ப வில்லை.

குயிலின் சுருதி
கொஞ்சமும்
பழக்கமாயிருக்கவில்லை.

இசைக்குழுக்கள் மொத்தமும்
எங்கோ சென்று விட்டன
சில துப்பாக்கி பிடிக்க
சில கடல் கடந்து ஜீவிக்க -

அண்ணன் இருவர்
இருந்த கதையைச் சொல்லி
வானத்தை அளையும்
அத்தையின் கண்கள்

நாடு பிடிக்கும்
சரித்திரப் பிரசித்தி பெற்ற
யுத்தங்கள் இன்று
பிரமிப்பு தருவதாயில்லை -

நானே தலைவியென
தனித்தனியே
பலரும்
சொல்லிப் போயினர் -

எதிர்வீட்டுச் சின்னத்
தோழியோடு
ஒரு வினாடியேனும்
விளையாட ஆசைதான் -

பாண்டியாட்டக் கோடுகள்
கவச வண்டிச் சக்கரங்களால்
எப்போதோ
கலைந்து போயிருந்தன -

இதென்ன தொல்லையென
காட்டில் பல பறவைகள்
சமுத்திரம் நோக்கிப்
பறந்தன
ஓசையற்ற உலகம் தேடி -

எனக்கு
வயது வந்துவிட்டதென
அறிவிக்கப்பட்ட மறுநாள்
பதுங்கு குழியொன்றுள்
குறிபார்த்துக் காத்திருந்தேன்
துப்பாக்கி கனக்க -

எதிரி யாரெனத் தெரிவிக்க
என் சிநேகிதர்கள்
வந்து விடுவார்கள்
சீக்கிரம் -


www.padippakam.com

# ரமணிதரனின் எட்டு கவிதைகள்

## எனக்கொரு கடிதம்

அந்தககாகிதத்தை நான் நேசிக்கிறேன்:
நான அறிந்தேயிருக்கிறேன்.
இந்தககுளிரூறும் மாரியிலுமங்கு
என்வீட்டுத் தென்கிழக்குப்புளி
காய்த்துக்குலுங்குவதால் மட்டுமிங்கு
என வாழக்கை ஒன்றும் மாறிவிடப்போவதில்லையென்று.
அக்காவின் குழந்தைக்கு ஆறாவது பல்
முளைததது காரணங்காட்டி
ஒன்றும் என் அகதி அந்தஸ்து,
இங்கு உயர்ந்துவிடபபோவதில்லை
என்று தெரிந்தவனாகவும்தான்.

என்றாலும.
அகதிச் சோமாலிக் குழநதைகளின் குச்சுக்கைகால்கள் சடைத்ததென,
உண்மைமனிதர்களின் எண்ணிக்கைத் துளிர் தாங்கி,
இலையாடை அவிழ்த்தெறிந்து நாணம் தொலைத்த மரச்சாலையூடே,
சந்திக்கடை `பணிஸ்'*ன் வட்டம்+நிறம்+பொங்குவளம்
நினைவுக்குக் கொணரும் இம்மங்கோலிய முகங்களிடையே,
என் தனிமை ஆசுவாசப்படுத்த,
நான் நேசிக்கும் என்னை நேசிப்பவற்றின்
நினைவுகள்/நிழல்கள் தாங்கி வரும
நீல, சிவப்பு ஓரவரையிட்ட வெள்ளுறைவசிக்கும்
அந்தக் .கடல்கடந்த ஆஞ்சநேயப் பழுப்புககாகிதத்தை
நான் நேசிக்கிறேன்.
நேசித்தே ஆகவேண்டும்,
என் காதலி,
அ.்.து ஒட்டிய உன் சிவப்பு உதடுகளை
நான் உள்ளன்பாய்
நேசிப்பது போலவே.



## அயலவனுக்கு

அயலவனுக்கு,
புரியவில்லை என்பதுவாய் நீ புன்னகைப்பது எனக்குப் புரிகிறது.
புதியதல்ல உன் காலந்தேய்க்காப் பாசாங்கு.
எனினும்,
உறுதியாய் மெல்லவரும் என் சொல்லைக்
கொல்ல மறுத்து இறுதிக்கும்
உனக்குச் சொல்லிக்கொண்டே இருப்பேன்,
"வெட்டுண்டு பனை சாயினும்
விடலை வடலிகள் விடும் வேர் ஆழ மண்ணூடே."

என்றாவது காண்பாய் நீ,
எரிந்த என்பூமிச் சாம்பல் மேடெல்லாம்
பீனிக்ஸ் என எழுந்து பனை.
காற்று, விலங்கு, பறவை, நீரூடு வெளியெங்கும்
கடத்துண்ட என் நிலவனமெல்லாம்
மீளத் தம் உயிர்விதை போட்டெழுந்த
அடர் பச்சை முற்றத்தே
இரத்தச் சிவப்பாய்ப் பூத்துக் கொட்டும்
கூர்முள்முருங்கை தன்கோபங்காட்டி.
அந்நாளில்,
என் வாசற்படி நின்ற, கதவு தட்டி,
உன் மகள் மணமாலைக்கு மலர் கேட்காதே

இன்று விழும் என் மக்கள் பிணம்
உரமாய் உதிர்ந்தெழுந்து,
விதிமுகம் நகையாடி
அவர் இறைத்த செந்நீரால்
சிரித்திருக்கும் செம்பூக்களவை.

ஆயினும் காலம் கடந்து,
அன்றைய வாடைக் காற்றும் கூறும்
இன்றைய என் வடநிலம் எழும் நிணநாற்றம்.

20.05.97

www.padippakam.com



# மழைக்குருவி

மழை,
கோடைப்பெருமழை
எனில்,
ஊழிப்பெருமழை,
பாரதிசொல்,
"சடடச சடவென றெட்டுத
திசை நொருக்கு வெறி மழை."
மழை நோக்கி, மனம்குளிர, நான்.

எங்கிருந்தோ என் திசை
அது நனைந்து. ஒரு குருவி;
தீர்த்ததலம் தேடிக் குளித்த,
கருங்குருவி யாத்திரீகன்.
சிலிர்த்த மயிர் கொண்டு,
சிறகுநீர் சிலும்பி விட்டு,
புழுவெட்டலகு உடற்கோதி,
வட்டக்குட்டிக்கண் என்விழி!
விரட்டாதே, விட்டுவிடு என இறைஞ்சி விறைக்க,
சிட்டு.

சின்னக்குருவி,
தங்கை,
வீட்டுமூலைத் தன் பழஞ்செருப்புப்
பெட்டிக்குட் கண்டதுபோல்,
அங்கம் நடுங்கி நின்ற அவள்
உள்ளங்கையடங்கு குருவி
(அதன அங்கம் எதற்குமன்று
ஏது பங்கமும் செய்திலம் நாம்.)

"பிரிந்தவர் கூடினால். பேசவும் கூடிடுமோ?"

கண்ணது கண்ணோக்கி,
காதலர் களிப்புற்றதுபோல்,
வெறும் மண்ணது கதை மட்டுமன்றி,
மனக்கனங்களும் கனம் காற்றேகி,
பின்,
சொன்ன கண் மௌனித்து,
செல்வண்டி காண் பயணியென,
பிரளயமழை பார்க்க வெறித்து,
ஆடி அஃதடங்க,
தத்திப் பக்கம் நகர்ந்து வந்து,
தலை இடம் சாயத்தெனைக்கண்டு,
பின் நிமிர்ந்து,
மீள,
வலம் நிலஞ் சாய்ந்தென்
அகம், முகங் காண
அவதானம் மிகக் கொண்டு,
பின்னது,
விரைந்தெழுந்தென் உதடணுகி,
குளிர் சிறகு முத்தந் தந்து,
"காத்திருக்கப் பெருமழையும் நிற்றல் கண்டாய்;
கலங்காதே, காலமும் அது போலே; கனியும்"
என்பது தன் கண் கருத்துரைத்து,
விர்ரென்று உயிர் கிளம்பிற்றென்று,
விண்ணது சென்றதுவே,
விந்தைமிகு அக்குருவி.



அதற்கும்,
எங்கோவொரு,
உடல் நைந்து நைந்திழைத்துப் பிய்ந்த
பஞ்சுமஞ்சக்கூடொன்றுவுண்டு - தன்
பிஞ்சுக்குஞ்சுடன் அஞ்சித் துஞ்சி, பின் பிழைப்பின்,
கஞ்சி குடித்தற்கு,
பிழைக்கப் பிறதேசம் போனோர் சொன்னது போல்,
தம் தமிழ் தழைக்க காடுறைந்தார் கண்டது போல்,
அல்லது,
உயிர் பிழைக்க இங்குறையும்,
உலகஞ்சிதறியோர் எனைப்போல,

என்றென் மழை நிற்கும்,
என் பறப்பு, அப்
(பிறப்புத்)தென் புலம் நோக்க?

ஒரு கொட்டு மில்வோக்கி மழைநாளில் எழுதப்பட்டது

www.padippakam.com

## மெச்சிக்கன் ஏரிக்கரை*

வழி நீண்டு, வாகனம் மேற்பறந்து,
வந்துண்ட வாட்டம் வற்றமுன்,
ஏரிக்கரை வேண்டுமென்றான்,
என் நண்பன், நவம்.
"நம்மூர்க்கடற்கரை மண்ணங்
கில்லை" என்றேன்.
கருக்கு நெற்றி கிள்ளி,
பேச்சோடு
பல் சப்பப் புல்லுண்டோ?"
மெத்தவுண்டு; சென்றடைந்தோம்.

மரம்வாழ் மானுடன்
மணிமண்டப மானியம்
கண்ட களை கொண்ட முகம்.
மெல்லிருட்டுத் தூக்கம் தட்டாது
தொட்டு, விட்டுச்சென்ற
பட்டுப் பெண்காற்று.

அண்ணாந்து, தன் தேச ஆகாய
மொட்டுமுல்லை கண்தேட, தூர,
புகை கக்கிச் சிறு கலமொன்று,
ஜாஸ் இசைத்துத் தான் நகரும்.
"பஞ்சமூர்த்தி நல்ல நாதஸ்வரக்காரனடா"
"உம்"
சலங்கையின்றிச் சப்தித்து நம்மருகே
நகர்ந்ததொரு மழை மயிற்கூட்டம்.

"பரிமளா பள்ளிக்கு இண்டைக்கும் வரயில்லை."
"அவள் அப்பா, ஆள் கொஞ்சம் ஆத்திரக்காரரெல்லே?"
"சுகுவும் சிவமும் அதுக்குள்ளை - நித்திரையோ?"
இங்கற்ற இருவரும் எங்கோ
இந்நேரம் தொலைந்திருப்பின்,
இங்கிருந்ததாக அறிக அவர் சுற்றம்.

"ஓம் நேரமலை, வா போவம்."
"இன்னமும் அப்பருக்கு இவ்வளவு பயமெண்டோ?"
"அப்பரில்லையடா: நேரம், இடம் சரியில்லை."

இடை வழிகண்டு ஏரிகேட்ட
என்வகுப்பு நண்பர்க்கெல்லாம்,
"திருமலை"* நுரைகடல்
காலம் மாற்றாக் கரையுடைத்து",
என்றனன் நவம், எங்கோ கண் நிலைக்க.

அரம்பவயது நண்பனுடன் ஏரி சுற்றியபோது எழுதப்பட்டது

## தோழனுக்கு ஒரு கடிதம்*


இன்றுடன் ஆண்டு ஐந்து,
கடல் கடந்து நானகன்று;
தோழ,
உணர்விலோ, உலகம் இதன் மேலாய்
எம்மிடை நீண்டகண்டதுபோல்.

காலத்தின் தூரத்தே,
உன் தளம் இரவு பகலின்றி
நிலையியலிற் ஸ்தம்பிக்க,
எனதோ, இயக்கவியற்
காலைத்தொடக்கமே மாலைமுடிவாகி.

எனை நோக்கி நகர
மறுத்து உன் கொள்கை,
உனக்காய் நிற்றலின்றித்
துரத்தலில் என் பறப்பு.

எனினும்,
இத்தனை சடசக்திச்
சமாந்திர விகாரமுள்ளும்
ஒன்றுக்காய் முடிவிலி
ஒருங்கி நம் சிந்தனை;
~ஆறு ஆண்டு அரித்துண்ட
ஒரு மாலைச்சூரியனடி,
மாதாகோவிற் சூசைகடை,
ஒரு ரூபாய் - இரு கிண்ணம்
வெறுந்தேனீர் நட்பு ~

*எந்நிலைமை வரினும் நாடுவிட்டகலேன் என்றிருக்கும் நண்பனுக்கு



www.padippakam.com

?

உண்மை உணர்வுகளுக்குத் தலைப்பில்லை;
உயிர், வெந்துபொங்கு உயிர் மட்டுமே

சே குவேய்ரா!
தோழ,
(நூற்றாண்டுகள் முன் (நன்)நூல்கள்
வாழ்க்கைக் குருவாய் ஆகையில்
நான் சந்திக்காமலே மண் சாய்ந்துபோன நீ,
ஒரு நல் நண்பனாக முடியாதா, சொல்?

வாழ்மனத்தூரம் முன் தொலையும்
வசிப்புநி(ற)லத்தூரம், நண்ப)
பொலிவியக்காடொன்றில்,
அறியா விவசாய அடிமைத்தனம்
உழுதமுகங்களுக்காக, இளங்
கைகள் வெட்டப்பட்டு, வான் நோக்கி,
இளந்தாடியுடன், மெலிந்து
"ஆண்டவரே, ஆண்டவரே, ஏன் என்னைக்கைவிட்டீர்?"
என்று அரற்றாமல், விறைத்து வீழ்ந்திருந்தவனே,
இன்றுபோல், இவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள்
என்று அன்றும் நன்றே அறிந்தே செய்திருந்தார்கள்.

இவர்கள் உன் கைகளை வெட்டிக்கொண்டு
தங்கள் பாவச்சிலுவைகளைத் தூக்கித்
தங்களை அறைந்துகொள்வதில் அளவற்று
அகமும் புறமும் மகிழ்ந்துகொள்கிறார்கள்.

உன்னைப் பற்றித் தெரியாது; ஆனால், என்னால்
மன்னிக்கமுடியவில்லை; நான் தேவனில்லை;
நகமும் மயிரும் நிணமும் நிறமும்கொள் மனிதன்.

பதுங்கித்தாக்கு ஆயுதப்போராட்ட ஆரம்பகர்த்தாவே,
உனக்கும் தர்மம்போதித்த புத்தனுக்குமிடையே
பெரும்பொருத்தங்கள் காண்கிறேன், என் போதிமரங்களே;
வாழ்நிலையிற் கீழிருந்து வேறுவழியின்றிச்
சமூகம் சீர்திருத்ததேடாமல் வளமிகு
மேல் நிலை தூக்கியெறிந்து போனவர்கள்
பார்மேல் நீங்கள் இருவர் மட்டுமே, நான் புரிந்தளவில்.
நேற்றைய மாதத்தின் நடுமதியப்போதொன்றினில்,
மில்வோக்கி ஏரிக்கரைக் கோடைவிழாவில்,
உன் செந்நட்சத்திரத்தொப்பியுடன்,
உள்ளே இட்ட மது நில்லாமல், வெளி
வாந்தி எடுத்தவண்ணம் வாலிபன் ஒருவன்.

சிலவேளை,
உன்னைக் கொல்லப் பொலிவிய அம்பேவியவரின்
புத்திரனாய், பேரனாய், பெறா வளர்ப்புமகனாய்க்
கூட அவ்வப்பாவி இளைஞன் இருக்கலாம்
ஆனாலும், அகம் வாடுதலன்றி அவன்மீது
ஆத்திரப்பட எனக்கேதும் உரிமையில்லை.

கொண்ட மனக் கொள்கை (கை)விட்டு
தன் சொந்த நிலைமைக்காய்
இங்கு ஒண்டிக்கிடக்கும் எனக்கும்
அந்த நாற்றமெடு புளிப்பு வாந்திக்கும்
ஏது வித்தியாசம் உன்னால் காணக்கூடும், என் முன்னோடியே?
பொதுவுடைமை நெல்லைப் புழுக்கள், களைகள்
புடைத்துப் பாராமலே விதைக்கப்போட்டுவிட்டது
உன் தவறில்லாததுபோல், என் பிழையும் இல்லையே.
அ∴து அறியாததுதான் உன் உயிர் விலையாய்ப் போயிற்று.
இ∴து அறிந்ததுதான் என் உடல்நிலை இங்கென்று ஆயிற்று.
நண்ப,
'காலம் பதில் சொல்லும்' என்று
சொல்லிக் கொண்டிருக்கூமட்டும் கஷ்டமற்றபோதும்
எனக்கு என்னையே ஏமாற்றும் பொய்களில் இஷ்டமில்லை;
எனக்குத் தெரியும், நன்றாகவே, மிக
நன்றாகவே தெரியும், தோழனே,
கொடுமைகள் தாமே அழிவதில்லையென்று; ஆயினும்,
சுயநலம் இட்ட அழுக்குத் தனிப்பெயர் எச்சம் என்னால்,
வினை எச்சம் மட்டுமாயிருத்தலன்றி,
இனி எதை....
.... வீரியங்கொள் வினையாய்
விடிவுதேடுவோர் வேதனைக்காய்க்
கொடுக்கக் கூடுமென்பாய்?

வெற்றுவெறி மதுப்புட்டிகளில்,
பசப்பும் பாடற்தட்டுகளில்,
கொல்லப்பட்டு உன்
கொள்கைமுகம் காணுகையில்,
அக்கூரிய விழி கோழை சொல்லக்
குதறுண்டு
கதறுவதன்றி உள்மனம்
செய்தல் வேறேதுமறியேன்.

தனிமரம் தோப்பாகுமா, சிநேகித?
ஏனஸ்ரோ, முதலில் நீ,
பின்னர் அலன் டே;
வழிகாட்டியே, இது விசித்திரம் எனக்கு;
பிற(பிர)தேசங்கள்,
வட புலத்தின் சோகமே
தென் புலம் எனக்காண,
அமெரிக்கக் கண்டம் மட்டுமேன்
மறுதலை சொல்கிறது நிஜமென?
இதன் மேலே,
என்ன தொடர்வதென்றும் அறியேன்;
உன் தியாக முப்பதாண்டுவேளைக்காய்
என்ன சங்கற்பம் செய்வதென்றும் புரியேன்.

ஒன்றுமட்டும் சொல்வேன்,
உனக்கது மகிழ்ச்சி தருமானால்;
தாமே திட்டமிட்டுத் தரை
மட்டமாய்த் தகர்த்துவிட்டுத் தம்
பல்கலைக்கழகங்களின்
தத்துவப்பாடத்திட்டத்திற்காய் மட்டும்
முழுக்கமுழுக்க விட்டு வைத்திருக்கும்
சிவப்பு மொத்தப்புத்தகங்களாய் மட்டும்
சமதர்மம் ஆகியின்னும் போகவில்லை, நண்ப,
எனக்குள்ளும் சிறிது ஒட்டிக்கிடக்கிறது,
அன்றிருந்தது போலில்லாதுபோயினும், நான்
அற்றுப்போகும்வரை என் உற்ற உயிர்த்
தோழிபோல உறுதியாய்க்கூட வரும் அளவேனும்.

www.padippakam.com

இவ்வுரைப்பு, என் கட்டைவிரல் அல்ல;
எனினும், இன்றைய பொழுதில்,
இதுவே என் குருதட்சணை என்றேற்றுக் கொள்.

இனி, எதுவும் நடக்கலாம் எந்நேரத்தும்.
இனனும் காடுகள உள்ளன;
மெலலிய தாடிமுடி வளர்வதாயும்.
செநநடசத்திரத தொப்பியும் கைவசம் - கூடவே,
அவை சேர்க்கத தார்மீக ஆவேசம் கிளப்ப.
கொடுங்கோன்மையும் பசிதது
நாடு வசித்திருபபது காணகிறேன.
யார் கண்டது?
வெளளமோடிப்போய் ஆங்காங்கே
தாம்முளைத்த விதை நாற்றெனத்
தோற்று உரோமத்தாடி முகத்துடன்.
மீள.
வானம் பார்த்து. கைகள் அற்று
இன்னொரு மெல்லிய உடலும்
கிடககலாம உயிர் விறைதது. ஒரு வனத்தே,
உய(யி)ர்வாழநிலை தூக்கியெறிந்து போன
கபிலவஸதுக் கெளதமபுததனென,
ஆர்ஜனடீன ஏர்னஸ்டோ குவேய்ராவென;
அன்றைய தினம்,
ஆகாயம். அகிலம் எங்கும்நிறை ஆண்டவரே,
மீண்டும் ஒரு முறை, நீர்,
உம வெட்கமற்ற, கொடுமைக்குப் பல்லக்குத்
தூக்கும் பாவர்செயலுக்காய், உம் மீதே
நாணிப்போக உண்மைக்கும் சித்தமாயிரும்.

## சுதந்திரம்/சுதந்திரம்

எப்போது கிட்டியதென்பதாம் எம் அவசியம் இன்று?
அல்லது.. அன்று,
எவ்வாறு கொட்டியதென்பதா இன்றதன் தத்துவம்?
கிட்டியதை, கொட்டியதை,
எப்படிக் கட்டிக்காக்கின்றோம் என்பதன்றோ?
சுந்தரம், சுரம், தரம், தந்தரம்
அத்தனை அழகறிவு அம்சமும் அதற்குள்
அடங்கக் கண்டனரென்றனர் சில நாட்டே;
'சுதந்திரமா, சுதந்திரமா' எனப் பலகட்சி,
பன்றிக்குட்டியெனப்போட்டு, கச்சை கட்டி,
கத்தி, கத்தி கொணர்ந்து பிறர்தலை, உயிர்
துச்சமென கொய்துபோட்டார் பல நாட்டே;
சரி, பிறர் போகட்டும் விடெனில்,
என் நாட்டே,
அத்தனை ஆழமுத்த அர்த்தங்கொள் சொல்
உள்ளதொன்றென்று எண்ணியதில்லையாம்
எவரும் இதுவரை எக்காரணங்கொண்டும்.

அதிலென்ன தவறு?
அற்றதென்றெண்ணுவதை ஆராதித் தர்ச்சிப்பது,
அறிவுள்ள அணைத்துயிர்க்கும் அங்கமொட்டு அசிங்கமே;
நமக்குத்தான் தெரியுமே,
நம்பிக்கையற்றதில் நம்பிக் கைவைப்பது
நம்நாட்டிற்கிழுக்கென்பது நன்றாகவே நம்பெற்றோர்போல்.



www.padippakam.com

ரமணிதரனின் எட்டு கவிதைகள்

## தையல் சொல் கேளீர்



தலையாய பிரச்சினை ஒன்றின்று:
"தையல் சொல் கேளீர்" என்றார் ஔவை
(தங்கவிளிம்பிட்ட வெள்ளெழுத்துக்
கண்ணா(ண)டித் தமிழாசான் சொல்வார்,
"எழுத்துச் சீர்திருத்தம். ஔவைப்பாட்டிக்கு ....
நாம செய்யும் பேரிழுக்கு.
'ஔவை 'அவ்'வென்றிடுவதால்" என்று).
அவர் சொல்வதை எடுக்கவோ; கோர்க்கவோ?

தையல்யந்திரத்தே
தம்பிசட்டைத்தறியிட்டபடி
அம்மா சொன்னாள்.
"பேதை, பெதுமை, பேரிளம்பெண், தையலென
பேதங்கள் பெண்கள் வயதுட் பெரிதுண்டு.

ஔவை தையலல்ல. ஆனால், முதுபெண்;
ஆகவே, ஏற்றுக்கொள் அவள் முதுமொழி."
அருகிருந்த அக்கா தன் மையிடா அழகு
கருவிழிப்புருவஞ் சுருக்கிச் சொன்னாள்
திட்டமாய்.
"ஆனால், வயது என்பது
வாழ்ந்தகணக்கோ, மனக்கணக்கோ?
ஔவை இளமையில் முதுமை கொண்டதில்,
வாழ் ஆண்டுப்பருவத்தே அவள் தையலே."

அடுத்துப்படுத்திருந்த பெரிய எழுத்து மகாபாரத
அழகு ஆழித்தமிழ் ஊறு அம்மம்மா இனிது எழுந்து,
"ஔவை. தமிழ் பல கண்டல் காணீர்:
வள்ளுவர் வாழ்காலச் சகோதரி ஔவை.
அதியமான்காலப் பாரிமகளிர் பாங்கி ஔவை.
கம்பன் புகழேந்தியுக ஒட்டக்கூத்தன் உரசு ஔவை"
என,
ஓடியொளிந்தேன் உள்ளறை
எனை வெளித்தூக்கியெறிய.
ஆபத்பாந்தவ. "அப்பா!"
புத்தகப்பொறி சிக்கியோர் எலி பேசுவதாய்,
"பொறுத்துக்கொள் மைதிலி,
நாளை சொல்வேன் நல்ல பதில்.

இன்று, இறுதிநாள்; ஆய்வுக்கட்டுரை.
'தென்னாசியப்பெண் காலாண்டு'க்காண
'ஈழப்பெண்களும் எதிர்காலத்தமிழும்'
ஏழுபக்கம் அனுப்பவேண்டும்'
-என்றோர் அசரீரி.

துவிச்சக்கரவண்டிச் சங்கிலிக்கொழுப்பு, உடல்மெருகேற்றி,
தென்னுலகக்காடொன்றுறையும் வரிக்குதிரை
வடிவெடுத்து, தம்பி வீட்டுமுற்றம்நின்று
வழமைபோற் சிரித்தான். வாய்விட்டு,
"மைதியக்கா,
இத்தனை ஆயிரம் ஆண்டு பொறுத்தவள்.
இன்னும் ஓராண்டு குறையப்பொறுத்துக்கொள்;
அடுத்த பங்குனித் திகதி எட்டு*.
சிறப்புமலர் ஆனந்தவிகடன்,
இரட்டை இலவச இணைப்பு குமுதம்,
அரைப்பக்க வீரகேசரி வாரமஞ்சரி,
அத்தனையும் போட்டியிட்டு,
வீடு கட்டு. வீதிகூட்டு பெண் தொட்டு,
வீரமிகு சனாதிபதி. விண்வெளிப்பெண்வரை
இதுபற்றி நேர்முகங் கண்டு
நெடுங்கட்டுரை அச்சில் வரும்."

அதுவரை அறை ஓரமிரு சின்னண்ணா,
பாஞ்சாலிசபதப்பாண்டவப்பீமனென.
'இனியிது பொறுத்தலில்லை - தங்காய்
என் சிந்தனை எரிதழல் வைத்தாய்,
உன் இன்றையதமிழாராய்ச்சிப் பங்காய்'
எனச் சினந்தெழுந்து, கையிருந்த,
'புது இங்கிலாந்து மருத்துவ மாதாந்திரி'
மேசை விசிறி. விண்ணதிர் குரலெடுத்து,
"வைத்தியசாலை வரும் பைத்தியங்கள்
பரவாயில்லை உன்மேலாய். சிந்தனைக்கு.

இருபத்தோராம் நூற்றாண்டுக்கு, இந்த
இடறு - குழப்ப - உறை தமிழையா பெட்டிக்குட்
பொதிகட்டிப் பயணம் புறம்படப் போதிப்பார்,
தமிழுக்குச் சோறிடு பெரும் புல(ர)வ(ல)ர்கள்?
எந்தக்கிழவி, எக்காலத்தோ, எதுவோ
எவர்க்கோ எடுத்துச் சொன்னால், உனக்கென்ன?
உன்மதி எங்கு ஊர்மேயப்போயிற்று?
ஆணுக்கும் பெண்ணுக்கும்
உடல், 'உணர்வு ஊக்குச்சுரப்பு மாறுபடினும்.
மூளையுமா, முட்டாளே?"-
சபை விட்டுத் தொடை தட்டமறந்தகன்றான்.

இத்தனை இயலும் இருந்து காண்
தூரமமர், சாத்வீகப்பெரியண்ணா,
நீள்கண் தன்னிமை மெது மூடி,
"வா இங்கே" என்றாற்போல்;
அருகு சென்று, "?" என,
"கணியன் பூங்குன்றனார்தம்
'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - அறிவாயோ?"

அறிவேன்
"அவ்வரு கேளிரே இவ்விடையும்.
விடையென வருதலும் வேண்டும்.
என் செய்வோம், சொல்!
எம் தமிழ்தம் காலத்திரி(ப்)பு.
ஆயின், ஔவை சொல்
ஆழ் மெய்ப்பொருள் காண்:
உன்போல் நங்கையர் தம்சொல்
நலந்தரு நட்புக்குரிய நற்சொல்."
என் கொல்?

மெத்தச்சரி.
பெரியண்ணா, பெருஞ்சமர்த்தன்;
தன் தமிழையும் இறங்க விடான்,
தான் கொள் கொள்கை போலவே.

04 07 97

---

மார்ச் 8: உழைப் பெண்கள் தினம்.

www.padippakam.com

# அசரீரி

றஷ்மி



1

சாவை, எமை நோக்கி இட்டு
வருவோர் யாவர்?
இருள் கவிகையில்
நமது முகங்கள் ஏன் கறுத்துப்
போகின்றன?

நீவீர் அறிவீரா?
அலைந்து,
பெரியோரில் நிலைத்த
குழந்தைகளின் மிரளும் விழிகளும்,
வளர்ந்தோரின்
கேள்விகளற்று உறையும்
மௌனத்தின் பின்னான ஊகங்களும்
சொல்வதிலிருந்து
ஒரு கணம் - கோடி யுகங்களையும்
விடப்பெரிதென்று.

பகல் தின்ற சோற்றையும்
பின்னேரத் தேநீரையும்,
கடைசியாகச் சொல்லிச் சென்ற
வார்த்தையையும்
இன்னும்,
பழையது பலதுஞ் சொல்லி -
அறைந்து
வாயிலும் வயிற்றிலும் மார்பிலுமாய்
ஒப்பாரியும் ஓசையும்,
அழுது குரல்கம்மி -
ஈனஸ்வரத்தில் முனகும்
குழந்தைகளின்
அவலமும்
எங்கென்று நாளை தெரியும்.
இலந்தையிலைக்கொருவர்,
ப[illegible]த்தண்ணீர்,
கற்பூரத்திற்கின்னொருவராய்
யாரார் ஓடுவது என்பதுவுந்தெரியும்.

இப்போதைக்கு -
உன் வீட்டில் எல்லோரும் பத்திரமே
போ
இனி,
ஓசைப்படாது ஒவ்வொருத்தராய்
சயனிக்கலாம்.
பழகிய இந்த அவலச்சா
நம்மை என்செயும்.


2

இன்னும் சொல்வேன்,
நிச்சயமாக:
சடங்கு முடிவுறச்
சனம் கலைந்த பின்னர்
சூழ்கிற வெறுமையுள்
சோகம் பீறிட அழுந்தும் இதயத்தொடு,
இயலாமையின் ஆத்திரத்தில்
தலையைச்
சுவரில் முட்டப் போகிறவர்
நம்மில் ஒருவர்தான்.

நீங்கள் இன்னமும் நம்புகிறீர்களா?
இந்தத் தெருநாயோ,
நாளைச் சூரியனோ
சாவை விரட்டுமென்று.

www.padippakam.com

*The First*
*& Best*
*Tamil Jewellers In London*





வாரத்தில்
ஏழு நாட்களும்
திறந்திருக்கும்

# WESTERN JEWELLERS

230 UPPER TOOTING ROAD, TOOTING
LONDON SW17 7EW
TEL: 0181-767 3445, FAX: 0181-767 3753
Web: http://www.luxmi.com/western


www.padippakam.com



S சாந்தகுணம்

உழைப்பு

www.padippakam.com



# இன்னுமொரு காலடி

இம்மலர் பற்றிய விமர்சனங்களை எங்களுக்கு எழுதுங்கள்.

இம்மலர் பற்றிய விபரங்களுக்கும்
தொடர்புகளுக்கும்

Tamil Welfare Association (Newham) UK
33A Station Road , Manor Park, London E12 5BP
United Kingdom
Company Reg.No.: 2962857 Charity No: 1047487

Tel: 0181- 478 0577
Fax: 0181- 478 0577
e-mail: twan@btinternet.com

www.padippakam.com

# நன்றி

இம்மலருக்காகத் தமது ஆக்கங்களை அனுப்பிவைத்த அனைத்துப் படைப்பாளிகளுக்கும்

விளம்பரங்கள் தந்துதவிய அனைத்து நிறுவனங்களுக்கும்

இம்மலருக்கான ஆக்கங்களைக் கோரும் விளம்பரங்களைப் பிரசுரித்துதவிய *ஈழமுரசு* (பாரிஸ்), *அம்மா* (பாரிஸ்), *ஈழநாடு* (கனடா), *செந்தாமரை* (கனடா), *சரிநிகர்* (இலங்கை) ஆகிய பத்திரிகைகளுக்கும்

முன்னைய மலர்கள் பற்றிய அறிமுகம்/விமரிசனம் எழுதிய *அஞ்சல்* (லண்டன்), *புலம்* (லண்டன்) *ஈழமுரசு* (பாரிஸ்), *ஈழநாடு* (பாரிஸ்), *அம்மா* (பாரிஸ்), *சரிநிகர்* (இலங்கை), *தினக்குரல்* (இலங்கை), *காலச்சுவடு* (தமிழ்நாடு), *கனவு* (தமிழ்நாடு) ஆகிய பத்திரிகைகளுக்கும்

'கிழக்கும் மேற்கும்' மலருக்குக் கணிசமான பொருளுதவிய ஜேர்மன் நண்பர் என். துரைராஜசிங்கம் அவர்களுக்கும்

'கிழக்கும் மேற்கும்' மலரினை விநியோகம் செய்துதவிய லண்டன், பாரிஸ், ஜேர்மன், டென்மார்க், நோர்வே, கனடா, தமிழக நண்பர்களுக்கும்

முகப்போவியத்தையும் மற்றும் மலரினுள் ஏராளமான ஓவியங்களையும் தந்ததோடு, மலரினை அழகுற வடிவமைத்துத்தந்த ஓவியர் கே. கிருஷ்ணராஜாவிற்கும்

அச்சுப்பதிவில் உதவிய
ரமணி சாந்தகுலம், சுவிஸ் ரவி, ரஞ்சி மற்றும் வ.ராஜேந்திரன், தர்சிணி, சுபோ ஆகியோருக்கும்

East London Computers நிறுவனத்திற்கும்

கொழும்பில் அச்சக ஒழுங்குகளைச் செய்துதவிய H H விக்ரமசிங்க அவர்களுக்கும்

இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த கொழும்பு Unie Arts (Pvt) Ltd நிறுவனத்திற்கும்

www.padippakam.com


# Waran & Company
## Solicitors




WE UNDERTAKE

- Civil Litigation ● Commercial Litigation
- Immigration ● Personal Injuries ] ● Conveyancing
- Entertainment Law ● Residential & Commercial ● Police Station Attendance
- Advice & Assistance ● Accidental Claims ● Matrimonial Matters
- Welfare Benefits & Social Security Matters

Legal Aid

For Advice & Assistance
on all immigration matters

WARAN & Company
SOLICITORS

S K Nageswaran LLB

554 HIGH ROAD,
TOTTENHAM,
LONDON N17 9SY

TEL: 0181-808 2397
Facsimile: 0181-801 8818
DX58512 TOTTENHAM 1

24 Hours Emergency Nos.
0956543 071, 0181 924 2527

www.padippakam.com


# நாளைகளை இன்றே தொடுவோம்



"TOUCH TOMORROW.....LISTEN CTBC"

னடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டு
ian Thamil Broadcasting Corporation
LAIRD DRIVE (REAR) TORONTO,
6) 429-2374, (416) 429-5688, (416) 429-523
VOICE: 429-5290 FAX: (416) 429-7654
www.ctbc.com

Printed by Unie Arts (Pvt) Ltd. Sri Lanka